1083 / 1 — 1915

சுப்ரமண்ய ஐயர் (உ. ஆ)
வெளி

ஸ்ரீ திரிபுரா ரகசியம்.

1915

R
N15
67722

உ

# ஸ்ரீ திரிபுரா ரகசியம்

## ஞானகாண்டம்

இஃது

வி. ஆர். சுப்ரமண்ய ஐயரால்

ஸம்ஸ்கிருதத்திலிருந்து

மொழிபெயர்க்கப்பட்டது.

[illegible]

[illegible] விலை] [ரூபா 1—10

Rights Reserved

உ

# ஸ்ரீ திரிபுரா ரகசியம்.

OFFICE OF THE REGISTRAR OF ...
20 MAR 1915
MADRAS

## ஞானகாண்டம்.

இஃது

வி. ஆர். சுப்ரமண்ய ஐயரால்

ஸம்ஸ்கிருதத்திலிருந்து

மொழிபெயர்க்கப்பட்டது.

ஜயத்யேஷா பராஸ்ரீமத்
த்ரிபுரா ஸர்வ ஸாக்ஷிணி
யாஸைவ காருத்தாதி
ஸம்ஸ்ருதேர் தருருபிணீ.

ஆனந்த௵-தைமீ

இதன் விலை] [ரூபா 1—8

MADRAS
P. R. RAMA IYAR AND CO.
PRINTERS

67722

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 15 | 22 | ஆசுரனுக்கு … | அசுரனுக்கு |
| 25 | 2 | காட்டிக்கொண் … | கட்டிக்கொண் |
| 51 | 5 | பிரளயங்கள் … | பிரலாபங்கள் |
| 80 | 9 | சுலபமானது … | துர்லபமானது |
| 84 | 5 | காரணமாக … | கரணமாக |
| ௸ | 18 | காரணங்களான … | கரணங்களான |
| 130 | 6 | சித்தே; தன் … | சித்தே தன் |
| 139 | 11 | அனுரூபமான … | அனுரூபமான |
| 180 | 13 | 'வெளியில்' … | 'வெளியின்' |
| 194 | 7 | அந்தப்பிரகாசம் | அப்பிரகாசம் |
| 195 | 18 | இன்னானால் … | இராஜனால் |
| 198 | 9 | எவ்விதத்திலும் கூடியது மன்று | எவ்விதத்திலும் அறியக்கூடியது மன்று |
| 230 | 20 | பித்தி … | வித்தி |
| 233 | 16 | விசித்திரங்களுடன் | சித்திரங்களுடன் |
| 250 | 7 | நிச்சயமேயாகும் … | நிச்சயமேமகாபந்தமாகும் |
| 258 | 7 | நித்தியமான … | நித்தியபான |
| 260 | 13 | கர்மங்களை … | காமங்களை |
| 265 | 24 | கர்மாதி … | காமாதி |
| 266 | 2 | இவ்விதம் … | எவ்விதம் |
| 279 | 15 | பராப்பிரதியையே | பராப்பிரதிபையே |
| 280 | 18 | துர்க்கமான … | துர்க்கடமான |
| 291 | 10 | தன … | தன் |
| 297 | 11 | , | . |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 303 | 1 | உன்னில் ... | உன்னில் |
| 308 | 21 | நடத்துபவனே ... | நடத்துபவனோ |
| 315 | 15 | (ப்ரமா) ... | (பிரமை) |
| 319 | I | பக்தியவாசனை ... | ஸக்தியவாசனை |
| ஷை | 29 | ஸத்தி ... | ஷித்தி |
| 323 | 7 | சதாசிவன் அவ்வி யக்தமானது | சதாசிவன், அவ்வி யக்தமானது |
| II | 24 | இத்தோற்றம் ... | இத்தோற்றம் |
| IV | 13 | சத்து ... | சத்துவ |
| XXX | 26 | ணப்படுவதால் ... | காணப்படுவதால் |
| XXXII | 1 | தன்னுடையன ... | தன்னுடையன. |
| XXXVI | 27 | காண த்தில் ... | காரணத்தில் |

124. குறிப்பு—14-ல்—

அஃது எப்படிப் பிரமாணம் ஆகும் என்று ஆக்ஷேபிக்கப்படுமானால், காரியசித்திக்காகக் காரணத்தைக் கைக்கொண்டவருக்கெல்லாம் காரியமான பலனில்லாது போய்விடவேண்டும். (இதனைச் சேர்த்துப்படிக்க.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 MAR 1915
MADRAS

ச ம [illegible] வணை.

முப்புரம் முச்சுடர் முப்பதம் மூவராய்
முப்பகுப் பாகியே யிப்புவ னந்தனில்
எப்பொரு ளுள்ளன, அப்பொருள் யாவுமே
முப்புரை யென்னவும் மெய்ப்பட யாருடை
நற்பெய ரைப்பெறு மப்பரா சக்தியின்
எய்ப்பறுங் கருணையால் தற்பரம் தாக்கிட
அற்புதச் சொற்பொழி வுற்பன மாகவே
இப்புவி யதனிடை உற்பவப் பிணியினால்.
வெப்பமுற் றுழலுவோர் கப்புதா பங்கெட
உற்பத்தி மர்மமும் கற்பித்த கர்மமும்
நற்பக்தி யோகமும் பொற்புற்ற ஞானமும்
தீர்ப்புத்தி போகவே பற்பல காதையும்
எப்பொழு துங்கடல் முற்படும் கங்கைமேல்
ஆர்ப்புறு மூர்மிதொ டர்பதைப் போலவே
அற்பமே னுஞ்சலிப் பின்றியே செப்பியும்.
சொற்பமே யறமது செய்யினு மைப்பயம்
இப்பொழு தறுமென வற்புறக் கூறியும்,
மெய்பகட் டாதரும் பொற்புவிப் பொருள்களும்
அப்புவின் மீதெழும் புற்புதம் போலவே
நிட்பல மென்றதோர் திட்பமு ண்டாயினும்
இற்பற்றி நிற்பதே யிக்கலிக் கேற்பதென்
றிப்புவி யோர்தமக் கொப்பனை காட்டியும்
சர்ப்பனை செய்யுமா மிப்பிர பஞ்சமும்
சொப்பன மென்றுதான் செப்பமாக் கழறியும்.
இப்பிர பஞ்சமா மற்புதச் சித்திரம்
தர்ப்பண வடிவுறும் சித்பரை தன்னிடம்

ஓர்ப்ரதி பிம்பமென் றேர்பெற வோதியும்
எப்புரா ணத்திலும் நுட்பமாய் வைத்தன
உட்பொருள் யாவும்வெ ளிப்படை யாகவே
அப்பவே பொங்குமாம் தப்பிலாக் கட்டுரை
திப்பிய பாக்களால் மெய்ப்படத் தீட்டியும்
இப்பசுத் தன்மையை அப்புற மாக்கவும். (32)

விற்புரு வத்திடை பொற்பரை காணவும்
சற்பதி சாரவும் அப்புகள் கேட்பவர்க்
கொப்பன யாவுமொ ளிப்பறச் சாற்றியும்
எப்புத்தி மானிலும் உட்பற்றி நின்றிடும்
தற்புக ழாசையாம் பிற்பவக் காரணத்
தீழ்ப்பதை நீக்கியே அப்புர வாக்கியும்
கற்பனை யற்றதாம் சித்பரப் பொருளினை
கட்புல னுயுறும் பற்பல உவமையால் (40)

கைப்படு நெல்லிநற் பலமதாக் காட்டியும்
எப்பரி சுத்தரும் சார்புறும் மனநிலை
உட்புகுந் தோங்கிடப் பெட்புறக் கூறியும்
எப்பண்டி தர்களும் ஒப்பிடத் தக்கதாம்
மற்பெறு நற்றமிழ் சொற்பெரு நடையினில்
செப்பமா யாவரும் மீட்புறத் தேற்றியும்
கற்பமுந் தேடினுஞ் செப்பியே காணொணு
நுட்பமா மாகமத் துட்பொருள் யாவையும் (48)

விற்பனைக் கல்லவென் றற்பினு லோதிடும்
தற்பரா ராமனென் றப்பெய ரோன்சசி
முற்படு போதராம் விப்ரன்ஐ யாரெனச்
சொற்பதி வாழ்பவன் பொற்பதந் தன்னிலே
நற்பக்தி யன்புடன் சப்பிர மண்யனும்
முப்புரா ரகசிய மொழிபெயர்ப் பாகுமிச்
சொற்புத்த கத்தையும் அர்ப்பிதஞ் செய்தனன்
எற்பெறு முப்புரை பெட்புடன் காக்கவே (56)

ஸ்ரீ திரிபுராம்பாயை நம:

ஸ்ரீ
த்ரிபுரஸுந்தர்யைநம:

தஞ்சாவூர் தமிழ் பண்டிதர்
வையை R. சுப்ரமண்ய ஐயர்
இயற்றிய

# திரிபுரைப் பதிகம்

---

## குரு ஸ்துதி

வெண்பா

சிவமாகிச் சக்தியாய்ச் சேர்குகனுந் தானுய்ப்
புவிமீதே ஆசானுய்ப் போந்து—தவமான
செந்நெறியா யுட்புகுந்து தெய்வமாய் வீற்றிருக்கும்
அன்னவனே எல்லாமு மாம்.

1. உலகமெலாம் புகழுமுன்னை யடியே னென்ன
உரைகொண்டு மகிழ்விப்பே னுமையே நீதான்
பலகலையு மதன்பொருளு மாகி நின்றாய்
பல்லுயிர்க்கும் அவைபுகட்டும் பண்பும் பூண்டாய்
சிலகலையு முணராத சிறியேன் சொல்லும்
செழும்பொருளாய் நீயேவந் தருள்வை யம்மா
திலகமென விளங்குமையாற் றயலே நின்ற
திரிபுரையே செங்நெலே சசியே தாயே.

2. நாயேனைப் பொருளாக நயந்து கொண்டாய்
நன்றறியேன் நின்னையே நயக்க கில்லேன்
பேயேனை யுலகமய லின்ன மின்னம்
பிடித்திழுத்தால் யானினியென் செய்வேன் உன்னைத்

தாயேயென் றடைந்ததையு மறந்தாய் கொல்லோ
  தடுத்தாட்கொண் டருளியதுந் தவிர்ந்தாய் கொல்லோ
நீயேயுன் மனமலைந்து தியங்குகின்றேன்
  திரிபுரையே செங்கெலே சகியே தாயே.

3. கற்றவர்க ளெல்லாரும் நின்னைப் போற்றிக்
  கருதரிய பதம்பெறவே நாயேன் றானே
பெற்றதுவும் பெறுவதுவு மின்றி யிங்கன்
  பித்தேறித் திரிந்துழல்வேன் பிறர்க்கே கூறி
கற்றவங்கள் கானறியேன் இதுவோ நீதான்
  நயந்தளித்த அருட்பெருமை நீங்கா ஆசை
செற்றவர்கள் சூழ்ந்ததிரு வையாற் றில்வாழ்
  திரிபுரையே செங்கெலே சகியே தாயே.

4. ஒருநாளு முனைமறவா திருக்க வெண்ணி
  ஒருநாளு முனைநினையா திருப்ப தென்ன
பெருநாளிற் செய்தவினை யறியேன் இன்னும்
  பிறர்போல நீநின்றால் தரியே னம்மா
வருநாளி லேனுமுனை நினைந்து வாழும்
  வரந்தந்து கருணைக்கண் வைத்தா யானால்
திருநாள்தான் எனக்கதுவே யன்றோ என்றன்
  திரிபுரையே செங்கெலே சகியே தாயே.

5. காருரும் பொழில்சூழும் கழனி வாழ்வாய்
  கண்டுருகு மடியருளக் கமலம் வாழ்வாய்
பேருரு மில்லாத பொருளைக் காட்டும்
  பெரும்பொருளாய் எவ்விடமும் பெருகி வாழ்வாய்
காருரு மலர்போல அடியே னுள்ளும்
  நல்லமணம் பெறவந்து வாழ்ந்தாலென்னே
தேருரும் திருவீதித் திருவை யாற்றுத்
  திரிபுரையே செங்கெலே சகியே தாயே.

6. உனையன்றி யொன்றையுமோர் பொருளாய்க் கொள்ளா
  உணர்வினைநீ யருளிப்பின் ஒளித்து கொண்டால்
நினையன்றி யென்மனந்தான் நினைப்ப தேதோ
  நிலைபெறினும் பெறுவிடினும் நின்க ணல்லால்



பினையொன்றில் மனஞ்செல்லக் காணே னந்தோ
  பெற்றதாய் விடுத்தகன்ற குழவி யானேன்
தினையொன்றி னளவேனும் அருள்செய் யாயோ
  திரிபுரையே செங்கெலே சகியே தாயே.

7. அண்டமெலாம் நிறைந்திருந்தும் அணுவுக் குள்ளும்
  அவ்வளவே யாய்நின்ற அருமை தன்னைக்
கண்டவர்கள் மொழிவதெங்ஙா னுன்றன் சீர்த்தி
  கணக்கிலடங் காதபெருங் கணக்கே யன்றோ
தண்டாளம் புனைமணியே தவத்தோர்க் கெல்லாம்
  தலைமணியே மலைமணியே தமியேன் வாழ்வே
தெண்டிரைக்கா விரியிருபாற் சூழ நின்ற
  திரிபுரையே செங்கெலே சகியே தாயே.

8. நாவினா லுனைப்பாடும் நயமும் வேண்டும்
  நவிலாம லுள்ளுருகும் நலமும் வேண்டும்
பூவினா லுனைப்போற்றும் பொற்பும் வேண்டும்
  புகுந்துயிரில் நீநிறையும் போதம் வேண்டும்
காவினாற் சூழ்கழனி யிடையே நின்ற
  காட்சியையுட் காட்சியிலே காண வேண்டும்
தேவினாற் சிறந்தவர்வாழ் திருவை யாற்றுத்
  திரிபுரையே செங்கெலே சகியே தாயே.

9. பொய்வாழ்வை யொருபொருளாய் நினைத்த போதே
  புதிதுபுதி தான்துய ரெல்லாம் வந்து
மெய்வாழ்வு போற்காட்டி வீழ்த்து மந்தோ
  வினைக்கடலை யடியேனும் கடக்கு மாறு
செய்வாழ்வு நின்னுடைய செயலே யன்றோ
  செய்வதொன் றும் யானறியேன் இதுதான் நின்றால்
தெய்வீக மாய்க்கிடைத்த பிறவி யன்றோ
  திரிபுரையே செங்கெலே சகியே தாயே.

10. உரைப்பார்கள் உரைகடந்த உருவே வாழி
  உன்னுவா ருளங்கடந்த ஒளியே வாழி
கரைப்பார்கள் மனக்கல்லை யுன்னை யல்லாற்
  கண்டறியேன் தொண்டறியேன் கருணை வாழி

வரைப்பாலும் கான்பாலும் சென்று ரேனும்
வழித்தொண்ட ரல்லாதார்க் கரியாய் வாழி
திரைப்பாலே பொன்கொழிக்கும் திருவை யாற்றுத்
திரிபுரையே செங்கெலே சசியே தாயே.

வெண்பா

சிவன்கலையும் மால்கலையும் சேரஇரு பக்கம்
புவனையெனும் நாமந்தான் பூண்டு—நவமாம்
திரிபுரையாய் நின்றருளும் செங்கெல்லை ஒன்றும்
பிரமமெனக் கண்டுநீ பேசு.

திரிபுரைப்பதிகம் முற்றிற்று.



ஸ்ரீ திரிபுர சுந்தர்யை நம:

# வித்தியா ஸ்தோத்திரம்.

---

உலகெலா மெதனிடத்தே நிலைக்கண்டுடி
யுறு நகரம் போற்பிரதி பலித்துண்டாகி
விலயமா மெவைகளுமே யெதனு ளின்று
விளங்கியிடு மறிவிலர்கட் கெனுசகத் தாய்க்
கலகமா மோகமதாற் றோன்று மெய்யாக்
கனவிகற்ப மற்றுளயோ கியர்மனத்தே
இலகவே கைவல்ய ரூப மாவ
தெதுவதுவே பராசித்தா மெந்தாய் தானே (1)

திமிதவம் புதிநிகாய சலமாகத்
திகழ்பான வுருவுடையாய் பக்த ரெல்லாம்
விமிதமா மன்பதனுற் கபட மின்றி
வேறுறவே சேவைசெயு மத்வை தச்சீர்
அமலமாமகண்ட வத்து வேது லந்த
மாறுட்பப் பொருளேயெக் காணக்கட்கும்
நிமலமா யனுகூ மாகி நிற்போய்
நினதுபிர திபைவடிவை நிதந்து திப்பாம் (2)

அமிர்தவம் புதிதன்னின் மணித்து வீப
மதனிடையே யணிநீப வனத்த கத்தே
விமிதசிந் தாமணியா மேடை மீதில்
விளங்கியிடு மைவரொரு மஞ்சத்தேறி
நிமலையா யனுதி மிது னமதா யுற்று
நிகழ்கின்ற திரிபுரையென் னன்னை யேயித்
தமியனேன் மயக்கொழித்தென் மனத்தே நிற்பாய்
சரண் சரண மாதிபரா சக்தி நீயே. (3)

இச்சகமேன் மாயைவசத் தெண்ணவிட ருற்றுழந்தே
அச்சமிகு நெஞ்சினனா மடியேனை யாண்டருளாய்
உச்சமுறு திரிபுரையே யுயிர்க்குயிரா முத்தமியே
நிச்சலவம் புதிநிகராய் நிகழ்பான சொரூபிணியே (4)

காருரு மிந்திரனன் முகனெடுமா லாதி
கடவுளரு மயங்கிடு நின் மாமாயைக் கண்ணே
ஒருச லெனவாடிச் சங்கற்ப விகற்பத்
தோய்வின்றி யுழன்றலுத்த வொருசிறுநா யடியேன்
பேருரி லாதநின தருட் கடைக்கண் ணோக்கம்
பெற்றுய்யு நாளுளதோ பேதையினேற் கருளாய்
பாரூப மாகியதோ ரேகரச வெளியே
பகர்வரிய மகிமைபெறு திரிபுரசுந்தரியே (5)

வெரிதிடர்செ யுள்ளமொடு சடவுருவ விந்தியம்
பேசிடும் சத்துடலமும்
உரிமையுடன் யானென் றுரைத்தமகி பலநா
ளுணர்ந்து மொழி கின்றநிலையால்
அரிய நின தருள்செயா யானந்த ஞானசத்
தாகார மான சிவையே
பரிதிமுக மாகிமதி யனலுமிரு தனமெனும்
பான்மையுறு காமகலையே (6)

சருவும்பல் சனனங்க ளிற் செய்த நிட்காம
தவமுற்ற நின் பக்திதான்
மருவும்பி னாது நன்கு செய நின்ன தருளால்
வருஞ்சிந்தை யுட்டெளிவதால்
உருவின்ச கஞ்சீவ பரமாகி யாகாத
வொளியாய்வி ளங்குவையொரு
திருவிந்து முதமாகி யிருவிந்து தன மான
திரிவிந்து ரூப சிவையே (7)

நித்தமன லுற்றவெண் ணெய்யென நின்னைநினை
கின்றசரணர்
சுத்தமன மேவுகல் யாணியே தொடர்முன்ப ழக்கவசமாய்ப்



பித்தமன னுக்குநே ராகுமிப் பேதைக்கி ரங்கி யருளாய்
அத்தமன மற்றபா ரூபமே யகிலப்ர பஞ்ச நிறைவே (8)

முடியாத சஞ்சலம தா மெய்மாயை யாலவசமாய்ப்
படிமீது நைந்துழலுமிப் பவமாறு கின்றநெறியைப்
பிடியாம யக்கொழியப் பெறுமேது வானதருளி
அடியேனை யாளவருவா யனந்த ரூப வபலாய் (9)

விகாரஞ்செய் கோபகைசநீ வினையாம்பொ ருமைபிசுனம்
புகாநின்று நெஞ்சுளெனையே புலியாம்பு தேன்குமலிபோல்
தகாவெங்கொ டுந்துயர் செயல் சகியேன்பி ழைக்கும்வகையே
மகானந்த ரூபவபலாய் வரவேண்டு மென்றனருகே (10)

இனவாத னங்கள்போ னவமுறைசெய் பத்தரென்
பென்றுநனி கொண்டுகன் கபயமும்
கனவாத முங்குறித் தருள்புரியு மங்கையாய்க்
கற்றுமறை முற்று மெப்பொழுதினும்
பனவாத ஞானமெய் யறியறில ராய மனம்
பற்றிமுனைற்பதஞ் சரணமே
அனவரத முத்தர்கள் பிணமதற நத்தல் செய்
யத்தமன மற்றசித் துருவமே (11)

கால னூதரு கிரயமு மரக்கர், கடிய பேயொடு பூதமுங் கடை
[யென்
ஞால நெஞ்செழு குணங்களே யந்தோ, துன்ப மெத்தனை
[யெத்தனை காலம்
சால மாழ்குவ னேழையென் செய்கேன், சற்றி ரங்கிலை
[யேயருட் டாயே
பால னெமெனை பாலனை செயவே, பாலை யாகியம் பாவிகை.
[வாராய் (12)

வேலை மீதெழு திரைகள்போ லுளத்தின்
வெளிமுகத்தெழு விர்த்திக ளாலே
ஆலை வாய்ப்படு கரும்பென விடையூ
றனந்த மெய்தின னகம்பொரு ளின்னை

மாலை யற்றுநின் றுணர்ந்திலேன் கருணை
மன்னு சொப்பிர காசமெய் வடிவே
வாலை யேயெனைப் பாலனை செயவே
வருவை நீயினிச் சர்வகா ரணியே (13)

நின்னையே யன்றி யொன்றிலை யென்று
நித்திய முக்தர்கள் மகிழ
மூன்னைவல் வினையே னுலகுமெய் யுடல்யான்
முதிர்வெறுப் பிச்சையீ திதுவென்
றென்னை வீண் பிதற்றி யலமரு கின்றே
னெண்குணச் செல்விபார்ப் பதியே
அன்னையே யென்னை யாள்வையே கலிதீர்த்
தழகிய திரிபுரை யணங்கே (14)

பாதிமெய் சிவமாப் பாதிமெய் தானுப் பழமறை மொழி
[தருஞான
பானத்த னுதிமிதுனப் பண்பாய கர்மகலையே
சாதிரு சியமற் றொளிர்சுதந் தரையே தனிஅபா தானம்வே
[றின்றிச்
சகசிவரீசனுரு வாய்த் தனிமோன சத்தைவடிவாம்
மாநிரி புரசுந் தரியுமா தேவி மன்னுசித் தானந்தப் பணமே
மைமாயை யாலவசமாய் மருள்வேனு யக்கருணையால்
ஆதியுண் ணேக்கிற் சோதியா யெதிர்போ தமிர்தவான்
[கலையதா மெய்ம்மை
யானந்த ரூபவபலா யடியேனை யாளவருவாய்

மாழைவடிவே மரகதமே மாமணியே
ஏழை யடியேற் கிரங்கி யருளாயே
ஞானக் குயிலே நயந்த வருட்கிளியே
மோன மயிலே முழுதுமெனைக் காவாயே

வித்தியா ஸ்தோத்திரம் முற்றிற்று.

---

" அடியார்க்கடியான் "

ஸ்ரீ கணேசாய நம:

அடியார்க்கடியார் ஒருவரியற்றிய

# தேவி ஸ்தோத்திரம்

---

சிவைபவானி யாரியை சீதரன் சகோதரி
கவுரிமீன லோசனி கன்னியெங்க ளன்னையே (1)
காந்தள்போல் விரற்களிற் கங்கையுற் பவித்திடப்
பாந்தள்சூடி கண்புதை பதுமவங்கை முதல்வியே (2)
அமலையே கஜானனற் கறுமுகற்கு மம்மையே
விமலையெண் புயத்தினால் வேதரூபி நீதியே (3)
சாம்பவீ யருட்பரா சக்திமுக்க ணந்தரி
ஆம்பல்போலும் வாயயி ராணிதிங்கள் வேணியே (4)
ஞானமிச்சை கன்மமாய் நவமொடைந்து சக்தியாய்
மோனவித்தை யாகினும் முக்திமூல சித்தியே (5)
குண்டலீசரஸ்வதி கோகனத்தி பார்வதி
விண்டிடா மகேச்வரி மேன்மையா மனோன்மணி (6)
அங்கபாலி யெட்டுநான் கரம்வளர்த்த யாமளை
சங்கரீ புராணிதாட் சாயணீநா ராயணீ (7)
சைலராஜ புத்திரி சர்வலோக நாயகி
கைலைமே வெழிற்சிவ காமவல்லி வாமியே (8)
காவியங்க ணீமகா காளிநீலி யேயுமா
தேவிதீன ரட்சகி சிந்தியாத விந்தையே (9)
நைவில்சக்தி மாலினி நவதினந் தியானமே
செய்துதாரு கன்றனைச் செற்றநீலி கொற்றியே (10)
அர்த்தரூபி மகிஷமா மசுரன்மத்த கத்தின்மேல்

மர்த்தனஞ்செய் தோய்மகா மாயைவாலை தூயையே (11)
அரணிடத்தி நித்யகல் யாணியையை பூரணி
மரகதத்தின் மேனியாய் மாதரீசர் வாதரீ (12)
குடாரியொன்றெ டேழுசட் கோணநின்ற வாணுதல்
தடாதகைக்குமாரிமா தங்கிஞான மங்கையே (13)
சுகசொரூபி யம்பிகை சுந்தரீநல் யோகினி
பகவதீ நிறைதுபொற் பாதமன்பர் போதமே. (14)
அதிசுகந்த குந்தளை யஷ்டசெல்வியாரணி
சதியுருத்திராணிநின்றாள்களெம்மை யாள்கவே (15)
நித்தியப்பைம் பொன்னே நிகழ்த்துபரி பூரணமா

வைத்த மரகதமே மன்னுசுக—சித்துருவ
மாணிக்கமேமுத்தி வச்சிரமே யேழையேன்
காணிக்கை கொள்ளக் கடன்.

பந்தமுத்திமேவுபிர பஞ்சப் பிரதிபிம்பம்
சொந்தமதாய்ச் சேர்சிற் சுதரிசனந்தாய்நீயே

தேவி ஸ்தோத்திரம் முற்றிற்று.

---



# அவதாரிகை.

---

இவ்வரிய நூலானது, துக்க சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களை உத்தாரணம் செய்வதன்பொருட்டு ஹாரிதாயனரென்னும் மகாரிஷியால் வடமொழியில் அருளப்பட்டது. இதன்கண் முக்கியமாக விவரிக்கப்பட்டது பரபுருஷார்த்தத்திற்கு சாதனமாகிய விஞ்ஞானமாம். இவ்விஞ்ஞானத்திற்கு முதற்சாதனமாகிய பக்திக்கு ஏதுவான மாகாத்மிய காண்டத்தை இதற்கு முன் இயற்றி மாகாத்மிய சிரவணம் முதலியவற்றால் மாறுதலடைந்த ஜிஞ்ஞாஸுக்களான அதிகாரிகளுக்கு ஞானகாண்டத்தை இங்கே போதிக்கின்றார்.

2. இதில் பத்து அத்தியாயங்களால் சற்சங்க மாகாத்மியத்தை விளக்கும்பொருட்டு ஹேமசூடோபாக்கியானமும், ஜகத்தின் உண்மையை விளக்கச் சைலலோகாக்கியானமென்று மூன்று அத்தியாயங்களும், விஞ்ஞானக்கிரமத்தையும் ஞானிகளது நிலைமையையும் விளக்க ஜனக ஆஷ்டாவக்கிரீயமென்ற மூன்று அத்தியாயங்களும், ரிஷிகளுக்கு சாக்ஷாத் வித்தியாதேவியே பிரத்தியக்ஷமாகி அருளிய வித்தியாகீதை யென்ற ஓர் அத்தியாயமும் ஞானிகளது வியவகாரத்தை விவரிக்க ராக்ஷஸோபாக்கியானமென்ற ஓர் அத்தியாயமும் வேறு நாலத்தியாயங்களும் ஆக இருபத்திரண்டத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன.

3. இந்நூலிற்கு ஸ்ரீநிவாஸ பண்டிதர் வடமொழியில் இயற்றியுள்ள வியாக்கியானத்திலிருந்து குறிப்புகள் அங்கங்கு சேர்த்திருப்பதுடன் முக்கியமான வியாக்கியானங்கள் மொழிபெயர்த்து அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

4. இந்தத் திரிபுராரகசியத்தின் அபிப்பிராயங்கள் ஆகமசாஸ்திரத்தை அனுசரித்திருப்பவை. அவற்றில் முக்கியமானவை எவை யென்றால்—

i. இங்கு விவர்த்தவாதம் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

ii. ஜீவத்துவம் பரிச்சின்னத்தன்மை யென்று கூறப்பட்டிருக்கிறது.

iii. சவிகற்பஞானமே அஞ்ஞான மென்றும் அஃது மாயையின் காரியமென்றும் மாயை பிரஹ்மத்தினுடைய பூரணமான சுதந்தரமென்றும், சொல்லப்பட்டிருக்கிறது.

iv. இதனில் முக்கியமாக தர்ப்பணப் பிரதிபிம்ப திருஷ்டாந்தமே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இதில் காணப்படும் மற்ற கொள்கைகளை அறிவுடையோர் சமரசப்படுத்திக் கொள்வாராக.

5. இந்தகம்பீரமான நூலை மொழிபெயர்க்க எவ்விதத்திலும் அருகனல்லாவிடினும் ஆத்மசுத்திக்காக இயன்றவாறு எடுத்தமுயற்சியைப் புத்தகவடிவாக ஒருவாறு வெளியிடத் துணிவுடையவனானேன். இதனில் தவறுகள் இருக்கக்கூடுமாகையால் சமரசமுடைய



வித்துவான்கள் அவைகளைக் கிருபையுடன் சீர்ப்படுத்துவாரென்பது சீடனாகிய எனது பிரார்த்தனை.

6. இம்மொழிபெயர்ப்பின் கையெழுத்துப் பிரதியிலிருக்கும் பிழைகளை அற்பமும் சிரமம்பாராட்டாமல் திருத்தி அங்கங்கு தவறான அபிப்பிராயங்களை எடுத்துக்காட்டி உபகரித்தவரும், இத்துடன் சேர்த்திருக்கும், தேவி ஸ்தோத்திரம், வித்தியா ஸ்தோத்திரம் இரண்டையும் இயற்றி உதவிசெய்தவருமான அடியார்க் கடியாராகிய சாதுச் சிரேஷ்டர், தம்பெயரை பகிரங்கமாக்கக் கூடாதென்று கட்டளையிட்டிருப்பினும், யான் கடமைப்பட்டிருப்பதை வெளியிடாதிருப்பது நீதி தகாதாகையால் அவர் பெயரை உள்ளடக்கி இச்சந்தர்ப்பத்தில் அவருக்கு அனந்தமான வந்தன மளிக்கின்றேன்.

7. இதுவுமன்றி, ஏராளமான தொல்லைகளால் சம்பாஷணை செய்வதற்கே சிறிதும் ஓய்வில்லாதிருந்தும், இதுவும் தெய்வசங்கற்பமென்று தீர்மானித்து, இதன் ப்ரூப்பார்க்கும் பாரம் தம்மதேயென்று தயாராயிருந்து பொறுப்புடனும், உற்சாகத்துடனும்வேலையை முடிவுறச்செய்த வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதியாருக்கும், வாக்குவிசுவாசமுள்ளவராய் வெகுசிரத்தையுடன் அச்சிட்டுக்கொடுத்த பி. ஆர். ராமய்யர் கம்பெனியாருக்கும் நன்றிகூறுவது இங்கு ஆவசியகமாம்.

ஸ்ரீ திரிபுராம்பாயைநம:



சசிபோதர்

உ

# ஸ்ரீ திரிபுரா ரகசியம்

## அத்தியாயம்-1

ஓம் :

காரணாநந்த ரூபிணியாயும் ஜகத்தாகிய அற்புத சித்திரத்திற்குக் கண்ணாடியாயும் விளங்கும் அகண்ட சின்மயியான பரமேச்வரிக்கு நமஸ்காரம்.

ஹாரிதாயனர் என்னும் மகாரிஷி கூறுகின்றார்:— கேள்வியினால் பரஸாதனம் உண்டாகக் கூடியதான திரிபுரையின் மாகாத்மியத்தை ஏ நாரதரே! நீர் ஸாவதான மனதுடன் கேட்டிருக்கின்றீர். இப்பொழுது உமக்கு மகா அற்புதமாயிருக்கிற ஞானகாண்டத்தைச் சொல்லுகிறேன். இதனைச் சிரவணஞ் செய்தால் மனிதன் ஒருகாலத்திலும் சோகத்தை அடையமாட்டான். வைதிகம், வைஷ்ணவம், சைவம், சாக்தம் என்னுமிவற்றினுள்ள விஞ்ஞானங்களைத் திருத்தமாக ஆலோசனை செய்து இந்தக் கிரந்தமானது தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. தத்தகுருவானவர் பார்க்கவனுக்கு உபதேசம் செய்ததும் யுக்தி அநுபவங்கள் பொருந்தியதும் மிகவும் விநோதகரமானதுமாகிய இந்த ஞானத்திற்கு ஈடாக வேறு ஒன்றும் சுலபமாய் மனதில் ஏறாது. இதனைச் சொல்லிக்கொடுத்தும் எவனுக்கு ஞானமுண்டாகவில்லையோ அம்மனிதனைக் கேவலம்

27



பாக்கியமில்லாதவன் என்றே சொல்லல் வேண்டும்; அவன் ஸ்தாணுதான்; சம்சயமில்லை. அப்படிப்பட்டவனுக்குப் பரமசிவனே பிரத்தியட்சமாக வந்து உபதேசம் செய்தாலும் ஞானமுண்டாகமாட்டாது. அவ்வளவு மகிமை பொருந்திய ஞானகாண்டமாக விளங்குகிற இதனைச் சொல்லுகிறேன் கேட்கக்கடவீர். அஹோ ஆச்சரியம்! ஸத்துக்களுடைய நடத்தை மிக அற்புதமாகவும் சகல குணங்களும் பொருந்தியதாகவும் இருக்கின்றது; ஏனென்றால், தேவரிஷியான நாரதரும் என்னிடத்திலிருந்து சற்றே கேட்டுக்கொள்ளுகிறார்; கஸ்தூரியினிடத்தில் வாஸனை எப்படி சஹஜமாயிருக்கின்றதோ அப்படியே ஸத்துக்களிடத்தில் அநுக்கிரகம் செய்யும் தன்மை ஸஹஜமாயிருக்கின்றது.

நல்ல உள்ளமுடைய ஜமதக்னி புத்திரனான இராமன் பக்தியினால் இலீனமான சுத்தசித்தமுடையவனாகி அற்பம் நிர்ச்சிந்தையை அடைந்தான். பிறகு பாகிய விருத்தியை யுடையவனாகி ஆநந்தக் கண்ணீருடனும் மயிர்க்கூச்சுடனும் உள்ளத்தில் ஆநந்தம் பொங்கத் தத்தகுருவினுடைய சரணங்களில் தண்டாகாரமாக நமஸ்கரித்தான். பிறகு எழுந்திருந்து ஹர்ஷம் நிறைந்தவனாகி விம்மிக்கொண்டு சொல்லுகிறான்— "ஹே ஸ்ரீ குருவே! தங்களுடைய பிரசாதத்தினால் நான் தன்யனானேன்; கிருதகிருத்தியனானேன், யாதொரு காரணத்தினால் சிவரூபியானவரும் கருணைக் கடலானவருமான ஸாக்ஷாத் குரு எவனிடத்தில் ஸந்தோஷத்தைப் பாராட்டுகிறாரோ, எவரொருவருக்கு ஸந்தோஷமுண்டானால் பிர்ம பதவியும் த்ருணத்திற்கு நிகராய் விடுகிறதோ, மிருத்யுவும் ததாகாரமாய் விடுகிறதோ அப்படிப்பட்ட மஹேசுரனான குருவுக்கு



என்னிடத்தில் ஸந்தோஷம் உண்டாயிருக்கிறது. ஆகையினால், குருவின் கிருபை மூலமாக ஸர்வமும் நான் அடைந்துவிட்டேனென்று எண்ணுகிறேன். ஏ குருநாதா! தங்களுடைய கிருபையினால் திரிபுரையின் மாஹாத்மிய முழுமையும் கேட்டாய்விட்டது. பரமேசுவரியான திரிபுரையை உபாசனை செய்ய விரும்புகிறேனாதலால், அதன் உபாசனக்கிரமத்தை ஏ குருவே! கிருபையுடன் அடியேனுக்கு விளக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்கிறேன்" என்றான். இந்தப் பிரகாரம் பிரார்த்திக்கப்பட்ட தத்தகுருவானவர் திரிபுரையின் உபாசனைக்குத் தகுந்த நல்ல சிரத்தையும் பக்தியும் யோக்யதையும் பார்க்கவனிடத்தில் இருக்கக்கண்டு திரிபுரையினது உபாசனையின் பொருட்டுப் பார்க்கவனுக்குக் க்ரமமாகத் தீக்ஷைசெய்து வைத்தார். எல்லாத் தீக்ஷைகளிலும் மேன்மையானதும் பூர்ண தத்துவ போதத்தை யுண்டாக்கக்கூடியதும் மந்திரங்கள் யந்திரங்கள் முதலான அநேக மார்க்கங்கள் அடங்கியதுமான சுபமாகிய திரிபுரையின் தீக்ஷையை வண்டுகள் தாமரைப் புஷ்பங்களிலிருந்து இரசத்தைக் கிரகிப்பதுபோல ஸ்ரீ குருவின் வதனத்திலிருந்து ஜாமதக்னியனான பார்க்கவன் கிரகித்து உள்ளத்தில் திருப்தியும் ஆநந்தமும் மதமும் அடைந்தவனானான்.

திரிபுரையின் உபாசனையைச் சாதிப்பதன் பொருட்டு ஸ்ரீநாதனால் அநுமதி கொடுக்கப்பட்டவனாகிக் குருவைப் பிரதக்ஷிண நமஸ்காரம்செய்து, மஹேந்திர பர்வதத்திற்குச் சென்றான். அவ்விடத்தில் சுபமும் மிக மனோஹரமானதுமாகிய ஒரு வசதியை உண்டாக்கிப் பன்னிரண்டு வருஷங்கள் நித்திய நைமித்திக பூஜை ஜபங்கள் செய்துகொண்டும், சதா ஸ்ரீதிரிபுரையின்

உருவம் ஒன்றையே த்யானம் செய்துகொண்டும் உபாசனையிற் ப்ரியனாக இருந்தான்.

இவ்விதம் பன்னிரண்டு வருஷகாலமும் பன்னிரண்டு நிமிஷமாகப் போய்விட்டன. அக்காலத்தில் ஒருதினம் சுகாசனத்தி லிருந்தவனாகி ஜாமதக்னியன் சிந்தனை செய்கிறான்—முன்னொருகால் வழியிற்கண்டு நான் பிரார்த்தித்தபோது ஸம்வர்த்தமுனீந்த்ரர் யாது மொழிந்தாரோ அதனை நான் அற்பமேனும் அறியவில்லை. யாதொன்றைக் குருவினிடத்தில் வினவினேனென்பதையும் மறந்துவிட்டேன். ஸ்ரீ குருவின் வாக்கிலிருந்து திரிபுராசக்தியின் மாஹாத்மியத்தைக் கேட்டிருக்கிறேன். ஸம்வர்த்த குருவினிடத்து ஜகத் ஸ்ருஷ்டி விஷயமாக நான் கேட்டகேள்விக்கு அவர் சொன்ன ஸமாதானமானது என்னால் அப்பொழுது கிரஹிக்கப்படவில்லை. அவ்வேளையில் அவர் கடகிருதாக்கியானம் என்பதைச் சொல்லிவிட்டு நான் அபக்குவமான நிலையிலிருப்பதை அறிந்தவராகி முழுமையும் சொல்லாமல் நிறுத்தி விட்டார். இவ்வுலகத்தின் போக்கு இன்னவிதமென்று எனக்குத் தெரியவில்லையே. மகத்தான இந்த ஜகத்தின் ஆடம்பரம் எதிலிருந்து உண்டாயிற்று? எவ்விடத்தில் முடிவடைகிறது? எதனிடத்தில் நிலை பெற்றிருக்கின்றது? ஸர்வத்தையும் எங்கணும் அஸ்திரமாகவே காண்கின்றேன். உலக வ்யவகாரங்களோ அழியாத் தன்மை யுள்ளன போலத் தோன்றுகின்றன. இஃதென்ன காரணமோ தெரியவில்லை. பூர்வாலோசனையின்றி நடக்கிற விசித்திரமான உலக வ்யவஹாரங்களைப் பார்க்கிறேன். ஆச்சரியம்! குருடன்பின் குருடன் தொடர்கின்றதுபோல உலகத்தில் எல்லோருடைய வ்யவஹாரங்களும் நடக்கின்றன



அதற்குத் திருஷ்டாந்தமாக என்னுடைய நடத்தையையே எடுத்துக்கொள்ளலாமே. என்னுடைய இளம்பருவத்தில் என்னென்ன நடந்ததென்று எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை. நான் யுவாவாக இருந்தபோது வேறு விதமாக இருந்தேன். தருணனாய் முதிர்ந்தபோது ஒருவிதமும் இதோ இச்சமயத்தில் ஒரு விதமுமாயிருந்து என்னுடைய செயல்கள் மாறுதலடைந்து கொண்டிருக்கின்றன. இப்படி மாறுபாட்டை யடைந்து கொண்டிருக்கிற செயல்களினால் நான் யாதுபலத்தை அடைந்தவனானேன் என்பது எனக்குப் புலப்படவில்லை.

பலத்தையடைய வேண்டுமென்னும் உத்தேசத்துடன் மனிதர்கள் எந்தெந்தக் காலத்தில் எதெதனை எவ்வாறெவ்வாறு செய்கிறார்களோ அததனையே நலமென்று எண்ணிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் என்ன பலத்தை அடைகின்றார்கள்? ஆத்மாவுக்கு என்ன சுகமுண்டாகிறது? பலம் என்று யாதொன்றை ஆலோசனையின்றி உலகத்தார் தாரணை செய்கிறார்களோ அது தான் பலம். பலனை அடைந்தும் திரும்பத் திரும்பப் பிரவிருத்தி செய்கிறார்களாகையால் நான் அந்தப் பலனைப் பலமென்று ஒப்புக்கொள்ள மாட்டேன். ஒரு பலனை அடைந்த பிறகு மனிதன் வேறொரு பலத்தில் இச்சையுள்ளவனாகிறான். அதற்கென்ன ஹேது? யாதொரு முடிவையுத்தேசித்து நித்தியம் வ்யவகரிக்கின்றார்களோ அதனைப் பலமென்று சொல்லுதல் கூடும். அது யாதென்றால், துக்கத்தின் நாசம் அல்லது சுகத்தின் பிராப்தியேயாம். இஃதே முடிவானபலம். கர்த்தவ்ய மென்பது சேஷித்திருக்கிறவரையில் துக்கநாசமாவது சுகப் பிராப்தியாவது கிடையாது. கர்த்தவ்யம் சேஷித்திருக்கிறது என்பதே

துக்கங்கட்கெல்லாம் மேலானதுக்கம். அஃது இருக்கிற வரையிலும் மனிதருக்குத் துக்கநாசமும் சுகப்பிராப்தியும் எப்படித் தான் உண்டாகப் போகின்றன? தேகம் முழுமையும் தீயினால் தஹிக்கப்பட்டவனுக்குப் பாதத்தில் சந்தனம் பூசினால் எவ்விதமிருக்குமோ, அவ்விதந்தான் கர்த்தவ்ய சேஷமிருக்கிறவன் சுகமடைவதும். அம்பு பாய்ந்த மார்பையுடைய ஒருவனுக்கு அப்ஸர ஸ்திரீயின் ஆலிங்கனம் எப்படியோ அப்படித்தான் கர்த்தவ்ய சேஷ மிருக்கின்றவன் சுகமடைவதும். க்ஷயரோகமுள்ள மனிதன் கானத்திலடையும் சுகம் போலத்தான் கர்த்தவ்யசேஷ மிருக்கிறவன் சுகமநுபவிப்பதும். கர்த்தவ்யம் இல்லாமல் உலகத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களே சுகபுருஷர்கள். பூரண ஹிருதய முடையவர்களும் மகாத்மாக்களும் தேக முழுமையும் குளிர்ச்சி யுடையவர்களும் அப்படிப்பட்ட மஹான்களே யாவர். யாதொரு காலத்தில் கர்த்தவ்ய சேஷ மிருந்தும் ஏதோ ஒருகாரண விசேஷத்தினால் க்ஷணநேரம் சுகம் தோற்றுகிறதோ அந்தச் சுகாநுபவமானது சூலத்தினால் பிளக்கப்பட்ட ஒருவனுக்கு வாஸனையுள்ள புஷ்பமாலையினால் உண்டாக்கப்பட்ட சுகத்திற்கு நிகராகவிருக்கும்.

"அஹோ, ஆச்சரியம்! கர்த்தவ்யங்கள் கணக்கிலாது இருக்க, அவற்றின் மத்தியில் சுகம் இருக்கிறது என்று ஜனங்கள் எப்பொழுதும் உழைத்துவருகிறார்கள். மனிதர்களுடைய இவ்விதமான அவிசார மாஹாத்மியத்தை நான் என்னென்று சொல்லுவேன்? அளவிடப்படாத கர்த்தவ்யக் கூட்டங்களான குன்றுகளைக் கடந்து சுகத்தை அடைய முயற்சிக்கிறார்கள். சக்கிரவர்த்தியானவன் சுகத்தின் பொருட்டு உழைப்பது போலவே பிச்சை யெடுப்பவனும் நாள்தோறும் உழைத்து வருகிறான். இவர்களிரண்டு பேர்களும் தாம் தாம் விரும்பியசுகத்தை அடைந்தவராக எண்ணுகிறார்கள்; கிருத கிருத்தியர்களாய் விட்டோமென்றும் எண்ணிக் கொள்ளுகிறார்கள். இவ்விதம் விசாரமின்றி எந்த மார்க்கத்தில் எல்லோரும் செல்லுகின்றார்களோ அதிலன்றோ நானும் இந்நாள் வரையில் நடந்துகொண்டிருந்தேன். முடிவான பலமின்னதென்று கருதாமல் குருடன்பின் குருடன் செல்லுவதுபோலச் செல்லுகிறேன். அவிசார புத்தியுடன் கூடச்சென்றது இம்மட்டும் போதுமானது. மறுபடியும் தயாநிதியாயிருக்கிற குருவினிடத்திற்சென்று குருவாக்காகிய ஓடத்திலேறி அறியவேண்டியதை அறிந்து ஸந்தேகமாகிய ஸமுத்திரத்தைத் தாண்டி விடுகிறேன்."



சுபமான உள்ளத்தையுடைய ஜாமதக்னியன் இவ்வாறு ஆலோசனைசெய்து சீக்கிரத்தில் குருவைத் தரிசனம் பண்ணவேண்டுமென்னுங் கொள்கையுடன் அந்த மலையிலிருந்து நீங்கி, கந்தமாதன பருவதத்தை க்ஷணத்தில் அடைந்து அவ்விடத்தில் பதுமாசனத்திலிருப்பவரும் ஜகஜ்ஜோதியாய் விளங்குகின்றவருமான குருவைப்பார்த்து அவருடைய பாதபீடத்திற்கு முன் தண்டாகாரமாக நமஸ்கரித்துத் தன்கரங்களினால் அவர் பாதங்களைத் தன் சென்னி அழுந்தப் பிடித்துக் கொண்டு வணங்கினான். இவ்விதம் வணங்கினவனை இராமனுக்குத் தத்தாத்திரேயர் பிரஸன்னமுகத்துடன் ஆசிகளைக்கூறி, அவனை நோக்கிச் சொல்லுகிறார். "ஏ குழந்தாய்! எழுந்திரு; உன்னைப்பார்த்து அநேக நாளாய்விட்டன; உன்னுடைய விருத்தாந்தங்களைச் சொல்லு. பிணிகளின்றி யிருக்கிறாயா?" என்றார்.

குருசொற்படி பரசுராமன் எழுந்திருந்து அவர் காண்பித்த ஆசனத்திலிருந்து கொண்டு பிரசன்னனாக அஞ்சலி செய்த கைகளுடன் "ஸ்ரீகுருவே! கருணைக் கடலே! தங்களுடைய கிருபாமிருதத்தினால் போஷணை செய்யப்பட்டவனுக்குப் பிரமன் சிருஷ்டித்த பிணிகளினால் துக்கம் எப்படி யுண்டாகக்கூடும்? தங்கள் கிருபையான சந்திரகிரணங்களுக்குள் இருக்கும் என்னை வியாதிகளான தாபகிரணங்கள் எவ்விதம் அடுக்கும்? தங்கள் கிருபா விசேஷத்தினால் அடியேனுக்கு உள்ளிலும் புறம்பிலும் ஸந்தோஷமே யிருக்கிறது. தங்கள் பாதசேவையை விட்டுத் தங்களிடத்தில் நின்று பிரிந்திருந்ததைப் பற்றிய வியசனமே யல்லாமல் வேறு ஒரு காரணத்தினாலும் துக்கமில்லை. ஆயினும் தங்களை இன்று தரிசனம் செய்ததனால் அடியேனுக்கு ஆநந்தம் பூரணமாகிவிட்டது. ஏனென்றால், அடியேனுடைய இருதயத்தில் சிறிது காலமாகச் சிலசம்சயங்கள் குடிகொண்டிருக்கின்றன. தங்களைவினவ வேண்டுமென்று ஆசைகொண்டிருக்கிறேன். தங்களுடைய ஆஞ்ஞையின் பேரில் என் சம்சயங்களை வெளியிடுகிறேன்" என்றான். தயாநிதியாயிருக்கிற தத்தாத்திரேயர் பார்க்கவனுடைய வசனங்களைக் கேட்டு ஸந்தோஷமுடையவராகி, இராமனிடத்தில் ப்ரீதியுடன் "ஹே பார்க்கவா! நீ கேட்க விரும்பியவைகளைக் கேட்டுக் கொள். உன்பக்தியினால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியுண்டாயிருக்கிறபடியினால் உன்னுடைய வினாக்களுக்கு விடை அளிக்கின்றேன்" என்று மொழிந்தார்.

ஸ்ரீ திரிபுரையின் இரகசியம் ஞானகாண்டத்தில் பார்க்கவ ப்ரச்னம் என்னும் முதல் அத்தியாயம் முற்றுப்பெற்றது.

## அத்தியாயம்-2

இப்படி ஆஞ்ஞாபிக்கப்பட்ட பார்க்கவன் அத்திரியின் குமாரனை முனிவனை நமஸ்கரித்து மிக வணக்கத்துடன் வினவத் தொடங்கினான்:—ஹே குருநாதா! ஆரியா! சர்வஞ்ஞ! தயாநிதியே! முன்னொருகால் எனக்கு க்ஷத்திரியர்களிடத்தில் மிகக் கோபமுண்டாகிக் குழந்தைகளையும் விடாமல் இருபத்தொரு முறை அவர்களை ஸம்ஹாரஞ்செய்து என் பிதிரினத்தாருக்குத் திருப்தியை உண்டாக்கினேன். என் பக்தியின் மகிமையினால் பிதிர்க்கள் திருப்தியை அடைய அவர்கள் ஆஞ்ஞையினால் நான் கோபத்தை அடக்கினவனாகி சாந்தமடைந்தேன். அப்படியிருக்குங் காலத்தில் நான் அயோத்தியில் ஹரியின் சுவய அவதாரமாகவந்த ஸ்ரீராமனைச் சந்தித்துக் கோபத்தினால் அந்தகனாகிக் கர்வத்துடன் இருக்கும்பொழுது, நான் அந்தபகவானால் தோல்வியடைய அவர் என்னைப் பிராமணன் என்று என்மேல் கிருபைகூர்ந்து உயிருடன் விட்டுவிட்டார். பிறகு நான் வ்யசனத்துடன் இருக்கும்போது நீறுபூத்த நெருப்புப்போலக் கூடமான இருதயமுள்ள ஸம்வர்த்தர் என்னும் நாமமுடைய ஒரு அவதூதச்ரேஷ்டரை வழியில் சந்தித்தேன். ஸர்வாங்கத்திலும் குளிர்ச்சியுடையவரான அவரைச் சந்தித்ததனால் என்னுள்ளமும் குளிர்ச்சியடைந்தது. அவருடைய நிலையைப் பற்றி நான் கேட்டதற்குத் தத்துவப் பிழம்பாக எல்லாவற்றையும் வெகு தீர்மானத்துடன் சொன்னார்.

இராணியினிடத்தில் ஓர் ஏழை ஸ்திரீ வசனிக்க எப்படி அஞ்சுவாளோ அப்படி அந்த மகாத்துமாவை வினவ அஞ்சிய எனக்குத் துணிவு பிறக்கவில்லை. பிறகு அந்த மகாத்துமாவை நான் பிரார்த்தித்து நின்றேன். அவர் தங்களிடத்திற்செல்லும்படி எனக்கு ஆஞ்ஞாபித்தார். ஆகையினால் நான் தங்கள் பாதங்களையே சரணமென்று அடைந்திருக்கிறேன். தங்கள் பாததரிசனமானது குருடருக்கு ஜனங்களைச் சந்தித்தால் எவ்விதம் மிகவும் சுகமுண்டாகுமோ அவ்விதம் இருக்கின்றது. யாதொன்றை ஸம்வர்த்த முனிவர் மொழிந்தாரோ அஃது என் மனதில் கிஞ்சித்தேனும் ஏறவில்லை. திரிபுரையினிடம் பக்தியை உண்டுபண்ணக் கூடியதான மாஹாத்மிய சிரவணத்தை நான் குறைவில்லாமற் செய்தவனாக இருக்கிறேன். * தங்களைப்போன்ற உருவமுடைய தேவியானவள் அடியேன் உள்ளத்தில் நிதமும் குடிகொண்டு இருக்கின்றாள்; இவ்விதமிருக்கும் நான் மேல் அடையும் பலன் யாதோ? யாதொன்றை அறியாமலிருந்தால் ஒருவன் கிருத கிருத்தியனாகமாட்டானோ அப்படிப்பட்ட விஷயமாய் முன் ஸம்வர்த்தர் எனக்குச் சொல்லியதை, ஏ பகவானே! கிருபை கூர்ந்து இப்போது அருளிச்செய்யவேண்டும். அவர் சொல்லியதைக் கிரகியாமல் நான் எதை எப்படிச் செய்தாலும் அது சிறுவர்களின் விளையாட்டுக்கு நிகராக இருக்குமென்று அடியேனுக்குப் புலப்படுகிறது. முன், என்னால், தக்ஷிணை அன்னதானம் இவைகளுடன் அநேக விதமாக யாகங்கள் செய்யப்பட்டன. என் இஷ்ட தேவதைகளும் இந்திரன் முதலானவர்களும்

* தத்தாத்திரேய பகவானுக்கு மூன்று தலைகளிருப்பது போல தேவி முச்சடர் வடிவானவளென்றறிக.



திருப்தி அடையும்படி நான் செய்ததெல்லாம் சொற்ப பலமென்று ஸம்வர்த்தர் மொழிந்திட நான் கேட்டிருக்கிறேன். எந்தக் கர்மங்கள் சொற்ப பலங்களைக் கொடுக்கின்றனவோ அவைகள் துக்க ரூபமென்றே எண்ணுகிறேன். துக்கமென்பது சுகமின்மை யன்று. சொற்ப சுகந்தான் துக்கமென்று சொல்லப்படும். ஏனென்றால் சுகம் குறைந்து கொண்டு வரும்போது துக்கமானது பலமாக உண்டாகிறது; துக்கம் மாத்திரமன்று, கர்மத்தினால் எவ்விதத்திலும் தடுக்கக்கூடாத மிருத்ய பயமுமுள்ளது. திரிபுரையின் உபாசனையின் பொருட்டு நான் என்னென்ன செய்திருக்கிறேனோ அவைகளும் மனோ வியாபாரங்களானவை யாகையால் இவ்விதமாகவே குழந்தை விளையாட்டுக்கு நிகரென்று எனக்கு விளங்குகின்றன. அந்த உபாசனையைத் தாங்கள் எவ்வாறாக செய்யவேண்டுமென்று ஆஞ்ஞாபித்தீர்களோ அவ்வாறு செய்தாலும் செய்யலாம்; அல்லது வேறு விதத்திலும் செய்யலாம்; சாஸ்திர பேதங்கள் இருப்பதனாலே நியமமுடனாவது நியமமின்றி யாவது செய்யலாம். உபாசனைக்குத் தகுந்த மூர்த்தி பேதங்களிருப்பதனால் வேறு மூர்த்திகளையும் உபாசனை செய்யலாம். ஆகையினால் உபாசனையும் யாகாதிகளுக்கு நிகராக அசத்திய பலனைக் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்படுகிறதே, இஃதென்னகாரணம்? மனோ வியாபாரமான அந்த உபாசனையானது அசத்திய சொரூபமாயிருக்குமானால், அஃது எப்படித்தான் உண்மையான பலனைக் கொடுக்கக்கூடும்.

ஸம்வர்த்த முனிவரானவர் கர்த்தவ்யமென்னும் விஷச்சுனையில் நின்றும் தப்பினவராகவும், உலக நடைகளைப் புன்சிரிப்புடன் நோக்கினவராகவும், நிர்ப்

பயமான மார்க்கத்தில் நடக்கின்றவராகவும், காட்டுத் தீயின் மத்தியில் பனிஜலத்திலிருக்கும் யானைபோலவும், எல்லாக்கர்த்தவ்யங்களையும் ஒழித்து ஆநந்தாநுபவ சீலராகவும், எவ்விடத்தும் குளிர்ச்சியுடையவராகவும் இருந்ததை நான் கண்டேன். அவர் அந்த நிலைமையை எவ்விதம் அடைந்தாரோ அந்த மார்க்கத்தையும் அவர் என்னிடத்தில் சொல்லி யிருக்கிறார். இவை யாவற்றையும் தாங்கள் கிருபை கூர்ந்து அடியேனுக்குச் சொல்ல வேண்டும்" என்றான். இவ்விதம் கேட்டுக்கொண்டு தம்முடைய பாதங்களில் தண்டாகாரமாக விழுந்து வணங்கா நின்ற பார்க்கவன் முக்திக்குப் பாத்திரமாயிருப்பதைத் தத்தாத்ரேயர் பார்த்து அவன் மேல் மிகவும் தயையுடையவராகிச் சொல்லத் தொடங்கினார்:—குழந்தாய் பார்க்கவா! உன் புத்தியின் போக்கானது இந்தவிதம் திரும்பினபடியால் நீயே தன்யன். சமுத்திரத்தில் முழுகித் தவிப்பவர்களுக்கு ஓர் ஓடம் கிடைக்குமானால் எப்படியோ அப்படி இவ்விதமான விசாரத்தை நீ அடைந்திருக்கிறாய். நீ இதுவரையிலும் செய்து வந்த புண்ணிய கருமங்களும் உபாசனைகளுந்தான் உன்னை மிகவும் பரிசுத்தமான பதத்திற்குத் தூக்கிவிடுகின்றன. ஸர்வ இருதயாகாச ரூபிணியாக இருக்கும் அந்தத் தேவியானவள் அனன்னிய சரணர்களான பக்தர்கள் இருதயத்தில் விசேஷ விசாரணை ரூபமாகப் பரிணமித்துக் காலபயத்திலிருந்தும் அப்படிப்பட்ட பக்தர்களைத் தப்புவிக்கின்றாள்.

எக்காலம் வரையில் கர்த்தவ்யமான வேதாளங்களுக்கு நரனானவன் அஞ்சுகிறானோ அதுவரையில், வேதாளத்தினால் ஆவேசிக்கப்பட்டவன் போல் அவன்



சுகத்தை அடைகிறதில்லை. கர்த்தவ்யமென்னும் காளஸர்ப்பத்தினால் தீண்டப்பட்ட மானிடருக்கு எப்படித்தான் சுபமுண்டாகப் போகிறது? கர்த்தவ்ய மென்ற விஷஸ்பரிசத்தினால் உலகத்தோர் யாவரும் மூர்ச்சையடைந்திருப்பதை நீபார்க்கவில்லையா? அந்தகர்களாகித் தங்களுக்கு ஹிதமானது இன்னதென்றும் இன்னது அஹிதமென்றும் அறியாம லிருக்கிறார்கள். இதற்குக்கான முயற்சிகளையும் ஸாதனங்களையும் விட்டு அன்னியமாக முயலுவது மன்றி அடிக்கடி மோகத்தில் மூழ்குகிறார்கள். இவ்விதம் உலகத்தோர் கர்த்தவ்யமென்ற விஷத்தினால் மூர்ச்சை அடைந்து அநாதிகாலமாகப் பயங்கரமான இந்த விஷ சமுத்திரத்தில் தவிக்கிறார்கள்.

எவ்விதமென்றால், சில வழிப்பிரயாணிகள் விந்திய மாமலையை அடைந்து அவர்களுக்குப் பசியானது மீறியிருந்ததால் வனத்தில் பழங்களிருப்பதைப் பார்த்துத் திந்துக பலமென்று கருதி விஷமுஷ்டிப் பழத்தைத் தின்று விட்டார்கள். அவர்களுக்குப் பசி அதிகமாக மீறி யிருந்தபடியினால் பழத்தினது ருசியைக் கூடக் கவனியாமல் தின்றார்கள். பிறகு அவர்கள் அந்த விஷமுஷ்டிப் பழத்தின் விஷச்சுவாலையினால் தங்கள் தேகம் முழுமையும் பீடிக்கப்பட்டவர்களாய் அந்த விஷ சமனத்தின் பொருட்டு ஒரு வழியும் தோன்றாதவராகி ஆலோசனை செய்யும் பொழுது அந்த வனத்தில் காய்த்திருக்கும் ஊமத்தங்கனிகளைப் பார்த்து அவைகளைப் பிராந்தியினால் எலுமிச்சம் பழமென்று கருதி எல்லோரும்பறித்துத் தின்று விட்டார்கள். அதன்மேல் அவர்கள்உன்மத்தர்களாக வழி தப்பினவராகி அவ்வனத்தில் கண்தெரியாமல் தட்டுக் கெட்டுத் தவித்தனர். சிலர்

மடுக்களில் வீழ்ந்தனர். சிலர் மரக்கொம்புகளினால் அங்கங்கள் கீறப்பட்டவராகிக் கைகால் ஒடிந்தவரானார். ஒருவரை யொருவர் தூஷணை செய்துகொண்டனர் பலமாகக் கலகஞ்செய்து முஷ்டியினாலும் கற்களினாலும் தடிகளினாலும் ஒருவரை யொருவர் கொலைபண்ண யத்தனம் செய்தனர். அவர்களிற் சிலர் தேகம் முழுமையு நொந்தவராகித் தெய்வச் செயலாலே ஒரு பட்டணத்தின் கோட்டை வாயிலை இரவில் அடைந்தனர். த்வாரபாலகர்களாலே மறுக்கப்பட்டவராகித் தேச காலங்களின் உணர்ச்சி யில்லாதவராய் அவ்விடத்தில் பலமாகக் கலகஞ் செய்தனர். அப்பொழுது த்வாரபாலகர்களால் அடிக்கப்பட்டு நாலு பக்கத்திலும் அந்த நிசிவேளையில் ஓடவாரம்பித்தார்கள். சிலர் அகழ்களில் வீழ்ந்தனர்; சிலர் மகர மச்சியங்களால் விழுங்கப்பட்டனர். சிலர் கிணறுகளில் வீழ்ந்து உயிரிழந்தனர். மற்றுஞ்சிலர் கொல்லப்பட்டனர். சிலர் சிறை வைக்கப்பட்டனர்.

இவ்விதமாக உலகத்தில் ஜனங்களும் அவரவர்களுடைய இச்சைகளினாலே கர்த்தவ்ய மென்னும் விஷத்தினால் மூர்ச்சிதர்களாகி யிருக்கிறார்கள். மோகத்தினால் அந்தகர்களா யிருக்கிறபடியால் அஹோ! நரர்கள் விநாசத்தையே அடைகிறார்கள். ஆனால் ஏ பார்க்கவா! நீ மோகத்தைக்கடந்து விட்டபடியால் தன்யனாக இருக்கிறாய். உயர்ந்த சிரேயஸ் என்னும் உப்பரிகையின் மேல் செல்லுதற்கான ஏணியின் கீழான முதற்படி விசாரமென்று அறிவாயாக. நல்ல விசாரணை யின்றி எவன் எப்படித்தான் க்ஷேமத்தை அடையப்போகிறான். அவிசாரத்திற்கு அன்னியமாக மிருத்யுகிடையாது. அவிசாரத்தினாலேயே ஜனங்கள்



நாசத்தை அடைகிறார்கள். பூர்வாலோசனை செய்கிறவன் தான் கோரினதைச் சேர்ந்து வெற்றி பெறுகிறான். அசுரர்களெல்லோரும் தங்கள் அவிசாரத்தினாலேயே நாசமடைகிறார்கள். தேவர்கள் விசாரசீலர்களானதால் எவ்விதத்திலும் சுகம் பொருந்தியிருக்கிறார்கள். விசாரத்தை முன்னிட்டு, அவர்கள் விஷ்ணுவை யடைந்து தங்கள் சத்துருக்களான அசுரர்களை ஜயிக்கிறார்கள். சுகமென்னும் விருக்ஷத்திற்கு விசாரமென்பது தான் முளையடங்கின பீஜம். எல்லோரிலும், மேன்மையான விசாரமுள்ள புருஷனே விசேஷமாக விளங்குகிறான்.

விசாரத்தினால் பிர்ம்மா சிரேஷ்டர், விசாரத்தினால் ஹரி பூஜிக்கப்படுகிறார்; மகேசுவரனான சிவனும் தம் விசாரத்தினாலேயே சர்வஞ்ஞராக இருக்கின்றார். புத்திமான்களிற் சிரேஷ்டரான இராமர் தன் அவிசாரத்தினால் மானுக்கு ஆசைகொண்டு மகத்தான ஆபத்தை அடைந்தனர். பிறகு விசாரத்தினால் சமுத்திரத்தை அணைபோட்டு இலங்கைக்குச் சென்று இராக்ஷதர்களை, ஜயித்தார். அவிசாரத்தினால் வேதாவும் மூடனாகி அபிமானம் ஏதுவாகத் தன் தலை யறுபட்டான் என்று கேட்டிருக்கிறோம். மகாதேவனும் பூர்வாலோசனை செய்யாமல் அசுரனுக்கு வரத்தைக் கொடுத்து விட்டு நம்மை அவன் தொட்டால் நாம் பஸ்மமாகப் போய் விடுவோமென்று பயந்து ஓடத் தலைப்பட்டாரன்றோ? ஹரியானவர் முன்னொருகால் அவிசாரத்தினால் பிருகுவின் பத்தினியைக் கொன்றதின் மேல் ஏற்பட்ட சாபத்தினால் மிகவும் சகிக்கக் கூடாத துக்கத்தைப் பிராபித்தனர். இவ்விதமாக இன்னும் அநேகம் தேவர்களும் அசுரர்களும் நரர்களும் மிருகங்களும் தங்கள் தங்கள்

அவிசாரமூலமாக ஆபத்துக்களை அடைந்திருக்கிறார்கள். எவர்கள் விசாரணையைக் கைவிடாமலிருக்கிறார்களோ அவர்கள் தாம் மகா பாக்கியசாலிகளும் தீரர்களும் ஆவர். அப்படிப்பட்டவர்களுக்கு நான் எப்பொழுதும் வந்தனம் செய்கிறேன்.

ஸர்வ ஜனங்களும், செய்யக் கூடாதவைகளைச் செய்யத் தக்கவையென்று தங்கள் அவிசாரத்தினால் தாரணை செய்துகொண்டு மோகத்தில் அழுந்துகிறார்கள். அபாரமான சங்கடத்திலிருந்து தப்பிக் கொள்ளுகிறதற்கு விசாரமென்பதொன்றே மார்க்கம்.

அவிசாரமானது ஒருவனிடமிருக்கிற வரையிலும் விமர்சம் என்னும் பூர்வாலோசனையானது எவ்வாறுண்டாகும்? கோடைகாலத்து வெயிலினால் காய்ந்துகொண்டிருக்கும் மருப்பூமியில் சீதளமான ஜலம் தங்குமா? இப்படி வெகுகாலமாக அவிசாராக்னியின் ஜ்வாலைகளினால் சூழப்பட்டிருப்பவனுக்கு விசாரமென்னப்படும் சீதளஸ்பரிசம் தகுந்த ஸாதனங்களின்றி எப்படி யுண்டாகக்கூடும்? அதற்கு ஸாதனம்யாதென்றால் ஒன்றேதான் உள்ளது. அது மிகச் சிரேஷ்டமான ஸாதனம். அது யாதெனின் எல்லோருடைய இருதய கமலங்களிலும் வாசம் பண்ணுகிற தேவதையினுடைய மேலான கிருபைதான். இஃதன்றி அவிசாரமான பெருத்த அந்தகாரத்தை நாசஞ் செய்யவும் விசார சூரியனை உதயமாகச் செய்யவும் வேறு சாதனம் யாது? இந்த ஸாதனமன்றி யார்தான் சிரேயஸை அடைந்திருக்கிறார்கள். தெய்வத்தை மிகவும் பக்தியுடன் ஆராதனை செய்வதுதான் இந்த ஸாதனத்திற்கு மூலகாரணம். பரதேவதையானவள் இவ்விதம் ஆராதிக்கப்பட்டால் பூரண ஸந்தோஷமடைந்து பக்தருடைய இருதயாகாசத்தில் விசார சூரியனாக உதயம் செய்கிறாள். ஆகையினால் ஆத்ம சொரூபிணியானவளும், ஸர்வ இருதயவாசினியும் சித்ரூபியும், சிவையும், பரமேசுவரியுமான திரிபுரையை ஸத்குரு மார்க்கமாக உள்ளத்தில் கபடமின்றி ஆராதனை செய்யவேண்டும். இப்படிப்பட்ட ஆராதனைக்கு நிர்மலமான பக்தியும் சிரத்தையுந்தான் காரணம். இவைகளுக்கு ஹேது, திரிபுரையின் மாகாத்மியத்தைச் சிரவணஞ் செய்வதுதான். இது காரணமாகத்தான் ஏ இராமா! உனக்குத் திரிபுரையின் மாகாத்மியத்தை முன்னதாகச் சொன்னேன். அதனைக் கேட்டிருக்கிறபடியினால் தான் நீ இப்பொழுது மங்களத்தைச் சார்ந்திருக்கிறாய். ஏனென்றால், ச்ரேயசுக்கு மூலமாயிருக்கிற விசாரமென்பது உன்னிடத்தில் உதயமாயிருக்கிறது. விசாரமானது உதயமாகிறவரையில் மகத்தான பயமுண்டு. ஜன்னிபாத ஜ்வரமுடையவனுக்கு ஔஷதங்களினால் தாதுக்கள் சுத்தியாகிற வரையிலும் பயமிருப்பதுபோல அவிசார தோஷத்தினால் ஆவேசமடைந்தவனுக்குப் பயம் இருந்து கொண்டிருக்கும். பரமமான விசாரம் உதயமானால் தான் மனித ஜன்மம் பலனுடையதாகிறது. எக்காலம் வரையில் ஒருவனுடைய ஜன்மதிசையில் விசாரமுண்டாகவில்லையோ அதுவரையிலும் அந்த ஜன்மவிருக்ஷமானது வந்தியையென்றே சொல்லலாகும். எவனுடைய ஜன்மத்தில் விமர்சம் என்னும் விசாரணை உண்டாகிறதோ அதுதான் ஸபலமான ஜன்மம். விசாரமற்ற மனிதர்கள் கிணற்றுத் தவளைகளுக்கு நிகராவர். பேகங்களானவை எப்படிச் சுபாசுபங்களை அறியாமல் கிணற்றிலேயே உற்பத்தியாகிக் கிணற்றில் தானே நாசத்தை அடைகின்றனவோ அவ்விதம் இத்தப் பிர

மாண்டமான கூபத்தில் ஜீவர்கள் தங்களுக்கு ஆத்மார்த்தமாக இன்னது சுபமென்றும் இன்னது அசுபமென்றும் அறியாமல் விருதாவாக அடிக்கடி உற்பத்தியாகிநாசத்தை யடைகிறார்கள். தங்களுக்கு இதமானது இன்னதென்றறியாமல் அவிசாரத்தின் வலிமையினால் துக்கத்தில் சுக புத்தியுடையவராகவும் சுகத்தைத் துக்கமென்று தீர்மானித்தும் ஸம்ஸாரமான அக்கினியினால் தாபப்படுகிறார்கள். துக்கங்களினால் மிகவும் வியசனத்தை அடைந்தாலும் ஜீவர்கள் இந்த ஸம்ஸாரத்தை விடுகிறதில்லை. எப்படிப் பெண் கழுதையானது தன் கால்களினால் அடிக்கடி உதைத்துக் கொண்டிருந்தாலும் ஆண் கழுதை பின் தொடர்ந்து செல்லுகிறதோ அவ்விதம் ஜனங்கள் இந்த ஸம்ஸாரத்தில் உழன்று வருகிறார்கள். ஆனால் ஏ இராமா! நீயோ வென்றால் விசாரத்துடன் கூடினவனானபடியால் துக்க மகா சமுத்திரத்தைத் தாண்டிவிட்டாய்" என்றார்.

ஸ்ரீ திரிபுராரகஸிய ஞானகாண்டம்
விசார மாகாத்மியமென்னும் இரண்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்—3

தத்தாத்திரேயர் மொழிந்த வசனங்களைக் கேட்டு ஜமதக்கினி புதல்வன் விநய விருப்பங்களுடன் வினவியதென்னவென்றால், "பகவானே! தாங்கள் யாது கூறினீர்களோ அஃது உண்மைதான். ஜனங்கள் எப்பொழுதும் தங்கள் அவிசாரத்தினாலேயே நாசமடைகிறார்கள். விசாரத்தினால் ச்ரேயசு உண்டாகிறதென்றும், அதன் நிதானம் திரிபுரையின் மாகாத்மிய ச்ரவணமென்றும் மொழிந்தீர்களே! அதனிடத்து அடியேனுக்கு ஒரு பெரிய ஸந்தேகம் ஜனித்திருக்கிறது. அந்த மாகாத்மிய ச்ரவணமானது ஒருவனால் எவ்விதம் அடையப்படுகிறது? அதற்கு ஸாதனம் யாது? சுபாவமாகவே இலபிக்கக் கூடியதாயிருந்தால் ஏன் எல்லோராலும் மாகாத்மிய ச்ரவணஞ் செய்யப்படுகிறதில்லை? அநேக ஸந்தர்ப்பங்களில் நான் பலவாறாகத் தங்களை அடைந்தவனாக இருந்தும், திரிபுரையின் மாகாத்மியத்தை ச்ரவணஞ் செய்ய இந்நாள் வரையிலும் எனக்கு ஏன் நேரவில்லை? இதன் காரணத்தை அடியேனுக்கு அருளவேண்டும்" என்றான். இவ்விதம் வினவப்பட்ட தயாநிதியான தத்தர் ஸந்தோஷத்துடன் மறுமொழி கூறுகின்றார்:—"ஏ இராமா! பரமமாயிருக்கிற ச்ரேயசுக்கு நிதானம் இன்னதென்று சொல்லுகிறேன், கேட்கக்கடவாய். ஸர்வ துக்கங்களையும் த்வம்சம் செய்யக் கூடியதான அந்த மூல காரணம் ஸாது சங்கமென்றறி. பரமார்த்தமாக பலனை

யடைய ஸத்துக்களுடைய ஸங்கந்தான் பீஜமென்று சொல்லப்படும். எப்படி யென்றால், உனக்கு மகாத்துமாவான ஸம்வர்த்தருடன் சேர்க்கை யுண்டாயிருந்தபடியாற்றான் ச்ரேயசான பலனைக் கொடுக்கக்கூடிய இந்நிலையை நீயும் இப்பொழுது அடைந்திருக்கிறாய். ஸத்துக்கள் எதிர்ப்பட்டால் பரமமான சுகத்தை அளிக்கிறார்கள். ஸாது ஸங்கமின்றி எவனொருவனாலே எக்காலத்திற்றான் ச்ரேயசானது அடையப்பட்டிருக்கிறது. உலகத்தில் எந்த விதமான ஸங்கத்தை ஒருவன் அடைகிறானோ அதற்குத் தகுந்த பலனையும் அடைகிறான் என்பதற்கு ஸந்தேகமில்லை. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதை சொல்லுகிறேன், ஏ இராமா! நன்றாய்க் கேட்டுக்கொள்.—

முற் காலத்தில் தசார்ண தேசத்திற்கு அதிபதியாக முக்தாசூடனென்று ஓர் அரசனிருந்தான். அவ்வரசனுக்கு நல்ல குணவான்களாகவும் அழகுடையவர்களாகவும் சகல கலைகளிலும் பயின்றவர்களாகவும் ஹேமசூடனென்றும், மணிசூடனென்றும் பெயர் பெற்றவரான இரண்டு புத்திரர்கள் இருந்தனர். பராக்கிரமசாலிகளான இவ்விருவரும் ஒரு தினம் வேட்டையாடும் பொருட்டுச் சேனைகளுடன் சிங்கம் புலி முதலிய மிருகங்கள் நிறைந்த பயங்கரமான சஹ்ய பருவதத்திற் கடுத்த வனத்திற்குத் தநுசு பாணம் முதலிய ஆயுதங்களுடன் சென்றார்கள். அவ்விடத்தில் தங்கள் கூரிய அம்புகளினால் மான்கள், சிங்கங்கள், காட்டுப் பன்றிகள், காட்டெருமைகள் முதலிய மிருகங்களை வேட்டையாடிக் கொன்றார்கள். இப்படி வேட்டையாடிக்கொண்டிருக்கும் வேளையில் கல்மாரியுடன் ஒரு கோரமான புசல் அடித்தது. அதனால் அமாவாசை



இருட்டிற்கு நிகராகும்படி புழுதியானது வான முழுதும் நிறைந்தது. எங்கும் இருளானது பரவியபடியால் பாறையாவது மரங்களாவது மனிதராவது ஒன்றும் புலப்படவில்லை. அந்தகாரத்தினால் வ்யாபிக்கப்பட்ட குன்றுகளில் மேடுபள்ளங்கள் எப்படித்தான் தெரியப்போகின்றன. கல்மாரியினால் தேகங்கள் நொந்து சேனைகள் ஓடத் தலைப்பட்டன. சிலர் விருக்ஷங்களில் ஏறிக்கொண்டனர்: சிலர் குகைகளில் புகுந்தார்கள். இராஜ புத்திரர்க ளிருவரும் தங்கள் குதிரைகளின் மீது ஏறி வெகு தூரம் சென்றார்கள். இவர்களில் ஹேமசூடனானவன் ஓரிடத்தில் கதலிகர்ச்சூர விருக்ஷங்கள் அடர்ந்ததும் மிகச் சுந்தரமானதுமாகிய ஒரு தபசியின் ஆச்ரமத்தை யடைந்தான். அவ்விடத்தில் உருக்கிவிட்ட தங்கம்போலத் தேகம் முழுதும் ஒளி வீசுகின்ற காந்தியை யுடைய அக்கினியின் சிகைக்கு நிகரான ஒரு கன்னிகையைக் கண்டனன். இலக்ஷ்மியைப் போல அழகுடைய அந்தப் பெண்ணை இராஜகுமாரன் பார்த்து வியப்புற்றவனாகி, "ஜனமில்லாத பயங்கரமான இவ்வனத்தில் கொஞ்சமேனும் அச்சமில்லாதவள் போல இருக்கும் சுந்தரியே! நீ யார்; நீ யாருடைய புதல்வி; யாது காரணத்தினால் நீ யிவ்விடத்தில் ஏகாங்கியாக இருக்கிறாய்?" என்று வினாவினான்.

இவ்விதம் கேட்கப்பட்ட அக்கன்னிகை இராஜகுமாரனுக்கு மரியாதையுடன் விடையளித்தாள். "வாரும் ஏ இராஜகுமாரா! ஆசனத்திலிரும்; அதிதிகளை ஆதரிப்பது தபசிகளுடைய தருமம்; புயலில் அடிபட்டதனால் மிகவும் சிரமத்தை அடைந்தவராக உம்மைக் காண்கின்றேன். ஆகையினால் கர்ச்சூரமரத்தில்

குதிரையைக் கட்டிவிட்டு ஆசனத்தமர்ந்து ச்ரமபரிகாரஞ் செய்து கொள்வீர். பிறகு என்னுடைய விருத்தாந்தங்களைச் சொல்லக்கேட்பீர்" என்று அவள்கூற அப்படியே இராஜகுமாரன் செய்தனன். பிற்பாடு அக்கன்னிகை இராஜகுமாரனுக்குப் பழங்களினாலும் நல்ல கனிகளின் இரஸங்களினாலும் உணவு செய்து உபசரித்தாள். இவ்விதமாக ச்ரமபரிகாரஞ்செய்துகொண்ட இராஜகுமாரனைப் பார்த்து மரியாதையுடன் அழகு பொருந்திய தேன் மொழிகளினால் அக்கன்னிகை சொன்னதென்னவென்றால், "ஏ இராஜபுத்திரா! சிவபதத்தை ஆச்ரயித்தவரும் தமது தபோமகிமையால் உலகத்தை வென்றவரும் பிர்மஞானியும் முனிச்ரேஷ்டர்களால் பூஜிக்கப் பட்டவருமான வியாக்கிரபாதர் என்னும்முனிவரின் தர்மபுத்திரி நான். ஹேமலேகை யென்று எனக்குப்பெயர். சர்வாங்க சுந்தரியான வித்யுத் பிரபா என்னும் நாமமுடைய ஒரு வித்தியாதர ஸ்திரீயானவள் ஒருதினம் வேணு என்ற இந்த நதியில் ஸ்நாநம் செய்வதின் பொருட்டு வந்தனள். அவ்வேளையில் சுஷேணனென்ற வங்கதேசத் தரசனும் அந்நதிக்கு வந்து சேர்ந்தான்; நதியில் ஸ்நாநம் செய்யும் உலகசுந்தரியானவளும் வஸ்திரமகன்றவளுமான அந்த வித்தியாதர ஸ்திரீயை இராஜன் பார்த்துக் காமபாணத்தினால் அடிக்கப்பட்டவனாகி அவளைப் பிரார்த்திக்க, அவளும் அரசனுடைய அழகைக்கண்டுமோகித்தவளாகி அவ்வரசனுக்கு அநுகூலப்பட்டாள். அரசன் அவளுடன் கூடியிருந்து விட்டுத் தன் நகரத்திற்குச் சென்றனன். இராஜரிஷியின் வீரியத்தினால் அந்த வித்தியாதரி சீக்கிரம் கர்ப்பந்தரித்தாள். தன் கணவனுடைய அபசாரமுண்டாகுமென்று பயந்து தான்



தரித்த கர்ப்பத்தைக் கீழே தள்ளிவிட்டு அவள் சென்றாள். இராஜரிஷியின் அமோகவீரியத்தினால் நான் கன்னிகையாகப் பிறந்தேன். ஸந்தியாவந்தனத்துக்காக நதிக்கரைக்குவந்த வ்யாக்கிரபாதர் என்னைப்பார்த்துத் தயையுடன் எடுத்துவந்து தாய்போல் என்னை வளர்த்து வந்தார்; தருமத்தினால் என்னை இரக்ஷித்து வந்தனர். அவரைப் பிதாவென்றே நான் சொல்லுகிறேன். நான் அவருக்குப் பிதிர்சேவையில் மிகச்ரத்தையுள்ள தர்ம புத்திரி. அவருடைய மகிமையினால் இங்கு நான் ஒருபொழுதும் பயமில்லாமலிருக்கிறேன்; துர்ப்புத்திகளும் தேவர்களும் அசுரர்களுங்கூட இந்த ஆச்ரமத்திற்குள் பிரவேசிக்கமுடியாது. மீறிப் பிரவேசிப்பவர் நாசமடைந்து விடுவார்கள். இவ்வளவுதான் என்னுடைய விருத்தாந்தம். என்பிதாவான பகவான் இதோ வந்துவிடுவார். ஆகையினால் இராஜகுமாரா! சற்று இரும். அவரை நமஸ்கரித்து உமக்கு வேண்டிய வரங்களைக்கேட்டுப் பெற்றுக்கொண்டு விடியற்காலமே செல்லலாம்" என்றாள்.

இராஜகுமாரன் காமவசனாக இருக்கிறானென்று விதுஷியான ஹேமலேகை கண்டு பின்னும் சொல்லுகிறாள். "ஏ இராஜபுத்திரா! தைரியத்துடன் இரும்; இதோ என்பிதா வந்துவிடுவார்; அவரிடம் உமது அபிலாஷையைக் கேட்டுக் கொள்ளலாம்" என்றாள். இவள் இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும் வேளையில் வியாக்கிரபாத முனிவர் பத்திரபுஷ்பங்கள் எடுத்துக்கொண்டு வனத்தினின்றும் வந்தார்; வந்த முனிவரைப்பார்த்து இராஜபுத்திரன் எழுந்திருந்து தன் பெயர்சொல்லி நமஸ்கரித்து அவர் ஆஞ்ஞையின்மேல் உட்கார்ந்தான். இராஜபுத்திரன் காமவசனாக இருக்கும் முகக்குறியை

வியாக்கிரபாதர் அறிந்து ஞான திருஷ்டியினால் சர்வத்தையும் தெரிந்துகொண்டு இது யுக்தமே யென்று தீர்மானித்து ஹேமலேகையை இராஜகுமாரனுக்குக் கன்னிகாதானஞ் செய்துகொடுத்தார். இராஜகுமாரன் மிகுந்த ஸந்தோஷத்துடன் அவளையழைத்துக்கொண்டு தன் நகரம்வந்துசேர்ந்தான். அதன்மேல் முக்தாசூடனென்ற அரசன் மிகவும் ஸந்தோஷமடைந்து நகரமெங்கும் விதானங்கள் செய்வித்து அனேக உற்சவங்களுடன் அவர்களுடைய விவாகத்தை நடத்தினான். பிறகு அந்த இராஜகுமாரன் உப்பரிகைகளிலும் உத்தியானங்களிலும் மருப்பூமிகளிலும் ஹேமலேகையுடன் சுக கிரீடாபரனாக இருந்தனன். ஆனால் தன்பத்தினியான ஹேமலேகை போகங்களில் அதிக விருப்பில்லாதவளாகவும் எப்பொழுதும் அவைகளில் உதாசீனமாகவுமிருப்பதை இராஜகுமாரன் பார்த்து ஒருதினம் தனிமையாக இருக்கும்பொழுது கேட்கிறான்—"ஏ பிரியையே! உன்னிடம் மிகுந்த அநுராகத்துடனிருக்கும் என்னிடத்தில் நீ என் பிரியமில்லாதவள் போலிருக்கிறாய்? போகங்களில் அத்தியந்தம் ஆசக்தியில்லாதவளாக நீ இருப்பதற்கு யாதுகாரணம்? இங்கு இல்லாதனவும் உன்மனதிற்கு அநுகூலமுமான போகங்களெவை? மிகவும் உத்தமமான போகங்களிலேயும் விருப்பமில்லாதவள்போலப் புலப்படுகிறாயே! போகங்களில் ஆசக்தியில்லாதவளாக இருக்கிற உன்னுடன்கூட இரதியில் எனக்கு எப்படிச் சுகமுண்டாகக்கூடும்? உன்மீது மிகுந்த பிரியத்துடனிருக்கும் என் விஷயத்தில் வேறு இடத்தில் தன்மனதை வைத்திருக்கிறவள் போலத் தோற்றுகிறாயே! நான் அடிக்கடி வசனித்துக்கொண்டிருந்தாலும் சற்றேனும் அவைகளைச்



செவியில் ஏற்றுக்கொள்ளவில்லையே! நான் உன்னிடம் வந்து வெகுநேரமாக உன் கழுத்தைக் கட்டிக்கொண்டிருந்தும் அது ஒன்றும் தெரியாதவளாக நாதா! எப்பொழுது வந்தீரென்று கேட்கிறாய்! அழகுபொருந்திய பற்பல உபயோகங்களிலும் உன் மனமானது ஒருகாலத்திலும் பதியாமலிருக்கிறது. நீ ஸந்தோஷப்படுகிறதுமில்லை. நான் உன்னைவிட்டுப் பிரிந்திருக்கும்பொழுது கண்மூடினவளாகவே நிற்கிறாய். எந்தவேளையும் இங்கு நான் வரும்பொழுதெல்லாம் அதே ஸ்திதியி லிருக்கிறாய். தாருவினால் செய்யப்பட்ட ஸ்திரீயை ஆலிங்கனஞ் செய்வதுபோலப் போகங்களில் பிரியமில்லாத உன்னுடன்கூட எனக்கு எப்படிச் சுகமுண்டாகும்? உன்னுடைய மனதிற்கு விரோதமாக நான் ஒன்றுஞ்செய்ததில்லையே; எவ்வேளையிலும் சந்திரனைக் குமுதம் (ஆம்பல்) போல் உன்னைத் தொடர்ந்து வருகிறேனே! ஏ பிராணாதிகப் பிரியையே! உன்னுடைய சித்தமானது என்ன காரணத்தினால் இவ்விதமிருக்கிறது? இதைத் தெரிவித்து என் மனதைத் தெளியச்செய்வாய்" என்றான்.

ஸ்ரீ திரிபுரா ரகஸிய ஞான காண்டம்
ஸத்ஸங்கமாகாத்மியத்தில் மூன்றாவது
அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்-4

கண்டத்தைக் கட்டிக் கொண்டிரா நின்ற தன் பிரியனுடைய மொழிகளை ஹேமலேகை கேட்டு அற்பப் புன்சிரிப்புடன் இராஜபுத்திரனிடம் மரியாதை யுள்ளவளாக அவனுக்கு யுக்தியினால் போதம் உண்டு பண்ண வேண்டுமென்று கருதி அடியில் வருமாறு சொல்லத் தொடங்கினாள். "இராஜ புத்திரரே! என் வசனங்களைக் கேளுங்கள்; நான் உங்களிடத்தில் பிரிய மில்லாதவளன்று; உலகத்தில் பிரியமென்பது என்ன, அப்பிரியமென்பது என்னவென்று எனக்கு விளங்கா மையினால் ஸ்திரீ சுபாவத்தினால் தினமும் ஆலோசனை செய்கிறேன். ஒரு முடிவும் எனக்குப் பிடிபடவில்லை. அதனுடைய தத்துவம் இன்னதென்றும் எனக்குத் தெரியவில்லை. அதன் தத்துவத்தை எனக்குச் சொல்ல வேண்டுமென்று உங்களைக்கேட்டுக் கொள்கிறேன்" என்றாள். இவ்விதம் அவள் சொன்னபொழுது ஹேம சூடன் புன்னகையுடன் தன் பிரியையினிடம் சொல்லு கிறான். "பேதமைக்குணம் பெண்களுக்குண்டு என் பது நிச்சயந்தான்; ஸந்தேகமில்லை. பிரியம் இன்னது அப்பிரியம் இன்னது என்று பசு பக்ஷி மிருகங்கள்கூட அறிகின்றன. அவைகளுக்கும் பிரியங்களில் பிரவிருத் தியும் அப்பிரியங்களில் நிவிருத்தியும் உண்டாகின்றன வென்பதை நாம் காண்கிறோம். எதனிடமிருந்து சுக முண்டாகிறதோ அது பிரியம்; எதனிடமிருந்து துக்க முண்டாகிறதோ அது அப்பிரியம். இந்த விஷயத்தில்



என் தினமும் மூடத்தனத்தினால் சிந்தனை செய்து கொண்டிருக்கின்றாய்" என்றனன். இம்மொழிகளைக் கேட்டு ஹேமலேகை மறுபடியும் தன் கணவனிடம் கேட்கிறாள்.

"ஸ்திரீகளுக்குப் பேதமைக்குண முண்டென்பது உண்மைதான். அவர்களுக்கு நல்ல ஆலோசனாசக்தி கிடையாது. அது காரணமாகப் பேதையான எனக் குப் போதம் உண்டுபண்ணுவது ஆலோசனை மிகுந்தவ ரான உங்களுடைய கடமையன்றோ? உங்களால் நல்ல போதம் உதித்தவளாகி இவ்விதம் சிந்தனைசெய்வதை விட்டுவிட்டுச் சதா உங்களுடன் போகத்தில் இருந்து விடுகிறேன்" என்றுசொல்லிப் பின்னும்சொல்லுகிறாள். "இராஜாவே! சூக்ஷ்மமாக ஆலோசனை செய்திருக் கிற நீங்கள் சுக துக்கங்களிலிருந்து பிரியாப் பிரியங் கள் உண்டாகின்றன வென்று தீர்மானித்தீர்கள். ஆனால் ஒரு விஷயந்தானே காலதேசங்களினால் பேதத்தை அடைந்து சுகத்தையும் துக்கத்தையும் உண்டு பண்ணுகிறதே! இவ்விதமிருக்க, உங்கள் தீர் மானத்திற்கு முடிவு எங்கே? அக்னியானது கால பேதத்தினால் வெவ்வேறு பலன்களைக் கொடுக்கிறது. அக்னியின் பலனானது தேச பேதத்தினாலும் சொரூப பேதத்தினாலும் மாறுபடுகிறது. சீதகாலத் தில் அக்னியானது பிரியமானதாயிருக்க, அதுவே உஷ்ணகாலத்தில் அப்பிரியமாகவும் இருக்கிறது. சீதோஷ்ண தேச பேதங்களினாலும் வன்னியானது பிரியாப் பிரியமாகிறது. சீதள சுபாவமான ஜீவர் களுக்கு அக்னி பிரியமாகவும் அஃதல்லாதவர்களுக்கு அப்பிரியமாகவும் இருக்கிறது. அக்னியினது அள வின் தாரதம்மியத்தினாலும் பிரியாப்பிரிய முண்டாகின்

றன. இவ்விதமாகவே சீதளம், தனம், பத்தினி, புத்திரன், நாடு, நகர் முதலியவைகளைப் பற்றியும் சொல்லலாம். இவைகளெல்லாம் சுகம் மாத்திரம் பொருந்தினவை அல்ல என்று சொல்வதுடன் துக்க சொரூபங்களானவை என்றும் தீர்மானம் செய்யலாம். மகாராஜ ஞன முக்தாசூடன், பத்தினி, புத்திரர், தனம் முதலியவைகளுடன் சூழப்பட்டிருந்தாலும் என் தினமும் வ்யசன முடையவராக இருக்கின்றார்? இவைகளில்லாமலிருந்தும் வேறு சிலர் வ்யசனப்படுகிற தில்லையே! சுகத்தை விரும்புகிறவர்களுக்கான போக சாதனங்களோ உலகத்தில் அளவில்லாமலிருக்கின்றன. சுகம் உண்டாகும் பொருட்டு ஒருவனாலேயும் அநந்தமான போகசாதனங்களும் அடையக்கூடியவையல்ல. அது சாத்தியமாகாது. ஸமஸ்தபோக சாதனங்களையும் ஒருவன் அடையாமலிருந்தாலும் அவனுக்கு ஒருவேளையாவதுசிறிது சுகம் உண்டாகக்கூடாதோவென்றுகேட்பீர்களானால் அதற்குச் சமாதானம்சொல்கிறேன். அவ்விதமான சுகம் துக்கத்துடன் மிச்ரமானபடியினால் அதனைச் சுகமென்றே சொல்லுதல் கூடாது. துக்கமானது பாகியமென்றும் ஆந்தரமென்றும் இரண்டு விதப்படும். பாகியமானது தாதுக்களின் தோஷத்தால் சரீரத்தி லுண்டாகப் பட்டது. ஆந்தரமானது வாஞ்சையிலிருந்து முண்டாகி மனதைப் பற்றி நிற்பது. இவ்விரண்டனுள் மனதைப் பற்றினது துக்கபீஜமான படியால் மகத்தானது. அப்படிப்பட்ட ஆந்தர துக்கத்தினால் இவ்வுலக முழுதும் விழுங்கப்பட்டிருக்கிறது. துக்கமென்ற விருக்ஷத்திற்கு வாஞ்சையென்பது தான் திடசக்தி யுடைய பீஜம். இந்திரன் முதலான தேவர்களும் இந்த வாஞ்சையின் ஏவ



லாளித் தொழிலை யடைந்து இரவும் பகலும் காரியங்களைச் செய்து வருகிறார்கள். வாஞ்சையானது சிறிதேனும் மீந்திருக்கிற வேளையில் உண்டாகப் பட்ட சுகமானது சுகமன்று. ஏ இராஜ குமாரரே! அதனைத் துக்கமென்றே அறிய வேண்டும். ஏனென்றால், அப்படித் துக்கமிச்ரமான சுகம் துக்கமே சொரூபமாயிருக்கும் கிருமிகளிடத்திலும் இருக்கிறது. இதனைக் காட்டிலும் மனிதனுக் குண்டாகுஞ் சுகம் ச்ரேஷ்ட மென்று சொல்வீர்களோ ? ஆனால் மனிதனுக் குண்டாகும் சுகத்தைப் பார்க்கக் கீடம் கிருமிகள் முதலியவற்றிற்கு உண்டாகும் சுகந்தான் ச்ரேஷ்டமானது. ஏனென்றால் அவற்றிற்கு உண்டாகும் சுகத்தில் வாஞ்சையென்பது அதிகமாகக் கலக்கவில்லை. மனிதன் விஷயத்திலோ என்றால் அநேக கோடி வாஞ்சைகளின் மத்தியில் அற்பசுக முண்டாகிறது. அதைச் சுகமென்று சொல்லுவது கூடாது. சுகமென்று அதனைச் சொல்லக்கூடுமானால் யாரைத் தான் சுகியென்று சொல்வது கூடாது? தேகமுழுதும் தீயினால் தகிக்கப்பட்டவனுக்கு அற்பமான ஒரு சந்தன நீர்த்துளியினால் அவன் தேகம் குளிர்ச்சியை அடையுமானால் அவனுக்கும் சுகமுண்டென்று மொழியக்கூடும்.

நரர்கள் தங்கள் பிரியமுள்ள மனைவிகளுடைய ஆலிங்கனத்தினால் சுகத்தை யடைகிறார்கள். ஆனால் அங்கங்களைப் பலமாகத் தழுவிக்கொண்டால் அவர்களுக்குத் துக்கமுண்டாகிறது. இரதியின் ஆவேசத்தின் பிறகு அவர்களுக்குச் சுமை தூக்கிவந்த எருதுகள்போலத் தேகம் தளர்ச்சியை யடைகிறது. இப்படிப்பட்ட விஷயத்தில் நீங்கள் என்ன சௌக்கியத்தைக் கண்டீர்கள் ? ஏ நாதா ! சொல்லவேண்டும். பிரியையின்

சேர்க்கையினால் நாடிகளின் கிளர்ச்சி ஏதுவாக யாது சுகம் உதிக்கின்றதோ அது சுவானங் (நாய்) களிடத்திலும் காணப்பட வில்லையா ?

ஆனால் தாங்கள், எனக்கு உன் சௌந்தரியத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதனால் சுகம் அதிகமாகின்றதென்று சொல்வீர்களானால், அப்படிப்பட்ட சௌந்தரிய திருஷ்டியானது ஸ்வப்னஸ்திரீ சங்கமம் போலக் கேவலம் அபிமானத்தினால் உண்டானதன்றி வேறில்லை— முன்னொரு காலத்தில் மன்மதனிலும் அதிக சுந்தரமுடையவனான ஒரு இராஜகுமாரன் மிகவும் மனோஹாரிணியும் ரூபவதியுமான ஒரு மங்கையைப் பத்தினியாக அடைந்திருந்தனன். தன் பத்தினியினிடத்து அந்த இராஜகுமாரன் அத்தியந்தம் அநுராகத்துடனிருந்தான். அவளோ இராஜகுமாரனுடைய பிருத்தியனான வேறொருவனிடத்துப் பிரியமுள்ளவளாகி அந்தப் பிருத்தியனுடன் சேர்ந்து யுக்தியினால் இராஜகுமாரனை வஞ்சனை செய்து கொண்டு வந்தனள். பிருத்தியனோ அவளுடைய கணவனான இராஜகுமாரனுக்கு மயக்கம் உண்டாகும்படி தாராளமாக மதுவைப் பானம்செய்வித்து மதத்தினால் மயங்கிய அவனிடத்துக் குரூபியான ஒரு தாசியை அனுப்பிவைத்து விட்டு அவ்வரசனது பத்தினியைத் தான் அநுபவித்துவந்தான். மதாந்தகனான இராஜகுமாரன் தினமும் சேடியினிடத்துச்சென்றவனாக இருந்தும் 'உலோக சுந்தரியான இப்படிப்பட்ட பிராணப்பிரியையினை நான் தினமும் அடைகிறேன்; நானே தன்யன்; எனக்கு நிகரான பாக்கியவான் எவனொருவனிருக்கிறான்' என்று பலவாறாகச் சிந்தித்துக்கொண்டிருந்தனன். இவ்விதம் வெகுநாளாக நடந்துகொண்டிருக்கும் பொழுது தெய்வச்செயலாக ஒரு



தினம் பிருத்தியன் பானத்தை வைத்துவிட்டு ஒரு அவசரமான வேலைக்குச் சென்று விட்டான். அன்றைய தினம் இராஜகுமாரன் பானத்தை அதிகமாகக் குடிக்கவில்லை. அக்காரணத்தினால் இராஜகுமாரன் சீக்கிரம் இரதியில் ஆசையுள்ளவனாக, இந்திரனுடைய சசீகிருகம் போல விளங்குவதும் ஸகல போக ஸாதனங்களடங்கியதும் மனோரம்மிய மானதுமாகிய தன் சயன கிருகத்திற்குச் சென்று உத்தம ஸ்தானத்தில் சயனித்திருக்கும் சேடியைக் காம வேகத்தினால் பரவசனாயிருந்ததால் மிகுந்த ஹர்ஷத்துடன் அநுபவித்தனன். இரதியின் முடிவில் அவள் அவலக்ஷணமான சேடியென்றறிந்து உள்ளத்தில் சந்தேகமும் குரோதமு முடையவனாகி இஃதென்ன என்று சிந்தித்து, என்பிரியையானவள் எங்கேயென்று அந்தச் சேடியினிடத்து வினவினான். இவ்விதம் வினவப்பட்ட சேடியானவள் இராஜகுமாரன் மயக்கம் தெளிந்திருப்பதைப் பார்த்து மிகப் பயந்து ஒன்றும் சொல்லாமல் வெட்கத்துடன் நின்றனள். தான் வஞ்சிக்கப்பட்டிருப்பதாக இராஜகுமாரன் எண்ணித் தன் இடதுகரத்தினால் சேடியின் கூந்தலை வெகு கோபத்துடன் பிடித்துக்கொண்டு தன் வலது கரத்தினால் வாளையுருவிப் பற்றி அவளை நடந்தபடி சொல் என்று உறுக்கிக் கேட்டு, சொல்லாமலிருந்தால் க்ஷணநேரமாவது உன்னை உயிருடன் வைத்திருக்க மாட்டேனென்று அதட்டினன். இந்த வாக்கியத்தை அவள் கேட்டுத்தன் உயிரைத் தப்புவித்துக்கொள்ளும் பொருட்டு ஆதிமுதற் கொண்டு நடந்த சங்கதிகளெல்லாவற்றையுஞ் சொல்லிப் பிருத்தியனுடன் அவன் பத்தினியிருக்கு மிடத்தையுங் காண்பித்தாள். தரையின் மீது ஒரு பக்கத்தில் கறுத்தமேனியும் சிவந்த கண்

களும், மலின தேகமும் நிந்திதமான முகமுமுடைய பிருத்தியன் பிரியத்துடன் தன் எல்லா அங்கங்களினாலும் இரதிசிரமம் அடைந்தவனைத் தழுவிக்கொண்டு அவள் முகத்தில் தன் வதனத்தை வைத்துப் பலமாகக் கட்டிப்பிடித்து அவளுடைய தொடையைக் கையினாற் பற்றிக்கொண்டு ரோகிணியும் இராகுவும் கூடியிருப்பதுபோல இருப்பதை இராஜகுமாரன் கண்டு மிகவும் மதிமயக்க மடைந்தோனாகிப் பிறகு தைரியங்கொண்டு "சீ! நான் என்ன மனுஷியன்; நான் மத்தியபானத்தினால் மிகவும் மோகத்தை யடைந்து அநாரியனாகி விட்டேன்; ஸ்திரீகளிடத்து எவர்கள் மிதமீறிப் பிரீதி வைக்கிறார்களோ அவர்கள் நிந்திக்கத்தக்க புருஷ அதமர்களேயாவர். ஒரு விருக்ஷத்தினிடத்தில் பறவைகள் நிலைத்திராமைபோல ஸ்திரீகள் ஒருவனிடத்தும் நிலைத்திரார்கள். எருமைக் கடாவைப்போல மூட்டாளான என்னை என்னவென்று சொல்லலாம். வெகு காலமாக இவளை என் பிராணனினும் அதிகமாக வன்றோ எண்ணியிருந்தேன். விடர்களிடத்து வேசியானவள்போல ஸ்திரீ ஒருவனிடத்தும் நிலைத்திராள். எவனொருவன் ஸ்திரீகளிடத்துத் தன்மனதைக்கொடுத்திருக்கிறானோ அவன் காட்டுக்கழுதையேயாவான். சரத்காலத்து வானத்தின் நிலைமைபோல ஸ்திரீகளின் நிலையானது க்ஷணப்பொழுதுள்ளதும் அதிக சஞ்சலமானதுமாக இருக்கிறது. இந்நாள்வரையில் ஸ்திரீ சுபாவம் இவ்விதமென்று எனக்குத் தெரியவில்லை. எல்லாவிதத்திலும் அநுராகத்துடனிருக்கும் என்னை விட்டுவிட்டுப் பிருத்தியனிடம் சென்றாளே. அன்னிய விடர்கள் நடுவில் நடியானவள் பக்தி அபிநயிப்பது போல அன்னியனிடத்துக் கூடயாகப் பிரீதிவைத்து



என்னிடம் வஞ்சனையாக அநுராகம் காண்பித்து நடித்தாளன்றோ? மத்திய பானத்தினால் மதிமயங்கி இந்தச் சங்கதி ஒன்றும் அறியாமல் நிழல்போல என்னைத் தொடர்கிறாளென்று நம்பி என் மதியிழந்து விட்டேனே! நான் விரும்பாத சேடியுடன்கூடச் சங்கமம் செய்து வஞ்சிக்கப்பட்டவனானேன். உலகத்தில் என்னைவிட மூட சிரோமணி யார்தானிருக்கிறார்கள்? அவளிடத்து மனமிழந்ததனாலன்றோ என்னையவளிவ்விதம் வஞ்சனைசெய்தனள். அஹோ! இந்தப் பிருத்திய பாவியோ எல்லா அங்கங்களிலும் விரூபமானவன். மற்றெல்லோரையும் விட இவனிடம் என்ன சௌந்தரியத்தைக்கண்டாள். எல்லோரையும் வசியம் செய்யக் கூடிய சௌந்தரியம் பொருந்தியவனும் அவளிடத்து எப்பொழுதும் அன்பு பாராட்டுபவனுமாகிய என்னை விட்டு இந்தப் பிருத்தியனையன்றோ சேர்ந்தனள்" என்று இவ்விதம் பலவாறாக ப்ரலாபித்து விரக்தியுடையவனாகி ஸர்வ ஸங்கபரித்தியாகம் செய்து வனத்திற்குச் சென்றான்.

ஆகையினால் ஏ இராஜகுமாரா! சௌந்தரியம் என்பது மனத்தின் கற்பனை. நீங்கள் என்னிடம் அதிக சௌந்தரியத்தைக் கண்டவராக இரதியை அடைகிறது போல விரூபிகளான ஸ்திரீகளிடத்திலும் புருடர்கள் இன்னும் அதிக பிரியத்துடன் இரதியை யடைகிறார்கள். இதற்குக் காரணம் இன்னதென்று சொல்லுகிறேன். என் பிரியரே! மிகவும் சிரத்தையுடன் கேளுங்கள். மனிதன் தனக்கு அன்னியமாக வெளியிற் கண்ட ஸ்திரீயோ அங்கேயே இருக்கிறாள். அங்கு அவளைப் பார்த்தவுடன் அவளுடைய பிரதி பிம்பகற்பனாரூபமான ஒரு ரூபம் அவன் சித்தத்தில் உதிக்கின்

றது. அந்தக்கற்பனா ரூபத்தின் சௌந்தரியத்தை மனதினால் அடிக்கடி அநுசந்தானஞ் செய்வதனால் அந்த ரூபத்திற்கு எதுவிஷயமோ அதனிடத்துவாஞ்சை உண்டாகிறது. எவனுடைய இந்திரியமானது சலனத்தை யடைகிறதோ அவன் இதயவாஞ்சைகளை விட்டு இரதியை அடைகிறான். இந்திரியமானது சலியாதவனுக்கு அதிசுந்தரியானவளைப் பார்த்தாலும் இரதியுண்டாகிறதில்லை. இதற்கு மூலகாரணம் சௌந்தரியத்தை அடிக்கடி அநுசந்தானஞ் செய்வதுதான்.

இந்த அநுசந்தானம் இல்லாமையாற்றான் பாலர்களுக்கும் யோகிகளுக்கும் இந்திரிய க்ஷோபம் உண்டாவதில்லை. ஆகையினால் யார்யார் எந்தெந்த ஸ்திரீயினிடத்து இரதியை உடையவராகிறார்களோ அவரவர் அந்தந்த ஸ்திரீ அழகு பொருந்தினவளானாலும் சரி விரூபியானாலும் சரி அவளிடத்துச் சௌந்தரியத்தை முன்னதாகக் கற்பித்துக் கொள்ளுகிறார்கள். மிகவும் விரூபமான மேனியை யுடைய ஸ்திரீகளும் புத்திரவதிகளா யிருப்பதினிருந்தும் யுவாக்களுடன் சேர்கிறார்களென்று நாம் யூகிக்கக் கூடியதாயிருப்பதே யிதற்குத் திருஷ்டாந்தமாம். விரூபிகளான ஸ்திரீகளிடத்துச் சௌந்தரியம் எப்படி உண்டாகலாமென்றும் அஃதில்லாதிருக்கும் பொழுது அவர்களிடத்து இரதிதான் எப்படி உண்டாகக்கூடுமென்றும் கேட்பீர்களானால், மதியிழந்த காமிகளான மானிடர்களுடைய கிருத்தியங்களை நான் என்னவென்று சொல்வேன்! அஹோ ஆச்சரியம்! ஸர்வத்தையும் விட ஜகன (தொடையினுட் பக்க)த்திலிருக்கும் அங்கத்திலன்றோ அதிக சவுந்தரியத்தைக் காண்கிறார்கள். மல மூத்திரங்களினால் தூஷிக்கப்பட்ட அங்கத்தினிடத்து சவுந்தரியம்



இருக்கிறது என்று எண்ணுகிறவர்கள் எதனிடந்தான் சவுந்தரியத்தைக் காண மாட்டார்கள். ஆகையினால் இராஜபுத்திரரே! கேளுங்கள். சவுந்தரியமென்பது அபிமானமின்றி ஒருகாலும் சிறிதுகூடச் சுகத்திற்கு ஏதுவாக மாட்டாது. காரம் தித்திப்பு முதலிய குணங்கள் வஸ்துக்களில் சுபாவமாக இருப்பதுபோலத் தேகத்தினிடத்தும் சவுந்தரியம் சுபாவமா யிருக்கிறதென்று சொல்வோமானால் பாலர்களிடத்தில் அது ஏன் தோன்றவில்லை? ஆகையினால் சவுந்தரியமென்பது மனோ கற்பிதமேயாம்!

ஒவ்வொரு தேசங்களில் ஒற்றைக் காலுடையவர், ஒற்றைக் கண்ணுடையவர், காது நீண்டவர், குதிரை முகமுடையவர், நீண்டபற்கள் பெற்றவர், மூக்கில்லாதவர், நீண்ட மூக்குடையவர், மேலெங்கும் உரோமமுடையவர், உரோமமில்லாதவர், செம்பட்டை மயிருடையவர், நரைமயிருடையவர், வழுக்கைத்தலையர், பருத்த மயிருடையவர், கவீட்டு நிறமானவர், காக்கை நிறத்தோர், மஞ்சள் நிறத்தோர், சிவப்பு நிறமுடையவர்களிருக்கிறார்களன்றோ? இப்படி அநேகவிதமாயிருக்கும் நரர்கள் தங்கள் தங்கள் ஜாதி ஸ்திரீகளுடன் உங்களைப்போல இரதியை அடைவதில்லையா? சொல்லுங்கள். சுகசாதனம் என்று எது ஸ்திரீயின் தேகத்தில் இருக்கின்றதோ அதனிடத்து அறிவுடையவர்கள் முதற்கொண்டு எல்லோரும் மோகத்தை அடைகிறார்கள். இதே விதமாகவே புருஷர்களுடைய அங்கமும் ஸ்திரீகளுக்கு அத்தியந்த ஸௌந்தரமாகப்புலப்படுகிறது. ஏ இராஜ புத்திரரே! இவற்றினுடைய யதார்த்த ஸ்தியை வெகு சூக்ஷ்ம புத்தியினால் ஆராய்ந்துபாருங்கள்.

மாமிசத்தினால் பூசப்பட்டதும், உதிரம் நிறைந்த

தும், நாடிகளிஞல் கட்டப்பட்டதும், தோலிஞல் மூடப் பட்டதும், அஸ்திக்கூடானதும், மயிர் முளைத்திருப் பதும், பித்தகபங்களுடன் கூடியதும், மல மூத்தி ரங்களின் பெட்டியானதும், சுக்கில சோணிதங்களி லிருந்துண்டாகியதும், மூத்திர த்வாரத்திலிருந்து ஜனித்ததுமான வஸ்துவினை அதோ பிரியமென்று ஜனங்கள் சொல்லுகிருர்களே! எவர்கள் இவ்விதம் பீபத்ஸமான வஸ்துவினிடத்து இரதியை வாஞ்சிக்கி ருர்களோ அவர்கள் அமேத்தியத்தில் உற்பத்தியாகும் கிருமிகளிலும் எப்படி மேன்மை யுடையோ ராவர்? சொல்லுங்கள்.

ஏ இராஜ புத்திரரே! என்னுடைய இக்கசரீர மானது உங்களுக்கு மிகப்பிரியமாக இருக்கிறதன்ரு? உங்களுடைய விவேகத்திஞல் இச்சரீரத்தின்கணிருக் கும் ஒவ்வொரு தாதுவையும் பிரித்துப்பிரித்து பாவனை செய்து பாருங்கள். இவ்விதமாகவே போஜன ஸாதனங் களான அறுசுவைகளடங்கிய பதார்த்தங்களிலும் ஆலோசனைசெய்து அவற்றினுடைய பரிணாம சுபாவத் தையும் சூக்ஷ்மபுத்தியிஞல் பாவனை செய்யுங்கள். பக்ஷிக்கப்பட்டவை யெல்லாம் பரிணாமத்திஞல் அமேத் தியமாகி விடுகின்றன என்று சந்தேகமற எல்லோராலே யும் அநுபவ சகிதமாகக் காணப்படுகிறது. இத்தகைய ஸ்திதியையுடைத்தா யிருக்கிற உலகத்தில் நாம் எத னைப் பிரியமென்றும் எதனை அப்பிரியமென்றும் சொல் லலாம்" என்ருள்."

இவ்விதமாக ஹேமலேகை சொன்ன வசனங்க ளைக்கேட்டு ஹேமசூடன் போகவிஷயங்களில் வைராக் கிய முண்டானவனுகி அவள் மொழிந்த வாக்குகளில் மிக வியப்புற்றவனுஞன். ஹேமலேகையிஞல் சொல்



லப்பட்ட விஷயங்களை அவன் மறுபடியும் தன் புத்தியி ஞல் ஆலோசனைசெய்து போகங்களில் ஆசையற்றவனு கிப் பரமமான வைராக்கியத்தை அடைந்தனன். பிறகு தன் பிரியையை அடுத்து அவளிடத்திருந்து படிப்படி யாகத் தத்பத நிலையைக் கிரகித்துக் கேவலையும் சித்ரூ பியும் ஆத்மரூபிணியுமான திரிபுரையின் உணர்ச்சியி ஞல் முத்திபதமடைந்து அகிலமும் தானே யென்ற திருஷ்டியுடன் ஜீவன் முக்தனுக விளங்கினுன்.

பிறகு மணிசூடன் தன் தமயனிடத்திருந்தும் முக் தாசூடனை அரசன் தன்புத்திரனிடத்திருந்தும், முக் தாசூடன் மனைவி தன் மருமகளிடத்திருந்தும் ஞானத் தைப் பெற்ருர்கள். அந்நகரில் மந்திரிகளும் நகரவாசி களும் ஞானவான்களாயினர். அங்கு ஒருவரேனும் அவித்துவானுக இருக்கவில்லை. ஸத்திய லோகத்திற்கு நிகராக அந்தப் பெரிய பட்டணமானது ஸம்சார வாச னைகள் சாந்தியானதாய் உலகத்தில் மேன்மை பொருந் தியிருந்தது. அவ்வூரில் கூண்டில் வைத்திருக்கும் கிளிப்பிள்ளைகள்கூட அடியில் வருமாறு பாடிக்கொண் டிருந்தன.

## அறுசீர் விருத்தம்.

சித்துரு வாமான் மாவைச் சேத்திய நீக்கிப் பாரீர்
சித்தலாற் சேத்ய மில்லை திகழ்பளிங் குருவம் போலச்
சித்தமே சேத்ய மாகுஞ் சித்துநான் ருனே யெல்லாஞ்
சித்திஞல் விளங்க லாலே சித்தொளி சுதந்த ரந்தான்.

## கோச்சகக்கலிப்பா.

ஆதலிஞற் சகத்தோரே யகிலத்தைத் தான்விளக்கி
யீதெவைக்கு மாதார மெனமுதலாந் தேவிதனை
சேதமதி மயக்கொழித்துச் சின்மாத்ர திட்டியுடன்
போதமுறு பத்தியிஞற் போற்றிடுவீ ரெந்நாளும்.

வாமதேவர் முதலான ரிஷிகள் ஒரு சமயத்தில் கிளிப்பிள்ளைகளின் இவ்வித மோக்ஷதயகரமான வாக்கியங்களைக் கேட்டுப் பக்ஷிகள்கூட வித்தியா வசனங்களை மொழிந்து கொண்டிருந்ததனால் அந்நகரம் வித்தியாநகரமென விளங்கட்டுமென்று பெயரிட்டார்கள். அந்தப்பெயரானது இன்றைக்கும் விளங்கிக் கொண்டு வருகிறது.

ஆகையினால் ஏ இராமா! சகல சுபங்களின் உதயத்திற்கும் ஸத்துக்களுடைய ஸங்கமானது மூலகாரணமென்றறி. ஹேமலேகையின் ஸங்கத்தினால் எல்லோரும் ஞானவான்களாக விளங்கினர். ஆதலால் ச்ரேயசிற்குச் ஸத்துக்களுடைய ஸங்கந்தான் பரமமாயிருக்கிற மூலமென்று ஏ இராமா! நீ தெரிந்து கொள்வாய்.

ஸ்ரீ திரிபுரா ரகஸியம் ஞான காண்டம்
ஸத்ஸங்கபலமென்னும் நான்காவதத்தியாயம்
முற்றிற்று.



## அத்தியாயம்-5

அத்திரியின் புத்திரரால் இவ்விதம் சொல்லப்பட்ட ஸத்ஸங்க மாகாத்மியத்தைக்கேட்டு ஜமதக்னி குமாரனை இராமன் மன மகிழ்ச்சியுடன் பின்னும் வினவத் தொடங்கினான்:—"ஸத்ஸங்கமானது சுபங்களுக்கு மூல காரணமென்று தாங்கள் சொன்னது உண்மைதான். அதனை ஓர் உபாக்கியானத்தினால் பிரத்யக்ஷமாகவும் நிரூபணம் செய்திருக்கிறீர்கள். எவன் எவ்விதமான ஸங்கத்தைச் சார்கிறானோ அதற் கநுசரித்த பலனையும் அவன் அடைகின்றான். ஹேமலேகை ஸ்திரீயாக இருந்தபோதிலும் அவளுடைய சேர்க்கையினால் எல்லாரும் மகத்தானபலனைப் பெற்றார்கள். ஹேமசூடன் அவளால் இவ்விதம் போதிதன் (போதனை செய்யப்பட்டவன்) ஆயினான் என்பதை மறுபடியும் கேட்க விரும்புகிறேன். தயாநிதியே! விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று இராமன் கேட்க, தத்தாத்திரேயர் அவனைநோக்கி "மிகவும் பரிசுத்தமான அக்கதையினைச் சொல்லுகிறேன் கேள்" என்று கூறிச் சொல்லுகிறார்.

இந்தப்படி ஹேமலேகையினுடைய வாக்கியங்களைக் கேட்டு விஷயங்களில் விரஸமடைந்து அவற்றில் போதும் என்ற எண்ணம் உதித்தவனாகித் ஆச்சிதனாக இருந்தனன். வெகுகாலப் பழக்கமான விஷயவாசனைகளுக் குட்பட்டவனாக இருந்ததால் சீக்கிரத்தில் அவற்றைத் தியாகம் செய்யவாவது எடுத்

துக் கொள்ளவாவது அவனுக்குத் துணிவுண்டாகவில்லை. அவன் தனக்கு அதிக வெட்கமாயிருந்தபடியினால் தன் பிரியையினிடம் ஒன்றுமே சொல்லாமலிருந்தான்; சிந்தாகுலனாக இவ்விதஞ் சிலநாள் சென்றபோது தனக்கு ஆஸக்தியுள்ள விஷயங்களிடமாகத் தன் பிரியை சொன்ன தோஷங்களை நினைவுற்றும் வாசனை வசத்தினால் தன்னையே இகழ்ந்துகொண்டும் விஷயங்களைப் புசித்தனன்; வாசனைகளின் வேகத்தினால் அவற்றிற்காளாகி விஷயங்களிடத்துச் செல்லுகின்றான். பிறகு அவன் தன் பிரியை சொன்ன விஷய தோஷங்களை நினைத்துச் சோகத்தினால் சித்தம் சலிக்கப்பட்டு வ்யசனப்படுகின்றான். இப்படி அவன் சித்தமானது ஊசலாடிக் கொண்டிருந்தது. புசிக்கத்தக்க ஸாதனங்கள், வஸ்திரம், பூஷணம், வனிதை, வாகனம், மித்திரர்கள், பிரியர்கள் இவற்றுள் யாதொன்றும் அவனுக்குச் சுககரமாக இருக்கவில்லை; தோஷதிருஷ்டியிருந்தபடியால் விஷயங்களைப் புசிக்கவும் துணிவுண்டாகவில்லை. இவ்விதம் சோக வசத்தினால் நிறமாறிய கண்களையும் முகத்தையு முடைய இராஜகுமாரனை ஹேமலேகை பார்த்து ஒருதினம் அவன் சமீபத்திற் சென்று கேட்கின்றாள்: "ஏ நாதா! நீங்கள் ஏன் முன்போல மிகக் களிப்புடன் இருக்கவில்லை? வ்யசனப்படுகிறதாகக் காண்கிறேனே; உங்களுடைய இந்த ஸ்திதிக்குக் காரணமென்ன? ஒரு வேளை கூட உங்கள் சரீரமானது வ்யாதிகளினால் பீடிக்கப்பட்டதில்லையே? போகங்களினால் ரோகபய முண்டாகுமென்று வைத்தியர்கள் சொல்வார்கள். திரிதோஷங்கள் அடங்கிய தேகத்தில் தோஷங்களின் வைஷம்மியம் ஏற்படுவதனால் ஸமஸ்த தேகங்களிலும் வ்யாதிகளுண்டாவது சாதாரணம். ரோக



நிவிர்த்திக்காக முயற்சி செய்யப்படுகிறதே யன்றித் தோஷ வைஷம்மியத்தை எவரும் குறிப்பிடுகிறதில்லை. ஆகார பேதங்களாலும், வஸ்திர பேதங்களாலும், அதிக ஸம்பாஷணைகளாலும், சீதோஷ்ண ஸ்பரிசங்களாலும், கால தேச பேதங்களாலும், சரீர உழைப்பினாலும் திரிதோஷங்கள் நிலைகுலைகின்றன. இவ்விதம் பற்பல காரணங்களினால் வைஷம்மியமே ஏற்படுகிறபடியால், உலகத்தார் இதனை இலக்ஷியம் பண்ணாமலிருக்கின்றார்கள். இது காரணமாகத் தான் சாஸ்திரத்தில் ரோகத்திற்கு மட்டும் சிகிச்சை சொல்லப்பட்டிருக்கிறது. வைஷம்மியத்தின் உற்பத்தி காரணத்திற்கு ஒருவராவது ஒரு சாஸ்திரத்திலும் சிகிச்சை ஏற்படுத்தவில்லை. என் பிரியரே! உங்களுக்கு இந்தச் சோகம் யாது காரணமாக உண்டாயிருக்கிறது; சொல்லுங்கள்" என்று மொழிந்தனள்.

ஹேமலேகை இவ்விதம் மொழிந்ததைக் கேட்டு இராஜகுமாரன் சொல்லுகின்றான்: "பிரியே! என் சோகத்தின் காரணத்தைச் சொல்லுகிறேன் கேட்பாய்; முன் எனக்குச் சுகமாகப் புலப்பட்டவைகளெல்லாம் உன் மொழிகளைக் கேட்ட பிறகு இப்பொழுது வேறுவிதமாகிவிட்டன. சுகத்தை விருத்திசெய்யக் கூடியதாக ஒரு விஷயத்தையும் நான் காணவில்லை. வதைக்கப்படப் போகிறவனுக்கு அரசனால் அளிக்கப்பட்ட போஜ்யங்கள் சுகத்தை எப்படிக்கொடாவோ அப்படி விஷயங்கள் எனக்குச் சுகத்தைத் தரவில்லை. ஆனாலும் விஷயங்களைத் தியாகம் செய்ய எனக்கு வல்லமையில்லாதபடியால், இராஜகாரியத்திற்காகப் படர்களாலே பீடிக்கப்பட்ட மனிதனைப்போல வாசனா வசனாகி ஸதா விஷயங்களை அநுபவிக்கின்றேன்.

இப்படியிருக்கிறபடியால் நான் யாதொன்றைச் செய்தால் சுகம்பெறுவேனோ அதனை எனக்குச் சொல்ல வேண்டும் என் பிரியையே! என்று கேட்டனன். இவ்விதம் கேட்ட பொழுது ஹேமலேகை தனக்குள் சொல்லிக் கொண்டதாவது "என் வாக்கியத்தைக் கேட்டபிறகு இவருக்கு நல்ல வைராக்கியம் ஜனித்திருக்கிறது. இவ்விதம் முடிந்ததனால் இவரிடம் ச்ரேயசிற்கான வித்து இருக்கிறதென்று தெரியவருகிறது. நான் மொழிந்த அவ்விதமான வாக்குகளைக் கேட்டும் எவர்கள் முந்திய ஸ்திதியிலிருந்து கொஞ்சமேனும் மாறுபடாமல் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு காலத்திலும் ச்ரேயஸ் உண்டாகலாமென்று எண்ணக் கூடாது. யாவராலே இருதய கமலவாசினியும் ஆத்ம தேவதையுமான திரிபுரை அதிக காலம் ஆராதிக்கப் படுகிறார்களோ அவர்களுக்குத்தான் இவ்விதமான வைராக்கியம் உதயமாகிறது." என இம் மாதிரியாகத் தன் மனதில் எண்ணிக்கொண்டு அதி விதுஷி (அறிவாளி) யான ஹேமலேகை தன் கணவனுக்குப் போதமுண்டாகும் பொருட்டுத் தன்னுடைய வித்வத்துவத்தை வெளியிடாமல் மறைத்துக்கொண்டு வேறு ஒரு விதமான விருத்தாந்தம் போல அடியில் வருமாறு சொல்ல ஆரம்பித்தனள். 'ஏ இராஜ குமாரா! புராதனமான என்னுடைய கதையைச் சொல்லுகின்றேன் கேட்கவேண்டும்.—

முன்னொரு (a) காலத்தில் என் தாயானவள் (b) யாரோ ஒரு தோழியை என்னுடன் விளையாட (c) எனக்குத் தந்தனள் (d). அத்தோழி சுபாவமாகவே சதியாக (e) இருந்தாலும் அவளுக்கு யாரோ ஓர் அசதியுடன் (f) சேர்க்கை (g) ஏற்பட்டது. விசித்திரமாகவும் ஆச்சரியமாகவும் ஸ்ருஷ்டனை செய்யச் சாமர்த்தியம் பெற்ற அந்த அசதி வந்து கூடினதை என் தாயும் (h) கவனிக்கவில்லை. என் தோழியும் அசத்தான

---

குறிப்பு:—தத்துவார்த்தம். (a) ஸ்ருஷ்டிக்கும் ஆதியில். (b) சொப்பிரகாசமான சுத்த அறிவு. தோழி=புத்தி. யாரோ-இன்னவிடத்தில் உதித்தது என்று அறியப்படாது நிருபிக்கும்பொழுது இலிங்கதேக வடிவமாகப் புத்தியானது அநாதியாக விருப்பத்தைத் தெரிவிக்கின்றது.

(c) சுகதுக்க அனுபவங்கள் புத்தித் துவாராவாதலால், விளையாட்டிற்குத் தோழி அளிக்கப்பட்டாள் என்று கூறலாயிற்று.

(d) பிரளயத்தில் புத்தி இலீனமானபடியாலும் ஸ்ருஷ்டிக்கும்பொழுது கருமபரிபாகத்திற்குக் காரணமான புத்தியானது முன் இல்லாததுபோல உதிக்கின்றதனாலும் "தோழியைத் தந்தனள்" என்று கூறப்பட்டது.

(e) அந்தப் புத்தி ஸத்துவ குணத்தினாலும் பிரகாசத்தினாலும் சுபாவத்தினாலேயே ஸதி எனப்பட்டது.

(f) அசதி - அவித்தை.

(g) அசதியைச் சேர்ந்து-கேவலமான ஆத்ம வடிவத்தை விட்டு அவித்தையின் காரியமான திருசியவடிவத்தை அடைந்தது என்பது. யாரோ ஒரு அசதி-யாரோ என்பது அநிர்வசனீய சுபாவத்தைக் காண்பிக்கின்றது.

ஆகமபக்ஷத்தில் சித்தினிடம் (அறிவினிடம்) பரிச்சின்ன ஞானமே அஞ்ஞானம். இந்த அஞ்ஞானந்தான் பந்தமென்று சொல்லப்படுகிறது. இதன்படி "யாரோ" என்பதால் அஞ்ஞானத்தை பரிச்சின்னம் செய்யக்கூடிய சக்தியாகத் தெரிவிக்கின்றது.

(h) அந்த அவித்தை தாயான சுத்த சித்தினால் கவனிக்கப்படவில்லை.

நிலைமையை யுடைய அவளுடன் சேர்ந்தனள் (i). பிராணனை விடப் பிரியமுள்ளவளாக இருந்ததனால் நான் என் தோழியின் வசமாகி (j) விட்டேன். ஒரு வேளையிலும் அரை க்ஷணமாவது என் தோழியை விட்டுப் பிரிந்திருக்க (k) எனக்கு முடியவில்லை. அத்தோழியோ வென்றால் தன்னுடைய நிர்மல சுபாவத்தினால் என்னை வசீகரணம் (l) செய்துகொண்டிருந்தனள்.

---

வித்தைக்கும் அவித்தைக்கும் விரோதமிருப்பதால், அவித்தையின் காரியங்களை விஷயமாகக் கொண்ட புத்திக்குச் சுத்த அறிவு தோன்றாததால்.

ஆகமபக்ஷத்தில் - சுத்த சின்மாத்திர ஸ்பூர்த்த தசை- சக்தி தத்துவம்; சித்தையும் ஜடத்தையும் இருவிதத்திலும் ஒற்றுமைப்படுத்தி இவையெல்லாம் நான் என்று உணர்வது - சுத்த வித்தியா தத்துவம்; பரிச்சின்ன சின்மாத்திரமான ஸ்பூர்த்தி தசை-அவித்தியா தத்துவம்; பரிச்சின்னமான அறிவிற்கு சேத்தியம் (அறியப்படுபொருள்) விளங்கும் தசை- புத்திதத்துவம்.

ஆகையால் புத்திக்குச் சுத்த அறிவு விஷயமாகாததால் "தாயினால் கவனிக்கப்படவில்லை" என்று சொல்லப்பட்டது.

(i) புத்தி திருசிய விஷயங்களில் நேரே பற்றுடையதாகச் சென்றது.

(j) வசமாகிவிட்டேன் = ஒன்றுக் கொன்று தாதாத்மியம் ஏற்பட்டது.

(k) புத்தி யில்லாவிடில் புத்தி அவச்சின்ன ஜீவன் புத்திப் பிரதிவிம்ப ஜீவன் என்ற இரு பக்ஷத்திலும் ஜீவத்துவம் ஏற்படாது என்று அர்த்தம்.

(l) ஆகமபக்ஷத்தில் வேடர் குலத்தில் வளர்ந்த இராஜகுமாரனைப்போலத் தன் சுதந்திரம் மறைக்கப்பட்ட மகேசுவரனே ஜீவன். அவனுக்குப் புத்தியின்றிப் பேதவிவகாரம் ஒருகாலும் நடவாது. அப்படி நிர்மல சுபாவமான புத்தி பரிச்



ஆகையினால் நான் அவளுடன் ஸதா (m) கலந்திருந்தவளானேன். என் தோ[illegible]ானவள் விசித்திர சுபாவமுடையவளும் நடிபோல் இலீலை செய்பவளும் துஷ்டையுமான (n) அசதியுடன் கூடிப் பரோக்ஷ (o) விருத்தி யுடையவளாகிக் கூடமாக அசதியின் (p) புத்திரனோடு சேர்ந்திருந்தாள்.

மதங்கொண்ட விழிபனாகி மூடாத்மாவான அசதி (a) புத்திரன் என் தோழியை என் (b) முன்னிலையிலே ஸதா புஜித்துக்கொண்டிருந்தான். அவனால் ஆக்கிரமிக்கப்பட்டு ஸதா புஜிக்கப்பட்டவளாகி யிருந்தும் ஒருகாலத்திலும் என் தோழி என்னை விடாம

---

சின்னமாகவாவது பிரதி விம்பமாகவாவது தாதாத்மியம் அடைந்ததாகவாவது இருக்கும் ஜீவனைத் தன் வசப்படுத்திக் கொண்டது என்று அர்த்தம்.

(m) புத்தியுடன் ஜீவன் ஒன்றுபட் டிருந்ததைக் குறிக்கின்றது.

(n) துஷ்டையுமான அசதி யென்றது அவித்தையினால் சொரூப நாச முண்டாவதுபற்றி.

(o) பரோக்ஷ விர்த்தி-சுவர்க்கம் முதலிய விஷயங்களிலுண்டாகும் விருப்பம்.

(p) புத்தியானது அவித்தையினால் காம்யத்தில் விருப்பங்கொண்டு சத்விசாரத்திற்கும் பிரதிபந்தகமான மோகவிர்த்தியை அடைந்தது என்றர்த்தமாம்.

குறிப்பு:—தத்துவார்த்தம். (a) அவித்தையின் புதல்வன் "மோகம்" என்னுமறிவின்மை.

(b) என் முன்னிலையில் புத்தியானது சித்பிரகாசத்தினால் எப்பொழுதும் விளங்குதல்.

புத்தி மோகத்தை யடைந்திருக்குங் காலத்திலும் அவ்விதம் புத்தி விர்த்திகள் சித்பிரகாசத்தால் விளங்குவதால்.

விருந்தபடியால் நானும் (c) அவனாலே ஸ்பரிசிக்கப் பட்டவளானேன். பிறகு அந்த மூடனுக்குச் சமான ரூப முடைய ஒரு (d) புத்திரன் என் தோழிக்குப் பிறந்தனன். அவன் சீக்கிரத்தில் மிகச்சஞ்சல சுபாவ முடைய தருணனானான். அப்புத்திரன் தன்பிதாவின் மூடத்தன்மையும் பிதாமகியின் குணமும்பொருந்தி அநேக விசித்திரமாகச் சிருஷ்டிக்கச் சாமர்த்திய முடையவனாயினான். மற்றுஞ்சூன்யை (e) என்ற பிதாமகியினாலும் மூடனென்னும் பிதாவினாலும் அஸ்திரன் என்னும் பெயருடைய இக்குமாரன் வளர்க்கப் பட்-

(c) எக்காரணத்தினால் புத்தியின்றி ஜீவனுக்கு இருப்பு இல்லையோ அதனால் ஜீவனுக்கும் மோகத்தின் ஸ்பரிசம் ஏற்பட்டது என்று அர்த்தமாம்.

புத்தியினால் பரிச்சின்னமான அல்லது புத்தியினிடத்து தாதாத்மியம் அடைந்ததான சித்திற்கு(ஜீவனுக்கு)மோக முண்டாயிற்று என்று கருத்து.

(d) புத்திக்கு மோகத்தினால் உண்டான புத்திரன் மனது. அதுதான் அஸ்திரன். ஆனால் மனதானது முன்னமே யிருந்தது. அதாவது வீரிய வடிவமாகப் பிதாவின் தேகத்தில் புத்திர னிருந்ததுபோல மனது முன் சூக்ஷ்ம வடிவமாக இருந்தது. புத்தியினிடத்து மோக முண்டான பிறகு விகற்பங்கள் அதிகமாக ஏற்பட்டதால், புதிதாகப் பிதாவுக்குப் பிறந்த புத்திரன் போல மனது புஷ்டியுடையதாயிற்று என்பது கருத்து.

சமான ரூபம் - மூடனைப்போல் அஸத்ரூபம்.

புத்திரனுக்குப் பிதாவின் குணமும் பிதாமகியின் குணமும் பொருந்தல்-மனதிற்கு மோகத்தைப் போல ஜடத்துவமும், அவித்தையைப்போல வேறு உபாதானமின்றி அநேகத்தை நிர்மாணம் செய்வதான தன்மையும் உண்டாதல்.

(e) விசாரணை செய்தால் அவித்தை இல்லாமற் போய் விடுகிறதினால் அதற்குச் சூனிய மென்று பெயர்.



டான் (f). இவன் தடை யின்றிய போக்குடையவனாகி (g) வெகு சாமர்த்திய சாலியாகவிருந்தனன். இவ்விதமாக என் தோழியானவள் பிறவிக்குணத்தால் ஸதியாகவும் நிர்மல சுபாவமுடையவளாகவு மிருந்தும் அசதியின் சேர்க்கையினால் மிக (h) மலினத்தை யடைந்தவளானாள். தன் தோழியான அசதியினிடமும் அஸத்சுபாவ முடைய பர்த்தாவுடனும் புத்திரனுடனும் கூடி அவள் வெகு காலம் பழகினபடியால் அவர்களிடத்தில் மிருந்த (i) அநுராகம் அவளுக்கு உண்டாயிற்று. என்னிடத்திலிருந்த பிரீதியையும் என் தோழியானவள் படிப்படியாக (j) இழந்து விட்டாள். ஆனால் நான் அவளிடம் பிரயோஜன மின்றி அன்பு வைத்திருந்த படியால் அவளை விட்டு விட மனம்வராமல் அவளிடம் பிரிய முள்ளவளாகவே அவ

(f) மனதிற்கு மோகத்தினால் மூடத்தன்மையும் அவித்தையால் விசித்திரமாகக் கற்பிக்கும் தன்மையும் உண்டாயின என்று கொள்க.

(g) மனதிற்கு எங்கும் தடையின்றிச் செல்லக்கூடிய தன்மை புத்தியினிடம் மோகத்தினால் உண்டாயது. மனது சலித்துக்கொண்டிருக்கிற படியினால் அஸ்திரமாகவும், விசித்திரமாகக் கற்பனை செய்துகொண்டும் விசாரணையின்றி மூடமாகவு மிருந்தது என்று தாத்பரியம்.

(h) புத்தியானது அவித்தையினால் தமோகுணமான மோகத்தை அடைந்தது என்று அர்த்தமாம்.

(i) புத்தி தன் சுயமான சத்துவ ரூபத்தை விட்டு மோக வடிவான மனது கற்பித்த விஷயங்களில் பற்றுதலுடையதாக முடிந்தது.

(j) இப்படி அநேக நாள் பழகினதால் புத்திக்குப் பரிச்சின்ன சித்து ரூபமான ஜீவ சொரூபத்தினிடத்து விசாரணையில்லாமற் போய்விட்டது.

னைத் தொடர்ந்து (k) கொண்டிருந்தேன். என் தோழி யின் பிரியனுடன் அவளுடன் கூடிக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் அவனை விடாமல் தொடர்ந்துவரும் என்னையுங் கூட (l) ஆக்கிரமிக்க யத்தனஞ் செய்தனன். அவன் அவ்விதம் யத்னம் செய்தபோதிலும் நான் சுபாவமாகவே பரிசுத்தை யானபடியால் அவன் வசத்தி லகப்படவில்லை. ஆனாலும் மூடனால் நான் அனுபவிக்கப் பட்டவளானே னென்று உலகமெங்கும் பரவின ஒரு (m) அபக்யாதி என் மீது ஏற்பட்டது. அஸ்திரன் என்னும் தன் குழந்தையை என் தோழி என்னிடத்தில் விட்டு விட்டுத் தன் பிரியன் பால் மிக அனுராக முடையவளாய் (n) அவனிடமே யிருந்தனள்.

அஸ்திரனனவன் என்னால் நன்றாகச் சீராட்டி வளர்க்கப்பட்டு வந்தபிறகு தன் பிதாமகியின் அனுமதி யின்மேல் (1) சபலை யென்னும் நாமத்தையுடைய ஒரு பெண்ணை மணந்தனன். அந்தச் சபலையானவள் (2) தன் பிரியனுக்கு இஷ்டமான பற்பல மனோகர ரூபங்களை ஆச்சரிய முண்டாகும்படி எடுத்துக்கொண்டு அவனைத் தன்னுடைய சாமர்த்தியத்தினால் தன் வசப்படுத்திக்கொண்டனள். அஸ்திரனனவன் ஒரு க்ஷண நேரத்தில் அளவிடப்படாத யோசனை தூரம் சற்றேனும் சிரமமில்லாமல் சென்றுவர வல்லமை பெற்றிருந்தான். எங்கெங்கே தன் பிரியனான அஸ்திரன் (3) செல்லுகிறானோ அந்தந்த இடங்களுக்குச் சபலையானவள் சென்று அவனுக்கு இஷ்டமான ரூபங்களைத் தரித்துக் (4) கொண்டு அவனைச் சந்தோஷப்படுத்திவந்தாள். இவ்விதம் சபலையானவள் தன் கணவனுட னிருக்கும் பொழுது (5) தாய்தந்தைகளுக்கு அனுகூலமான ஐந்து புத்திரர்களைப் பெற்றனள். சாமர்த்திய முடையவரான

(k) ஜீவன் சின்மாத்திர வடிவ மானதால் புத்தியினிடத்துப் பிரதிபிம்பித்து அதன் வடிவங்களை அடைந்தது என்று அர்த்தமாம்.

(l) புத்தியினிடத்து விஷய வாசனைகள் நிறைந்திருந்தாலும் ஜீவனுக்கு அவற்றினிடம் தாதாத்மியம் கிடையாது. ஆயினும் புத்தியினிடத்துத் தாதாத்மியம் அடைந்த ஜீவனுக்கு புத்தி விர்த்திகள் வடிவான மோகத்துடன் சேர்க்கை ஏற்பட்டது போலத் தோன்றினது இங்குக் குறிப்பிடப்படுகின்றது. வாஸ்தவத்தில் ஜீவனுக்கு மோக ஸம்ஸர்க்கம் கிடையாது.

(m) விவேகமற்றவர் புத்தியின் தர்மங்களை ஆத்மாவினிடத்து ஆரோபிக்கின்றனர்.

(n) புத்தி மோகமே வடிவாகிவிட்டது என்று அர்த்தமாம். புத்திமோக வடிவடைந்ததனால் மனது சித்தினுடன் தாதாத்மியமடைந்தது என்பது கருத்து.



(1) மனது சித்தினிடம் தாதாத்மியம் அடைந்த பிறகு கற்பனைகள் செய்வதில் சாமர்த்தியம் பெற்றது. கற்பனைக்குச் சபலையென்றுபெயர்.

(2) மனதானது அடிக்கடி விசித்திரங்களாகக் கற்பனை செய்து கொண்டிருந்தது என்று அர்த்தம்.

(3) மனது எங்கெங்குச் சென்றாலும் அங்கங்கு விசித்திரங்களாகக் கற்பனைகள் ஏற்படுகின்றன.

(4) மனது தன்னிடத்திலேயே இராஜ்யம் முதலியவற்றைக் கற்பித்துக் கொண்டு அவற்றினிடம் சுகம்போல் விளங்குவதை அனுபவிக்கின்றது.

(5) ஐந்து புத்திரர்கள் ஞானேந்திரியங்கள் ஐந்தும். மனது நிர்விகற்பமாக இருந்தால் இந்திரிய விருத்திகளில்லை. மனதிற்கு விகற்பங்களால் இந்திரியங்கள் ஏற்படுகின்றன. இந்திரியங்கள் மனதை விஷயங்களிடத்துச் சேர்த்து வைப்பதால் அனுகூலமான ஐந்து புத்திரர்கள் என்றுகூறப்பட்டன.

அவ்வைந்துபேர்களையும் என்தோழியானவள் என்னிடம் (6) விட்டனள். அதன்மேல் நான் என்தோழியிடத்துள்ள பிரியத்தினால் அவர்களை (7) வல்லமையுள்ளவராகச் செய்தேன். பிற்பாடு சபலையின் குமாரர்களான அவ்வைவரும் தங்கள் மாதாவின் சகாயத்தினால் ச்ரேஷ்டமும் விசித்திரமும் விஸ்தாரமுமான கிருகங்களைத் (8) தனித்தனியாகச்செய்து கொண்டு தங்கள் பிதாவையும் அங்கு அழைத்துச் (9) சென்றனர். அஸ்திரனானவன் தன் ஜ்யேஷ்ட குமாரனுடைய (10) கிருகத்தில் (11) சென்று நல்லதும் அஃதல்லாததுமான சப்தங்களும், சிலவிடங்களில் மதுரமான சங்கீதமும், சிலஇடங்களில் மங்களவாத்தியங்களும், இருக்கு யஜுர் ஸாம அதர்வணமந்திரங்களின் கோஷங்களும், சாஸ்திரங்கள் ஆகமங்கள் இதிகாசங்கள் என்னுமிவற்றின் முழக்கங்களும், வண்டினங்களின் தொனிகளும், குயில்களின் பஞ்சம கானங்களும் ஆகிய இவ்வித மனோகரமான சப்தங்களைத் தன் புத்திரனால் அளிக்கப்பட்டுக் கேட்டுத் தன் புத்திரனிடத்துப் பிரீதியுடையவனாயினன். பிறகு அப்புத்திரன் சிங்கங்களின், கர்ஜிதம்,

(6) இந்திரியங்களும் சித்தான ஜீவனிடம் தாதாத்மியமடைந்தன என்று அர்த்தம்.

(7) சித்தினிடத்துண்டான தாதாத்மியத்தினால் இந்திரியங்கள் சுதந்திரமாக விளங்கும் தன்மையுடையன போல வலிமையை யடைந்தன.

(8) இந்திரியங்களின் கோளங்கள்—வீடுகள்.

(9) மனமானது இந்திரியங்கள் வழியாகப் பராமுகப்பட்டது என்று அர்த்தம்.

(10) சுரோத்திரேந்திரியம்.

(11) மனது சுரோத்திரேந்திரியத்தின் வழியாக அந்தந்தச்சப்தங்களின் வடிவத்தை யடைகின்றது.



மேக கோஷம், இடிமுழக்கம், அண்டபேதத்தினாலுண்டாகும் தொனி, பயங்கரமான கர்ப்பக் கழிச்சல் முதலிய அகிதமானவையும் கர்ணகடோரமானவையுமாகிய சப்தங்களைத் தன் பிதாவுக்குத் தந்தான். அவன் அவற்றையும் பின்னும் சில இடங்களில் அழுகுரல் பிரளயங்கள் புலம்பல்கள் முதலிய விசித்திரமான சப்தங்களையுங் கேட்டனன்.

பின்பவன் இரண்டாவது குமாரனாலும் அழைக்கப்பட்டான். அஸ்திரனானவன் அவன் மனைக்குச் சென்று அங்கு மிருதுவான ஆசனமும் மஞ்சமும வஸ்திரங்களும் கடினமானவைகளும் உஷ்ணமானவையுமாகிய ஸ்பரிசங்களும் அளிக்கப்பட்டமையின், அவற்றை அனுபவித்தனன். இதமான ஸ்பரிசங்களையடைவதால் ஸந்தோஷத்தையும் அகிதங்களால் துக்கத்தையும் உடையவனானான். பிற்பாடு மூன்றாவது தனயனுடைய கிருகத்திற்குச் சென்று பற்பல வர்ணங்களுடன் அழகு பொருந்திய உருவங்களையும், சிவப்பு, வெள்ளை, மஞ்சள், நீலம், தவிட்டுநிறம், ஊதாநிறம், புகைநிறம், கறுப்புநிறம் பெரிது சிறியது, அணுக்கள் நீளம், வீதி, வட்டம், அரைவட்டம், நீளவட்டம் முதலிய உருவங்கள் பொருந்திய அழகுடையவை, பயங்கரமானவை, நிந்திதமானவையும் ஒளியுடையவை, குரூரமானவை ஆகிய அனேக வடிவங்களையும் கண்டனன். சில வடிவங்களை அஸ்திரன் இதமாகவும் வேறு சிலவற்றை அகிதமாகவும் கைக்கொண்டனன். நான்காவது தனயன் பிதாவைத் தன் கிருகத்திற்கு அழைத்துக் கொண்டுபோய்த் தன் பிதாவுக்குப் புஷ்பங்கள் பலங்கள் பானங்கள் பற்பல தின்பண்டங்கள் அமிர்தத்திற்கு நிகரான இர

சங்கள் மதுரமானது புளிப்புடையது எரிவுடையது கசப்புத் துவர்ப்புடையது முதலிய இரசங்கள் புளிப்பு உப்பு முதலிய இரசங்கள் அடங்கிய ஆகாரங்கள் முதலியவைகளை அளித்தான். ஐந்தாவது புத்திரன் மனைக்குச் செல்ல அங்கு அநேக புஷ்பங்கள், பலங்கள், புற்கள், ஔஷதங்கள், சுகந்தங்கள், மிருது கந்தங்கள், உக்கிர கந்தங்கள், மோக கந்தங்கள், ஞான கந்தங்கள், மூர்ச்சா கந்தங்கள் முதலிய விசித்திரமான கந்தங்கள் அக்குமாரனால் அளிக்கப்பட்டன. இவ்விதம் அஸ்திரனுக்குத் தன் புத்திரர்களுடைய மனைகளுக்கு அடிக்கடி போக்குவரத்து ஏற்பட்டன. அப்புத்திரர்கள் தங்கள் பிதாவின் மேலுள்ள வாத்ஸல்யத்தால் பிதாவை விட்டு ஒருபொழுதும் பிரியாதிருந்தனர்; பிரிந்திரா ரென்பது மாத்திரமன்று. அவர்கள் விசித்திரமான விஷயங்களைச் சற்றேனும் தொடுகிறதில்லை. அஸ்திரன் அநேக விஷயங்களைத் தன் புத்திரர்களுடைய மனைகளில் அனுபவிப்பதுமன்றி அங்கிருந்து சில விஷயங்களைக் கூடமாகத் தன்னிருப்பிடத்திற்குக் கொண்டு (a) வந்து தன் பத்தினியான சபலையுடன் கூட, (b) இரகசியமாகப் புத்திரர்களின்றி நாள்தோறும் அதிகமாக அநுபவித்தான்.

இப்படியிருக்க, (c)மகாசனை என்னுமொரு பெண்

(a) மனது இந்திரியங்களின் வழியாக விஷயங்களை அனுபவித்துவிட்டுச் சிலவிஷயங்களை ஸம்ஸ்காரரூபமாக (வாசனை ரூபமாக)த் தன்னிடத்திலேயே இருதயத்தில் வைத்துக் கொண்டுபின்பு அவற்றை நினைவினாலேயே கற்பித்து மனோராஜ்யத்தினால் அனுபவிக்கின்றது என்று தாத்பரியம்.

(b) இரகசியம்—சொப்பனம்.

(c) ஆசை.



ணானவள் தோன்றி அஸ்திரனைப் பதியாக அடைந்து ஸபத்தினியாகினள். இவளிடத்து அஸ்திரனுக்கு அதிசுமாகத் பிரீதி ஜனித்ததனால் அவனுடைய பிரீதியைச் சம்பாதிப்பதன் பொருட்டு அநேகவிதமான (d) போகங்களைச் சேர்க்க ஆரம்பித்தனன். அஸ்திரன் கொண்டுவரும் ஸர்வ விஷயங்களையும் அந்தமகாசனை க்ஷணநேரத்தில் புசித்துவிட்டுப் பின்னும் பின்னும் புசிப்படங்காதவளாய்த் தன் கணவனை (e) ஏவிக் கொண்டிருந்தனள். ஐந்து புத்திரர்களாலும் கணவனாலும் அளிக்கப்பட்ட சகல விஷயங்களையும் க்ஷணத்தில் புசித்துவிட்டு மேலுமேலும் ஆசையடங்காமல் போகங்களைக் கொண்டு வருவதற்குச் சதா தன்பதியையும் புத்திரர்களையும் ஏவிக்கொண்டேயிருந்தாள்.

பின்பு இந்த மகாசனையானவள் கொஞ்சகாலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றனள். (f) அவர்களில் ஜ்யேஷ்ட புத்திரனுக்கு ஜ்வாலாமுகனென்றும் கனிஷ்டனுக்கு (g) நித்தியவ்ருத்தனென்றும் பெயர். தாய்க்கு அவ்விருவர்களிடத்திலும் (h) அதிகப்பிரீதியிருந்தது. அஸ்திரன் மகாசனையினிடம் வெகு பிரியத்துடன் சேரும்பொழுது ஜ்வாலாமுகனுக்குத் தேகம் முழுதும் ஜ்வாலைகளெழும்பி அஸ்திரனை மிகவும்

(d) விஷயபோகத்தினால் ஆசை அதிகமாயிற்று என்று அர்த்தம்.

(e) ஆசைகள் நிவிர்த்தியாகாமல் மனது ஸதா விஷயங்களைத் தேடிக்கொண்டிருந்தது.

(f) ஜ்வாலாமுகன்—கோபம், குரோதம்.

(g) நித்தியவ்ருத்தன்—உலோபம்.

(h) ஆசையதிகப்பட்டதால் குரோதமும் உலோபமும் அதிகமாயின என்று அர்த்தம்.

பீடிக்கிறபடியால் கடினமான (i) மூர்ச்சையை அடைகிறான். எவ்வேளையாவது அஸ்திரன் நிந்தியவ்ருத்தனிடத்துக் கூடுவானானால் எல்லோராலும் நிந்திக்கப்பட்டவனாகிப் பிணம்போலாகி விடுகிறான். (j) இவ்விதமாக அஸ்திரன் போகத்திலுள்ள ஆசக்தியினால் எப்பொழுது துக்க முடையவனானானோ அப்பொழுது சுபாவத்தில் ஸதியான என் தோழியும் தன் புத்திரனான அஸ்திரனிடத்தில் மிகுந்த வாத்ஸல்யத்தினால் அவன் துக்கங்களையும் (k) ஏற்றுக் கொள்கிறாள்.

துக்க பாரங்களை ஏற்றுக் கொண்டதினாலும் ஜ்வாலாமுகன், நிந்தியவ்ருத்தன் இவர்களுடைய சேர்க்கையினால் தகிக்கப்பட்டவளும் நிந்திக்கப்பட்டவளுமாகி என் தோழி சாகாத பிணம் போலாயினள். அவளை ஸதா தொடர்ந்து கொண்டிருந்த நானும் (a) இல்லாதவள் போலாயினேன்.

இவ்விதம் அநேக வருஷங்களாக என் தோழியின் துக்கத்தினால் நானும் துக்கியாயிருக்கும் பொழுது, மகாசனையின் வல்லமையினால் அஸ்திரன் தன் சுதந்தரத்தை யிழந்தனன். அதன் மேல் (b) ஏதோ

(i) குரோதமும் லோபமும் அதிகமானதால் மிகுந்த துக்கம் ஏற்பட்டதென்றர்த்தம்.

(j) உலோபத்தினால் நிந்திக்கப்பட்டு உயிரிழந்தவன்போலாவது ஸ்பஷ்டமாயிருக்கிறது.

(k) மனதிற்குத் துக்கமுண்டாகும் பொழுது மனதின்கண் ஒற்றுமையுடைய புத்திக்கும் துக்க முண்டாகிறது.

(a) தன் உபாதியான புத்தியினிடம் இராஜோதமோ குணங்கள் வியாபித்ததனால் ஜீவன் தன் சொரூபம் விளங்காது இல்லாதவன் போலாயினனென்பது.

(b) ஏதோ ஒரு பிராரப்தகர்மத்தினால்.



ஒரு கர்ம வசத்தினால் (c) ஒருகாலத்தில் 'தசத்துவாரமென்னும் பட்டணத்தைச் சார்ந்தனன். அவ்விடத்தில் மகாசனையுடனும் புத்திரர்களுடனும் மாதா முதலியோர்களுடனும் அஸ்திரனானவன் வாசஞ் செய்து கொண்டு சுகத்தை இச்சித்தும் துக்கங்களையே தினமும் புசித்தவனாகி இருபுத்திரர்களால் தகிப்புற்றவனாகவும் நிந்திக்கப்பட்டவனாகவும் இருந்தனன். இப்படித் தன் இருமனைவிகளாலும் வசியப்படுத்தப் பட்டுத் தன் ஐந்து புத்திரர்களுடைய மனைகளுக்கு அடிக்கடிபோய் வந்துகொண்டிருக்க அவனுக்கு ஒரு பொழுதேனும் சுகமில்லாமல் அத்தியந்த சிரமமுண்டாயிற்று. இவ்வாறாகத் தன் புத்திரனுடைய துக்கத்தினால் (d) என் தோழியும் அதிக துக்கப்பட்டு மூர்ச்சையடைந்தவள் போலாகி அவ்வூரில் வசித்தனள். ஜ்வாலாமுகன் நிந்தியவ்ருத்தன் என்றவர்களுடன் மகாசனையானவள் தன் கணவனுடைய பிதாமகியாலுந் தன் மாமனாரான மூடனாலும் போஷிக்கப்பட்டவளாகித் தன் சக்களத்தியான சபலையுடன் ஒற்றுமையாக (e) அவ்வூரிலிருந்துகொண்டே அஸ்திரனைத் தன் வசப்படுத்திக்கொண்டனள். என் சகியினிடத்துப் பிரீதியினால் என்னிடத்தில் பிரியமுள்ள சகியிருக்கும் ஊரி

(c) சிருஷ்டிகாலத்தில்

தசத்துவாரம் = பிரம்மரந்திரத்தையும் சேர்த்துப்பத்துத் துவாரமாம். பட்டணம் = சரீரம்.

(d) புத்தியினிடம் சாத்வீகாம்சம் அகன்றுவிட்டபடியால் மூர்ச்சை யுண்டானதுபோலும்.

(e) அவித்தை, மோகம், கற்பனை இவைகளால் புஷ்டியடைந்த ஆசையினால் மனமானது கவரப்பட்டது.

லேயே (f) நானும் வசித்து வந்தேன். எல்லாரையும் (g) இரக்ஷிக்க முயன்ற நான், என் சகியின் துக்கத்தினால் உயிரிழந்தவள் போலாயினேன். அவ்வூரில் நான் ஒரு க்ஷணநேரமாவது தங்காமலிருக்கும் பக்ஷத்தில் அங்கு ஒருவராவது இருக்கமாட்டார்கள். எல்லாரையும் நான் காப்பாற்றி வந்தேன். என் சகியின் (h) சேர்க்கை காரணமாக நான் கூனியையான அஸதியினால் கூனிய வடிவத்தையும், மூடனால் மூடவடிவத்தையும், அஸ்திரனால் ஸ்திரமின்மையையும் சபலையினால் சஞ்சல வடிவத்தையும் ஜ்வாலாமுகன் நித்திய வ்ருத்தன் இவர்களால் அவர்களின் வடிவங்களையும் கைக்கொண்டு விளங்கினேன். என் தோழியை நான் விட்டு விடும் பக்ஷத்தில் அதன் பின்பு ஒரு க்ஷணமாவது அவள் (i) ஜீவித்திராள். இவளுடைய சேர்க்கையினால் அறிவீனர்களான ஜனங்கள் எல்லாரும் என்னை விபசாரிணி (a) என்று சொல்லுகின்றனர். ஆனால்

---

(f) புத்தியினிடம் தாதாத்மியம் அடைந்திருக்கும் சித்திற்கு அதன் வடிவங்கள் ஏற்படுவது இயற்கையே.

(g) கண்ணாடி யின்றிப் பிரதிபிம்ப மிராததுபோல அதிஷ்டானமின்றி ஆரோபிதமிராது.

(h) சித்து எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமானபடியால் எல்லா வடிவங்களையும் அடைகின்றது. இவ்விதம் அநேகரூப தாதாத்மியம் அடைவதற்குக் காரணம் சித்திற்குப் புத்தியினிடத்திருக்கும் தாதாத்மியமே என்று கூறப்படுகிறது.

(i) புத்திக்கும் சித்தே அதிஷ்டானமான படியால், அதிஷ்டானமின்றிப் புத்தியிராது என்றவாறு.

(a) ஜீவனாகிய சித்தே சுத்த அகண்டசித்ரூபமாக விருந்தும் க்ஷணிகநிருசியவடிவ மடைகிறபடியால், பௌத்தர்கள் ஆத்மாவை க்ஷணிகமென்று சொல்லுகிறார்கள்; சூக்ஷ்மபுத்தி



நுட்பபுத்தியுடைய பண்டிதர்களுக்கு நான்மலின (b) மின்றியிருப்பவளென்று தெரியும். ஏனென்றால், மகா (c) பதிவிரதையான என் தாயானவள் சுத்தமானவளும் நிர்மல வடிவமுள்ளவளும் ஆகாயத்திலும் அதிக (d) விசாலமானவளும் பரம அணுவிலும் அதிக (e) சூக்ஷ்மமானவளும் ஆவள். அவள் ஸர்வஞ்ஞையானாலும் (f) சிற்றறிவுடையவள்; எல்லாம் செய்பவளானாலும் ஒன்றும் செய்யாதவள்; எல்லாவற்றிற்கும் (g) ஆதாரமானாலும் ஆதாரமில்லாதவள்; எல்லா ரூபங்களும் பொருந்தியவளாக இருந்தாலும் (h) அவள்

---

மான்கள் காலதேச நிமித்தமென்ற மலினங்களின்றியது ஜீவனாகிய சித்து என்று அறிகின்றனர்.

(b) துஷ்டருடன் சேர்க்கையிருக்கும்பொழுது மலினமின்மை எப்படியென்றால், தன் மாதாவின் அருகே இருப்பதனால் அடைந்த மகாமந்திரத்தின் மகிமையினால்.

(c) பரிச்சின்னமில்லாத சத்தாமாத்திரமானதால் பதிவிரதை. ஏகரசையானபடியால் சுத்தை. அஞ்ஞானம் முதலிய மறைப்புகளின்மையால் நிர்மலை.

(d) ஆகாயத்தையும் விளக்குவதனால் அறிவானது ஆகாயத்திலும் விசாலமானது.

(e) பரமாணுவிலும் வியாபித்திருக்கிறபடியினால் அதனிலும் அதிசூக்ஷ்மமானது.

(f) சர்வஞ்ஞத்துவமென்பது திருசியங்களைப் பற்றிச் சொல்வதேயன்றித் தானாகவிருக்கும் பொழுது சிற்றறிவுதான். அதாவது மெல்லிய உணர்வு—தடிப்பின்றியது.

(g) எங்கும் விளங்குகின்றதால் எல்லாவற்றிற்கும் ஆதாரமானது.

(h) எல்லாப் பிரதிபிம்ப வடிவங்களையும் கண்ணாடி வகித்துக்கொண்டு தனக்கு ரூபமில்லாதிருப்பது போலவாம். கண்ணாடியை அதிஷ்டானமாகக் கொண்டிருக்கும் பிரதி பிம்

அரூபி; எல்லாம் உடையவளானாலும் ஒன்றுமே யில்லாதவள்; எங்குமே விளங்கியவளாக இருந்தும் ஒருவராலும் ஒரு பொழுதும் அறியப்படாதவள்; மகா ஆனந்த (i) முடையவளானாலும் ஆனந்தமற்றவள்; அவள் தாய்தந்தை யில்லாதவள். என்னைப்போலப் புத்திரிகள் அவளுக்கு அளவிடக்கூடாத கணக்காக இருக்கின்றனர்.

சமுத்திரத்தில் கணக்கில்லாத அலைகளிருப்பது போல எனக்குச் சகோதரிகள் இருக்கின்றனர். அவர்களெல்லோரும் என்னைப்போலவே தங்கள் தோழிகளின் குடும்பத்தில் பற்றுதலுடையவராய் இருக்கின்றனர். என் தோழியின் கூட்டத்தார் எல்லோரிடத்திலும் எனக்குச் (a) சேர்க்கையும் பற்றுதலும் இருந்தும் என் மகா மந்திரத்தின் சமர்த்தினால் என் சொரூபத்தில் என் தாய்க்கு நிகராவேன்.

இந்த ஊரில் என் தோழியின் குமாரன் எப்பொழுது தளர்ச்சியடைகின்றானோ அப்பொழுது தன்மாதா

---

பங்களை மட்டிலும் அறிந்து கண்ணாடி யிருப்பதைப் பிரதிபிம்பங்களுக்கு அன்னியமாகத் தெரிந்து கொள்ளாதிருப்பது போல எல்லாப்பாவனைகளிலும் விளங்காநின்ற அறிவு இன்னவித மிருக்கிறதென்று ஒருவராலும் அறியப்படுவதில்லை.

(i) மகாநந்த ரூபையானாலும் தன் சொரூபத்திற்கு அன்னியமாக ஆனந்தமின்மையால் ஆனந்தமற்றவளெனப்பட்டது.

(a) மாயாசக்திக்கு ஜீவனை ஒன்றுமே செய்ய வல்லமையில்லாதிருந்தாலும், அதன் (மாயை) மூலமாக ஜீவன் தன் சுத்த சொரூபத்தினிடத்திலேயே சம்சாரத்தை தோற்றுவிக்கின்றான். மகா மந்திரம் = மாயா சக்தி. அகடிதமாக விருந்தாலும் அச்சக்தியினால் சுத்த சொரூபத்தினிடம் சம்சாரத்தை விளக்குகின்றேன் என்றர்த்தம். தோன்றினாலும் சொரூபம் நிர்மலமாயிருக்கிறது.



வின் மடியில் கஷ்டமின்றிப் படுத்துக் (b) கொள்ளுகிறான். அஸ்திரன் உறங்குவானானால் அவ்வேளையில் அவன் புத்திரர்கள் யாவரும் (c) உறங்கி விடுகின்றனர். ஒருவராவது விழித்திருக்கிறதில்லை. அவ்வேளையில் அஸ்திரனுடைய பிரியமுள்ள சிநேகிதனான (d) பிரசாரன் என்பவன் அவ்வூரின் மேலைவாசல்கள் இரண்டின் வழியாகவும் சஞ்சரித்துக்கொண்டு அவ்வூரைக் காப்பாற்றி வருகின்றனன். என் தோழி தன் குமாரனுடனே தன் தோழியும் மாமியுமான அஸதியினிடஞ் செல்ல அவர்களையும் மற்றெல்லோரையும் அஸதியானவள் தன் புத்திரனுடன் (e) தன்னிடத்தில் அடக்கிக் கொண்டு பாதுகாக்கின்றனள். இவ்விதமாக எல்லோரும் உறங்கும் பொழுது நான் என் மாதாவை யடைந்து அவளால் அணைக்கப்பட்டவளாகி (f) ஆனந்தம் அடைகின்றேன். நித்திரை செய்துகொண் டிருந்தவர்கள் எழுந்துவிட்டால் நான் நாள்தோறும் அவர்களுடன் செல்லுகிறேன். மிகுந்த வல்லமையுடைய (g) பிரசாரன்

---

(b) பரிபக்குவ கர்ம பலனை அடைந்த பிறகு மற்றக்கருமங்களின் பலனை அனுபவிப்பதற்கு முன் மத்தியில் மனதானது புத்தியினிடத்து இலயம் அடைகின்றது.

(c) மனது இலீனமாகும்பொழுது இந்திரியங்கள் முதலியவை இலீனமாகின்றன என்று அர்த்தம்.

(d) பிரசாரன்—பிராணன். பிராணனுக்கும் மனதிற்கும் சம்பந்த மிருக்கிறபடியால், தோழன் எனப்பட்டது.

(e) மோக சொரூபமான அவித்தை யாவற்றையும் மறைத்துக்கொண்டு சுழுத்தியி லிருக்கின்றது.

(f) சுழுத்தியில் பரிச்சின்னம் செய்யக்கூடிய உபாதிகளில்லாமையால் பூர்ணரூபம் ஏற்படுகின்றது; அதனால் ஆனந்த முண்டாகின்றது.

(g) பிரசாரன் = பிராணன்.

என்னும் பெயர்கொண்ட அஸ்திரனது தோழனானவன் அஸ்திரனுடைய கூட்டத்தாரை யெல்லாம் தினந்தோறும் போஷணை செய்து வருகின்றனன். அவன் ஒருவனே ஊராகவும், ஊரில் வசிப்போராகவும் பலவாறாக விளங்கிப் பரவிக்கொண்டு எல்லோரையும் அணைத்துக்கொள்வது மன்றிக் காப்பாற்றியும் வருகின்றான். அவன் இல்லாவிட்டால் மற்றவர்கள் போசனையின்றி மாலையிலிருக்கும் மணிகள் கயிறற்று விட்டால் எப்படியோ அப்படிச் சிதறிப்போய் நாசமடைந்து விடுவார்கள். அவன் என்னை அடைந்து எல்லோருடனும் என்னைச்சேர்த்து வைக்கின்றனன். என்னால் மிகவும் சுறுசுறுப்புச் செய்யப்பட்டு அவன் அவ்வூரில் சூத்திரதாரனாக விளங்குகின்றனன். அவ்வூர் பாழடைந்துவிட்டால் அவர்கள் எல்லோரையும் வேறு ஓர் ஊருக்கு அழைத்துக்கொண்டு பிரசாரன் செல்லுகின்றான். இவ்விதம் பிரசாரனுடைய வல்லமையை அடுத்து அஸ்திரனானவன் அநேக விசித்திரமான ஊர்களுக்கெல்லாம் அதிபதியாகி ஒன்றன் பின்னொன்றாக அரசாளுகின்றனன். அஸ்திரன் பதிவிரதையின் புதல்வனாகவிருந்தும், தன்தோழனது சகாயம்பெற்றிருந்தும், என்னால் போற்றப்பட்டவனாகவிருந்தும் எவ்விதத்திலும் துக்கமுடையவனாகவே யிருக்கின்றனன். ஏனென்றால் சபலை மகாசனையென்னும் துஷ்ட ஸ்திரீகளைத் தன் மனைவிகளாகக் கொண்டதனாலும், ஜ்வாலாமுகன் நிந்தியவ்ருத்தன் என்பவர்களை இரு குமாரர்களாக அடைந்ததாலும், மற்ற ஐவரால் எங்கும் இழுத்துச் செல்லப்படுகிறதாலும் அஸ்திரனானவன் சுகம் சற்றேனுமின்றி மிகுந்த கிலேச மடைந்தவனானான். எவ்வித



மென்றால், சிலவேளையில் பஞ்சவர்களில் சிலரால் இழுக்கப்பட்டுச் செல்லுகின்றான்; சில நேரம் சபலையினால் கலக்கப்பட்டுக் கஷ்டப்படுகின்றனன். சில பொழுது மகாசனையின்பொருட்டுத் தேட்டமுடையவனாகி அங்குமிங்கும் ஓடுகின்றான். பின்னும் சிலவேளையில் ஜ்வாலாமுகனால் ஏவப்பட்டு அடிமுதல் முடிவரையில் தகிக்கப்படுதலால் அதற்குப் பிரதிக்கிரியை தெரியாமல் மகாமூர்ச்சையை யடைகின்றனன். நிந்திய வ்ருத்தனைச் சிலநேரம் அடைந்து மற்றவர்களால் தூஷணை செய்யப்பட்டும் நிந்திக்கப்பட்டும் உயிரிழந்தவன் போலாகி மிகவும் சோகமுறுகின்றான். துஷ்டர்களான மனைவி மக்களை அடைந்தவனும் துஷ்ட குலத்தில் உதித்தவனுமான இந்தமூடாத்மா தன்மனைவி மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டும் அவர்களால் சதா ஏவப்பட்டும் அவர்களுடன் கூட உயர்ந்தனவும் தாழ்ந்தனவுமாகிய விசித்திரமான ஊர்களில் வாசஞ்செய்து வந்தனன்.

ஒரு காலத்தில் கொடிய மிருகங்கள் நிறைந்த வன்மையுள்ள (a) காடுகளிலும், மற்றொரு காலத்தில் மிகவுஷ்ணமுள்ள பிரதேசங்களிலும், ஒருவேளை சீதளமுள்ள இடங்களிலும், சில வேளை நாறும் ஓடைகளிலும் சிலபொழுது இருளடர்ந்த இடங்களிலும் பலவாறாக வசித்து வந்தனன்.

இவ்விதம் தன் தனயனான அஸ்திரன் அடிக்கடி மிகுந்த துக்கமடைவதை எந்நேரமும் என் சகியானவள் பார்வையிட்டு, அவளும் துஷ்டருடைய சேர்க்கை காரணமாகத் துக்கத்தில் மூழ்கி அறிவிழந்தனள்; நானும் சுபாவமாய் நிர்மலையாக விருந்தாலும் யாதொரு காரணமுமின்றி என் தோழியின் குடும்பத்தில் பற்

(a) இவ்வாறு நரகப்பிராப்தி விவரிக்கப்பட்டது.

னுள்ளவளாகி அவனைப்போலவே எந்நேரமும் அறிவிலி யேழையாயினேன். யார்தான் துஷ்டர்களின் சேர்க்கையால் சற்றுவது ஒரு காலத்தில் சுகமடைகின்றனர். இவர்களின் சுகம் வேனிற் காலத்தில் மருப்பூமியிற் சென்று தாகவிடாய் தீர்த்துக்கொள்வதற்கு நிகராகும்.

என் தோழியானவள் இவ்விதம் வெகுகாலமாக மிகவும் விசனப்பட்டு அறிவிழந்தவளாகி யிருக்கும் பொழுது ஒரு காலத்தில் (b) இரகசியமாக வேறு ஒருவருமின்றி என்னுடன் கலந்தனள். தனிமையாகக் கலந்ததனால் அவள் தகுந்த (c) யுக்தியைக் கைக்கொண்டு நல்ல (d) பதியை அடைந்து, (e) தன் தனயனைவென்று அவனுடைய தனயர்களைக் கொன்றும் பிடித்துக் கட்டியும், என்னுடன் (f) கலந்து (g) என்மாதாவிருக்கும் ஊரைச் சார்ந்தாள். கல்மஷ (h) மற்றவளான அவள் அதன்பிறகு என் தாயை (i) அடிக்கடி தழுவிக்கொண்டு ஆலிங்கனம் செய்து சீக்கிரத்தில்

---

(b) விஷயங்கள் தோற்றாத வேளையில் புத்தி சுத்தசித்தாரமாய் விடுகிறது என்பது கருத்து.

(c) யுக்தி—வைராக்கியம்.

(d) நல்லபதி-விவேகம்.

(e) புத்தியானது மனதை ஜயித்துக் குரோத உலோபங்களை நாசமாக்கி இந்திரியங்களைப் பந்தனம் செய்தது.

(f) நிர்விகர்ப்ப சமாதி யடைந்தது.

(g) அகண்ட சித்தாத்ம ரூபம்.

(h) "கல்மஷமின்றி" துவைதம் தோன்றினும் தக்க நியாயப்படி முன்போலச் சம்சாரத்திற்கு மூலமான வாசனைகளில்லாததால். [திருஷ்டதுக்கங் கூட இராது என்பது தாத்பரியம்.]

(i) அடிக்கடி யென்பது—துவைதத் தோற்றங்கள் விளங்கினால் பின்னும் பின்னும் என்பது கருத்து.



(j) ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கின சுபாவமுடையவளாயினள்".

இவ்விதமாகவே நீங்களும் தோழியினிடமிருந்து உற்பன்னமான தீங்குகளை ஜயித்து விலக்கி உங்கள் தாயை அடைந்து ஏ! நாதா! நாள்தோறும் சுகமடையுங்கள். இதுதான் சுகத்திற்கு ஆதாரமான என்னுடைய அநுபவத்தைப் பற்றிய கதை.

ஸ்ரீ திரிபுரா ரகசியம் ஞான காண்டம் ஹேமகூட உபாக்கியானத்தில் வந்தியாக்கியாயிகை என்னும் ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

(j) இவ்வாறு பந்தமோக்ஷங்கள் புத்திக்கே யன்றி ஜீவனுக்கு இல்லை எனக்கூறப்பட்டது.

## அத்தியாயம்-6

இவ்விதம் ஹேமலேகையின் வசனங்களைக் கேட்டு ஹேமசூடன் விஸ்மயமடைந்தவனாய் அவள் விதுஷி யென்றறியாமல் நகைப்புடன் தன் பத்தினியாகிய அவளைக்கேட்டதாவது:—"பிரியையே! நீசொன்ன அவ்வளவும் வானத்தில் சித்திரம்போல நிராலம்பமான வசனங்களாக எனக்குப் புலப்படுகின்றன. நீ அப்ஸரஸ்திரீயினின்றும் உற்பத்தியானவளென்பதிலும் வனத்தில் ரிஷியினால் வளர்க்கப் பட்டவளென்பதிலும் சந்தேகமில்லை. இப்பொழுது தான் யௌவன தசைக்கு வந்திருக்கிறாய்; தாருண்யபருவம் அடையவு மில்லை. ஆயினும் அநேகாயிர வருஷங்களின் நிலைமையை அறிந்தவள்போலும் பேயாவேசங் கொண்டவள் போலும் பேசுகின்றாய். அசந்தர்ப்பமான உன் மொழிகளை உண்மையென்று நான் எப்படிக்கருதுவேன். உன் தோழி எங்கு இருக்கின்றனள்? கட்டுண்ட உன் தோழியின் குமாரன் எங்கே? பட்டணம் எங்கிருக்கிறது? இவைகளை எனக்கு விளங்கும்படி சொல்வாய். மற்றவர்கள் எப்படியானாலென்ன? அந்த உன் தோழி எங்கிருக்கிறாள் சொல்லு. நான் இதுவரையிலும் ஒரு தோழியையும் அடையவில்லையே. அந்தப்புரத்தில் என் தாய் இருக்கின்றாள். அவளை விசாரித்தால் தெரியும். அவளன்றி எனக்குத்தாய் கிடையாது. அப்படிப்பட்ட என்னுடைய சகியும் அவள் புத்திரனும் எங்கிருக்கிறார்கள் சொல். உன்னுடைய வசனங்கள் நாடகத்தில் ஒரு விதூஷகன் வந்து வந்தியா புத்திரன்



பிரதிபிம்ப மகாரதத்திலேறிச் சுக்திகார ஜித பூஷணங்களணிந்தவனாகி நரசிருங்கத்தினால் செய்யப்பட்ட ஆயுதங்களால் ஆகாசவனத்தில் யுத்தஞ் செய்து வருங்காலத்துப் பகையரசனைக் கொன்று கந்தர்வநகரியை ஜயித்து மரீசிகாதடாகத்தில் சொப்பன காமினிகளுடன் கிரீடை செய்தான் என்று உலகத்தில் சொல்லும் வந்தியாபுத்திர சரித்திரத்திற்கு நிகராக விருக்கின்றன. இவ்விதமன்றி உன்னுடைய வசனங்களை நான் எவ்விதமாகக் கருதலாம்" என்று சொன்ன தன் பிரியனுடைய வாக்கியங்களைக் கேட்டு அவள் பின்னும் சொல்லுகிறாள்:—

"ஏ நாதா! நான் உங்களிடம் சொன்னவை எப்படி அபார்த்தகமாகும்? என்னைப் போன்றவர்களுடைய வசனம் ஒருகாலும் நிராலம்பமாக மாட்டாது. பொய்யானது தவத்தை நாசஞ் செய்யுமன்றோ? அப்படியிருக்கச் சத்திய சீலர்களான தபசிகளிடத்தில் பொய்யானது தங்குமோ? எவனொருவன் ஜிஞ்ஞாஸுவினிடத்தில் அசத்தியமும் அபார்த்தகமானதுமாகிய மொழிகளைச் சொல்லுகிறானோ அவனுக்கு மேலும் கீழும் சுகத்தைக் கொடுக்கக் கூடியதான உலகங்கிடையாது. இராஜ புத்திரரே! என் மொழியைக் கேளுங்கள். உலகத்தில் ஒரு திமிரரோகிக்கு அஞ்சனத்தின் பேர் சொன்னதினால் மட்டும் கண்கள் சொஸ்தமாகிவிடா. அவன் ஆப்தர் மொழிகளையும் பொய்யாகக் கருதுவன். ஆகையினால் தபஸ்வினியும் ஸத்திய சீலையும் உங்கள் பிரியையுமான எனக்கு உங்களிடத்தில் பொய் மொழிவதில் என்ன பிரயோஜனம்? நான் சொன்னவை அசத்திய மென்று கருதுவீர்களானால், அதனைச் சூக்ஷ்மமாக ஆலோசித்துப் பாருங்

கள். உலகத்தில் புத்திமான்களான ஜனங்கள் எல்லா வியவகாரங்களிலும் (a) ஒரு அம்சத்தினுடைய உண்மையைத் தெரிந்துகொண்டு மற்றெல்லாப் பாகங்களின் ஸ்திதியையும் தீர்மானம் செய்கிறார்கள். இதற்கு உங்களுக்கு ஒரு திருஷ்டாந்தம் காண்பிக்கிறேன், பாருங்கள். முன்னாளில் நீங்கள் அபிலாஷை வைத்திருந்த விஷயங்களெல்லாம் என்னுடைய வசனங்களைக் கேட்ட பிறகு இப்பொழுது ஏன் உங்களுக்குச் சுகசாதனங்களாகத் தோற்றவில்லை? 'உன் மொழிகளாலன்று அவ்விதமானது' என்று சொல்வீர்களாயின், இச்சமயத்திலும் என் மொழிகளால் உங்களுக்குச் சுகம் எவ்விதம் ஏற்படும்? இந்தத் திருஷ்டாந்தத்திலிருந்தே உங்கள் தீர்மானத்தின் உண்மையைக் கிரகித்துக் கொள்ளுங்கள்."

"நான் சொல்வதை, இராஜாவே! கோணாதமனதுடன் கவனித்துக் கேளுங்கள். ஆப்தவாக்கியத்தினிடம் உண்டாகும் அசிரத்தை உலகத்தோருக்கு முக்கிய சத்துருவாகும். சிரத்தையென்ற மாதாவைப் பணிந்தால் சுதனிடம் பிரேமையுள்ள தாய்போல வலிமையுள்ள பீதிகளில் நின்றும் எவ்விதத்திலும் இரக்ஷிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆப்தரிடத்தில் சிரத்தையில்லாத மூடனைச் சம்பத்து, சுகம்,யசசுமுதலியவைகள் விட்டுவிடுகின்றன. அதுவுமன்றி அவன் எல்லோரிலும் ஈனனாகின்றான். சிரத்தைதான் ஜகத்தை இரக்ஷிக்கின்றது. எல்லோரும் சிரத்தையை முன்னிட்டுத்தான் ஜீவித்திருக்கிறார்கள். தன் தாயினிடத்தில்

(a) ஹேமலேகையின் வசனங்களை ஹேமசூடன் உண்மையென்று கருதினமையின், அதனால் ஏற்பட்ட அனுபவம் திருஷ்டாந்தமாகக் காட்டப்பட்டது.



விசுவாசமில்லாமற்போனால் (b) பாலனானவன் எவ்விதம் ஜீவித்திருப்பான் சொல்லுங்கள்? தருணனான (c) புருஷனுக்குத் தன்பத்தினியினிடம் சிரத்தையில்லாதிருந்தால் அவன் எப்படித்தான் சுகமடைவன்? இவ்விதமே புத்திரர்களிடத்தில் சிரத்தையில்லாதவருக்கு நல்லகதி எவ்விதமுண்டாகும்? பயிரிடுபவன் சிரத்தையற்றவனாகவிருந்தால் தன்நிலங்களில் உழவுசெய்வனா? சிரத்தையில்லாமல் ஒருபிரவிர்த்தியும் ஒருகாலத்திலும் நடவாதே! அசிரத்தையினால் பிரவிர்த்தியற்றுப்போகுமானால் உலகவியவகாரங்கள் அடங்கிவிடுமன்றோ? ஆனால் பிரத்தியக்ஷ சித்தமாயிருக்கிற ஜகத்தின் ஸ்திதியை நிறுத்தத்தகாதபடியால் அதற்குக் காரணமாகச் சிரத்தை யிருக்கிறதென்று சித்தமாகிறது. உலக வியவகாரங்கள் சிரத்தையைமுன்னிடாமல் (d) காரிய காரண சுபாவத்தை முன்னிட்டு நடக்கின்றனவென்று சொல்வீர்களானால், அந்தக்காரியகாரண சுபாவத்தினிடத்தில் உங்களுக்கு விசுவாசம் (சிரத்தை) எப்படியுண்டாயிற்று? காரியகாரணரூபமாக உலகவியவகாரங்கள் நடக்கின்றன என்று எடுத்துக்கொள்வதிலுங்கூட

(b) மாதா தனக்கு நல்ல உணவு கொடுப்பளென்று சிரத்தையில்லாவிடில், பாலன் உணவைத் தள்ளிவிடுவான் என்று அர்த்தம்.

(c) உறங்கும் பொழுது பத்தினி கொன்று விடுவாளோவென்று பர்த்தாவுக்கு அவநம்பிக்கை யுண்டானால் அவனுக்குச் சுகமுண்டாகுமா ?

(d) பயிரிடுபவன் வியவசாயம் செய்தால் தானியமகப்படுமென்று நம்பி, தானியமடைவதில் வியவசாயத்தின் வியாப்தியை நிச்சயித்துக்கொண்டு வியவசாயம் செய்கிறானேயன்றிச் சிரத்தையினால் செய்யவில்லை என்றதற்குச் சமாதானம்.

விசுவாசம் என்றசிரத்தை இருக்கின்றது. ஆதலால் உலகத்தில் சிரத்தை யில்லாமற்போனால் எல்லோரும் மூச்சுவிடுவதிலும்கூடச் சந்தேகமுதித்தவராகிமூச்சை நிறுத்திவிடவேண்டுமன்றோ? ஆகையினால் திடமான சிரத்தையுடையவர்களாகி ஆத்தியந்திகமான சுகத்தை நாடுங்கள். சிரத்தையை (e) நிகிர்ஷ்டர்களிடத்தில் வைக்கலாமோவென்று சங்கை உங்களுக்கு உண்டாகுமானால், இவ்விதம் நிகிர்ஷ்டர்களிடம் சிரத்தையை வைக்கக் கூடாதென்பது சிரத்தையினால் ஏற்பட்டதானபடியினால் சிரத்தையின்றி எப்படிப் பிரவிர்த்தி யுண்டாகும்" என்று தன் பிரியைகூற, ஹேமசூடன் அவளிடம் பின்னும் கேட்கிறான். "எவ்விதமாயினும் சிரத்தையை யடையவேண்டுமென்று தீர்மானஞ்செய்யும்போது சிரேயசைக்கோரினால் அந்தச் சிரத்தையைச் சத்துக்களிடம் வைக்கவேண்டுமேயன்றி அசத்துக்களிடத்தில் வைத்தல் கூடாது. அவ்வாறன்றி அசத்துக்களிடம் சிரத்தையைவைத்தால், தூண்டிலின் வெளியிலுள்ள அழகைப் பார்த்து மறைந்திருக்கும் ஊசிமுனைகளினால் மீன்கள் நாசமடைவதுபோல அதோகதியுண்டாகும். ஆகையினால் சத்துக்களிடத்திலேயே சிரத்தையை வைக்க வேண்டியதன்றி அசத்துக்களிடத்தில் ஓரிடத்திலும் வைத்தல் கூடாது. எவர்கள் அசத்துக்களிடத்தில் சிரத்தையைவைத்து நாசமடைந்தார்களோ, எவர்கள் சத்துக்களிடம் சிரத்தையினால் சிரேயசைப் பெற்றார்களோ அவர்களெல்லாம் இதற்கு உதாரணமே." "சத்துக்களென்று தோற்றத்தினால் அறிந்துகொண்டு அவர்களிடம் சிரத்தையை வைக்கவேண்டிதாயிருக்கும் பொழுது, உங்களுக்குப் பிரவர்த்திதான்

(e) ஸ்திரீகளிடத்திலும் மூடர்களிடத்திலும்.



எப்படி யுண்டாகக் கூடுமென்று நீர் ஆக்ஷேபித்தற்குக் காரணமென்ன" என்று ஹேமசூடன் கேட்க, ஹேமலேகை தன் பிரிய பதியினிடம் சொல்லுகின்றாள். "ஏ இராஜகுமாரா! நான் சொல்வதைக் கேளுங்கள்—

நீ எப்படி ஆக்ஷேபணை செய்வாய் என்று கேட்டதற்குச் சமாதானம் என்னவென்றால், சத்துக்களிடத்தில் சிரத்தையை வைக்க வேண்டு மென்ற மகா ஜனங்களுடைய வாக்கியத்தில் உங்களுககு விசுவாசமுண்டாகிப் பிரவிர்த்தி ஏற்படும் பொழுது, அவ்வித வாக்கியங் கூறினவர் சத்து என்றும் அல்லது அசத்து என்றும் உங்களுக்கு எப்படித் தீர்மானமாயின. வேறு ஒருவர் வாக்கியத்தினால் இவர் வாக்கியத்தில் சிரத்தை உண்டாயிற்று என்றுசொல்வீராயின், அநவஸ்தா தோஷத்தால் இன்னவன் சத்து இன்னவன் அசத்து என்று ஏற்படாது. வேறு ஒருவன் மொழிந்த சத்துக்களின் இலக்ஷண ஞானத்தினால் சத்துக்களைக் கண்டறியலாமென்பீர்களாயினும் இந்த அநவஸ்தா தோஷத்தினால் தீர்மானம் ஏற்படாது. சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் பிரமாணங்களினால் சத்துக்களின் இலக்ஷண ஞானமுண்டாகலாமென்றால், அசிரத்தையுள்ளவனுக்கு அவ்விதப் பிரமாணங்களில் எப்படி விசுவாசமுண்டாகும் சொல்லுங்கள். மற்றப் பிரமாணங்களைப் போலவே நல்லாகமங்களிடத்திலும் எவ்விதத்திலும் தோஷத்தைக் கற்பித்துக்கொண்டு (1)விஸம்வாதகம் செய்யும் ஒருவன்

(1) விஸம்வாதகம்-ஒரு காரியம் செய்தால் இன்னபலனுண்டாகுமென்று பிரமாணமிருக்க, அக்காரியத்தினால் அவ்விதப் பலன் ஏற்பட மாட்டாதென்று விபரீதமாக நிச்சயிப்பது.

எதனிடத்திலே தான் விஸம்வாதகம் செய்யான்? ஆகையினால் உலகமுழுதும் சிரத்தையை ஆசிரயித்துப் பிரவிர்த்திக்கின்றது. அதன் பிரகாரத்தைச் சொல்லுகிறேன்; நிச்சல மனதுடன் கேளுங்கள். அநவஸ்தா தர்க்கம் செய்பவனாவது தர்க்கமே செய்யாமலிருப்பவனாவது இகத்திலும் பரத்திலும் சிரேயசை அடையான். ஆனால் இவர்களில் தர்க்கமே செய்யாமலிருப்பவனுக்குக் காலக்கிரமத்தில் ஒருகால் சிரேயசு உண்டாகக் கூடும். அநவஸ்தா தர்க்கம் செய்பவனுக்கு ஒரு காலத்திலும் சிரேயசு கிடையாது.

"முற்காலத்தில் கோதாவரி தீரத்திலிருக்கும் சகியகிரியினிடம் சாந்தசீலராகவும் உலகத்தின் உண்மையை உணர்ந்தவராகவும் கௌசிகர் என்ற பெயருடைய ஒருமகான் வசித்திருந்தனர். அப்பெரியோரையடுத்தவரான அநேகம் சிஷ்யர் அவரிடத்தில் இருந்தார்கள். அச்சிஷ்யர்கள் ஒருதினம் குருவின்றியிருக்கும்பொழுது தங்கள் புத்திக்குத்தகுந்தபடி உலகத்தின் நிலைமையைப்பற்றித் தீர்மானம் செய்வதற்காகப் பலவாறாய் விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்குச் (2) சுஷ்கதர்க்க நிபுணனான சுங்கன் என்னும் பேருள்ள ஒரு விப்பிரன் வந்து அச்சிஷ்யர்கள் எல்லோருடைய கொள்கைகளையும் கேவலம் தன் புத்தி கௌசலத்தினாலேயே தூஷணை செய்தனன். "பிரமாணத்திலிருந்தும் பிரமிதத்தின் உண்மையைக் கிரகிக்கலாமென்று சொல்லும் சிஷ்யர்களிடத்தில், அசிரத்தையினால் மதியிழந்தவனும் வாத நிபுணனும் சுஷ்கதர்க்கத்தையடுத்தவனுமான அந்தச்சுங்கன் அவர்களுடைய

(2) சுஷ்கதர்க்கம்—வறட்டுவாது; அனுபவம் பிரமாணங்களின்றிக் கேவலம் யுக்தியினால் தர்க்கம் செய்வது.



...CE OF ... REGISTRAR OF ... 1915

கொள்கைகளை ஆக்ஷேபனை செய்து கூறுவதைக்கேளுங்கள். ஸத்தியமானது ஒருகாலத்திலும் பிடிபடாது. (சித்தமாகாது). பிரமாணத்தினால் எது பிரமிதமாகிறதோ அது ஸத்தியமென்றீர்கள். பிரமாணத்தினிடம் தோஷங்களிருக்குமானால் பிரமிதம் உண்மையாகாது. ஆகையினால் பிரமாணத்தினிடம் தோஷங்கள் இல்லையென்று நாம் முன்னதாகப் பார்த்து நிச்சயம் செய்துகொள்ளவேண்டும். அப்படிப்பட்ட நிச்சயமும் பிரமாணத்திற்கு அதீனமாயிருப்பதால் அதனிடத்தும் இவ்விதமே விவேசனை செய்யவேண்டும். இம்மாதிரி முடிவின்றி விசாரணை செய்ய நேரிடுகிறபடியால் பிரமிதம் ஒன்றும் சித்தமாகிறதில்லை. ஆகையினால் பிரமாதாவாகட்டும் பிரமிதம் பிரமாணங்களாகட்டும் இவற்றுள் ஒன்றுமே சித்தியாது. அதுவுமன்றி நான் இதனைப் பார்க்கிறேன் என்ற விகற்பங்களெல்லாம் சூனியத்தை ஆசிரியத்தவைகளாக முடிந்து விடும். விடவே, அந்த விகற்பமும் பிரமாணத்திற்கு விஷயமாகாததால் (3) சூன்யரூபத்தை அடைந்து விடுகிறது: ஆதலால் சூன்யத்தைத் தவிர யாதொன்றும் கிடையாது என்பது என்னுடைய தீர்மானம். இப்படிப்பட்ட சுங்கன் வசனங்களை அச்சிஷ்யர்களில் சில மூடாத்மாக்கள் கேட்டு, அவன் கொள்கையை எடுத்துக்கொண்டவராகிச் சூன்யவாதிகளாக முடிந்து சூன்ய நிஷ்டர்களாய் நாசத்தையடைந்தனர். அவர்களில் விசார சீலரான மற்றவர்கள் சுங்கன் வசனங்களைத் தங்கள் குருவான கௌசிகரிடத்தில் கூறி அவரால் ஸந்தேகம் தெளிவிக்கப்பட்டு நிச்சய புத்தியுடையவரானார்கள்.

(3) சூன்யம் சித்திக்கப் பிரமாணம் தேவையில்லாமையினால் சூன்யம் சித்திக்கிறதென்று சொல்லப்பட்டது.

ஆகையினால் எவ்விதத்திலும் அநவஸ்தையான தர்க்கத்தை விட்டுவிட்டு எப்பொழுதும் சதாகமங்களுக் கனுகூலமான [illegible]த்தைப் பொருந்தி யிருப்பவர்கள் சிரேயசை யடைவார்கள்" என்றனள்.

இவ்விதம் அத்தியந்தம் தீரையான தன்பிரியை மொழிந்தபோது ஹேமசூடன் மிகவும் ஆச்சரியத்துடன் அவளிடம் பின்னும் கேட்கிறான்:—"அகோ! ஆச்சரியம்! பிரியையே! உன்னிடத்தில் இவ்வளவு உணர்ச்சியிருப்பது இதற்குமுன் எனக்குத் தெரியவில்லை. நீ தன்யையாயிருக்கிறாய்; நானும் உன்னை அடைந்ததனால் தன்யனாக இருக்கிறேன். சிரத்தையினால் சகலமான சிரேயசும் சித்தியாகுமென்று நீ சொன்னது எப்படி? எதனிடத்தில் சிரத்தையை வைக்கலாம்; எதனிடத்தில் வைக்கக்கூடாது. அளவில்லாமலும் ஒன்றுக்கொன்று விரோதமான அர்த்தங்கள் பொருந்தியவையுமான பற்பல ஆகமங்களிருப்பதால் எதனிடத்தில் சிரத்தையை வைக்கலாம்? எதனிடத்தில் வைத்தல் கூடாது? உலகாசாரியர்களுடைய மதங்களின் பேதங்களும், சாஸ்திரங்களுக்கு உரையெழுதுவோர்களின் மதபேதங்களும், நிலையில்லாத புத்தியு மிருக்கும்போது, எது எடுத்துக்கொள்ளத் தகும்; எது தள்ளத்தகும், இவற்றைக் கூறுவாய். எவனுக்கு எதனிடத்தில் அபிமானமிருக்கிறதோ அதனை நல்லதென்றும் எதனிடம் அபிமானமில்லையோ அதனைத் தோஷமானதென்றும் தள்ளிவிடுகின்றான். இவ்விதமிருக்கிறபடியால் எனக்கு இந்தவிஷயத்தில் ஒரு முடிவான தீர்மானமும் புலப்படவில்லை. அசூன்யத்தைத் தூஷிப்பவரான சூன்யவாதிகளுக்கும் அனுகூலமாக ஆகமங்கள் இடங்கொடுக்கிறபடியால், அப்படிப்பட்ட



ஆகமங்களில் ஏன் சிரத்தை வைத்தல் கூடாது? இவைகளை யெல்லாம் விஸ்தாரமாக எனக்குச் சொல்லவேண்டும்; உன்னால் சிந்திக்கப்படாத தொன்றுமில்லை" என்று கூறினான்.

ஸ்ரீ திரிபுரா ரகசியம், ஞான காண்டம், ஹேமசூட உபாக்கியானம், சிரத்தையின் பிரசம்ஸை என்னும் ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## அத்தியாயம்-7

இவ்விதம் தன் பிரிய பர்த்தாவினால் கேட்கப்பட்டபொழுது உலகத்தின் நிலைமையை நன்றாய் உணர்ந்தவளும் விதுஷியுமான ஹேமலேகை சொன்னதாவது:—"பிரியதமா! நான்சொல்வதை ஆதரவுடனும் சித்தம் சலியாமலும் கவனித்துக்கேளுங்கள். மனதானது குரங்குச் சுபாவமாக எப்பொழுதும், ஸ்திரமின்றி யிருக்கிறது. மனதின் சலனத்தினால் உலகத்தில் ஜனங்கள் மகத்தான அநர்த்தங்களை அடைகிறார்கள். சலிக்கும் மனமே எல்லாத்துக்கங்களுக்கும் காரணமானதென்பது பிரத்தியக்ஷமாம்; ஏனென்றால், சுழுத்தியில் சலனமின்மையால் எல்லோருக்கும் சுகம் உண்டாகிறது. ஆகையினால் மனதை ஸ்திரப்படுத்திக் கொண்டு நான் சொல்வதைக் கேளுங்கள். ஆதரவின்றிக் கேட்பது கேளாம விருப்பதற்கு நிகராவது மன்றிப் படத்தி லெழுதப்பட்டிருக்கும் விருக்ஷத்தினைப் போலப் பலனைக்கொடாது. விநாசத்திற்கு ஏதுவான அநவஸ்தா தர்க்கத்தைத் தூரத்தில் விலக்கி ஸத்தான தர்க்கத்தைக் கைக்கொண்ட ஜனங்கள் சீக்கிரத்தில் நல்ல பலனைப் பெறுகின்றார்கள். ஸத்தான தர்க்கத்தை யடைந்து சாதனத்தில் ஏகபானாகப்பவித்து அந்தஸத்தான தர்க்கத்திலிருந்து உற்பன்னமாகும் சிரத்தையையுடைய நரன் பலனை அடைகின்றான். சிரத்தையின் காரணத்தால் பலன்களை யடைகின்ற இவ்வுலகத்தின்



கண்ணுள்ள பிரவிர்த்திகளை அநவஸ்தா தர்க்கத்தை அகற்றிச் சிந்தனை செய்து பாருங்கள். பிரியரே! பயிரிடுபவன் நல்ல யுக்தியினால் ஆலோசித்து அந்தந்தக் காலங்களில் உழவு செய்கிறான். குதர்க்க மகற்றிய சுதர்க்கத்தினாலும் சிரத்தையினாலும் வெள்ளி பொன் நாணயங்களும் இரத்தினம் ஔஷதங்கள் முதலியவைகளும் உலக வியவகாரங்களில் வழங்கிவருகின்றன. ஆதலால், ஆத்மாவின் சிரேயஸை முன்னிட்டுச் சுதர்க்கம் சிரத்தையென்னு மிவ்விரண்டு சாதனங்களையும், சுங்கனுடைய அநவஸ்தா தர்க்கத்தினால் முயற்சியின்றி நின்ற மூடர்களைப்போலிராமல் சம்பாதிக்க முயலுங்கள். சிரத்தையுடன் புருஷப்ரயத்தினம் செய்பவனுக்கு ஒரு விதத்திலும் ஹானியில்லை. திடமான ஆண்மையுள்ளவன் பலனை ஏன் அடையமாட்டான்? புருஷப்பிரயத்தினத்தாலேயே பயிரிடுபவர் தானியத்தையும், வியாபாரிகள் தனத்தையும், அரசர் இராஜ்யலக்ஷ்மியையும், விப்ரர்கள் சுகத்துக் காதாரமான வித்தையையும், சூத்திரர்கள் சேவகத்தையும், தேவர்கள் அமிருதத்தையும், தபசிகள் உத்தம லோகங்களையும், மற்றவர்கள் தங்கள் தங்கள் கோரிக்கைகளையும் அடைகிறார்கள். அநவஸ்தையான தர்க்கத்தினாலும், அசிரத்தையினாலும் எவனாலே எப்பொழுது என்னபலன்தான் அடையப்பட்டிருக்கின்றது.? ஆலோசித்துச் சொல்லுங்கள். சற்றேனும் பலனுண்டாகுமானால் அதனிடத்தில் நம்பிக்கை யில்லாமல் விகற்பம் செய்து கொள்வோரைப் பாக்கியமற்றவரென்றும், தமக்குத்தாமே பகையானவரென்றும், அறியவேண்டும்."

ஆகையினால் சிரத்தையினாலும் ஸத்தான தர்க்கத்தினாலும் போஷணை செய்யப்பட்ட அதிக முயற்சியை

யுடையவராய்ச் சிரேயசுக்கு எது முக்கியமான ஸாதனமோ அதனைச் சாருங்கள். அப்படிப்பட்ட பற்பல ஸாதனங்கள் விசித்திரமாக இருக்கின்றன. அவைகளில் எதனை எவ்விதமாயினும் சாதித்துக் கொள்ளுதல் கூடுமோ அதனை முக்கியமாக ஸாதனைசெய்யுங்கள். சுதர்க்கத்தினாலும் அனுபவத்தினாலும் அஃது இன்னதென்று தீர்மானித்துக்கொண்டு சீக்கிரத்தில் ஆரம்பம் செய்யவேண்டும். அதன் விஷயங்களெல்லாம் சொல்லுகிறேன்; சாவதானமாய்க் கேளுங்கள்.—

"யாதொன்றி னடைவினால் ஒருவன் பின்னும் சோகவானாகிறதில்லையோ அதனைச் சிரேயசென்றறிய வேண்டும். சூக்ஷ்ம புத்தியினால் ஆலோசனை செய்தால் எங்கும் எதனிடத்திலும் துக்கமிருப்பதாகக் காணப்படுகிறது. துக்கசோகங்களுடன் கூடினது ஒருவிதத்திலும் சிரேயசாகமாட்டாது. தனம், புத்திரர், பத்தினிகள், இராஜ்ஜியம், பொக்கிஷம், பலம், யசஸு, வித்தை, புத்தி, தேகசவுந்தரியம், ஸம்பத்து முதலியவைகளெல்லாம் அஸ்திரமானவையாகவும் காலமென்ற ஸர்ப்பத்தின் முகத்திலிருப்பதனால் சோகமென்ற முளைக்கு மிக வலிமைபொருந்திய பீஜங்களாயு மிருக்கின்றன. இவைகள் எப்படி ஆத்தியந்திக சிரேயசிற்குச் ஸாதனங்களாம்? ஆதலால் பரமமான சிரேயசு இவைகளினின்றும் பின்மீளுக்குகிறதினால் உண்டாகிறது. இவ்விதம் தனம் முதலிய விஷயங்களில், அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று யாதொரு பிராந்தி யுண்டாகிறதோ அது மோகத்தினால் ஏற்பட்டதே. அவ்விதமாக மயக்குகின்றவர் மகேசுவரனே. அவர் ஸர்வலோகங்களுக்கும் கர்த்தாவானபடியால் அவரால் எல்லோரும் மோகிக்கப் பட்டிருக்கின்றனர். சொற்ப வித்தையுடைய ஒருவன்



சிலபேரைமாத்திரம் தன்வித்தையினால் மயக்குகின்றான். அப்படிப்பட்ட அற்ப வித்தையுடைய ஜாலக்காரனையே ஜனங்களால் ஜயிக்கமுடியவில்லையே, மகாமாயாவியான மகாதேவனை எப்படி வெல்லப்போகிறீர்கள்? உலகத்தில் எவர்களுக்கு அற்ப மாயைக்குத் தகுந்த பிரதிவித்தைதெரியுமோ அவர்கள் அந்தமோகத்திலிருந்தும் விடுபட்டுச் சொஸ்தராகிச் சுகமடைகிறார்கள், எப்படிப் பிரதிவித்தை தெரியவேண்டுமானால் மாயிகனை அடுத்திருந்து அவனைச் சந்தோஷப்படுத்தினா லன்றிப் பிரதிவித்தை இலபிக்காதோ அப்படி மகாமாயாவியான மகேசனைச் சந்தோஷப்படுத்தாமல் மோகத்தைத் தாண்டுவதெங்ஙனம்? ஆதலினால் அவரை எல்லா விதத்தினாலும் பற்றிக்கொள்ளுங்கள். யாவனொருவன் அவருக்கு மகிழ்ச்சி செய்வித்து அவருடைய பிரசாதத்தினால் மகாவித்தையை அடைகின்றானோ அவன் அந்த மோகத்திலிருந்தும் சீக்கிரத்தில் விடுபடுகின்றான்.

இன்னும் சிரேயசிற்கு ஏதுக்களான பற்பல யுக்திகள் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் அவைகளெல்லாம் ஈசன் பிரசாதமின்றிப் பலன்கொடா. ஆகையினால் முதன்மையாக விசுவகாரணனான மகேசனைப் பக்தியுடன் ஆராதனைசெய்தால் அவர் மோகத்தை நாசம் செய்யக்கூடியதான யுக்திகளைப் புகட்டுவார்."

இந்த ஜகத்தானது காரியமானதென்பது பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறது. ஜகத்காரியத்தின் ஆரம்பம் தெரியாவிட்டாலும், பிருதிவி முதலியவைகளின் அம்சத்தின் ஏதுவாலும் காரியத்தின் சொரூபத்தை நிர்ணயம் செய்யும் யுக்திகளாலும் அனேக ஆகமங்களின்

---

மகாவித்தை = இரண்டற்ற சிவாத்ம வித்தையை அடைந்தால் மாகா மாயையின் சொரூபம் அறியலாகும்.

மொழிகளாலும் இந்த ஜகத்து காரிய பூதமானது என்பதும், அதன் கர்த்தா இதர கர்த்தாக்களில் நின்றும் (1) விலக்ஷணமானவர் என்பதும், நிச்சயப்படுகின்றன. கர்த்தாவின்றி இந்த ஜகத்து உண்டாயிற்று என்று சில ஆகமம் சொல்லுமாயின், அதன் கொள்கைகளை வேறு பல ஆகமங்கள் அநேகயுக்திகளால் கண்டித்திருக்கின்றன. அப்படிப்பட்ட சார்வாக ஆகமம் பிரத்தியக்ஷத்தையே ஆசிரயித்துக்கொண்டிருக்கிறபடியால் அதனால் ஆத்ம நாசமே தேடப்படுகிறது. அவ்வாகமம் ஆகமாபாசமன்றி மகத்துக்களால் அங்கீகரிக்கப்பட்டதன்று. சுஷ்கதர்க்கம்பொருந்திய சாஸ்திரமானது தியஜிக்கத்தக்கதே.

* மற்றுஞ் சிலர் இந்த ஜகத்து ஸநாதனமாக (ஸத்ரூபமாக) இருக்கிறதென்று சொல்லுகின்றனர். அவர்கள் புத்தியின்றிய பிரகிருதிக்குக் கர்த்ருத்துவம் சொல்லுவதும் அவிவேகமே; ஏனென்றால், கிரியைகளெல்லாம் புத்திபூர்வமாகவே நடக்கின்றன. புத்தியின்றிக் கிரியையுண்டாவதில்லை. இன்னும் அநேக ஆகமப்பிரமாணங்களாலும் இந்த ஜகத்தைப் புத்தியுடையவனே நியமித்தானென்பது தீர்மானப்படுகின்றது. உலகத்தில் எங்கும் புத்தி பூர்வகமாகவே காரியங்கள் நடப்பதையும் பார்க்கின்றோம்.

---

(1) சிருஷ்டிக்கு முன் திருசியம் அணுமாத்திரமும் இருக்கவில்லையென்றும் உபாதானங்களை அபேட்சியாமல் அதனைச் சிருஷ்டித்தமையால் ஈசன் ஸர்வகர்த்தாவாதலால் மற்றக் கர்த்தாக்களிலிருந்தும் வேறானவன் என்றும் கருத்து.

ஈசுவரன் நிலையற்றவராயிருந்தால் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஸம்ஸாரம் அகாலத்தில் நசித்துவிடும் என்பது கருத்து.

* அநுபந்தத்தை நோக்குக.



இவ்விதம் ஸத்தான தர்க்கங்களாலும் ஆகமங்களாலும் ஜகத்திற்குக் கர்த்தா ஒருவனிருக்கின்றானென்றும், அவன் உலகத்தின் கண்ணுள்ள கர்த்தாக்களிலிருந்தும் வித்தியாசப்பட்டவனென்றும், காரியத்தின் எண்ணப்படாத மகிமையினால் சிந்திக்கத்தகாத அளவற்ற சக்தி பொருந்தியவனென்றும், அபரிச்சின்னமான ஜகத் காரியத்திற்கு அனுகுணமான சாமர்த்தியமுடையவன் என்றும் தீர்மானமாகின்றது. இப்படிப்பட்ட குணங்கள் பொருந்தியிருப்பதால் சரணமாக அடைந்தவர்களை உத்தாரணம் செய்ய அவனுக்கே வல்லமையுண்டு.

ஆகையினால் எந்நேரமும் எல்லா விதத்திலும் அவனையே சரணமடையவேண்டும். இதற்குத் திருஷ்டாந்தமாக நான் சொல்வதைக் கேளுங்கள். உலகத்தில் மிதேசுவரனை பிரபு கபடமின்றிச் சந்தோஷப்படுத்தப்பட்டானேயானால், அவன், தன்னை அடுத்த மனிதனுக்கு அவன்கோரிக்கைகளை எல்லாவிதத்திலும் அளிக்கின்றான். அப்படியிருக்கும்பொழுது லோகேசுவரனை தேவனை எவனொருவன் பூர்ணமாகச் சந்தோஷப்படுத்துகிறானோ அவனுக்கு (அந்தப் பக்தனுக்கு) எகவத்ஸலனானவன் எதைத்தான் கொடுக்கமாட்டான், சொல்லுங்கள் ? உலகத்தில் ஐசுவரியம் பெற்ற பிரபுக்கள் நிலையற்றவரும், தயையற்றவரும் நன்றியறியாதவருமானதால் அவர் அளிக்கும் பலன்களும் நிலையற்றனவாம். பரமேசனோ கருணைக்கடலும், கிருதஞ்ஞரும், நியதியுடையவரும் ஆவர். அவ்விதமன்றியிருந்தால் அவர் இந்த அநாதியான ஸம்ஸாரத்தில் நிந்திக்கப்படமாட்டாரோ ? ஜகத் யாத்திரைக்கு (போக்குக்கு) நிலைதானேது ? நிலையற்ற அரசர்கள் தங்கள் அரசை

யிழப்பதை நாம் பார்க்கவில்லையா? ஆதலால் இந்தக் கருணைக் கடல் நியதியுடையவரென்று சொல்லப்படுகின்றார். அவரை எல்லாவிதத்திலும் நிஷ்காம பக்தியுடன் சரணமடையுங்கள். அவர் உங்களுக்குச் சிரேயஸைக் கூட்டிவிடுவார். இஃதன்றி வேறு ஸாதனங்களைத் தேடவேண்டாம்.”

உபாசனை வெகுவிதமாகவுளது. ஆர்த்தர்களாலும் பொருள் தேடுவாராலும் உபாசனைகள் செய்யப்படுகின்றன. நிஷ்காமோபாசனையே சுலபமானது. இது தான் உண்மையான உபாசனை. உலகத்தில் பிரபுவானவன் ஆர்த்தனாலே அடையப்பட்டுச் சிலவேளை தயையுடையவனாகித் தன்னை அடுத்தவனுடைய ஆர்த்தியை நிவிர்த்தி செய்கின்றான்; சிலவேளை அடுத்தவனுடைய ஸேவையின் தாரதம்மியத்தினால் உபேக்ஷை செய்து விடுகின்றான். இவ்விதமே பொருள் யாசிப்போருக்குப் பிரபுவானவன் அளிக்கும் பலன் மிதமுடையதும் நிலையற்றதும் ஆகும். நிஷ்காமமாக யாதொரு பிரயோஜனத்தையும் உத்தேசியாமல் தன்னைச் ஸேவைசெய்யும் ஒருவனுடைய அத்தன்மையை வெகு நாட்களுக்குப் பின் அறிந்து மிதேசுவரனும் நியதியற்றவனுமான பிரபு கூட அவன் வசமாய் விடுகிறான். இந்த மிதேசுவரனான பிரபுவுக்குத் தன்னையடுத்தவனுடைய நிஷ்காமத் தன்மையைத் தெரிந்துகொள்ள வெகுநாள் பழக்கம் வேண்டியதாயிருக்கிறது. அகில இருதயவாஸனான ஸர்வேசனோ வென்றால், பக்தர்களுடைய சித்தத்தை அந்த க்ஷணத்திலேயே யறிந்து சீக்கிரத்தில் பலனை அளிக்கின்றான். ஆர்த்தர்களுக்கும் பொருள்தேடுவோர்களுக்கும் ஈசன் தன் நியதியை அனு



சரித்துக்கொண்டும் அவர்கள்(1)கர்மபரிபாகத்தை முன்னிட்டும் பலனைக் கொடுக்கின்றனன். நிஷ்காமனாகவும் அன்னிய சரணமின்றியும் தன்னை உபாசனை செய்பவனுடைய அத்தன்மையை அறிந்து ஈசன் அவனுடைய யோக க்ஷேமத்தை எல்லாவிதத்திலும் வகித்துக்கொள்ளுகிறான். இவன் விஷயத்தில் கர்மபரிபாகத்தை முன்னிடாமலும், நியதியான பிராரப்தத்தை விலக்கியும், சீக்கிரத்தில் ஸாதனத்தை அவனுக்களித்துப் பலனடையும்படி செய்கின்றான். இதுதான் மகேசத்துவமென்பதும் மகத்தான ஈசனுடைய சுதந்திரமென்பதுமாம். பிராரப்தமென்ற ஈசனது நியதியானது அவனிடம் (ஈசனிடம்) விமுகர்களாயிருப்பவர்களுக்கேயாம். அத்தியந்தம் ஈசனிடத்தில் தற்பரனான மிருகண்டு தனயனுடைய பிராரப்தத்தை ஈசன் விலக்கியது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதற்கு யுக்தி சொல்லுகிறேன் என் பிராணப் பிரியரே! கேளுங்கள்:—

“பிராரப்தத்தின் நியதியை விலக்கக் கூடாதென்பது புருஷப் பிரயத்தினமின்றி யிருப்பவருக்கே யாம். எப்படியென்றால், பிராணாயாமாதிகளால் பிராரப்தமானது ஜயிக்கப்படுகிறது. ஏனென்றால், அப்படிப்பட்ட யோகிகளைப் பிராரப்தமானது திருஷ்ட துக்கங்களில் கூட்டுகிறதில்லை. எவர்கள் பௌருஷமின்றி யிருக்கிறார்களோ அவர்கள் தான் பிராரப்தம் என்ற ஸர்ப்பத்தினால் விழுங்கப்பட்டவர்கள். பிராரப்தமென்பது கற்பனாரூபமான நியதியின் சுபாவமுடையதானதால் அவ்விதமே அனுபவிக்கத்தக்கது. நியதியென்பது சங்

(1) கர்மங்களின் பரிபாகம். அதாவது பலனை அளிக்கும் சாமர்த்தியம். இது சிலவிடத்தில் காலவிசேஷத்தாலும், சிலவிடத்தில்வேறுகர்மங்களின் ஸம்பந்தத்தாலுமுண்டாகின்றது.

கற்பரூபமான ஈசன் சக்தி. ஈசனே ஸத்தியசங்க கற்பமுடையவன். அதனால் அவன் நியதியைத் தடுக்க முடியாது. பரமேசனிடம் பக்தியுடையவன் விஷயத்தில் அந்த நியதியானது வலிமையற்றதாய் விடுகின்றது: வலிமையுடனிருக்குமானால் அதற்குத் தகுந்த பலனைக் கொடுக்கின்றது. ஆதலினால் குதர்க்கத்தை விட்டு நிஷ்காமனாக மகேசனைச் சரணமடைந்தால் அவர் உங்களை சிரேயசுடன் சேர்த்துவைப்பார். மோக்ஷமென்ற உப்பரிகைக்குச் செல்ல இதுதான் முதன்மையான ஏணி. இஃதன்றிப் பலனளிக்கக் கூடியது வேறு யாதொன்றும் கிடையாது.”

இராமா! தன் பிரியை சொன்ன இப்படிப்பட்ட வசனங்களைக்கேட்டுப் பின்னும் தன் மனைவியினிடம் மிகுந்த ஸந்தோஷத்துடன் ஹேமசூடன்கேட்கின்றான்.

“பிரியையே! நான் சரணமாக அடையத்தகுந்தவனும் சர்வகர்த்தாவும் ஸுதந்திரனும் உலகநியதியின் சக்தி பொருந்தியவனுமான மகேசன் இன்னானென்று சொல். அவனைச்சிலர் விஷ்ணுவென்றும், சிலர்சிவனென்றும், சிலர் கணேசனென்றும், சூரியனென்றும், நரசிங்கமென்றும் புத்தனென்றும், சுகதனென்றும், அருகனென்றும், வாசுதேவனென்றும், பிராணனென்றும், சோமனென்றும், பாவகனென்றும், கர்மமென்றும் பிரதானமென்றும், அணுவென்றும் பலவாறாகக் கூறுகின்றார்கள். இவ்விதம் ஜகத்காரண ரூபமானது விசித்திரமான மதங்களின் பேதத்தினால் பலவாறாக மொழியப்பட்டிருக்கின்றது. இவைகளில் இதனிடத்து ஈசுவரபுத்தியைச் செய்யலாமென்பதைச் சொல்லுவாய், உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லையென்று நான் நிர்



யானம் செய்திருக்கிறேன். ஏனென்றால், * பராவரஞானியான வியாக்கிரபாத மகாரிஷியினால் வளர்க்கப்பட்டதனால் பெண்ணாயிருந்தும் உன்னிடத்தில் இவ்வளவு ஞானம் விளங்குகின்றது. மிகவும் சிரத்தையுடனிருப்பவனும் உன்பிரியனுமான எனக்கு விளங்கச் செய்வாய்” என்றனன்.

இம்மொழிகளைக்கேட்டு ஹேமலேகை மகிழ்ச்சியுடன் கூறுகின்றாள். “நாதா! உங்களுக்கு ஈசுவரனுடைய சொரூப நிர்ணயத்தைச் சொல்கின்றேன் கேளுங்கள். ஜகத்ஜாலங்களுடைய உற்பத்திக்கும் இலயத்திற்கும் கர்த்தாவானவன் ஈசுவரன். அவன்தான் விஷ்ணு, அவனே சிவன், அவனே பிர்ம்மா, அவனே சூரியன், சோமனும் அவனே, அவன் தானே எவ்விதத்திலும் எல்லாவற்றாலும் எல்லோராலும் நிரூபிக்கப்பட்டவன். அவன் சிவனன்று, விஷ்ணுவன்று பிரம்மாவன்று, மற்றவையுமன்று. இதன் உண்மையைச் சொல்கிறேன். சமாகிதராகவிருந்து கேளுங்கள். சைவர்கள் ஜகத்கர்த்தாவை ஐந்து முகங்களும் மூன்று கண்களும் உடைய சிவனென்கிறார்கள். அவ்விதமான கர்த்தாவும் குடம் செய்பவனைப்போல அறிவுடையவனும் சரீரமுடையவனுமாவன். உலகத்தில் சேதனனான கர்த்தாவைச் சரீரமுடையவனாகக் காண்கின்றோம். அசரீரனாகவாவது அசேதனனாகவாவது ஒரு கர்த்தாவையும் நாம் உலகத்தில் பார்க்கவில்லை. இவ்விரண்டின் மத்தியின்சேதனத்துக்குத்தான் கர்த்துருத்

* பராவரம்-பரம் = சிரேஷ்டம்-அவரம் = தாழ்ந்தது-சிரேஷ்டமென்று பிறர் சொல்பவை யெல்லாம் தாழ்ந்தவை யென்று சொல்லும்படி விளங்குவது, அதாவது சிரேஷ்டங்களுக்கெல்லாம் சிரேஷ்டம்.

துவம் உளது ; ஏனென்றால், சுவப்னத்தில் ஜீவனானவன் இந்தத்தூல சரீரத்தை விட்டுச் சைதன்னியமய தேகத்தினால் தனக்கிஷ்டமானபடி சிருஷ்டிக்கிறானன்றோ? ஆகையினால் கர்த்தாவான சிதாத்மாவுக்குக் காரியம் செய்வதில் சரீரம் காரணமாக இருக்கிறது. ஜீவர்கள் அபூர்ணர்களும் சுதந்திரமில்லாதவர்களுமானபடியால் அவர்களுக்குக்கரணம் அவசியம். ஜகத்கர்த்தாவான பகவான் பூர்ண சுதந்திர முடையவராதலால் யாதொன்றையும் சற்றேனும் அபேக்ஷியாமல் உலகம் முழுதும் சிருஷ்டி செய்கின்றார். ஆதலால் அவருக்குச் சரீரங்கிடையாதென்று முக்கியமாய்த்தீர்மானம் செய்து கொள்ளவேண்டியது ; அப்படியல்லாமற்போனால் உலகத்தில் விளங்கும் கர்த்தாவைப்போல உபாதானங்களை ஆச்ரயித்தவராகிவிடுவார் ; அப்பொழுது தேச காலங்கள் முதலிய கரணங்களுடன் மகேசன் ஜகத்தைச் சிருஷ்டிப்பரே யானால், அவரும் ஜீவனே யாவர்.

ஏனென்றால், ஜகத்தின் சிருஷ்டிக்கு முன்னராகவே காரணங்களான உபாதானங்களிருக்குமானால், ஈசனுக்குப் பூர்ண ஐசுவர்யம் இல்லாமற்போம். அதுவுமன்றி அவருக்குச் சர்வகர்த்துருத்துவமும் சொல்வது கூடாது என்பதில் சந்தேகமில்லை. ஆகையினால் திருசியமான தேகமுதலியவற்றை அபேக்ஷியாமலே ஈசன் ஜகத்தைச் சிருஷ்டிக்கின்றனர். அதனால் அவருக்கு வாஸ்தவத்தில் ஸ்தூலதேகமில்லை ; தேகமில்லாத அந்தப் பரரூபத்தினிடத்து ஸ்தூலபுத்தி யுடையவர்கள் மோகத்தினால் தேகத்தைக் கற்பனைசெய்து கொள்ளுகின்றார்கள். அப்படி அவர்களால் எங்கெந்த இடத்தில் எப்படி எப்படித் தியானிக்கப்படுகின்றாரோ அவர்களுக்குப் பக்த சிந்தாமணியான ஈசன் (தகுந்தபடி



அங்கங்கு) அநேக ரூபங்களை யெடுத்துக்கொள்ளுகின்றார். ஆதலால் ஈசன் சேதனனே. அவன் சரீரம் பராசித்தே (சுத்த அறிவே). மகாசத்தையும் பரமேசுவரியும் சுதந்திரையும் திரிபுரையுமான அந்தச்சித்து(அறிவு) ஒன்றுதானே. எங்கும் எக்காலத்திலும் பின்னமாகாமலிருந்.. பின்னமானதுபோல விளங்குகின்றது. சித்து எங்கு ..ங்குகின்றது? ஜகத்தன்றோ விளங்குகிறது என்று கேட்பீர்களானால், இந்தச் சராசரங்களடங்கிய ஜகத்தானது, நிலைக்கண்ணாடியில் பிரதிபலிக்கும் நகரம் போல அறிவினிடத்தில் அறிவுக்கு அன்னியமாயிராமற்போனாலும் அதற்குப் பின்னமாயிருப்பதுபோல விளங்குகின்றது. எப்படிப் பாலர்கள் கண்ணாடியில் தோற்றும் பிரதிபிம்பத்தை மாத்திரம் பார்த்துப் பிரதிபலனத்திற்கு ஆதாரமான கண்ணாடியைக் கவனியாமலிருக்கின்றார்களோ, அப்படி மூடர்கள் ஜகத்தை அறிந்தவராக விருந்தும், அறிவை அறிகிறதில்லை.

ஈசன் ஏகரூபனாயிருத்தலால் விஷ்ணு சிவாதி ரூபங்களில் ஒன்று உத்தமமென்றும் மற்றொன்று அதமமென்றும் பேத திருஷ்டி வைத்தல்கூடாது. அந்தப் பேதங்கள் ஸ்தூல சொரூபத்தில் கற்பிதங்களாகையால் முக்கியமன்று. ஆகையினால், பிரஞ்ஞை யுடையவரே! நிஷ்களமான பரரூபத்தை உபாசனை செய்யுங்கள். நிஷ்கள ரூபத்தை உபாசனை செய்யச் சாமர்த்தியமில்லாதவன் எந்த ரூபத்தினிடத்துத் தன்மனமானது திடமான பக்தியுடன் அழுந்துகிறதோ அதனை உபாசனை செய்து உத்தமமான சிரேயசை அடைகின்றனன். அவனுக்கு இஃதன்றிக் கோடிஜன்மமெடுத்தாலும் வேறுகதியில்லை.

ஸ்ரீ திரிபுரா ரகசிய ஞானகாண்டம்
ஹேமகூட உபாக்கியானத்தில் ஈசுவர சொரூப நிரூபணம்
என்னும் ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்-8

“இவ்விதம் தன் பிரியையின் வ[illegible]களைக் கேட்டு அவற்றினின்றும் துரியமும் சின்மயமுமான மகேசியின் தத்துவத்தைப் பரோக்ஷமாகக் கிரகித்துக்கொண்டு, மனக்கலக்கங்களை அகற்றி ஈசுவரானுக்கிரகத்தினால் குருவினிடமிருந்து மந்திரங்களினாலே மகேசுவரியான திரிபுரையின் சகுணரூபத்தைத் தெரிந்துகொண்டு அதனிடத்தில் திடபக்தியுடன் உபாசனை செய்ய ஆரம்பித்தனன். ஹேமசூடன் பரையை இவ்வாறு சிலமாதங்கள் உபாசனை செய்து வருங்காலத்தில், பரமேசுவரியான திரிபுரை அவன் இருதயத்தில் பிரசாதித்தனள். எவ்விதம் பிரசாதித்தனளென்றால், விஷயங்களினின்றும் அவன் சித்தமானது விமுகமாகி விசாரத்தில் பிரீதியுள்ளதாயிற்று. பரையின் அநுக்கிரகமன்றி விஷயங்களில் விரக்தி முன்னிட்டு விசாரமுண்டாவது உலகத்தில் அரிதே. ஏனென்றால் சித்தம் விசாரத்தில் விருப்புள்ளதாக முடிவது மோக்ஷத்திற்கு முக்கியமான காரணம். இராமா! எந்நாள் வரையில் மனதினிடம் விசாரமானது ஜனிக்கவில்லையோ அந்நாள் வரையில் ஆயிரம் யுக்திகள் செய்தாலும் ஒருபொழுதும் சிரேயசு அகப்படாது.”

ஹேமசூடன் இவ்விதம் விசாரசீலனாக இருக்கும்பொழுது ஒருதினம் தன் பிரியையினிடத்திற்கு மிக



விசாரம் பொருந்திய மனதுடையவனாகிச் சென்றனன். தானிருக்கும் கிரகத்திற்கு வருகிற தன் பர்த்தாவைத் தூரத்திலிருந்து ஹேமலேகை பார்த்து எழுந்திருந்து, அவனை அழைத்துத் தன் ஆசனத்தில் உட்காரவைத்துப் பாதப்பிரக்ஷாளனம் முதலியவைகளால் தகுந்தபடி உபசாரனை செய்து, அமிருத தாரை போலச் சுந்தரமான வசனங்களை மொழிந்தனள்:—“மிகவும் பிரியமுடையவரே (பிரியதமா)! வெகுநாளாகி இன்றைக்குத்தான் நான் உங்களைப் பார்த்தேன். இதுவரையில் உங்களுக்குத் தேகத்தில் ஏதாவது உபாதிகளிருந்தனவோ சொல்லுங்கள். ஏனென்றால் இந்நாள் வரையிலும் என்னை ஸ்மரிக்காமலிருந்து விட்டீர்கள். இதற்கு முன் என்னைப் பார்க்காமலும் என்னுடன் பேசாமலும் ஒருவேளையாகிலும் ஒரு தினமுமிருந்ததில்லையே? என்னுடன் பேசாமலும் என்னைப் பாராமலும் இருப்பீர்களென்று நான் சொப்பனத்திலுங் கூட நினைக்கவில்லை. இவ்விதம் நீங்கள் இருப்பதற்கு யாது காரணம்? இராத்திரி வேளையை எப்படிக்கழித்து வந்தீர்கள்? முன் நானில்லாமற் போனால் உங்களுக்கு ஒரு க்ஷணமானது ஒரு யுகமாகத் தோற்றிச் சகிக்க முடியாமலிருக்குமே” என்றாள்.

அவள் இவ்விதம் மொழிந்து தன் கணவனைத் தழுவிக்கொண்டு வ்யசனப் படுகிறவள் போலாகினள். அவனோவென்றால் தன் பிரியையினால் தழுவிக்கொள்ளப்பட்டவனானாலும் சற்றேனும் விகாரத்தை அடையாமல் சொல்லுகின்றான். “பிரியையே! என்னை இவ்விதம் மோகிக்கும்படிசெய்தது தக்கதன்று; உனக்குச் சோகத்திற்குக் காரணமில்லையென்று நான் திடமாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்; ஏனென்றால், பராவ

உணர்ச்சியுள்ள உன்னை மோகமானது எவ்விதம் அடுக்கும்? முன்போலக் கிரீடைக்காக வந்தவனல்லன். உன்னிடம் சில கேட்பதற்காக நான் இவ்விடத்திற்கு வந்தேன்; அதனைச் சொல்லுகிறேன் கேள். முன்னொரு நாள் தன்னுடைய விருத்தாந்தமென்று நீ மொழிந்தவைகளை எனக்கு ஸ்பஷ்டமாகச் சொல்வாய். என் தாயென்று சொன்னாயே அவள் யார்? அந்தத் தோழியெவள்? அவள் பதி யார்? அவர்களுடைய புத்திரர்கள் எவர்? இப்படிப்பட்டவர்கள் எனக்கு எங்கேயிருக்கின்றனர்? நீ சொன்னவைகளை நான் நன்றாக அறியவில்லை; ஆனால் நீ பொய் சொன்னதாகவும் எண்ணவில்லை. ஏதோ பரிபாஷையாகச் சொல்லியதென்று எனக்குப் புலப்படுகின்றது. அவைகளை விவரமாய் நான் நன்றாக அறியும்படி ஸ்பஷ்டமாக எனக்குச் சொல்வாய். உன்னைச் சரணமாக அடைந்திருக்கும் என்னுடைய சந்தேகங்களை விலக்குவது உன் கடமையே" என்றனன்.

இம்மொழிகளைக் கேட்டு ஹேமலேகை தன்கணவன் பரையின் அநுக்கிரகத்தினால் நிர்மல சித்தனாயிருக்கின்றானென்றும், தைரியத்துடன் விஷயங்களினின்றும் விமுகனாயிருப்பதில் ஸந்தேகமில்லையென்றும், மகேசியின் வல்லமையினால் அவன் முன் செய்த புண்ணியம் பலிதமாயிருக்கிறதென்றும், அவனுக்குப் போதம் செய்வதற்குத் தகுந்தகாலம் வந்திருப்பதால் போதனை பண்ணவேண்டுமென்றும் தன் மனதில் தீர்மானித்துப் பிரஸன்ன முகத்துடனும், நோக்கத்துடனும் சொல்லுகின்றாள்:—ஏ நாதா! ஈசன்கருணையினால் நீங்கள் மகாபாக்கியத்தை யடைந்திருக்கிறீர்கள். அவருடைய கருணையின்றி ஒரு காலும் விஷ-



யங்களில் விரக்தியுண்டாகாது. ஈசனுடைய அநுக்கிரகம் உண்டாயிருப்பதை அறிந்துகொள்ள முதன்மையாக விஷயங்களில் விரக்தியுண்டாவதுடன் விசாரபரமாகமனம் திரும்புவதே இலக்ஷணமாகும். எந்நாளுமழியாத என்னுடைய விருத்தாந்தத்தைச் சொல்லுகின்றேன்; பராசித்தான சுத்த அறிவே என் தாய், புத்தியே என் தோழி; அவித்தையே அசதியாகச்சொல்லப்பட்டது. அவளுடன் தான் புத்திக்குச் சேர்க்கையேற்பட்டது. இரஜ்ஜுவினிடத்தில் ஸர்ப்பத்தைத் தோற்றுவித்து மகாபயத்தை உண்டுபண்ணுகிற அவித்தையினுடைய விசித்திரமான ஸாமர்த்யம் உலகத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தவிஷயமே.

மகாமோகனே அவித்தையின் புதல்வன். அவன் புத்திரன் மனம். இவன் பத்தினி கற்பனை. இவர்களினின்று முதித்த ஐவர்கள் ஞானேந்திரியங்கள் ஐந்துமாகும். அவர்களிருப்பிடம் இந்திரிய கோளகங்கள். விஷயங்களைத் திருடினது மனதில் ஏற்படும் ஸம்ஸ்காரங்கள் (வாசனைகள்). திருடிய விஷயங்களை அனுபவிப்பது சொப்பன போகமாம். ஆசையென்பதே கற்பனையின் சக்களத்தி. குரோதமும் உலோபமுமே இவளுடைய இருபுத்திரர்கள். நான் சொன்ன புரமானது இந்தச் சரீரம். நான் மொழிந்த மகாமந்திரம் சொரூபத்தில் உண்டாகும் உணர்வே. பிராணன் தான் மனதின் பிரியதோழனான பிரசாரனாகச்சொல்லப்பட்டது. நரகங்களே காடுகள் முதலியவையாகக் கூறப்பட்டன. என்னுடன் புத்தியானது கூடுவதுதான் சமாதி. என் தாயினுலகம் சேர்வதுதான் மோக்ஷமென்று சொல்லப்பட்டது. இதனைத்தான் என்னுடைய விருத்தாந்தமாகச் சொன்னேன். இதை யுக்தியினால் நன்றாக

அறிந்து நீங்களும் அவ்விதம் அனுபவிப்பீர்களானால் உங்களுக்கும் பரமமான சிரேயசு உண்டாகும்.

ஸ்ரீ திரிபுரா ரகசிய ஞான காண்டம்
ஹேமசூட உபாக்கியானத்தில் ஸம்ஸாராக்கியாயிகை
என்னும் எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்-9

தன் பிரியையின் இம்மொழிகளைக்கேட்டு ஹேமசூடன் மிகவும் விஸ்மய மடைந்தவனாகிச் சந்தோஷ மயிர்க்கூச்சுடனும் தொண்டை விம்மிக்கொண்டும் ஹேமலேகையினிடம் பின்னும் கேட்கத் தொடங்கினான். "பிரியையே! நீ தன்யையாயிருக்கிறாய்: பண்டிதையான உன்னுடைய ஞானத்தின் மகிமை ஆச்சர்யமாக இருக்கின்றது. ஆக்கியானமாக நீ மொழிந்தவைகள் யாவற்றையும் நான் எவ்விதம் வர்ணிக்கட்டும். இவ்விதமாகத் தன் விருத்தாந்தம் இருந்ததை நான் ஒருகாலும் அறியவில்லையே. இப்பொழுது உன் மொழிகளிலிருந்தும் அதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொண்டு என் உள்ளத்தில் அனுபவிக்கின்றேன்; உலக வ்யவகாரங்கள் ஆச்சரியமாயிருக்கின்றனவே"—

"பராசித்தென்ற" மாதாவானவள் எவள்? அவளுக்கு ஏன் பிறப்பில்லை; நாம் எப்படிப்பட்டவர்? நம்முடைய சொரூபமென்ன? நான் யார்? இவைகளை எனக்குச் சொல்லவேண்டும்"

ஹே, இராமா! ஹேமலேகை இவ்விதம் கேட்கப்பட்டதின் மேல் தன் பிரியனிடத்தில் சொல்லுகின்றனள். ஏ நாதா! நான் இங்கு (1) கஷ்டமான அர்த்தத்துடன் சொல்வதை ஆதரவுடன் கேளுங்கள். ஆத்ம

---

(1.) கேள்விக்குப் பதில் சொல்வது கஷ்டமானது. ஆயினும் சொல்கிறேன் என்றனள்.

சொரூபத்தை யாதும் (b) மலினமின்றிய புத்தியினால் நீங்களே விசாரித்துப் பாருங்கள். அது திருசியங்களாகாது; மொழியக் கூடியது மன்று; ஆகையினால் அதனை நான் எவ்விதம் மொழிவேன். தன் ஆத்மசொரூபத்தை அறிவீர்களானால் மாதாவை அறிந்தவராவீர்கள். யாது காரணத்தால் ஆத்மா, திருசியமும் மொழியக்கூடியது மன்றோ, அதனால் ஆத்மாவி னிடத்தில் உபதேசமென்பது கிடையாது. அதுபற்றி உபதேசிப்பவனுமில்லை; தன் சொரூபத்தை மலினமின்றிய (c) புத்தியினிடமாகத் தானாகவே யிருந்து பாருங்கள்.

சதாசிவதத்துவம் முதற்கொண்டு கிருமிகள் வரையிலும் எல்லாவற்றினிடத்திலும் ஆத்ம சொரூபமாகி விளங்காநின்ற அது பரிச்சின்ன திருசியத் தோற்றங்களால் மறைபட்டிருக்கின்றது. திருசியங்களின் வடிவங்கொண்ட புத்தியினால் மறைபட்டு, மேகங்களால் மறைபட்ட சூரியன்போல் ஆத்மா ஸ்பஷ்டமாக விளங்கவில்லை. புத்தியினிடம் அதன் திருசிய வடிவங்கள் அகன்றுவிட்டால் மேகமின்றிய ஆகாயத்தில் தபனன் விளங்குவதுபோல ஆத்மா விளங்குகின்றது. அப்படிப் புத்தியின்கண் ஆத்மா விளங்குவதால் அதற்குப் பரிச்சேதம் ஏற்படுமோவென்ற சங்கை வந்தால் அஃதில்லை. ஏனென்றால் எங்கும், எல்லாவற்றிலும், எப்

(b) பகிர்முக திருஷ்டியே மலினம்; ஆகையால் பாகிய விஷயங்கள் அனாத்மாவென்று தீர்மானம் செய்து அந்தர்முகமாகப் பாருங்கள் என்றது.

(c) 1. விஷயங்களை அகற்றிச் சுத்த சித்ரூபமாக இருப்பதுகொண்டு அல்லது அனாத்மவஸ்துக்களான திருசியங்களில் நின்று விலக்ஷணமாகிச் சாக்ஷிமாத்திரமாகவிருந்து கொண்டு என்றும் அர்த்தம். 2. கரணவியாபாரமின்றிச் சுத்த புத்தியினால்.



பொழுதும் அது விளங்குகின்றது. கடம் முதலியவைகளும் அதன் பிரகாசத்தினாலேதான் விளங்குகின்றன. சூரியனுடைய வெளிச்சம் எங்குமிருந்தாலும் சுவரினிடம் ஸ்பஷ்டமாக இருப்பதுபோலச் சுத்தபுத்தியின்கண் ஆத்மா ஸ்பஷ்டமாகின்றது. ஆயினும், ஆத்மாவானது புத்தியின் பிரமாண வியாபாரத்திற்கு விஷயமன்று. அதனாலேதான் ஆத்மா அதிருசியமெனப்பட்டது. அதனிடம் பிரமாண வியாபாரமில்லாததால் அதனை எப்படி, எங்கேதான், எப்பொழுது, எவனாலே கொஞ்சமேனும் நிரூபணஞ் செய்தல்கூடும்? ஆத்மாவைக் காண்பித்துக்கொடு என்றது என்னுடைய நேத்திரங்களை எனக்குக் காண்பித்துக்கொடு என்றுகேட்டதற்கு நிகராகும். இதற்கு எப்படி ஆசாரியன் தேவையில்லையோ அப்படியேதான் இவ்விஷயத்திலும். மகாத்மாவான (d) ஆசாரியன் எவ்வளவு புத்திமானாக இருந்தாலும் நேத்திரங்களை எவ்விதம் காண்பித்துக்கொடுப்பன்? ஆகலினால் ஆத்மசொரூபத்தின் சமீபத்தில் சிஷ்யனைக்கொண்டு செல்வதுதான் குருவின் (e) செய்கை. இதற்கான வழியைக் குருவானவர் காண்பித்துக் கொடுக்கின்றார்.

அவ்வழியே நான் சொல்லுகிறேன்; மனோதிடத்துடன் கேளுங்கள். ஆத்ம விஷயத்தில் எதுவரையிலும் என்னுடையது என்று காண்கிறீர்களோ அப்படிப்பட்ட என்னுடையது என்பவைகளில் நின்றும் வேறுபட்டு, யாதொன்று என்னுடையது என்று விளங்கா

பிரமாணவியாபாரம் = கரண வியாபாரம்.

(d.) திருசியமன்றியதை எவ்விதம் பார்க்கிறது என்றல்.

(e.) பராக் திருஷ்டியுடைய சிஷ்யனை வழிகாண்பித்துப் பிரத்தியக் திருஷ்டி யுடையவனாக்குகின்றார் குரு.

மல் நான் என்று ஒன்று இருக்கின்றதோ அது தான் நிஜமான (தன்) ரூபமாம். இதனை யாருமில்லாத ஓர் ஏகாந்தமான இடத்திற்குச் சென்று விசாரணை செய்து பாருங்கள். எவை என்னுடையவை என்று விளங்குகின்றனவோ அவைகளை ஆத்மாவல்லவென்று தள்ளிவிட்டு எதனிடம் என்னுடையது என்று தோன்றவில்லையோ அதனைத் தன் ஆத்மாவென்று குறிப்பிடுங்கள். உங்களுக்கு என்னுடையது என்பதன் விஷயமாக (a) நான் இருப்பதால் என்னிடத்து உங்களுக்கு ஆத்ம புத்தியில்லை. சம்பந்தத்தினால் மாத்திரம் நான் உங்களுடையவளாக இருக்கின்றேனேயன்றி உங்கள் சொரூபத்தில் அடங்கினவளல்ல. "என்னுடையது" என்பதற்கு விஷயமான யாவற்றையும் தள்ளிவிட்டு யாதொன்றைத் தள்ளமுடியவில்லையோ அதனை ஆத்மாவென்று குறிப்பிட்டறிந்து பரமான சிரேயசை அடையுங்கள்" என்றனள்.

தன் பிரியையானவள் இவ்வாறு சொன்ன பொழுது ஹேமசூடன் சீக்கிரத்தில் எழுந்திருந்து குதிரையின் மீதேறி நகரத்தை விட்டு வெளியிற் சென்றனன். நந்தன வனத்திற்கு நிகரான ஓர் உத்தியானத்திற்குட் சென்று அதிலிருக்கும் உயர்ந்த மேடையுள்ள ஓர் உப்பரிகைக்குள் நுழைந்தான். தன் பரிசாரகர்களையெல்லாம் போகும்படி சொல்லி த்வார பாலர்களிடத்தில், தான் ஏகாந்தமாக விசாரணை செய்யப் போகும் வேளையில் யாருமே உள்ளேவருவது கூடாது என்று ஆஞ்ஞாபித்தனன். இராஜனுடைய மந்திரிகளானாலும் பெரியோரானாலும் இராஜாவேயானாலும் உங்களுக்கு நான் மறு உத்தரவு கொடுக்கிற வரையில்

(a) ஹேமலேகை



ஒருவரையும் உள்ளே விடுவது கூடாது என்று துவார பாலர்களுக்கு உத்தரவு கொடுத்தனன். இவ்விதம் உத்தரவு கொடுத்து ஹேமசூடன் அந்த உப்பரிகையில் சதா காற்று வீசிக்கொண்டிருப்பதும் எல்லாச் சுற்றுப் பிரதேசங்களையும் பார்வையிடக் கூடியதுமான ஒன்பதாவது மேடைக்குச் சென்று மிருதுவான ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து, அன்னிய விஷயங்களை நீக்கி மனதைத் திடமாகச் சமாதானம் செய்துகொண்டு விசாரணை செய்ய ஆரம்பித்தனன்:

“நிச்சயமாக இவ்வுலகில் ஜனங்களெல்லாம் இவ்விதம் மோகமடைந்திருப்பற்கென்ன காரணம்? ஒருவராவது தன் ஆத்மா இன்னதென்று சற்றேனும் அறியார். ஆனால் எல்லோரும் தங்கள் சுகத்தின்பொருட்டுப் பற்பலவாக உழைத்துவருகின்றனர். சிலர் வேதம் வேதாங்கங்கள் முதலிய சாஸ்திரங்களை நித்தமும் படிக்கின்றனர். தங்கள் பொருட்டாகவே இவைகளைச் செய்கின்றனர். அப்படிப்பட்ட “தான்” இன்னாரென்று இவர்களில் ஒருவராவது அறிகின்றதில்லையே; இந்தப் (b) பிரமத்திற்குக் காரணம் யாது? அஹோ ஆச்சரியம்! ஆத்மாவைத் தெரிந்துகொள்ளாமல் (தான் இன்னானென்றுதெரிந்துகொள்ளாமல்)செய்யும் காரியங்களெல்லாம் சொப்பன காரியங்கள்போல வியர்த்தமன்றோ. ஆகையினால் அதனை விசாரித்துப் பார்க்கின்றேன்.”

மனை, தானியம், நாடு, தனம், பெண்டிர், கன்றுகள் என்னும் இவைகளிடத்தில் “நான்” என்று தோன்றாமையால் இவைகள் சற்றேனும் என்னுடைய சொரூபமாகமாட்டா. இவைகள் யாவும் எனக்காக ஏற்பட்டவிஷயங்களான படியால், நான் இவைகளில் நின்

(b) பிரமம் = பிராந்தி.

றும் வேறானவன். அஃதாவது நான் எவ்விதத்திலும் இந்தத்தேகமே; நிச்சயமாக நான் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவன்; கௌரவமான அங்கங்கள் உடையவன் என்பதில் சந்தேகமில்லை. தேகத்தையன்றோ எல்லா ஜனங்களும் நான் என்று பற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் தேகத்தைத் தானென்று இராஜகுமாரன் தீர்மானம் செய்து கொண்டு அவ்வடிவத்தைச் சிந்தனை செய்தனன்.

பிறகு தேகத்தில் ஆத்மபுத்தியை நிஷேதிக்க முயன்றான். அஹோ! "என்னுடையது" என்பதற்கு ஆதாரமானதும், உதிரம், அஸ்தி முதலியவற்றின் பொக்கிஷமும், க்ஷணத்திற்கு க்ஷணம் மாறிக்கொண்டிருப்பதுமான இந்தத்தேகம் எவ்விதம் என் சொரூபமாகும்? தேகத்திலிருந்து ஒரு அங்கம் வெட்டுண்டு விழுந்து விட்டால், அதனிடம் நான் என்று வருகிற இல்லை என்பது மாத்திரமன்று; அது கட்டை ஓடுகளுக்கு நிகராகி விடுகின்றது. சொப்பன முதலிய வேளைகளில் தேகம் வேறாக இருப்பது பார்க்கப்படுகின்றது, நான் தேகமல்லன்; இதனினும் வேறானவன். பிராணனும் இவ்விதமே "என்னுடையது" என்பதை ஆச்ரயித்தது. மனதும் புத்தியும் "என்னுடையது" என்று சொல்லப்படுகிற படியினால் அவைகளும் நான் அன்று; ஆதலினால் தேகம் முதல் புத்திவரை யுள்ளவைகளில் நின்றும் வேறானவன் நான் என்பதில் சந்தேகமில்லை. நான் (a) "இல்லாமலிருக்கிறேன்" என்று ஒரு வேளை

(a) தேகாதிகளில் "என்னுடையது" என்று வருகிறபடியால் தான் அல்லாததாலும் தானாகவேறு ஒன்று தோற்றாததாலும், சுழுத்தியில் சூனியம் அனுபவிக்கப்படுகிற படியாலும், சூனியம் ஆத்மா வென்று வருமேயானால், அதற்குச் சமாதா



யாவது விளங்காததால் எப்பொழுதும் நான் விளங்கிக் கொண்டிருக்கிறேன் என்பதில் சமுசயமில்லை. இவ்விதம் சாமானியமாக விளங்கா நின்ற நான் எவ்விதத்தில் "இது தான் நான்" என்று ஸ்பஷ்டமாக விளங்குவேன் என்பதும், அப்படி ஸ்பஷ்டமாக விளங்காதது இன்ன காரணத்தினால் என்பதும் எனக்குத் தெரியவில்லை. தரையின் மீது கடம் முதலியவைகள் நேத்திர முதலியவைகளால் விளங்குகின்றன; மற்றொன்றினாலன்று. பிராணன் தொக்கிந்திரியத்தால் விளங்குகின்றது. இந்த மனது ஞானத்தினால் என்றும் ஊகிக்கக் கூடும். புத்தியும் இவ்விதமே யென்னலாகும். "நான் விளங்குவது என்ன காரணத்தினால் தெரியாமலிருக்கிறது? இந்த அநாத்ம (b) விஷயங்கள் விளங்குவதனால், எனக்கு ஆத்மா விளங்காதிருக்குமானால், அவைகளை நான் நினையாமலிருந்து விடுகிறேன். அப்பொழுதாவது "நான்" நன்றாக விளங்குவேன்— என்று இவ்விதம் தீர்மானஞ்செய்து கொண்டு தன் மனதின் போக்கை நிறுத்தினதின் மேல் ஒரு க்ஷணத்திற்குள்ளே அடர்ந்த இருளானது அவனுக்குக் காணப்பட்டது. "இது தான் என் ஆத்மசொரூபம்" என்று அவன் மனதில் நிச்சயித்துக் கொண்டு மிகவும் ஸந்தோஷமடைந்து பின்னும் சிந்தனை செய்தனன். "நிச்சயமாக இன்னுமொருதடவை பார்க்

னம், சுழுத்தியில் அனுபவிக்கிறவன் இல்லாவிடில் எழுந்த பிறகு "நான் ஒன்றும் அறியவில்லை" என்ற ஞாபக முண்டாகாது.

(b) பிரதிபிம்பங்கள் தோற்றுகிறவேளையில் சுத்தமான கண்ணாடி தோற்றாதிருப்பதுபோல் ஆத்மா தோற்றாமலிருக்கிறது என்று பாவனை செய்கிறான்.

கிறேன்" என்று சலித்துக்கொண்டிருக்கும் தன் மனதைத் திடமாக நிரோதம் செய்தவேளையில் க்ஷணப்பொழுதிற்கு, ஆதியந்த மற்றதும் ஒளிவீசாநின்றதுமான ஒரு நிபிடமான தேஜஸைக் கண்டான். அதற்குப் பிறகு இராஜகுமாரன் ஞாபகமடைந்து விஸ்மயத்துடன் இஃதென்ன இவ்விதமிருக்கிறது என்று சிந்தனையுடையவனாகினன். அஹோ! நான் பலவாறாகக் காண்கின்றேனே! ஆத்மாவானது யாது? இவ்விருத்தங்களான தோற்றங்கள் ஆத்மாவாகுமா? "பின்னும் பார்க்கிறேன்" என்று அவன் தன் மனதை நிரோதம் செய்ததின் மேல் அவன் சித்தமானது நித்திரையினால் லீனமாகி அவ்விதம் நெடுநேர மிருந்துவிட்டது. அந்நித்திரையில் அனேக விசித்திரமான காட்சிகளைச் சொப்பனத்திற் கண்டான். பிறகு உணர்ந்தவனாகிப் பலமாகச் சிந்தனை செய்ய ஆரம்பித்தனன். "நான் என்ன உறக்கம் கொண்டவனாகிக் கனவுகளைக் கண்டேன். என்னால் இதற்குமுன் காணப்பட்ட இருளும் ஒளியுங்கூடச் சொப்பனத்தின் தன்மையுள்ளனவாகும். மனதின் உல்லாஸமன்றோ சொப்பனம். அப்படிப்பட்ட மனதின் உல்லாஸத்தை நான் எவ்விதம் நீக்குவேன்? மறுபடியும் என்மனதை நிக்கிரகம்செய்து பார்க்கிறேன்" என்று தீர்மானஞ் செய்துகொண்டு திடமாகத் தன் சித்தத்தைப் பல்லைக்கடித்துக்கொண்டு (ஹடமாக) நிரோதம் செய்தான். அதன்மேல் அவன் மனம் சலியாதிருந்து ஆநந்த ஸமுத்திரத்தில் மூழ்கினவன்போலானான்.

அதன் பிறகு சித்தம் சலித்ததனால் விழித்துக்கொண்டு "இதுவும் என்ன சொப்பனமா அல்லது



என் சித்தப் பிராந்தியா? ஆச்சரியம்! இது உண்மையாக இருக்குமானால் எண்ணக்கூடாததாக இருக்கின்றது. நான் விஷயங்களொன்றையும் அனுபவியாமலிருக்கும் பொழுது அடைந்த சுகம் எவ்விதமுண்டாயிற்று? அஹோ! இதன் கண்ணுண்டான சுகத்திற்குச்சற்றேனும் ஒன்றாவது நிகராகாதே! நான் சுழுத்திபோல் ஒன்றும் தெரியாதவனாக இருக்கும்பொழுது இந்தச் சுகம் எப்படி ஏற்பட்டது. இந்தச் சுகம் உண்டானதற்குக் காரணம் இன்னதென்று எனக்குப் புலப்படவில்லை. காரணமின்றி உண்டாகுமா? ஆத்மாவை அடைவதற்காக நான் முயன்றவனாக விருந்தும் அதனை நான் இன்னதென்று அறியவில்லை. ஆத்மாவானது பலவாறாக வன்றோ தோற்றுகின்றது. அஃதெப்படி? பிரகாசமாவது, இருளாவது, அல்லது சுகமாவது, அல்லது இவைகளின் தொடர்பாவது எவ்விதம் ஆத்மாவாகக்கூடும்? இதனுடைய முடிவு எனக்கு விளங்கவில்லையாதலால் விதுஷியான என் பிரியையைக் கேட்கிறேன்" என்று அவன் நிச்சயம் செய்துகொண்டு த்வாரபாலனை அழைத்துத் தன்னிடம் ஹேமலேகையை அழைத்துக்கொண்டு வரும்படி ஆஞ்ஞாபித்தனன். த்வாரபாலனுடைய மொழிகளினால் ஒரு முகூர்த்தத்திற்குள் அங்கு வந்த ஹேமலேகை மேருகிரியில் இந்துவின் ஒளிபோல அந்த உயர்ந்த மேடைமீது ஏறிச்சென்றனள். அவ்விடத்தில் தன் பிரியனை இராஜகுமாரன் நிச்சலமாகவும் விசாரமின்றி இந்திரியங்கள் யாவற்றையும் அடக்கினவனாகவும் தன்னுள்ளத்தில் சாந்தமடைந்தவனாகவு மிருப்பதைக் கண்டனள். உடனே அவனருகே சென்று அவனிருக்கும் ஆசனத்திலே உட்கார்ந்தனள். அரை நிமிஷத்திற்குள் அவன்

கண்களை விழித்துக்கொண்டு தன் பக்கத்தில் ஒரே ஆசனத்தில் வீற்றிருக்கும் அவளைப் பார்த்தபொழுது, சீக்கிரத்தில் தன் பிரியளை அன்புடன் தழுவிக்கொண்டு பின் அமிர்தம் போன்ற அழகு பொருந்திய வசனங்களை ஹேமலேகை மொழிந்தனள். "நாதா! எதற்காக என்னை வரவழைத்தீர்கள்? உடம்பிற்காவது மனதிற்காவது யாதேனும் உபாதியிருக்கின்றதோ? எதற்காக நான் அழைக்கப்பட்டேன்? எதற்காக நான் இங்கு வந்தேன்?" என்று இவ்விதம் தன் பிரியை கேட்டபொழுது அவளிடம் சொல்லுகின்றான். "பிரியையே! உன் மொழிகளைக் கொண்டு நான் ஏகாந்தமான இவ்விடத்திற்கு வந்து ஆத்மாவின் ரூபலக்ஷண காரணங்களை மிகுந்த ஆவலுடன் விசாரணை செய்தேன். நான் மிகுந்த ஆவலுடையவனாக இருந்தும் அநேக விதம் வெவ்வேறாகத் தோன்றிற்று. இதற்குக் காரணம் யாது? ஆத்மாவானது எப்பொழுதும் அடையப்பட் டிருக்கிறபடியினாலும் விளங்குகிறபடியினாலும் அது செம்மையாக விளங்காதது, மற்ற விஷயங்களின் தோற்றத்தினாலென்று நான் தீர்மானித்து அன்னியத் தோற்றங்களை நிரோதம் செய்து நிச்சலமாக இருக்கும்பொழுது ஒரு கால் இருளையும் மற்றொரு வேளை பிரகாசத்தையும் பின்னொரு சமயத்தில் மகத்தான சுகத்தையும் கண்டேன். இஃதெப்படி? பிரியையே! சொல்லு; இதுதானோ ஆத்மாவினது ரூபம், அல்லது வேறு ஏதாகிலும் உண்டோ? இதனை நன்றாக விவரித்து நான் தெரிந்து கொள்ளும் விதமாக எனக்குச் சொல்லவேண்டும்" என்றனன். இவ்விதம் கேட்ட பொழுது பராவர ஞானியான ஹேமலேகை சொன்னதாவது:—"என் பிரியரே! நான் சொல்லு



கிறேன்; யாவற்றையும் சலியாத மனதுடனிருந்து கேளுங்கள். பாகிய விஷயங்களின் தோற்றத்தை (1) நிரோதம் செய்ய நீங்கள் முயன்றதானது சுபமானது தான். அறிஞர்கள் யாவருக்குமே அது முக்கியமாகச் சம்மதமானது. அஃதின்றி ஒருவனாலும் ஒரு பொழுதும் ஓரிடத்திலும் ஆத்மாவானது அடையப்பட மாட்டாது. ஆத்ம விஞ்ஞான மடைவதில் அடையப்பட்டது என்ற விதமாக அது (நிரோதம்) (2) காரணமாக மாட்டாது. அடையப் படுகிறதானால் அது ஆத்மாவன்று. தானாகவே யிருக்குமொன்றை அடைவது எவ்விதம்? ஆத்மா ஒரு விதத்திலும் அடையக் கூடாததானால் அதனை அடையவும் மார்க்கமில்லை. தானாகவே யிருக்கிறபடியினாலே தான் அது அடையக் கூடாததாக இருந்தும் அடையப்படுகிறது. அது காரணமாகத் தான் அடைதலுமில்லை.

இந்த நிரோதமானது ஆத்மாவை அடைகிறதற்கன்று. இதற்குத் திருஷ்டாந்தம், உலகத்தில் இருளால் மூடப்பட்ட விஷயங்கள், தீபங்களால் அவ்விருளானது நிரோதம் செய்யப்படுமானால் அடையப்பட்டனவோ

(1) ஹேமசூடன் நிரோதம் செய்தும் ஆத்மாவைத் தெரிந்துகொள்ளாததற்குக் காரணம் சொல்லப்படுகிறது. முன் பழக்கமில்லாததால் அதனைக் கண்டாலும் தெரிந்து கொள்ள வில்லை.

(2) நிரோதம் விகற்பமற்றவேளை. இருளின் தோற்றம் விகற்பம். தேகத்திற்கு அன்னியமானதும் ஆத்ம சொரூபமானதுமாகிய ஞானம் விகற்ப வேளையில் திருசியங்களுடன் ஒன்றுபட்டு விளங்குகின்றது. நிரோத காலத்தில் திருசியங்கள் அகன்று விடுகிறபடியால் ஞானம் தனியாக நிலவுகிறது. சொப்பிரகாசமாக விளங்குகிறபடியினால் மிக்கிருக்கும் இந்நிலை அழியக் கூடியதன்று.

67722

லத் தோன்றுதல் போலவும், ஒருவன் பிராந்தியினால் தன் பொன்னை மறந்து விட்டுப் பின் மற்ற எண்ணங்களை அகற்றி ஒரே கவனமாக இருந்து ஞாபகப்படுத்திக் கொண்டு நஷ்டமானது கை சேர்ந்தது போலத் தன் பொன்னை அடைகின்றான். பொன்னை அடைவதற்கு நிரோதமானது எவ்விதம் ஏதுவாக வில்லையோ அதுபோலவே பாகிய விஷயங்களை நிரோதம் செய்வது ஆத்மாவை அடைவதற்குக் காரணமாகாது.” பிரகாசம் இன்னதென்று தெரியாத ஒருவன் இரவில் இராஜ சபைக்குச்சென்று சபையோர்களையும் தீபங்களையும் பார்த்தவனானும் பிரகாசம் இன்னதென்று அறியான். அதுபோல முன்பழக்க மில்லாததால் ஆத்மா இன்னதென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லை. பிரியரே! கேளுங்கள்; நிரோதத்தின் முடிவில் இருளானது பார்க்கப்பட்டதே. அவ்விருளின் தோற்றத்திற்கு முன்னதாக விகற்பமின்றி நீங்கள் மட்டுமாக மிஞ்சியிருந்த யாதொரு நிலையுண்டோ, பரமாநந்தத்தைக் கொடுக்கக் கூடியதான அந்நிலையைச் சதாபாவனை செய்யுங்கள். இதன்கண், எல்லோரும் பகிர்முக திருஷ்டி யுடையவராதலால் மகத்தான மூடத்தன்மையுடையவராகிக் கண்டேன் கண்டேன் என்று தேடித் தேடிப்பார்த்து இளைப்புற்றும் இந்தப்பாவனையை அடையாம லிருக்கின்றனர். உலகத்தில் * சாஸ்திரங்கள் கற்றவர்களும் (௧) புத்திமான்களான தார்க்கிகர்களும் இந்

* சாஸ்திரம் கற்றவர்கள் = சிரவணஞ் செய்தவர்கள்.

(௧) புத்திமான்களான தார்க்கிகர்கள் = உடனுக்குடன் வெவ்வேறு சித்தாந்தங்களைக் கைப்பற்றுகிறவர்கள். அதாவது ஒரு சமயத்தில் மூன்று சத்தை வாதத்தையும், மற்றொரு வேளையில் இரண்டு சத்தை வாதத்தையும் பின்னொரு சந்தர்ப்



தப் பாவனையை அறியாமல் இரவும்பகலும் வியசனப் படுகிறார்கள். கேள்வியுற்ற அர்த்தத்தில் மனனம் செய்வதனால் மட்டிலும் இந்நிலையானது அகப்படாது. பண்டிதனொருவன் எதுவரையில் சிரவணமாவது மனனமாவது செய்கிறானோ அது வரையில் சாதாரணமாக அது பிடிபடாததாகையால் அதனை அடைகிறதில்லை. தூரத்தில் சென்றால் அடையக்கூடியதுமன்று. இருந்த இடத்திலேயே அடைந்ததாகவும் இருக்கின்றது. உலக விஷயங்களைப்போல விசாரத்தினால் அறியக்கூடியது மன்று; விசாரம் அடங்குமிடத்தில் அதுவாகவே விளங்குகிறது.

(1) தன் தலையின் நிழலானது முன்னே தாவுவது போல ஒருபொழுதும் செய்கையினால் ஆத்மா அடையக் கூடியதன்று. பாலனொருவன் எவ்விதம் ஆயிரக் கணக்கான பிரதிபிம்பங்களைக் களங்கமற்ற கண்ணாடியினிடத்தில் பார்த்தாலும் அக்கண்ணாடியைப் பாராம லிருக்கின்றானோ அவ்விதமே ஜனங்கள் பிரதிபிம்பமான ஜகத்தைத் தங்கள் ஆத்மசொரூபமான கண்ணாடியில் பார்த்தாலும் அதனிடம் பழக்கமின்மையால் தங்கள் ஆத்மாவை அறிகிறதில்லை. ஆகாயம் இன்னதென்று தெரியாத ஒருவன், ஆகாயத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும் ஜகத்தைப் பார்த்தாலும் ஆகாயம்

பத்தில் விவகரிக்கத் தகாத ஏக ஸத்தா வாதத்தையும் பற்றி நிற்பவர்—இவர்களுக்கு நிதித்தியாசனமில்லாததால் புருஷார்த்தத்தை அடையாமல் வியசனப்படுகின்றார்.

(1) ஒருவன் தன் தலையின் நிழலைத் தாவி மிதித்துவிடத் தாண்டினால் எவ்விதம் அந்த நிழலானது எட்டிப்போய் விடுமோ அதுபோலவாம்.

இன்னதென்று எவ்விதம் அறியாமலிருக்கிறாரோ அது போல ஆத்மசொரூபம் அறியப்படவில்லை.''

"நாதா! உங்கள் சூக்ஷ்மபுத்தியினால் ஞானமாகவும் ஞேயமாகவு மிருக்கும் (2) இஜ்ஜகத்தைப் பாருங்கள். இவற்றில் ஞானமானது தானாகவே சித்தமாயிருக்கின்றது. இஃதில்லாவிடில் (3) ஒன்றுமேயில்லை. இது பிரமாணங்களுக்கெல்லாம் (4) பிரமாணமானதும் பிரமாணமின்றித் தானாகவே யிருப்பதுமாகும். யாதொரு காரணத்தினால் அது பிரமாணத்தை வேண்டாமல் (5) எப்பொழுதும் சித்தமாயிருக்கின்றதோ அது சித்திக்கப்பட்டது''; ''சாதகன்'' என்றவாறு ஒரு பொழுதும் அதுசித்தியாது. இவ்விஷயத்தில் (6) விபரீதபுத்தி

---

(2) அநேக விதமாயிருந்தாலும் ஜகத்து, அறிவு அறிபடு பொருள் (விஷயம்) என்று இருவகைக் குள்ளாகின்றது. இவற்றில் விஷயம் பிரத்தியக்ஷ சித்தமா யிருக்கிறபடியினால் அதனை நிரூபிக்க வேண்டியதில்லை.

(3) பிரமாதாவின்றிப் பிரமாணத்திற்கு அத்தன்மை யில்லாததால் பிரமாதாவின்றிப் பிரமேயமில்லை.

(4) பிரமாணங்களுக்குப் பிரமாணத் தன்மையைக் கொடுக்கக்கூடிய பிரமாதாவுக்குப் பிரமாணம் வேண்டுமானால் அப்பிரமாணத்திற்குப் பிரமாதா வேண்டுமாதலால், இவ்வாறு அநவஸ்தையாகிவிடும். ஆகையால் பிரமாணத்தை யாச்ரயிக்காமலும் அன்னியத்தை யபேக்ஷியாமலும் தானாகவே யிருக்கின்றது.

(5) பிரமாதா சித்ரூபமாக எப்பொழுதும் விளங்குவதால், சூரியனது வெளிச்சத்திற்குத் தீபம் தேவையில்லாதது போலச் சித்ரூபத்தைச் சாதிக்கச் சாதனமான வேறு பிரமாணம் தேவையில்லை.

(6) ஞானம் இல்லையென்று சொல்லுகிறவனுக்கு, ஞேயங்கள் சொரூபத்தை அடுத்து ஞானத்திற்கு அதீனமாக விருப்



யுடையவனுக்குக் கேள்வியுமில்லை; பதிலுமில்லை. அது அழியாத நிலைக்கண்ணாடி. (7) கண்ணாடியில் பிரதிபிம்பம்போல் அதனிடம் யாவும் விளங்குகின்றன.

தேசத்தினாலாவது, காலத்தினாலாவது, அதற்குப் பரிச்சேதமில்லை. இவைகள் அதற்குள் விளங்குவதனால் இவைகளால் அதற்கு எப்படிப் பரிச்சேதம் ஏற்படும்? தோற்றப்படுகின்ற பரிச்சேதமானது ஆகாயத்தினிடம் வஸ்துக்கள் விளங்குவதுபோலவாம்.

இராஜகுமாரா! யாதொரு சாமானிய (1) சைதன்னியத்தினிடம் இந்த ஜகத்தானது விளங்குகின்றதோ, அதனை உங்கள் உண்மை வடிவமாகச் (2) சூக்ஷ்மபுத்தியினால் குறிப்பிட்டுப் பாருங்கள். அதனிடம் ஒன்றுபட்டு உண்டாகும் (3) சமாவேசத்தின் பரிபக்குவ காலத்தில்

---

பதால் ஞானமில்லாத இடத்தில் ஞேயமிருக்குமென்று விகற்பம் கூடாதபடியினால் ஞான மில்லாவிடில் கேள்வியுமில்லை; சமாதானமுமில்லை.

(7) ஞானம் அழியும்போது ஞேயத்தின் பிரகாசம் மட்டிலும் தான் அழிகின்றது. ஞேயத்தின் சொரூபம் அழியவில்லை. ஞானமில்லாவிடில் ஒன்றுமில்லை யென்று எவ்விதம் சொல்வது என்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம் அது பெரிய நிலைக்கண்ணாடி என்றவாறு.

1. கடங்களுக்குத் தூலரூபம் வடிவு. சூக்ஷ்மவடிவு எல்லாவற்றிற்கும் பொதுவான பிருதிவிரூபம், அதுபோல, அந்தந்த வடிவங்களான திருக்குகளிலும் புகுந்திருக்கும் பொதுவான சைதன்னியம்.

2. விஷயவடிவில்லாத அந்தர்முக புத்தியினால்.

3. (ஸோஹமஸ்மி) "அவன்நானாயிருக்கிறேன்" அந்தச் சாமானிய சைதன்னியத்தினிடம் அபேதமாகப் பிரிவில்லாது உண்டாகும் அநுஸந்தானம் என்ற நிதித்தியாசனம். பரி

சர்வ (4) கர்த்துருத்துவம் அடையலாகும். அந்நிலையை நீங்கள் அடைவதற்கு (5)அதனுடைய* அனுபவத்தைச் சொல்லுகிறேன். நித்திரைக்கும் ஜாக்கிரத்திற்கும் மத்தியிலும் அவ்விதமே பேதங்களான விஷயாகாரஞானங்களின்மத்தியிலும் அறிவிற்கும் அறிபடுபொருள்களுக்கும் மத்தியிலும் நுட்ப புத்தியினால் குறிப்பிட்டுப் பாருங்கள். அந்த நிலைதான் நிஜமானவடிவம். அதனை அடைந்தால் மோகமில்லை. அதனைத்தெரிந்துகொள்ளாமையால் தான் ஜகத்தானது இவ்விதம் துக்கமயமாக நடந்துவருகின்றது. (6) அதனிடத்தில் உருவமாவது இரசமாவது சத்த ஸ்பரிச கந்தங்களாவது சுகதுக்கங்களாவது கொள்ளத்தக்கன (7) கொள்பவையாவது ஒன்றுமேயில்லை. எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகி எல்லாவடிவங்களாகவு மிருந்தாலும் அவை (8) ஒழிந்ததாயிருக்கின்றது. சர்வேச்வரனான பிரமனும் விஷ்ணு

---

பக்குவம் யத்தனமில்லாமலும் பிரயாசையில்லாமலும் அந்நிலையில் அமருந்தன்மை.

4. பரமேசனிடம் தன்மயமாதல்.

5. சாமானிய சைதன்னியம் சுழுத்தி வேளையிலன்றோ இருக்கின்றது. அது எப்படி எல்லாத் தசைகளிலு மிருக்கிறதென்று சொல்லப்பட்டது, என்ற சங்கைக்குச்சமாதானம்.

* அனுபந்தம் பார்க்க.

6. திருசியங்கள் தோற்றும்பொழுதும் வாஸ்தவசொருபமான சுத்த சைதன்னியத்திற்கு அன்னியமாக யாதொன்றுமே யில்லை.

7. கொள்பவை-இந்திரியங்கள்.

8. கண்ணாடி எல்லாப் பிரதிபிம்பங்களுக்கும் ஆதாரமாக இருந்தாலும் இவையாவும் ஒழிந்ததனவாக விருப்பதுபோல்;



வும் (9) ஈசனும் சதாசிவனும் இதுவே. உள்ளத்தைச் (10) சற்று நிரோதம்செய்து சாமானிய சத்துரூபமான தன்னாலேயே தன் ஆத்மாவைப் பாருங்கள். நிரோதம் செய்வது எவ்விதமென்றால், திருசிய விஷயங்களுக்கு நேரே மனது செல்வதை அகற்றி, உள்ளே மனதைச்

---

9. பிரசித்தமான மாதாவானவள் யார் என்றும் நாம்யார் என்றும் முன் ஹேமசூடன் கேட்டதற்குத் தன் ஆத்மசொருபத்தை அறிந்தால் மாதாவை அறிந்தவனாகும் என்று ஹேமலேகை மொழிந்தனள். பிறகு ஆத்மசொருபத்தை விவரமாகச் சொல்லிவிட்டு இங்கு இவ்விதம் சுத்தமான தன் ஆத்மசொருபமே மாதாவின் வடிவமென்று உபதேசிக்கின்றனள். கண்ணாடியில் அந்தப் பிரதிபிம்பங்களால் பரிச்சின்னமான கண்ணாடியின் அம்சங்கள், அந்தந்தப் பிரதிபிம்பங்களால் வேறு பட்டிருந்தாலும் கண்ணாடியின் சாமானிய (பொது) வடிவமாக எல்லாப் பிரதிபிம்பங்களுக்குள்ளும் ஒன்றே வியாபித்திருப்பது போல அந்தந்தச் சரீரங்களில் அவச்சின்ன சைதன்னிய வடிவமாகப் பேதமிருந்தாலும் சமாதியி லனுபவிக்கப்பட்ட சாமானிய சைதன்னிய வடிவமாக எல்லா வற்றினிடத்திலும் புகுந்ததாக இருக்கிறபடியினால் அதற்குச் சர்வேசுரத் தன்மை.

10. நெடுநேரம் நிரோதம் செய்யவேண்டியது அவசியமில்லை. ஒரு க்ஷணப்பொழுதிற்கு மனதின் திருசியாகாரத்தை நீக்கி அந்த ஆத்மரூபத்தைப் பார்க்க வேண்டும். எப்படிப்பார்க்கிறதென்றால், இது இவ்வித மிருக்கிறதென்று பார்க்கத் தக்கதன்று. நிரோதத்தின் முடிவில் தன் ஆத்மாவிற்கு அபின்னமாய்ச் சாமான்னியமாக விருக்கும் யாதொரு 'இருப்பு' (சத்து, உண்டோ அவ்வடிவமாக, அன்று பிறந்த குழந்தைக்கு ஜடங்களில் நின்றும் வேறாய்த் தன் உள்ளத்தில் சொருபத்திற்கு அபின்னமாக விருக்கும் உணர்வுபோல் நான் இருக்கிறேன் என்று சாமான்னியமாக அனுபவித்துப் பார்க்கவேண்டும்.

செலுத்தமுயன்று, பார்க்கிறேன் என்ற எண்ணத்தை ஒழித்து அந்தகனைப்போல நிச்சலமனதுடன் தர்சனத்தையும் தர்சனமின்மையையும் விலக்கி யிருக்கும் பொழுது நீங்கள் எதுவாக இருக்கிறீர்களோ அது தான் நீங்கள். அதனைத் தாமதமின்றி அடையுங்கள்''

இவ்விதம் தன் பிரியையானவள் மொழிந்தபோது ஹேமசூடன் அவ்விதமே செய்து அந்நிலையை இன்னதென்று குறிப்பிட்டறிந்து நீடித்த விச்ராந்தியான நிர்விகற்ப சமாதியை யடைந்து வெளித் தோற்றத்தை மறந்து நின்றனன்.

ஸ்ரீ திரிபுரா ரகசியம் ஞானகாண்டம்
ஹேமசூடன் விச்ராந்தி யென்னும் ஒன்பதாவது அத்தியாயம்
முற்றிற்று.

---

மனனம் செய்தவர்களின் சிரவணத்தினாலும் மனனத்தினாலும் மாத்திரம் (நிதித்தியாசன மில்லாது) புருஷார்த்தம் கைகூடாது என்பது கருத்து.

அடிக்கடி சிரவணமனனம் செய்வதனால் சாஸ்திரத்தின் அர்த்தம் வெளியாவதுபோல் அடிக்கடி சிரவணமனனங்களினால் ஆத்மா அறியப்படட்டும். நிரோத வடிவமான நிதித்யாசனம் யாதுக்காக என்ற சங்கை வருமானால் ஆத்மா அவ்விதம் கிராஹியமன்று. வெளிவிஷயங்கள் இந்திரிய வியாபாரங்களாலும் உள்ளத்தில் விசாரணையினாலும் அறியத்தக்கன. ஆத்மா பிரத்தியக் வடிவமானதால் இந்திரியங்கள் மனது இவற்றின் நிரோதமின்றி அறியத்தகாதது.

## அத்தியாயம்-10

பின்பு தன் பிரியனானவன் பரநிலையில் அமர்ந்திருக்கிறனென்று ஹேமலேகை பார்த்து அந்நிலையிலிருந்தும் அவனை எழுப்பாமலிருந்தனள். அதன்பிறகு ஒரு முகூர்த்தமான பிறகு அவன் உணர்ந்தெழுந்து கண்களைத் திறந்து தன் பிரியையும் உலகத்தையும் பார்த்தான். பின்னும் அந்நிலையிலேயே அமர்ந்திருக்க வேண்டுமென்று ஆசை கொண்டவனாகி அவன் வெகு வேகமாகத் தன் நேத்திரங்களை மூடிக்கொள்ளும் தருணத்தில் தன் பிரியனைத் தன் கரங்களால் அணைத்துக் கொண்டு அமிர்தம் போல அழகு பொருந்திய மொழிகளுடையவளான ஹேமலேகை சொல்லுகின்றாள் :—“நாதா! நீங்கள் யாது நிர்மானத்தின் மேல் கண்களை மூடிக் கொண்டீர்கள்? அதனைத் திறந்தால் தானென்ன? கண்களை மூடிவிடுதலும் மூடாதிருத்தலும் உங்களுக்கு என்ன லாபம், என்ன லாபமின்மை ஏற்படுகின்றது? சொல்லுங்கள். திறந்து விட்டால் எது அடையப்படாமலிருக்கிறது? மூடிக்கொண்டால் எது அடையப்படுகிறது? இதனை எனக்குச் சொல்லவேண்டும். உங்களுடைய நிலையைக் கேட்க நான் விரும்புகிறேன்” என்றனள். இவ்விதம் கேட்டபோது மதங்கொண்டு மயங்கினவன் போலச் சோம்பலினால் அதற்கு விடை சொல்ல இஷ்டமில்லாதவனாக இருந்தும் வெகு ஆவசியத்துடன் சொல்லுகின்றான் :—“பிரியையே! கெடுதலாக இல்லாது இப்பொழுது யிருந்த விச்ராந்தியை

நான் அடைந்திருக்கிறேன்; துக்கம் நிறைந்த வெளியுலகத்தில் ஒருபொழுதும் எனக்கு விச்ராந்தி யகப்படவில்லை.

இரசமெடுக்கப்பட்ட கரும்பின் சக்கைபோலும், அரைத்ததையே அரைத்துக்கொண்டிருக்கும் பசுக்கள் போலும் நடக்கும் இந்த வெளியுலகவிவகாரம் எனக்குப் போதுமானது. பாக்கியமின்மையால் மூடனாகி இந்நாள்வரையிலும் தன் ஆத்மாவின் கண்ணிருக்கும் சுகத்தை நான் அறியவில்லை. தன்னிடமிருக்கும் நிதியைத் தெரிந்து கொள்ளாமல் பிச்சைவாங்கித் திரிபவன்போலத் தன்னிடமிருக்கும் சுகாம்புதியை அறியாமல்துக்கங்களே நிறைந்த விஷயசுகத்தையே அடிக்கடி மேன்மையானதென்றும், மின்னலொளி போன்றதை ஸ்திரமென்றும் கருதி அதனிடம் அதிகப் பிரீதியினால் துக்கங்களை வெகுவாக அனுபவித்தேன். (1) விச்ராந்தியை அடையவுமில்லை. அஹோ! ஜனங்கள் துக்கமின்னதென்றும் சுகமின்னதென்றும் பிரித்தறியும் தன்மையற்றவர்களா யிருக்கின்றனர். சுகத்தில் தேட்டமுடையவராகவிருந்தும் துக்க வடிவமான விஷயங்களையே அறிவின்மையால் சதா அடைகின்றனர். கஷ்டப்பட்டுழைத்தும் துக்கத்தையே அடைவது போதும் போதும். பிரியையே? என்னிடம் கிருபை செய்வாய். அஞ்சலி செய்து உன்னைப் பிரார்த்திக்கிறேன். சுகவடிவமான தன் ஆத்மாவினிடம் நீடித்த விச்ராந்தியை நான் விரும்புகின்றேன். அஹோ! நீ இந்நிலையை அறிந்தவளாகவிருந்தும் பாக்கியமற்றவளாகத் தோற்றுகின்றாய். இந்த விச்ராந்தியைக் கைக்கொள்ளாமல் மூடத்

(1) சுகவடிவமான தன் சொரூபத்தினிடமாக அடையும் சமாதி.



தனத்தால் துக்கத்தில் முயல்கின்றாய்" என்றனன். இம்மொழிகளைக்கேட்டுச் சற்றே புன்சிரிப்புடன் புத்திமதியான அவள் தன்பிரியனிடம் சொல்லுகின்றாள். "நாதா! பரமபாவனமான (2) அந்நிலையை நீங்கள் (3) செம்மையாக அறியவில்லை. யாதொரு நிலையில் இருந்தால் பரிசுத்த மனத்தரான பண்டிதர்கள் மோகம் அடையார்களோ அந்நிலைக்கும் உங்களுக்கும், மண்ணுக்கும் விண்ணுக்கும் இருக்கும் தூரம் இருக்கின்றது. நீங்கள் யாதொன்று (4) தெரிந்துகொண்டிருக்கிறீர்களோ அது தெரிந்து கொள்ளாததற்கு நிகராகும். கண்களை மூடினதினாலாவது திறந்ததினாலாவது அந்நிலையானது (5) காணப்படாதிருந்துவிடுமா? செய்கையினாலாவது செய்கை யின்மையினாலாவது அந்நிலை ஒருபொழுதேனும் கிடைப்பதுண்டா? போகாமலிருந்தாவது போயாவது அந்நிலை அடையப்படுகிறதில்லை. கண்களைமூடுகிற தான செய்கையுடன் சென்று அடையப்பட்ட ஒன்று எவ்விதம் பூரணநிலையாகும். யவதானியத்தின் எட்டிலொன்றான அளவுள்ள இமைகளைத்திறந்ததினால் மறைபட்டுப் போகுமானால், அந்நிலை பூரண நிலை ஆகாதே. அஹோ! உங்களுடைய மோகத்தின் மகிமையை நான் என்னவென்றுசொல்வேன். யாதொன்றினிடம் கோடிக்கணக்

(2) பரிச்சின்னமின்றிய சாமானிய சித்வடிவத்தை.

(3) "இதுதான் நான்" என்று அறியவில்லை.

(4) நிரோதம் செய்ததன் மேல் பரிச்சின்னமாக ஹேமசூடன் அறிந்தது.

(5) சொப்பிரகாசமாகவும் நித்தியமாகவும் எங்கும் வியாபித்தும் இருக்கும் வஸ்துவினிடத்தில் கண்களைத் திறப்பது முதலான செய்கைகளினால் ஒருவிசேஷமும் ஏற்படாது; அப்படி யன்றேல் பூரணத் தன்மைக்கு ஹானி யுண்டாகும்.

கான பிரமாண்டங்கள் ஒருமூலையில் தங்குகின்றனவோ அந்தச் சாமானிய சைதன்னியம் ஒரு அங்குலம் அளவுள்ள இமைகளைத் திறந்ததினால் மறைபட்டுப் போகுமென்பது ஆச்சரியமாயிருக்கிறது. இராஜகுமாரா! (5) தத்துவத்தின் சாரமாக நான் சொல்வதைக்கேளுங்கள். கிரந்தியானது (முடிச்சு) எதுவரையில் அவிழாமலிருக்கின்றதோ அதுவரையிலும் சுகம் கிடையாது. மோகமென்ற கயிற்றினால் ஏற்பட்ட கிரந்திகள் கோடிக்கணக்காக இருக்கின்றன. இங்கே சொரூபத்தை அறியாமலிருப்பதே மோகமென்ற கயிறாகும்.

இக்கயிற்றினிடத்தில் விபரீத புத்திகளென்னும் அநேக முடிச்சுகள் இருக்கின்றன. இவற்றில் முதலாவது தேகேந்திரியங்களில் உண்டாகும் ஆத்மபுத்தியினால், விலக்க மிகவும் பிரயாசமான இந்தச்சம்சாரமானது நடந்து வருகின்றது. கண்ணாடியில் பிரதிபிம்பம்போலத் தோற்றமாத்திரமான இந்த ஜகத்தில் அநாத்மபுத்தி (திருசியம்தான் அல்ல என்ற எண்ணம்) உண்டாவதும் மற்றொரு கிரந்தியாகும். இவ்விதமே ஜீவனுக்கும் ஈசனுக்கும் பேதமுண்டு என்ற கொள்கை முதலியனவும் கிரந்திகளே. இவை அநாதிகாலமாக ஏற்பட்டுப் பின்னும் பின்னும் நடந்துவருவதனால் (1) சுருளடைந்து கிரந்திவடிவமாகி இவற்றால் புருஷன்

---

(6) சாமானிய சைதன்னியத்தின் தெளிவாகத் தீர்மானிக்கப்பட்ட ரூபம்.

(1) கயிறொன்றே சுருளடையும்பொழுது முடிச்சாவது போலச் சொரூபத்தின் அஞ்ஞானமே தேகாதிகளுக்கு ஆதாரமான சிதாத்மப் பிரதேசத்தில் சுருளடைந்து பரிச்சின்னத் தோற்றங்களாக ஏற்படுகின்றது.



கட்டப்படுகிறான். இந்தமுடிச்சுகள் (2) அழியும்போது தான் பந்தத்தினின்றும் முக்தனாகிறான் (விடுபடுகிறான்) என்று சொல்லப்படுகின்றது.”

“கண்களை மூடிக்கொள்ளும் பொழுது நீங்கள் யாதொரு நிலையையடைகிறீர்களோ அஃது இரண்டற்ற சுத்த அறிவான உங்களுடைய உண்மை வடிவந்தான். அது தான் அகிலமான ஸம்ஸாரமென்ற சித்திரத்திற்கு ஆதாரமான பெருங்கண்ணாடி. (3) எவ்வேளையில் எவ்விடத்தில் எந்தரூபமாகத்தான் உணர்வு இல்லாமலிருக்கிறது என்பதை எனக்குச் சொல்லுங்கள். யாதொரு காலத்தில் யாதொரு ரூபமாக யாதொன்றினிடத்தில் தன் ஸம்வித்தானது (மெய்யறிவானது) இல்லையென்று சொல்வீர்களோ அந்தக் காலதேசங்கள் வந்தியாபுத்திரன் என்ற தன்மையை உடையனவாகின்றன. ஆதர்சமின்றி (கண்ணாடியின்றி)ப் பிரதிபிம்பமில்லாதது போல நாதா! அறிவின்றி மற்றொன்றுமிராது. ஆகையினால் சாமானிய சைதன்னியவடிவமான அந்நிலையைத் தள்ளி விட்டால் சற்றேனும் ஒன்றுமே ஓரிடத்திலும் இராது. அப்படிப்பட்ட ஒன்று உங்கள் கண்களைத் திறந்த மாத்திரத்தில் எப்படித் தோன்றாமல் மறைந்துவிடும்? எதுவரையில் ‘பார்க்கிறேன்,’ ‘அறிகிறேன்’

---

(2) அந்தக்கரணம் நிரோதம் செய்யப்படாமலிருக்கும் பொழுது சொரூப விச்ராந்தியில்லை யென்றதும் பிராந்தியென்றே சொல்லத் தகும்.

(3) காலதேசங்கள் ஜடமானபடியாலும், சொப்பிரகாசமில்லாதனவாதலாலும் அறிவினிடம் தாதாத்மியமின்றி அவை விளங்காமையால் அவைகளுக்கு முன்னே, அறிவு சித்தமாக இருக்கிறதென்று ஏற்படுகிறது.

என்ற கிரந்தியானது திடமாக இருக்கிறதோ, (4) அது வரையில் அந்தியை அடையப்படவில்லை. ஏதாகிலும் அடையப்பட்டிருக்குமானால் அஃது அந்தியுமன்று; கண்களை மூடிக்கொள்வதனாலாவது திறந்து கொள்வதனாலாவது அடையப்படுகிறதை உண்மையில்லையென்று கருதுவீர்களானால், அது பரிச்சேதப் படுகிறபடியினாலும், கிரியையினாலுண்டாகிறபடியினாலும், பூரணநிலையல்ல; நாதா! காலாக்கினிபோன்ற பிரபையையுடைத்தாயிருக்கிற மகா ஸம்வித்தானது எங்குதானில்லை? கற்பனையென்னும் விறகுச்சுமைகளைத் தன் வடிவமாகச்செய்து கொள்ளும் தன்மையுடைய மகா தேஜஸன்றோ அது. அப்படிப்பட்ட பரமபதத்தை அறிந்த பிறகு உங்களுக்குச் (5) செய்யவேண்டியது என்பது ஒன்றுமேயில்லை. "நிரோதம் செய்து பார்க்கிறேன்" என்று உங்கள் உள்ளத்திலிருக்கும் கிரந்தியை விட்டுவிடுங்கள். "இது (6) நானல்ல" என்றவன்மை பொருந்திய கிரந்தியையும் வேருடன் பறித்து விடுங்கள். எங்கும் அகண்டாகத்தும் பொங்கித் தானே

(4) ஏனென்றால், சாமானிய சைதன்யத்திற்கிருக்கும் பூரணத்தன்மை ஏற்படாததால்.

(5) மனதை நிரோதம் செய்யவேண்டும் என்ற பிராந்தியை நீக்க வேண்டுமென்று கருத்து.

(6) "நிரோதம் செய்கிறேன்" என்ற பிராந்திக்கு 'இது நான் அல்லன்' என்ற பிராந்தியே மூலகாரணம். ஆகையினால் இது நான் அல்லன் என்ற அநாத்ம திருஷ்டியையும் விலக்க வேண்டும்.

பிரதிபிம்பங்களிருக்கும்பொழுதும் கண்ணாடி சுத்தமாக இருப்பது போலத் திருசியங்கள் தோன்றும் வேளையிலும் (நிரோதஞ் செய்யப்படாத பொழுதும்) விளங்கும் ஆத்மரூபம் சுத்தமே.



யெங்கு (7) மிருப்பதாகப் பாருங்கள். அகில உலகத்தையும், கண்ணாடியில் பிரதிபிம்பம் போலத் தனக்குள்ளேயே பாருங்கள். பிறகு எங்கும் அகிலமும் தானாக

(7) எங்கும் திருசியங்கள் தோற்றும்பொழுது தோற்றுதலை சித்தியாயிருக்கத் தோன்றுமவைகளில் பிரகாசம் வியாபித்திருக்கிறது. அந்தப் பிரகாசம் ஆத்மாவானது எங்கும் எப்பொழுதும் விளங்கும் அறிவாக விளங்குகின்றது. ஆனால் நிரோதத்தில் ஆநந்தம் விளங்குவதுபோல எக்காலமும் ஆநந்தம் விளங்கவில்லையே என்ற கேள்விக்குச் சமாதானம்; தன் ஆத்மாவிற்கு உணர்வு வடிவமே. ஆநந்த வடிவம் வேறன்று, அஃதன்றேல், துவைத மேற்படும். நிர்க்குணமும் அகண்டைகரஸவஸ்துவுமான ஆத்மாவிடத்தில் ஜடங்களிருந்தும் பிரித்தறியும்பொருட்டு எவ்விதம் "ஸம்வித்" (அறிவு) என்ற சப்தமானது வியவகரிக்கப்பட்டதோ அவ்விதமே துக்கரூபத்திலிருந்தும் பிரித்தறியும்பொருட்டு ஆநந்த சப்தம் வியவகரிக்கப்பட்டது. நிரோதகாலத்திலுண்டாகும் ஆநந்த அநுபவமானது சொரூபத்தினிடம் விசேஷமுண்டானதாலன்று. சொரூபம் நிர்விசேஷமானதால் காமிகளுக்கே மகத்தான துக்கம்; விஷகாமிக்கு அது ஏது என்ற நீதிப்படி அளவில்லாத காமவாசனைகளையுடையவர்கள் காட்டுத்தீயால் சுற்றப்பட்டவர்கள் போலாவர். நிரோதகாலத்தில் துவைதத்தோற்றமின்மையால் காமவாசனைகளுக்கு வலிமையில்லாமற் போய்விடுகிறது. ஆகையால், தலையிலிருந்த சுமையை இறக்கினது போல், விசேஷமாய்ச் சுகம் ஏற்பட்டாற் போலத் தோன்றுகின்றது. காமவாசனைகளை அகற்றுவதனால் நிரோத காலத்தில் சொரூபம் உண்டாவதுபோல நிரோதமற்ற வேளையிலும் காமவாசனைகள் அகற்றப்படுமானால் பகவத்கீதையிற் மொழிந்திருக்கிறபடி ஆநந்தாநுபவம் அழிவின்றித் தொடர்பாக விளங்கலாகும். நிரோதமில்லாத வேளையில் காமவாசனைகளுக்கு மூலமான துவைதத் தோற்றம் அழியாததால் அந்தத் துவைதத் தோற்றம் காமவாசனைகளை உண்டாக்கித் துக்கத்தை ஏன் கொடுக்கமாட்டாது என்ற கேள்விக்குச் சமா

லேயிருக்கின்றேன் என்ற பாவனையையும் (8) நீக்கி மீதியாயிருக்கிற சின்மாத்திரரூபமே நான் என்று தன் உண்மை வடிவத்திலேயே தன்னிலையில் அமர்ந்திருங்கள்."

இவ்வாறாகத் தன் பிரியை மொழிந்தவைகளை மலினமற்ற உள்ளமுடைய ஹேமசூடன் கேட்டுப் பூரணமான ஆத்ம சொரூபத்தை அறிந்து எவ்விடத்திலும் பிராந்தியொழிந்தவனாய்ப் படிப்படியாகப் பூரண சமாவேசத்தால் ஸ்திரபாவனையுடையவனாகி ஹேமலேகை முதலிய பெண் மணிகளுடன் விகரித்துக்கொண்டு புவியில் விளங்கினன். செழிப்பாகத் தன் நாட்டைப் பரிபாலனம் செய்தும், சத்ருக்களைப் போர்முகத்தில் வென்றும், சாஸ்திரங்களைக் கேள்வியுற்றும், கேட்கும்படி செய்தும் வெகுவாகத் தனம் தேடியும், அசுவமேதம் இராஜசூயம் முதலிய முக்கியமான யாகங்களைச்

---

தானம்; நிரோதமில்லாத வேளையில் தோற்றப்படும் யாவும் கண்ணாடியில் பிரதிபிம்பம்போல் தன் ஆத்மாவிற்கு அன்னியமன்று. பிரதிபிம்பமென்று அறியப்பட்ட வஸ்துவினிடம் காமவாசனை உதயமாகாதது போல, நிகிலமான திருசியங்களும் தன் ஆத்மாவான கண்ணாடியில் பிரதிபிம்பித்தவை என்று, நிச்சயிக்கப்படுமானால் காமவாசனையுமில்லை துக்கமுமில்லை.

(8) எங்கும் எவையும் (தோற்றுகின்றவையெல்லாம்) தானே என்று முதலில் பார்த்து நிச்சயித்துப் பின் எங்கும் யாவும் தானே என்ற முன் அம்சத்தைப் பாவனை செய்யாமல், [illegible]வியங்கள் ஒழிந்ததும் பாவகனுடைய உருவமுமான சா[illegible]ன்னிய சைதன்னியமாக நான் இருக்கிறேன் என்ற உ[illegible] சென்று சேத்தியம் நீங்கிய சின்மாத்திர வடிவமே [illegible]ன் என்ற சம்ஸ்காரம் மட்டிலும் இருப்பவனாக இருக்க வேண்டியது என்று அர்த்தம்.



செய்தும் இருபதினாயிரம் வருஷங்கள் ஜீவன் முக்தனாக உலகில் வாழ்ந்தனன்.

தன்குமாரனை ஹேமசூடன் ஜீவன் முக்ததசை அடைந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டு முக்தாசூடனென்ற அரசனும் ஹேமசூடன் தம்பியான மணிசூடனும் அடியில் வருமாறு சிந்தனை செய்தனர். "இந்த ஹேமசூடன் என்ன முன்போல இருக்கவில்லை; சுகத்தால் மிகுந்த சந்தோஷமும் அடைகிறதில்லை, துக்கத்தால் அதிகமாகக்கஷ்டப்படுகிறதுமில்லை; இலாபத்தையும், நஷ்டத்தையும், பகைவரையும், நேசரையும், சமபுத்தியுடன் பார்க்கிறானே? இதற்கென்ன காரணம்? அரங்கத்தில் நடனைப்போல இராஜகாரியங்களைச் செய்கிறான். மத்திய பானம் செய்தவன் போலச் சதா திமிர் கொண்டவனாகக் காணப்படுகின்றான். சதா வேறேயிடத்தில் தன் மனம் சென்றவன் போலக் காரியங்களை நடத்தி வருகின்றான். இஃதின்ன காரணத்தினாலே யென்று தெரியவில்லை" என்றிவ்வாறாகச் சிந்தனை செய்து ஹேமசூடனை ஒருதினம் இரகசியமாகவரவழைத்து "நீ இவ்விதமிருப்பதற்குக் காரணமென்ன" வென்று கேட்டார்கள். அதன் பிறகு, தன்னுடைய நிலைமையை ஒன்றன் பின்னொன்றாக அவர்களிடத்தில் தெரிவித்தனன். அவரிருவரும், (தகப்பனும் தம்பியும்) ஹேமசூடனால் போதனை செய்யப்பட்டுப் பரதத்துவத்தைச் சார்ந்து ஜீவன் முக்தரானார்கள். பிறகு மந்திரிகள் முதலானவர்கள் அரசனிடமிருந்தும் உலகத்தின் போக்கைத் தெரிந்து கொண்டு தங்கள் ஆத்மஸ்வரூபத்தை விசாரணைசெய்து உண்மையில் அறியவேண்டியதை அறிந்தவரானார்கள். இவ்விதமாக அந்த விசாலமான நகரத்தில், கிரமமாக ஒருவருக்கொருவர் உபதேசம்

செய்துகொண்டு ஆபாலகோபாலியாக யாவரும் தத்துவத்தை உணர்ந்தார்கள். புருஷர்களும் நாரியர்களும், பாலரும், விருத்தரும், தாசர்களும், தாசிகளுங்கூட அறியவேண்டியதை அறிந்தவராகவும் தேகத்தினிடம் அகம்புத்தி யிழந்தவராகவும் ஆயினர். அவ்வூரில் ஒருவருக்கேனும் காமமாவது, க்ரோதமாவது, உலோபமாவது கிடையாது. பாலர்களும் விருத்தர்களுங் கூடக் க்ரோதம் முதலியவற்றை அடக்கிக்கொண்டவரானார்கள்; ஆனால், காமக்ரோதங்களை உலக விவகாரம் நடப்பதற்காகமட்டிலும் வைத்துக்கொண்டிருந்தனர். தாய் தன் குழந்தையைப் பரதத்துவ வார்த்தைகளினால் சீராட்டியும், ஊழியக்காரர்கள் தங்கள் எஜமானிடத்தில் அவ்விதமே பரதத்துவ பாஷையினால் சேவகம் புரிந்தும், இவ்வாறாக அந்நகரத்தில் விவகரித்து வந்தார்கள். நாடகங்களில் நடர்கள் பரதத்துவங்களைப் பிரசங்கித்து நாட்டியம்செய்து வந்தனர். காயகர்கள் தத்துவவிவேகமான வசனங்களைக்கானஞ்செய்து கொண்டிருந்தனர். வித்தூஷகர் உலக விரசங்களைத் தூஷித்துவந்தார்கள். வித்துவான்கள் மாணாக்கர்களுக்குச் சாஸ்திரங்களைத் தத்துவ விசாரத்திற்குத் தகுந்ததான திருஷ்டாந்தங்களுடன் கற்றுக் கொடுத்து வந்தனர்.

இவ்விதமாக அங்குப் புருஷர்களும், நாரியர்களும், தாசர்களும், தாசியர்களும், நாட்டியக்காரரும், விடர்களும், சேவகரும், படர்களும், மந்திரிகளும், தொழிலாளிகளும், விலைமாதர்களும் மற்றையாவரும் அறிய வேண்டியதை அறிந்தவராகிப் பூர்வவாசனையின் பலத்தினால் விவகாரங்கள் செய்துகொண்டு வந்தனர். சென்ற காலத்தில் சுபமானதும் அசுபமானதும்



அதனை நினையாமலும், வருங்காலத்தின் சுகதுக்கங்களைப்பற்றிச் சிந்தனை செய்யாமலும், நிகழ்காலத்தில் வியப்புற்றவர் போலவும் சிரிப்புற்றவர் போலவும், சேதமடைந்தவர் போலவும், சினங்கொண்டவர் போலவும், மதுபானம் செய்தவர்போலவும், ஜனங்கள் யாவரும் விவகாரம் செய்துவந்தனர். இப்படியிருக்கும் அந்நகரத்திற்கு ஸனகாதிகளான ரிஷிகள் வந்து அதற்குப் பிரசித்தமான "வித்தியாநகரம்" என்று பெயரிட்டனர். ஏனென்றால் அவ்வூரில் கூடுகளில் வைத்திருக்கும் கிளிப்பிள்ளைகள்கூட அடியில் வருமாறு மொழிந்துகொண்டிருந்தன.

" சித்துருவா மான்மாவைச் சேத்தியதற் கிடமாச்
சித்தலாற் சேத்தியமில்லை திகழ்பளிங் குருவம்போலச்
சித்ததே சேத்யமாகுஞ் சித்துதான் முனே யெல்லாம்
சித்தினால் விளங்கலாலே சித்தொளி சுதந்திரந்தான் "

" ஆதலினாற் சகத்தோரே யகிலத்தைத் தான்விளக்கி
யீதெவைக்கு மாதார மெனமுதலாந் தேவிதனைச்
சேதமதி மயக் கொழித்துச் சின்மாத்ர திட்டியுடன்
போதமுறு பத்தியினாற் போற்றிவீ ரெந்நாளும்"

பறவைகள்கூட இவ்விதமாக வசனித்துக்கொண்டிருக்கும் அவ்வூரானது இன்றைக்கும் பிரசித்தமாக வித்தியாநகரமென்று விளங்கிக்கொண்டு வருகிறது. இவ்வாறாக முன்காலத்தில் அங்கு ஹேமலேகையினால் போதனை செய்யப் பட்டவராய் ஹேமசூடன் வித்வானும் ஜீவன்முக்தனுமாயினன். மற்றவர்களான ஸ்திரீகள் பாலர்கள் முதற்கொண்டு யாவரும் பராபர உணர்ச்சி யுடையவராயினர்.

ஆகையினால் சிரேயசிற்கு முதன்மையான காரணம் சத்துக்களுடைய சங்கம் ஒன்றேயாகும். ஆத

லால் சிரேயசை விரும்புகிற ஒருவன் சத்துக்களை அடுத்திருக்கக் கடவன்.

ஸ்ரீ திரிபுரா ரகசியம் ஞானகாண்டம்
ஹேமசூடோபாக்யானத்தில் பத்தாவது அத்தியாயம்
முற்றிற்று.

---

## அத்தியாயம்-11

இவ்விதமாக மிகுந்த அற்புதமான ஹேமசூடனது கதையைக் கேட்டபிறகு பார்க்கவன் உள்ளத்தில் சந்தேகங்கொண்டு வினவ ஆரம்பித்தான். "பகவானே! பரமகுருவே! தாங்கள் மொழிந்த மகா அற்புதமான (1)ஞானமானது ஒருபொழுதும் சாத்தியமானதன்று என்பதோடு (2) விஷமமாகவும் தோற்றுகின்றதே. திருசியமான இந்த ஜகத்து எவ்விதம் சின்மாத்திர சொரூபமாகும்? இது நம்பிக்கையின்மேல் அங்கீகரிக்கும்படியாக இருக்கின்றதேயன்றி எனக்கு (3) வெளியாகவில்லை. (4) சேத்தியம் அகன்றுவிட்ட சித்தானது ஒருபொழுதேனும் நினைக்கத்தக்கதாக இருக்கவில்லை. அவ்விதம் சேத்தியமில்லாத சித்திருக்கிறது என்பது ஒருவிதத்தாலும் யுக்திக்குப் பொருந்தாமலிருக்க, அவ்விதமான சித்திருக்கிறதென்று நான் எப்படித் தீர்மானம் செய்துகொள்ளுவேன். ஆகையினால், கிருபை கூர்ந்து எவ்விதத்திலும் எனக்குப் போதனை செய்யவேண்டும்" என்றுகேட்டான்.

இவ்விதம் கேட்டபொழுது தத்தகுரு, பார்க்கவனிடத்துச் சொல்லுகின்றார் "திருசியங்களின் உண்மை

(1) சுத்த அத்வய ஆத்மரூபஞானம்.

(2) அநுபவ விரோதம்.

(3) இதற்கு யுக்தியும் அனுபவமும் தோன்றவில்லை என்பது அர்த்தம்.

(4) சேத்தியமென்றால் திருசியம் அல்லது அறிபடு பொருளென்பதாம்.

யான சொரூப மின்னதென்று சொல்லுகிறேன். இராமா! கேள், ஒன்றொழியாது இந்தத் திருசியங்களெல்லாம் திருசி (அறிபவன்) வடிவேயல்லாது வேறன்று. (5) இதற்கு யுக்தி சொல்லுகிறேன். ஒரே கவனத்துடன் செவி கொடுப்பாய். இந்தத் திருசியங்களுக்கு உற்பத்தி ஏற்பட்டிருக்கிறபடியால் இவை கர்த்தாவின் வியாபாரத்திற்கு விஷயமான (6) காரியமாகும். உற்பத்தியென்றால், புதிதாகத் தோற்றுவது. யாது காரணத்தால் இந்த ஜகத்து ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிதாகத் தோற்றுகிறதோ அதனால் அந்த க்ஷணத்தில் உற்பத்தியாகின்றது. இந்த ஜகத்தானது அகண்டமான (7) ஒரு க்ஷணத்தில் உண்டானதென்று சிலர் சொல்லு

---

(5) அனுபவப்பிரகாரத்தை ஹேமசூடோபாக்கியானத்தில் சொல்லிவிட்டபடியால், இங்கு யுக்திப்பிரகாரம் சொல்லப்படுகின்றது.

(6) உலகத்தில் புதிதாகத் தோற்றுபவைகள்தான் உற்பன்னமாகின்றவையென்று சொல்லப்படுகின்றன.

(7) விஞ்ஞான வாதிகளுடைய மதம்.

"கடம் முதலிய திருசியங்களின் கூட்டமே ஜகத்து என்று விவரிக்கப்படுகிறது. இவைகளின் கூட்டமின்றி ஒரு வஸ்து மாத்திரம் ஜகத்தாகாது" என்ற சங்கையை மறுக்க விஞ்ஞான வாதிகளின் கொள்கையான ஜகத்தின் க்ஷணிக ஏகவடிவம் கூறப்படுகின்றது. க்ஷணிக விஞ்ஞானத்தின் சந்தானவடிவமான பிரமாதாவினிடம் பூர்வ வாசனைகளால் பின் க்ஷணங்களில் ஏற்படும் கடாகார ஞானம் படாகாரஞானம் என்னும் விஞ்ஞானமே அவ்வடிவங்களாகின்றது. அதனாலேயே வியவகாரம் நடக்கிறது என்பது அவர்கள் கொள்கை. யாதொரு ஞானத்தில் எந்தத் தேசகாலவடிவங்கள் தோற்றுகின்றனவோ அவை அந்தக்கணத்தில் அகண்டாகாசமென்றும் அதுவே விஞ்ஞானமென்றும் சொல்லுகின்றனர்.



கின்றனர். ஸ்திரசரங்களான பதார்த்தங்களுடைய (8) கூட்டமே ஜகத்து என்று மற்றுஞ் சிலர் மொழிகின்றார். மற்றவர்கள் என்னகொள்கைகள் கொண்டிருந்தாலும் ஜகத்தானது உற்பத்தியை யுடையதென்று (9) எவ்விதத்திலும் நிர்மாணிக்கப்படுகிறது. (10) இங்குச் சுபாவ (11) வாதிகளின் கொள்கை அதிப்

---

(8) காணாதர்கள் கொள்கை.

பதார்த்தங்களின் கூட்டமே ஜகத்து என்றும், இவைகளில் ஆகாயம் முதலியவை ஸ்திரமானவையென்றும் நித்தியமென்றும், கடாதிகள் சரமென்றும் அனித்தியமென்றும், சொல்லுகின்றனர். இக்காணாதர்களில் சிலருக்குப் பாகிய விஷயங்களுக்குப் பிரமாணம் சொல்லக்கூடவில்லை; ஏனென்றால், எல்லாவியவகாரங்களிலும் விஷயங்கள் ஞானவடிவத்தை அவசியமாக அடைகின்றபடியாலேயே. அப்படியிருந்தும் வியவகாரத்தில் சம்பந்தப்படாத பாகியம் இருக்குமானால் அது அஜாகளஸ்தனம் போன்றதென்கிறார்கள்.

(9) ஜகத்தை முயற்கொம்பு போன்றதென்று நிர்மாணிக்க முயன்றவர் அந்தக்ஷணிகத்தை நித்தியமென்று கூறுவதானது கழுவுக்குரியவனை அலங்கரிப்பதுபோலவாகுமாதலால் எவ்விதத்திலும் அது தள்ளத்தக்கதென்று காண்பித்தது.

(10) ஜகத்து உபாதானமின்றி இந்திரஜாலம் போலுண்டாகின்றது என்பதைக் காண்பிக்க ஜகத்து ஸத்தியமென்றும் உபாதானமுடையது என்றும் சொல்பவருடைய மதம் கண்டனை செய்யப்படுகின்றது.

(11) ஜகத்துக்காரியமென்று சொல்லப்பட்டது. சுபாவவாதிகள், காரணமின்றிச் சுபாவமாகக் காரியமுண்டாகின்றது. அப்படிக் காரியமுண்டாகிறபடியால் காரணமான பூர்வகாரியம் தேவையில்லை. உற்பத்தியானவை, சுயமாக இருக்கிறபடியால் மற்றொன்றை அபேக்ஷிக்கவில்லை. காரணத்திற்குச் சுபாவமாகக் காரியம் தேவையில்லாததுபோலக் காரியத்திற்குக் காரணம் வேண்டியதில்லை என்பர். இது சார்வாகர்களான சுபாவவாதிகளின் கொள்கை.

(12) பிரசங்க மாதலால் உசிதமன்று. (13) அன்வயம், வியதிரேகமென்னும் யுக்திகளாலும், காரிய காரணங்கள் நியதி வடிவாக இருக்கின்றன என்னும் (14) தீர்மானத்தாலும், இங்ஙனம் பிசகாது நடக்கிறதென்று பிரவிர்த்திகளில் காண்கிறபடியாலும், காரிய வடிவமான ஜகத்து நிஷ்காரணமாய்த் திடீரென்று எப்படி உண்டாகும்? காரணம் இன்னதென்று காணப்படாதிருக்கும் சிலவிடங்களில் அகாரணமாக நடக்கிறதென்று கற்பனை செய்வோமென்றால் அக்கொள்கையானது எல்லோருடைய அநுபவத்திற்கும் விரோதமான நியாயமாம்.

வெளிவாகக் காரணம் தெரியாத காரியங்களிலும், முன், அநுபவத்தைக்கொண்டு காரணம் தெரிந்தது போலக் கற்பிக்கப்படுகின்றது. அவ்விதமல்லாது ஆகஸ்மீகமாகக் காரியங்கள் ஏற்படுமானால், உலகத்திலுள்ள பிரவிர்த்திகளெல்லாம் ஒன்றற்கொன்று விரோதப்பட்டுக் காரணமான பிரவிர்த்தி காரியமான பலனைக் கொடாது போய்விடும். ஆகையால், எல்லாவற்றிற்கும் காரணமுண்டு என்று ஏற்படுகின்றது. அதனாலேதான் உலகத்தில் காரியமான பலனுக்காக எல்லோரும் காரணத்தை அடுத்தவராக இருப்பது காணப்படுகிறது. ஆகையினால் சார்வாகரின் கொள்கையை விசாரிப்பது யுக்தமன்று.

---

(12) காரணமின்றியே கடபடங்களுண்டாகவேண்டுமே ?

(13) அன்வயம் காரியத்தின் காரண வியாப்தி. வியதிரேகம் காரணமின்றிக் காரிய மில்லாமை.

(14) இந்தத் தீர்மானம் பிராந்தியால் ஏற்பட்டது.



(a) காரியமான ஜகத்து அசத்தும் தெரியப்படாதனவுமான அணுக்களிலிருந்தும் உண்டானதென்று சிலர் சொல்லுகின்றனர். பரமாணுக்களிலிருந்து உண்டான துவியணுகம் திரியணுகங்கள் முதலியன பரமாணுக்களிலும் பின்னமானவை யென்பதும் இவை முன்னில்லாதிருந்து உண்டாகி முடிவில் அழிந்துவிடுகின்றன என்பதும் அவர்களுடைய கொள்கை. அசத்தும் சத்தும் தம்முள் விரோதமுடையனவாதலால் எவ்விதம் ஒன்றுபட்டிருக்கும்? ஒருவஸ்துவே மஞ்சள் நிறமாகவும் அந்நிற *மில்லாததாகவுமிராது; ஒன்றே பிரகாசமாகவும் அப்பிரகாசமாகவும் இராது; ஏனென்றால், இவைகளின் விரோதத்தாலும் இஃதன்றிக் கலப்பு முதலியன ஏற்படுவதாலுமாம்.

ஈச்வரனுடைய இச்சையினாலாகட்டும் ஆதியில் பரமாணுக்களில் எவ்விதம் (1) கிரியையுண்டாயிற்று? முக்குணங்கள் (2) சமமாக இருந்த பிரகிருதியே ஜகத்தாயிற்று என்பது கூடாதது; ஏனென்றால், சமமான

---

(a) முன்னில்லாதிருந்தபோது— அசத்து.
உண்டானபோது- சத்து.

* இவ்விஷயம் அநுபந்தத்தில் பார்க்க.

(1) ஒரு காலத்திலும், ஒருவன் இச்சையினால் மட்டிலும் அசேதனமான வஸ்துக்களில் கிரியை காணப்படுகிறதில்லை என்ற காரணத்தால் இக்கேள்வி. ஈசனது இச்சையினால் அசேதனங்களான அணுக்கள் வெப்படுமானால், படர்களின்றி இராஜாவின் இச்சையினால் மட்டிலும் பாணங்கள் சத்துருக்களிடம் போர் புரியவேண்டுமே? இவ்விதம் ஆரம்பவாதம் அயுக்தமென்று தள்ளப்பட்டது.

(2) பரிணாமவாதம் தள்ளப்படுகிறது. நிரீச்வரரான சாங்கியர் சத்துவ இராஜ தமோ குணங்கள் சமமாயிருக்கும்

முக்குணங்களின் நிலை குலையக் காரணம் இல்லை. பிரளயத்தில் குணங்கள் சமமாக இருக்கவும் ஏது வில்லை. சேதன வியாபாரமின்றி ஜடங்களில் கிரியை ஏற்படாது. தான் ஜடமான பிரகிருதியினிடத்தில் சமமாகவே ஜகத்து வடிவமான பரிணாமம் நித்தியமாகும். ஆகையினால், ஜகத்தான காரியத்திற்குக் காரணமின்மை தென்று பிடிபடாமற் போய்விடுகின்றது. (3) இப்படிப்பட்ட பரோக்ஷ விஷயத்தில் (பிரத்தியக்ஷமாகத் தெரியாத விஷயத்தில்) நிச்சயத்தைக் கொடுக்கக் கூடியது சுருதியொன்றே. மற்றப் பிரத்தியக்ஷப் பிரமாணங்கள் ஏற்படா; ஏனென்றால், பிரமாதாக்கள் பூரணமின்றிப் பரிச்சின்னர்களாயிருப்பதாலும், பிரமாணம் அவஸ்தையாகி விடுகிறபடியாலும், காரியமானது கர்த்தாவின்றி உண்டாகிறது என்று மறுப்பதும் ஏற்படுகிறபடியாலுமாம்.

ஆகையினால், இந்த ஜகத்து, கர்த்தாவையுடையது என்பதும் அவன் சேதனன் என்பதும் சித்திக்கின்றன. இனிக்கேள்வியொன்று இந்த ஜகத்தான காரியத்தின் கர்த்தா சாதாரண கர்த்தாவைப் போலவா? அல்ல. ஆனால், அவன் அதிசயமான சக்தி பொருந்தியவனாயினும் அன்னியத்தில் சக்தியுடைய ஈசுவரத்தன்மையின் கிரமங்களை உடையவனாவானாகும்.

அவ் ஈசுவரத்திடமும் மற்றோரால் தன்னைத் தொகுத்த செய்யவியல்படியால், ஆயவன் சர்வேசுவரன் பிரபொருளில் பிரகிருதியென்றும், பிரகிருதி சமமாகிய குணங்களின் வைஷம்யத்தினால் ஜகத்தாக ஆகிறதென்றும் சொல்லுகின்றனர்.

(3) காரணமின்றி ஜகத்திருக்கிறதென்னும் பக்ஷத்தில் பலமுறைப் பிரசங்கிக்கிறபடியால், ஜகத் கர்த்தாவுடைய தென்றே ஏற்படுகிறது.



மாணங்களிலும் சிரேஷ்டமானது. ஆகமத்தில், சிருஷ்டிக்கு முன்னர் மகேசுவரன் ஒருவனேயிருந்தானென்றும், அவன் சுதந்திரனாயிருந்ததால் உபாதானங்களின்றியே தன் சுதந்திரத்தின் மாகாத்மியத்தால் தன் சொரூபமான சுவரினிடம் ஜகத்தான சித்திரத்தை இல்லையாகத் தோற்றுவிக்கின்றான் என்றும், சொல்லப்பட்டிருக்கின்றன. சொப்பனத்திலும் மனோராஜ்யத்திலும் தன்னால் கற்பிக்கப்பட்ட தேகத்தை "நான்" என்று அபிமானிப்பதுபோல ஈசனும் தன்னால் கற்பிக்கப்பட்ட ஜகத்தை அபிமானிக்கிறான். சொப்பனம் முதலியவற்றிலிருந்தும் நீ வேறாகிப் பிறந்தவனாகையால் அத்தேகங்கள் உன் சொரூபமாகாமை போலப் பிரளயத்தில் வேறுபடுகிறபடியால், ஈசுவரனுக்கும் ஜகத்தானது சொரூபமாகமாட்டாது. ஜாக்கிரமுதலிய அவஸ்தைகளில் தொடர்பில்லாதிருக்கும் நீ நாளைக்கு வேறாகிக் கேவல சின்மயமாக நிற்பது போல, ஈசனும் ஜகத்தில்லாத அழிவில்லாச் சித்தே தன் ஒரு வடிவமாக வுடையவன். அந்தச் சித்தேகவடிவனான ஈசனால் தன்னிடத்தில் இந்த ஜகத்தான சித்திரம் விளக்கப்பட்டது. தனக்கன்னியமான இருப்பும் தனக்கன்னியமான இடத்திலும் சம்பவியாதாகையால் தன்னிடத்திலன்றி எவ்விடத்தில் (4) விளக்குவான்? சித்தில்லாத எவ்விடத்தில் எப்பொழுது, [illegible] உண்டாகும்? ஆகவே சித்தின் [illegible] அந்தத் தேகமே (5) சித்தியாகும்.

---

(4) ஈசனுக்குப் பூரணத்துவம் சாதிக்கப்படுகின்றது.

(5) சித்தின் அபாவத்தில், தேகத்தின் பிரகாசம் ஏற்படாதாகையால், தேகம் சித்தியாது என்றது; தேகம் சித்திக்க

(a) சித்தின் அபாவம் எவ்விதமுண்டாகக்கூடும்? உண்டாகாதாகையால், பரையும் (b) மகாஸத்தையும் ஜகத்தைத் தன்னில் அடக்கினவளுமான சித்ரூபி பூரணையாக விளங்குகின்றாள். சமுத்திரமின்றி அலைகளிராததுபோலும், தினகரனின்றிப் பிரபையில்லாததுபோலும், ஸம்வித்தின்றி ஜகத்தில்லை.

ஆகையினால், சுத்த சைதன்னிய விக்கிரகனான இந்த மகாதேவன் சிருஷ்டிக்கு முன்னர் இருந்தான். சராசரங்களான இஜ்ஜகத்தும் அவனிடமிருந்தும் உற்பன்னமாகி, அவனில் ஸ்திதிசெய்து, முடிவில் அவனிடமே இலயமாகின்றது. இங்கே கூறியது ஆகமத்தின்பிரசித்தமான கருத்தாகையால், விபரீதத்தை அடையமாட்டாது. ஆகமத்தை ஒருபொழுதும் சந்தேகித்து விஸம்வாதம் செய்யத் தகாதாகையால், காணப்படாத விஷயங்களுக்கு ஆகமமே பிரமாணமாகும். (c) மணிமந்திரம் முதலியவற்றின் சித்தியை நாம் எங்கும் காண்கின்றோமாகையாலும், சிற்றறிவு

---

வேண்டுமானால் அது விளங்கவேண்டும் என்னும் நியாயத்தாவரம்.

(a) சித்து சர்வத்தையும் பிரகாசிப்பிக்கும் தன்மையுடையதாகையால், அதன் அபாவம் பிரகாசிக்க வேண்டுமானாலும் சித்தே வேண்டும். ஆகையால் சித்தின் அபாவம் சிந்திக்கத்தக்கதன்று என்பது கருத்து.

(b) மகாசத்தை = அபரிச்சின்னமாக இருத்தலை யுடையவள்.

(c) வேதம் முதலிய ஆகமங்கள் ஈசனால் மொழியப்பட்டவையென்பதற்குப் பிரமாணம் யாதென்றால் ஆகமங் கூறும் மணிமந்திரங்களால் பலனைக் கொடுப்பவையான சித்திகளைச் சாதகரிடத்தில் காண்பதேயாம்.



டையோர் மணிமந்திரங்களின் மகத்தானபலனை அறியாராகையாலும், ஸர்வ தரிசனமான ஆகமம் ஸர்வஞ்ஞனான ஈசனது மொழியேயாம். ஆகமம் மொழிவதாவது-ஜகத்தின் சிருஷ்டிக்குமுன் சின்மாத்திரமூர்த்தியான ஈசன் ஒருவனே ஆதியில் உபாதானமில்லாதவனாக இருந்துகொண்டு அகிலமான ஜகத்தையும் சிருஷ்டித்தனன். யாது காரணத்தினால் மகேசன் பூரணனும், கிருத்திரமமின்றிய சகஜமான சுதந்தரத்துடன் கூடினவனுமாயிருக்கிறானோ அதுபற்றித் தன்னிடத்திலேயே அதாவது சிதாத்மாவான சுவரில் அகிலஜகத்தான் சித்திரத்தை* உன்மீலனம் செய்கின்றான். சிதாத்மாவான தனக்குப்புறம்பாக இருப்புடையதாக ஜகத்து ஒருபொழுதும் உண்டாவதில்லை. ஈசன் பூரணனானபடியால், அவனுக் கன்னியமாக ஒரு ஸ்தானமும் இல்லை. அன்னிய ஸ்தானங்களில் இருத்தலையுடையதாக ஒன்றுமே ஒருபொழுதும் சித்தியாது. ஆகையினால் கண்ணாடியினுள் பிரதிபிம்பங்கள் தோற்றுவதுபோலவே தேவனிடத்தில் ஜகத்து உன்மீலனம் செய்யப்படுகிறதென்னுங் கொள்கையே சரியானது. ஜகத்கர்த்தாவான தேவனும் யோகியைப்போலவே ஜகத்தைச் செய்கின்றான். சங்கற்ப நகரம்போலவே தேவனுடைய சிருஷ்டியும் சிருஷ்டிப்பவனுக்கு அன்னியமாகாதது என்பது சம்மதம்.”

இராமா ! உன் மானஸிகமான சிருஷ்டி, கேவலம் மனோமயமாகவே யிருந்தும், அதனிடம் அநேக பிரமாதாக்களும் பிரமேயங்களும் ஏராளமாக விளங்கி அநேக வேற்றுமைகளால் வித்தியாசப்பட்டவைகளாக

---

* உன்மீலனம் செய்கின்றான்—விளக்குகின்றான்; வெளியிடுகின்றான்.

இருந்தாலும், அவை ஒருபொழுதும் மனதிற்கு அன்னியமாகா. மனதிலே உற்பத்தியாகி, மனதிலே யிருந்து அதன் கண்ணே இலயமாவதினால் அந்தச் சிருஷ்டியானது கேவலம் மனதின் வடிவமே யாவதுபோலச் சிவத்திலிருந்தும் ஜகத்துண்டாகின்றது.

அச்சிவனென்றால், சித்தே; தன் ஒரு வடிவமாகப் பொருந்தினவன்; சித்தன்றி வேறு வடிவ மில்லாதவன். அந்தச்சித்தே திரிபுரையும், அளவற்ற சக்திகள் ஒன்றாகிப் பொருந்தினவளும், ஸர்வ ஸாக்ஷிணியும் ஆகும். அந்தச்சித்தானவன் பரிச்சேதமின்மையால், எங்கும் பூரணமானவன். காலமும் தேசமுமே பரிச்சேதம் செய்வனவாக உலகில் கருதப்பட்டிருக்கின்றன. இவைகளில் வடிவமயமானதே தேசமெனப்படும்; கிரியாமயமாகவே காலம் சொல்லப்படும்.

யாதொரு சித்தின் ஏகதேசத்தை அடுத்தனவாக வடிவங்களும் கிரியைகளு மிருக்கின்றனவோ, அத்தகைய இவ்விரண்டினாலும் அந்தச் சித்திற்குப் பரிச்சேதம் எவ்வாறு உண்டாதல் கூடும்? எத்தேசத்தில் அல்லது எக்காலத்தில் சித்து இல்லை? அதனைக்கூறு. யாதொரு தேசத்தில் யாதொரு காலத்தில் சித்து இல்லையெனப் படுகின்றதோ அத்தேச காலங்கள் தான் எவ்வாறு ஏற்படப்போகின்றன?

(1) பதார்த்தங்களின் இருத்தலானது அவைகளின் பிரகாசமே (விளங்கலே) யன்றி வேறன்று.

---

(1) சூரியனுடைய வெளிச்சம் போலவே சித்து விஷயங்களைப் பிரகாசிப்பிக்கின்றது. சூரிய வெளிச்சம் இல்லாத பொழுதும் விஷயங்கள் இருட்டில் இருப்பதுபோலச் சித்தை அபேக்ஷியாமலே தேச காலம் முதலிய விஷயங்கள் இருக்கட்டுமேயென்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம்:—



பிரகாசமே சித்தென்று கூறப்படும்; சித்தன்றி யவைகட்குப் பிரகாசிக்கும் தன்மையில்லை. மற்றொன்றை அபேக்ஷியாமல் சுதந்தரமாக யாதொன்று பிரகாசிக்கின்றதோ அந்தப் பிரகாசமே முக்கியப் (2) பிரகாசமாகும். ஜடங்கள் சித்தின் சேர்க்கையினால் பிரகாசிக்கின்றபடியால், அவை சொப்பிரகாச வஸ்துக்கள் ஆகா. மற்றவைகளை அபேக்ஷியாமலே சித்து (3) தன்னிடத்தில் பிரகாசிக்கின்றது. ஜடங்களானவை சித்தை அடுத்துப் பிரகாசிக்கின்றனவே யல்லாது வேறு விதமன்று. பதார்த்தங்கள் பிரகாசியாத பொழுதும் அவைகள் இருத்தலுடையன வென்று கருதுவோமானால், இருக்கிறதென்றும் இல்லையென்றும் இவ்வுலகில் (4) வியவஸ்தை ஏற்படவே மாட்டாது.

ஆகையினால், உலகில், ஒரு வஸ்துவின் இருத்தல் என்பது சித்பிரகாசமேயன்றி வேறல்ல. எவ்வாறு பிரதிபிம்பங்களுக்கு ஸத்வம் (இருத்தலைக் கொடுப்பது) கண்ணாடியே ஆகின்றதோ, அவ்வாறே சித்தா

---

விஷயங்களின் ஸத்வம் (இருத்தல்) யாதென்றால் அவை விளங்கலே.

(2) கடம் பிரகாசிக்கின்றது என்பதுபோல் சித்தும் பிரகாசிக்கின்றது என்று வியவகாரத்தில் இரண்டும் பிரகாசிப்பனவாகக் கூறப்படும்பொழுது சித்தைத் திருசியங்களுக்கு ஆச்ரயமானதாக எவ்வாறு கூறலாமென்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம்.

(3) தன்னிடத்தில்—சமாதி முதலிய தசைகளில் [ஸ்வயமாகப் பிரகாசிக்கின்றது.]

(4) பாவங்கள் ஆகாயத்தை ஆச்ரயித்திருப்பது போலச் சித்தை ஆச்ரயித்திருக்கட்டுமே யென்றால், இருத்தலானது விளங்கல் என்பதில் நின்றும் வேறாகிவிடும்.

னது ஜகத்திற்கு இருத்தலைக் கொடுக்கின்றபடியால், யாவும் சித்தேயாகும்.

அந்தச்சித்துத் தன் நிர்மலத் தன்மையின் மாகாத்மியத்தால் (5) அதிகமாகப் பிரகாசிக்கின்றது. (6) கடினத் தன்மையினாலும் நிர்மலத் தன்மையினாலுமே (7) பிரதிபிம்பங்கள் விளங்குகின்றன. இவைகளின் தாரதம்மியத்தினால் பிரதிபிம்பங்கள் ஸ்பஷ்டமாகவும் அஃதன்றியும் தோற்றுகின்றன. கண்ணாடியிடத்திலும் ஜலத்தினிடத்திலும் இதனை ஸ்பஷ்டமாகக் காண்கின்றோம். கண்ணாடி முதலியன ஜடங்களானபடியாலும் அவைகளுக்குச் சுதந்தரமில்லாதது பற்றியும் பிம்பங்கள் தேவை. சித்து நிர்மலமானதும் சுதந்தரமானதுமாகையால் அதற்குப் பிம்பாபேக்ஷையில்லை. ஆகாயம் போல் பற்றின்றி மலினமகன்றதாகையால், சித்திற்கு நிர்மலத்தன்மை சுயமாக உள்ளது; (8) அநேக ரசத்

(5) யாவும் சித்தேயானால், சித்தாகவன்றோ பிரகாசிக்க வேண்டும்? கடம்படமென்று அதிக அம்சம் விளங்குவானேன் என்ற கேள்விக்குச் சமாதானம். அதிகம்—மிகுதியான அம்சம்.

(6) கடினத்தன்மை—வேறொன்றிற்கு இடங்கொடாதிருக்கும் தன்மை.

(7) பிரதிபிம்பம் உண்டாகும் காரணம் சொல்லப்படுகின்றது.

ஜலம் கடினமானதன்றாகையால், அதனில் பிரதிபிம்பம் ஸ்பஷ்டமாகிறதில்லை. சுவர் நிர்மலமின்றியது பற்றியும் ஆகாயம் கடினமின்றியது பற்றியும் இவைகளிற் பிரதிபிம்பங்கள் விளங்குகிறதில்லை.

(8) ஒரு வஸ்துவினிடம் மற்றவஸ்துக்கள் கலந்திருப்பது அநேக ரசத்தன்மையாம். சேறும் மண்ணும் அழுக்கும் ஜலத்தில் கலந்திருப்பது போல.



தன்மையே (பலவாறான வஸ்துக்களின் சேர்க்கையே) மாலின்யம் (மாசு) ஆகும். அஃது ஏகரச வடிவான சித்திற்கு இல்லை.

(9) சித் சக்தியானது எவ்விதத்திலும் அகண்டமானபடியாலும், அது மற்றொன்றிற்கு இடங்கொடுக்கும் தன்மையில்லாததானபடியினாலும், அது யாவற்றினும் அதிக நிர்மலமானது.

(10) சுயமாகவன்றிப் பிரகாசிக்கின்றவையின் விளக்கம் மற்றொன்றன் சேர்க்கையினாலேயே ஏற்படுகின்றது. பிரதிபிம்பத்தின் சொரூபத்தை உணர்ந்தவர்கள், யாவராலும் பார்வையிடப்பட்ட இந்த ஜகத்து யாவற்றையும் பிரதிபிம்பமாகவே கூறியிருக்கின்றார்கள். இது (ஜகத்து) ஒருபொழுதேனும் சுயமாக விளங்கவில்லை; சித்தை அடுத்தே இது (ஜகத்து) பிரகாசிக்கின்றது.

(9) சித்தினிடம் கடினத்தன்மை எவ்விதமென்றால்; பாறையானது தன்னுள்ளே வேறு ஒன்றிற்கு இடங்கொடாதாகையால், கடினமானதெனப்படும். ஜலமானது தனக்குள் பாறை முதலியன தங்கியிருக்க இடங்கொடுக்குமாதலால் கடினமின்றியதெனப்படும், சித்தானது அவ்வாறு வேறு ஒன்றிற்கு இடங்கொடுக்குமானால், அந்த வேறுவஸ்துப் பொருந்தியிருக்கும் இடத்தில் சித்தில்லை எனலாகும்; அது பற்றிச் சித்து கண்டமாகிவிடும். சித்தின்றிய தேசம் சித்தியாதாகையால், சித்து வேறொன்றிற்கும் இடங்கொடாது என்றர்த்தமாம்.

(10) ஜகத்துப் பிரதிபிம்பமென்பதற்குப் பிரமாணமில்லையாதலால், அதனைப் பிரதிபிம்பம்போன்றது எனக்கூடாது என்று சொல்லும் பக்ஷத்தில், பிரதிபிம்ப லக்ஷணங்கள் பொருந்தியிருக்கிறபடியால், பிரதிபிம்பத் தன்மையுடையது என்றே சொல்லலாகுமென்று பிரதிபிம்பத்தின் இலக்ஷணங்கள் கூறப்படுகின்றன. பிரதிபிம்ப ஜடமானது கண்ணாடியின்றி

ஆதலினால் ஜகத்தானது கண்ணாடிப் பிரதிபிம்பத்திற்கு நிகராகக் கூறப்பட்டிருக்கின்றது.

சித்து விசித்திரமான அன்னிய சொரூபங்களுடன் கலந்திருந்தாலும், விளக்க சொரூபமாகியே யிருப்பதனால் தன் சுயவடிவத்தைச் சற்றேனும் (1)நழுவவிடாததா யிருக்கின்றது. கண்ணாடிப்பிரதி பிம்பங்களுக்குக் கண்ணாடி யின்றி இருத்தலில்லாதது போலச் சிதாத்மாவில் பிரதி பிம்பித்தவைகளுக்குச் சிதாத்மாவின்றி இருத்தலில்லை. கண்ணாடியில் பிரதி பிம்பத்திற்குப் பிம்பம் காரணமாக நிரூபிக்கப்பட்டது போலச் சித்தினிடம் ஜகத்தின் பிரதிபிம்பத்திற்குச் சித்தின் சுதந்தரமே காரணமாகும்.

ஏ இராமா! உன்னுடைய சங்கற்பத்தினாலேயே உன்னிடத்தில் பிம்பங்களின்றி யுண்டாகுவனவும் நிமித்தமின்றி விளங்குபவையுமான பிரதிபிம்பங்களைப் பார்த்துக்கொள். சிதாத்மாவினிட மிருக்கும் சுதந்தரமானது தடிக்கும் பொழுது அதுவே திருசிய வடிவங்களாகின்றது. அவ்விதம் தடித்தெழும்பும் சுதந்தரம் சங்கற்பமெனப்படும். சங்கற்பமற்ற வேளையில் அந்தச் சித்தானவள் சொச்சமாகவும் ஏகரூபிணியாகவும் இருக்கின்றாள். சிருஷ்டிக்கு முன் இவ்வாறு சொச்சேக ரூபிணியாக விருந்த சித்தினுடைய பூரண சுதந்தர

---

விளங்காததுபோலும்; கண்ணாடியின் சேர்க்கை பற்றியே விளங்குவதுபோலும்.

(1) அன்னிய சொரூபங்களுடன் கலந்திருந்தாலும் தன் சொரூபத்தை நழுவவிடா திருப்பதே பிரதிபிம்பங்களைக் கிரகிக்கும் தன்மை.



மானது (2) சங்கற்ப வடிவத்தையடைந்தது. சங்கற்பத்தினால் இந்த ஜகத்தானது பிரதிபிம்பவடிவமாக விளங்கலாயிற்று. அது பூரணசங்கற்பமானது பற்றி இந்த ஜகத்து ஸ்திரமுடையதாக நீடித்தகாலம் விளங்குகின்றது. பூரண சுதந்திரத்தால் ஏற்பட்டதால் ஜகத்தானது யாவருக்கும் சாதாரணமாக விளங்குகின்றது.

(3) மற்றவர்களிடத்தில் இந்தச் சுதந்தரம் அபூரணமான படியால் அவர்களுடைய சங்கற்பத்தினால் ஏற்படும் பாவங்கள் யாவருக்கும் சாதாரணமாக விளங்கவில்லை. அப்பாசத்தினாலும் மணிமந்திர முதலியவற்றாலும் சுதந்தரத்தினிடமாக இருக்கும் சங்கோசம் (சுருக்கல்) விலக்கப்படும் பொழுது சங்கற்ப பாவங்கள் சாதாரணமாக விளங்கலாகும். இதற்குத் திருஷ்டாந்தமாக:—ஏ இராமா! இந்திர ஜாலக்காரன் செய்வதைப் பார்; ஓர் உபாதானமுமின்றித் தன் சங்கற்பத்தினாலேயே யானை குதிரை முதலிய விசித்திரமான ஜகத்தை எங்கும் விளக்குகின்றான். அது யாவருக்கும் சாதாரணமாகவும் ஸ்திரமாகவும் அர்த்தக்கிரியைகளுக்கு யோக்கியதையுள்ளதாகவும் காணப்படவில்லையா? பிறகு இந்திர ஜாலக்காரன் தன்னால்சிருஷ்டிக்கப்பட்டவைகளைத் தன்னிடத்திலே உபஸம்ஹாரஞ்செய்து விடுகின்றான். இவ்வாறே ஈசன் சிருஷ்டித்த ஜகத்தும் விளங்குகின்றது.

(4) இதுவுமன்றி யோகிகளுடைய பூரணமானதும்,

---

(2) சுத்த சித்தான தசையில் அவ்வேகவடிவமாயிருக்கும் சுதந்தரத்திற்குச் சிருஷ்டிக்கு முன்னர், ஜகத்து வடிவத்தையடைய வேண்டும் என்றுண்டாவதே சங்கற்ப மென்று கூறப்படும்.

(3) மனோசங்கற்ப பாவங்கள் மற்றவர்களுக்குச் சாதாரணமாகத் தோற்றாததற்குக் காரணம்.

(4) ஜாலக்காரனது சிருஷ்டி சொற்பகாலம் நிலைக்கின்ற

ஸ்திரமானதுமாகிய சிருஷ்டியையும் பார். யோகிகள் ஈசனை யபேக்ஷித்து மிதமானவர்களான படியால் அவர்களுடைய சிருஷ்டி வெளியில் தோற்றுகின்றது (தங்கள் சொரூபத்தினிடமாகச் சிருஷ்டி தோற்றவில்லை என்றர்த்தம்). ஈசன் அமிதனான படியால் இஜ்ஜகத்தின் சிருஷ்டியானது சின்னாதனாகிய அவனது ஆந்தரத்திலேயே ஆகும். அது பற்றிப் பிரதிபிம்பங்களுக்குக் கண்ணாடியின்றிச் சொரூபமில்லாதது போலச் சிதாத்மாவிற்கு வியதிரேகமாக ஜகத்து அசத்தானது; ஆதலால், விசாரத்தினால் பிரதிபிம்பமென்று உணரும் பொழுது ஜகத்து அஸத்தாய் விடுகின்றது; வேறு விதமன்று.

(5) சத்தியமானது தன் சுபாவத்தை நழுவவிடாது. அசத்தியமானது தன் சுபாவத்தைவிட்டுவிடும்.

ஏ பார்க்கவா! வெகு சஞ்சல சுபாவம் பொருந்திய இஜ்ஜகத்தைப்பார். பிரதிபிம்பங்களும் அவைகளை விளக்கும் கண்ணாடியும்போல் எங்குமுள்ள அகிலமான ஜகத்தை இன்னது ஸத்தியம் இன்னது அஸத்தியமென்ற பிரிவினைப்படி விசாரணை செய்துபார். கண்ணாடி அசலமாகவும் பிரதிபிம்பங்கள் சலிப்பனவாகவுமிருப்பதுபோல ஜகத்துச்சலமாகவும், ஸம்வித்து அசலமாகவும் இருப்பது யாவராலும் உணரப்படும். இது காரணமாகத்தான் பாவங்கள் விசாரணையைத் தாங்கமாட்டாதவைகளாயிருக்கின்றன. எவ்வாறென்றால், சூரியனது வெளிச்சமானது வஸ்துக்களை விளக்குந்தன்மையைப்

---

தென்னும் பக்ஷத்தில் விசுவாமித்திரர் முதலிய யோகிகளின் சிருஷ்டி பிரளயம் வரையிலும் நீடித்திருக்கிறதென்று சமாதானம் கூறப்படுகிறது.

(5) சத்தியமின்னதென்றும் அசத்தியமின்னதென்றும் அவைகளின் இலக்ஷணம் சொல்லப்படுகின்றது.



பொருந்தியிருந்தும், கோட்டான் முதலிய பகற் குருடானவைகளுக்கு விபரீதமான இருளாகின்றது. இதனால் பிரகாசத்தன்மை இன்னதென்றும் அந்தகாரத்தன்மையின்னதென்றும் ஸ்பஷ்டமாகப் பிரித்தறியக் கூடாமையால், பாவங்கள் விசாரத்தைச் சகிக்க மாட்டாதவையாம். இவ்விதமே, ஒருவனுக்கு விஷமாகியது மற்றொருவனுக்கு விஷமன்றியதாகிறது. மனிதர் முதலியவருக்குப் பித்தியானது (சுவரானது) அவர்களின் போக்கைத்தடுத்து விடுகின்றது; யோகிகளுக்கும் குஹ்யகர் முதலியோருக்கும் அவ்வாறு தடையைச் செய்கின்றதில்லை. மனிதர்களால் நீடித்தனவாகக் கருதப்பட்ட தேசகாலங்கள் தேவர்களுக்கும் யோகிகளுக்கும் விபரீதமாகத் தீர்க்கமின்றியவையாகி விடுகின்றன.

கண்ணாடியில் ஆரத்தில் விளங்குபவைகளின் ஆரமானது விசாரித்துப் பார்க்கும்பொழுது எவ்வாறு கண்ணாடியின் சொரூபத்தை விட இருப்பில்லாததாகவும் ஆரமின்றியதாகவும் ஆகிவிடுகின்றதோ, அவ்வாறே சித்தினிடம் விளங்குவனவான வெளிச்சம் முதலியனவையும் இருள் முதலியனவாகி விசாரிக்கும் பொழுது ஸ்திரமின்றியவையாகின்றன.

ஆகையினால், பிரதிபிம்பத்திற்கு ஆதாரமான சித்தின்றி ஒன்றுமேயில்லை. எது இருக்கிறதாக விளங்குகிறதோ அது மகேசுவரியான சித்தேயாகும்.

இவ்வாறாக ஜகத்து சித்தின் ஒரே வடிவமானதென்று உனக்குச் செவ்வையாகச்சொல்லப்பட்டது.

ஸ்ரீ திரிபுராரகசியம் ஞானகாண்டத்தில் ஜகத்தத்துவ நிரூபணமென்ற பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 12

இவ்விதம் தத்தாத்திரேயரிடமிருந்தும் ஜகத்தின் உண்மை வடிவத்தைக்கேட்ட பிறகும், சந்தேகங்களால் கலக்கப்பட்ட மனத்தனாகிய பார்க்கவன் பின்னும் கேட்கிறான்:—"பகவானே! தாங்கள் மொழிந்தவைகளைக் கேட்டேன். ஜகத்தின் உண்மை தாங்கள் சொன்னமாதிரியே யிருக்கின்றது; வேறு விதமின்று; அப்படியானாலும் இந்த ஜகத்து என்ன காரணத்தினால் எப்பொழுதும் உண்மையாகவே தோற்றுகின்றது. புத்திமான்களும் மற்றவரும் இதனை ஸத்தியமாகத் தீர்மானம் செய்திருப்பதற்குக் காரணமென்ன? தாங்கள் சொன்னதைக் கேட்டபிறகும் எனக்கு இது உண்மையாகத் தோற்றுவானேன்? என்னுடைய பிராந்தி நீங்குமாறு நாதா!. கிருபையுடன் எனக்குச் சொல்லவேண்டும்" என்றனன். பார்க்கவன் இவ்விதம் கேட்டபொழுது மகாத்மாவான தத்தாத்திரேயர், ஜகத்தை ஸத்தியமாகக் கருதும் பிராந்திக்குக் காரணமின்னதென்று சொல்ல ஆரம்பித்தனர். "இராமா! ஜகத்தின் பிராந்திக்கு அநாதியான மூலகாரணத்தைக்கேள். ஒரு வஸ்துவை அவித்தை பூர்வமாக வேறு ஒரு வஸ்துவாகத் திடபாவனை செய்வதே பிராந்தியின் காரணம். உதாகரணம் பார். ஆத்மாவை அறியாமல் சரீரத்தில் திடமாக ஆத்ம புத்தி யிருக்கின்றதன்றோ? இரத்தமாமிச அஸ்திகளெங்கே? அதிநிர்மலமான சிதாத்மா வெங்கே? கேவலம் பாவனையின் திடத்



தினாலேயே சிதாத்மா தேகமாகின்றான். ஆத்மாவான சித்ரூபத்தை அறிந்தாலும் பின்னும் சரீரத்தினிடத்துப் பிராந்தியுண்டாகின்றது. இவ்விதமே பாவனையினாலேயே ஜகத்தானது பின்னும் ஸத்தியமாகத் தோன்றுகிறது. அப்படியானாலும் விபரீதமாகப் பாவனை செய்தால் இந்தத் திடமான பிராந்தி அகன்றுவிடும். எவர்கள் எவ்விதம் பாவனை செய்கிறார்களோ அவர்களுக்கு ஜகத்து அவ்விதமாகின்றது."

யோகிகள் தங்கள் தாரணை தியானங்களால் ஜகத்து, பாவனைக்குத் தகுந்த வடிவுடையதென்று காண்கின்றனர். ஜகத்து பாவனைக்கு அனுரூபமானதென்று விளக்கும் பொருட்டு முன் காலத்தில் நடந்த ஒரு அற்புதமான கதையைச் சொல்லுகிறேன்—

வங்கதேசத்தில் பரம பாவனமான சுந்தரம் என்னும் பெயருடைய ஒரு புரியிருக்கின்றது. அங்குச் சுஷேணன் என்னும் பெயர் பெற்ற ஒரு புத்திமானான அரசன் இருந்தான். அவ்வரசனுக்குத் தமையனிடம் பிரியமுள்ளவனான மகாசேனன் என்ற ஒரு தம்பியிருந்தான். அவ்வரசன் தர்மத்தை முன்னிட்டு எல்லோருக்கும் சம்மதமாக இராஜ்ஜியத்தை ஆண்டு வரும்பொழுது ஒரு காலத்தில் மகேசனைத் திருப்தி செய்விக்கும் பொருட்டு அசுவமேதயாகம் செய்ய ஆரம்பித்தனன். அதற்காகப் பூப்பிரதக்ஷிணமாக மகாபல பராக்கிரமசாலிகளான இராஜகுமாரர்கள் வெகு சேனைகளுடன் யஞ்ஞக்குதிரையைப் பின் தொடர்ந்து சென்றனர்; அசுவத்தைத் தடுப்பவர்கள் யாவரையும் தங்கள் பல பராக்கிரமத்தால் ஜயித்துக்கொண்டு அசுவத்தின் பின்னேயே தொடர்ந்து ஐராவதி நதிக்கரைக்கு வந்தார்கள்; அங்குத் தபோநிதியான தங்கணர் என்ற

இராஜரிஷி யிருப்பதைப் பார்த்தும் அவரை வந்தனம் செய்யாமல் பாராதவர்போல் சென்றனர். அதனைத் தங்கணரின் புதல்வன் பார்த்து மிகக் கோபமுடையவனாகி யாகத்திற்கான அக்குதிரையைப் பிடித்துக் கட்டிவிட்டு இராஜ குமாரர்களைத் தூஷணை செய்தனன். அதன்மேல் இராஜகுமாரர்கள் அவனுடன் பலவாறாகச் சண்டை செய்தனர். அதன்பின் தங்கணரின் புத்திரன் குதிரையையும் எடுத்துக்கொண்டு, இராஜகுமாரர்கள் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுதே, எதிரிலிருந்த கண்டசைலமென்ற ஒரு மலைக்குள் நுழைந்து விட்டனன். அசுவத்துடன்கூடத் தங்கணரின் புத்திரன்மலைக்குள் மறைப்பட்டிருப்பதை இராஜகுமாரர்கள் பார்த்து அந்தக் கண்டசைலத்தை உயர்ந்ததும் தாழ்ந்ததுமான அஸ்திரங்களால் பிளக்க ஆரம்பித்தனர். பிளக்கப் பட்ட அந்தக் கண்டசைலத்திலிருந்தும் வெகுசேனைகளுடன் தங்கணகுமாரன் வெளிவந்து இவர்கள் யாவரையும் க்ஷணத்தில் ஜயித்துச் சுஷேணனுடைய சேனைகளை நாசஞ்செய்து, இராஜ குமாரர்களைப் பிடித்துக் கட்டி அவர்களுடன் கூட மறுபடியும் கண்ட சைலத்திற்குள் நுழைந்து விட்டனன். அதன்மேல், தப்பித்துக்கொண்டவர்களான படர்கள் அரசனிடம் சென்று, குதிரையும் இராஜகுமாரர்களும் கண்டசைலத்திற்குள் அகப்பட்டுவிட்டதைப்பற்றிக் கூறினர். சுஷேணன் மிகுந்த ஆச்சரியமடைந்து, தன் தம்பியிடத்தில் சொன்னதாவது, “தம்பி! தங்கணமுனிவிருக்கும் தேசத்திற்கு நீ சீக்கிரத்தில் செல்லவேண்டும்; தபசிகள் அளவிடப்படாத வீரியமுடையவர்கள்; அவர்களை மானிடரும் தேவர்களும் வெல்வது முடியாது. அவரைச் சந்தோஷப்படுத்திப் புத்திரர்களையும், குதிரை



யையும் விடுவித்துச் சீக்கிரத்தில் இங்கு அழைத்துவர வேண்டும். காலதாமதம் செய்தல் கூடாது. யாகத்திற்குத் தகுந்ததான வசந்தகாலம் அடுத்து வருகின்றது. தபசிகளை ஒருகாலத்திலும் அவமானஞ்செய்யக்கூடாது. தபசிகளுக்குக் கோப முதிக்குமானால் அவர்கள் ஒரு க்ஷணப்பொழுதில் உலகங்களை நீறாக்கி விடுவரன்றோ? ஆகையினால் அவர் பிரசாதிக்கும்படி முயற்சி செய்து வேண்டுதலைச் சாதித்துக் கொள்வாய்” என்று அரசன் ஆஞ்ஞாபித்தபொழுது மகாசேனன் தங்கணரிஷியிருக்கும் தேசத்திற்குச் சீக்கிரத்திற் சென்று திடமான சமாதியில் அமர்ந்திருக்கும் ரிஷிபுங்கவரைக் கண்டான்.

கட்டைபோலும் சுவர்போலும் நீக்கமின்றியும், இந்திரிய மனங்கள் ஒடுங்கினவராயும், நிர்விகற்ப ஞானையான சமுத்திரத்தில் மிகவும் இலீனமான தன்னுணர்வு உடையவராயும் தங்கணர் இருப்பதைப் பார்த்து, மகாசேனன் அவர் முன் தண்டாகாரமாக அடிக்கடி விழுந்து நமஸ்கரித்துப் பின் இருகைகளையும் கூப்பிக்கொண்டு பலவாறான தோத்திரங்களால் அந்த முனிசிரேஷ்டரைத் துதிசெய்தனன். இவ்வாறு மூன்று நாட்கள் அவன் துதிசெய்து வந்ததின் மேல், தன் பிதாவைத் துதி செய்ததனால் சந்தோஷ மடைந்தவனாகித் தங்கணரின் புத்திரன் தோன்றி மகாசேனனிடம் சொல்லுகின்றான். “இராஜனே! உமது துதியினால் நான் சந்தோஷமடைந்தேன். உமது கோரிக்கை இன்னதென்று சொல்லும்; தாமத மின்றி அதனைச் சாதித்துக் கொடுக்கிறேன். நான் இந்த விபுவான தங்கண மகாமுனியின் புத்திரன். என் பிதாவுடன் சம்பாஷணை செய்வதற்கு இது காலமன்று; இராஜனே! கேளும். இவர் இப்பொழுது சமாதியிலிருக்கிறார்; பன்னிரண்டு

வருஷங்கள் சமாதியிலிருந்து விட்டுத் தான் எழுந்திருப்பார். அவற்றுள், இப்பொழுது ஐந்து வருஷங்கள் தான் ஆயின; இன்னும் பாக்கி ஏழிருக்கின்றன. அவர் வெகுகாலமாக இந்நியமத்தை அனுசரித்து வருகின்றார். ஆகையினால் அவரிடமிருந்து நீர் யாதொன்றை விரும்புகிறீரோ அதனை இன்னதென்றுசொல்லும்; நான் சாதித்துக்கொடுக்கின்றேன்; என் பிதாவிற்கு ஒப்பான தபசுடைய என்னைச் சிறிய பாலனென்று கருத வேண்டாம், யோகிகளான தபசிகளுக்குக் கூடாதது உலகத்தில் ஒன்றுமேயில்லை" என்றனன். முனிகுமாரன் மொழிகளைக் கேட்டு, அதிபுத்திமானான மகாசேனன் தங்கணர் சுதனாகிய அவரை நமஸ்கரித்து அஞ்சலிசெய்து சொல்லுகின்றான். "முனி புத்திரரே! உண்மையாக என் கோரிக்கையைச் சாதித்துக் கொடுப்பீரானால், உமது பிதாவானவர் சமாதியிலிருந்து இப்பொழுது எழுந்திருக்க, அவருடன் சற்று நான் சம்பாஷணை செய்ய வேண்டுவதே என்னுடைய முக்கியமான கோரிக்கை; உமது கிருபைக்கு நான் பாத்திரனானால் இதனைச் சீக்கிரத்தில் சாதித்துக் கொடுக்க வேண்டும்" என்றனன்.

இராஜாவின் இவ்வசனங்களைக் கேட்டுத் தபசியின் குமாரன் பின்னும் சொல்லுகின்றான், "இராஜனே! நீர் கோரினது எவ்விதத்திலும் அசாத்தியமானது; ஆயினும் உமக்குச் சாதித்துக் கொடுக்கிறேன் என்று நான் வாக்களித்து விட்டபடியால் அதனை மறுத்து எவ்விதம் சொல்லுவேன்?

யோகத்தினால் எனக்கு உண்டாயிருக்கும் சாமர்த்தியத்தை ஒரு முகூர்த்த நேரத்தில் பாரும்; என்னுடைய குருவான இவர் இவ்வேளையில் பரமபாவ



னமான சாந்த நிலையில் அமர்ந்திருக்கிற படியால் அவரைப் பாகிய முயற்சிகளால் உணர்ந்தெழும்படி செய்ய யாருக்குத் தான் கூடும்? சூட்சுமமான யோகயுக்தியினால் இவரை உணர்ந்தெழும்படி செய்கின்றேன் பாரும்" என்றிவ்விதம் மொழிந்து விட்டுத் தங்கணசுதன் தன் இந்திரியங்கள் யாவற்றையும் நிரோதம் செய்து, ஒன்று(a)சேர்த்துப் பிராணனை அபானனிடத்தில் கூட்டி (b) முக்கியப் பிராணனுடன் வெளி வந்து தன் பிதாவின் தேகத்திற்குள் புகுந்து (c) இலீனமாயிருக்கும் அவர் மனதை ஆகர்ஷணம் பண்ணி அவரை உணரும்படி செய்து உடனே வெளிவந்து தன் தேகத்திற்குள் மறுபடியும் புகுந்தனன்.

---

(a) அபானவாயுவை நிரோதம் செய்து பிராணவாயுவை முழுதும் விரேசனம்பண்ணி வெளிக்கும்பகம் செய்து கொண்டு என்று அர்த்தமாம்.

விரேசனம் = இரேசகம்.

(b) முக்கியப் பிராணன் = அகங்கார வடிவமான அந்தக்கரணம். மரணகாலத்தில் அந்தக்கரணமானது இலீனமான வாசனா மயமாகிப் பிராணனுடன் வெளியிற் செல்லுகின்றது. அவ்வேளையில் அந்தக்கரணம் இலீனமானபடியால் அதற்கு ஒன்றும் தெரிகிறதில்லை.

பாகாயப் பிரவேசத்தில் அந்தக்கரணம் இலீனமாகாமையாலும், பாகியகும்பக அப்பியாசத்தின் தேர்ச்சியால் தன்னிஷ்டம்போலப் பிராணனுடன் தான் (அவ்வந்தக்கரணம்) வெளியிற் செல்லுவதாலும் அறிவுடனே யிருக்கிறது.

(c) இலீனமென்றால் இங்கு நிரோதம் செய்யப்பட்டது என்று அர்த்தமாம். அந்தக்கரணத்தில் தமசினால் இலயமும், இராஜசினால் போதமும், சத்துவத்தினால் நிரோதமும் ஏற்படுகின்றன.

அந்த க்ஷணத்திலேயே சாந்தசீலரான அம்முனிவர் உணர்ந்தவராகி, நமஸ்காரம் செய்வதுடன் தம்மைத் துதிசெய்துகொண்டு முன்னிற்கும் இராஜனைப் பார்த்து, இஃதென்ன வியப்பென்று நினைத்து யாவற்றையும் தம்யோக திருஷ்டியினால் அறிந்து பிரசன்ன சித்தத்துடன் தம் புத்திரனிடம் சொல்லுகின்றார். "குழந்தாய்! இதுபோல இனிமேற் செய்து விடாதே: குரோதமானது தபசிற்குச் சத்துருவாகும். இராஜாக்கள் உலகத்தைப் பாலனஞ்செய்வதால் தபசானது விக்கினமின்றி நடக்கின்றது. யாகத்திற்கு விக்கினம் உண்டுபண்ணுவது அசுரர்களுடையசுபாவமே; அஃது ஒருகாலும் முனிவர்களுடைய சுபாவமன்றே! சீக்கிரம் குதிரையையும் இராஜகுமாரர்களையும் நல்ல மனதுடன் இவரிடத்தில் ஒப்புவித்துவிடு. யாகமானது காலதாமதமின்றி நடக்க வேண்டியதாயிருத்தலின், இவர்சீக்கிரத்தில் செல்ல வேண்டும்" என்றார். இவ்விதம் சொன்னபொழுது முனிபுத்திரன் க்ஷணத்தில் கண்டசைலத்திற்குள் புகுந்து குதிரையுடன் இராஜ குமாரர்களைக் கொண்டுவந்து அவரிடத்தில் பிரீதியுடன் கோபமகற்றி ஒப்புவித்தனன்.

அதன்பிறகு, மகாசேனன் குதிரையுடன் இராஜகுமாரர்களை நகரத்திற்கு அனுப்பிவிட்டுத் தங்கணமுனிவரைத் துதிசெய்து அஞ்சலிகரங்களுடன் மிக விஸ்மய மடைந்தவனாகிக் கேட்கின்றான், "பகவானே! குதிரையுடன் என் தமையனுடைய புத்திரர்கள் எவ்விதம் இந்தக்கண்டசைலத்தின் கர்ப்பத்தில் (உள்ளில்) இருந்தார்களோ அதை நான்தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். அதனை எனக்கு விளக்க வேண்டும்" என்றனன். இவ்விதம் இராஜன் கேட்டபொழுது



அவனிடம் தங்கணர், "இராஜனே! கேளும், சொல்லுகிறேன். முற்காலத்தில் நான் அரசனாகவிருந்து கடல் சூழ்ந்த அவனியை நெடுநாள் ஆண்டு வந்தேன். மகாதேவனது பிரசாதத்தால் திரிபுரையும் சித்துரூபியுமான சர்வேச்வரியை உணர்ந்து உலகத்தின் நிலைமை இரசமின்றியதென்று தீர்மானித்து, உலக வியவகாரம் போதுமென்று கருதிப் புத்திரர்களிடத்தில் இராஜ்ஜியத்தை ஒப்புவித்துவிட்டு இவ்வனத்திற்கு வந்தேன். பதிவிரதையான என் மனைவியும் என்னோடு வந்தனள். அவளுடன்கூடத் தபசு செய்துவந்த எனக்கு இப்பொழுது ஆயிரம் வருஷங்களாய் விட்டன. என் மனைவி என்னையே சேவித்துவந்ததனால் சிரேஷ்டமான சித்தியை அடைந்தனள். ஒருகாலத்தில் பதிவிரதையான என்பிரியை வரப்போகிற காரியத்தின் கௌரவத்தால் ஒருதினம் சமாதியிலிருக்கும்பொழுது காமத்தில் விருப்புடையவளாயினள். பின் இரதியை இச்சித்தவளான அவள், கலைக்கக்கூடாத ஸ்திரமான சமாதியின்கண் அமர்ந்திருக்கும் என்னைப் பார்த்துக் காமவேகத்தைச் சகிக்க முடியாதவளாகி, என்னுடன் இரதியைத் தன் மனதில் பாவனை செய்தனள். இப்பாவனையின் மூலமாக அவள் என்னுடன் சம்போகத்தையடைந்து கர்ப்பம்தரித்து முன்னிற்கும் இப்புத்திரனைப் பெற்றனள்; புத்திரனை என் மடியில் வைத்துவிட்டுச் சமாதியிலிருக்கும் என்னை உணர்வடையச் செய்து தன் தேகத்தைப் பூதங்களிடத்தில் ஒன்றுபடுத்திப் பராகாயத்தைச் சார்ந்தனள். பின் மடியிலிருக்கும் இவனைப் பார்த்து அவள் பரகதி யடைந்ததையும் அறிந்து, அவளிடமிருந் துதித்தவனான இவன் மேல் எனக்கு மிகத் தயையுண்டாகியது. பின் இவன் என்

னால் வ[illegible] பட்டனன். நான் [illegible]றன் இராஜ்ஜியம் ஆண்டுவ[illegible] [illegible]திகளை என்னிடமிருந்தும் இவன் சில வேளை கேள்வியுற்று இராஜ்ஜியம் ஆளுவதில் விருப்புடையவனாகி என்னைப் பிரார்த்தித்துக் கொண்டனன். அதன் மேல் என்னுடைய உபதேசத்தால் இவன் உத்தமமான யோகசித்திகளைப்பெற்று, இந்தப் பெரும் பாறையின்கண் தன் பாவனையின் யோகத்தால் ஓர் உலகத்தை உண்டாக்கிக்கொண்டு, கடல் சூழ்ந்த அவ்வுலகத்தைத் தினமும் ஆண்டு வருகின்றான். அந்த உலகத்திலே தான், குதிரையும் இராஜகுமாரர்களும், பிடித்துவைக்கப்பட்டனர்; பின் அதிலிருந்தும் விடப்பட்டனர். கண்ட சைலத்திற்குள் அவர்களை வைத்தது இவ்விதந்தான் என்று தெரிந்து கொள்ளும்." என்று கூறினார். முனியின் இம்மொழிகளைக்கேட்டு இராஜன் பின்னும் கேட்கின்றான்: "தங்கள் மொழிகளைக்கேட்டேன், இது மிகுந்த ஆச்சரியமாகவே யிருக்கின்றது; அந்த உலகத்தைப் பார்க்க நான் விரும்புகிறேன், கிருபைகூர்ந்து எனக்குக் காட்டவேண்டும்." என்றான். இவ்வாறாக இராஜன் பிரார்த்தித்த பொழுது முனிவர் புத்திரனிடம் ஆஞ்ஞாபிக்கிறார். "குழந்தாய்! இவர் இஷ்டம்போல உன்னுடைய உலகம் யாவற்றையும் இவருக்குக் காண்பிப்பாய்" என்று சொல்லிவிட்டுப் பின்னும் சமாதியில் அமர்ந்தனர்.

பின் தங்கனாரின் குமாரன் இராஜனை அழைத்துக் கொண்டு கண்டசைலத்தினருகே சென்று தான் (முனி குமாரன்) சைலத்திற்குள் புகுந்தனன். இராஜன் புகுந்து செல்லக்கூடாமையால் முனிபுத்திரனைக் கூப்பிட்டான்; முனிபுத்திரன் கண்டசைலத்திற்குள் ளிருந்து கொண்டே இராஜனைக்கூப்பிட்டான். பிறகு முனிகுமா



ரன் திரும்பவும் வெளியில் வந்து அரசனிடம் சொல்லுகிறான். "இராஜனே! சொற்ப யோகியான உமக்கு இந்த உலகத்திற்குள் பிரவேசிப்பது சாத்தியமன்று; பாவனாயோக சித்தியில்லாமையால் இக்கண்ட சைலமானது உமக்குக் கனமாகவும் தடையுள்ளதாகவுமிருக்கும்; ஆயினும் என்பிதாவின் வசனங்களின் கௌரவத்தால் உம்மை எவ்விதத்திலும் அங்கு அழைத்துச் செல்லக்கடவேன். ஆகையினால் பூண்டுகள் சூழ்ந்த அந்தக் குகையிடத்தில் உமது தேகத்தைப் பத்திரமாகவைத்து விட்டு மனோமாத்திர சரீரமுடையவராகி என்னுடன் கூடச் சைலத்திற்குள் நுழையும்" என்றனன். இவ்விதம் மொழிந்த பொழுது, தேகத்தை அகற்ற முடியாதவனாக இராஜன் சொல்லுகின்றான். "முனியே! இந்தத் தேகத்தை நான் எவ்விதம் நீக்குவேன்? சொல்லும்; பலாத்காரமாக இதனை விலக்குவேனானால் எவ்விதத்திலும் நாசத்தை யன்றோ அடைவேன்" என்றான். இவ்விதம் சொல்லா நின்ற இராஜனிடத்தில் பரிகாசத்துடன் முனி குமாரன் சொல்லுகின்றான்.

"அஹோ! நீர் யோகம் அறியாதவர்; ஆயினும் கண்களை மூடிக்கொள்ளும்" என்று சொல்லிக் கண்களை மூடிக்கொண்ட இராஜன் தேகத்திற்குள்ளே அரைநிமிஷத்திற்குள் புகுந்து அவன் இலிங்க தேகத்தை ஆகர்ஷித்துக்கொண்டு குகையிலே அவன் ஸ்தூலதேகத்தைத் தள்ளி விட்டுத் தன் யோக சாமர்த்தியத்தினால் இராஜனுடன் சைலத்திற்குள் புகுந்து, ஸ்தூலதேகம் அகன்றதனால் சுழுத்தி பெற்றிருக்கும் இராஜனைத் தன் சங்கற்பத்தினால் ஏற்பட்ட வேறு தேகத்தினிடமாகச் சேர்த்து உணர்வுறச் செய்தான். அதன்பின் இராஜன் உணர்வுற்று முனியினால் பிடித்துக் கொள்ளப்பட்டவ

னாகி மகா ககனத்தில் தான் இருப்பதாகக் கண்டனன்; மேலேயும், சுற்றிலும் பயங்கரமானதும் அந்தமில்லாததுமான ஆகாயத்தைப் பார்த்து பயமடைந்து, "முனியே! என்னை விட்டுவிடாதேயும்; என்னை நழுவவிட்டால் ஆதாரமில்லாத இடத்தில் விழுந்து நாசமடைந்து விடுவேன்" என்று முனிபுத்திரனிடம் சொன்னான். இப்படிப்பயப்பட்ட இராஜனைப் பார்த்துப் பரிகாசத்துடன் முனிபுத்திரன், "இராஜனே! பயத்தை ஒழித்துவிடும். உம்மை விட்டுவிடமாட்டேன். தைரியத்துடன் கேளும். இதுதான் சைலத்திற்குள்ளிருக்கும் உலகம்." என்று மொழிந்தனன். பின்பு தைரியத்தைக் கைக்கொண்டு இராஜன் கீழ்ப்பாகமாக வெகு தூரத்திலே நக்ஷத்திரங்களிருக்கும் இருள்சூழ்ந்த ஆகாயத்தைக் கண்டான்; அவ்விடத்திற்குச் சென்றும் அதன் கீழ்ப்பாகத்தில் சந்திரமண்டலசமீபம் சென்று பார்த்து அங்குள்ள குளிர்ச்சியினால் * ஜடனாயினான்; சந்திரமண்டலத்தின் குளிர்ச்சியிலிருந்தும் முனிகுமாரனால் இரக்ஷிக்கப்பட்டுப் பின்பு சூரியலோகத்திற்குச் சென்று அதன் கிரணங்களால் தபிக்கப்பட்டபொழுது முனிகுமாரனது யோகபலத்தால் தேகம் குளிரப்பெற்றுத் தன் உலகத்தின் பிரதிபிம்பம்போ லிராநின்ற அவ்வுலகம் யாவற்றையும் பார்த்தனன். பிறகு ஹேமகிரியின் சிகரத்தில் அம்முனிபுத்திரனுடன் நின்று அவனால் காண்பிக்கப்பட்ட யாவற்றையும் அரசன் பார்த்தான்; வெகுதூரத்திலிருப்பதையும் பார்க்கும்பொருட்டுமுனியினால் அளிக்கப்பட்ட நற்பார்வையுடன் எல்லாம் சூழ்ந்ததனவாகவிருக்கும் உலோகாலோகம் என்றபெயருடைய பருவதத்தையும், அதன் புறம்பாகவுள்ள இருளின்

* ஜடனாயினான் = ஸ்பரிச உணர்வை இழந்தான்.



அடர்ச்சியையும், அதன் உள்ளாகச் சுவர்ண நிறமான பிருதிவியையும், சமுத்திரங்களையும், எழு த்வீபங்களையும், நதிகள், கிரிகள் முதலியவற்றையும், சகலபுவனங்களையும், இந்திரன் முதலான தேவர்களையும், அசுரர்களையும், நரர்களையும், இராக்ஷதர்களையும், யக்ஷர் கிம்புருஷர் முதலானவர்களையும் கண்டனன்; அங்குச்சத்தியலோகத்திலும், வைகுண்டத்திலும், கைலாயத்திலும் முனிபுத்திரன் தானொருவனே உலகங்களைச் சிருஷ்டி முதலியவை செய்வதற்காக அயன், மால் ஈசனாக வெவ்வேறாகி விளங்கிக்கொண்டிருப்பதையும் கண்டான்; அதன்பிறகு முனிகுமாரன் வேறுவடிவத்துடன் பூவுலகத்தில் சக்ரவர்த்தியாக உலகத்தை ஆண்டு வருவதையும் கண்டனன். இவ்வாறு முனிகுமாரனுடைய உத்தமமான யோகசித்திகளைப் பார்வையிட்டு மகாசேனன் விஸ்மயமடைந்திருக்கும் பொழுது முனிபுத்திரன் சொல்லுகின்றான். "இந்த உலகக்கூட்டங்களை நாம் பார்த்துக்கொண்டு வந்ததில் வெகுகாலம் சென்றுவிட்டது. இங்கு ஒருநாள் தான் சென்றதானாலும் பன்னீராயிரம் வருஷங்கள் வெளியுலகத்தில் சென்றுவிட்டன. ஆகையினால் என் பிதா வசித்துக்கொண்டிருக்கும் வெளியுலகத்திற்குச் செல்வோம்." என்று முனிசுதன் மொழிந்து இராஜனுடன் கூட மறுபடியும் முன்போலவே கண்டசைலத்திலிருந்து புறப்பட்டு வெளியிலே வந்தனன்.

ஸ்ரீதிரிபுராரகசியம்ஞான
காண்டத்தில் கண்ட சைலலோகப் பார்வை யென்னும்
பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்-13

மறுபடியும் சைலலோகத்திலிருந்தும் மகாசேனன் வெளிப்படுவதில் மூர்ச்சையினால் சுழுத்தியடைந்திருக்கும் அவனுடைய இலிங்கதேகத்தை முனிகுமாரன் எடுத்துக்கொண்டு வெளியில்வந்து அவன் சரீரத்திற்குள் நுழைவித்து ஜீர்ணமான தேகத்தை அடைந்த இராஜனை உணரும்படி செய்தான். பின், மகாசேனன் உணர்ந்தெழுந்து வெளியுலகத்தைப் பார்வையிட்டுப் புவியும் ஜனங்களும், விருக்ஷங்களும், பொய்கைகளும், மடுக்களும் நூதனமாக இருப்பதைப்பார்த்து, மிகவும் வியப்புற்றவனாகி முனி புத்திரனை வினவுகிறான். "மகாபாக்கியவானே! நான் இப்பொழுது பார்க்கும் உலகமானது ஏது? இது முன் கண்டதுபோலவன்றே யிருக்கின்றது? இந்த அற்புதத்தைச் சொல்லவேண்டும்" என்று மகாசேனன் கேட்க, அதற்கு முனிகுமாரன் சொல்லுகின்றான். "இராஜனே! கேளும். நாம் முன் நின்றுகொண்டிருந்த இந்த உலகமே, வெகுகால மாகிவிட்டதால் மாறுதலடைந்து வேறாயிருக்கின்றது.. சைல லோகத்திற்குச் சென்ற நமக்கு ஒருநாள்கழிந்ததற்குள் இங்குப் பன்னீராயிரம் வருஷங்கள் சென்றுவிட்டபடியால் இந்த உலகம் மாறுபட்டிருக்கின்றது. வேறுவிதமான வியவகாரங்களையும் அவ்வாறே வேறான பாஷைகளையும் பாரும். இவ்வாறே ஜனங்களின் நிலைமையானது நீடித்தகாலத்தால் வேறுபாடடைகின்றது. இவ்விதம்



ஜகத்தின் நிலைமை மாறுபாடடைவதை நான் வெகு[illegible]கப் பார்த்திருக்கிறேன். பகவானான என் பிதா சமாதியிலிருந்த இடத்தை இதோபாருங்கள்; அங்கு நின்றன்றோ நீர்முன் துதிசெய்தீர்; நீர் பார்வையிட்ட என்னுடைய உலகமிருக்கும் மகாசைலத்தை அதோ பாரும்; உமது அன்னைது வம்சத்தில் ஆயிரக்கணக்கான தலைமுறைகள் ஆய்விட்டன. வங்கதேசத்திலிருந்த சுந்தரம் என்ற உம்முடைய பட்டணமானது இப்பொழுது வனமாகி நாயாடிக்கூட்டத்தாரால்வசிக்கப்படுகின்றது. உமது பிராதாவின் வமிசத்தி லுதித்த வீரபாகு என்ற பெயருடையவன் சுப்பிரா நதிக்கரையில் விசாலம் என்ற பட்டணத்தில் மாளவ நாட்டிற் கதிபனாக இருக்கின்றான். உமது வமிசத்தி லுதித்தவனான சுசர்மன் என்றவன் தாமிர பர்ணீ நதிக்கரையில் வர்த்தமான என்னும் நகரில் திராவிடநாட்டிற் கரசனா யிருக்கிறான். உலகத்தின் நிலைமையானது எப்பொழுதும் இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறது. சொற்ப காலத்திலேயே ஜகத்தானது நூதனமாகத் தோற்றுவதா யிருக்க இங்கு நீடித்த காலமாய் விட்டபடியால், மலைகளும், நதிகளும், மடுக்களும், பூமியும், வேறுபாவத்தை அடைந்திருக்கின்றன. இவ்விதமே உலகத்தின் நிலைமையாம். கிரிகள் ஆழமாகிவிடுகின்றன; ஆழமான இடங்கள் மிகவும் உயர்ந்துவிடுகின்றன; மருபூமிகள்நீர் நிலைகளாகின்றன; பருவதங்கள் பொடியான கற்களாகின்றன; கடினமான மண் பாறை சமமாக அழகுள்ளதாகிறது; அழகான பூமியும் சிலவிடங்களில் கற்களைப்போலாகிறது. செழிப்பற்றபூமி செழிப்புடையதாயும் செழிப்புடையது செழிப்பற்றதாயும் மாறுகின்றன. இரத்தினங்கள் கற்களாயும் கற்

கள் இரத்தினங்களாயும் முடிந்துவிடுகின்றன. உப்பு ஜலம் மதுரத்தையும் மதுரமானவை க்ஷாரத்தன்மையையும் அடைகின்றன. சிலகாலத்தில் மனிதர்கள் அதிகமாயும், சிலவேளை மிருகங்கள் அதிகமாயும், சிலபொழுது கிருமிகீடங்கள் விருத்தியடைந்தும் உலகம் காணப்படுகின்றது.

இவ்வாறு காலத்தால் ஜகத்தில் மாறுதலடைந்து வெவ்வேறாக ஒவ்வொன்றும் காணப்படும்; ஆகையினால் நமக்கு முன்னிருந்த உலகமே இப்பொழுது இவ்விதமிருக்கின்றது." என்று முனிசுதன் கூற அரசன் மிகவும் சோகமுற்றவனாகி, மூர்ச்சையடைந்தான். பின் முனிபுத்திரனால் தெளிவுபெற்று மகாசேனன் நினைவையடைந்து அளவில்லாத சோகத்தினால் எளியவனைப்போல அழுதனன். தன் அண்ணனையும் அண்ணன் குமாரர்களையும் தன் மனைவியரையும் தன் புத்திரர்களையும் நினைத்துக்கொண்டு மிகத் துக்கமடைந்து வெகுவாக அழுதான். பிறகு, தன் அண்ணன் முதலானவரைப்பற்றி மோகத்தினால் சோகப்படும் இராஜனுக்கு உடனே போதம் உண்டாவதற்காக முனி குமாரன் சொல்லுகின்றான், "இராஜனே! நீர் நிச்சயமாகப் புத்திமான். இஃது என்ன? எதற்காக நீர் சோகப்படுகின்றீர்! புத்திமான்கள் பலனின்றியகாரியத்தில் முயற்சி செய்யார்கள். பலனின்னதென்று கருதாமல் காரியத்தைச்செய்வது பாலர்களின் தன்மையே, ஆகையினால், யாருக்காகச் சோகப்படுகின்றீர்? சொல்லும். எதற்காக நீர் வியசனப்படுவது?" என்றிவ்வாறுகேட்ட முனிபுத்திரனிடம் மகாசேனன் பின்னும் வெகுதுக்கத்துடன் சொல்லுகின்றான். "மகாமுனியே! என்னுடைய சோகத்திற்குக் காரணம் இன்னதென்று உமக்குப்



புலப்படவில்லையா? யாவற்றையும் இழந்தவனான என்னுடைய சோகத்திற்குக் காரணம் என்னவென்று ஏன் கேட்கின்றீர்? ஒன்றிழந்ததாலேயே உலகத்தில் ஒருவர் சோகப்படுவதாயிருக்க யாவற்றையும் நான் பறிகொடுத்திருக்கும்பொழுது ஏன் பின்னும் அவ்விதம் கேட்கின்றீர்?" என்றிவ்வாறு மகாசேனன் சொன்னபோது, முனிபுத்திரன் பரிகாசம் போலப் பின்னும் சொல்லுகின்றான். "இராஜனே! சொல்லும்; இதுதானா உம்முடைய ஸாரதரமான குலதர்மம். (a) வியசனப்படாமலிருந்துவிட்டால், அவதூறு ஏற்பட்டுவிடுமா? அல்லது வியசனப்பட்டதனால் இழந்துபோனது திரும்பவும் அடையலாகுமா? இராஜனே! தைரியத்தைக்கொண்டு ஆலோசித்துப்பாரும். வியசனப்பட்டதனால் யாது பலன் உண்டாகும்? இழந்தபந்துக்களைப்பற்றி வியசனப்படவேண்டியது கடமையானால், அதற்குச் சமாதானம் சொல்லுகிறேன் கேளும். பாட்டன் முதலானவர்களான கணக்கில்லாத பந்துக்கள் முன் இழக்கப்பட்டவர்களாயிருப்பதனாலே அவர்களைப் பற்றிச் சதா வியசனப்படவேண்டியதாயிருக்க, இதற்கு முன் அவர்களைப்பற்றி ஏன் வியசனப்படவில்லை? இதுவுமன்றி, உமக்குப் பந்துக்கள் யாவர்? அவர்களிடத்தில் எவ்விதம் உமக்குப் பந்துத் தன்மை? ஒருகர்ப்பத்தில் வசித்ததனால் உடன் பிறந்த பந்துத்துவமென்றால், தாய் தகப்பன்மாரது அல்லது தனது தேகத்தில் உற்பன்னமானவை அல்லது தேகத்திற்குச் சம்பந்தப்பட்டவையான கணக்கில்லாத புரீஷ கிருமிகள் (மலப் புழுக்கள்)

---

(a) சோகப்படாவிட்டால் குல தருமத்திற்கு எங்கு ஹானிவந்து விடுமோ வென்று சோகப்படுகிறீரா என்று அர்த்தம்.

ஏன் உமக்கு பந்துக்கள் ஆகா? அவைகளைப் பற்றி ஏன் வியசனப்படுகிறதில்லை. இராஜனே! நீர் இன்றொன்றும் வியசனத்துக்குப் பாத்திரமாக இழுக்கப்பட்டவர் இன்றொன்றும் விமர்சம் (ஆலோசனை) செய்து பாரும். நீர் தேகமா? அல்லது தேகத்திற்கு வேறா? தேகமென்றால் அது சங்காத (கூட்டு) வடிவமானது.

சங்காதத்தில் ஏகதேசம் நாசமடைவதையா அல்லது முற்றும் நாசமடைவதையா நாசமென்று சொல்வது? தேகத்தினிடத்து அடிக்கடி ஏகதேசத்தின் நாசம் காணப்படுகின்றது. மூத்திரம், மலம், சிலேஷ்மம், நகம், கேசம் முதலியனவை சதாநாசமடைந்து வருகின்றன. முழுமையுமான சங்காதத்தின் நாசமானது நினைக்கக்கூடியதன்று; ஏனென்றால், உம்முடன் பிறந்தவர்களுடைய தேகங்களின் அம்சமாக மண்முதலியவை யிருக்கின்றன என்பது ஸ்பஷ்டமே. தேகத்தின் அம்சமான மண் அழிந்துவிட்டாலும்முடிவில், ஆகாயமானது அழியாது கேவலமாயிருக்கும். நீர் தேகமல்ல; பின், யாரென்றால், தேகி. அதனை நீர் என்னுடைய தேகமென்று சொல்லுகின்றீர். என்னுடைய வஸ்திரம் என்பது போலச்சொல்வதனால், நீர் எவ்விதம் தேகம் ஆவீர்? நீர் இத்தேகத்திற்கே பின்னமாயிருக்கும் பொழுது அன்னிய தேகத்தில் உமக்குச் சம்பந்தம் ஏது? பிராதா முதலியவர்களின் வஸ்திரங்களிடத்து எவ்விதத்தாலும் சற்றுவது சம்பந்த மில்லாததால், விசேஷமில்லாது அவர்கள் தேகத்திலிருக்கும். அவை நஷ்டமாகும் பொழுது உமக்கு வியசனமுண்டாகாதிருக்க, வஸ்திரம் போன்ற தேகநாசத்திற்காக வியசனப்படுவானேன்? என் சரீரம் என் கண்கள், என் பிராணன், என்மனது என்றவாறாக



நீர் சொல்லும் பொழுது உமக்கு என்ன சொரூபம். இராஜனே! சொல்லும்—என்றான். இவ்விதம் கூறிய பொழுது மகாசேனன் ஒரு முகூர்த்தம் ஆலோசித்து முனியின் வினாவிற்கு முடிவு தோன்றாமல், மிகவும் தீனனாகச் சொல்லுகின்றான். பகவானே! நான் யாரென்பது எவ்விதத்தாலும் எனக்குத் தெரியவில்லை. சுபாவமாக வியசனப்படுகின்றேனே யொழிய அதன் காரணம் எனக்குப் புலப்படவில்லை. தீனனான நான் தங்களைச் சரணமடைந்திருக்கிறேன். பகவானே! இதன் காரணத்தை அருளவேண்டும். எவராகிலும் ஒருபந்து இறந்து விட்டால் எல்லோரும் வியசனப்படுகிறார்கள். அதென்ன காரணம்? அவர்கள் ஆத்மாவை அறிந்தவர்களுமல்லர். அன்னியனுக்காக வியசனப்படுகிறதுமில்லை. பகவானே! தங்கள் சிஷ்யனான எனக்கு ஸ்பஷ்டமாக இதனைச் சொல்லவேண்டும் என்று இவ்விதம்கேட்டபொழுது முனிபுத்திரன் மகாசேனனிடத்தில் சொல்லுகின்றான். "இராஜனே! கேளும். (a) மகாதேவியின் மாயையினால் ஜனங்கள் மோகமடைந்து தங்கள் ஆத்மாவை அறியாமலே வியர்த்தமாக (பிரயோஜன மின்றிச்) சதாவியசனப்படுகின்றனர். சத்தான தங்கள் ஆத்ம தத்துவத்தை அறிந்துகொள்ளாதிருக்கிற வரையிலும் ஜனங்கள்வியசனப்படுகின்றனர். அதனை அறிந்துவிட்டால் மறுபடி ஒருபொழுதும் வியசனப்படுகிறதில்லை. நித்திரையினால் (b) மயக்கமடைந்தவன் தன்னை அறியாது வியசனப்

(a) சோகத்திற்கு ஆத்மாவினது அஞ்ஞானமே காரணம்; அஞ்ஞானத்திற்கு ஈச்வரனுடைய மாயையென்ற சுதந்தாமே ஏது.

(b) தான் கட்டிலின்மேல் படுத்துறங்குவதை மறந்துவிட்டுச் சொப்பனத்தில் வழியில் மறித்துத் திருடர்கள் தன்

படுகிறது போலும், இந்திர ஜாலக்காரனது மந்திரத்தினுடைய மாயையினால் மயங்கின நரன் அவனால் கற்பிக்கப்பட்ட சர்ப்பங்களைக்கண்டு பயந்து வியசனப்படுவது போலும் மாயையினால் மோகமடைந்தவன் தன்னை அறிந்துகொள்ளாமல் வியசனப்படுகின்றான். சொப்பனத்திலிருந்து விழித்துக்கொண்டவனும், இந்திரஜாலக்காரனது உளவு தெரிந்தவனும், எவ்வாறு ஒரு பொழுதும் வியசனப்படார்களோ வியசனப்படும் மற்றவர்களைப் பார்த்துப் பரிகாசங்கூடச் செய்வார்களோ அவ்வாறே ஆத்மாவை அறிந்தவர்கள் மாயையினின்றும் விடுபட்டவர்களாகி ஒருபொழுதும் வியசனப்படார்களென்பது மாத்திரமன்று; உம்மைப்போல மாயையின் மயக்கத்தால் வியசனப் படுகிறவர்களைப் பரிகாசமும் செய்வார்கள்.

ஆகையால், நீர் ஆத்ம தத்துவத்தை உணர்ந்து, கடப்பதற்குப்பிரயாசமான மாயையைத்தாண்டி, அடிக்கடி ஆத்மானுசந்தானஞ்செய்து, மகாவீரனே! மோகத்தால் உற்பன்னமான சோகத்தை யொழியச்செய்யும்." என்றான். இவ்விதம் சொன்னபொழுது மறுபடியும் மகாசேனன் முனிசிரேஷ்டரிடம் "பகவானே! தாங்கள் மொழிந்த திருஷ்டாந்தமானது விஷமமாகவன்றோ இருக்கின்றது? சொப்பனத்தி லுண்டாவதும், மாயாவிகள் கற்பிப்பதும் கேவலம் சூன்யத்தன்மையுடையனவாகவே விளங்குகின்றன. சத்தியமாயும், சகலபொருள்களுக்கும் சாதகமாயும், பாதிக்கப்படாததாயும், ஸ்திரமாயும் இருக்கும் இந்த ஜாக்கிரப் பிரபஞ்சமானது எவ்விதம் சொப்பனத்திற்கு நிகரானதாம்?" என்று,

---

சொத்து முழுவதையும் பறித்துக் கொண்டுபோயினரென்று வியசனப்படுவதுபோல.



கூறினான். அதற்கு அதிபுத்திமானான முனிபுத்திரன் பின்னும் சொல்லுகின்றான். "கேளும், இராஜனே! திருஷ்டாந்தம் விஷமமானதென்று நீர் மொழிந்ததானது (1) சொப்பனத்தி லமர்ந்தும், பிராந்தியுண்டாவதுபோல உம்முடைய (2) இரண்டாவது மோகமாகின்றது. சொப்பன விருக்ஷமானது சொப்பன காலத்தில் எதனைச் சாதித்துக்கொடுக்கவில்லை. சொப்பனவிருக்ஷம் தன் நிழலின் பரவுதலினால் சொப்பனத்தில் தோற்றும் வழிப்போக்கர்களின் வெப்பத்தைத் தணிக்கவில்லையா? சொப்பனம் மனிதர்களுக்குப் பழங்களைக் கொடுத்துத் திருப்தியுண்டாகும்படி செய்யவில்லையா? சொல்லும். சொப்பனத்தில் சொப்பன விஷயங்கள் எங்கு பாதிக்கப்பட்டனவாயும் அஸ்திரமாயும் காணப்படுகின்றன? சொப்பனத்தில் காண்பவையாவும் ஜாக்கிரத்தில் பாதிக்கப்படுகின்றன என்று சொல்லும்பக்ஷத்தில், ஜாக்கிரப் பிரபஞ்சமும் யாவும் சுழுத்தியில் பாதிக்கப்படவில்லையா? ஜாக்கிரப் பிரபஞ்சம் அடுத்தநாளில் அனுவிருத்தியாகத் தோற்றுகிறபடியால் பாதிக்கப்படவில்லையென்று சொல்லும்பக்ஷத்தில், சொப்பனவிஷயங்களுக்கும் அடுத்தநாள் சொப்பனத்தில் அனுவிர்த்தியான தோற்றம் இல்லையா? சொல்லும். அனுவிர்த்தியான தோற்றம் சொப்பனத்தில் இல்லையென்னும் பக்ஷத்தில், இராஜனே! கேளும்.

---

1. சொப்பன தசையில் ஒருவன் கயிற்றைக் கண்டு பாம்பென்று பிராந்தி கொள்வது போல.

2. திருஷ்டாவி லிருந்தும் திருசியமானது வேறானதென்றும் சத்தியமென்றும் தோற்றுவது முதற் பிராந்தி. இங்குத் திருசியங்களில் சொப்பனம் முதலியவை அசத்தியமென்பது இரண்டாவது பிராந்தி.

அன்றன்று புதிதாகத்தோற்றும் ஜாக்கிரப் பிரபஞ்சத்திலும் (3) அனுவிர்த்தியான தோற்றம் வது? அன்றாடம் புதிதான ஜாக்கிரத் தோற்றங்களில் அனுவிர்த்தியில்லாவிடினும், மற்றச் (4) சிலவற்றில் அனுவிருத்தி காணப்படுகிறதென்று சொல்லுவீரானால், அவ்விதம் சொப்பனத்திலும் ஸ்திரமான தோற்றங்களில் அனுவிருத்தி விளங்குகின்றது. சொப்பனத்திற்கானும் அனுவிருத்தி பிராந்தியினால் ஏற்பட்டதென்று சொல்லும் பக்ஷத்தில், ஜாக்கிர அனுவிருத்தியும் அப்படியேயாகும். ஜாக்கிரத்தில் விஷயங்களின் நிலைமையைச் சூக்ஷ்மபுத்தியினால் விசாரித்துப் பாரும்.

க்ஷணத்திற்கு க்ஷணம் மாறிக் கொண்டிருக்கின்ற தேகம், விருக்ஷம், நதி, தீபம் முதலியவற்றின்கண் அனுவிருத்தியானது எவ்விதம் முன் போலவே விளங்கிக் கொண்டிருக்கும்? எப்பொழுதும் அருவிகளால் மாறுதலடைந்து கொண்டிருக்கும் பர்வதங்களுங் கூட இரண்டாவது க்ஷணத்தில் அதே வடிவாக இருக்கவில்லை. மூஷகம் உபதிகம் என்னும் பற்பல கிருமிகளாலும் அருவிகளின் ஒழுங்கினாலும் பர்வதங்கள் எங்கும் எப்பொழுதும் மாறுத லடைந்து கொண்டே யிருக்கின்றன. பூமியின்கண் முக்கியமாயுள்ள பர்வதங்களும், சமுத்திரமும் இந்தப் பிரகாரமே க்ஷணத்திற்கு க்ஷணம் மாறிக் கொண்டே யிருக்கின்றன.

---

3. ஜாக்கிரத்தில் ஒவ்வொரு க்ஷணத்திலும் விஷயங்கள் புதிதாகத் தோற்றுகின்றன.

4. கிரியை முதலிய க்ஷணிக பாவங்களில் அனுவிருத்தியில்லாவிடினும், பிருதிவி, பர்வதம், சமுத்திரம் முதலியவைகளில் அனுவிருத்தி (தொடர்ச்சி) யிருக்கிறதென்று சொல்லும் பக்ஷத்தில்.



ஆகையினால் உமக்குச் சொல்லுகிறேன் இராஜனே! சூக்ஷ்மபுத்தியினால் விசாரணை செய்யும் (1) பரிச்சின்னமான அனுவிருத்தி சொப்பனத்திலும் ஜாக்கிரத்திலும் ஒருவிதமே. அபரிச்சின்னமான அனுவிருத்தி காரியங்களிடத்தில் மிகவும் அரிதாம். அனுவிருத்தியானது (2) காரண வடிவமாக எப்பொழுதும் இருக்கிறதென்னும் பக்ஷத்தில் காரணமானது பிருதிவி முதலியவற்றின் வடிவாகவன்றோ இருக்கிறது. சொப்பனத்திலும் பிருதிவி முதலியவைகள் தோற்றுகிறபடியினால், அங்கும் காரண அனுவிருத்தி யிருக்கின்றது.

தவிர, சொப்பன விஷயங்களின் பாதை ஜாக்கிரத்தில் அனுபவிக்கப் படுவது போல ஜாக்கிர விஷயங்களின் பாதை ஒருவனுக்காவது ஒரு பொழுதும் விளங்கவில்லையே யெனின், கேளும், சொல்லுகிறேன். (1) பாதை என்பது தோன்றாமையாம். சுழுத்தியில் எல்லா ஜகத்தினுடைய தோன்றாமையும் அனுபவிக்கப் படுகின்றது.

---

(1) காலத்தினால் பரிச்சின்னமான அனுவிருத்தி சொப்பனத்திலும் ஜாக்கிரத்திலும் ஒன்று போலிருக்கின்றது.

(2) பரிணாமவாதிகள் காரணத்திற்கு வேறாகக் காரியமில்லை யென்று ஒப்புக்கொள்வதினால், ஜகத்திற்குக் காரணரூபமான அனுவிருத்தி யுண்டென்னும் பக்ஷத்தில்.

(1) இது இரஜதம் (வெள்ளி) என்றுண்டாகும்தோற்றத்தினால் முன்னிருந்த "இஃது இரஜதமன்று" என்னும் விபரீதத் தோற்றமானது அழிவதே பாதையாகும். இருப்பது தோன்ற வேண்டுமாகையாலும், தோன்றாதது இராது என்னும் நியமித்தினாலும் பாதையென்பது தோன்றாமையெனப் பட்டது.

பாதை யென்பது (2) தோன்றுமையன்று. (3) பிரமாண தரிசன மில்லாமையே பாதை யென்று சொல்லும் பக்ஷத்தில், அப்பிரமாண மென்ற திருஷ்டி உம்மைப் போலப் பிராந்தியுள்ள வர்களுக்கு இல்லையன்றோ? (4) அப்பிரமாண திருஷ்டியானது ஞேய தத்துவத்தை உணர்ந்த வர்களுக்கே ஸ்பஷ்டமாக இருக்கும்.

ஆகையினால் இந்தத்திருசியக் கூட்டங்கள் சொப்பனதிருசியங்களுக் கொத்த நிலையுடையன. சொப்பனத்தில் காலம் நீடித்ததாக இருந்தாலும் அது விசேஷமின்றி விளங்குகிறது. ஆகையினால் பாதையின்மை, பொருள் கிரியை முதலியன சாதித்தல், ஸ்திரத் தன்மை யென்பன, சொப்பன பாவங்களிலிருப்பது போலவே ஜாக்கிர பாவங்களில் எப்பொழுது மிருக்கின்றன. ஜாக்கிர வேளையில் ஜாக்கிரத் தன்மையை ஸ்பஷ்டமாகக் கைக்கொண்டிருப்பது போலவே சொப்

---

அப்பிரமாண திருஷ்டி=பிரமாண மன்று என்னும் திருஷ்டி.

(2) கடத்தின் தோற்றத்தினால் கடத்தின் முன்னிருந்த தோன்றுமை பாதிக்கப்படுகிறதினால் தோற்றுமை பாதையாகா தென்னும் பக்ஷத்தில் என்றர்த்தமாம்.

(3) சொப்பனத்தில் கண்டவைகளில் "இவைபிரமாண மன்று" என்னும் ஞானம் யாருக்கும் விழித்தவுடன் உண்டாகிறது. இந்தப் பிரமாண மின்றிய திருஷ்டியே 'பாதை' என்னும் ஆக்ஷேபத்திற்குச் சமாதானமாம்.

(4) சொப்பனப் பிரமாதாவுக்குப் (சொப்பன தசையுள்ளவனுக்கு) பிரமாண மின்றிய திருஷ்டி யில்லாதது போலத் தத்துவ உணர்ச்சி யில்லாதவர்களுக்கு ஜாக்கிரத்திலும் பிரமாண மின்றிய திருஷ்டி கிடையாது.



பனத்திலும் ஜாக்கிரத் தன்மையானது கைக்கொள்ளப் பட்டே யிருக்கின்றது. இவ்வாறு இருக்கும் பொழுது இராஜனே! (5) சொப்பன ஜாக்கிரங்களைப்பற்றி என்ன விசேஷமிருக்கிறது? அதுவுமன்றிச் சொப்பன பந்துக்களைப்பற்றி நீர் ஏன் வியசனப்படுகிறதில்லை.

ஜகத்தானது சத்தியமென்னும் கேவல அநுசந்தானத்தினால் 'ஜகத்து உண்மை' என்பது ஏற்படுகின்றது. அது சூன்யமென்று பாவிக்கப்படுமானால், தடையற்ற சூன்யமாகும். 'இது அப்பிரமாணம்' என்னும் நிச்சயம் ஏற்படாதவரையில் † பாவனையானது

---

(5) ஆனால், நடந்த சொப்பனத்தைப் பற்றி ஜாக்கிரத்தில் அனுசந்தான மிருப்பதுபோல, ஜாக்கிரத்தைப் பற்றிய அனுசந்தானம் சொப்பனத்திலில்லை யென்று ஆக்ஷேபிக்கும் பக்ஷத்தில், ஆபாத திருஷ்டியுடையவருக்கு இப்படி விஷமமாகத் தோன்றுமே யொழியப் பூரண திருஷ்டியுடையவருக்கு விஷமமாகத் தோன்றாது.

சொப்பனத்தில் அனுசந்தானம் முழுவது மில்லையென்றோ? சிறிது மில்லையென்றோ ஆக்ஷேபம்? இருவிதத்திலும் தோஷமில்லை. சொப்பனத்தின் அனுசந்தானம் ஜாக்கிரத்தில் முழுவதுமாயிருக்கின்றதா? அல்லது சிறிதா? சொப்பனத்தின் அனுசந்தானம் சிறிதிருக்கிற தென்னும் பக்ஷத்தில், "முன்தினத்தில் அவன் என்னுடன் இவ்வாறு சம்பாஷணை செய்தான்" என்னும் ஜாக்கிர வியவகாரம் சொப்பனத்தில் நினைக்கப்படுவதில்லை யன்றோ என்று சமாதானம்.

† நான் இப்பொழுது சூன்ய பாவனை செய்தும் ஜகத்து ஏன் சூன்யமாகத் தோற்றவில்லை யென்ற சங்கைக்குப் பாவனைசித்தி சொல்லப் படுகிறது. பாவனை-இஃது இப்படி, இஃது இப்படியன்று, என்ற நிச்சயம் கொள்ளாமை. சுத்தியில் 'இது வெள்ளி' யென்னும் பாவனை 'இது வெள்ளியன்று' என்னும் நிச்சயத்தினால் நாசமாகின்றது. அஃதாவது முன் அனுசந்தானம் கலைந்து விடுகின்றது.

ஸ்திரமாக விருந்து பாவிக்கப்பட்ட வஸ்துவின் வடிவமாக உண்மையாய் விளங்கும். இதற்குத் திருஷ்டாந்தம் சைலத்திற்குள் நீர் பார்வையிட்ட என்னுடைய உலகந்தான். இதில் சங்கை கொள்வீரானால் இந்தச் சைலத்தை இப்பொழுது நாம் சுற்றிப்பார்ப்போம்.—

இவ்வாறு கூறி அரசனை யழைத்துக்கொண்டு அவனுடன்கூடக் கண்டசைலத்தைச் சுற்றிவந்து மேதாவியான முனிகுமாரன் மகா சேனனிடத்தில் பின்னும் சொல்லுகிறான். “ இராஜனே! இந்தச் சைலமானது இரண்டு குரோச அளவையே யுடைத்தானது. இதன் கர்ப்பத்திலே தான் விசாலமான உலகத்தை நீர் ஸ்பஷ்டமாகக் கண்டீர். அது ஜாக்கிரமாக விருந்ததா? அல்லது சொப்பனமாக விருந்ததா? சத்தியமாகவோ அல்லது மித்தையாகவோ யிருந்தது? சைல உலகத்தில் ஒரு தினமானது இங்குப் பன்னீராயிரம் வருஷங்களாயினதென்று உம்மால் அனுபவிக்கப்பட்டது. இதிலிருந்தும் சத்திய மின்னதென்றும் அசத்தியம் இன்னதென்றும் பிரித்தறியும் சொப்பன திருஷ்டாந்தம் போலவே இதன்கண் பிரித்தறிதல் கூடிவாராது. ஆகையினால் இந்த ஜகத்தானது பாவனை யொன்றையே சாரமாகப் பொருந்தினது. பாவனையை அகற்றி விட்டால் க்ஷணத்திலே பாவிக்கப்பட்டவை இலயமாகின்றன. ஆகையினால், ஜகத்தானது சொப்பனம்போலப் பாவனையே யென்று கருதிச் சோகத்தை விட்டுவிடும்.

எவ்விதம் சோகத்தை விடுகிறதென்றால், சொப்பன பாவங்களான சித்திரங்களுக்குச் சுவர்போன்றிருக்கும் ஸம்வித் வடிவமான தன் ஆத்மாவைக் கண்ணாடி போன்றதெனக் கருதி யிருப்பதனால், சொப்பன பந்து நாசத்தில் சோகமில்லாமலும் சொப்பன தன



லாபத்தில் சந்தோஷ மில்லாமலும் இருப்பது போல சிதாத்மகமான தன் ஆத்மாவை ஜாக்கிரபாவங்களான சித்திரங்களுக்குக் கண்ணாடி போன்றதென்று கருதி ஜாக்கிரத்திலுண்டாகும் சோகம் முதலியவற்றாலும் சலியாதிருந்து மன்னவனே! சீக்கிரத்தில் பரமானந்தம் பொருந்திய உள்ளமுடையவராவீர்.” என்றார்.

ஸ்ரீ திரிபுரா ரகசிய ஞான காண்டத்தில்
சைலலோக தரிசன மென்னும் பதின்மூன்றாவது
அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்-14

இவ்விதமாக முனி வசனங்களைக் கேட்டுத் தன் சுபமான புத்தியினால் விசாரித்துச் சொப்பன சமமான ஜகத்தின் நிலைமையை உணர்ந்து தாமதமின்றித் தன்சோகத்தை ஒழித்து விட்டுத் தைரியத்தைக் கைக்கொண்டு சோகமற்றவனாகிப் பின்னும்மகாசேனன் முனிசுதனைக் கேட்கின்றான். "முனி புத்திரரே! மகா புத்தரே! தாங்கள் பரத்தையும்அவரத்தையும் உணர்ந்தவர். தங்களுக்குத் தெரியாதது சிறிதேனுமில்லையென்று நான் கருதுகின்றேன். நான் கேட்பவைகளுக்குக் கிருபையுடன் விடையருளவேண்டும். யாவும் பாவனையினால் ஏற்பட்டவை யென்று கூறினீர்கள்; அஃதெப்படி? நான் அடிக்கடி பாவனை செய்தும் அவ்விதமாக வெளியிற் காணப்படவில்லையே. தங்களாலோ, பாவனையின் சித்தியால் சைலத்திற்குள் உலகமானது கற்பிக்கப்பட்டது. அதுவுமன்றித் தேச காலங்கள் ஒரே காலத்தில் ஒரே யிடத்தில் வெகு விதமாயின. இஃதெப்படி? இவைகளில் எது (1) சத்தியமானது? எது அசத்தியமானது, இதனை எனக்குச்சொல்லவேண்டும்."

இவ்வாறு கேட்டபொழுது முனிசுதன் (1)சொல்லவாரம்பித்தனன், (2) "சங்கற்பமே பாவனை" யென்று

(1) இரண்டும் சொப்பனத்திற்கு நிகராகக் கூறப்பட்டிருந்தாலும் ஜாக்கிர பிரபஞ்சத்தில் பின்னும் சத்திய புத்தியுடையவனாகிக் கேட்கின்றான்—

(2) சங்கற்பம் = இது இவ்விதமிருக்கிறதென்ற மனோவிர்த்தி.



சொல்லப்படும். அந்தப் பாவனையானது ஸித்தமென்றும் அஸித்தமென்றும் இருவகைப்படும். ஸித்தமென்றது (3) அன்னிய விகற்பங்களால் கலக்கப்படாதது. விகற்பமற்ற சங்கற்பமானது ஏக (4) நிஷ்டையாயிருப்பதனால் ஏற்படுகின்றது. நான்முகனது ஸித்த பாவனையினால் சிருஷ்டிக்கப் பட்ட இவ்வுலகமானது எல்லோராலும் அனேக ஜன்மங்களில் திடமாகச் (5) சத்தியமென்று அப்பியாசம் செய்யப்பட்டு வந்ததால் சத்தியமாகப் புலப்படுகிறது. இப்படிப் பிரமன் சிருஷ்டியில் சத்திய புத்தியிருப்பதுபோல் உமது சங்கற்ப ஜகத்தில் உமக்குச் சத்தியமென்ற புத்தியில்லாததினாலும் "இது என்னுடைய கற்பனை, இது அசத்தியம்" என்ற விகற்பத்தால் பாவனை பேதிக்கப் படுகிறபடியாலும் உம்முடைய பாவனை சித்தியாகிறதில்லை.

(3) "இது இவ்விதம்" என்ற சங்கற்பதாரையின் நடுவே "இது இவ்விதமல்ல" வென்ற விரோதமான விகற்பமுண்டாகி முன் பாவனை பேதிக்கப்படாதிருப்பதே பாவனையின் ஸித்தி.

(4) ஏக நிஷ்டையானது "இது உண்மை" என்று கைக்கொள்வதினால் உண்டாகிறது.

பாகிய சிருஷ்டியில் சத்திய புத்தியிருப்பதால் தன் மனதால் சிருஷ்டிக்கப்பட்டதில் உண்டாகும் அசத்திய புத்தியென்ற விகற்பத்தினால் அம்மனோ சிருஷ்டி பேதிக்கப்படுகிறவரையில் பாவனைஸித்தியாகாது. விகற்ப முண்டாகாமலிருக்க யுக்தி யிராதென்றால் ஒரேநிஷ்டையாக யிருக்கவேண்டும். சங்கற்பித விஷயத்தில் சலியாத ஒரே மனதுடனிருந்தால் விற்பமற்ற சங்கற்ப மேற்படும்.

(5) விகற்பமற்ற சங்கற்ப வடிவமான ஸித்தபாவனையானது (ஜகத்து) யாவருக்கும் தெரிந்தது. இதனையெவனொருவன் 'இது சத்தியமன்று' என்றுவிகற்பமற்ற சங்கற்பத்துடன் பாவனை செய்கிறானோ அவனுக்கு அவ்வாறே ஆகின்றது.

பாவனையின் ஸித்தி எவ்விதமென்றால்—அது பலவாறாக உலகத்திலிருக்கிறது. ஜன்மத்தினாலும் மணியினாலும், அவ்விதமே ஔஷதத்தினாலும் யோகத்தினாலும், தபசினாலும், மந்திரசித்தியினாலும் வரத்தினாலும் பாவனையின் ஸித்தி ஏற்படுகின்றது. ஜன்மத்தினால் நான்முகனுக்கும், மணியினால் யக்ஷர்களுக்கும் இரக்ஷசுகளுக்கும், ஔஷதத்தினால் தேவர்களுக்கும், யோகத்தினால் யோகிகளுக்கும், தபசினால் தபசிகளுக்கும், மந்திரத்தினால் மாந்திரீகர்களுக்கும், விசுவகர்மா முதலியவர்களுக்கு வரப்பிராப்தியினாலும் பாவனையின் ஸித்தியேற்படுகின்றது.

பாவனை சாதிப்ப தெங்ஙனமென்றால்—சங்கற்பத்திற்கு ஆரம்பத்திலுண்டாகும் "நான் இதனைப்பாவனை செய்கிறேன்" என்ற எண்ணத்தின் ஸ்மரணையின்றியிருப்பதனால் பாவனை ஸித்தியாகி, அது பூர்வத்தை ஸ்மரிக்காதிருக்கும் வரையில் நிலைக்கின்றது. இவ்விதமாக வெகுகாலம் பழக்கம்செய்தால் பூர்வபாவனையை ஸ்மரிக்காதிருக்கிறவரையில் பாவனை ஸ்திரமாகவிருக்கும்.

இவ்வாறாகவே இச்சைப்பட்டாலன்றித் தானே விகற்பம் உதயமாகிக் கலக்கப்படாதிருக்கும் தன்மையுடைய ஸ்திரமான (1) நிர்விகற்பபாவனை எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுதுதான் அந்த பாவனை ஸித்தியாகி மகத்தான பலனைக்கொடுக்கின்றது.

(1) சதா அப்பியாசம்செய்வதால் விகற்பங்களால் போதிக்கப்படாத நிர்விகற்பபாவனை எப்பொழுது நிலைபெறுகிறதோ என்றர்த்தம். எத்தனை காலம் ஸ்திரமான பாவனை செய்ய வேண்டுமென்றால் இச்சைப் பட்டாலன்றித்தானே விகற்பங்கள் உதயமாகாதிருக்கிற வரையில்.



விகற்பங்களால் உமது பாவனையானது பேதிக்கப்படுகிறதினால் ஸித்தியாகிறதில்லை. சிருஷ்டிக்க விரும்புகின்றீரானால் சீக்கிரத்தில் பாவனையைச் சாதனை செய்யும்.

கேளும் இராஜனே! தேசகாலங்கள் இருவிதமானதைச் சொல்லுகின்றேன்; உலக வியவகாரத்தில் பரிசயமில்லாததால் இது உமக்கு அற்புதமாகத் தோற்றுகிறது. செம்மையாகச் சொல்லுகின்றேன்கேளும். பலவாறாகப் பாவனை செய்வதே உலகபாவங்களின் சுபாவமாயிருக்கிறது. சூரியனுடைய பிரகாசம் ஒன்றே கோட்டானுக்கு இருளாகவும் மற்றவர்கட்கு வெளிச்சமாகவும் இருவிதமாகப் பாவனை செய்யப்படுகிறது. ஜலமானது மனிதருக்கும்பசுக்களுக்கும் மூச்சுவிடத்தடையாகிறது. மச்சம் முதலிய வற்றுக்கு ஜலத்திலுள் மூச்சுவிடத் தடையில்லை. அக்கினியானது மனிதரைச் சுடுகின்றது. அதனை தித்திரியானது பக்ஷணம் செய்கிறது. புனலில் அனல் கெட்டு விடுகிறது. ஆயினும் ஓரிடத்தில் ஜலத்திலுள் அக்கினி ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இவ்விதமே எல்லா உலக பாவங்களும் இருதன்மைபொருந்தியிருக்கின்றன. இவை இந்திரியங்களால் அறியக்கூடியவை. இந்திரியங்களுக் கெட்டாத வேறுசில விஷயங்களிலும் இத்தன்மை இருக்கிறது. ஒன்றுக்கொன்று விருத்தமான இரண்டு சுபாவங்கள் பொருந்திய விஷயங்கள் இவ்விதம் ஆயிரக்கணக்காக இருக்கின்றன.

இதற்கு யுக்தி சொல்லுகிறேன். ஒருமனதாய்க் கேளும். காண்பன வெல்லாம் நேத்திரத்தின் விகார மென்றே யாகும். நேத்திரத்தின் அம்சமின்றி வெளியில் ஒரு திருசியமுமில்லை. பித்தத்தினால் தோஷமடைந்த நேத்திரமுடையவன் மஞ்சள் நிற

மாக வெளியிற் பார்ப்பது போலவும், திமிரரோக முடையவன் ஒன்றை இரண்டாகப் பார்ப்பது போலவும் பலவாறான தோஷ நேத்திரங்களினால் ஜகத்தைப் பலவாறாகக் காண்கிறார்கள். உதாகரணமாகக் கிழக்கு சமுத்திரத்தின்மத்தியில் காரண்டகமென்ற ஒரு த்வீபமுளது. அத்தீவிலுள்ள, ஜனங்கள் பாவங்கள் யாவற்றையும் இரக்தவர்ணமாகவே எப்போதும் காண்கிறார்கள். இதுபோலவே இரமணக த்வீபத்திலிருக்கும் ஜனங்கள், யாவற்றையும் தலைகீழாகக் காண்கிறார்கள். இன்னும் மற்றத் தீவுகளில் ஜனங்கள் தங்கள் நேத்திரங்களின் சுபாவத்திற்குத் தகுந்தபடி பலவாறாகப் பாவங்களைக் காண்கிறார்கள். இத்தேசங்களில் இவர்களில் யாருக்காவது கண்களில்மாறுபாடாகத் தோன்றுமானால், ஔஷதங்களினால் நேத்திரத்தைச் சொஸ்தம் செய்துகொண்டு முன்போலவே பார்க்கிறார்கள். ஆகையினால் உலகத்தில் வஸ்துக்கள் கண்ணினால் பார்வையிடப்படுகிறவரையில் அவைகள் பித்தக் கண்ணிற்கு மஞ்சள்போல, கண்ணின் அம்சம் பொருந்தியவையேயாம்.

இவ்வாறே(1)கந்தம் முதலியவையும் ஆக்கிராணம் முதலிய இந்திரியங்களின் அம்சமாகும். இதுபோலவே மனதின்விஷயங்களும் மனதின் அம்சம் மாத்திரமாகும். அவ்விதமே யாவுமாகும். தேசம், காலம், கிரியை இவைகளினுடைய கிரமங்களுங்கூட நேத்திரத்தின்

(1) இவ்வாறு 'பித்தத்தினால் தோஷமடைந்த நேத்திரங்களுக்கு மஞ்சள் நிறத்தின் தோற்றம்' என்ற திருஷ்டாந்தத்தினால் வெளியில் திருசியங்களில்லை யென்று தீர்மானித்து, வெளியில் வஸ்து பாவிக்கக்கூடாததால் வெளியில் வஸ்துவில்லை யென்று தீர்மானம் செய்ய முயன்றது.



தன்மை பொருந்தியவையேயாம். ஆகையினால் வெளியிற் சற்றேனுமில்லை.

இராஜனே கேளும். 'வெளி' யென்று உலகத்தில் யாதொன்று கேவலமாக விளங்குகிறதோ அது, சித்திரத்திற்குச் சுவர்போல, எல்லாஜகத்திற்கும் ஆதியானது. அந்தவெளிக்கு இன்னதைத் தொட்டுவெளியென்பதில், அவதியான (2) அபாதானமாகச்(3) சரீரத்தைக்கொண்டு "சரீரத்திற்கு வெளியில்" எனக்கூடாது. ஏனென்றால், சரீரமும் வெளியிலுள் தோற்றுகின்றபடியால் அதனை அபாதானமாக எவ்வாறு கொள்ளலாகும்? இதற்குத் திருஷ்டாந்தம், 'பர்வதத்திற்கு வெளியில்' என்று சொல்லும்பொழுது பர்வதம் வெளியிலுள்ளாயிராது. கடமானது வெளியில் தோன்றுகிறதுபோலவே சரீரமும் வெளியிலுள் விளங்குகிறது. (1) 'விளக்கத்திற்கு வெளியிலே' என்று சொல்லுவதும் பொருந்தாது. ஏனென்றால் தீபவெளிச்சத்திற்காவது சூரிய வெளிச்சத்திற்காவது வெளியிற்பட்ட பொருள்கள் விளங்கா.

(2) அபாதானம் = அவதி. வீட்டிற்குவெளியே என்பதில் வீடு அபாதான மெனப்படும். வீட்டிற்கு அன்னியமானது வெளி யெனப்படும்.

(3) கடங்கள் முதலியன சரீரத்திற்கு அன்னியமாகவிருப்பதால் சரீரத்திற்கு வெளியே என்பது போலச் சரீரத்தை அபாதானமாகக் கொள்ளலாமோ வென்றால் அது பொருந்தாதென்பது கருத்து.

(1) கடம் முதற்கொண்டு சரீரம் வரையிலும் பிரகாசிப்பிக்கின்ற ஆத்மாவையே அபாதானமாகச் சொல்லுவோமென்றால் என்றர்த்தம். பிரகாசிப்பிக்கின்ற சூரியனது வெளிச்சத்திற்கு 'வெளியில்' அதாவது அப்பாலிருப்பது இருள். இருளி

ஆகையினால் பாஸகனுக்குள்ளாகவே பாஸியம் இருக்கிறதென்று தீர்மானப்படுகிறது. பாஸகம் தேகமுதலியவையல்ல. பர்வதம் முதலியவைபோல் தேகமும் (2) விளங்குவதால் விளங்குவதான ஒன்று எவ்விடத்திலும் (3) விளங்குவது ஆகாது. விளங்குவது விளங்குமானால் விளக்குவதற்கு அநவஸ்தை பேற்படும். ஒன்றற்கே விளக்கும் தன்மையும் விளங்கும் தன்மையும் பொருந்தாவாகையால் பாஸகம் பாஸகமான ஏகசொரூபமுடையதும் (விளக்குவது விளங்கும் சொரூபம் ஒன்றே உடையதும்) சுத்தமானதும் ஆகும். அது இங்கு பூரணமும், ஏகரசத் தன்மையுடையதுமான பரரூபமே. பரரூபமான பாஸகனால் தேசகாலங்கள் வியாபிக்கப்பட்டிருக்கிறபடியாலும் அவை அவனாலே விளங்குவதாலும் அப்பாஸகம் பூரணமாகும்.

---

விருக்கும் விஷயங்கள் விளங்காவாகையால், பிரகாசத்தை அபாதானமாகக்கொண்டு அதற்கு வெளியில் விஷயங்கள் இருப்பனவாகச் சொல்லக்கூடாது. ஆகையால் பிரகாசத்திற்குள்ளேயே பிரகாசிக்கப்படும் விஷயங்கள் இருக்கின்றன.

(2) பாஸியமே பாஸகனாகவிருப்பதில் என்ன விரோதம். தேகம் ஒன்றே அறியப்பட்டதாயும் அறிகிறவனாயு மிருக்கட்டுமேயென்றால், ஒன்றே கர்த்தாவாகவும் கர்மமாகவும் பொருந்தாது.

(3) விஷயங்களை விளக்கும்பொழுது பாஸகம் காலத்தினால் பரிச்சின்னப்படுகிறதே எவ்விதம் ஒரேசொரூபமுடையதெனக்கூடுமென்றால்—இங்கு கிரியாத்மகமாகவே கர்த்தா இருக்கின்றபடியால் உலகவிவகாரத்திற்போல இங்கு கர்த்தாவுக்கும் கிரியைக்கும் பேதமின்மையால், பாஸகன் பரரூபமான ஒரே சொரூபமுடையதென்று கூறப்பட்டது.

பாஸியம் பரரூபத்திற்கு வெளியிலிருக்குமானால் அந்த பாஸியம் எவ்வாறு விளங்கும்? விளங்காது.



(4) பாஸகனுக்கு அன்னியமாகப் பாஸியம் இல்லை. பரரூப (5) மின்றியது விளங்காதாகையால் பாஸகம் ஏகரசமான பரரூபமாகும். உள்ளேயிருக்கும் பதார்த்தங்களாகட்டும் வெளிப் பதார்த்தங்களாகட்டும் ஒன்றொழியாது யாவும் பரரூபமென்ற (6) பிரகாசத்திற்குள்ளேயே யிருக்கிறபடியால் பாஸகமான ஆத்ம-

---

(4) இங்கு இது முக்கிய கருத்து. பாஸியம் பரரூபத்திற்கு வெளியிலிருக்குமானால் அதன் விளக்கம் பொருந்தாது. விளங்கல் நீலம் முதலியனபோல பாஸியதர்மமன்று. சூரிய வெளிச்சத்தினால் கடம்முதலியன விளங்குகின்றன என்பதுபோல பாஸியத்தையும் பாஸகனையும் கூட்டிவைக்கும் மூன்றாவதின்சம்பந்தமுண்டோவென்றால் இல்லை. அந்தச்சம்பந்தம் பாஸியமா, பாஸகமா, உபயாத்மகமா, அனுபயாத்மகமாவென்று பார்க்குமிடத்தில் அது பாஸியமானால் அதனை விளக்க வேறு சம்பந்தம் வேண்டியிருப்பதால் அனவஸ்தையாகிறது. அது பாஸகனானால் தனக்கு தன்னிடத்தில் சம்பந்தம் அயுக்தம். உபயாத்மகம் பொருந்தாது. அனுபயாத்மகமுமன்று, ஏனென்றால் அது அபஸித்தாந்தமாகிறது. அனுபயாத்மகம் அனிர்வசனீயமாம். அனிர்வசனீயவாதிகளும் ஜகத்தைக் கண்ணாடிப்பிரதி பிம்பம்போன்றதென்று கூறுகிறார்கள்.

(5) பாஸியமானது பரரூபத்திற்கு வெளியில் (அதாவது பிரகாசத்திற்கு வெளியான இருளில்) இருந்தால் அது விளங்காதன்றோ?

(6) இவ்வாறு அகில ஜகத்தான சித்திரத்திற்குச் சுவர் போன்ற "வெளி" யென்பதற்கு "இன்னதற்குவெளி"யென்ற அபாதானம் சித்தியாததினால் "வெளி" சித்தியாது. சுவரில்லாவிடில் சித்திரமில்லாததுபோலத் தேசகாலங்கள் முதலிய பாஸியங்கள் சித்தியாதலால் இரஜ்ஜுவானது தெரியாமல் சர்ப்பமாகவும், ஜலதாரையாகவும், பூமியின் பிளப்பாகவும் தோற்றுவதுபோல் பிரகாசவடிவமான பாஸகனே பலவாறான தேசகாலங்கள் முதலியவற்றின் வடிவங்கொள்ளுகிறான்.

வடிவம், பர்வதத்திலிருந்து வேறாகாத அதன் சிகரத்திற்கு அப்பருவதமானது அபாதான மாக, அதுபோல, அபாதான மாகமாட்டாது.

இவ்விதம் சர்வப் பிரபஞ்சத்தையுந் தன்னுள் வைத்துக் கொண்டிருக்கும் பாரூபமானது தனக்குள்ளும், எங்கும், எப்பொழுதும் சுதந்தரமாக விளங்குகின்றது. இதுவே பராசித்தென்றும், திரிபுரையென்றும், பரமேச்வரி யென்றும் சொல்லப்படும். இதனையே வேதத்தோர் பிரஹ்மமென்றும், வைஷ்ணவ சிரேஷ்டர்கள் விஷ்ணுவென்றும், சைவோத்தமர்கள் சிவமென்றும், சாக்தர்கள் சக்தியென்றும் கூறுகின்றனர். இவ்வடிவத்தை விட்டு முக்கிய (1) மென்று கூறப்படும் மற்றவை அற்பமாகும்.

சர்வ ஜகத்தும் அந்தச் சித்சக்தியினால் கண்ணாடிப்பிரதி பிம்பம் (2) போல வியாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாரூபத்திற்குப் பாஸகன் என்ற பெயரானது (3) விளக்கப்படும் விஷயங்களால் ஏற்பட்டதேயன்றிச் சுபாவமாகவில்லை. கண்ணாடியிற் றோற்றும்

1. பராசித்து வடிவத்தைவிட்டு நீலமேகசியாமளமென்றவாறு வைஷ்ணவர்முதலானவர் முக்கியமென்று கூறுவதில் அவ்வடிவங்கள் காலதேசங்களினால் பரிச்சின்னமாகையால் அற்பமாகுமென்று கருத்து.

2. ஆகாயம் ஜகத்தில் வியாபித்திருப்பது போலன்று என்று தாத்பர்யம்.

3. கடத்திலிருந்தும் அதன் நிறம்வேறானதுபோலப்பாரூபத்திலிருந்தும் பாஸகத்துவம் (விளங்கும்தன்மை) வேறானதன்று என்றர்த்தம். ஸ்படிகத்தினிடமாகச் செம்பரத்தம்பூவை வைத்தால் ஸ்படிகம் அந்நிறம் பெற்றிருப்பதுபோல் பாஸகன் என்னுந்தன்மை ஏற்படுகிறது.



நகரம் முதலியவை போலப் பாஸியங்கள் யாவும் பானத்தினுள் மூழ்கியிருக்கின்றன. கண்ணாடியிற்றோற்றும் நகரமானது கண்ணாடிக்கு வேறாகாதது (4) போலச் சித்தானது பிரதிபிம்பமாக யாதொரு ஜகத்தை விளக்குகின்றதோ அந்த ஜகத்துச் சித்திற்கு வேறானதன்று. சம்பூர்ணமும், நிபிடமும், ஏகரூபமுமாகிய கண்ணாடியில் அதற்கு வேறான நகரம், எவ்விதத்திலும் தோற்றாததுபோலப் பூர்ணமாகவும் நிபிடமாகவும், ஏகரூபமாகவு மிருக்கும் சிதாத்மா விடத்தில் அதற்கு வேறாக ஜகத்திருப்பதற்கு நியாயமில்லை.

ஆகாசமோ (5) வென்றால், அது சூன்யவடிவமாகையால் அவகாசத்தன்மையைப் பொருந்தித் தனக்கு இரண்டாவதான ஜகத்திற்கு எங்கும் எப்பொழுதும் இடம் கொடுக்கின்றது. ஸதியும் சூன்யமல்லாதவளும் ஏகாசையுமாகிய சித்ரூபி கண்ணாடித் திருஷ்டாந்தம் போலத் தன்னிடமாகச் சற்றேனும் இரண்டாவதென்பதைச் சகியாள். ஆகையினால் கண்ணாடியைப்போல ஸம்வித்தானது தன் சுதந்தரத்தின் மகிமையினால் நிமித்த உபாதானங்களை அபேக்ஷியாமல், இரண்டற்ற

4. கண்ணாடியிற் பிரதிபிம்பம்போல் சித்தினிடம் ஜகத்துத்தோற்றுகிறதென்றுசொல்லுவானேன்? ஆகாயத்தினிடம் ஜகத்துத்தோற்றுவதுபோல என்றுசொல்லலாமே யென்றால் அதற்குச் சமாதானம் கூறப்படுகிறது.

5. பிருதிவி முதலியவற்றின் அபாவமே ஆகாயமாதலால் அதனைச் சூன்யமென்றது.

சித்தானவள் எப்பொழுதும் ஸத்ரூபம் (இருப்புடையது) ஆதலால் சூன்யமல்லாதவளெனப்பட்டனள்.

சுதந்தரம் = அன்னியத்தை அபேக்ஷியாதிருக்குந் தன்மை. அதாவது சுயமாக விளங்குந்தன்மை.

தன்னிடத்திலேயே இரண்டாவ தானதும் ஒன்றற்கொன்று வேறானதுமாகிய சராசரங்களான எல்லா ரூபங்களையும் விளக்குகின்றது.

கண்ணாடியினிடத்தில் பலவாறான ரூபங்கள் தோற்றிக் கொண்டிருந்தாலும் விசேஷ மின்றியதாகவும் பாதிக்கப் படாததாகவும் கண்ணாடியானது ஒரே விதமாக இருப்பது போல, விசித்திரமான ஜகத்துப் பலவாறாக விளங்கிக்கொண்டிருந்தாலும் இவைகளின் அநுசந்தானங்களிலிருந்தும் பாதிக்கப்படாத ஒரு சொரூபமிருக்கிறதென்று சித்தமாகிறது. இராஜனே! நீர் (1) மனோராஜ்ஜியம் செய்யும் பொழுதுண்டாகும் நிலையைத் தனக்குள்ளேயே ஆலோசித்துப் பாரும். விசித்திரமான அனேகவடிவங்கள் மனோராஜ்ஜியத்தில் தோன்றினாலும் அவை சைதன்னிய மாத்திரமே. (2) பிரதிபிம்பங்கள் இருந்தாலும் அவையில்லா விட்டாலும் கண்ணாடி ஏக ரூபமாயிருப்பது போல சிருஷ்டி காலத்திலாகட்டும் பிரளய காலத்திலாகட்டும் அந்தச் சித்ரூபியானவள் நிர்விகற்ப மாகவே யிருக்கின்றனள்.

---

(1) மனோராஜ்ஜியமே பூரண திருஷ்டாந்த மென்றறிய வேண்டியது. கண்ணாடிக்குப் பிம்பங்கள் தேவையாயிருப்பதுபோல மனோராஜ்ஜியத்திற்கு வாசனைகள் சூக்ஷ்ம ரூபமான பாவங்கள் பொருந்தியிருக்க வேண்டுமென்பதில்லை.

(2) ஆனால் கண்ணாடியினிடம் காண்பதைப் பிரதிபிம்பமென்று சொல்லுவானேன். கண்ணாடியினால் திருப்பப்பட்ட நேத்திர ஒளியினால் பிம்பத்தின் கிரகணமே உண்டாகிறதென்று சொல்லுவோமே யென்றால், சுவரினால் திருப்பப்பட்ட நேத்திர ஒளியில் முகமும் விளங்கவேண்டும். தவிர கண்ணாடியின் சமீபத்தில்வைத்த கையானது இரட்டையாகத் தோற்றும். ஆகையினால் கண்ணாடியில் தோற்றுவது பிரதிபிம்பமே.



இவ்விதம் சித்தானவள் ஏக ரூபியாக இருந்தாலும் தன் சுதந்தரத்தினாலேயே, கண்ணாடியினுள் ஆகாயம் பிரதிபிம்பிப்பது போல, தனக்குள்ளேயே வெளி, என்ற பதத்திற்குவிஷயமான ஒன்றைக் கற்பித்துத் (1) தோற்றுவிக்கின்றனள். இந்தவெளியின் தோற்றமே முதன்மையான சிருஷ்டி, இதனையே அவித்தையென்றும் தமசென்றும் சொல்லப்படும். பூரணமானவஸ்துவினிடம் அம்சம்போலத்தோற்றுவதே வெளியின் தோற்றமென்று கூறப்படும். பூரணமான 'நான்' என்ற தன்னிடத்தில் பரிச்சேதம் கற்பிக்கப்பட்டதால் பரிச்சின்னமான மற்ற அம்சம் 'நான்' என்பதற்ற வடிவமுடையதாகும். தன்னிடத்தில் தனக்கு வேறான அம்சம் தோற்றுவதே வெளியின் தோற்றம். இதுவே அவ்யக்தமென்றும் ஜடசக்தியென்றும் சொல்லப்படும்.

இதற்குமேல், தத்துவங்கள் கூறப்படுகின்றன.

சிருஷ்டி காலத்தில் வெளியென்பதை விளக்கிக் கொண்டிருக்கும் பரிச்சின்னமான சித்தே சிவ (2) தத்துவமென்று கூறப்படும். அதில் தன்னுணர்ச்சியே சக்தி தத்துவமாகும்.

---

சிவதத்துவம் = பிரகாசம் : சக்தி = சொப்பிரகாசத்தன்மை = ஸ்பூர்த்தி

(1) அநுபந்தத்தைப் பார்க்க.

(2) பரசிதாத்மாவானது தன் சுதந்தரத்தினால் பூரணமாக விருந்தும் அம்சங்களானது போலத் தோற்றுகின்றது. அம்சத்தோற்றம் எவ்விதமென்றால் அலை யில்லாச் சமுத்திரத்தில் அகஸ்மாத்தாகப் பலவாறான அலைகள் உற்பன்னமாவது போலப் பரசிதாத்மாவினிடம் கணக்கில்லாத பரிச்சின்னமான தன்னம்சங்கள் உதயமாயின. இவ்விதம் பரிச்சின்னமான சித்தின் அம்சங்களின் திருஷ்டியாகவே தனக்கு அன்னிய

கற்பிக்கப்பட்டதும்(1)மகாசூன்யமுமான யாதொரு வெளியென்ற வடிவமுண்டோ அதனிடத்தில் 'நானே இதுவும்' என்ற பாவனைவரும்பொழுது அதற்கு(2)சதா

---

மான வெளியின் தோற்றமே யொழியப் பூரணமான பரசிவத்துக்கு வெளித் தோற்ற மில்லை. இவ்விதம் பரிச்சின்னமான சுத்த சித்தின் அம்சங்களெல்லாவற்றினுடைய சாமான்யமே சிவதத்துவ மென்று சொல்லப்படுகிறது. இந்த சிவதத்துவமானது பரசிவ ரூபமன்று என்று தெரிந்து கொள்ள வேண்டியது. பரசிவ ரூபம் நிஸ்ஸாமான்யத் தன்மையுடையதாகும்.

பரிச்சின்னமான நிர்விகற்ப சித்தின் சாமான்யமே சிவதத்துவம்.

இந்த சிவதத்துவத்தினிடம் தன்னுடைய தன்னுணர்ச்சியே (நான் என்று விளங்குவதே)சக்தி தத்துவம். நான் என்று விளங்கல் சித்தின் சுபாவ மாகையால்,இவ்விரண்டு தத்துவங்களுக்கும் பேதமில்லை. ஆகிலும் நிர்விகற்ப சித்தைப் பற்றிச் சிவதத்துவ மென்றும் நானென்ற தன்னுணர்வைப் பற்றிச் சக்தி தத்துவ மென்றும் மொழியப்படும்.

(1) அவித்தை யென்ற வெளியானது ஜகத்தான சித்திரத்திற்கு ஆதாரமாகி இடம் கொடுப்பதாலும் ஆகாயத்திற்கு நிகராகவிருப்பதாலும் மகாசூன்யமெனப்பட்டது. இந்தவெளி தன்னில் வேறான தோற்றமே யாதலால் கற்பனையென்று கூறப்பட்டது.

(2) தனக்கு அன்னியமான வெளியையும் சித்வடிவமாகக் கருதி சமாநாதிகரணத்தினால் வெளியின் வடிவமும் தன்னதே என்று ஒற்றுமையாக விளங்கும் பரிச்சின்னமான சித்தின் சாமான்யமே சதாசிவதத்துவம். சதாசிவதத்துவத்தில் சித்துப்பிரதானம் (முக்கியம்) ஈசுவரதத்துவத்தில் சித்தின் முக்கிய மகற்றி "இதுவே நான்" என்று ஒற்றுமைப்பாடாக விளங்கும் பொழுது மகேசதத்துவமெனப்படும். இங்கு ஜடம் முக்கியமாகிறது.



சிவதத்துவம் என்றுபெயர். இந்தச்சதா சிவதத்துவத்திலேயே ஜடத்தின் தர்மம் முக்கியமாகும் பொழுது இதுவே மகேசதத்துவமென்று சொல்லப்படும். இவ்விரண்டுதத்துவங்களின்வேற்றுமையையும் ஒற்றுமையையும் உணர்ந்தறியும் ஞானமே (3) சுத்தவித்தையென்று கூறப்படும். இவ்வைந்தும் (4) சுத்ததத்துவங்களாகும். ஏனென்றால் இவைகளில் பேதசக்தியானது வலுப்

---

(3) இவ்விரண்டு தத்துவங்களுக்கும் ஒற்றுமை வேற்றுமைகளான "நானே இதுவும்," "இதுவே நானும்" என்றவாறான உணர்ச்சியின் விளக்கமே ஐந்தாவதான சுத்தவித்தியா தத்துவமாம்.

(4) இரண்டற்ற சின்மாத்திரமாக விளங்குவதாலும் முன் கூறிய ஜடசக்தியென்ற பேதசக்தியானது காரியவடிவத்தை அடையாதிருப்பதாலும்.

"வெளியென்ற ஜடசக்தியானது வித்து, முளை, விருக்ஷம் என்றது போல மூன்று அவஸ்தையுடையது. வித்தில் முளையின் வேற்றுமைகள் தோன்றாதது போல ஜடசக்தியினிடம் தானே பிரதானமான காரியரூபம் உதியாதது பற்றிச் சித்து விளங்குவதாலும் சித்துப்பிரதானமாயிருப்பதாலும் இவை சுத்தமெனப்பட்டன.

முளைபோல ஜடசக்தியின் சூக்ஷ்மகாரிய வடிவமான வேற்றுமைகள் உண்டாகும் பொழுது சித்தின் குணமும் ஜடத்தின் குணமும் கலந்து இரண்டும் பிரதானமாவதால் மாயை முதற்கொண்டு புருஷன் வரையிலும் ஏழும் மிசிரித்த தத்துவங்கள்.

விருக்ஷம் போல ஸ்தூல காரியவடிவமான வேற்றுமையுண்டாகும்பொழுது அசித்தென்ற ஜடம் பிரதான மாவதால் அசுத்த தத்துவங்கள் உண்டாகின்றன. அவை பிரகிருதி முதற்கொண்டு பிருதிவி வரையுமுள்ள 24-தத்துவங்களாகும்.

படாயிருப்பதாலும் வேற்றுமையின்றி விளங்குவதாலும் இவை சுத்தமாகும்.

(5) பின் சித்தின் அளவற்ற சுதந்தரம் ஏதுவாகப் பேத பாவனையானது வலுவேறுவதால் ஜடசக்தி தர்மிபாவத்தையும் சித்து தர்மபாவத்தையும் அடைகின்றது. (6) அப்பொழுது அந்த ஜடசக்தியே மாயாதத்துவமென்றும் சொல்லப்படும். பேதசக்தியென்ற ஜடசக்தியானது தர்மிபாவத்தை அடைந்ததால் இந்தப் பேதபுத்தியின் சாமான்னியமே மாயாதத்துவ மெனப்படும்.

ஏராளமாகப் பேதபுத்தியினால் சூழப்பட்டதின் மேல் சங்கோசத்தை அடைந்ததான சித்தின் அம்சமானது பின்மொழியப்படும். ஐந்து (1) சட்டைகளை அணிந்து புருஷத்தன்மையை அடைந்தது. கலை, வித்தை, இராகம், காலம், நியதி யென்பவைகளே ஐந்து சட்டைகளாகும். கலையென்றால் அற்பம் செய்யுந்

(5) பின் = சுத்த தத்துவங்களின் சிருஷ்டிக்குப் பிறகு. சுத்ததத்துவங்களைந்திலும் சித்தில் ஜடசக்தியானது மூழ்கி அடங்கியிருந்தபடியால் வேற்றுமை வலுவடையவில்லை. இங்கு சித்து அடங்கியிருக்கிறபடியால் பேதபாவனை வலுவுடையதாயிற்று. சுத்ததத்துவங்களில் சித்தின் அம்சம் தர்மியாகவும் ஜடத்தின் அம்சம் அடங்கித் தர்மமாகவுமிருந்தது. இங்கு அந்நிலைமை தலைகீழாயிற்று.

(6) அப்பொழுது = இவ்விதம் தர்மிதர்ம பாவம் வேறுபாடடைந்த பொழுது.

(1) பரமசிவனுடைய ஸர்வகர்த்ருத்துவம், ஸர்வஞ்ஞத்துவம், நித்தியதிருப்தி, நித்தியத்துவம், சுதந்தரத்துவமென்னும் ஐந்து சக்திகளுமே ஸங்கோசத்தை அடைந்து புருஷனுடைய ஐந்து சட்டைகளாயின.



தன்மை, வித்தையென்றால் அற்பம் அறியுந்தன்மையாகும். இராகமென்றால் திருஷ்ணை. ஆயுசினாலே பரிச்சின்னப்படுவதேகாலம் என்று சொல்லப்படும். நியதியென்றால் பரதந்திரத்துவம். இவைகளினால் புருஷன் சுற்றப்படுகின்றான்.

சிதாத்மாவினுடைய சக்தியை ஆதாரமாகக்கொண்டிருக்கும் ஜனங்களுடைய பலவாறான அநாதிகர்மங்களின் வாசனைகளுடைய சமுதாயமே பிரகிருதியென்று சொல்லப்படும். கர்மங்களின் பலனானது மூன்று வகைப்படுகிற காரணத்தினால் இப்பிரகிருதியும் மூவகைப்படும். இந்தப் பிரகிருதியின் அவஸ்தையின் மாறுதலையே சித்தமென்று கூறப்படும். சுழுத்தியில் இந்த வாஸனா பிண்டத்தைப் பிரகிருதியென்று அறியவேண்டும். சுழுத்தியின் முடிவில் இதுவே சித்தமென்று சொல்லப்படும். வாசனாபிண்டத்துடன் கூடியிருக்கிற சித்தே சித்தமென்று மொழியலாகும். இரண்டவஸ்தைகளிலும் வாஸனா பிண்டமானது ஒரேவிதமாயிருப்பதால், சித்தமே பிரகிருதியென்றும் சொல்லப்படும். புருஷர்களுடைய பேதத்தினால் சித்தம் வெகுவிதமாயிருக்கிறது. சுழுத்தியில் (1) ஜீவர்களுக்குப் பேதமின்மையால் சித்தமானது ஒரேவிதமாகிப் பிரகிரு

ஜீவன் = பரிச்சின்னமான சித்ரூபன்.

(1) பரிச்சின்னமானது தேகம்முதலியவற்றால் ஏற்பட்டது.
ஜாக்கிர சொப்பனங்களில் தேகம்முதலியன வெவ்வேறாயிருப்பதால் ஜீவர்களுக்கு வேற்றுமையுண்டு. சுழுத்தியின் தேகமுதலியனவற்றின் தோற்றமில்லாமையால் அலையில்லாச்சமுத்திரத்தில் வேற்றுமையில்லாததுபோல் பரிச்சின்னத்தோற்றம் இல்லாததால் ஜீவர்களுக்குப் பேதமில்லை. ஜீவர்களுக்குப் பேதமில்லாததால் அவர்களது கர்மவாசனைகளும் ஏகராசித்தன்மை பெற்றிருக்கிறது. இதுதான் பிரகிருதி.

இத்தன்மையை அடைந்து சுழுத்தியின் (2) முடிவில் சித்தமாகிவிடுகின்றது. சித்தத்தையே சித்தின் பிரதானம் ஏதுவாகப் புருஷன் என்று கூறப்படும். அவ்வியக்தமென்ற ஜடசக்தியின் முக்கியத்தால் சித்தமே பிரகிருதியாகின்றது.

பிரகிருதி தத்துவமானது கிரியையின் பேதத்தினால் அகங்காரம், புத்தி, மனம், என்றவடிவங்களைக் கொண்ட மூன்றுவித (3) அந்தக்கரணமென்றுசொல்லப்படும். அதன்பின்(4)ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, சப்தாதியானசூக்ஷ்மபூதங்கள் ஆகாயம் முதலிய ஸ்தூலபூதங்கள் உண்டாயின.

இவ்வாறாக அர்த்தப்பரையும் ஸர்வஸாக்ஷிணியுமான ஸம்வித்தானவள் 'வெளியில்' விளக்கத்தை முன்

---

(2) சுழுத்தி = பக்குவ கர்மங்கள் போகத்தினால் க்ஷயிக்கும்பொழுது மற்றகர்மங்கள் பரிபக்குவ மாகாதிருக்கும். தழலான கட்டையின் நெருப்புபோலச் சிதாத்மாவின் ஞானசக்தியை விஷயத்தில் சேர்த்துவைக்கக்கூடியதான பரிபக்குவ கர்மமுண்டாகாது. பகிர்முகமின்றி யிருக்கும்பொழுது மதியில் போகமின்றியிருக்கும் தசையின் விசேஷமே சுழுத்தி. இவ்விதமிருக்கும் பரிபக்குவமாகாத கர்மங்களில் எவையாகிலும் பக்குவமடைந்தால் அக்கர்மங்களை ஞானசக்தியானது விஷயங்களைத் தோற்றுவித்து அவற்றுடன் சேர்க்கின்றது. இவ்வாறு விஷயங்களிடம் சேர்த்துவைக்கும் தன்மையுடையதான கர்மவாசனைகளுடன்கூடின ஞானசக்தியே சித்தமெனப்படும்.

(3) அபிமான நிச்சய சங்கற்பரூபங்களான மூன்றுவித அந்தக்கரணங்கள்.

(4) முக்குணம்பொருந்திய அகங்காரத்தில் — நின்றும் ஞானேந்திரியங்கள் முதலியன உண்டாயின.



னிட்டுச் சிருஷ்டி முதலியனசெய்துகொண்டு (5) கிரீடை செய்கின்றனள். இங்கு ஸர்வகாரணியான ஸ்ரீ திரிபுரா சக்தியினால் சிருஷ்டிசெய்யும்பொருட்டுத் தன் பாவனையினால் ஏற்படுத்தப்பட்ட (6) ஹிரண்யகர்ப்பன் என்ற யாதொரு பிர்ம்மாவிருக்கிறாரோ அவருடைய பாவனையினால் 'இந்த ஜகத்து உண்டாயிருக்கிறது. இந்தச் சிருஷ்டியில் 'நீ,' 'நான்' என்று விளங்குகிற பரிச்சின்னமான ஸம்வித்து யாவும் சித்சக்தியான பரையேயாகும். இவைகளில் வேற்றுமையில்லை. வேற்றுமையானது உபாதிகளால் விளங்குகிறது. உபாதிகள் பிர்ம்மாவின் பாவனையிலிருந்து முண்டாயின. உலககர்த்தாவின் பாவனையை அகற்றும்பொழுது வேற்றுமையான தோற்றம் இல்லாமற் போய்விடும்.

சித்திலிருக்கும் பாவனா சக்தியானது உம்மிடத்தில் மாயையினால் கூடப்பட்டிருக்கிறது. அந்த ஆவரணமானது அற்று விட்டால் உம்முடைய பாவனையும் ஸித்தியைப் பெறும். தேசமாகட்டும், காலமாகட்டும் மற்ற விஷயங்களாகட்டும் எவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அப்படி அவை அங்கங்கே நீடித்ததாகவும் சூக்ஷ்மமாகவும் பலவாறாக விளங்கும். என்றால் ஒரே நாளாகப் பாவனை செய்யப்பட்ட காலமே இங்கு பிர்ம்மாவினால் பன்னீராயிரம் வருஷமாகப் பாவனை செய்யப்பட்டது. இவ்விதம் பாவனையின் வித்தியா

---

(5) கிரீடை = சிருஷ்டிக்கு வேறுபிரயோஜன மில்லாததால்.

(6) பிரம்மா உலகத்தைச் சிருஷ்டித்திருக்கும்பொழுது திரிபுரைக்கு எவ்விதம் ஸர்வகர்த்ருத்துவமென்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம். கடாகாயத்திற்கும் மகாகாயத்திற்கும் பேதமில்லாததுபோல.

சத்தால் ஒரே காலம் நீடித்ததாயும் சீக்கிரமாயும் தோற்றும். பிர்ம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டதும் காலால் நடந்து தாண்டக் கூடியதுமான சைலத்தினுள் அளவற்ற தேசமானது என்னால் பாவனை செய்யப்பட்டதால் அளவற்றதாயிருந்தது. இவ்விதம் இருவகையான தேசங்களும் காலங்களும் சத்தியமும் அசத்தியமுமாகும். நீர் உமது உள்ளத்தில் பர்வதம் போன்ற ஒருதேசத்தையும் சூக்ஷ்மமான ஒரு காலத்தையும் முன்னமே பாவனை செய்துகொண்டு பின் அவ்விடத்திலேயே அளவற்றயோஜனை தூரமுள்ள தேசத்தையும் அளவற்ற காலத்தையும் பாவனைசெய்யும். உமதுபாவனை நிலைத்திருக்கிறவரையில் இவைவிளங்கிக் கொண்டிருக்கும்.

ஆகையினால், இராஜாவே! பாவனை யொன்றையே வடிவமாகக் கொண்டிருக்கும் இந்த ஜகத்தானது சிதாத்ம ரூபமான அவ்யக்த மென்ற வெளியில் விளங்குகின்றது. ஆகையினால் ஜகத்தானது வெளி வடிவமான அவ்யக்த மென்ற சுவரில் சித்திரம் போன்றதால் அவ்யக்த வடிவமே யுடையது. இந்த அவ்யக்த மென்ற ஜடசக்தியும் சிதாத்மாவான சுவரில் சித்திரம் போன்றதால் சித்தின் தன்மையுடையது.

இது காரணமாகத்தான், நீடித்துச் செல்லவேண்டியதான தூரதேசங்களுக்கும், யோகிகளானவர்கள் க்ஷணத்திற்சென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தாமதமின்றி அவற்றைப் பார்க்கின்றனர். ஆகையினால் தூரமாவது சமீபமாவது நாட்சென்றதாவது, சீக்கிரமென்பதாவது, சித்தென்ற கண்ணாடியை ஆதாரமாகக் கொண்ட பாவனை யொன்றினாலேயே ஏற்படுகின்றன.



என்றிவ்வாறு நிச்சயம் செய்துகொண்டு சுத்தசித்தினைக் கிரமமாகப் பாவனைசெய்து பிராந்தியை அகற்றிவிடும். அதன்பின் நீரும் என்னைப்போல சுதந்தரானுபவிப்பீர்—"

இவ்விதம் முனிசுதன்வசனங்களைக்கேட்டு இராஜசிரேஷ்டன் அகிலமானபிராந்தியையும் ஒழித்து அறியவேண்டியதை அறிந்தவனாகிச் சுபமான உள்ளமுடையவனாய்ச் சமாதி அப்பியாசங்கள் முயன்று நிஜபாவனையைச் சாதித்துக்கொண்டு சுதந்தரத்தை அடைந்தனன். நெடுநாள் சென்றபிறகு தேகத்தின் தோற்றத்தை வேறறச் செய்து மகாகாயத்தைச் சார்ந்தவனாகிப் பரமமான நிர்வாணத்தை ஏ, பார்க்கவா! அம்மகாசேனனும் அடைந்தான்.

இங்கு மொழிந்தவாறு, சத்தியமென்று பாவனை செய்வதொன்றினாலேயே ஜகத்தானது சத்தியமாக விளங்குகிறது. பிருகுகுலத்தோனே! நான் மொழிந்தவைகளை விசாரணை செய்வாய். அடிக்கடி மனன வடிவமான விசாரணைசெய்தால் உன்னுடைய சித்தத்தில் குடிகொண்டிருப்பதான பிராந்தி சமனமாகும்.

ஸ்ரீ திரிபுராரகசியம் ஞான
காண்டத்தில் சைல லோகாக்கியானத்தில்
பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

# அத்தியாயம்–15

இவ்விதம் மிகவும் அற்புதமான சைலலோக ஆக்கியானத்தைக் கேட்டுப் பிருகுகுலத்தினுதித்தவனான பரசுராமன் பின்னும் பின்னும் அதிக ஆச்சரியத்தை அடைந்தனன். குருநாதன் மொழிகளை நன்றாய் ஆராய்ந்து தன் நிர்மலபுத்தியினால் தீர்மானஞ் செய்துகொண்டு தத்தாத்திரேயரிடத்தில் மறுபடியும் சென்று தண்டம் சமர்ப்பித்து வணக்கத்துடன் கேட்கிறான். "ஏ, பகவானே! தாங்கள் மொழிந்த பற்பல ஆக்கியானங்களிலிருந்தும், என்னுடைய சூக்ஷ்ம விசாரணையினால் சில சாரமான சங்கதிகள் கிரகித்திருக்கிறேன். அறிவு ஒன்றே சத்தியம். அறிபடுபவை அதனிடத்தில் கற்பிதமாகிக் கண்ணாடியில் நகரம்போல் அசத்தியமாகப் புலப்படுகின்றன. பராசக்தி யென்று விளங்குகின்றவளும் மகேச்வரியுமான அந்தச் சித்தானவள் ஒரு 'உபாதானமுமின்றித் தன்னுடைய சுதந்தரத்தினாலேயே தன் சுயரூபமான சுவரில் அவ்யக்தம் முதற்கொண்டு விளங்காநின்ற ஜகத்தான சித்திரத்தை விளக்குகின்றாள். சூக்ஷ்ம புத்தியினால் ஆலோசனை செய்து இவ்வளவுமட்டில் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் அத்தகைய ஸம்வித்தை அறிபடு பொருள்களகன்ற தென்றும் நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. அது எப்பொழுதும் அறிபடுபொருளாகவே யிருப்பதனால் அறியக்கூடாததாகவு மிருக்கிறது. அறிபடும் பொருள்களன்றி ஸம்வித்தை எப்படி நாம்



அனுபவமாகக் காண்போம்? அந்த ஸம்வித்தின் உபலம்பமில்லாவிடில் புருஷார்த்தம் எவ்விதம் கைகூடும்! புருஷார்த்தமான மோக்ஷம் எவ்விதமிருக்கிறது! விஞ்ஞானத்தினால் மோக்ஷம் அடைந்த பிறகும் முக்தர்களுக்கு விவகாரம் ஏது? ஏனென்றால் ஞானிகளும் விவகாரத்தில் பிரியமுள்ளவர்களா யிருப்பதை நாம் பார்க்கிறோம். ஞானிகளுக்கு விவகாரகாலத்தில் அறிபடும் பொருள்கள் எவ்விதம் நிர்விகற்ப அறிவாகத் தோற்றும்? அந்த அறிவாகத் தோற்றுமானால் அவர்களுக்கு விவகாரம் எப்படி நடக்கும்? மோக்ஷ சாதனமான விஞ்ஞானம் ஒரே ரூபமானபடியால் அதன் பலனான மோக்ஷமும் ஒரே விதமாக இருக்கவேண்டியதாயிருக்க உலகத்தில் ஞானிகளின் ஸ்திதியானது பற்பலவாறாகப் பேதப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? சிலர் சாஸ்திரங்கள் கூறியபடி அந்தந்தக் காலங்களில் கர்மங்களைச் செய்கிறார்கள். சிலர் பற்பல மார்க்கங்களை அனுசரித்துத் தேவதைகளை ஆராதனை செய்கிறார்கள். சிலர் இந்திரியங்கள் யாவற்றையும் அடக்கிக்கொண்டு சமாதியிலிருக்கிறார்கள். சிலர் தேகத்தையும் இந்திரியங்களையும் வாடும்படி செய்து தபசு பண்ணுகிறார்கள். சிலர் தங்கள் சீடர்களுக்கு ஸ்பஷ்டமாக விளங்கும்படி போதனை செய்கிறார்கள். சிலர் நீதி தவறாமல் அரசாளுகிறார்கள். சிலர் சபையோர் முன்னிலையில் எதிரிகளுடன் வாதாடுகிறார்கள். சிலர் பற்பலவாறான சாஸ்திரங்களை ஒன்றின் பின்னொன்றாக நிர்மாணம் செய்கிறார்கள். மற்றும்சிலர் சதாகாலமும் பித்தர்கள்போலத் திரிகிறார்கள். இன்னும் சிலர் உலகத்தாரால் நிந்திக்கக்கூடிய கிருத்தியங்களையும் செய்து வருகின்றனர். இவர்கள் எல்லோரும் ஞானிகள் என்று வழங்கப்பட்டுவருகிறார்

கள். சாதனமான விஞ்ஞானமும் பலனான மோக்ஷமும் எல்லோர்க்கும் ஒரேரூபமாயிருந்தும் இவர்களின் ஸ்திதியானது பலவாறாக இருப்பதின் காரணமென்ன? இவர்கள் ஒவ்வொருவருடைய விஞ்ஞானமும் சமந்தானா, அல்லது இவர்களுடைய விஞ்ஞானத்தில் தாரதம்மியம் உண்டோ? இவ்வினாக்களுக்கெல்லாம் ஒன்றுமறியாது தங்களையே சரணமாக அடைந்திருக்கிற அடியேனுக்குப் பூரணதயையுடன் விடையளிக்கவேண்டும்'' என்று கூறினான். பார்க்கவன் இவ்விதம் வினவியதை அத்திரியின் குமாரர் கேட்டுப் பிரசன்னராகி அவன்கேட்டவைகள் யுக்தமென்று தீர்மானித்துச் சொல்லுகிறார். ''புத்திமான்களில் சிறந்தவனான இராமா! நீ அந்தப் பரபதத்தை அடையச் சமர்த்துடையவனாயிருக்கின்றாய். ஏனென்றால் நீ சூக்ஷ்மவிசாரணையில் சமர்த்தனாக இருக்கிறாய். சத்திபாதம் என்று சொல்லப்பட்ட ஈசுவரானுக்ரகத்தினாலேதான் இவ்விதம் உண்டாகிறது. ஈசுவரானுக்கிரகமின்றி எவன்தான் சிரேயசை அடைகிறான். பக்தனுடைய இருதயத்தில் ஸத்தான தர்க்கத்தை உண்டுபண்ணுவதுதான் பிரசன்னரான கடவுளின் செய்கை. ஆத்மதேவதையானவள் சந்தோஷப் படுவளானால் நல்ல ஆலோசனையைத் தினமும் விர்த்தி செய்கிறாள். நீ சாரமாகக் கிரகித்திருப்பதாக மொழிந்தவைகள் தாம் உண்மை. வேறு அன்று. ஆனால் உன்னால் விவரிக்கப்பட்ட அந்தக்கேவலமான சித்ரூபத்தை நீ நன்றாகத் தெரிந்துகொண்டவனன்று. அதனாலேதான் நீ அதனை தடஸ்த லக்ஷணமாக விவரித்தாய். தடஸ்த லக்ஷணபூர்வமாக மட்டில் அறியப்பட்டதும் அறியாதிருப்பதும் ஒன்றே. பூரணமாகத் தெரிந்துகொண்டவர்களுக்குத் தடஸ்தலக்ஷணம் எதுக்



காக? தடஸ்தலக்ஷணத்தால் அறிவது சொப்பன ஞானத்திற்கு நிகராகும். எப்படிச் சொப்பனத்தில் புதையலகப்பட்டால் ஒருவனுக்குப் பிரயோஜனமில்லையோ அவ்விதமே தடஸ்தலக்ஷண ஞானத்தினால் முக்கியமான பிரயோஜனமில்லை. இதுவிஷயமாக அதிசோபனமான ஒருபழைய கதையைச் சொல்லுகிறேன்.

''முன்காலத்தில் தர்மசீலனாகவும் முதிர்ந்த பிராஞ்ஞனாகவும் பராவரஞானியாகவும் ஜனகனென்று பெயரையுடைய ஒரு அரசனிருந்தான். அந்த அரசன் ஒருகாலத்தில் ஆத்மதேவியை முன்னிட்டு ஒரு உத்தமமானயாகத்தை நடத்தினான். அந்தயாகத்திற்கு வித்துவான்களும், தபசிகளும் கலைஞானமுடையவர்களும், வைதிகர்களும், யாஞ்ஞிகர் முதலிய பிராமணர்களும் வந்தார்கள். அதேசமயத்தில் வருணனும் ஒரு யாகம் செய்ய ஆரம்பித்தனன். பிராமணர்கள் முதலானோர் ஜனகராஜாவினால் பூஜிக்கப்பட்டுத் திருப்தி அடைந்தவர்களாகி அவனிடம் அதிக பிரீதியுடையவர்களாயிருந்ததனால் வருணராஜாவினால் அழைக்கப்பட்டும் அங்கு அதிகமாகச் செல்லவில்லை. அதன்மேல் வருணபுத்திரன் வாதாடிக் கபடமாகப்பிராமணர்களை அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று பிராமணவேஷம் பூண்டு ஜனகனுடைய சபைக்குவந்தனன். வருணபுத்திரன் யாகசாலைக்குவந்து அரசனுக்கு ஆசியளித்து அந்தச் சபையிலிருப்பவர்களை ஆக்ஷேபித்துப் பேசவாரம்பித்தான். ''சபையோர்களே! கேளுங்கள். ஓ, அரசனே! தாமரைத் தடாகத்தில் காக்கைக்கூட்டம்வந்து சேர்ந்ததுபோல, உங்கள் யஞ்ஞசாலையானது சோபிக்கவில்லை. சரத்காலத்திலே தாமரைத் தடாகத்தில் அன்னப்பக்ஷிகள் கூட்டமாகச் சேர்வதுபோல வித்துவான்

கள் நிறைந்திருக்கும் ஒருசபையானது மிகவும் சோபிக்கும். ஆனால் இந்தச்சபையில் ஒரு வித்துவானாவது இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. அரசனே! நீர் க்ஷேமமாயிரும். மூடர்கள், நிறைந்த இச்சபையில் எனக்கு இருக்க மனதில்லை. ஆகையினால் நான் போகிறேன்" என்று பலவாறாக வருணபுத்திரன் மொழிந்த வசனங்களைக் கேட்டுச் சபையோர்களுக்குக் கோபமுண்டாகிச் சொல்லுகின்றனர். "ஏ, பகையாளா! நீ என்ன பிராமணனாக இருந்தும் எல்லோரையும் ஆக்ஷேபித்திருக்கிறாய். எங்கள் எல்லோரையும் ஜயிக்கக் கூடியதான உன்னிடத்திலிருக்கும் வித்தை யாது? ஏ, துர்ப்புத்தியே! நீ விருதாவில் பிரதாபம் சொல்லுகிறாய். எங்களை ஜயித்துவிட்டு நீ போகலாம். உலகத்திலுள்ள வித்துவான்கள் யாவரும் இங்கு வந்திருக்கின்றனர். உலகத்திலுள்ள வித்துவான்கள் யாவரையும் ஜயிக்கவந்த துர்ப்புத்தியான நீ யார்? எங்களை யெல்லாம் நீ எந்த வித்தையினால் ஜயிக்கப் போகிறாய்?" என, இவ்விதம் சபையோர்கள் சொன்னதற்கு வருணபுத்திரன் மறுமொழி சொன்னதாவது. "ஒரு பிரதிஜ்ஞை வைத்துக்கொண்டு, உங்கள் யாவரையும் க்ஷணப்பொழுதில் ஜயித்துவிடுகிறேன். நீங்கள் என்னை ஜயித்துவிட்டால் என்னைச் சமுத்திரத்தில் அமிழ்த்தி விடுங்கள். நான் உங்களை ஜயித்துவிட்டால் உங்களைச் சமுத்திரத்தில் மூழ்கும்படி செய்துவிடுகிறேன். இந்தப் பிரதிஜ்ஞையைக் கைக்கொண்டு என்னிடத்தில் வாது புரியுங்கள்" என்றான். இதைக்கேட்டுச் சபையோர்கள் அப்படியே ஆகட்டுமென்று பிரதிஜ்ஞையை அங்கீகரித்துக்கொண்டு வருணபுத்திரனுடன் விவாதஞ் செய்து வந்தனர். வருணபுத்திரன் விதண்ட வாதங்



களாலும் ஜல்பவாதங்களாலும் பிராமணர்களை ஜயித்து அவர்களை ஆயிரக்கணக்காகச் சமுத்திரத்தில் மூழ்கும்படி செய்தான். சமுத்திரத்தில் மூழ்குவிக்கப் பட்ட பிராமணர்கள் வருணதூதர்களால் அழைத்துக்கொண்டு செல்லப்பட்டு வருணனுடைய யாகசாலைக்குச்சென்று அவனால் பூஜிக்கப்பட்டவர்களாகிச் சந்தோஷமடைந்தனர். தம் பிதாவான கஹோலர் சமுத்திரத்தில் மூழ்கு விக்கப்பட்டனரென்று தெரிந்து ஞான விதண்ட ஜல்பங்களில் தேர்ச்சியுள்ள அஷ்டாவக்கிரர் ஜனக சபைக்கு வந்து வருணபுத்திரனை ஜயித்து அவனைச் சமுத்திரத்தில் மூழ்கும்படி ஆஞ்ஞாபித்தனர். பிறகு, வருணபுத்திரன் தோல்வியடைந்ததனால் தன் வேஷத்தை நீக்கி வருணனிடம் சென்ற பிராமணர்களை யெல்லாம் திரும்பவும் ஜனகசபைக்குக்கொண்டு வந்து விட்டனர். அவ்விதம் திரும்பிவந்த பிராமணர்களின் மத்தியில், கஹோல குமாரரான அஷ்டாவக்கிரர் இவ்வளவு பேரும் விடுபட்டது தம்மாலேயே யென்று வெகு கர்வத்துடனிருந்தனர். அஷ்டாவக்கிரருடைய அவமதிப்பினால் சபையோரான பிராமணர்கள் மனதில் வருத்தமடைந்தவராகி அவ்வேளையில் சபைக்குள் பிரவேசித்த ஒரு தபஸ்வினியைத் தங்கள் குறைதீர்க்கும் பொருட்டுச் சரணமாக அடைந்தனர்.

காஷாய வஸ்திரம் பூண்டு ஜடைதரித்து நித்திய தருணியானவளும் அழகு பொருந்தியவளுமான அந்தத் தபஸ்வினி விப்பிரர்களின் மனக்குறையை நீக்கி இராஜனால் பூஜிக்கப்பட்டவளாகி அஷ்டாவக்கிரரைப்பார்த்துச் சொல்லுகிறாள் "கஹோல குமாரா! குழந்தாய்! நீ வெகுபுத்திமான். வருணபுத்திரனை ஜயித்துப் பிராமணர்களை மீட்டு வந்தனை. ஆனால்

சிலகேள்விகள் நான் உன்னைக்கேட்கிறேன். கபடமின்றி விடையளிப்பாயாக. "யாதொரு நிலையை அறிந்தால் அகண்டமான அமிருதத்துவம் உண்டாகிறதோ, யாதொரு நிலையை அறிந்தால் எல்லாச் சந்தேகங்களும் நிவிர்த்தியாகின்றனவோ, அதற்கப்பால் அறியப்படாததாகட்டும், ஆசைப்படக் கூடியதாகட்டும் ஒன்றுமில்லையோ, யாதென்று அறியக்கூடாததோ, அதனை நீ அறிந்திருக்கிறாயானால் என்னிடத்தில் சொல்லு" என்றனள். இவ்விதமான தபஸ்வினியின் வசனங்களைக்கேட்டுக் கஹோல புத்திரர் சொன்னதாவது: "அந்த நிலையானது எனக்கு நன்றாய்த் தெரியும். நான் சொல்கிறேன் கேளும். உலகத்தின்கண் எனக்குத்தெரியாதது அற்பமேனும் கிடையாது. அனேக சாஸ்திரங்களை அடிக்கடி நான் குறைவில்லாமல் திருப்பித் திருப்பிப் படித்திருக்கிறேன். உமது கேள்விகளுக்கு உண்மையான பதிற்சொல்கிறேன்: தபஸ்வினியே! கேளும். அது (அந்நிலையானது) எல்லா ஜகத்துக்கும் காரணமானதும் ஆதி, மத்தியம், அந்தமில்லாததும் தேசகாலங்களினால் பரிச்சின்னப்படாததும் சுத்தமும் அகண்டமுமாகிய சித்துரூபமானது கண்ணாடியில் விளங்கும் நகரம்போல் யாதொன்றை ஆசிரயித்து இந்த ஜகத்து விளங்குகிறதோ, அதுதான் அந்தப் பரமபதம். அந்தப்பதவியை அறிந்தால் அந்தவில்லாத அமிருதத்துவத்தை அடையலாகும். கண்ணாடியின் உண்மைதெரிந்தால் எவ்விதம் சந்தேகங்களிருக்க மாட்டாதோ அதேமாதிரியாக ஜகத்து முழுமையும் பிரதிபிம்பம் என்றுதெரிந்தால் தெரியாதது வேறொன்றுமே இராது. இவ்விதம் பரபதத்தின் உண்மை அறிந்தவனுக்கு ஆசைதான் ஏது? அதனை அறிபவன் அதற்கன்னியமாக ஒருவனில்லாததால் அறியக்கூடாதது என்றும் மொழியலாயிற்று. இவ்விதம் சாஸ்திரங்களில் கூறியபடி நான் அந்தப்பரபதத்தை விவரித்தேன்." என்று மறுமொழிகூறினர். அஷ்டாவக்கிருடைய இம்மொழிகளைக்கேட்டுத் தபஸ்வினி பின்னும் சொல்லுகிறாள். "முனிகுமாரா! நீ யதார்த்தமாகச் சொன்னது எல்லோருக்கும் சம்மதந்தான். ஆனால் அதனை அறிபவனொருவனில்லாததால் அது அறியக்கூடாதது என்றும் அதனை அறிந்தால் அழியாத அமிருதத்துவம் அடையலாமென்றும் நீ மொழிந்தது முன்பின் விரோதமாயிருக்கிறதே அஃதெப்படி? அறியக்கூடாது என்றால் ஒருபொழுதும் தெரியப்படாதது, அதனை இல்லையென்றே சொல்லவேண்டும். இருக்கிறது என்றால் அறியக்கூடியது. அப்பொழுது அறியக்கூடாதது என்று சொல்லலாகாதே? ஆகையினால் ஏ விப்பிரா! நீ சாஸ்திர பரிசயத்தின்மேல் விவரித்தாயே அன்றிச் சுயமாக அறிந்தவன், அதாவது அபரோக்ஷமாகக் கிரகித்தவன், அன்று. பிரத்தியக்ஷமாக எல்லாப் பிரதிபிம்பங்களையும் நீ பார்த்தவனாக இருந்தும் கண்ணாடியை நீ அறியவில்லையே. அஃதென்னகாரணம்? ஜனகராஜன் முன்னிலையில் சபையிலிருந்து முன்பின் பொருந்தாதவார்த்தைகளை இவ்வாறு மொழிந்ததனால் நீ அவமதிப்பு அடைந்திருப்பது உனக்குத் தோன்றவில்லையா?"



தபஸ்வினி இவ்விதம் சொன்னதற்குச்சற்றேனும் மறுமொழி பேசாமல், ஒன்றும் தோன்றாமல் இலஜ்ஜையுடன் தலை குனிந்தவராகிச் சற்றிருந்து பிறகு அவள் மொழிந்தவைகளைத் தம் மனதில் ஆலோசித்து அவள் கேள்விகளுக்குப் பதில் தோன்றாமல் அஷ்டா

வக்கிரர் தபஸ்வினியிடம் சொல்லுகிறார் "ஏ, தபஸ்வினீ! உமது கேள்விகளுக்குத் தகுந்த சமாதானம் எனக்குத் தெரியவில்லை. நான் உமக்குச் சிஷ்யனாகிறேன். எனக்கு விவரமாக அதனைப் போதிக்கவேண்டும். நான் பொய் சொல்லுகிறதில்லை." என்று இவ்விதம் கேட்டுக் கொண்டபொழுது அவருடைய உண்மை மொழிகளால் சந்தோஷித்தவளாகி அஷ்டாவக்கிரரையும் சபையோர்களையும் பார்த்துச் சொல்லுகிறாள். "குழந்தாய்! இதற்குச் (முன்பின் விரோதமானதற்கு) சமாதானம் தெரிந்து கொள்ளாமல் வெகுபேர் அறிவீனர்களாக இருக்கிறார்கள். இது வெறுந்தர்க்கத்தினால் மட்டில் அறியக்கூடியதன்று. எங்கும் மிக ரகசியமானது. இங்கிருக்கும் இச்சபையோர்களில் ஒருவருக்காவது தெரியாது. இந்த ராஜனுக்குத் தெரியும் எனக்குத் தெரியும், அன்றி வேறு ஒருவருக்கும் தெரியாது. எவ்வளவு தான் வாதாடிக் கொண்டிருந்தாலும் நான் கேட்ட கேள்விக்கு விடை அகப்படமாட்டாது. வித்துவான்களுக்கெல்லாம் தர்க்கம்செய்யத்தான் தெரியும். எவ்வளவு புத்திமானாக இருந்தாலும் குருசேவையின்றியும் தேவதானுக்கிரகமில்லாமலும் தர்க்கத்தினாலேயே ஒருகாலும் இது விளங்கமாட்டாது. முனி குமாரா! நான் சொல்வதை ஒரே புத்தியுடன் கேட்பாயாக. இதனைக் கேட்டாலும் ஏகாக்கிரசித்தமில்லாவிடில் தெரியவராது. இந்த விஞ்ஞானத்தை எதுவரையில் தன்னிடத்திலே உதாகரித்துப் பார்க்கவில்லையோ அதுவரையில் ஆயிரந்தடவை சொன்னாலும் சரி, கேட்டாலும் சரி, பிரயோஜனமில்லை. எப்படியென்றால்—ஒருவன் தன் கண்டத்தில் அணிந்திருக்கும் முத்துமாலையை விசாரணை



யின்றி மூடத்தன்மையினால் திருடர்கள் பற்றிவிட்டார்களென்று எண்ணுகிறான். வேறு ஒருவனால் உன் கண்டத்திலேயே இருக்கிறதென்று தெரிவிக்கப்பட்டாலும் தன்னையே உதாகரித்துத் தன் கண்டத்தை எதுவரையில் பாராமலிருக்கிறானோ அதுவரையில் அதிக புத்திமானாகவிருந்தாலும் தன் கண்டத்திலிருக்கும் ஹாரத்தை அடைய மாட்டான். இந்த மாதிரியாக, ஏ, முனிபுத்திரா! தன் ஆத்ம சொரூபத்தைக் கேட்ட பிறகு அதிநிபுணனாயிருந்தாலும் எதுவரையில் தன் அந்தராத்மாவிடத்தில் உதாகரித்துப் பார்க்காமலிருக்கிறானோ அதுவரையில் அந்த ஆத்மதத்துவம் வெளியிலே எவ்விடத்தில் எவ்விதம் அறியப்பட்டதாகும்?

தீபமானது விஷயங்கள் யாவற்றையும் விளக்குகின்றது. தீபத்திற்குத் தன்னை விளக்க வேறு ஒரு தீபம் ஒருபொழுதும் தேவையில்லை; அன்னியப்பிரகாசத்தை அபேக்ஷியாமலே தானாக விளங்கிக்கொள்கிறது. சூரியப் பிரகாசத்திலுங்கூட அன்னியங்களை பிரகாசிப்பவையான தீபங்கள் தானாக விளங்குகின்றன. இப்படியிருக்கத் தீபங்களுக்குப் பிரகாசம் மட்டானதினால் அவை இல்லையென்றாவது விளங்கவில்லையென்றாவது எப்படிச் சொல்லலாம்? இவ்விதம் சித்பிரகாசத்தால் விளங்குகிற தீபம் முதலியவைகளிருக்க விளங்காததும் அறியக் கூடாததுமான அந்த சித் தத்துவம் விளங்குகிறது என்று மொழிவதில் உனக்கு யாது சந்தேகம்? ஆகையினால் விளங்காத சிதாத்மாவும் விளங்குகிறது. இந்தச் சிதாத்மாவின் பிரகாசித்தல் சுயமாயிருப்பதாவென்று நீ அந்தர்முக திருஷ்டியினால் பூரணமாக விசாரித்துத் தெளிவை அடைவாய். சர்வகாரணி

யும் துரீய ரூபியும் எல்லாவற்றிற்கும் ஆதாரமானவளும், சகலத்தையும் விளக்குகின்றவளுமான இந்தச் சித் சக்தியானவள் எங்கு தான், எப்பொழுது தான் பிரகாசிக்கவில்லை? அவள் எப்பொழுது பிரகாசிக்கவில்லையோ அப்பொழுது மற்றவைகள் எவ்விதம்விளங்கும்? பிரகாச (a) மற்றபொழுதுங்கூட அந்தச்சித்சக்தியானவள் பிரகாசிக்கின்றனள். (b) அந்தப்பிரகாசம் விளங்குமானால் அதனைவிளக்கக்கூடிய சித்சக்திவிளங்கவில்லையென்று எப்படிச் சொல்லலாம்? அப்பிரகாசத்திலும் சித் சக்தியானவள் விளங்குகின்றனளென்று சொன்னால் எவ்விதம் விளங்குகிறாள்? இதனை நீ உன் சூக்ஷ்ம விசாரணையினாலேயே அறிந்து கொள்ளவேண்டும். இந்தச் சுத்த சித் விஷயத்தில் பண்டிதர்களும் புத்திமான்களுங் கூட அந்தர்முகவிசாரணை யின்மையால், உண்மை தெரியாமல் சம்சாரத்தில் உழன்று வருகின்றனர். அந்தர்முகதிருஷ்டி யென்பது மனதினுடைய பிரவிர்த்தியான ஸங்கற்பங்களை விலக்கி நிலைத்திருக்கிறவரையில் ஒரு பொழுதும் உண்டாகமாட்டாது. எதுவரையில் அந்தத் திருஷ்டியுண்டாகவில்லையோ அது வரையில் அந்தச் சுத்த சித்தை அறிய முடியாது. சங்கற்ப மற்றிருப்பது அந்தர் திருஷ்டி. சங்கற்பங்களுடனிருக்கும் பொழுது அந்தர் திருஷ்டி

---

(a) சுழுத்தியிலும் பிரளயத்திலும் ஒன்றும் விளங்குகிறதில்லையாதலால் சித்தின் பிரகாசம் காலத்தினால் பரிச்சின்னமாகிறதே யென்றால் அப்பிரகாசத்திலும் (பிரகாச மின்மையிலும்) சித்தின் பிரகாசமே பிரகாசிக்கின்றது.

(b) அப்பிரகாசத்திற்கு சொப்பிரகாசத் தன்மையில்லையாகையால் அப்பிரகாசத்தையும் பிரகாசிப்பிப்பதான சித்து விளங்கவில்லை யெனத்தகாது.



எப்படி ஏற்படும்? ஆகையினால் உன் சங்கற்பங்களைத் நிரவிலக்கி உன் சுயரூபத்தில் அமர்ந்திரு. (a) க்ஷண நேரமாவது சுயபாவத்தில் சிந்தனையற்று நிலைத்திருந்து பிறகு உன் ஞாபகசக்தியினால் நீ சுயரூபத்தில் அமர்ந்திருந்த பொழுது நீ சுயமாகவே விளங்கினையா அல்லது வேறொன்றினால் விளங்கினையா என்று தெரிந்து கொள்ளலாம். அதன் மேல் அறியக்கூடாதது எவ்விதம் அறியப்பட்டது என்ற சங்கதிகள் யாவும் உனக்கு ஸ்பஷ்டமாக விளங்கும். இவ்விதம் அறியக்கூடாததை அறிந்தால் அழியாத நிலை அடையப்படுகிறது. இந்தப் படி நீ கேட்டுக் கொண்டதற்குச் சொல்லிவிட்டேன். உனக்கு வந்தனம். நான் போகிறேன். சுருக்கமாக ஒரு தடவைதான் கேட்டதனால் உனக்கு இன்னும் ஸ்பஷ்டமாக விளங்கவில்லை. புத்திமான்களில் சிறந்தவரான இந்தராஜன் உனக்குப் போதிப்பார். உனக்கு உண்டாகும் சந்தேகங்களை அவரிடத்தில் கேட்டுக் கொண்டால் வேரற நிவிர்த்தி செய்து விடுவர்" என்று இவ்விதம் வசனித்துக்கொண்டு இன்னானால் பூஜிக்கப்பட்டவளாகியும் சபையோர்களால் வந்திக்கப்பட்டவளாயும் காற்றினால் விலக்கப்பட்ட மேகத் தொடர்

---

(a) ஆகாயத்தினால் நிறையப்பட்ட கடம்போல் மனதானது சுபாவமாகவே சுத்த சித்ரூபமான பிரத்தியகாத்மாவினால் நிறைந்தது. மறுபடியும் தானியத்தால் நிறைக்கப்பட்ட கடம் போல் மனது சங்கற்பத்தினால் நிறைக்கப்பட்டது. தானியத்தை எடுத்து விட்டால் ஆகாயம் நிறைந்த கடம் மீந்திருப்பது போல சங்கற்பத்தை ஒழித்து விட்டால் ஆத்மாவினால் பூரிதமான மனதாகின்றபடியால் சங்கற்பத்தை ஒழித்தபின், சொரூபத்தை அடைதல் என்ற வியாபாரம் இல்லை யென்பது கருத்து.

போல் க்ஷணத்தில் அந்தர்த்தான மாயினள்." இராமா! நீ கேட்டுக்கொண்ட ஆத்மாவை அறியவேண்டியமார்க்கம் இதுதான்.

ஸ்ரீ திரிபுராரகசியம் ஞானகாண்டத்தில் அஷ்டாவக்ரீயத்தில்
பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்-16

பார்க்கவனை இராமன் இக்கதையைக் கேட்டு மிகுந்த ஆச்சரியமடைந்து, கதை கேட்டதில் திருப்தி கொள்ளாதவனாகி, அத்திரியின் குமாரனைப் பின்னும் கேட்கிறான் "ஏ, பகவானே! தாங்கள் சொன்னபுராதனகதையானது அற்புதமாயிருக்கின்றது. அஷ்டாவக்கிரமகாமுனி ஜனகராஜனிடம் பின்னும் என்ன கேள்விகள் கேட்டாரென்பதையும் அதற்கு ஜனகராஜா யாது மறுமொழி கூறினாரென்பதையும் எல்லாம் அடியேனுக்குச் சொல்லவேண்டும். அகோ! அற்புதமான ஆக்யானமாயிருக்கின்றதே! இதுவரையிலும் நான் ஒருகாலும் இம்மாதிரி கேட்டதில்லை. குருநாதா, விஞ்ஞானமார்க்கம் யாவற்றையுங்கிருபைகூர்ந்து எனக்கு அருளவேண்டும்." என்றான். இவ்விதம் கேட்டுக்கொண்ட பொழுது மகா முனிவரான தத்தாத்திரேயர்பரமபாவனமான கதையைப் பார்க்கவனுக்குச்சொல்கிறார். "மகாத்துமாவான ஜனகர் யாது சொன்னாரோ அதனைக்கேள், ஏ பார்க்கவா! தபஸ்வினி யானவள் சென்ற பிற்பாடு முனிகுமாரரான அஷ்டாவக்கிரர் வெகு விப்பிரர்களால் சூழப்பட்டவராகி ஜனகராஜனிடம் சென்று நான் உனக்கு இதற்கு முன்சொன்ன தபஸ்வினியின், சுருக்கமானவையும் மகா அர்த்தம் அடங்கியவையுமான மொழிகளைப்பற்றி வினவ ஆரம்பித்தார்." ஏ இராஜனே! விதேக நாடாளும் மன்னவா! தபஸ்வினியானவள் ஸம்க்ஷேபமாகச் சொன்னதனால்

எனக்கு முழுமையும் தெளிவாக விளங்கவில்லை. அறியக் கூடாததை எவ்விதம் நான் அறியலாகும். ஏ தயாநிதியே! இதனை எனக்குப் புகட்டவேண்டும்" என்றார்.

இவ்விதம் ஜனகன் வினவப்பட்ட தன்மேல் ஆச்சரியமடைந்தவர்போல மறுமொழி கூறுகின்றார். "ஏ முனி புத்திரா! நான் இப்பொழுது சொல்லும் வசனங்களைக் கேளும். அந்தச் சுத்த சிதாத்மதத்துவம் எவ்விதத்திலும் அறியக்கூடாததுமன்று, எவ்விதத்திலும் கூடியதுமன்று; எவ்விதத்திலும் அறியக்கூடாததானால் குருவினால் தான் எப்படிச் சொல்லக்கூடும்? சொல். தத்துவத்தைக் குருவானவர் உபதேசம் செய்கிறபடியினால் முதலில் குருவை அடைய வேண்டும். ஆகையினால் முழுமையும் அறியக் கூடாததன்று. அந்தச்சுத்த சிதாத்ம தத்துவத்தை அறிவது சுலபமும், கஷ்டமுந்தான். அந்தர்முக திருஷ்டியுடையவனுக்குச் சுலபமும், பகிர்முகதிருஷ்டியுடையவனுக்குத் துர்லபமும் ஆகும். கேவலம் நிரூபிக்கக்கூடாத இந்தத் தத்துவம் அறியக்கூடாததாக இருந்தாலும் வேறுவிதத்தில் அதாவது அதத்வியாவிருத்திரூபமாக நிரூபிக்கப்பட்டிருக்கிற படியினால் அறியக்கூடியதே. (1) திருசியங்களை யாதொன்று

(1) யாதொன்றினால் கடாதியான திருசியம் பார்க்கப்படுகிறதோ அவ்வடிவத்தினாலேயே ஞானம் அறியப்படுகிறதென்பது மற்றவர்களுடைய கூற்று. "கடஞ்ஞானவான் நான்" என்பதில் கடத்திலிருந்தும் வேறு வடிவமாகவே ஞானம் அறியப்படுகிறது. சுயமாக அறியப்படுகிறதில்லையென்பது அவர் கூற்று. அந்தந்த உபாதிகளகன்ற ஞானசாமான்யமே நிஜவடிவம். இவ்விதம் அறியப்படுகிறதென்கிறார்.



பார்க்கிறதோ அவ்வடிவமாகவே அத்தத்துவம் அறியப்படுகிறதாகச் சொல்லப்படுகின்றது. (2) திருசிய ஞானத்தில் யாதொன்று விளங்குகிறதோ அதனைக் குதர்க்கமின்றிச் சூக்ஷ்மயுக்தியினால் ஆராய்ந்துபாரும். ஒளிமாத்திரமே வடிவாகி யாவற்றையும் விளக்கக் கூடிய பானசக்தியினிடமிருந்தும் விளங்கப்படுபவை விலக்கினால் எல்லா விளக்கங்களுக்கும் ஆதாரமான தத்துவம் அதுவாம். அந்த (3) ஒளியான விளக்கும் சக்திதான் சுத்த சிதாத்ம (4) தத்துவமென்று, ஏமுனி குமாரா! நீர் உணர்வீர்; அறிபடுபொருள்கள் தாமாக விளங்குவதின்மையால் அறிபவளாகாள். ஆகையினால் அறிபவள் அறிபடுபொருளிலிருந்தும் வேறு, இவளாலே தான் அறிபடுபொருள்கள் அறியப்படுகின்றனவன்றித் தாமாக ஒருகாலும் விளங்குவதில்லை. பற்பல ரூபங்களான அறிபடுபொருள்களையும் அறிபவளே அறிகின்றனள். அறிபடுபொருள்களில் அந்தந்த ரூபங்களுக்குத் தக்கபடி அறிபவள் ஒருகாலும் மாறுகிறதில்லை. பேதங்கள் அறிபடுபொருள்களின் தர்மமே யன்றி

(2) இவ்விதம் அபரிச்சின்னமான ஞான சாமான்யத்தை நான் எவ்விதம் அறிவேனென்றால்—உன்னுடைய்தான யாதொரு ஞானம் கடம் முதலிய வடிவாக விளங்குகின்றதோ அதனைக் குதர்க்கத்தை விட்டுச் சிரத்தையுடன் பாவனைசெய்து பார்.

(3) கடஞானத்தில் இரண்டம்சம் இருக்கின்றன. கடம் ஞானம். கடம் பிரகாசியம்; ஞானம்பிரகாசம்—பிரகாச வடிவமான ஞானத்திற்கு பானசக்தியென்று பெயர்.

(4) எல்லா விளங்கலினிடமிருந்தும் அறியப்படுகிற அம்சத்தை அகற்றும்பொழுது எல்லாவிளங்கலுக்கும் அபேதமாக ஆதாரமாயிருக்கும் பானசக்தியே அந்தத் தத்த்வம், அதாவது சுத்தமான சிதாத்ம தத்துவம்.

அறிபவனை ஒருகாலும் அணுகுகிறதில்லை. பொருள்களின் ஆகாரங்களில் பேதம் விளங்குகிற படியால் பேதம் பொருள்களின் தர்மமேயன்றி நிராகாரமான (வடிவு அற்ற) அறிபவனின் தர்மமன்று. இதுவேகேவலம் பரோக்ஷவாத மன்று என்பதற்குப் பொருள்களை விலக்கிச் சங்கற்பமின்றிச் சூக்ஷ்மபுத்தியினால் ஆகாரமற்ற வித்தை (அறிவைப்)பாரும். எப்படிக்கண்ணாடி ஒன்றேயானாலும் அதனிடம் பலவாறாகப்பிரதிபிம்பங்கள் ஏற்படுகின்றனவோ அவ்விதமே சித்தானவள் பொருள்களின் வடிவங்களைக்கொண்டு நானாவாக விளங்குகின்றனள். அறிபடுபொருள்களினின்றும் இஃதன்று—இஃதன்று என்றுவிலக்கி உள்நோக்கும் வழியாக இவ்விதம் (1) அறிபவனை அறிபவரேயொழிய உலகங்களுக்கெல்லாம் ஆதாரமான இந்த வித்தை(அறிவை)மற்றபொருள்களை அறிவதுபோல் அறியக்கூடாது. ஏனென்றால் அந்த சித்தானவள் அறிபவனுடைய சொரூபமாகவே யிருக்கின்றதனால் அறியப்படுகிறதில்லை. அஷ்டாவக்கிரரே! இப்படிக் கூறியவாறே உமது சுயரூபத்தை விசாரித்துப் பாரும். நீர் சரீரமன்று, பிராணனும் மனது மன்று. ஏனென்றால் இவை அஸ்திரமானவை. இவைகளுக்கு

(1) இங்கு இது கருத்து. சுத்த அறிவை அறிபவனை கர்த்தாவினிடமாக கர்மவியாபாரச் செய்கையினால் "இது" என்றவாறு அறியத்தக்கதன்று. ஆனால் தானென்று விளங்கும் அறிபடுபவையான தேகம் முதலிய யாவற்றையும் தானல்லவென்று நிஷேதம்செய்தால் தன்னாத்ம ரூபத்தை நிஷேதிக்க முடியாதாகையால் யாவற்றையும் நிஷேதித்த பிறகு அன்னியமான நினைப்பு இல்லாத தருணத்தில் தானாகவே விளங்குகிற படியால் அங்கிருந்து எழுந்தவனுக்கு அந்நிலையானது தன் ஸ்மிருதியினால் அறியப்பட்டது போலாகின்றது.



ஓரேவடிவமில்லை. தாதுக்களின் சமூகமான சரீரம் உமது சுயரூபமெப்படி யாகக்கூடும்? (2) அன்னிய விஷயங்கள் விளங்கும் பொழுது சரீரத்தில் நானென்கிற உணர்வு விலகுகின்றது. இவ்விதமே பிராணனிடமிருந்தும் மனதினிடமிருந்தும் நான் என்ற புத்தி அகன்றுவிடுகிறது. யாதொருகாரணத்தினால், அகம் என்ற (3) எண்ணத்தைக் கைவிடாமல் சித்தானவள் இருக்கிறாளோ, அதனாலேதான் அவள் யாவற்றையும் அறிபவள். அஷ்டாவக்கிரரே! உண்மையில் அவள் தானீர். நான் சொன்னது பரோக்ஷதையன்று. உள்ளே திரும்பின கண்களால்கேவலசித்தான உமது ஆத்மாவைப் பார்வையிடும். பின்னொரு காலத்தில் சாவகாசமாகப்பார்த்துக் கொள்வோமென்று இருக்கவேண்டாம். உத்தமபுத்திமான்கள் உபதேசகாலத்திலேயே தங்கள் ஆத்மசொரூபத்தைப் பார்த்துக்கொள்வார்கள். கண்ணாலே பார்வையிடும் என்று சொன்னது இந்த ஸ்தூலக் கண்ணல்ல; மனக்கண்ணே சொல்லப்பட்டது. யாதொன்று சொப்பன சமயத்தில் பார்வையிடுகிறதோ அதுதான் முக்கியமான நேத்திரம். அந்த மனோரூபமான முக்கியநேத்திரத்தினுடைய திரும்புதல் எவ்விதமென்றால் சொல்கிறேன், பிராமணா! கேளும். அந்தத் திரும்புதலின்றிக் கண்களுக்கு ஒன்றுமே தோன்றாது. ஒருபொருளைப் பார்க்கவேண்டுமென்றால், அதற்கு முன்பார்த்துக் கொண்டிருந்த பொருளிலிருந்து மனதைத் திருப்புவதுடன் கூடப் பார்க்கப்போகிற பொருளுடன் மனதைச் சேர்க்க

(2) உடம் முதலிய அன்னிய விஷயங்கள் விளங்கும் பொழுதும், சரீரத்திலுண்டாகும் 'நான்' என்றபுத்தி அகன்று அன்னிய விஷயத்தன்மையாக ஞானம் இருக்கிறது.

(3) அநுபந்தத்தைப் பார்க்க.

வும் செய்தால்தான் அந்தப்பொருளானது ஸ்பஷ்டமாக விளங்கும். அஃதன்றி ஒருகாலும் விளங்காது. அவ்விதம் திருப்புதல் இல்லாமற்போனால் பார்க்கப்போகிற பொருளானது ஒருகாலும் ஸ்பஷ்டமாக விளங்காது. இது பொருள்விளங்காததற்கு நிகரேயாகும். மற்ற இந்திரியங்களான செவி, தொக்கு, முதலியவைகளுடைய வியாபாரங்களும் இவ்விதமே. மனதினிடமுண்டாகும் சுகதுக்கங்களின் விளக்கமும் இதேதன்மையையுடையது. திரும்புதலின்றிய மனதினால் அற்பமாவது அறியக்கூடியதன்று.

ஆகையினால் ஒருபொருளைப் பார்க்கவேண்டுமானால் அப்பொருளினிடம் ஒருபிரியமும் வேண்டும், மற்றொன்றிலிருந்து நோக்கத்தைத் திருப்பவும் வேண்டும். ஆனால் ஆத்மசொரூபத்தை அறியவேண்டுமானால் மற்றப்பொருள்களிலிருந்து திருப்புதல் மட்டும் போதுமானது. இதன் காரணத்தைச் சொல்லுகிறேன், கேளும். அறியக்கூடாததான அந்தச் சிதாத்மா மனதினால் அறியப்படுகிறது. இந்தவிஷயத்தில் சுருதி ஆகமங்களை ஆராய்ந்த பண்டிதர்கள்கூட வெகுபேர் தெரியாமல் தடுமாறுகிறார்கள்.

பகிர்முகத்தில் மனதின் கோசரமானது இரண்டு விதமிருக்கின்றது. முதலாவது ஒருபொருளிலிருந்து திரும்புதல். இரண்டாவது மற்றொருபொருளினிடம் ஏகாக்கிரம் அல்லது தத்பரதை. மற்றபொருளினிடமிருந்து மனதானது திரும்பி மாத்திரமிருக்கும் க்ஷணத்தில் அப்படிப்பட்ட தடஸ்தவேளையில் ஒருவிஷயமும் விளங்காது. ஆகையினால் விஷயம் விளங்கவேண்டுமானால் தத்பரதையென்று கூறப்பட்ட வேறுவியாபாரம் மனதினிடம் இருத்தல்வேண்டும். இவ்விதம் பரிச்



சின்னங்களான அனாத்மவஸ்துக்களெல்லாம் மனதின் கண்ணுள்ள இரட்டை வியாபாரத்தினால் விளங்குகின்றன. யாதொரு காரணத்தினால் சித்தானவள் அபரிச்சின்னையாயிருக்கின்றனளோ அதனாலே அவள் விஷயத்தில் இவ்விதம் இரண்டு வியாபாரங்களும் தேவையில்லை. அவள் விளங்குவதற்கு அன்னியவிஷயங்களிலிருந்தும் மனது திரும்பினால் போதுமானது. எப்படியென்றால் நம்முன்னே வைத்திருக்கும் கண்ணாடியினுள் ஒரு பிரதிபிம்பத்தைச் சற்றுப்பார்க்கவேண்டுமானால் அன்னிய பிரதிபிம்பத்திலிருந்து திருப்பவும் வேண்டும். வேறொன்றின் நேரே கவனத்தைச் செலுத்தவும் வேண்டும். ஆனால் கண்ணாடியில் பிரதிபிம்பித்திருக்கும் ஆகாசத்தைப் பார்க்க வேண்டுமானால் கோரிக்கை நிறைவேற அன்னிய பிரதிபிம்பங்களினின்றும் திரும்புதல் மாத்திரம் போதும். ஏனென்றால் ஆகாசம் எங்கும் வியாபகமானது ; கண்ணாடியில் எப்பொழுதும் உள்ளது. ஆனால் கண்ணாடியினிடம் பிரதிபிம்பங்கள் விளங்கும்பொழுது அதனிடமிருக்கும் ஆகாசம் ஏன் விளங்கவில்லையென்றால் அப்பிரதிபிம்பங்களால் மறைக்கப்பட்டதினால் விளங்கவில்லை.

ஆகாசமானது சர்வத்திற்கும் ஆதாரமாகவிருந்தும் எங்கும் வியாபித்திருந்தும் பிரதிபிம்பங்களால் மறைக்கப்பட்டதினால் அப்பிரதிபிம்பங்களையகற்றித் திருப்புவதினால் மட்டிலும் ஆகாசம் விளங்குகிறது. இதே மாதிரியாகச் சித்தானவள் எங்கும் நிறைந்தவள், யாவற்றிற்கும் ஆதாரமாயும் சர்வகாலத்திலும் மனதினிடம் சமமாயும் பூரணமாயும் ஆகாசம்போல இருக்கின்றனள். ஆகையினால் சித்தானவள் விளங்க அன்னியமான அனாத்ம வஸ்துக்களிலிருந்தும் மனது திரும்

பினால் மாத்திரம் போதுமானது. சித்தானவள் எவ்விடத்தில் எக்காலத்தில் தான் விளங்காமலிருக்கின்றாள். ஆலோசித்துப் பாரும். ஏ, பிராமணா! எக்காலத்தில் எத்தேசத்தில் அவள் இல்லையென்று சொல்லுகிறோமோ அக்கால தேசங்கள் அவள் இன்மையால் சித்தியா. இப்படிச் சித்தானவள் எங்கும் நிறைந்திருக்கின்றதனால் அன்னிய விஷயங்களில் நின்றும் திரும்புதல் மாத்திரம் போதுமானது. மனதினிடம் சித்தானவள் சமமாய் நிறைந்திருக்கிற படியால் புதிதான ஒரு ஆபிமுக்கியம் (தத்பரதை) தேவையில்லை. சிதாத்மாவினிடம் இந்த ஆபிமுக்கியம் தேவையில்லாததைப் பற்றித்தான் அதனை, "அறியக்கூடாதது" என்று முன் சொல்லப்பட்டது. இக்காரணம் கொண்டுதான் சுத்த மனதினால் அந்தச் சிதாத்ம தத்துவத்தை அறியலாமென்றும் முன் கூறப்பட்டது. மனதின் சுத்தி யாதென்றால் அன்னிய விஷயங்களினின்றும் திரும்புவது தான். இது தான் தத்துவ ஞானத்திற்கு முக்கியமான சாதனமென்று சொல்லப்படுகிறது. எதுவரையில் மனது சுத்தமாகவில்லையோ அதுவரையில் ஞானம் எப்படித்தான் உதயமாகும்? மனது சுத்தமாக விருந்தால் ஞானமானது ஏன் சீக்கிரத்தில் உண்டாகமாட்டாது? உண்டாகுமன்றோ? எல்லாச் சாதனங்களும் மனதைச் சுத்தி பண்ணுவதற்கேயாம். சாஸ்திரங்களால் சொல்லப்பட்ட கர்மங்கள், உபாசனைகள், வைராக்கியாதிகள் என்னும் இவைகள் யாவும் மனதைச் சுத்தி பண்ணுவதற்காக ஏற்பட்டனவேயன்றி வேறில்லை. ஆகையினால் சுத்தமான மனதினால் சித்ரூபமான ஆத்மா விளக்கப் படுகிறது" என்றார்.

இவ்வாறாக ஜனகராஜன் மொழிந்ததைக் கேட்டு



அஷ்டாவக்கிரர் பின்னும் கேட்கிறார்—"ஓ, அரசனே! அநாத்ம வஸ்துக்களில் நின்று மனதானது திரும்புவதனால் மாத்திரம் சுத்தமான ஆத்ம சொரூபம் விளங்குகிறது (அறியப்படுகிறது) என்று மொழிந்தீர்கள். சுழுத்தியில் அன்னிய விஷயங்களில் நின்றும் மனதானது திரும்பி யிருக்கிற படியினால் ஆத்ம சொரூபம் விளங்கவேண்டும். அங்ஙனம் இருக்க உறக்கத்தினாலேயே கோரிக்கை நிறைவேறும் பொழுது அன்னியமான சாதனங்கள் எதற்காக?" என்றனர். இவ்விதம் விப்பிரனால் ஆக்ஷேபிக்கப்பட்டதற்கு அரசன் சொன்னதாவது—"ஏ, பிராமணா! அதற்கு நான் சமாதானம் சொல்வதைக் கவனித்துக் கேளும். சுழுத்தியில் மனதிற்குத் திரும்புதல் உண்டு என்பது எவ்விதத்திலும் உண்மைதான். ஆனால் அவ்வேளையில் அந்த மனதின் கண் உள்ள சாத்விககுணமான வஸ்துக்களை விளக்கக்கூடிய சாமர்த்தியம் தமோ குணத்தினால் லீனமாயிருக்கும் பொழுது சித்தின் சொரூபத்தை எவ்விதம் விளக்கக்கூடும்? மை தடவப்பட்ட கண்ணாடியிலிருக்கும் ஆகாசமானது அன்னிய விஷயங்களிலிருந்து திரும்புவதனால் மாத்திரம் ஒருகாலும் விளங்குகிறதில்லை. இந்தப்படியே சுழுத்தியில் திரும்புதலிலிருந்தும் நித்திரையினால் மனது மறைக்கப்பட்டு யோக்கியதை யற்றிருப்பதனால் சித்தை விளக்குகிறதில்லை. அவ்வாறன்றாயின் மைகரியில் பற்றியிருக்கும் கட்டையினாலும் அந்தச் சித்தானவள் விளங்க வேண்டும்.

ஆகையினால் யோக்கியமானதும் சுத்தமானதுமாகிய மனதினாலே தான் சித்தானவள் விளங்குகின்றனள். இதுகாரணமாகத்தான் மனதிற்கு யோக்கியதை இல்லாமையால் பிறந்த குழந்தைகளுக்கு ஒன்று

மே விளங்குகிறதில்லை.

இன்னும் சொல்கிறேன் கேளும். மை பூசப்பட்ட கண்ணாடியில் மையின் பிரதிபிம்பமானது ஒருவருக்காவது தெரியவில்லை. ஏன் தெரியவில்லையென்றால் கண்ணாடியும் மையும் ஒன்று பட்டிருக்கின்றதனால். ஆனாலும் கண்ணாடியினிடம் பிரதிபிம்பவங்களைக் கிரகிக்கும் சாமர்த்தியம் இருக்கின்றதனால் மையின் பிரதிபிம்பம் இருக்க வேண்டும். இதே மாதிரியாகச் சுழுத்தியில் மனது நித்திரை மோகத்துடன் ஒன்று பட்டு அன்னிய விஷயங்களில் திரும்புதலுக்கே இடமில்லா திருக்கின்றதனால் ஆத்ம தத்துவத்தை விளக்கவில்லை. அதனாலே தான் எழுந்திருந்த பிறகு நித்திரையில் (a) யாதொரு மூடத்தன்மை அனுபவிக்கப் பட்டதோ அது ஞாபகத்திற்கு வருகின்றது.

"சுழுத்திக்கும் சமாதிக்கும் யாது பேதமெனிற் சொல்லுகிறேன், மிக்க கவனித்துக் கேளும். மனதிற்குப் பிரகாச அவஸ்தை யென்றும் விமர்ச (விசார) அவஸ்தை யென்றும் இருவித அவஸ்தைகள் உள்ளன. வெளியிலுள்ள விஷயங்களை அவைகளுக்கு அபிமுகமாக விருந்து மனது பார்வையிடும் பொழுது பிரகாசமென்று சொல்லப்படும். மனது தன்னிடத்தில் பிரதிபிம்பித்த விஷயங்களை "இது இப்படி யிருக்கிறதென்று சப்தரூப மாகச் சிந்தனை செய்யும் பொழுது விமர்சமென்று கூறப்படுகின்றது. பிரகாசாவஸ்தையில் விஷயங்கள் பேத மின்றிப் பொதுவாய் விளங்குகிற படி

(a) சுழுத்தியிலிருந்து எழுந்தவனுக்கு "எனக்கு ஒன்றும் தெரியவில்லை" யென்ற ஞாபக முண்டாகிறது.



யினால் அது நிர்விகற்ப மெனப்படும். விமர்சாவஸ்தையில் சப்தபேதங்களால் வித்தியாசப்படுகிறபடியினால் ஸவிகற்ப மெனப்படும். "இது இவ்வித மிருக்கின்றது" என்ற சப்தபேத மின்றிய விஷயப்பார்வையான பிரகாசம் விகற்பமற்றதாகும். விஷயப்பார்வையை மூலகாரணமாகக்கொண்டு 'இது இப்படியிருக்கிற' தென்றும் சப்தபேதங்களுடன் விசாரரூபமாக விளங்குவது ஸவிகற்பகமாகும். இந்த விமர்சமானது ஆந்தரமென்றும், அபிநவமென்றும் இருவகைப்படும். இவைகளில் அபிநவமென்றது அனுபவ சொரூபமானது. ஆந்தரமென்றது முன் அனுபவித்தவைகளை ஞாபகத்தினால் நினைத்துக்கொண்டு வாசனையினால் ஸவிகற்பமாகச் சிந்தனைசெய்வதுதான். இவ்விதம் மனமானது இரண்டு சக்திகளுடன் எப்பொழுது மிருக்கின்றது. (இதன்மேல் சுழுத்தியி லுண்டாகும் மூடத்தன்மைக்குக் காரணம் சொல்லப்படுகிறது). சுழுத்தியென்ற (a) நித்திரை விஷயமான அந்தப் பிரகாசம் நீடித்தது. (b) ஜாக்கிரவேளையில் விமர்சங்கள் (ஸவிகற்ப ஞானங்கள்) வெகுவாக உண்டாகின்றதனால் அதனை மூடத்தன்மையின்றிய தசையென்று சொல்லப்படுகிறது. சுழுத்திவேளையில் விமர்சங்களொன்றுமே யில்லாமல் பிரகாசம் மட்டிலும் நிபிடமாக நீடித்திருக்கின்றதனால் அது மூடத்தன்மையான தசை. இது காரணமாகத்தான்

(a) அனுபந்தத்தைப் பார்க்க.

கடகம் முதலியவைகளைப் பார்வை யிடும் பொழுதுண்டாகும் நிர்விகற்பப் பிரகாசத்தைப்போல க்ஷணிக மன்றென்று அர்த்தம்.

(b) ஜாக்கிரத்தில் ஒவ்வொரு நிர்விகற்பத்திற்கும் பின் அனேக விகற்பங்கள் உதிக்கின்றதனால்—

நீபங்கள் முதலிய விஷயங்கள் சித்தேதவடிவாக இருந்தும் விமர்சங்களின்றியவையானதனால் அவைகளிடத்தில் மூடத்தன்மையை யாதுபற்றியும் வித்துவான்கள் கற்பித்திருக்கின்றனர். சுழுத்தியில் நித்திரையின் மறைப்பினால் விமர்சங்கள் உதிக்கவில்லையென்று சொல்லப்பட்டது. அந்த நித்திரையின் சொரூபமென்னவென்றால், சுழுத்தியில் ஆதியில் உற்பவமான வெளியாகிய அவ்வியக்தமென்ற மகா சூனியத்தைத் தான் நித்திரை என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட திருசியங்களில்லாத "நாஸ்தி" என்ற, சாமானிய நிலைதான் சுழுத்தியில் பிரகாசிக்கின்றது. ஜாக்கிரவேளையிலும் வஸ்துவைப் பார்வை யிடுந்தருணத்தில் இவ்விதமே மனது மூடமாயிருக்கின்றது. ஆனால் ஜாக்கிரவேளையில் நிர்விகற்பம் க்ஷணிகமானபடியினாலும் உடனுக்குடன் (அடிக்கடி) விகற்ப சிந்தனைக ளுதிக்கின்றபடியினாலும் மூடத்தன்மை மறைபட்டுப் போகின்றது. சுழுத்தியில் மனது இலயமாகி விடுகிறது என்ற கொள்கை பிரசித்தமாயிருக்க் நித்திரையைப் பிரகாசம் செய்வது மனம் என்பது எப்படியென்றால், சுழுத்தியில் அவ்வியக்த சக்தியும் பிரகாசமும் ஒன்றுபட்டிருக்கின்றதனாலும், விமர்சமில்லாமலிருக்கிறபடியினாலும், மனது இலயமடைகிறதென்று விவேகிகள் கூறுகின்றனர். ஜாக்கிரத்தில் வஸ்துதரிசனவேளையிலும் இதேமாதிரியாக மனது * இலீனமாயிருக்கின்றது. (இவ்விதம்

* மனது நிர்விகற்பமாக ஏகரூபமாயிருக்கின்றதனாலும், அலைகள் சலிக்காததாலும் மனது இலீனமெனப்படுகிறது. விஷயங்களுக்கு நேரே செல்லுகின்றதுபோலக் காண்கிற அறிவையே மனமென்று கூறப்படுகிறது. சுழுத்தியில் ஸ்திரமாக இருப்பதாலும் வெளிநாட்டம் இல்லாததாலும் மனது இலீனப்படுகிறதென்பது விவேகிகளது கொள்கை.



சுழுத்தியில் மூடத்தன்மையைக் காண்பித்துவிட்டுச் சுழுத்திக்கும், சமாதிக்கும் இருக்கும் பேதம் சொல்லப்படுகிறது).

ஏ, பிராமணா! நான், சுய அனுபவத்திலிருந்தும் எடுத்துச் சொல்லும் ரகசியத்தைக் கேளும். இந்தரகசியம் தெரியாமல் சூக்ஷ்ம விசாரணையில் தேறினவராக வித்துவான்களும் மோகத்தை அடைகின்றனர். நிர்விகற்ப சமாதியும், சுழுத்தியும், வஸ்து தரிசனமும் ஆகிய இம்மூன்றும் விமர்சமில்லாதனவாதலாலும், இவைகளில் பிரகாசம் நிபிடமான காரணத்தினாலும் ஓரேவிதமானவை. ஆனால் இம்மூன்றிற்கும் விவகாரத்தில் கற்பிக்கப்பட்டிருக்கும் பேதத்திற்குக் காரணமென்னவென்றால், இவைகளுக்கு உத்திரக்ஷணத்தில் உதயமாகும், அனுசந்தானம் என்ற விமர்சத்தின் வித்தியாசத்தால் இவைகளுக்கும் பேதம் ஏற்பட்டது. விமர்சத்தின் பேதத்திற்கு விமர்சத்திற்கு முன் விளங்கப்பட்ட விஷயங்களுடைய வித்தியாசமே காரணம் என்பது திண்ணம். சமாதியில் விஷயம் கேவல அறிவு (சித்து) சுழுத்தியில்விஷயம் அவ்வியக்தம், தரிசனத்தில் பின்னங்களானவை. இவ்விதமாக விஷயங்கள், இம்மூன்றவஸ்தைகளிலும் மூன்றுவிதமாயிருக்கின்றன. ஆனால் விளங்கின விஷயங்களுக்குப் பேதமிருந்தாலும் இம்மூன்றிலும், பிரகாசமானது கேவலம் நிர்விகற்பமே (ஏனென்றால் சப்தரூபமான விகற்பசிந்தனை கிடையாது).

யாதொரு காரணத்தினால் இவைகளில் சப்தரூபமான விமர்சங்கள் இல்லையோ அதனாலேதான் இவ்வவஸ்தைகளைப் பிரகாசநிபிடமென்று கூறப்பட்டது. சமாதியும் சுழுத்தியும் நீடித்திருக்கின்றதனால் எல்லோ

ராலும் எழுந்தபிறகு ஸ்பஷ்டமாக நினைக்கப் படுகின்றன. தரிசனமானது ஒருக்ஷணநேரம் மாத்திரம் இருக்கிறபடியால் ஸ்பஷ்டமாக நினைக்கப்படவில்லை. இவ்விதமே க்ஷணிக சமாதியும் க்ஷணிக சுழுத்தியும் நினைக்கப்படுவதில்லை. க்ஷணிக சுழுத்தியென்றும் க்ஷணிக சமாதியென்றும் இருக்கின்றன. இவைகளில் க்ஷணிக சுழுத்தியானது நுட்பநோக்க முடையவர்களாலே பரிசயத்திலிருந்தும் கண்டுபிடிக்கலாகும். சமாதியில் அவ்விதம் பரிசயமில்லாததால் நுட்பபுத்திமானாலும் க்ஷணிக சமாதியை காணுவது அரிது.

ஏ, பிராமணா! விவகாரகாலங்களில் சகலபிராணிகளுக்கும் சூக்ஷ்மமான சமாதிகள் உண்டு. அவைபரிசயமின்மையால் விளங்குவதில்லை. ஜாக்கிரவேளையில் விமரசமற்று (சிந்தையற்று) இருப்பதே சமாதி. விமர்சம் இன்றி இருப்பது ஒன்றிற்கே சமாதி என்று பெயர். ஆகையினால் சுழுத்தியிலும் தரிசனத்திலும் சமாதிக்குணம் இருக்கின்றது. ஆனால் இவ்விரண்டிலும் முக்கிய சமாதித்துவம் கிடையாது. ஏனென்றால் உத்திரக்ஷணத்தில் பேதபுத்தியுடன் சிந்தனைசெய்யக்கூடிய வாசனைகள் அடங்கியிருக்கின்றதனால். இவைகள் முக்

---

1. சமாதியில் சிதாத்மாவின் விளக்கம்.

2. சுழுத்தியில் அவ்வியக்தத்தின் விளக்கம்.

3. வஸ்து தரிசனத்தில்=கடம் முதலிய விஷயவிளக்கம்.

சமாதியிலிருந்து எழுந்தவனுக்கு இதுவரையில் தூஷ்ணீமாக (நினைவின்றி) இருந்தேனென்றும், சுழுத்தியிலிருந்து எழுந்தவனுக்கு எனக்கு ஒன்றும் தெரியவில்லையென்றும், வஸ்து தரிசனத்தில் இது கடம், இது படம், என்றும் உத்திரவிமர்சங்கள் உண்டாகின்றன.



கிய சமாதியாகா. ஆகையினால் ஜாக்கிரவேளையிலுண்டாகும் க்ஷணிகசுழுத்தியும் சமாதியும் நீடித்த சுழுத்தி சமாதிபோலும் வஸ்து தரிசனம்போலும் விமர்சமின்றியவை.

சமாதியும் சுழுத்தியும் ஒன்றுபோலேயிருந்தாலும் இதில்விசேஷமென்னவென்றால், "ஏ, முனிகுமாரா! நான்சொல்கிறேன். சிரத்தையுடன்கேளும். சுழுத்திபோல மூடத்தன்மையுடையதன்று சமாதி. சிருஷ்டிகாலத்தில் ஆதியாக யாதொருவெளியென்ற அவ்வியக்தம் உண்டாயிற்றோ அதுதான் நாஸ்தி என்ற சாமானிய வடிவுடையவிஷயம். (திருசியமான விஷயங்களின் பொதுவான இன்மை). சுழுத்தியில் திருசியங்களின் பொதுவான இன்மை விளங்குகின்றது. அதாவது சுழுத்தியில் சாமான்னியமாக இன்மைவிளங்குகிறது. ஆகையால் சுழுத்தியிலிருந்து எழுந்து நான் ஒன்றும் அறியவில்லை யென்று அவ்வேளையில் இன்மையை அனுபவித்ததாகச் சொல்கின்றான். சிதாத்மாவினுடைய இப்படிப்பட்ட திருசியங்களுடைய சாமானிய இன்மையென்றதும் அவ்வியக்தமென்றதுமான ஜடசக்தியைத்தான் சுழுத்திஎன்று மொழியப்படுகிறது. யாதொரு காரணத்தினால் சுழுத்தியில் ஏற்படும்பார்வையில் திருசியங்களின்பொது இன்மையானஜடசக்தி விளங்கப்பட்டு எழுந்தபிற்பாடு ஒன்றும் தெரியவில்லையென்ற நினைவு உண்டாகிறதோ அதனால் சுழுத்தியில் அறிவானது ஜடசக்தி வடிவமாயிருக்கிறதென்றும் சுழுத்தி ஜடரூபமானதென்றும் நிர்மானப்படுகின்றது. சமாதியில் யாதொன்று விளங்குகிறதோ அதற்கு மூடத்தன்மை சுழுத்தியைப்போல ஏன் கற்பிக்கக்கூடாதென்றால், சமாதியில் விளங்கப்பட்ட அந்தச்சித்தானவன் அகண்

டாகாரமான பிர்ம ரூபிணியும், தேசகாலங்களை விழுங்கி விடுகின்றவளும், நாஸ்தி என்ற தோற்றத்தை நாசம் செய்பவளும் ஆவள். இப்படி எவ்விதத்திலும் இருத்தலையுடைய தேவியானவள் சுழுத்தி போல ஜடசக்தியாக எப்படி விளங்குவாள்? ஆகையினால் ஜடமயமான சுழுத்தியினால் கோரிக்கை நிறைவேறல் சம்பவியாது" இவ்விதம் ஜனகராஜா அஷ்டாவக்கிரருக்குப் பலவாறாகப் போதனை செய்தனர்.

ஸ்ரீ திரிபுராரகசியம் ஞான
காண்டத்தில் அஷ்டாவக்கிரீயம் என்கிற பதினாறாவது
அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்-17

ஏ பார்க்கவா! ஜனகனுடைய இம்மொழிகளைக் கேட்டு அஷ்டாவக்கிரர் அரசனிடம் யாது கேட்டாரோ அதனைச்சொல்கிறேன் கவனித்துக்கேள். "ஏ இராஜனே! வியவகாரதசைகளிலும் சூக்ஷ்மமான சமாதிகள் இருக்கின்றன என்று நீங்கள் மொழிந்தீர்களே, அதனை எனக்கு இன்னும் நன்றாய் விளங்கும்படி சொல்லவேண்டும்; நிர்விகற்ப அறிவு ரூபங்களான அப்படிப்பட்ட சமாதிகள் எந்தெந்தத் தசைகளில் காணப்படுகின்றன" என்று அஷ்டாவக்கிரர் கேட்டதற்கு அகண்டாகாரமான மனதின் வடிவையுடைய ஜனகராஜா சொல்லுகின்றனர். "வியவகார தசையில் சமாதிகளைச் சொல்லுகிறேன், ஏ பிராமணா! கேளும். தன் பிரியையினால் முதல் முதல் நன்றாய் ஆலிங்கனம் செய்யப்படும் பொழுது ஆலிங்கன காலத்தின் ஆதியில் மனிதனுக்கு ஒருக்ஷணப்பொழுதிற்கு வெளியே யாவது உள்ளேயாவது ஒன்றுமே தோன்றாமலிருக்கின்றது. அவன் உறக்கம் கொண்டவனுமல்லன். இதனைத்தான் சமாதி யென்று சொல்கிறது. அநேக நாளாக ஒன்றை ஆசைப்பட்டு அது கிடைக்காது என்று தீர்மானித்திருக்கும் பொழுது, எண்ணாமல் திடீரென்று ஒருவனுக்கு அது கிடைத்துவிட்டால் ஒரு க்ஷணப்பொழுதிற்கு உள்ளேயாவது வெளியேயாவது ஒன்றும் தோன்றாமல் நின்றுவிடுகின்றான். அவன் உறங்கினவனுமல்லன். இதனைத் தான்

சமாதியென்று சொல்லுகிறது. ஒருவன் பயமின்றி உற்சாகத்துடன் செல்லும் பொழுது மிருத்யுவைப்போலத்திடீரென்று ஒரு புலியைச் சந்திப்பானானால் அவனுக்கு க்ஷணநேரத்திற்கு உள்ளிலாவது வெளியிலாவது ஒன்றும் தோன்றுகிறதில்லை. அவன் உறங்கினவனுமல்லன். இது தான் சமாதி என்று சொல்வது. தனக்குமிகப் பிரியமுள்ளவனும் வீட்டுக் காரியங்களில் அதிகசமர்த்தனும் ஆரோக்கியவானு மான தன் குமாரன் இறந்துவிட்டானென்று ஒருவன் திடீரென்று கேட்பானாயின் அவனுக்கு ஒருக்ஷணநேரத்திற்கு உள்ளிலாவது வெளியிலாவது ஒன்றுமே தோன்றுகிறதில்லை. அவன் உறங்கினவனு மல்லன். இது தான் சமாதியென்று (a) சொல்வது. இவைகளன்றியும் க்ஷணிக சமாதிகள் உண்டாவதைச் சொல்கிறேன் கேளும். ஜாக்கிரவேளைக்கும், சொப்பனத்திற்கும், சுழுப்திக்கும், மத்தியிலுள்ள அந்தராளக்ஷணிகங்களில் சமாதி அவஸ்தை யிருக்கின்றது. ஒருவன் ஏகாக்கிர புத்தியுடன் வெகு தூரத்திலிருக்கும் ஒன்றைப் பார்வையிடும் வேளையில் அட்டையானது ஒருசெடியை விட்டு மற்றொரு செடிக்குத் தாவுவது போல அவன் மனமானது நீண்டு (b) விடுகின்றது. தேசத்தினிடம் மனது தேகவடிவாயும் எட்டியிருக்கும் வஸ்துவினிடம்

---

(a) இவ்விதம் மகாசுகம், மகாஹர்ஷம், மகாபயம், மகா சோகமான இவைகள் திடீரென்றுண்டானால் ஆரம்பவேளையில் மனது விமர்சமின்றிச் சொரூபத்தில் நின்று விடுகிறது என்று கூறப்பட்டது.

(b) தேகத்திலிருக்கும் மனமானது சூரிய மண்டலம் வரையில் நீண்டு விடுகிறது. சலிக்கின்ற மனது தீர்க்கமாக மாட்டாது.



அதன் வடிவாகவும் இருக்க இவைகளுக்கு மத்தியில் நிராலம்பமாகச் சொரூபத்தில் நிற்கும் மனதைக் குறிப்பிட்டு நுட்பமாகப்பாரும். வெகுவிதமாகச் சொல்வதனாலென்ன நுட்பமானகொள்கை யின்னதென்று கேளும். வியவகாரவேளையில் ஞானமானது ஒருபொழுதும் (a) ஒரேவடிவமாக விளங்குகிறதில்லை. துண்டிக்கப்பட்ட ஞானங்களின் தொடர்புகளில் நின்றே வியவகாரங்கள் ஏற்பட்டுள்ளன. இது காரணமாகத்தான் விஞ்ஞான வாதிகளான சுகதகாணாதிகள் ஆத்மாவிற்கும் புத்திக்கும் வித்தியாசம் ஒருகணப்பொழுதினாலென்று கூறுகின்றனர். இந்த க்ஷணிகஞானங்களின் மத்திகளான க்ஷணங்களில் நிர்விகற்ப தசையிருக்கின்றது. ககோல புத்திரா! பரிசயத்தில் வரக்கூடிய சமாதிகளின்சொரூபத்தைத் தெரிந்துகொள்ளும். மற்ற சமாதிகளை முயற்கொம்புபோல அறியவேண்டும்" என்று ஜனகராஜன் சொல்ல இம்மொழிகளைக்கேட்டு அஷ்டாவக்கிரர் பின்

---

(a) ஞானம் ஒரே வடிவமாக இருந்தால் வியவகாரம் சித்தியாது. ஒரு க்ஷணத்தில் கடஞான முண்டாகி அடுத்த க்ஷணத்தில் மற்றொரு விஷயத்தின் ஞான முண்டாகின்றது. கடஞானம் படஞானமாகாது. ஒவ்வொரு நினைப்புகளின் மத்தியிலும் நிர்விகற்ப தசையுளது என்று தாத்பரியம். ஆகையினால் மனதின் நிர்விகற்பமான அம்சம் அழியாமலிருக்கிறது.



னும் கேட்கின்றனர். "ஹே, இராஜனே! எல்லோருக்கும் வியவகாரவேளையில் இவ்விதம் நிர்விகற்பவடிவான சமாதிகள் இருக்கும்பொழுது சம்சாரபந்தமானது எப்படி யுண்டாயிற்று? சுழுத்தியிலும் வஸ்து தரிசன வேளையிலும் அவ்வியக்தமும் ஜடங்களும் விளங்குவதால், அவற்றிற்குப் புருஷார்த்தமான மோக்ஷத்தைக் கொடுக்கும் தன்மையில்லை. சுத்தமான அறிவினை விளக்கக்கூடிய இப்படிப்பட்ட நிர்விகற்பவடிவமான சமாதிகளிருந்தும் சம்சாரபந்தமானது பின்னுமிருப்பானேன்? நிர்விகற்பசமாதி என்று சொல்லப்பட்ட விஞ்ஞானமன்றோ அஞ்ஞானத்தை வேரற நாசம் பண்ணக்கூடியதும், சிரேயசிற்குக் காரணமானதும், ஹே, இராஜேந்திரா! என்னுடைய எல்லாச் சந்தேகங்களும் நிவிர்த்தியாகும்படி விடையளிக்க வேண்டும்" என்று கேட்க முனி சிரேஷ்டரிடம் அரசன் சொல்கின்றான். "ஏ பிராமணா! பரமமான (a) இரகசியத்தை இதோ சொல்கிறேன். கேளும். இந்தச் சம்சாரமானது அனாதிகாலம் முதற்கொண்டு அஞ்ஞானத்தினால் ஏற்பட்டு நடந்துவருகின்றது. சுகதுக்கங்கள் பிரவாகம்போல் தொடர்ந்து கொண்டும் சொப்பனம்போல் விளங்கிக்கொண்டுமிருக்குமிந்தச் சம்சாரமானது யாவராலும் எப்பொழுதும் அனுபவிக்கப்படுகின்றது. இதற்கு நிவிர்த்தியாகப்பட்டது ஞானத்தினாலென்றே வித்துவான்களால் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அஞ்ஞானத்தை நாசம்செய்யக்கூடிய இப்படிப்பட்ட ஞானம் ஸவிகற்ப ஞானமே. நிர்விகற்ப விஞ்ஞானத்தினால் அஞ்ஞானம்

(a) சமாதியினால் சம்சாரத்திற்குக் காரணமான அஞ்ஞானம் நிவிர்த்தியாகாதென்று சொல்கின்றார்.



நிவிர்த்தியாக மாட்டாது. ஏனென்றால் நிர்விகற்ப ஞானத்திற்கு ஒன்றினிடமாவது விரோதம் கிடையாது. விசித்திரமான அநேக சித்திரங்களுக்குச் சுவர் எவ்விதமோ அவ்விதம் ஸவிகற்பஞானங்களுக் கெல்லாம் ஆதாரமாக நிர்விகற்பஞான மிருக்கின்றது. விஷயங்களின் பிரதிபிம்பமற்ற சுத்தஞானத்தினைத்தான் நிர்விகற்பஞானமென்று சொல்லப்படுகிறது. இதனிடத்தில் பலவாறான வடிவங்களைப் பொருத்துவதால் ஸவிகற்பஞானம் ஏற்படுகின்றது. ஸவிகற்பமென்று (b) கூறப்பட்டஞானமே அஞ்ஞானம், வேறு அன்று. இந்த அஞ்ஞானமானது காரணவடிவாகவும் காரியவடிவாகவும் பலவித மிருக்கின்றது. தன் ஆத்மாவினுடைய பூரணநிலை விளங்காதிருப்பதே காரண அஞ்ஞானமென்று சொல்லப்பட்டது. அவச்சேத மின்மையால் சிதாத்மா பூரணரே. ஏனென்றால் அவச்சேதனத்திற்குக் காரணங்களான தேசகாலவடிவங்களுக்குச் சிதாத்மா சாதகராக இருக்கின்றனர். இப்படிப்பட்ட சிதாத்மாவிற்குத் தான் இங்கு இப்பொழுது இவ்விதமிருக்கிறேன் என்று அபூரணனாயிருப்பதாக உண்டான தோற்றமே மூலாஞ்ஞானம் என்று மொழியலாகும். இந்த மூலாஞ்ஞானத்திலிருந்தும் காரியவடிவமாகக் கொழுந்து விட்டதுபோலத் தேகத்தில் ஆத்மபுத்தி தோற்றுகின்றது. அஞ்ஞானம் நிவிர்த்தியாகிறவரையிலும் சம்சாரபந்தம் நிவிர்த்தியாகமாட்டாது. பூரணமான ஆத்மவிஞ்ஞானமின்றி அஞ்ஞானம் அகன்றிடாது. இப்படிப்பட்ட பூரணாத்மவிஞ்ஞானம் பரோக்ஷ

(b) அஞ்ஞானமென்பது ஞானத்தினுடைய அபாவமென்றாவது அநிர்வசனீயமென்றாவது சொல்வது பிசகு என்று தாத்பரியம்.

மென்றும் அபரோக்ஷமென்றும் இருவகையாகவிளங்குகின்றது. பரோக்ஷமானது குருவினால் மொழியப்பட்ட சாஸ்திரத்தைச் சிரவணம் செய்வதனால் உண்டாகும் ஞானம். இது(இப்பரோக்ஷஞானம்) சாக்ஷாத்புருஷார்த்தமான சம்சாரதுக்க நிவிர்த்திக்குக் காரணமாகமாட்டாது. சாஸ்திரங்களைச் சிரவணம் செய்ததனால் யாதொருஞான முண்டாகின்றதோ, அதனாலே சிரத்தை மாத்திரம் உதிக்கின்றதேயன்றி அஞ்ஞானத்தின் நிவிர்த்தியான பலனுண்டாகாது. மிகுந்த பக்குவமான சமாதியிலிருந்தும் உண்டாகும் அபரோக்ஷ விஞ்ஞானத்திற்கே பிரபஞ்சத்துடன் அஞ்ஞானத்தை நாசம்செய்து சுபபலனைக்கொடுக்கும் தன்மை உள்ளது. (a) பரோக்ஷஞானத்தை முன்னிட்டுச் சமாதிகூடினால் தான், அபரோக்ஷவிஞ்ஞானம் உதயமாகின்றது. அதுகாரணமாகத்தான் அஞ்ஞானிகளுக்குச் சமாதியிருந்தாலும் அவர்களுக்குப் புருஷார்த்தம் கிடையாது. ஆனால் சாஸ்திரங்கள் கற்றுணர்ந்த, பரோக்ஷஞானிகளுக்குச் சுபாவமாக ஏற்படும் க்ஷணிகசமாதிகள் முதலியவையிருந்தும் புருஷார்த்தம் ஏன்சித்திக்கவில்லையென்றால் அதற்கு உதாகரணம் சொல்லப்படுகிறது. மாணிக்கம் இன்னதென்று அறியாத ஒருவன் ப்ரத்யக்ஷத்தில் அதனைப் பார்வையிட்டாலும் அறிகின்றதில்லை. மாணிக்கத்தின் இலக்ஷணம் தெரிந்த மற்றொருவன் சிரத்தையுடன் அதனைப் பார்வை யிடுவானானால் இதுதான் மாணிக்கமென்று தீர்மானம் செய்கின்றனன். மணியின் இலக்ஷணங்கள் கேட்டிருந்தும் சிரத்தையற்றவனாகவிருந்தால் எத்தனைதரந் தான்மணியினை ஒருவன்பார்த்

(a) பரோக்ஷஞானமின்றி அஞ்ஞானிகளுக்குச் சமாதி கூடினால் புருஷார்த்தம் சித்தியாதென்பது கருத்து.



தாலும் அவன் மாணிக்கமென்று அறியமாட்டான். ஏ, பிராமணா! அதிநிபுணனாகவிருந்தாலும் நான் மொழிந்த விஷயத்திலும் இவ்விதமேயிருக்க, மூடர்களுக்குச் சுபாவமாகச் சமாதிகூடினதால் மட்டிலும் விஞ்ஞானத்தாலுண்டாகும் பலனை அவர்கள் எப்படி அடைவார்கள். மூடர்கள் அறியாத் தன்மையினாலும் சிரவண ஞானமுடைய பண்டிதர்கள் சிரத்தை யின்றிய தன்மையாலும் எவ்விதத்திலும் அறிகின்றதில்லை. (மற்றுமொரு திருஷ்டாந்தம் சொல்லப்படுகிறது) இலக்ஷணம் தெரியாத ஒரு மூடன் நக்ஷத்திரங்களைப் பார்த்தாலும் அவை இன்னவையென்று அறிகிறதில்லை. கேள்வியினால் இலக்ஷணம் தெரிந்தவனும் நக்ஷத்திரங்களைப் பார்த்தாலும் விருப்பமில்லாவிடில் அவை இன்னவையென்று அறியான். விருப்பமுடைய ஒரு புத்திமான் தன் ஏகாக்கிர மனதினால் திக்கு, வடிவு, முதலிய இலக்ஷணங்களைக்கொண்டு சுக்கிர நக்ஷத்திரம் இன்ன விதமாகவிருக்கும், இதுதான் அந்தச் சுக்கிர நக்ஷத்திரமென்று ஸ்பஷ்டமாக அறிகின்றான். இவ்விதமே அறியாத் தன்மையினால் மூடர்களும் விருப்பமின்மையால் மற்றவர்களும் சமாதியிருந்தும் தங்கள் ஆத்ம சொரூபத்தை அறிகின்றதில்லை. இவர்கள் தன்னண்டையிலிருக்கும் புதையலை மறந்து விட்டுப் பிச்சை யெடுப்பவருக்கு நிகராவர்.

ஆகையினால் இப்படிப்பட்டவர்களுக் கெல்லாம் சமாதிகளிருந்தும் பிரயோஜன மில்லை. இதே ஏதுவாகத்தான், பிறந்த குழந்தைகளுக்குச் சதாகாலமும் நிர்விகற்ப மிருந்தும் அஞ்ஞானம் நிவிர்த்தியாகாததால் பலனின்றி யிருக்கின்றது. பிரத்தியபிஞ்ஞை வடிவமாக யாதொரு ஞான முண்டோ அது ஸவிகற்ப

மானது. அது தான் சம்சாரத்திற்குக் காரணமான மூலாஞ்ஞானத்தை நிவிர்த்தி பண்ணுகின்றது. அனேக ஜன்மங்களில் செய்த புண்ணியத்தினால் ஆத்மதேவதையானவள் எக்காலத்தில் பிரசன்னமாகின்றனளோ அப்பொழுது தான் ஒருவனுக்கு முமுக்ஷுத்துவம் உண்டாகுமே யன்றி மற்றபடி கற்ப கோடி காலமானாலும் உண்டாகாது. ஜன்மம் எடுப்பனவைகளில் உணர்வுடைய ஜன்மம் எடுப்பது மிகவும் அரிது. அதினும் அரிது மனிதஜன்ம மெடுப்பது. இந்த மானிட ஜன்மத்திலும் நுட்ப புத்தியுடன் பிறப்பது மிகவும் அரிது. பிராமணா! பாரும். ஸ்தாவர ஜீவராசிகளில் நூற்றில் ஒரு பங்கு ஜங்கம ஜீவராசிகள் இல்லை. இந்த ஜங்கம ஜீவராசிகளில் நூற்றில் ஒருபங்கு மானிடர்களில்லை. இவர்களிலும் பிறவியினால் மானிடரானாலும் அனேககோடி ஜனங்கள் பசுக்களுக்கு நிகராகக்காணப் படுகின்றனர். ஏனென்றால், இவர்களுக்கு நன்மை இன்னது என்றும், தீமை இன்னது என்றும், புண்ணியம் பாபம் இன்னவை யென்றும், தெரியாது. மானிடர்களில் கோடிக் கணக்காக ஜனங்கள் புத்திமான்களானாலும் பண்டிதர்களென்று கர்வமடைந்து காமபரர்களாகிப் பிரவிர்த்தி மார்க்கத்தில் உழன்று வருகின்றனர். இப்படிப்பட்ட ஜனங்களிலும் சிலர் புத்திமான்களா யிருந்தும் பாபஸம்ஸ்காரம் அவர்கள் சித்தத்தில் தங்கியதனால் அத்வைதபதத்தைத் தூஷணை செய்து துவைத புத்திகளா யிருக்கின்றனர். கடவுளின் மாயையினால் அவர்கள் சித்தத்திலிருக்கும் மலினம் ஏதுவாக, அத்வைதபதமானது மறைக்கப் படுகின்றது. மாயையினால் அந்தகர்களான பாக்கிய வீனர்களுக்குப் பரமபதம் எவ்விதம் கிடைக்கும். மாயாந்தகர்க



ளுக்கு அந்நிலையானது புத்தியில் ஏறுது. இன்னும் சில பாக்கிய வீனர்களுக்குப் புத்தியில் ஏறினாலும் அதனிடம் (a) குதர்க்கங்கள் செய்து தள்ளிவிடுகின்றனர். அஹோ! மாயாவிலாசம் என்ன ஆச்சரியம். மகத்தான அத்வைதாத்ம நிலையைக் கண்டாலும் கையிலகப்பட்ட சிந்தாமணியைக் கண்ணாடித் துண்டு என்று எறிந்து விடுவது போல, அதனைத் தள்ளி விடுகிறானன்றோ? இதற்குக் காரணம் தேவதானுக்கிரக மின்மை தான். எவர்களின் ஆராதனையால் பரதேவதையானவள் சந்தோஷமடைகின்றனளோ அவர்கள் மாயையினின்றும் விடுபட்டு ஸுதர்க்கமும் சிரத்தையு முடையவராய், பரமான அத்வைத நிலையில் நம்பிக்கை யுடையவராகி, அந்தப் பரபதத்தை அடைகின்றனர். இதன் கிரமத்தைப் பிராமணா! உமக்கு உரைக்கின்றேன், ஒரே கவனமாகக் கேளும். அனந்த ஜன்மங்களில் செய்த புண்ணியங்களினால் பரதேவதையினிடம் பக்தி உதிக்கின்றது. பிறகு, அப்பரதேவதையை நீடித்து ஆராதனை செய்ததின் மேல் அவள் பிரசாதத்தால் போக விஷயங்களில் அருசி யுண்டாவதுடன், சிரேயஸைக் கொடுக்கக் கூடியதான குருசேவை முதலியவைகளில் விருப்ப முண்டாகின்றது. வைராக்கியமும் விருப்பமும் சிரத்தையும் ஏற்பட்டதின் பிறகு ஸத்குருவை யடைந்து அவர் வாக்கிலிருந்தும் அத்வைதமான பரபதம் அறியப்படுகின்றது. அத்வைதமான ஒரு நிலையுளது என்று இது வரையிலும் அறிந்தது பரோக்ஷ ஞானமே. இவ்விதம் சிரவணத்தால் ஏற்பட்ட பரோக்ஷ ஞானத்தின் பிறகு, அத்வைதமான தன்

(a) தங்களுடைய துவைத மதத்தைத் தள்ளக்கூடாதென்னும் ஆசையினால் குதர்க்கம் செய்து தள்ளிவிடுகின்றார்.

ஆத்மதேவதை யின்னதென்று சாஸ்திர விரோதமின்றிய நல்ல புத்தியால் நிர விசாரித்துச் சந்தேகமறத் தீர்மானம்செய்துகொண்டு தன்னால் தீர்மானிக்கப்பட்ட இரண்டற்ற ஆத்மதத்துவத்தை ஆதரவுடன்விடாமுயற்சியுடையவனாகவிருந்து, அபரோக்ஷமாக அனுபவம் வருகிற வரையில் அனுசந்தானம் செய்யவேண்டும். பிறகு, இந்த அனுசந்தானத்தின் பக்குவமான முதிர்ந்த சமாதி (a) நிலையின் கண் விளங்குவதான பரமான பதவியை ஸவிகற்பமாக "நான் அது" என்று ஞாபகப்படுத்திக் கொள்ளும் பிரத்தியபிஞ்ஞையினால் சம்சாரத்திற்குக் காரணமான மூலாஞ்ஞானம் நாசமாகி விடுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. தியானத்தின் பக்குவமான நிர்விகற்பசமாதியில் பரபதத்தை அடைந்து, பிறகு அந்நிலையை ஞாபகப்படுத்திக் கொள்வதினால் பிரத்தியபிஞ்ஞாவானாகின்றனன். அந்நிலை யிலிருந்த இரண்டற்ற ஆத்மாவாக நான் இருக்கிறேனென்ற அபரோக்ஷ விகற்பத்தினால் சம்சாரத்தின் மூலமான அஞ்ஞானம் தன் அங்கங்களுடன் சீக்கிரத்தில் நாசமடைந்து விடுகிறது. விகற்பங்கள் அகன்று விடுகிறதே தியானத்தின் பக்குவ நிலை. அநேக விதமாகத் தோற்றுவதே விகற்பம். ஒரே விதமான விளக்கமே நிர் விகற்பம். அனாத்ம விஷயங்களான அன்னியங்களைப் பாராமலிருந்தால் விகற்பம் அகன்று விடும். விகற்பம் அகன்று விட்டால் அதன் பிறகு சுபாவமாயிருக்கப்பட்ட நிர்விகற்பம் மிஞ்சித் தானாக இருக்கின்றது. சித்திரங்களைத் துடைத்து விட்டால் சுவரானது எவ்விதம் சுத்தமாக நிற்கின்றதோ, அவ்விதம் நிர்விகற்பம் மிஞ்சுகிறது. சித்திரங்

(a) அனுபந்தத்தைப் பார்க்க.



களைத் துடைத்து விடுதலே சுத்தமான சுவரை அடைதல். இவ்விதமாக விகற்பங்களை நீக்கி விட்டால் நிர்விகற்பமான மனது தானாக விருக்கும். விகற்பங்களை நீக்குவது ஒன்றே நிர்விகற்பமான ஆத்மாவை அடைதல். இதற்குமேல் ஒருவன் அடையக்கூடியதான பரிசுத்தமான பதவி ஒன்றுமே கிடையாது. என்றாலும் அடைந்தே யிருப்பதான இந்த ஆத்மாவை அடைவதில் புத்திமான்களானவர்கள் கூட மாயையின் வலிமையினால் அறிவற்றவரா யிருக்கின்றனர். நல்ல புத்திமான்களுக்கு இந்நிலையானது சீக்கிரத்தில் கைகூடத்தக்கது. இதனிடம் அதிகாரிகள் உத்தமனென்றும் மத்திமனென்றும் அதமனென்றும் மூன்று விதம் உளர். உத்தமர்கள் உபதேசகாலத்திலேயே அந்நிலையை நன்றாய் அறிந்துவிடுகின்றனர். ஏனென்றால், அவர்கள் சிரவணஞ் செய்யுந்தருணத்திலேயே விசாரணையுடன் தியானத்திலிருந்து விடுகின்றனர். உத்தமர்களுக்கு அந்நிலையை அடைவதில் கொஞ்சமேனும் கஷ்டமில்லை.

நான் முன்னொருகாலம் வேனிற் பருவத்தில் நிலவு வீசும் ஓர் இரவில் என் பத்தினியால் ஆலிங்கனம் செய்யப்பட்டவனாகி உத்தியானவனத்தில் மேன்மையான மஞ்சத்தின் மேல் மதுபானத்தால் மதம்கொண்டவனாயிருக்கும் வேளையில் விண்ணினிடமிருந்தும் தேன்மொழிகளான சித்தர்களுடைய வசனங்களைக்கேள்வியுற்றேன். அம்மொழிகளானவை அத்வைதபரமாகவிருந்தது மன்றி அக்ஷணத்தில் அந்நிலையானது எனக்குப் புலப்படவில்லை. ஆனால் அந்தச் சிரவணகாலத்திலேயே என்னுடைய விசாரமென்ற மனனத்தினாலும் தியானம் என்ற நிதித்தியாசத்தினாலும் பரிசுத்தமான அந்த நிலையை அரைமுகூர்த்த நேரத்திற்குள் அறிந்து,

பிறகு, அந்நிலையிலேயே ஒரு முகூர்த்தம் (a) சமாதிகளை விருந்து, பரமானந்த சமுத்திரத்தில் கசடின்றி மூழ்கினவனானேன். அதன் பிறகு ஞாபகமடைந்து அடியில் வருமாறு சிந்தனைசெய்ய ஆரம்பித்தேன். அஹோ! அற்புதமான இந்நிலையில் ஆனந்தாமிருதம் பொங்குகின்றது. இதற்கு முன் இவ்விதம் நான் அனுபவித்ததில்லை. ஆதலால் பின்னும் அந்நிலையிலேயே அமர்ந்திருக்கின்றேன். இந்தச்சமாதி சுகத்திற்கு இலேசமாத்திரமாவது இந்திரன் முதலியோருடைய சுகம் நிகராக மாட்டாது. இரணியகர்ப்பனென்ற பிரம்மாவின் சுகம் முதற்கொண்டு யாவும் சற்றேனும் இச்சுகத்திற்கு ஈடாகா. இந்நாள் வரையில் என்னுடைய காலத்தை விஷயானந்தங்களில் விருதாவாகப்பிரயோஜனமின்றிக் கழித்து விட்டேன். எவ்விதமென்றால் தன்னிடம் சிந்தாமணிரத்தினங்களடங்கிய புதையல் இருப்பதை மறந்து விட்டு ஒருபிடி அரிசிக்காகப் பிச்சைவாங்கித் திரிபவன்போல, அஹோ! அநியாயம்! உலகோர் தங்கள் ஆத்மானந்த உணர்ச்சியின்றி மூடத்தன்மையால் வெகு சிரமப்பட்டு அற்பமான விஷயசுகத்தை அடைகின்றனரே. இந்நாள் வரையில் விஷயசுகத்திற்காக விருதாவில் உழைத்துவந்தது எனக்குப் போதுமானது. அந்தமில்லாத ஆனந்தசமுத்திரத்தில் எப்பொழுதும் அமர்ந்திருக்கின்றேன். போதும் போதும். அறிவின்றி விஷயசுகத்திற்காகச் செய்ததையே பின்னும்செய்துவரும் இந்தப்பஹிர்முக வியவகாரங்களால் நான் யாதுபலனடைந்தேன்? செய்ததையே செய்துவரப்பட்டவைகளான புசிப்புகளும், மாலைகளும், மஞ்சங்களும், பண்டங்களும் மாதர் போகங்களுமான

(a) நிர்விகற்பசமாதியில்



இவைகளைத்தேடித்து அனுபவித்தபிறகும் விடாமல் பற்றிக்கொள்கின்றனரே. ஒருவன் செய்கிறதுபோல மற்றவர்கள் செய்கிற உலகவழக்கங்கொண்டு விஷயபோகத்தில் எனக்கு அருவருப்பு உதிக்கவில்லை" என இவ்விதம் தீர்மானம் செய்துகொண்டு பின்னும் அந்தர்முகமாக நான் முயன்றவேளையில் சுபமான மற்றொருவித எண்ணமானது என்மனதின்கண் உதயமாயிற்று. அஹோ! ஆச்சரியம்! இஃதென்ன இவ்விதமான மூடத்தன்மை என் சித்தத்தில் உதயமாயிற்று, எந்நேரமும் ஆனந்த பரிபூரணனாக நான் இருக்கும் பொழுது, செய்யவேண்டியது எனக்கு என்ன இருக்கின்றது. நான் அடையக்கூடியதுதான் யாதேனுமுண்டோ? என்னால் அடையக்கூடாதது யாதேனுமுண்டோ? அவ்விதமிருக்குமானால் எங்கேதான் எவ்வேளையில் எவ்விதம் அடையப்போகிறேன்? அடையக்கூடாததான ஒன்று எப்படித் தான் உண்மையில் அடையப்பட்டதாகும்! அஹோ! அளவற்ற சிதானந்த ரூபியான எனக்குக் கிரியைகள் ஏது! தேகம், இந்திரியங்கள், அந்தக்கரணங்கள் முதலியவை சொப்பனத்திற்கு நிகரானவையாதலால், இவைகளின் வழியாகவும் எனக்குக்கிரியைகிடையாது. (a) எல்லாஜீவர்களுடைய தேகங்களும், இந்திரியங்களும் அந்தக்கரணங்களும் அகண்டசிதாத்மாவான என்னுடையவையாயிருக்கும் பொழுது, இந்தத் தேகத்தின்கண்ணிருக்கும் ஒரு அந்தக்கரணத்தை மட்டும் நிரோதம் செய்வதால் என்ன பிரயோ

(a) விஷயங்கள் தோன்றாதிருந்தாலும் சம்சாரம் நிவிர்த்தியாக மாட்டாதே, வாசனையினால் மனதின்கண் உதிக்கின்ற விஷயங்களை அகற்ற மனதை நிரோதம் செய்ய வேண்டுமே யென்ற ஆக்ஷேபத்திற்கு விடை.

ஜனம்? நிரோதம் செய்யப்படாத மற்றவர்களுடைய அந்தக்கரணங்களும் என்னுடையவையன்றோ? அப்படியிருக்கும்பொழுது, ஒருமனதைமட்டும் நிரோதம் பண்ணுகிறதினால் எனக்கு என்னபலன்? நிரோதம் செய்யப்பட்ட (யோகிகளுடைய) மனதுகளும் நிரோதம் செய்யப் படாத மனதுகளும் என்னிடத்திலன்றோ விளங்குகின்றன? எல்லாமனதுகளையும் நிரோதம் செய்தாலும் அதனால் எனக்கு (b) நிரோதம் இல்லையே.

ஏனென்றால் ஆகாசத்தைப் பார்க்கிலும் விஸ்தாரமான எனக்கு நிரோதம் ஏது? இவ்விதம் பூரணஸ்வரூபனாகவிருக்கும் எனக்குச்சமாதிதான் (c) எதுக்காக; எவ்விதமுண்டாகும்? சிதானந்தத்தினால் பூரணனாகி, வானிலும் வியாபகனாக விருக்கும் எனக்குக்கிரியை எவ்விதமுண்டாகும்? சரீரத்தில் விளங்குவதானகிரியைகளினால் எனக்காவதென்ன? என்னுடைய மகத்துவத்தாலன்றோ அனந்தமான சரீரங்களிலும் கிரியைகள் விளங்குகின்றன. அப்படிப்பட்டகிரியைகள்விளங்கினால் தான் என்ன. விளங்கா விட்டால்தான் எனக்கு என்ன ஆகவேண்டியதிருக்கிறது? ஒன்றுமில்லை; செய்யவேண்டுமென்றாவது செய்யவேண்டாமென்றாவது எனக்குச் சற்றேனும் கிடையாது. ஆகையினால் மனதை நிரோதம் பண்ணுவானேன்? ஆனந்தத்தில் மூழ்கினவனாகி உண்மையில் பூரண சொரூபனாக விருக்கும் எனக்குச்

(b) நிர்விசேஷமும் ஏகரூபமுமான சொரூபத்தில் விசேஷம் எவ்விதமுண்டாகும் என்றவாறு.

(c) அபரிச்சின்ன ஆனந்த ரூபனான என்னிடத்தில் இந்திரியங்கள் விளங்கினாலும் ஆனந்தம் தடைபடாததால் சமாதி தேவையில்லை.



சமாதியிருந்தென்ன இல்லாவிட்டால் தானென்ன? யாதொரு காரணத்தினால் எனக்குக் கிரியை ஒன்றுமே கிடையாதோ அதுபற்றி இந்தத் தேகமானது எந்தெந்தக் கிரியைகள் செய்து கொண்டு வருகின்றதோ அக்கிரியைகளையே இத்தேகமானது செய்து கொண்டு வருக. இவ்வாறு எவ்விதத்திலும் தன் னிலையில் மகத்தான ஆனந்த வீட்டிலிருக்கின்றேன்; நான் அஸ்தமனமில்லாத பரரூபன், சம்பூரணன், பற்றற்றவன். என்னுடைய நிலைமையை உத்தம அதிகாரியினுடைய நிலைமையென்று சொல்லப்படும். அதம அதிகாரிகளுக்கு அனேக ஜன்மங்களுக்குப் பிறகு ஞான முண்டாகிப் பலனுண்டாம். மத்திம அதிகாரிகள் படிப்படியாகச் சிரவணம், மனனம், நிதித்தியாசனம், முதலியவற்றை அப்பியசித்துக் காலக்கிரமத்தில் ஞானத்தை அடைகின்றனர். பிரத்திய பிஞ்ஞை யென்று சொல்லப்பட்ட விஞ்ஞானமாகிய பலனை வகித்துக் கொண்டிருக்கும் சமாதியானது மிகவும் அரிது. விஞ்ஞானமான பலனின்றிய நூறு சமாதிகளாலும் என்ன பிரயோஜனம்? ஆகையினால் விஞ்ஞானத்தைக் கொடாத க்ஷணிக ஸமாதிகளினால் பலனில்லை என்பது திண்ணம். எப்படியென்றால் ஒரு (a) பாதையில் செல்லும்பொழுது சாமானியமாகக் குறிப்பிடாமல் ஒருவன் நடந்து கொண்டு வந்ததால், அவ்வழியிலிருக்கும் விஷயங்களின் அஞ்ஞானம் நீங்காது. அதாவது (b) வழியில்

(a) நிர்விகற்பத்திற்கு அஞ்ஞானத்தை நிவிர்த்தி செய்யும் தன்மை இல்லை யென்பதற்குத் திருஷ்டாந்தம்.

(b) விகற்பித்துக் குறிப்பிட்டுப் பார்த்தால் பொதுவில் விஷயங்கள் தோன்றுமேயன்றி வழியில் இன்னவிடங்களில் இன்ன மரங்கள் இன்ன வீடுகள் இன்ன விதமிருக்கின்

இன்னின்ன விஷயங்களிருக்கின்றன என்று அவனுக்குப் புலப்படா. நிர்விகற்ப விஞ்ஞானத்திற்கு விஷயாகாரமின்றிய ஞானமே தன் சுயவடிவான படியினால், அது எக்காலமும் விளங்கிக் கொண்டிருந்தாலும், விளங்காத தன்மையுடையது. இந்த விளங்காத் தன்மை விகற்பங்களினால் உண்டான மறைப்பினால் (c) ஏற்பட்டது. அவ்விகற்பங்களை அகற்றி விட்டால் இதற்கு முன்னில்லாமல் புதிதாக விளங்குவது போல விளங்குகின்றது. ஞானத்தையும் ஞேயத்தையும் (அறிவையும் அறிபடுபொருளையும்) பிரித்துப் பாராமல் ஒன்றாகப் பார்த்த பொழுது அறியப்படாததாக யாதொன்று இருந்ததோ அது விகற்பங்களை நீக்கும் பொழுது அறியப் பட்டதாகின்றது. உத்தமமான ஆத்மவிஞ்ஞானத்தின் கிரமம் இவ்விதம், இது தான். ஏ, பிராமணா! இவ்விதமாகச் சிரவணம் செய்தவைகளைப் பின்னும் விசாரித்துத் தெரிந்துகொள்வீர். பின் ஆத்மதத்துவத்தை உணர்ந்தவராகிக் கிருதார்த்த (பொருளடைந்தவ) ராவீர்."

இவ்வாறாக ஜனகராஜனால் உபதேசிக்கப் பட்ட அஷ்டாவக்கிரமகாமுனி, அரசனால் பூஜிக்கப் பட்டு அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு தன்னிருப்பிடத்திற்குச் சென்று மனன நிதித்தியாசனங்கள்

---

றன என்று தெரிய மாட்டா. ஆகையால் அவ்விஷயங்களைப் பற்றிய அஞ்ஞானம் (தெரியாத்தன்மை) நீங்காது.

(c) பிரதிபிம்பங்கள் நிறைந்த கண்ணாடியானது இருந்தாலும் பிரதிபிம்பங்களினால் மறைபட்டுத் தோன்றாதது போல என்று திருஷ்டாந்தம்.



செய்து பரமபதத்தை உணர்ந்து எல்லாச் சந்தேகங்களையும் விலக்கித் தாமதமின்றி ஜீவன் முக்தராக விளங்கினர்.

திரிபுரையின் இரகசியம் ஞான காண்டம் அஷ்டாவக்கிரீயம் பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம்-18

ஏ பார்க்கவா! ஜனகர் கூறியபடி அந்த ஆத்ம ரூபிணியான ஸம்வித்தி அறிபடுபொருளகன்றவளென்று நிரூபிக்கப் பட்டனள். அந்த ஸம்வித்தியைக் குறிப்பிட்டுணருந்தசைகளும் பற்பல இருக்கின்றனவென்று தெரிந்து கொள்ளப்பட்டன. மாயையினால் மோகத்தை அடைந்திருக்கும் ஜனங்கள் தங்களுக்குச் சொரூபத்தில் பரிசயமின்மையால் அந்த ஸம்வித்தியை அறியாமலிருக்கின்றனர். அறிபடு பொருள்களகன்ற சுத்த ஸம்வித்தின் தசை ஸூக்ஷ்ம திருஷ்டியுடையவர்களால் பாவிக்கப்படுகிறதேயன்றி மற்றவர்களால் எவ்விதத்திலும் ஒரு பொழுதேனும் பாவிக்கப் படக்கூடாது. இராமா! வெகுவாக மொழிவதில் பயனென்ன? நான் சாரமாகச் சொல்வதைக்கேள். அறிபடு பொருள்கள் யாவும் மனதினாலேயே அறியப் படுகின்றன. மனதின் சொரூபத்தை அறியக் கரணமில்லாததால் மனதிற்கு அறிபடு பொருளாகும் தன்மையில்லை. ஆகையால், அறிபடுபொருள்களுக்கு வேறாக அவையொழிந்ததாகி(1)மனது இருக்கிறதென்றும் தீர்மானப்படுகிறது. அறிபடு பொருள்களையொழிந்த அம்மனதே சித்தியென்று கூறப்படும், (2) அனுபவ சொரூபமாகியே யிருக்கிறபடியால் வித்தியானவள் சதா அறியப்பட்டவளாகவே யிருக்கின்றாள். தனக் கன்னியமான ஒன்றின் அனுபவத்தை அபேக்ஷை செய்யும் பக்ஷத்தில் அனவஸ்தையினால் ஒன்றுமே விளங்காமற் போய் விடும்.

(1) விஷய ஞானத்தின் அந்தராளங்களில்விஷயங்களில்லாத மனதிருக்கின்றது. காரியங்களின் மத்தியில் வியாபாரமின்றிக் கரணமிருப்பது போல.

(2) சொப்பிரகாசத் தன்மையினால் அறியப்பட்டவளேயாவள். சொப்பிரகாசத்தை அங்கீகரியா விட்டால் வித்தியை அறிய வேறு வித்தியேற்படும். அதனை அறிய வேறு வித்தியேற்படும். இவ்வித அனவஸ்தையினால் ஒன்றுமே விளங்காமற் போய்விடும். கரணம் = கருவி.



பார்க்கவா! யாதாவதொரு விஷயத்தைப் பார்க்கும்பொழுது 'நீ' விளங்காதிருக்கின்றாயா? 'நான் விளங்கவில்லை' யென்று சொல்வாயாயின் நீ யில்லை. (இருத்தலுடையது விளங்கவேண்டும். விளங்காதது இல்லை). இல்லாதவனிடமிருந்து கேள்விகள் எவ்வாறுண்டாகக்கூடும்? அகோ! ஆகாயமலர்போல் இருப்பில்லாதவன் இதத்தை இச்சிப்பதெங்ஙனம்? நானில்லையென்று சொல்லும் உனக்கு நான் எவ்வாறு ஆத்மாவைச் சாதித்துக்கொடுக்கப்போகிறேன்? ஆலோசனை செய்துபார்— 'ஆத்மாவை நான் நிஷேதிக்கவில்லை, பின்யாதென்றால் சாமான்யமாக விளங்கும் என்னை விசேஷமாக நான் அறியவில்லையாதலால், (a) விசேஷமாகத்தெரிந்துகொள்ள விரும்புகிறேனென்று சொல்வாயாயின் — இராமா — நீ சாமான்யமான ஆத்மரூபமென்று யாதொன்றைத் தெரிந்துகொண்டிருக்கின்றாயோ அதுவேதான் நிஸ்ஸாமான்யமான உன்னுடைய

(a) உலகில் சாமான்யமாகவும் விசேஷமாகவு மிருக்கும் கடம் முதலியவற்றிற்கு இக்கேள்வி தகுமேயன்றி நிஸ்ஸாமான்யமென்ற விசேஷத்தைப் பொருந்தியதும் ஆகாயம் போன்றதுமான அகண்டேக வடிவத்தினிடம் இக்கேள்வி தகாது.

நாசமற்ற வடிவமாகும் (b) அஹோ—ஆச்சரியம்! இதனை அறிந்தவனாகவிருந்தும் நீ விருதாவில் பின்னும் மோகிக்கின்றாயே.

விஷயங்களின் விளக்கம் என்ற பாஸஞானம் யாவும் பாஹ்யங்களான விஷயங்களின் விசேஷ வடிவமுள்ளனவாகையால் அந்தப்பாஸவடிவம் உன்சொருபமன்று. ஆகையால் கேவல ஞானசாமானிய வடிவமாகத்தானாகவே நீ விளங்குகின்றாய். 'சரீரம்முதலியவற்றின் வடிவமாக விளங்குகிறேன்' என்று சொல்வாயாயின் அதற்குச் சமாதானம் கூறுகின்றேன். தேகாதிகளின் வடிவமாக இருக்கிறேனென்று, சங்கற்பம் செய்வதனாலேயே சரீரத்தானென்று விளங்குகிறாயன்றி வேறன்று. தேகத்திலிருந்தும் வேறானவைகளைச் சங்கற்பிக்கும்பொழுது விளங்காநின்ற உனக்குத் தேக வடிவம் விளங்குகின்றதா? இல்லை. 'தேகம் விளங்கும் பொழுது வாஸ்தவத்தில் சிதாத்மாவான எனக்கு அதனிடம் சம்பந்தமுண்டாவதால் தேகாதிகள் என் சொருபமாகின்றன' என்பாயாயின் கடம்முதலிய விஷயங்களினிடம் சிதாத்மாவிற்குச் சம்பந்தமுண்டாகும் பொழுது அவையுமன்றோ உன்வடிவமாகவேண்டும்? சிதாத்மாவிற்குப் பரிச்சேதம் செய்வனவான உபாதி

(b) நாசமற்ற = தேகம் முதலிய அநித்திய வடிவங்கள்.

திருஷ்டா, திருசியம் என்ற எல்லா விசேஷங்களும் ஒழிந்த யாதொரு ஸம்வித்தின் சாமானியம் விளங்குகின்றதோ அதுவே உன் நிஜவடிவம்.

சாமான்யமாகட்டும் விசேஷமாகட்டும் ஒன்றற்கொன்று சம்பந்தமுடையதாகவே விளங்கும். சுதந்தரமாக விளங்காது. சிதாத்மாவோ வென்றால் நிஸ்ஸாமான்ய விசேஷ வடிவமாகவிளங்குவது என்று கருத்து.



களினால் தேகமும் சொருபமாகிறதென்னும் பக்ஷத்தில் கடாதி ஞானகாலத்திலும் கடம் முதலிய சங்கற்பரூபமான ஞானத்தினிடமாக நானென்பது இருக்க அந்தந்தப் பரிச்சேத உபாதிகளால் கடம்முதலியவையும் உன் வடிவமாகிவிடும். இவ்வாறு எந்தெந்தச் சரீரத்தை நீ சங்கற்பம் செய்கிறாயோ அதுவாகின்றாய். இக்காரணமாக நீ ஸர்வமயனாகும் பொழுது தேகமாத்திர வடிவானவனென்பது எவ்விதம்?

ஆகையினால், பலவாறாக விசாரிப்பதால் திருசியமானது உன் வடிவமன்று. ஆதலால் திருக்கு மாத்திர வடிவாயிருக்கின்றாய்; திருக்கானது ஒருகாலத்திலும் திருசியமாகாது. அந்த ஆத்ம சொருபமான திருக்கு சொப்பிரகாசமானது. (a) அது திருசிய வடிவத்தின் விசேஷம் இலேசமாவதில்லாதது. தேகம், தேசம், காலம் இவைகளின் பேதத்தினால் விசித்திரமான (b) விசித்திரங்களுடன் பொருந்தியது.

ஆகையினால், சங்கற்பம் ஒன்றை விட்டுவிட்டால் தானாக விளங்கி மீந்திருப்பதான சுத்த சித்தின் (c) வடிவத்தைத் தன் ஆத்மாவென்றுகுறிப்பிட்டுணர்வாய். இவ்விதம் சங்கற்பத்தை யொழித்துச் செவ்வினை

(a) சொப்பிரகாசம் = தான் விளங்க அன்னியாபேக்ஷையின்றியிருப்பது.

(b) பிரதிபிம்ப சித்திரங்கள் பொருந்திய கண்ணாடிபோலென்றர்த்தம்.

(c) தேகாத்ம பாவத்தை வேரறச்செய்யக் கூடியதான பிரத்யபிஞ்ஞை ஞானத்தினாலேயே அஞ்ஞான நிவிர்த்தியன்றி க்ஷணிக சமாதிவடிவமான நிர்விகற்பத்தால் ஏற்படும் ஆபாத (மேலெழுந்தவாரியான) பிரத்யபிஞ்ஞையினாலன்று என்பது கருத்து.

குறிப்பிட்டுனரும் பொழுது அங்கிருக்கும் தேகாதிகளில் அபிமானமின்றி யிருப்பதனால் ஸர்வஸம்ஸாரத்திற்கும் காரணமான அஞ்ஞானம் இலயமாகிவிடும். ஆகாயத்தின் பின் பக்கத்திலாவது, பாதாளத்திலாவது பூதலத்திலாவது மோக்ஷ மென்பதில்லை. சங்கற்பத்தை ஒழிப்பதனால் சுத்தமான சொரூபத்தின் ஸ்புரணமே மோக்ஷம் என்பதாம்.

அந்த மோக்ஷமும் சொரூபத்தின் தன்மை (d) யுடையதாகையால் ஒருபொழுதும் அடையப்பட்டதாக மாட்டாது. கேவலம் மோகமாத்திரத்தை அகற்றி விடுவதனாலேயே கிருதார்த்ததை உண்டாகின்றது. செய்கையினால் ஏற்படுவன அழிந்து (e) விடுமாதலால் இதையன்றி வேறு விதமான மோக்ஷம் பாவிக்கத்தக்கது. மோக்ஷமென்றது சொரூபத்திற்கு வேறாயிருக்குமானால் அது முயற்கொம்பிற்கு நிகரானதாகும். சொரூபம் எப்படியும் பூரணமானதால் அதற்கு அன்னியமாக மோக்ஷம் எங்குண்டாகும்? ஜகத்தைப்போல் சொரூபத்தினிடமாகவே மோக்ஷமுண்டாகட்டுமென்றால் அது (மோக்ஷம்) கண்ணாடிப்பிரதிபிம்பம்போல் சொரூபத்திற்கு வேறாகாதது. உலகத்தில் பந்தம் அகல்வதன்றி வேறு மோக்ஷம் பாவிக்கப்படுவதில்லை. அகல்வது என்பது அபாவமேயாகும். அபாவசொரூபமான அகலுதல் எவ்விதம் சத்தியமாகும்? பாவம் அபாவம் என்ற இரு வடிவங்களையும் பொருந்திய வஸ்து ஓரிடத்திலும்சித்தியாது. அவ்விதமே சொப்பன பாவங்கள்பாவமென்றும் அபாவமென்றும் இருதன்மையுடையன. அவை(சொப்பன பாவங்கள்) தோற்றலால் சத்தியமுமாம்; பாதிக்கப்படுதல் பற்றி அசத்தியமுமாமெனும் பக்ஷத்தில் அபாவப் பிரத்தியயமே பாதையாகும். இந்த அபாவப் பிரத்தியயமும் காலத்திற்குட்பட்டதாகையாலும் ஆத்மா நித்தியப் பிரகாசத் தன்மையுடையதாகையாலும் ஆத்மா அசத்தியமாகாது. இவ்விதம் எதனிடம் பாதை காணப்படுகிறதோ அது அசத்தியமானது; மற்றன்று. திருசியங்கள் யாவற்றிற்கும் ஒருகாலத்தில் இல்லாமற் போய் விடுதலென்ற அபாவப் பிரத்தியய ரூபமான பாதை இருக்கின்றது.

(d) சிரவணாதிகள் வீணன்று என்றர்த்தம்.

(e) சொரூபத்திற்கு வெளியாக ஓரிடமும் சித்தியாதென்று முன்னமே தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.



ஆகையினால் பாவமென்றும் அபாவமென்றும் இரு தன்மை பொருந்தியவை யாவும் அசத்தியமேயாகும். எதனிடம் அபாவத்தின் ஸ்பரிசம் எக்காலத்தும் எவ்விடத்தும் இலேசமாவதில்லையோ அத்தகைய (a) சித்தத்துவமானது சர்வாத்மனாய்ச் சத்தியமாக இருக்கின்றது. ஆகையினால் ஆத்மாவிற்குப் பின்னமான மோக்ஷம் எவ்விதத்திலும் சத்தியமாகாது.

செவ்வனே உண்டாகும் பூரண சொரூபத்தின் ஸ்புரணமே (b) மோக்ஷமென்பதாம். சேத்தியங்களை (c) அகற்றிவிடுதல் மாத்திரத்தினாலேயே சித்து பூரணமாகிறதென்று மொழியலாம். சேத்தியங்கள் விளங்குவதே சித்தின் சுருங்கலாகும். (a) சேத்தியங்கள் விளங்

(a) பாதையின்றிய.

(b) அவித்தையினால் ஆவரிக்கப்படாத ஸ்புரணம்.

(c) சித்து சுபாவமாகவே பூரணமாயிருந்தாலும் சேத்தியங்களின் சேர்க்கையினால் பூரணமின்றியது போலாயிற்று என்றர்த்தம்.

(a) பிரதிபிம்பங்களால் கண்ணாடி பரிச்சேதமானது போலிருக்கிறபடியால்.

காதபோது பரிச்சேதமின்மையால் சித்ரூபி பூரணியாகின்றான். காலாதிகளினால் (b) சித்திற்குப் பரிச்சேதம் நிரூபிக்கப்படுமானால் அது சித்தினால் பிரகாசிக்கப்பட்டவைகளுக்கா அல்லது பிரகாசிக்கப்படாதவைகளுக்கா? சொல்; பிரகாசிக்கப்படாதவைகளில் அது சித்தியாது; பிரகாசிக்கப்பட்டவைகளில் சித்து வியாபகமானது. உலகத்தில் காலத்தினால் பரிச்சேதிக்கப்பட்ட யாதொரு பாவம் காணப்படுகிறதோ அந்தபாவம் பரிச்சேதிக்கப்பட்டதாகவும் காலம் பரிச்சேதிப்பதாகவும் ஆகின்றன. ஆனால் சித்தினால் (c) வியாபிக்கப்பட்ட பாவகாலங்களிலேயே இவ்விருதன்மைகள் ஏற்படுகின்றன. சித்தினால் வியாபிக்கப் படாதிருக்கும்பொழுது பரிச்சேதம் எவ்விதமுண்டாகும்? சித்திற்கு வெளியில் சேத்தியமிருக்குமானால் அதுவே பரிச்சேதமாம்.

சித்திற்கு வெளியில் சேத்தியம் இருப்பது எவ்விதத்திலும் பொருந்தாது. (d) சித்தின் சம்பந்தமில்லாத யாதொரு 'வெளி' யெனப்பட்டதுண்டோ அது எங்ஙனம் இருத்தலுடையதாகும்? இந்தச் சித்தின் சம்பந்தமும் (e) காலம் முதலியவற்றின் ஏகதேசத்தில் என்று சொல்வதும் யுக்தமன்று. ஏனென்றால் மற்ற

(b) இவ்விதம் சித்திற்கு தன்னுள் விளங்கும் சேத்தியங்களால் பரிச்சேதத்தின் தோற்றமேயன்றி காலம் முதலியவற்றால் வாஸ்தவத்தில் பரிச்சேதமில்லை என்றர்த்தம்.

(c) சித்தினால் வியாபிக்கப்பட்ட காலாதிகளினால் சித்திற்குப் பரிச்சேதமில்லை என்றர்த்தம்.

(d) சித்தின் வியாப்தியினால் பிரகாசிக்கப்பட்டவைகளுக்கே சொரூப சித்தியுண்டாகிறது; மற்றவைகளுக்கன்று.

(e) சித்தின் சம்பந்தத்தினால் காலாதிகளின் சொரூப சித்தி யுண்டாகட்டுமே யென்றால் அதற்குச் சமாதானம்.



அம்சங்கள் சித்தியாமற் போய்விடும். ஆகையினால் 'வெளி' யெனும் பதார்த்தமும் சித்தினில் அமிழ்ந்ததென்றே சொல்லலாகும். அதுபற்றிச் சேத்தியங்கள் யாவும் சித்தினில் அமிழ்ந்திருப்பனவென்று கூறப்படும். (f) தனக்குள் மூழ்கியிருப்பவை எங்ஙனம் தன்னையே பரிச்சேதம் செய்பவையாகும்? இவ்விதமே சேத்தியங்களால் சிதாத்மாவிற்கு பரிச்சேதமில்லையென்பதை இராமா! நல்யுக்தியுடன் விசாரித்துப்பார்.

சித்தினுள் மூழ்கியிருப்பனவாக விளங்குபவை பிரதிபிம்பத் தன்மையுடையனவே யாகும். அவ்வாறன்றி வேறுவிதம் நிரூபிக்கத்தக்கதன்று. ஏனென்றால், ஒரு பாவத்தினுள்ளாக வேறு ஒருபாவமிருப்பதாக உலகில் காணப்படுவதில்லை. அவ்வாறல்லாவிடில் பாவங்கள் (a) கலப்படைந்து எவ்விதத்திலும் வேறுபாடடையும். ஆகையினால் கண்ணாடியினுள் பிரதிபிம்பங்கள்போல் திருசியங்கள் சிதாத்மாவிற்கு வேறானவையன்று.

இராமா! உன்னிடம் கூறிய 'வெளி' யென்ற யாதொரு பதார்த்தமுண்டோ அது எவ்விதத்திலும் பிரமத்திலிருந்து (சொரூப அஞ்ஞானத்திலிருந்து) உற்பன்னமானதாகும். அத்தகையதான 'வெளி' யென்ற பதார்த்தத்தை ஆசிரயமாகக்கொண்டிருக்கும் பாவங்கள் எவ்வாறு சத்தியமாகும்? சொல். ஆகையினால் சித்ரூபமாயிருக்கும் தன் ஆத்மாவே மாயையென்று கூறப்பட்ட தன் சுதந்தரசக்தியினால் அந்தந்த பாவங்களாக

(f) கடாதிகளால் ஆகாயத்திற்குப் பரிச்சேதமில்லாதது போல.

(a) கடங்கள் படங்களாய்விடும், படங்கள் கடங்களாய் விடும்.

எப்பொழுதும் விளங்குகின்றதால் சொரூபத்திற்கு வேறாக ஒன்றுமே ஓரிடத்திலும் இல்லை.

இங்ஙனம் மொழிந்ததைக்கேட்டுப் பார்க்கவன் பின்னும் கேட்கின்றான். "பகவானே! தாங்கள் மொழிந்தது எனக்குத் துர்க்கடமாகப்புலப்படுகின்றது. ஏனென்றால் சுத்தையான சித்ரூபி ஒருத்தியாக இருந்தும் விசித்திரமாக விளங்குகிறாளென்பது கடவாதாகையால் பொருத்தமின்றியதாகத்தோன்றுகிறது. எல்லோராலும் சித்தென்றும் சேத்தியமென்றும் இருபகுப்பாக வஸ்துவானது கருதப்பட்டுள்ளது. இவைகளில் சேத்தியம் சித்தினால் விளக்கப்படுகிறது. சித்தானது தாங்கள்கூறியபடி சொப்பிரகாசமாகவு மிருக்கிறது. வெளிச்சத்தினால் விளக்கப்பட்ட வஸ்துக்கள் அவ்வெளிச்சத்தினின்றும் பின்னமாயிருப்பதுபோலச் சித்தினால் விளக்கப்பட்ட சேத்தியமும் அதனின்றும் பின்னமானதன்றோ? சேத்தியம் சித்தின் தன்மையுடையதென்பது அனுபவத்திற்கு எட்டாதிருக்கின்றதே. ஜனகர் மொழிந்தபடியே தாங்களும் சொல்கிறீர்களே அஃதெப்படி?

சங்கற்பத்தை அகற்றுவதனாலேயே மனது நிர்விகற்பமாகிறதென்றும் அந்த நிர்விகற்பமே சம்சாரத்தை அறச் செய்வதான ஞான மென்றும், அதுவேதான் ஆத்மாவின் ரூபமென்றும் கூறப்பட்டுள்ளது. அஃதெங்ஙனம்? ஆத்மாவிற்கு ஞானக்கிரியையில் ஓர் காரணமாகவன்றோ மனதானது கூறப்பட்டுள்ளது. ஆத்மாவிற்கு மனதில்லாவிடில் அஃதெங்ஙனம் ஜடத்தினின்றும் மேன்மைப் பட்டதாகும்? பகவானே! மனது ஜடங்களினின்று விசேஷப் பட்டதானால் அஃது ஆத்மாவினும் விசேஷ முடையதாகி விடுமன்றோ?



மனதொன்றே ஆத்மாவிற்கும் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் முக்கிய ஏது வென்பது ஸ்பஷ்டம். சவிகற்பமான மனதே பந்தமும் நிர்விகற்பமான மனதே மோக்ஷமு மாகும். அப்படியிருக்கும் பொழுது நிர்விகற்பமான மனதே ஆத்மா வென்பது எங்ஙனம்? காரணமாகவன்றோ மனதானது கருதப் பட்டுள்ளது, நிர்விகற்பம் ஸித்தியான பின்னும் துவைதம் *மிஞ்சுகிறதன்றோ? பிராந்தி விஷயம் அசத்தியமாயிருந்தாலும் பிராந்தி சொரூபம் சத்தியமாயிருப்பதால் அத்வைதம் எங்ஙனம் கைகூடும்? அசத்தியமான (ரஜ்ஜு சர்ப்பம் முதலிய) வஸ்துக்களினிடம் அர்த்தம், கிரியை, நிலைப்பு முதலியன காணப்படுகிறதில்லை. ஜகத்தில் எல்லா வஸ்துக்களும் நிலைப்புடையனவாகவும் அர்த்தம், கிரியை பொருந்தியவையாகவும் இருந்து துவைதம் நிச்சயமாக ஏற்படும் பொழுது, அவைகளை அசத்தியமென்று எவ்வாறு கூறலாம்? திருசிய ஞானம் யாவும் பிராந்தி ரூபமாகக்கருதப் படுமானால் பிராந்தி ஞான மென்றும் பிராந்தியின்றிய ஞான மென்றும் வேற்றுமையெங்ஙன முண்டாயிற்று? இந்தப் பிராந்தியும் எல்லோருக்கும் ஒன்றுபோ லிருப்பதற்கும் காரண மென்ன? இதனை எனக்கு அருள வேண்டும். இவ்விதமான சந்தேகங்கள் அடியேன் இருதயத்தில் குடிகொண்டிருக்கின்றன" என்றான்.

இத்தகைய பிரசினங்களை ஸர்வஞ்ஞரான தத்தாத்திரேயர் கேட்டு நல்ல பிரசினங்கள் கேட்டது பற்றிச் சந்தோஷத்துடன் மறுமொழி கூற ஆரம்பித்தார்.

---

*கண்ணாடிப் பிரதிபிம்ப நியாயப்படி திருசியம்(சிதாத்மாவுடன்) ஒன்றாயிருந்தாலும் மனதினிடமாகத் துவைதம் மிஞ்சி நிற்கின்றது என்ற சங்கை.

"இராமா! நீ கேட்ட பிரசினங்கள் யாவும் முன்னமே கேட்டிருக்கிறாயானாலும் தகும். சந்தேகம் நிவிர்த்தியாகி மனதில் த்ருஷ்டியுண்டாகிற வரையில் அடிக்கடி சோதனை செய்யவேண்டியது. மாணவன் தன் மனதிலிருப்பதை வெளியிட்டுக் கேளாவிட்டால் குருதான் எங்ஙனம் சொல்வார்? பிராணிகளது புத்தி பேதத்தினால் அவர்களுடைய தர்க்கம் வெவ்வேறு நிலையுடையதாயிருக்கிறது. தன் கருத்தைத் தெரிவித்துக் கேளாமல் எவன் தான் சந்தேக நிவிர்த்தி அடைவான்? ஆகையினால் கேட்பவனுக்கே திடமான வித்தை யுண்டாகிறது. நிரூபணம் செய்வதற்குப் பிரசினம் செய்வது பீஜமாகும். கேளாதவனுக்கு வித்தையேயில்லை. ஆகையினால் குருவை அடுத்துக் கேட்டால் தான் வித்தை.

சித்ரூபி ஒருத்தியாக விருந்தும் விசித்திரமாக விளங்குகின்றாளென்று ஏற்படுகின்றது. எவ்விதமென்றால்—கண்ணாடி ஏகரூபமாக விருந்தும் பிரதிபிம்பங்களால் அநேக விதம் ஆவது போல சொப்பன விகற்பத்திற்கு முன்னதாகக் கேவலமாக விருக்கும் மனது ஒன்றே த்ருஷ்டாவாகவும் தரிசனமாகவும் த்ருசியமாகவும் விசித்திரமாக விளங்குவதை நீ பார். இவ்விதமே அந்த ஸம்வித்தியும் சுத்தையாக விருந்தாலும் விசித்திரமான வடிவத்துடன் விளங்குகின்றாள். (a) சித்தென்றும் சேத்திய மென்றும் சொப்பனத்திலும் கூட இருவிதமாக விளங்குகின்றது.

(a) சித்தென்றும் சேத்திய மென்றும் யாவருக்கும் சொப்பனத்தில் அவைகள் தோன்றியும் அது வாஸ்தவத்தில் இல்லாதது போல ஜாக்கிரத்தில் அவைகள் யாவருக்கும் தோன்றினாலும் இல்லை யென்றர்த்தமாம்.



வெளிச்சத்தை அபேக்ஷியாமலே குருடனானவன் பாவத்தைத் தெரிந்துகொள்கிறானன்றோ? பிறவிக் குருடனுக்கு ரூபம் விளங்காவிட்டாலும், மற்றவர்களுக்கு ஸ்மரிக்கும் பொழுது வெளிச்சத்தை அபேக்ஷியாமலே ரூபம் விளங்குகின்றபடியால் ரூபத்திற்கு வெளிச்சத்தின் தன்மையில்லை. அவ்வாறன்று இந்தச் சித்தின் விஷயத்தில். சித்தை அபேக்ஷியாமல் எக்காலத்தில் எத்தேசத்தில் எது விளங்குகிறது? கண்ணாடியின்றிப் பிரதிபிம்பம் சற்றேனும் விளங்காதது போலும், பிரதிபிம்பங்கள் கண்ணாடிக்கு வேறாகாதிருப்பது போலும் சித்தின்றி அதற் கன்னியமாகச் சற்றேனும் ஒன்றும் இருப்பதாக நினைக்கத்தக்க தன்று. ஆகையினால் சித்திற்கு அன்னியமாக மனதென்பதும் எவ்விதத்திலும் கிடையாது.

சொப்பனத்தில் எவ்விதம் ஞாதாவும், ஞானகரணமும், ஞேயமும், ஏகரூபமாயிருப்பதனால் அங்கு வேறான மன தென்பதில்லையோ அவ்விதமே ஜாக்கிரத்திலும் மனதென்பதில்லை. காரியத்தைச் சாதிப்பதற்காக மட்டும் மனதென்று கற்பிக்கப்பட்டதேயன்றி வேறல்ல. சொப்பன மரத்தை வெட்டுவதற்குச் சொப்பனக் கோடாரியானது காரணமாவது போல், இராமா! அசத்திய வடிவமான கிரியைக்கான காரணமும் அசத்தியமேயாகும் (a) அசத்தான மனிதக் கொம்பினால் எவன் எப்பொழுது தான் நன்றாய்ப் பிளக்கப் பட்டான்? ஆகையினால் இராமா! சேத்தியமான காரியத்திற்குக் காரணமாக மனதென்பது இல்லை.

(a) காரிய காரணங்கள் அசத்திய மாகும் பொழுது கிரியை மிகவும் அசத்திய மெனப்பட்டது.

சொப்பனத்தில் கிரியை செய்வதற்குக் காரணமான திருஷ்டாவே மனமென்று சொல்லப்படும்.

ஆகையினால், இராமா! கிரியை செய்வதான மனது எக்காலத்திலுமில்லை. சிதாத்மா கேவலம் தன் தடையற்ற சுதந்தரத்தினால் மனது முதலியவைகளை கற்பித்துக் கொண்டு திருசியம் திருஷ்டா முதலிய பேதங்கள் பூண்டு விவரிக்கின்றான். அங்கங்கு சிற்சில இடங்களில் கேவலம் நிர்விகற்ப வடிவமாகவும் இருக்கின்றது.

பார்க்கவா! கேள். சித்தத்துவம் சுயமாக ஆகாயம் போல் பரிபூரணமாயிருந்தாலும் சொப்பிரகாச சித்ரூபமான படியால் ஆகாயம் போன்றதன்று. ஆகாயத்திற்கும் சிதாத்மாவிற்கும் அதிகமான வித்தியாசமில்லை. பூரணமாகவும், சூக்ஷமமாகவும், நிர்மலமாகவும் ஆதியந்த மில்லாததாகவும், வடிவற்றதாகவும், ஸர்வத்திற்கும் ஆதாரமாக விருந்தும் பற்றின்றியதாகவும், ஸர்வத்திற்கும் அநுஸூதமாகவும் இவ்விரண்டும் இருக்கின்றன. இவ்விதம் ஒற்றுமை யிருந்தும் ஆத்மாவினிடம் சித்ரூபம் விசேஷமாக இருக்கிறது. அஃது ஆகாயத்தி னிடமில்லை—உண்மையில் சைதன்னியம் நிறைந்த (b) ஆத்மாவே ஆகாய மென்று கூறப்படுகின்றது. ஆத்மாவிற்கும் ஆகாயத்திற்கும் சற்றேனும் பேதமிருப்பதாகக் கருதத்தக்கதன்று. எது ஆகாயமோ அது ஆத்மாவே, எது ஆத்மாவோ அதுவே ஆகாயம்.

அஞ்ஞர்கள் தங்கள் பிராந்தியினால் ஆத்ம

(b) ஆகாயத்திற்கும் ஆத்மாவிற்கும் பேத முண்டென்பது வாஸ்தவ மன்று.



ரூபத்தை ஆகாய மென்று நோக்குகின்றனர். கோட்டான் சூரிய வெளிச்சத்தை இருளாகவே காண்பது போல அஞ்ஞர்கள் தங்கள் பிராந்தியினால் ஆத்ம ரூபத்தை ஆகாயமாகக் கருதுகின்றனர். பண்டிதர்களோவென்றால், ஆகாயத்தைத் தங்கள் சித்ரூபமாகவே காண்கின்றனர்.

இராமா! சொப்பனத்தில் தானே தன்னாத்மாவையே வெகுவிதம் பலவாறாக மனுஷியர் முதலிய வேற்றுமையுடன் தோற்றுவிப்பது போல் பராசித்தான (a) பரமேசுவரியும் தன் தடையற்ற சுதந்தரத்தின் மாகாத்மியத்தினால் தன்னையே அனேக விதம் பரிச்சின்னமாகத் தோற்றுவிக்கின்றாள். அனேக விதமாக விளங்கினாலும் அது தன் சுயதிருஷ்டியிலன்று. பரிச்சின்னமான வர்களுடைய திருஷ்டியிலேயே அங்ஙனம் தோற்றுகின்றாள். தன் சுயதிருஷ்டியில் பூரணாத்ம ரூபிணியாகவே பராசித்திருக்கின்றாள். இந்திர ஜாலக்காரன் ஏகனாயிருந்தும் தன்னையே பலவாறாகப் பார்ப்போருக்குக் காண்பித்துத் தன் சுயதிருஷ்டியில் விகார மின்றித் தானாகவே யிருப்பது போலப் பரையான சித்தும் சுத்த ஏகரூபமாக விளங்கியிருந்தும் தன் (b) மாயையினால் பரிச்சின்னம் அடைந்த ஜீவர்கள் திருஷ்டியில் அனேக விதம் பரிச்சின்னமாகின்றாள். இந்திர ஜாலக்காரன் மாயையினால் சுற்றப்படுவது அன்னிய திருஷ்டியிலேயே போலச் சித்ரூபி மாயையினால் சுற்றப் படுவதுங் கூடப் பரிச்சின்ன திருஷ்டிக்கே தான்.

(a) ஆகாயம் போல் ஜடமன்றென்றர்த்தம்—

(b) மாயாசக்திக்கு இவ்வல்லமை யுண்டென்று காண்பிக்கப் படுகின்றது.

பராசித்தின் அசாத்திய மானதையும் சாதிப்பிக்கும் சுதந்தரமே மாயையாகும். உலகத்தில் யோகிகளும் மற்றும் மாந்திரீகர் இந்திர ஜாலக் காரர்களும் தங்கள் சுதந்தரம் மாயையினால் மறைக்கப் பட்டிருந்தாலும் தங்கள் யுக்திகளினால் சற்றே சுதந்தர மடைந்தவர்களாகித் துர்க்கடத்தைக் கடனை செய்கின்றார்களாகையால் அபரிச்சின்ன மாயா சக்தியுடைய பராசித்தானவள் இந்த ஜகத்தை விளக்குவது விசித்திரமில்லை.

(a) அபிமானம்(அகம்பாவம்) ஏகதேசத்தில் விசிராந்தி பெறுவதே பரிச்சேதமென்னலாகும். இதுதான் அபூரணத்துவமென்றும் அவித்தையென்றும் கூறப்படும். இவ்விதமாகப் பராசித்தானவள் தன் நிர்மல சுதந்தரத்தினால் தன் சொரூபத்தையே அனேகவிதம் பரிச்சின்னமாகத் தோற்றுவிக்கின்றாள். பிருகுநந்தனா! இவ்விஷயத்தில் தார்க்கிகரும் பண்டிதர்களுமான வெகு ஜனங்

(a) பூரணமான சிதாத்மாவின் பரிச்சேதமெங்ஙன மென்றால்:—சிதாத்மா தீபம் முதலிய ஜடப்பிரகாசங்களிலிருந்தும் வேற்றுமையுடைய ஸ்புரத் பிரகாச ரூபமுடையதாம். இத்தகைய ஸ்பூர்த்தி வடிவான பிரகாசம் அநாத்ம வஸ்துவினிடம் விச்ராந்தியடைவதே அகம்பாவனையாம். பூர்ணசிதாத்மாவுக்கு அகிலமான ரூபங்களிலும் விசிராந்தியிருப்பதனால் தான் பூரணாகம்பாவமுடைய தெனப்படும். இவ்வித பூரண அகண்ட சொரூபியாயிருப்பவருக்கும் தன் சுதந்தரமென்ற மாயையினால் விளக்கப் படும் ஏகதேசத் தோற்றத்தில் விச்ராந்தி யுண்டாவதே பரிச்சேத மென்று கூறப்படும். அபூர்ணக் கியாதியென்றும் அவித்தையென்றும் யாதொன்று சாஸ்திரத்தில் கூறப்படுகிறதோ அதுவே அபூர்ணமான அகம்பாவமாகும். இந்த ஏகதேச அகம்பாவ விச்ராந்திக்குப் புறம்பாயுள்ள சிதாத்மாவின் முழுமையான மற்றைப் பிரதேசமே ஆகாயமென்று விளங்குகின்றது.



களும் தன்னாத்மாவை உதாசரித்துப்பாராமையாலும் வெளி நோக்க முற்றவர்களாயிருப்பதனாலும் மோகத்தை அடைகின்றனர்.

சத்தை யாகட்டும், அல்லது அன்னியமான அசத்தையாகட்டும் குருவானவர் யாதேனும் சிறிது உபதேசித்ததைத் தன்னிடத்திலேயே உதாசரித்துப் பாராதிருக்கும்வரையில் சிரவணமானது பரோக்ஷவடிவமே யாகையால், பலன் அடையப்பட மாட்டாது. ஆகையினால், இராமா! நான் கூறுவதை நல்ல திருஷ்டியுடன் ஆத்மாவினிடத்திலேயே (தனக்குள்ளேயே) நன்றாய்ப் பார்த்துக்கொள். பரையும் ஈச்வரியும் ஸர்வஸாமானிய ரூபிணியுமாக யாதொரு சித்திருக்கின்றதோ அவள் ஜடத்திலிருந்து வேறான வடிவமுள்ளவளாகையால் பிரகாசமயி ஆகுவள். அதுபற்றித் தன்னிடத்திலேயே விச்ராந்திபெறுந்தன்மை யுடையவளாதலால் பராகந்தை யுடையவளுமாவாள். ஜடங்களோவென்றால் சிதாத்மாவினிடம் விசிராந்திபெறுவன. அதனிடம் விளங்குவதால். ஜடங்கள் தங்கள் சொரூபத்தில் சுயமாக விளங்காததால் அவைகட்குத் தம்மிடம் விச்ராந்தியில்லை. சித்திற்கு அன்னியாபேக்ஷையின்றியே எப்போதும் கேவலம் தன்னிடத்தில் விளங்கிக் கொண்டிருக்கும் தன்மையுண்டு. ஆகையால் தன்னிடத்தில் விசிராந்தியுடையது. ஜடங்களில் காணப்படாத இந்த விசிராந்தியே பரமமான பூரணாகந்தை யெனப்படும். பேதங்களின் ஸ்பரிசம் சற்றும் இல்லாததால் இவ்வகந்தைக்குப் பூரணத்துவம் சித்தமாயிற்று. பரிச்சேதமின்மையால் பேதசம்பந்தமில்லை. நிலைக்கண்ணாடியில் பிரதிபிம்பநகரம்போல் ஸர்வமும் பூரணாகந்தையுடைய சித்தினிடம் தாதாத்மியம்பூண்டு அதனிடம்

இருக்கிறபடியால் அது பரிச்சேதமற்றது. பரிச்சேதம் செய்யக்கூடியதான ஒன்று தனக்கு அன்னியமாக இல்லாததால் பரிச்சின்னம் இல்லை. அதுபற்றிப் பேத ஸ்பரிசமுமில்லை.

இவ்விதம் பூரண சொரூபமாயிருப்பவனுக்குப் பூரணமான யாதொரு ஸ்புரணமுண்டோ அதுதான் தன் ஆத்மாவினிட முண்டாகும் விசிராந்தியென்றும் பூரணாகந்தையென்றும் கூறப்பட்டுள்ளது. சித்தென்றும் பூரணாகந்தையென்றும் இரண்டாகவிருந்தாலும் இவை அகண்டைகரசமாகப்பவிக்கின்றது. ஆனால் நிரூபணம் செய்வதில் இதுவே வெகுவிதமானது போலத் தோற்றுகின்றது. அகண்டைகரசமே சுதந்தரமானாலும் பூரணாகந்தையும் சுதந்தரமும் அதன் ஏகரசமான சக்தியேயாகும். தேஜஸினிடமாகப் பிரகாசமும் உஷ்ணமும் வேறுபிராததுபோலச் சித்தானவள் சுதந்தரமும் விசிராந்தியும் கூடின ஏகரசவடிவாயிருக்கின்றாள். இந்தப்பூரணாகந்தையே பரமதுர்க்கடமான மாயையென்று கூறப்பட்ட சக்தி. இச்சக்தி கண்ணாடி போல் சித்தேக ரூபிணியாக விருந்தும் சொரூபத்தினிடமாக அநேக விசித்திரமான தோற்றங்களை விளக்குகின்றாள். அவ்விதம் விசித்திரமாக விளங்கும் பொழுதும் தன் சொரூபம் நழுவப்படாமலிருக்கின்றது.

சுதந்தரமென்ற இந்த மாயா சக்தியினால் பரிச்சின்னமானதாகத் தான் விளங்குவதே அனாத்மாவின் விளக்கல் என்று கூறப்படும். அவித்தையென்றதும், ஜடசக்தியென்றதும், சூனியமென்றதும், பிரகிருதியென்றதும், அத்தியந்தாபாவமென்றதும், ஆகாயமென்றதும், தமசென்றதும், பிரம்ம சிருஷ்டியென்றதும், அதுவேயாகும். முதன்மையான பரிச்சேதனத்



தான் இவ்வெல்லாமுமாகக் கூறப்பட்டது. இராமா! பூரணாத்மாவில் விசிரமத்தை அடைந்ததான யாதொரு நிலையுண்டோ அங்கிருந்து அந்தப் பூரணாத்ம விசிரமம் பிராந்தியினால் ஏகதேசத்தன்மையடைவதே ஆகாயத்தின் விளக்கமாம்.

அகந்தை ஏகதேசத்துவத்தை அடையும் பொழுது, நானென்ற அபிமானம் அகன்றதான ஆத்மாவின் யாதொரு பிரதேசமுண்டோ அதுதான் ஆகாயமென்று சொல்லப்பட்டுள்ளது. அவ்வாகாயமே சம்சாரத்திற்குக் காரணம். பல திருஷ்டியுடைய ஜீவர்கள் காணும் வேற்றுமையுடைய தோற்றங்களுக்கும் ஆகாயத்திற்கும் இதுதான் வித்தியாசம்.

இராமா! உன்னால் காணப்பட்ட (a) ஆகாயத்தைச் சூக்ஷ்ம திருஷ்டியுடன் பார். அங்குள்ள ஜீவகூட்டங்களுக்கெல்லாம் அந்த ஆகாயமே ஆத்மாவும் சைதன்யமுமாகும். அன்னிய தேகங்களில் உன்னுடைய ஆகாயமாக யாதொன்று விளங்குகின்றதோ அந்த ஆகாயமே அவர்களுக்குச் சிதாநந்தகனமான ஆத்மாவாகும். இவ்விதம் தன்னால் கற்பிக்கப்பட்ட ஆகாயத்தினால் வரைப்பட்ட யாதொரு சித்வடிவமுண்டோ அதுதான் மனமென்று சொல்லப்படும். ஆகையினால் ஆத்மாவே மனதாகும், வேறன்று.

இங்கு ஆவரணத்தின் முக்கியத்தைப் பற்றிப் பிரமாண ஞானகாரணமே மனமென்று கூறப்பட்டது; ஆவிர்த்தத்தின் (b) முக்கியத்தால் பிரமாதாவென்றும்

(a) ஆகாயத்திற்கும் ஆத்மாவிற்கும் பேதமில்லையென்று காண்பிக்கப்படுகிறது.

(b) ஜட சக்தியினால் சூழப்பட்ட சித்தே ஜீவனாகும்.

கோமளம் = ஸ்பரிசமின்றியதாக, மெல்லிய.

ஜீவனென்றும் கூறலாயிற்று. இவ்விதம் சிதாத்மா தன்னால் கற்பிக்கப்பட்ட ஆகாயத்தினால் சூழப்பட்டிருந்தும், பின்னும் கோமளமும், சம்பந்தமின்றியதும், தடிப்பின்றியதும், மலினமின்றியதுமான அந்த ஆகாயத்தினிடமாகக் கடினத்தன்மையையும், சம்பந்தத்தையும், அடர்ச்சியையும், மலினத்தையும் கற்பித்துப் பூதங்களைத் தோற்றுவித்து இப்பூதங்களால் ஏற்பட்ட தேகத்தினால் சுற்றப்பட்டவனாகி (a) குடத்தினுள் வைத்த தீபம் உள்ளில் வியாபித்துப் பிரகாசிப்பது போல இந்தச் சரீரத்தினுள் சித்பிரகாச மாத்திரமாயிருந்து கொண்டு கூடமான தீபம்போல் தேகத்தினுள்ளே மட்டிலும் விளங்குகின்றான். குடத்தின் துவாரங்களின் வழியாகத் தீபப்பிரபையானது வெளிப்படுவதுபோல நேத்திரம் முதலிய துவாரங்களின் வழியாகச் சித்தானது (b) பின்னும் வெளிப்படுகின்றது. ஆனால் வாஸ்தவத்தில் சித்திற்கு "வெளிப்படுதல்" என்பதில்லை. ஏனென்றால் அது பூரணமானதாலும் செய்கையின்றியதாகையாலுமே.

சிதாத்மாவின் ஸ்பூர்த்திரூப ஞானசக்தியானது தன்னைச் சுற்றிக்கொண்டிருக்கும் ஆகாயமென்ற ஜட சக்தி வடிவமான அஞ்ஞானத்தை எதுவரைக்கும்

(a) இவ்விதம் தேகத்தன்மையை அடைந்தாலும் தன் சித்ரூபத்திலிருந்து நழுவவில்லை என்று கருத்து.

(b) நேத்திரங்கள் முதலிய கரணங்களின் வாயிலாகக் கடம் முதலிய ஞானமுண்டானாலும் அவை (கடஞானம்) தன்னிலுண்டானவையே. சதா பிரகாசிக்கும் சித்தானது விஷயாகாரமாகப் பின்னும் புதிதாகவும் பிரகாசிக்கின்றதென்று அர்த்தம்.

வெளிப்படுவது போலத் தோற்றம்.



(c) அகற்றுகின்றதோ அவ்வளவு மட்டும் "வெளிப்படுதல்" நன்றாய் விளங்கும். இவ்வாறு ஸ்பூர்த்தியினால் ஆவரணம் அகலுவதே மனதின் வியாபாரமெனலாகும். ஆகையினால், இராமா! மனதென்பது அன்னியமன்று, ஆத்மாவே மனதென்று சொல்லப்படும். சலிக்கும் சித்ரூபியே மனதாவள். நிச்சலையே ஆத்ம சொரூபிணி. இராமா! ஸ்பூர்த்தியினால் ஆவரணம் அகலுவதே சித்தின் சலனமாகும். இதுவே விகற்பமாம். இந்த விகற்பத்தைத் தீர ஒழித்துவிட்டால் ஏற்படும் நிர்விகற்பமான விஞ்ஞானமே பூரணரூபமாகும். இப்பூரண வடிவமே முக்தி. இராமா! இதனிடம் சந்தேகத்தை அகற்றி விடுவாய். விகற்பத்தை ஒழித்துவிட்டாலும் ஆவரணம் சேஷித்திருப்பதாகக் கருதுவாயானால், ஆவரணம் இல்லவேயில்லை. ஏனென்றால், தன்னாலேயே கற்பிக்கப்பட்டதாகையால் ஆவரணம் சத்தியமன்று. எவ்விதம் தன் மனோராஜ்ஜியத்தில் யாரோ ஒரு சத்துருவினால் கட்டுண்டு சங்கற்பத்தை அகற்றுகிறவரையில் அடிக்கப்பட்டவனாகவும் பயப்படுத்தப்பட்டவனாகவுமிருந்த ஒருவனுக்கு அந்தச்சங்கற்பம் அகலும்பொழுது அடிபட்ட

(c) இது இங்கு இரகசியம். பரிசிதாத்மாவின் சுதந்தரத்தினால் விளக்கப்பட்ட பரிச்சின்ன அகம்பாவமுடைய பிரமாதா ஜீவன். அவன் குடத்திற்குள் வைத்திருக்கும் தீபம்போலத் தேகத்தினுள் சித்பிரகாசமயனாயிருக்கிறான். குடத்தின் துவாரத்தில் வெளிப்படும் தீபத்தின் பிரபை இருளையகற்றுவது போலச் சிதாத்மாவின் ஸ்பூர்த்திசக்தி இந்திரியங்களின் வழியாக எங்கெங்குசெல்லுகிறதோ அங்கங்கிருக்கும் ஆவரகமான ஆகாயமென்ற அஞ்ஞானத்தை நிவர்த்திசெய்வதனால் சித்து வெளிப்படுவது போலத் தோற்றுகின்றது.

தும் பயப்பட்டதும் இலயமாகி விடுமானால், அவன் கட்டுண்டது மாத்திரம் அங்கு மிஞ்சி யிருக்குமா? ஆலோசித்துப்பார். இராமா! அநாதிகாலமாகவே பந்தமென்பது ஒருவருக்காவது (a) இங்கில்லை. ஜடாத்மப் பிராந்தியை விட்டுவிட்டுப் பந்தமென்பது யாதென்று விசாரித்துப்பார். பந்தமானது உண்மையென்ற நிச்சயமேயாகும். பந்தம் உண்டென்பதும் பீதியடைந்த பாலனுக்குப் பேய் பிடித்ததென்று சொல்வது போலவாம்.

புத்திமான்களிருந்தும் எதுவரையிலும் இந்தப் பந்தம் உண்மையென்ற பிராந்தியை ஒருவன் விடாமலிருக்கின்றானோ அதுவரையிலும் அவன் எவ்வளவுதான் மகா பிரயத்தனங்கள்செய்தாலும் ஒருபொழுதும் பந்தத்திலிருந்து விடுபட்டவனாகான். நிர்மலமான சிதாத்மாவிற்கு இந்தப்பந்தமேது? எங்ஙனமுண்டாகக் கூடும்? தன் ஆத்மாவான கண்ணாடியில் பிரதிபிம்பித்த திருசியங்களால் பந்தம் உண்டாகலாமென்றால் கண்ணாடியில் பிரதிபிம்பித்த அக்னியும் தகிக்கவேண்டும். பந்தம் உண்மையென்ற புத்தியும் மனதென்பது இருக்கிறதென்ற நிச்சயமுமாகிய இவ்விரண்டுமின்றி எவனுக்காவது ஓரிடத்திலும் வேறு பந்தம் இல்லை. நல்ல விசாரமென்ற மகாஜலத்தினால் இவ்விருமலங்களையும் நன்றாய்க் கழுவிவிடும்வரையிலும் ஒருவனுடைய சம்சாரத்தை ஒழிப்பதற்கு என்னாலாவது, பிரமாவினா

(a) ஆனால் உபதேசாதிக் கிரமங்கள் வியர்த்தமென்று கருதப்படுமானால் அதற்குச்சமாதானம்—சொருபஞான மிருந்தாலும் பந்தம் உண்மை யென்ற பிராந்தி யிருக்கிறவரையில் பலன் உதயமாகாதாகையால் இதுவே முக்கியமான பந்தமாம்.



லாவது, விஷ்ணுவினாலாவது, சங்கரனாலாவது, வித்யாத்மிகையான திரிபுரையினாலாவது ஒருகாலும் சாத்தியமன்று. ஆகையினால், இராமா! இவ்விரு மலங்களையும் ஒழித்துச் சுகியாகுவாய். மனது நிர்விகற்ப வடிவமாயிருக்கும்பொழுது ஆத்மா மாத்திரமாயிருப்பதால் மனதின் த்வைதம் சேஷித்திராது. 'இது' 'அது' என்ற தோற்றத்தைத் தவிர மனதென்பது கிடையாது. 'இது' முதலியவற்றைத் தீர அகற்றிவிட்டால் விளக்கமான ஆத்மாவே சேஷிக்கின்றது.

(a) இரஜ்ஜு, சர்ப்பப்பிராந்தியானது சத்தியமென்று கருதப்பட்ட வஸ்துவில் சர்ப்பமென்ற தோற்றம் விளங்குவதுதான் என்பது திண்ணம். இங்கு ஆரோபிக்கப்பட்ட சர்ப்பம் பாதிக்கப்பட்ட பிறகும் சித்ரூபமான ஆத்மாவிற்கு அன்னியமாகப் பிராந்தி ஞானத்திற்கு விஷயமாயிருந்த இரஜ்ஜுவின் ஞானம் நிலைபெற்றிருக்கும். சர்ப்பமாக விளங்கின இரஜ்ஜுவும், சொப்பன திருஷ்டாந்தத்தால், சித்தினால் கற்பிக்கப்பட்டதென்று தீர்மானம் உதித்து, அந்த இரஜ்ஜுவும் பாதிக்கப்படுமானால் அந்த ஞானம் எங்ஙனம் எதனைப்பற்றியிருக்கும்? ஆகையினால் திருசியம் பாதிக்கப்படும்பொழுது அந்த (திருசிய) ஞானம் கேவலம் சித்தாகின்றது. அந்தப்பிராந்தி ஞானமும் சிதாத்மாவிற்கு வேறானதன்றாகையால் அதனால் த்வைதம் எங்ஙனமுண்டாகும்?

அர்த்தக்கிரியைகளினால் திருசியமானது சத்தியமென்று சொல்லுவோமானால், அர்த்தக்கிரியைகள் சொப்பன வஸ்துக்களிலும் ஸ்திரமாகக்காணப்படுகின்

(a) பிராந்தி சொருபமாகவும் த்வைதமில்லையென்று காண்பிக்கப்படுகிறது.

றன. எல்லோராலும் சொப்பன வஸ்துக்கள் ஸ்திர மென்று சொப்பனத்தில் கருதப்படுகின்றன. சொப்பனத்தோற்றத்திற்கும் ஜாக்கிரத்தோற்றத்திற்கும் இது மட்டிலுந்தான் வித்தியாசம். எதுவென்றால், ஜாக்கிரத்தில் சொப்பனம் மித்தையென்ற நிச்சயம் தீர்மானமாக உண்டாகின்றது ; அவ்விதம் சொப்பனத்தில் ஜாக்கிர அநுபவங்கள் மித்தையென்று நிச்சயிக்கப்படுவதில்லை. இந்தப்பேதத்தினாலேயே ஜாக்கிர விபயகாரம் சத்தியமான தென்று ஏற்பட மாட்டாது. ஜாக்கிரத்தில் வஸ்துக்கள் நிலை பெற்றனவாகவும் அர்த்தக்கிரியைகளுக்கு யோக்கியதையுடையனவாகவும் கருதப்படுவது போல சொப்பனத்திலும் அவ்விதமே காணப்படுகிறதா இல்லையா சொல். சொப்பனத்தில் ஜாக்கிர பாவ மில்லாதது போல் ஜாக்கிரத்திலும் சொப்பன பாவ மில்லை. இவ்விரு அவஸ்தைகளிலும் அர்த்தம், கிரியை, நிலைப் பென்பன ஒன்று போலவே விளங்குகின்றன. கழிந்து போன ஜாக்கிர சொப்பனங்களுக்கு யாது வித்தியாசமிருக்கிற தென்று சூக்ஷ்ம புத்தியினால் பாவனை செய்து பார்.

இந்திர ஜாலக்காரன் செய்வதிலும் நிலை பெற்றிருத்தலுடன் அர்த்தக்கிரியைகளையும் பார். நிலை பெற்றிருத்தலாலும் அர்த்தக்கிரியை களினாலுமோ ஜாலக்காரன் செய்வன சத்தியமாவது ? சத்திய மின்ன தென்றும் அசத்திய மின்ன தென்றும் பாமர ஜனங்கள் பிரித்தறியா ராகையால் மோகத்தினால் அவர்கள் ஜகத்தை உண்மையென்று கூறுகின்றார்கள். இராமா ! (a) அபாவம் என்பதினால் ஒருகாலத்திலும் ஸ்பரிசிக்

(a) அபாவமென்ற பிரதியோகியினால் தொடப்படாதது சத்தியம். சிதாத்மாவை அபாவமென்ற பிரதியோகி என்



கப்படாதது. சத்தியமென்று மொழியப்படும். சித்தின் அபாவம் விளங்காதாகையாலும், விளங்கு மானால் அபாவ மில்லையாதலாலும் அதற்கு ஒரு பொழுதும் அபாவமில்லை. அசித்துக்களான ஜடங்கள் அனேகமாக விளங்குவதால் அவைகளுக்கு அபாவ முண்டு. அசித்தான பாவங்கள் எல்லா விதத்திலும் ஒன்றற்கொன்று அபாவத்தை விளக்கிக் கொண்டிருப்பவைகளேயாகும். சித்தின் அபானம் (விளக்க மின்மை) எக்காலத்தில் எங்குண்டாகின்றது ? இராமா ! விசாரித்துப்பார். யாதொரு காலத்தில் சித்து விளங்கவில்லையெனப்படுமோ அக்காலம் எப்படித்தான் விளங்கும் ? சுழுத்தியில் (a) சித்தின் அநுபவ மின்மையால் சித்தின் அபாவம் கூறப்படு மானால் சித்தின் அநுபவ மின்மைதான் எங்ஙனம் விளங்கும் ? “ அக்காலமும் ” “ சித்தின் அந்த அநுபவ மின்மையும் ” இவ்விரண்டும் விளங்காத பொழுதும் இராமா ! சித்து விளங்கிக்கொண்டே யிருக்கிற படியினால் சித்தே சத்தியமானவள்.

இராமா ! சத்தியம் அசத்தியம் இவற்றின் பேத மின்ன தென்று சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேள். அன்னியத்தை அபேக்ஷியாமல் விளங்குவதே சத்தியம்; மற்றவை அசத்தியம். அங்ஙன மல்லாவிடில் (b) இரஜ்ஜு சர்ப்பம் முதலியனவும் சத்தியமாகி

தொடாதென்றால் சித்தில்லையென்று ஒருபொழுதும் சித்தியாது.

(a) சுழுத்தியில் சித்தின் அநுபவ மின்மையால் அதன் அபாவம் கூறப்படுமானால் அக்காலம் எங்ஙனம் சித்திக்கும் ?

(b) நாஸ்தி (இல்லை) யென்ற அபாவப் பிரத்தியயத்தினால் பாதிக்கப்படுவதே அசத்தியம், அங்ஙனம் பாதிக்கப்

விடும். உன் கருத்தின்படி, பாதையென்பது அபாவ விஞ்ஞான மாகும். அஃது உண்மையென்று அபிமானித்த பாவத்தினிடம் உண்டாகின்றது. அவ்வாறே அசத்தியமென்று அபிமானித்த அபாவத்தில் "இருக்கின்றது" என்ற பாதிக்கப்படாத பாவ விஞ்ஞானமுண்டாகின்றது. இது பற்றிப் பாதிக்கப் படாதது சத்திய மென்றும் பாதிக்கப் படுவது அசத்திய மென்றும் ஏற்படுகிறது. இந்தப் பக்ஷமானது எல்லா விதத்திலும் வியபிசரிப்பதால் யுக்தமான தன்று. ஆகையினால், சித்து விளங்காவிட்டால் ஒன்றுமே யில்லை. "ஒன்றுமேயில்லை" யென்பதும் எவ்விதத்திலு மில்லை. ஆகையினால் சித்து விளங்க வில்லையென்று யாதொரு தார்க்கிக கர்த்தபமானவன் சொல்லுகின்றானே அவன் 'நானில்லை' என்று மொழிபவனாவன். அங்கு அவனுக்கு யாரால் தான் சமாதானம் கூற முடியும்? தன் ஆத்மா விளங்கவில்லையென்று எப்போதும் தன்னையே சந்தேகிப்பவனான ஒருவன் தன்தர்க்க சாமர்த்தியத்தினால் அன்னியனுடைய மோகத்தை அகற்றமுடியுமானால் இந்தப்பாறாங்கல்லுக்கும் அன்னியனது மோகத்தை நாசஞ்செய்ய வல்லமையுண்டு. ஆகையினால் அர்த்தக்கிரியைகள் விளங்குவதனால் மட்டிலும் சத்தியமென்று ஏற்படமாட்டாது.

எல்லா விஞ்ஞானமும் பிராந்தியே யாமென்பதில் சந்தேகமில்லை. இந்தப் பிராந்தி ஞானத்திலும் இது பிராந்தியல்லவென்று தீர்மானித்துக்கொண்டிருப்பது மற்றோர் மகாப்பிராந்தியாகும். பாதைசெய்யும் விஞ்

படாதது சத்தியமெனும் பக்ஷத்தில் இரஜ்ஜுசர்ப்ப ஞானத்தின்பின் இது சர்ப்பமல்லவென்று பாதை செய்யும் ஞானம் உதயமாகும் முன் அந்தச் சர்ப்பமும் சத்தியமாகும்.



ஞானத்திற்கு முன்பிராந்தியுண்டாகின்றபடியால் உலகைப் பற்றிய எல்லா விஞ்ஞானமும் பிராந்தியின்றி யதுபோலிருக்கின்றது. இரஜதமென்ற ஞானம் சுக்தி ஞானமுண்டாகும்பொழுது பிராந்தி வடிவமாவது போலச் சிதாத்ம விஞ்ஞானமுண்டானால் எல்லா ஞானமும் பிராந்தி வடிவமாகிவிடும். ஆகாயம் நீலமென்ற பிராந்தி எல்லோருக்கும் சமமாகத் தோற்றுவதுபோல ஜகத்தின் பிராந்தியும் தோஷ ஏதுவினால் எல்லோருக்கும் ஒன்றுபோலிருக்கின்றது. சிதாத்ம வடிவாயிருக்கும் யாதொரு சுத்தவிஞ்ஞானமுண்டோ அதுதான் பிராந்தியற்றது.

இவ்வாறு உன் வினாக்களுக்கு யுக்திகள் பொருந்திய விடைகள் அளிக்கப்பட்டன. இதனிடம் சந்தேகங்களைத் தீரவிலக்கி, இராமா! சொன்னவைகளைத் தீர்மானம் செய்துகொள். முக்தரான பின்னும் வியவகாரமெங்ஙனமென்று நீ முன்கேட்டிருக்கிறாய். அதனை உனக்குச் சொல்கிறேன். இராமா! நன்றாய்ச் சமாகிதனாக விருந்துகேள்.

முக்தர்களான ஞானிகள், உலகில், உத்தமரென்றும், மத்திமரென்றும், அதமரென்றும் உள்ளார். பூரணாத்மசொரூபத்தை உணர்ந்தவராகவிருந்தும் பிராரப்தத்தினால் ஏற்படும் சுகதுக்கபோகங்களால் அடிக்கடி வருந்துகின்றவர் மந்தஞானிகளாவார். எவர்கள் பிராரப்தத்தை அடைந்து புஜித்தாலும் மதுவுண்டவன்போல் அது தெரியாதிருக்கின்றனரோ அவர்கள் மத்திமஞானிகளென்று கருதப்படுவர். எவர்கள் கோடிக்கணக்கான பிராரப்தங்களாலும் அவைகளின் விசித்திரமான பலன்களாலும் தங்களிலே தவறாதிருக்கின்றனரோ, ஆபத்துக்கள் கூட்டமாகவந்தாலும் அதைரி

யப்படாமலிருக்கின்றனரோ, ஆச்சரியத்தில் விஸ்மயங் கொள்ளாதிருக்கின்றனரோ, மகாசுகத்திலும் சந்தோஷப்படாதிருக்கின்றனரோ அத்தகைய உள்ளே சாந்தரானவரும் வெளியில் உலகோரைப்போல இருப்பவருமான அவர் ஞானிகளில் உத்தமராவர்.

இவ்வாறு புத்தியின் பேதத்தினாலும் ஞானபாகத்தின் பேதத்தினாலும் பிராரப்தசேஷத்தின் மாகாத்மியத்தாலும் விசித்திரமாகி மதுவுண்ட மத்தர்போலும் ஞானிகளின் வியவகாரம் நடக்கின்றது.

ஸ்ரீ திரிபுராரகசியம் ஞானகாண்டம்
பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.



## அத்தியாயம்-19

இங்ஙனம் தத்தாத்திரேயர் முகத்திலிருந்தும் பார்க்கவநந்தனன் கேட்டு, பின்னும் ஒவ்வொன்றாய் முக்தர்களின் விவகாரக் கிரமத்தைப் பற்றிக் கேட்டான். பகவானே! இன்னும் இதனை விஸ்தாரமாக நிருபணம் செய்ய வேண்டுகிறேன். புத்தியின் வித்தியாசத்தினால் ஞானம் விசித்திரமாகப் பக்குவமடையுமானால் ஞானம் ஏகவிதமானதென்றும், அது தன் ஆத்மாமட்டிலுமான விளக்கமென்றும் அவ்விதமான ஸ்புரணமே மோக்ஷமாகுமென்றும் மொழிந்ததெங்ஙனம்? புத்தியின் பேதமிருந்தாலும் சாதனங்கள் ஏகவிதமாயிருக்கும்பொழுது ஞானம் எங்ஙனம் விசித்திரமாகப் (பற்பலவாக) பக்குவமடைகின்றது? சாதனங்களும் வித்தியாசப்படுகின்றனவா இல்லையா? சொல்லவேண்டும், என்றான்.

இவ்வாறு கேட்டதின்மேல் தயாநிதியான தத்தாத்திரேயர் விஸ்தாரமாக அதன் கருத்தைச் சொல்ல ஆரம்பித்தார். "இராமா! கேள். உத்தமமான இதன் இரகசியத்தைச் சொல்லுகின்றேன். சாதனத்தில் வேற்றுமையில்லை. ஞானம் பற்பல சாதனங்களுடையதன்று. சாதனங்களின் தாரதம்மியத்தினால் பலனடைவது வித்தியாசப்படுகிறது. சாதனம் பூர்ணமாயிருக்குமானால் ஞானம் ஆயாசமின்றிச் சித்திக்கின்றது. சாதனத்தின் அபூர்த்தியினது தாரதம்மியத்தினால் ஆயாசத்தின் தாரதம்மியத்துடன்

ஞானம் உண்டாகின்றது." ஆனால் வாஸ்தவத்தில் ஞானத்தினிடம் சாதனங்கள் சற்றேனும் உபயோகப் படுவதில்லை. ஞானமானது சுபாவமாகவே சித்தமா யிருக்கிறபடியால் அது ஒரு பொழுதும் சாதனங்களால் சாதிக்கத் தக்க தென்றாகாது. (a) சைதன்னியமே விஞ்ஞானமாம், அஃதெப்பொழுதும் சொப்பிரகாசமா யிருப்பது. நித்தியமான சொரூபமாகிய அவனிடம் சாதனங்களின் அபேக்ஷை யேது? அதன் ஆவரணத்தை நிவாரணம் செய்யவே சாதனங்களின் உபயோகமாகும். அழுக்கடர்ந்த ஸ்படிக காண்டத்திற்குள் ளிருக்கும் பத்மராகமணி குறிப்பிட்டறியப் படாதது போல அளவற்ற வாசனைகளால் நிறையப்பட்ட சித்தத்தினிடம் அந்தர்க்கதமாயிருக்கும் சைதன்னியம் குறிப்பிட்டறியப்படவில்லை. அநாதிகாலமாகத் தேகாதி தாதாத்மிய * மடைந்திருக்கும் சித்தமென்ற காண்டத்தினிடம் விசாரமென்ற கூர்மையான யந்திரத்தாலும் (மனனசகித சிரவணமென்ற யுக்தியினாலும்,) இருசிய தேகாதிகளினுண்டாகும் அத்தாதாத்மியமென்ற அழுக்கை வேறுபடுத்தி நிரோத (நிதித்யாசன) மென்ற ஜலத்தைக் கொண்டு அவ்வாசனைகளான அழுக்கு நன்றாய்க் கழுவப்படுமானால் மணிவிளங்குவதுபோல் சைதன்னியம் குறிப்பிட்டறியப்படுகின்றது.

---

(a) சாதனங்கள் ஞானத்தின் உற்பத்திக்குக் காரணமாகா விட்டாலும் அதன் உணர்ச்சிக்கு உபயோகமாகட்டுமே யென்றால்—அதற்குச் சமாதானம்.

* தேகாதிகளில் தாதாத்மிய மடைந்திருக்கும் சைதன்னியமே சித்தமெனப்படும்.



ஆகையினால், இராமா! வாசனைகளை அகற்றுவதற்கே சாதனங்கள் ஏற்பட்டுள்ளன. வாசனைகளின் ஏற்றக்குறைவுகளினால் புத்தியும் பலவாறாயிருக்கின்றது. வாசனைக்கூட்டங்கள் எதுவரையிலும் ஒருவனுடைய புத்தியைச் சுற்றிக்கொண்டிருக்கின்றனவோ அதுவரையில் அவனுக்குச் சாதனைகளின் அபேக்ஷையுண்டு. பார்க்கவா! வாசனைகள் பலவிதமென்று கூறப்படும். அவற்றில் முக்கியமானவைகளை உனக்குச்சொல்கின்றேன். அபராதமென்றும், கர்மமென்றும் காமமென்றுமாகிய பேதங்களால் வாசனைகள் மூன்றுவிதப்படும். தனதாத்மநாசன் செய்வதான அசிரத்தையே முக்கியமான அபராதமாம். விபரீதமாகக் கிரகித்துக்கொள்வதே புருஷரிடம் அபராதமாகும். சாதாரணமாகக் கலைகளில் பயின்றவர்கள் கூடச் சற்சங்கம் முதலிய சாதனங்கள் உடையவர்களாகவிருந்தும் இந்த அபராதவாசனையினால் பரதத்துவத்தை அறியாமலிருக்கின்றார்கள். நிர்விசேஷமான பரதத்துவம் இல்லையென்றும், அஃதிருக்கவே மார்க்கமில்லையென்றும், இருந்தாலும் அதை ஒருவராலும் ஒருபொழுதும் அறியக்கூடியதல்லவென்றும், பரமமான தத்துவத்தை அறிந்தாலும், அது அப்பரதத்துவமன்றென்றும், இதன் ஞானத்தினால் மோக்ஷம் எவ்விதமுண்டாகுமென்றும் இவ்வாறான வெகுவித விபரீதக் கொள்கைகளும், இவைகளைப்பற்றிய சந்தேகங்களும் புருஷனுடைய அபராதமென்ற முதல்வாசனையென்று சொல்லப்படும். இராமா! சாஸ்திர வித்தைகளில் தேர்ந்தவர்களான நூறு அல்லது ஆயிரக்கணக்கான ஜனங்களும் இந்த அபராதவாசனையினால் அடிபட்டு சம்சாரத்தை அடைகின்றனர்.

முன்ஜன்மங்களிற்செய்த பாபஸம்ஸ்காரங்களினால் புத்தியினிடத்தே யாதொரு பாவனையிருந்துகொண்டு உபதேசித்ததைக் கிரகிக்கவொட்டாமல் தடைசெய்கின்றதோ, ஆசான் செம்மையாக மொழிந்தாலும் அதனை யாதொன்றினால் உட்கொள்ளப்படவில்லையோ, அதுவே நிரோதத்தினாலும் ஜயிக்கக்கூடாத கர்மவாசனையென்று கூறப்படும்.

அளவற்றதும் வெகு கிளைகளுள்ளதுமான கர்த்தவ்விய சேஷத்தையே காமமென்னலாகும். இராமா! ஒருவனால், அம்புதியிலுள்ள அலைகளையாவது, மண்ணிலுள்ள அணுக்களையாவது அவ்விதமே நக்ஷத்திரங்களையாவது கணக்கிடவேண்டுமென்றுங்கூடும். ஒருவனுடைய கர்மங்களைக் கணக்கிட முடியவே முடியாது. இராமா! இதுதான் மூன்றாவதான காமவாசனையென்று சொல்லப்பட்டது. இது ஆகாயத்திலும் விஸ்தாரமானது. பர்வதத்திலும் ஸ்திரமானது (அசைவற்றது.) இராமா! யாதொரு ஆசாபிசாசம் என்று சொல்லப்பட்ட இந்தக் காமவாசனையுண்டோ, இதனாலேயே கவரப்பட்டு எல்லாஜனங்களும் உன்மத்தர்கள்போன்றிருக்கிறார்கள். இதனாலேயே தகிக்கப்பட்டுக் கதறுகின்றனர்.

இவர்களில் பாக்கியவான்களான சிலர்மகாமந்திரத்தை அடுத்ததனால் அப்பிசாசினிடமிருந்தும் விடுபட்டு எல்லா அங்கங்களிலும் குளிர்ச்சியுடையவராகி விளங்குகின்றார்.

இராமா! எக்காரணத்தினால் இத்தகைய மூன்றுவித வாசனைகளால் மனது ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றதோ, அதுபற்றி நித்தியாபரோக்ஷமான ஆத்ம தத்துவம் விளங்காதிருக்கின்றது. ஆகையினால், வாசனை



களின் நாசமே எல்லாச்சாதனங்களுடைய பலனுமாகும். இவற்றில் முன்னதானது அபராதமென்று நிச்சயிப்பதனாலேயே நிவிர்த்தியாகின்றது. இரண்டாவதான ஒரு ஜன்மத்தினாலாவது அநேகஜன்மங்களினாலாவது ஈசுவரனுடைய பிரசாதத்தினால் நிவிர்த்தியாகின்றதேயன்றி, மற்றைக்கோடி யுக்திகளாலும் ஒழிவதன்று.—மூன்றாவது வைராக்கியம் முதலிய நற்சாதனங்களால் நிவிர்த்தியாகின்றது. தோஷதிருஷ்டியினாலேயே வைராக்கியம் உண்டாகிறதன்றி ஒருகாலும் வேறு விதத்தாலாகாது. பார்க்கவா! இங்கேகூறிய வாசனைகள் சொற்பமாயும் ஏராளமாயும் இருக்கும் வித்தியாசத்தால் அதற்குத் தகுந்தபடி சொற்பமாகவாவது ஏராளமாகவாவது தோஷ திருஷ்டியை அபேக்ஷிக்கவேண்டும்.

இங்கு, யாவற்றிற்கும் மூலமான முதன்மைச் சாதனம் முமுக்ஷுத்துவமேயாகும். வேறன்று, முமுக்ஷுக்களல்லாதவர்களிடம் காணப்படும் சிரவண மனன முதலியன முக்கிய பலனின்றியதாகையால் அவை கேவலம் (a) சில்பம் போன்றதாம். சில்ப ஞானமாத்திரத்தினால் பரமபதம் அடையப்படமாட்டாது. முமுக்ஷுக்களல்லாதவர்களால் சிரவணஞ் செய்யப்பட்டதும், நன்றாய் விசாரிக்கப்பட்டதும் யாவும் பிரேதத்தை அலங்கரிப்பது போல அவர்களுக்கு வியர்த்தமேயாகும். இராமா! முமுக்ஷையானது மந்தமாக இருந்தாலும் அது எவ்விதத்திலும் வீணேயாம். எப்படியென்றால்—பலனைக் கேட்பதனால் சாமானியமாக உண்டாகும் பலனுடைய இச்சையானது பலனைக் கொடாதது போல—பலனைக் கேட்டதின் பின்னுண்

(a) சில்பம்=சபைக்கு யோக்கியமான சாஸ்திர ஞானம்.

டாகும் இச்சை கர்மபலனைக் கொடாது. பலனைக் கேட்டபின் இச்சையுண்டாவது ஜீவதர்மமானபடியால் யாருக்குத்தான் இச்சையேற்படாது. இச்சையினால் மட்டிலும் பலனுண்டாகுமாகில் எல்லோரும் எல்லாப் பலனையுமடையவேண்டுமன்றோ? ஆகையினால் ஆபாத ரூபமான மும்முக்ஷை பலனைக் கொடுக்கவேமாட்டாது. முமுக்ஷை தீவிரமாயிருப்பதனால் சீக்கிரத்தில் பலனுண்டாகும். மிகவும் முக்கியமானயாதொரு முமுக்ஷையுண்டோ அது சாதனங்களில் அத்தியந்தமான பிரவிர்த்தியை உற்பத்தி செய்கின்றது. சாதனங்களிலுண்டாகும் பிரவிர்த்தியே தற்பரதையென்று சொல்லப்படும். எங்ஙனம் தேகம் முழுவதும் நன்றாய்த் தகிக்கப்பட்டவன் குளிர்ச்சியையன்றி வேறொன்றையும் நாடானோ அங்ஙனமே எப்பொழுதும் எவ்விதத்திலும் முக்தியன்றி வேறொன்றையும் அபேக்ஷியாதிருக்கும் அந்த முமுக்ஷையே தீவிரமானதும் பலனைச் சாதிப்பதில் சமர்த்துள்ளதுமாகும். மற்றவைகளிலுண்டாகும் தோஷ திருஷ்டியினாலேயே இந்த முமுக்ஷுத்துவமுண்டாகின்றது. தீவிரமான வைராக்கியத்தினால் முமுக்ஷையும் சீக்கிரத்தில் தீவிரமாகின்றது. தோஷ திருஷ்டியினால், விஷயங்களிலுண்டாகும் பிரீதியை அறச் செய்வதான வைராக்கியமும், வைராக்கியத்தினால் தீவிர முமுக்ஷுத்துவமும் தீவிர முமுக்ஷுத்துவத்தினால் தற்பரதையின் உற்பத்தியும், தற்பரதையினால் சாதனங்களில் அதிதீவிரமான பிரவிர்த்தியும், அதிதீவிர பிரவிர்த்தியினால் அற்புதமான பலனும் அடையப்படுகின்றன."

இவ்விதம் தத்தாத்திரேயருடைய வசனங்களைப் பார்க்கவன் கேட்டுச் சந்தேக மனத்தனாகி மகத்தான



சம்சயத்தைப் பின்னும் கேட்கின்றான். "பகவானே! சத்துக்களுடைய சங்கம் சிரேயசிற்கு மூல காரணமென்று கூறியிருக்கின்றீர்கள். அவ்விதமே ஈசுவரானுக்கிரகத்தையும் தோஷ திருஷ்டியையும் மூலகாரணமாக மொழிந்திருக்கிறீர்கள். இவற்றில் முக்கியமான ஆதி காரணம்யாது? அதனையடைவதற்கும் காரணம்யாது? காரணமின்றி யாதேனுமுண்டாகாதென்பது திண்ணமே. அப்படியிருக்கும்பொழுது காரணமின்றி இவைகளெங்ஙனமுண்டாகும்? இதனை எனக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்." என்றான்.

இங்ஙனம் கேட்டபொழுது, தயாநிதியான தத்தாத்திரேயர் இராமனிடம் சொல்லுகின்றார்—" பார்க்கவா! சிரேயசின் பரமமான உற்பத்தியை உனக்குச் சொல்கின்றேன் கேள். பரையென்ற யாதொரு சித்ரூபியான தேவியிருக்கின்றாளோ அவள் தன்னுடைய சுதந்தரத்தின் மாகாத்மியத்தால் தன்னிடத்திலேயே கண்ணாடிப் பிரதிபிம்பம்போல ஜகத்தான சித்திரத்தை வெளியிடுகின்றாள். அந்தப் பராசித்தே ஹிரண்ய கர்ப்பனென்ற பெயருடைய வடிவத்தைப் பூண்டு, அநாதி அஞ்ஞானத்தால் சூழப்பட்ட ஜீவர்களின் இதத்தின் பொருட்டுச் சர்வ காமங்களையும் நிறைவேற்றுவதான ஆகம சமுத்திரத்தை வெளியிட்டனள். அங்கு சிருஷ்டியில் சுபாவமாகவே விசித்திரமான காமவாசனைகளுடைய ஜீவர்களுக்கு எவ்விதம் சுபமுண்டாகுமென்று ஹிரண்யகர்ப்பன் சிந்தனை செய்து, காமியகர்மங்களையும் விசித்திரமான பலன்களையும் எங்கும் ஏற்படுத்தினர்.

ஜீவர்கள் தங்கள் சுபாவத்தினால் நன்மையையும், தீமையையும் செய்து வந்தனர். அதன் பின்பு ஒருவன்

ஏதோவொரு கர்மத்தின் பரிபக்குவத்தால் பற்பல ஜன்மங்களில் உழன்று பாணிட சரீரம் அடைந்து காமத்தின் வசமாகிக் காமிய கர்மத்தில் பிரவிர்த்திக்கின்றான். காமிய கர்மத்தின் பலன் தடையின்றி அடையவேண்டுமென்ற இச்சையுடன் எப்பொழுது ஈசுவர பரனாகின்றானோ அப்பொழுது ஈசுவரனுடைய சாஸ்திரங்களைப் பார்க்கின்றான், காமிய கர்மத்தின் பலனைக் கேட்டுக் காமிய கர்மத்தில் பிரவிர்த்தி செய்தும், சூக்ஷ்ம கர்மத்தின் உலோபத்தால் அந்தப்பலனை அடையாமல் துக்கப்படுகின்றான். பின் எவ்விதம் செய்தால் கர்மபலன் அடையப்படுமென்று தெரிந்துகொள்ள யாரோவொரு சத்புருஷனை அடைகிறான். அடைந்து ஏதோ ஒரு காலத்து ஓரிடத்து ஸத்புருஷருடைய பிரசங்கத்திலிருக்கும் மகேசுவரனுடைய மாகாத்மியத்தைக் கேட்கின்றனன். பார்க்கவா! அதன் பின்பு முன் செய்த புண்ணிய பரிபாகத்தால் அம்மகேசனைச் சந்தோஷப்படுத்துவதில் பிரவிர்த்தியும் ஏற்படுகின்றது.

ஆகையினால் முன் செய்த புண்ய பரிபாகத்தினால் சற்சங்கத்தையடுத்து மிகவும் அரிதான சிரேயசினுடைய ஏணி வரிசையை அடைகின்றான். இது பற்றிச் சாதாரணமாகச் சற்சங்கமூலமாகவே சிரேயசின் அடைவென்று சொல்லப்படுகிறது. எங்கேனும் விண்ணினின்று விழும் பலனைப்போல் உயர்ந்த புண்ணியத்தினாலாவது தபஸினாலாவது ஓரிடத்தில் சிரேயசின் அடைவுண்டாகவுங்கூடும். ஆகையினால், காரணத்தின் விசித்திரத்தினால் சிரேயசின் அடைவும் விசித்திரமாகின்றது. பின், புத்தியின் பேதத்தினாலும், வாசனையின் தாரதம்மியத்தினாலும், சாதனங்களின் தாரதம்மியத்தினாலும் ஞானிகளின் ஸ்திதியானது விசித்திர



மாயிருக்கின்றது. எவனுடைய புத்தியில் சுபாவமாகவே வாசனைகள் அற்பமோ, அவனுக்கு அற்ப சாதனங்களினாலேயே ஞானஸித்தி யுண்டாகின்றது. எவனுடைய மனது சுபாவமாகவே சுத்தமாயிருக்கிறதோ, வாசனைகள் சற்றேனுமில்லாதிருக்கின்றதோ, அப்படிப்பட்டவனுக்குச் சொற்ப நிமித்தத்தினாலேயே மகத்தரமான ஞானமுண்டாகிறது. எவனுடைய மனது சுபாவமாகவே அத்தியந்தம் வாசனைகள் அடர்ந்ததாக இருக்கின்றதோ அவனுக்கு ஞானமுண்டானாலும் அது அஞ்ஞானத்தை நாசஞ்செய்யச் சமர்த்துடையதாகாது. அப்படிப்பட்டவன் பின்னும் பின்னும் சாதனைசெய்வதால் நீடித்தகாலத்தின் பின் அவன் ஞானம் பூரணமாகின்றது.

பிருகுகுலத்துதித்தவனே! இக்காரணமாக (a) சித்தபாகத்தின் பேதத்தினால் ஸ்திதிபேதமுண்டாகி ஞானிகளின், ஸ்திதியானது பலவாறாகக் காணப்படுகின்றது. ஆகையினால், புத்தியிலுள்ள வாசனைகளால் ஏற்படும் ஆவரணத்தின் தாரதம்மியத்தினால் ஞானம் வேற்றுமையுடையதாகத் தோற்றுவதுடன் ஞானிகளின் ஸ்திதியும் வெவ்வேறாகின்றது. இராமா! ஞானிகளின் ஸ்திதிகளில் பரஸ்பரமுள்ள பேதத்தைப் பார், பிரம்மா, விஷ்ணு, மகேசனென இவர்கள் சுபாவமாகவே ஞானிகளாயிருக்கின்றார்கள். இவர்கள் சித்தத்தில் கர்மாதிவாசனைகளில்லாவிட்டாலும், அவர்களுடைய சுபாவமான குணங்களினால் அவர்கள் ஸ்திதி வெவ்வேறாயிருப்பதைப்பார். இவர்களுடைய ஞானம் மலினமுடையதென்று எவ்விதத்திலும் மொழியத்தக்கதன்று. விசுத்தஞானிகளாகவிருந்து தங்கள் சுபாவ

(a) சித்தபாகம் = சித்தத்தின் பக்குவம்.

குணமாகாத்மியத்தினாலேயே பின்ன ஸ்திதியுடையவராகின்றனர். இவ்விதம் ஞானியின் சரீரம் சிவப்பாயிருந்தது எவ்விதத்திலும் கறுத்ததாகாதோ அவ்விதமே அவர்களின் சித்த சுபாவமும் வேறுதன்மையை அடையாது.

இராமா! இன்னும் ஞானிகளும் அத்திரியின் சுதர்களுமான எங்களுடைய ஸ்திதியையும் பார். தூர்வாசரும், சந்திரனும், நானும், ஒருவர் கோபியாகவும், ஒருவர் காமியாகவும், ஒருவர் வர்ணாசிரம சின்னங்களும், விஷயங்களும் ஒழிந்தவராயும், பின்னங்களான ஸ்திதியுடனிருப்பதைப்பார். வசிஷ்டர் கர்மிஷ்டராயிருப்பதைப்பார். ஸனகாதிகள் சந்நியாசிகளாயும், நாரதர் பக்தியில் மூழ்கினவராயும், சுக்கிரர், காவியங்கள் செய்பவராயும், அசுரபக்ஷத்தைச் சார்ந்தவராயும், தேவர்களை அடுத்த குரு வாதகுசலராயும், வியாசர் சாஸ்திரங்களை நிர்மாணம் செய்வதில் தத்பரராயும் ஜனகர் அரசனாயும், பரதர் (ஜடபரதர்) பிராந்தியாயுமிருப்பதைப்பார். இன்னும் மற்றுமுள்ள ஞானிகளின் சுபாவத்தால் ஏற்படும் வெவ்வேறான ஸ்திதிகளையும் பார். இரகசியமானதை உனக்குச் சொல்கின்றேன். பார்க்கவ நந்தனா! கேள்.

மூன்றுவிதமாக வாசனைகள் கூறப்பட்டதில் இரண்டாவதாகக் கர்மத்தாலுண்டானதென்றும், மூடத்தன்மை வடிவானதென்றும் யாதொன்று மொழியப்பட்டதோ அது எல்லாவற்றிலும் மகத்தரமானது. எவர்களுடைய சித்தத்தில் இந்தக் கர்மவாசனை சற்றேனுமில்லாதிருக்கின்றதோ அவர்களே மேதாவிகளாவர். அபராதவாசனைகளில்லாத இவர்களுக்கு அப்பியாசமின்மையால் காமாதிவாசனைகள் இலயமாகாம



லும், ஞானத்திற்குப் பிரதி பந்தமாகாமலுமிருக்கின்றன. ஆகையினால் அப்படிப்பட்டவர்களுக்கு வைராக்கியாதிகள் உபயோகமில்லை. அதுவுமன்றி, அவர்களுக்கு அடிக்கடி மனனம் செய்வதும் சமாதிபழகுவதுங்கூட அநாவசியம். ஒருதடவை சிரவணம் செய்வதனாலேயே அந்த சமயத்தில் மனனத்தியானங்களைச் சற்றேற அடைந்து பூர்ணாத்ம நிலையைச் சந்தேகமற உணர்ந்தவராகி, ஜனகர் முதலியோரைப்போல ஜீவன்முக்தர்களாகின்றார்கள்.

இவர்களின் காமாதிவாசனைகள் ஞானத்தின் பிரதிபந்தங்களாகாததால், சூக்ஷ்மநிர்மல புத்திகளான இவர்களால் விபரீத அப்பியாசஞ்செய்து அவை அகற்றப்படாமலேயிருக்கின்றன. ஆகையினால் அவர்கள் அந்நிலையையுணர்ந்தவர்களாயிருந்தும் முன்போலவேயிருக்கின்றனர். அவர்களுக்கு எப்போதும் காமாதிவாசனைகள் முன்போலவே பிரவிர்த்தித்துவரும். அவைகளால் அவர்களுடைய புத்திக்கு இலேபம் சற்றாவது ஒருகாலுமில்லை. அப்படிப்பட்டவர்கள் வித்துவான்களால் (a) வெகுமானவரான முக்தர்களென்று கூறப்படுகின்றார்கள்.

இராமா! எவனுடைய மனதானது கர்மவாசனையால் அதிமூடமாயிருக்கின்றதோ, அவனுக்குப் பரமசிவன் தானேவந்து மொழிந்தாலும், ஒருபொழுதும் ஞானமுண்டாகாது. அவ்விதமே திடமான அபராதவாசனையுடையவனுக்கும் எக்காலமும் ஞானமுண்டாகாது. பார்க்கவா! எவனுக்கு அபராதகர்மவாசனைகள் சொற்பமாயும் காமவாசனை அதிகமாயுமிருக்கிறதோ அவனுக்கு அதிகமான சிரவணத்தினாலும், அவ்விதமே

(a) வெகுமானவர் = வெகு மனதுடையவர்.

மனனசமாதிகளாலும் நீடித்தகாலத்திற்குப்பின் வெகு கஷ்டத்தின்மேல் ஞானமுண்டாகின்றது. தன்னுடைய சமாதிமுதலிய அப்பியாசங்களின் (a) மிகுதியினால், அப்படிப்பட்டவனுடைய வியவகாரம் சொற்பமாக விருக்கும். இவ்விதம் சொற்ப வியவகாரப் பிரியரான வர் செய்யும் யோக நிஷ்டையினால் காமாதிவாசனைகள் நசிக்க அவர் மனமானது நஷ்டமானதுபோல் சதா நிரோதிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட ஞானிகள் மத்திமமான நஷ்ட மானஸர் என்று கூறப்படுவர்.

இவ்விதயோக நிஷ்டர்களில் சிலருக்கு அப்பியாச பலக்குறைவினால் வாசனைகள் அதிகமாக இருந்து கொண்டே வருவதனால் மனது நஷ்டமாகாதிருக்கும். அவர்கள் மந்தஞானமுடைய ஸமனஸ்கர் என்று கூறப்படுவர். இவர்கள் கேவல ஞானிகளேயாவர். மற்றவர்கள் (உத்தமரும் மத்திமரும்) ஜீவன் முக்தர்களாவார்கள். இக்கேவலஞானிகள் திருஷ்டதுக்கத்தை அனுபவிப்பவர்களாகிப் பிராரப்தத்திற்கு உட்பட்டவர்களாவரென்று சொல்லப்படுவர். தேகத்தின் அந்தத்தில் முக்திக்குரியவராகின்றனர்.

எவர்கள் நஷ்டமானஸரென்று சொல்லப்பட்டனரோ அவர்களால் பிராரப்தம் ஜயிக்கப்பட்டிருக்கிறது. மனதானபூமியில் பிராரப்தமென்ற விதைவிழுந்தால்தான் போகமென்ற முளையுண்டாகிறது. நஷ்டமானஸர்களிடம் மனதென்ற பூமியில்லாததால் குதிர்க்குள் வைத்திருக்கும் விதை கட்டுசென்றால் சக்திபோய்விடுவதுபோல இவர்கள் பிராரப்தம் நசித்துவிடுகின்றது. மிகவும் மேதாவியான ஒருவன் ஒரேகாலத்தில்

(a) சரீரத்தின் நிர்வாகம் செய்வதற்கான விவகாரம் மாத்திரம் நடக்குமென்றர்த்தம்.



பத்து அல்லது ஐந்து காரியங்களைச் சிறிதும் தவறுதலின்றிச்செய்வான். இப்படிப்பட்ட சாமர்த்தியசாலிகள் வெகுவாக உலகில் காணப்படுகின்றனர். ஒரேகாலத்தில் நடந்துகொண்டும், பேசிக்கொண்டும், காரியத்தைச் செய்துகொண்டுமிருக்கிற ஜனங்களைப் பார்க்கிறோம். இவர்கள் ஒரு மனதினால் எங்ஙனம் மூன்றுவித கிரியைகள் செய்கின்றார்கள். குருவானவர் அத்தியயனஞ் செய்யுஞ் சிடர் அநேகருடைய அபசப்தங்களையும் ஸ்வரத்தின் பிழைகளையும் ஒரேகாலத்தில் குறிப்பிட்டறியவில்லையா? இராமா! உன்னால் கொல்லப்பட்ட கார்த்த வீரியார்ஜுனனுடன் நீ போர்புரிந்தபொழுது அவன் தன் ஆயிரங்கைகளால் ஒரேகாலத்தில் ஆயுதங்களைப் பலவாறாகப் பிரயோகித்தும் அவ்வாயுதங்களின் குறிதவறாமலும் மேதாவியாயிருந்து சண்டைசெய்தது உனக்குத் தெரியுமன்றோ—அப்படிப்பட்ட மேதாவிகளின் மனமானது அந்தந்தக்காரியங்களை முன்னிட்டு வெகுவிதமாகி வெகுவிதமான காரியங்களைச் சாதிப்பதுபோல உத்தமஞானிகளின் ஆத்மதிருஷ்டி வெளியிற்சென்றாலும் அவர்கள் வெகுமானஸராயிருப்பதால் அது எக்காலமும் விரோதமானதன்று. மனதான பூமியில்விழுந்து முளையாக எழும்பும் அவர்களுடைய பிராரப்தம் எழும்ப எழும்ப ஞானக்கினியால் பின்னும் பின்னும் தகிக்கப்படுகின்றது. பிராரப்தமென்ற விதையின் முளையிலிருந்தே சுகதுக்கங்களுண்டாகின்றன. சுகதுக்கங்களைப் பற்றின விமர்சமே பலன் என்று சொல்லப்படும். அப்படியிருக்கத் தகிக்கப்பட்ட முளையில் பலனேது? வனுவில் தன்னிச்சையினால் இழுக்கப்பட்ட அனுசந்தானத்தினாலேயே அவர்களுடைய வியவகாரம் நடக்கின்றது. எவ்விதம் பிரௌடனானவன்

பாலனுடன் விளையாடும்பொழுது சிலையால் செய்யப்பட்ட யானையாதிகளின் நாசமுதலியவற்றில் விபசனப்படுகிறவனையும் (சந்தோஷப்படுகிறவனையும்) காணப்படுகின்றானே, அவ்விதமே வெகுமானஸர்கள் காரியங்களில் சந்தோஷிப்பவர்களாயும் துக்கிப்பவர்களாயும் தோற்றுகின்றனர். அன்னியனுடைய வியவகாரத்தைச் செய்பவனது சந்தோஷமும் விபசனமும், எவ்விதம் அன்னியனுக்காகவே யாகுமோ, தன் இருதயத்திலேயாவோ அங்ஙனமே எல்லா வியவகாரங்களிலும் *உத்தமஞானிகள் எங்கும் சமமான நிலையுடனிருப்பர்.

மேதாவிகளான ஞானிகளுக்கு வாசனைகளை நாசஞ்செய்வதின் பொருட்டு நிரோதம்முதலிய விரோத வாசனைகளின் அப்பியாசமின்மையாலும், முன் வாசனைகள் நசியாமலிருப்பதினாலும், 'அவ்வாசனைகள் தொடர்ந்துவருகின்றன. இது காரணமாகத்தான் சிலர் கர்மநிஷ்டர்களாயும், மற்றுஞ் சிலர் காமிகளாயும், கோபிகளாயும், உத்தமஞானிகள் பற்பலவாசாரப் பிரியர்களாய் விளங்குகின்றனர். இங்கு மந்தஞானியென்று நிரூபிக்கப்பட்ட யாவனொரு ஸமனஸ்கனுண்டோ, அவ

* உத்தமஞானிகளுக்கு அசத்தியமென்ற நிச்சயத்தினால் ஸம்ஸ்காரங்கள் வலிமையற்றுப்போனபடியால் சுயமாகத்தானாகவே அனுசந்தானங்க ளெழும்பாவிட்டாலும், வியவகாரம் சித்திப்பதன் பொருட்டுப் பிரயத்தனம்செய்து எடுத்துக்கொண்டு தாரணைசெய்யப்பட்ட அனுசந்தான பூர்வமாக வெளிவியவகாரம் நடக்கிறது என்று கருத்து.

“சகல ஆசையென்ற திருணத்திற்கு அக்கினியாகவிருக்கும் தத்துவாத்மபோதம் ஒன்றே சமாதியெனப்படும். தூஷ்ணீம் அவஸ்தையன்று” என்று வாசிஷ்டம் கூடியபடி சகஜ சமாதி நிரூபிக்கப்படுகின்றது.



னுலும், திருசியங்கள் யாவும் அசத்தியமானவையென்று நிச்சயிக்கப்பட்டுள்ளன. அவனுக்கும் சமாதியில் சொரூபானுசந்தானம் உண்டாகும்பொழுது திருசியங்களின் தோற்றம் சற்றேனுமில்லை. சொரூபத்தின் (a) விமர்சமே சமாதியென்று சொல்லப்படும், (b) மற்றன்று. நிர்விகற்ப சொரூபமானது சகலத்திற்கும் ஆதாரமாகச் சதா எல்லோரிடத்திலும் ஸ்புரிக்கின்றது. அது ஸ்புரிக்காவிடில் ஒன்றுமேயில்லை. (பார்க்கவா) பரிச்சின்னமான ஞானங்களின் அந்தராளதிசைகளில் நிர்விகற்பமான ஆத்மரூபம் ஸ்புரிக்கின்றதனால் மட்டிலும் (c) எல்லோருக்கும் சமாதியிருப்பதாக ஆகவேமாட்டாது. நிர்விகற்ப ஆத்மதத்துவத்தை உணர்ந்தோரானவர்களுக்கு விமர்சத்தை முன்னிட்டு அனுசந்தான வடிவமான யாதொரு நிரோதமுண்டாகின்றதோ அதுவே அவர்களுடைய சமாதியென்று வித்துவான்களால் கருதப்படும். (இவ்விதம் ஞானிகளு

(a) தொடர்பாக உண்டாகும் அனுசந்தானம்.

(b) ஹடயோகிகளால் செய்யப்படும் மூடசமாதி யன்று என்றர்த்தம்.

(c) ஹடயோகிகளுக்கு ஞானிகளைப்போல் சமாதியில் நிர்விகற்பமான ஆத்மதத்துவம் விளங்குகிறதே அஃதேன் சமாதியாகமாட்டாதென்றால் சொரூபஞானமின்றி நிர்விகற்ப சொரூபத்தின் ஸ்பூர்த்தியுண்டாவதனால் மாத்திரம் சமாதி சித்தியாது. ஹடயோகிகளுக்கு நிரோதகாலத்தில் சமாதியிருக்கிறதே யென்றால் எல்லோருக்கும் அந்தராளதசைகளில் சமாதியிருக்கின்றது. நிர்விகற்பமான ஆத்மதத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு விமர்சத்தைமுன்னிட்டு அனுசந்தான வடிவமாக யாதொரு நிரோதம் உண்டாகின்றதோ அதுவே அவர்களுடைய சமாதியென்று வித்துவான்களால் கருதப்பட்டுள்ளது. விசேஷக்குறிப்பிற்கு அனுபந்தத்தை நோக்குக.

டைய சமாதிக்கே.சமாதித்தன்மையென்றுகூறி உத்தம ஞானிகளுக்கு வியவகாரகாலத்திலும் சமாதி கெடாதிருப்பதாகக் கூறப்படுகின்றது.)

* வேத்தியத்தின் சம்பந்தமின்றிய வித்தியின் தசையே சமாதியெனலாகும். வியவகாரபரரான உத்தமஞானிகளின் வியவகாரத்திலும் வேத்திய சம்பந்தமின்றியே வித்தியிருக்கின்றது. ஆகாயத்தின் நீலத்தை அசத்தியமென்று உணர்ந்தபின் மறுபடியும் அந்நீலத்தைப் பார்க்கும்பொழுது அதனுடன் அசத்தியமென்றறிந்த வித்திக்கு(அறிவிற்குச்) சம்பந்தமுண்டாகாதது போல் (அவ்வாறன்றேல் சத்துவமின்னதென்றும் அத்துவமல்லாதது இன்னதென்றும் பேதம் விளங்காமற் போய்விடுமாதலாலும்) திருசியங்களை அசத்தியமென்று கருதியிருக்கும் ஞானிகளுக்கு வேத்தியங்களின் சம்பந்தம் அறிவினிடத்தில் எங்குமேயுண்டாகமாட்டாது. இக்காரணமாக, ஞானிகளுடைய வித்தியானது, வேத்தியங்கள் பாதிக்கப்பட்டு விளங்குகிறபடியால், வேத்தியங்களின் சம்பந்தமின்றியதே யாகும்.

அமனஸ்கர்களான மத்தியம ஞானிகளுக்கும் அறிவினிடம் வேத்தியங்களின் சம்பந்தம் இல்லவேயில்லை. ஏனென்றால் அவர்களுடைய நிலை உன்மனீதசையென்று சொல்லப்படுவதால். மனதானது எங்கு நிச்சலமாயிருக்கிறதோ அங்கு அதுவே உன்மனீதசையென்று கூறப்படும். மனதின் விஷய வியாபாரத்தினால் அறிவிற்கு வேத்திய சம்பந்தமுண்டாவதாலும் மத்தியமஞானிகளுக்கு அந்த மனோவியாபாரமில்லாததாலும் அவர்களுக்கு வேத்திய சம்பந்தமில்லை,

* வேத்தியம் = அறிபடுபொருள்.



சத்தியமென்று கருதப்பட்ட வேத்தியங்களுடன் கூடுவதே மனதின் சலனமாகும். இங்கு, அசத்தியமென்றுணரப்பட்ட வேத்தியங்களைப் பற்றிய வியாபாரமே உத்தமஞானியினுடைய மனதின் சலனமென்று பிரித்தறியவேண்டும். பார்க்கவா! உத்தமஞானிக்கு, மனதின் அத்தியந்த சலனமின்மையும், அசத்தியமென்றுணரப்பட்ட வேத்தியங்களிடம் கூடுதலின் விளக்கமான சலனமும் இரண்டும் ஒரேகாலத்திலிருக்கிறபடியால், அவன் எப்பொழுதும், எழுந்திருந்தவனும் (விழித்திருப்பவனும்) சமாதியிலிருப்பவனுமாவான். ஆகையினால் அவனிடத்திலும் (உத்தமனிடத்திலும்) வேத்திய சம்பந்தமின்றியே வித்தியிருக்கின்றது.

இவ்வாறாகவே முன் உன்னால் என்னென்ன கேட்கப்பட்டனவோ, அவைகளுக்குப்பதில் நன்றாய்ச்சொல்லப்பட்டது.

ஸ்ரீ திரிபுராரகசிய ஞான காண்டத்தில் ஞானஸ்திதியின் பேதவிளக்கமென்ற பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்—20.

### வித்தியா கீதை.

"ஞானிகளின் நிலைமையைச் சொல்லும் விஷயத்தில், முன்னொரு காலத்தில் நடந்ததை உனக்குச் சொல்லுகிறேன். அதனைக் கேள்" என்று தத்தகுரு மொழியத் தொடங்கினார்—

"முன்னொரு காலத்தில் மிகப் பரிசுத்தமான சத்திய லோகத்தில் பிரம்மாவின் சபையிலே அதிநுட்பங்களான விசாரணைகளை முன்னிட்டு ஞானத்தைப் பற்றிய பிரசங்கம் ஏற்பட்டது. ஸனகாதிகளும், வஸிஷ்டர், புலஸ்தியர், புலகர், பிருகு, அத்திரி, ஆங்கிரசர், பிரசேதர், நாரதர், சியவனர், வாமதேவர், விசுவாமித்திரர், கௌதமர், சுகர், பராசரர், வியாசர், கண்வர், காசியபர், தக்ஷர், ஸுமந்து, சங்கர், லிகிதர், தேவலர் முதலிய இப்படிப்பட்ட மற்றும் அனேக ரிஷிகளும் முதிர்ந்த இராஜரிஷிகளும், மேன்மை பொருந்திய *பிரம்ம ஸத்திரத்திற்கு வந்தவராகி, அதி சூக்ஷ்மமான நிருபணங்களைக் கொண்டு உயர்ந்ததான விசாரணை செய்து வந்தனர்.

அவ்வேளையில் ரிஷிகளெல்லோரும் பிரம்மாவைக் கேட்டதென்னவென்றால்—"பகவானே! உலகத்தின் கண்ணுள்ள ஞானிகளில் நாங்கள் பராவர ஞானிகள். இப்படிப்பட்ட எங்களுடைய ஸ்திதியானது பூர்வ சம்ஸ்காரங்களின் வித்தியாசத்தால் பல

* பிரம்ம ஸத்திரம் = ஞானயஞ்ஞம் = ஞானவிசாரணை.

வாறாகக் காணப்படுகின்றது. சிலர் சதா சமாதியிலிருக்கின்றார், சிலர் விசாரணையில் விருப்பமுள்ளவராகவிருக்கின்றார், மற்றுஞ் சிலர் பக்தியினால் உருகுகின்றார், இன்னுஞ் சிலர் கர்மங்களை அடுத்தவராயிருக்கின்றார், வேறு சிலர் வெளிநோக்கமுடைய நரனைப் போல விவகரித்து வருகின்றார். இவ்விதம் பல்வாறான நிலைமையுடைய எங்களில் யார் சிரேஷ்டர் என்பதை எங்களுக்கு அருளல்வேண்டும். அவரவருடைய பக்ஷமே சிரேஷ்டமானதென்று எங்களில் ஒவ்வொருவரும் கருதுகின்றோம்." என்று எல்லோரும் கேட்க, அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படாதென்று பிரம்மா, தம் மனதில் (a) நினைத்துக்கொண்டு மறுமொழி கூறுகின்றார்—"முநீந்திரர்களே, இவ்விஷயத்தை நானும் உங்களைப் (†) போலவே சந்தேகமில்லாது கிரகித்திருக்கிறேன். சர்வஞ்ஞனான பரமசிவன் இதன் உண்மையை அறிந்தவராகையால் அவரைக் கேட்க நாமெல்லோரும் அவரிடம் செல்லுவோம்"—என்று மொழிந்து விஷ்ணுவுடன்கூட ஸனகாதிகளான ரிஷிகளெல்லோரையும் அழைத்துக்கொண்டு கைலாசத்தையடைந்து மகாதேவனருகே சென்று ரிஷி சிரேஷ்டர்களுடைய கேள்வியை உலக சிருஷ்டாவான பிரம்மா கேட்டார். பரமசிவனும் இந்தப் பிரசினத்தைக் கேட்டுப் பிரம்மாவின் கருத்தை உணர்ந்தவராகி, ரிஷிகளுக்குச் சிரத்தையின்

(a) தான் கூறுவதையும், ரிஷிகள் அங்கீகரியாமல், அதனையும் பிரம்மாவினுடைய பக்ஷமென்று தள்ளி விடுவார்களென்று கருதி அவர்களிடம் பிரம்மாவானவர் பரமசிவனிடத்திற் செல்லுவோமென்றார்—

(†) பிரம்மாவுக்குத் தன்னுடைய பக்ஷத்தில் தனக்கு சந்தேகமில்லையென்றர்த்தம்.

மையால் நம்பிக்கை யுண்டாகமாட்டா தென்றும், "நான் ஏதாவது சிறிது மொழிவேனுனல், ரிஷிகள் அதனையும் என் பக்ஷமென்று நினைத்துக் கொள்வார்களாகையால் என் மொழிகளும் (b) வியர்த்தமாகி விடும்" என்றும் தமக்குள் தீர்மானித்து அவர்களிடம் சொன்னதாவது—"முனிகளே! கேளுங்கள். நானும் இதனை ஸ்பஷ்டமாக அறிந்தவனல்லன். ஆனகயினுல் பரமேசுவரியான வித்தை யென்ற பகவதியை நாமெல்லோரும் தியானஞ் செய்வோம். அதன்மேல் அவளுடைய பிரசாதத்தால் கோரிய கூடார்த்தத்தைத் தெரிந்து கொள்வோம்—"

இவ்விதம் மொழியப் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலானவருடன் ரிஷிகளெல்லோரும் மகேசியும், (a) திரிபுரையும் (b) சித்சரீரிணியுமான வித்தியா தேவியைத் தியானம் செய்தார்கள். சித்சரீரிணியான திரிபுரை எல்லோராலும் இங்ஙனம் தியானிக்கப்பட்ட

(b) இதிலிருந்தும் இவ்விஷயம் ஸனகாதிகளுக்கும் தெரியாதிருந்தபடியால் வித்தியாகீதையின் அர்த்தம் மிக உத்தமமானதென்றும், அசிரத்தை ஞானத்திற்கு முக்கியமான பிரதிபந்தமாகிறதென்றும் ரிஷிகளுக்கும் பிரம்மா முதலானவர்க்கும் அஞ்ஞானம் நீளக்கப்படுவதனுல் அஞ்ஞானத்தை அகற்றுவது வெகு கஷ்டமானதென்றும் ஸகுணமூர்த்திகள் பரிச்சின்னமானவரென்றுங் காண்பிக்கப்படுகிறது.

சுத்த சித்சக்தியான பராதேவதையைத் தியானஞ் செய்தால் அசிரத்தை யகன்று விடுமென்று கருதிப் பரமசிவன், எல்லோரும் தியானம் செய்வோமென்றார்.

வித்தை அவித்தைக்கு விரோதியானபடியால்.

(a) திரிபுரை = ஜாக்கிர, சொப்பன சுழுத்தியென்ற மூன்றிற்கும் மேலானவள் = துரீயை.

(b) சித்சரீரிணி = அவித்தையின் காரியம் சற்றேனுமில்லாததால் ஆவரணமற்ற சித்ரூபி.



பொழுது † சிதாகாசமயியான அவ்வுத்தமி மேகமுழக்கம்போன்ற தொனியுடன் சப்தவடிவாக விண்ணிடத்து ஆவிர்ப்பவித்தனள். "ரிஷிகணங்களே! எதற்காக நான் உங்களால் தியானிக்கப்பட்டேன்? அக்கோரிக்கையைத் தாமதமின்றிச் சொல்லுங்கள். என்பக்தர்களில் ஒருவருடைய கோரிக்கையையாவது நிறைவேற்றுவதில் காலதாமதம் உண்டாகக்கூடாது."

பரையான வாணியின் இவ்வித மொழிகளைக் கேட்டு ரிஷிகள் யாவரும், பிரம்மாமுதலானவரும் கூடத் தண்டாகாரமாக நமஸ்கரித்துப் பின் பலவாறான தோத்திரங்களால் துதிசெய்தனர். அதன்பிறகு ரிஷி கணங்கள் திரிபுரேசுவரியான வித்தையினிடம் மொழிந்ததாவது "ஏ! மகேசானீ, ஸ்ரீவித்தையே, திரிபுரேசுவரியே, உனக்கு நமஸ்காரம் (a) தன்னிடத்தே. யாவற்றையும் உற்பத்திசெய்து, நிலைக்கப்பண்ணிச் சர்வத்தையும் இலயிக்கச்செய்பவளும் பரமேசுவரியுமான உனக்கு நமஸ்காரம். உனக்கு ஜனனமின்மையால் எக்காலத்திலும் பழையவளாகவே யிருக்கிறாய். உனக்கு நரைதிரையில்லாததால் எப்பொழுதும் புதியவளாகவே யிருக்கிறாய். † நீயேயாவும், சகலத்தின் சாரமும் நீயே, நீ சர்வஞ்ஞை, நீ * ஸர்வஹார்ஷிணி; நீ எவையுமன்று;

† சிதாகாசமயி = அகண்ட சிதேகரூபி.

(a) ஜகத்திற்கு உற்பத்தி, ஸ்திதி, நாசங்களிருந்தும் ஆதாரமாகிய உனக்கு இவையில்லை யென்றர்த்தம்.

† நீயேயாவும் = கண்ணடி, பிரதிபிம்பங்களுக்கு ஆதாரமாயிருப்பதுபோல நீயே சர்வசாரமும் = கடங்களில் மிருத் சாரமாயிருப்பதுபோல நீ சர்வஞ்ஞை = பிரதானவடிவமாக ஜடமன்று; சித்பிரகாச வடிவமான அனுவிர்த்தி.

* ஸர்வஹார்ஷிணி = சாங்கியர் கூறுவதுபோல் உதாசீனமானதன்று; பூர்ணசுதந்தரமுடையது என்றர்த்தம். சுதந்

எவையின் சாரமுமன்று, சர்வஞ்ஞையுமன்று, ஸர்வஹார்ஷிணியுமன்று, தேவி, உனக்கு (b) முன்னும், பின்னும், கீழும், மேலும், பாரிசத்திலும் எல்லாப்பக்கங்களிலும் அடிக்கடி நமஸ்காரம்.

“உன்னுடைய பரவடிவத்தையும் உனது ஐசுவரியத்தையும் உன்ஞானத்தையும், அந்த ஞானத்தின் பலனையும் அதன்முக்கிய சாதனத்தையும் அதன் சாதகத்தையும், அதனாலுண்டாகும் சித்தியையும், சித்தியின் பாரகாஷ்டையையும் (முடிவானநிலையையும்) சித்தரில் உத்தமர் இன்னாரென்பதையும் கிரமமாகமொழிந்தருளவேண்டும். உனக்குப் பின்னும் பின்னும் தண்டம் சமர்ப்பிக்கின்றோம்.” என்றார்கள்.

இவ்விதம் கேட்டபொழுது, மகாவித்தையானவள் ரிஷிகணங்களின்மேல் தயவுடையவளாகித் தெளிவாக விளங்குமாறு அழகுபொருந்திய வசனங்களை மொழிய ஆரம்பித்தனள். “ரிஷிகளெல்லோரும் கேளுங்கள். அவைகளைக் கிரமமாகச் சொல்கிறேன். ஆகமமான அம்புநிதியைக்கடைந்து அதன் சாரமான அமிர்தத்தை உங்களுக்கு அளிக்கின்றேன். எதனிடத்தே இந்த உலகம் யாவும் கண்ணாடியிற் பிரதிபிம்

தாமே ஆனந்தமாகும். ஆனந்தமே விசுவாகந்தையாகப் பரிணமித்திருக்கிறபடியால். ஸர்வஹார்ஷிணி = அகண்டானந்த ரூபி.

எல்லாப் பதார்த்தங்களையும் விளக்குந்தன்மை ஒன்றேயாகி யிருப்பதால் இவ்விசேஷங்களின்றியவளென்று கூறப்பட்டது.

(b) நமஸ்காரம் முன்னிலையிற் செய்யவேண்டியிருப்பதாலும் பரதேவதை அசரீரிணியானதாலும், ரிஷிகள் எல்லாப் பக்கங்களிலும் நமஸ்காரம் செய்தார்கள்.



பம்போல (a) உற்பத்தியாகி, நிலைபெற்று இலயமடைந்து எல்லோருக்கும் சதாகாணப்படுகின்றதோ, யாதொன்று தன்னை அறியாதவர்களுக்கு உலகவடிவமாகத் தோற்றுகின்றதோ, யாதொன்று விகற்பமற்ற யோகிகளுக்குக் கேவலமான ஆத்மாவாகக் கம்பீரமான அலையற்ற அம்புதிபோல நிச்சல ஒளியாய் விளங்குகின்றதோ, தங்கள் சித்தசுபாவத்தால் தம் இரண்டற்ற நிலையை உணர்ந்தவராகவிருந்தும், பக்தர்கள் கபடின்றியிருந்த ஆவலோடும் யாதொன்றைப் பேதமாகப் பாவனைசெய்துகொண்டு அத்திபந்தம் பிரீதியுடன் சேவைசெய்கின்றனரோ, நேத்திரம் அந்தக்கரணம் முதலியவைகட்கு யாதொன்று உள்நின்ற பிராணசூத்திரமாகின்றதோ, யாதொன்று விளங்காவிடில் ஒன்றுமேயின்றோ, எதனைச்சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றனவோ இத்தகைய பராப்பிரதிபையே தேவியான என்னுடைய பரவடிவமென்று சொல்லப்படும்.

அனேக பிரம்மாண்டங்களுக்குப் புறம்பாக ஊர்த்துவத்தில் சுதாசமுத்திரத்தில் மணித்வீபத்திலிருக்கும் கடம்பவனத்திலே சிந்தாமணியென்ற விசேஷமான விடுதியில் பஞ்சப் பிரம்மம் எனும் மஞ்சத்தின் மேல் திரிபுரசுந்தர வடிவமாக அனாதி மிதுனமாயமர்ந்திருப்பதே என்னுடைய அபரவடிவமென்று ரிஷிகளே தெரிந்துகொள்ளுங்கள். அவ்விதமே, சதாசிவன், மகேசன், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், கணேசன், ஸ்கந்தன், திக்குப் பாலகர்கள், குமாரி, இலக்ஷ்மி முதலிய சக்திகள், வசுக்கள் முதலிய கணதேவதைகளும், அசுரர்களிலும், சுரர்களிலும் நாகயக்ஷ

(a) உற்பத்தி = புதிதாகத்தோன்றல், ஸ்திதி = தோற்றத்தின் தாரணை. இலயம் = தோற்றமின்மை.

கிம்புருஷர்களிலும் பூஜிக்கத்தகுந்தவர்களுமாகி இவர்களெல்லோரும் என்னுடைய அபர வடிவமாகவே கூறப்பட்டுள்ளார். இவ்விதம் எங்கும் அந்தந்த வடிவமாயிருக்கும் என்னை, என் மாயையினால் மோஹமடைந்தவர்கள் ஒரு பொழுதும் அறியார்கள். அங்கங்கே பூஜிக்கப் பட்டவளாகிக் கோரின பலனை யெல்லோருக்கும் அளிப்பவள் நானே. பூஜிக்கத் தகுந்தவரும் பலனை அளிப்பவரும் என்னையன்றி ஒருவரு மில்லை. எவ்விதம் என்னைப் பாவனை செய்கின்றாரோ, அவ்விதமே என்னிட மிருந்தும் பலனை அடைகின்றார்.

ரிஷிகணங்களே! என்னுடைய ஐசுவரியம் (a) அபரிச்சின்னமான தென்று கூறப்படும். இரண்டற்ற சின்மயியான நான், யாதொன்றையும் சற்றேனும் அபேக்ஷியாமல்—ஏ, ரிஷிபுங்கவர்களே!—அளவற்ற உலகங்களின் வடிவமாக ஸ்புரிக்கின்றேன். இப்படிச் சதா ஸ்புரிக்கின்றவளாக இருந்தும் என்னுடைய (b) இரண்டற்ற சித் வடிவத்தை இழந்து விடவு மில்லை. இவ்விதம் துர்க்கமான பொருளைக் கற்பிக்கின்றதே (செய்யக் கூடாததைச் செய்கின்றதே) என்னுடைய முக்கியமான ஐசுவரியம்.

ரிஷிகளே! சூக்ஷ்ம திருஷ்டியினால் என்னுடைய ஐசுவரியம் இன்னவித மிருக்கிற தென்று பாருங்கள். எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும், எங்கும் வியாபித்தவளாயும் ஒன்றிலும் பற்றில்லாது கேவலையாகவு மிருக்கிறேன். நித்திய முக்தையாக இருந்தும் பின்

(a) தனக்கு வேறான ஒன்றை அபேக்ஷியாமலும், தன்னை அம்சமாக்காமலும் என்றர்த்தம்.

(b) ஜகத்தின்தோற்றம் பிரதிபிம்பம்போன்றதாகையால் சொரூபத்திற்கு ஹானியில்லையென்பது கருத்து.

305 -



னும் பின்னுமடிக்கடி முக்தியைப் பெறுகின்றேன். அடிக்கடி தன் ஆத்மாவை உணர்ந்துகொண்டும், குருவினிடம் சீடனாக விளங்கியும், தன் மாயையினாலேயே தன்னை அறியாமல் அநாதி காலமாக நிகழ்ந்து வருகிறேன். இத்தகையான ஜகத்தை யாதொரு உபாதானமு மின்றிச் சிருஷ்டிக்கின்றேன். என்னுடைய ஈசித் தன்மையின் பரம்பரையானது இவ்விதம் வெகு விதமாயிருக்கிறது. ஆயிரம் நாவுடைய ஆதிசேடனும் இது அளவிட்டுச் சொல்லக் கூடியதன்று. என் ஐசுவரியத்தைச் சற்றே சுருக்கமாகச் சொல்கிறேன் கேளுங்கள். ஜகத்தின் கண்ணுள்ள இந்த விசித்திரமான வியவகாரங்கள் பாதையின்றியது போல அனுசியூதமாக யாவருக்கும் பிரத்தியக்ஷமாக விளங்குவதேயாம்.

என்னுடைய ஞானமானது த்வைத மென்றும் அத்வைத மென்றும் பற்பல பேதங்களாலும், உயர்ந்தது தாழ்ந்தது என்ற வித்தியாசங்களாலும் வெகு விதமாயுள்ளது. அவைகளின் பலன்களும் இவ்வாறே வெகு விதமாயிருக்கும். இரண்டென்பதைப் பற்றியிருப்பதனால் த்வைத ஞானம் பற்பலவாகும். த்வைத ஞானத்தின் (a) தியானம் சொப்பன மனோராஜ்ஜியங்களுக்கு நிகரான தென்றே கூறப்படும். இந்தத் தியான வடிவமான த்வைத ஞானமும் பிராந்தி போன்ற நினைப்பேயானாலும், ஈசன் நியதிப்படி பலனைக் கொடுக்கக் கூடியதென்று அறியத் தக்கது.

த்வைதஞானம் = உபாசனை.

தாழ்ந்தது = பரோக்ஷ ஞானம்.

(a) தியானம் ஸ்மிருதியின் (நினைப்பின்) அனுசந்தான வடிவமானது பற்றிப் பிரமாண மன்றாகையால் சொப்பன மனோராஜ்யப் பிராந்திகளுக்கு நிகரானதென்றது.

அபரஞானம் பலவாறுகும். அவைகளில் முக்கியமானது பஞ்சப் பிரம்மங்களுக்கு மேலான அநாதி மிதுன திரிபுரசுந்தர வடிவத்தைத் தியானம்செய்வதே. சிரேஷ்டமானபலனை அடைவதற்கு இது பரம்பரையான சாதனமாகையால் முக்கியமானது. அத்வைத விஞ்ஞானமே பரவிஞ்ஞான மென்று கூறப்படும். ஆனல் ஸ்ரீமதியும், சிரேஷ்டையும், சகுண மூர்த்திகளான சதாசிவாதிகளுக்கும் மேலான வித்யா தேவியுமான என்னை பிடித்து ஆராதனை செய்யாமல் சிரேஷ்டமான அத்வைத வித்தை எங்ஙனம் அடையலாகும்? த்வைதங்களான திருசியங்கள் இலேசுங் கூடவில்லாத கேவலையும் அனவச்சின்னையுமான சித் ரூபியே அத்வைத விஞ்ஞானம். (a) பிரமாண மென்று கருதப்படாது மறுக்க கூடியவையான ஞேயங்கள் அகன்ற பொழுது சுத்தமனதால் அபரோக்ஷமாக அநுபவிக்கப் படுவதே அத்வைத விஞ்ஞானம். (b) சித்தமானது ஆத்மாவினிடம் (c) கேவலம் ஒன்று பட்டுச் சேர்ந்த பின்பு "அதுவே நான்" என்றுண்டாகும் அகண்டா

ஸ்ரீ மதியானவித்தை = ஸ்ரீ வித்தை.

(a) மொழியப்பட்ட பரரூபமான கேவலசித்து, அஞ்ஞானத்துடன் ஜகத்திற்கு ஆதாரமாயிருப்பதால் அஃதெங்ஙனம் அஞ்ஞானத்தை நிவிர்த்திசெய்யுமென்ற ஆக்ஷேபத்திற்கு, பரசித்தினுடைய ஞேயங்களகன்ற சுத்ததசையைத் தோஷமற்ற பிரமாணத்தால் அபரோக்ஷமாக உணர்வது, த்வைதத்தோற்றங்களைப் பிரமாணமல்லவென்று நிரஸ்காரம் செய்யக்கூடியதென்று சமாதானம்.

(b) சித்தம் = சலனவடிவான ஞானசக்தி.

(c) விகற்பவாசனைகளொழிந்த திருசியவிமுகனுயிருக்கிறேனென்றுவது, ஆத்மாபிமுகனுயிருக்கிறே னென்றுவதுள்ள சவிகற்ப சமாதிவாசனைகளையொழித்து என்றர்த்தம். ஒன்றுபடுவது = நிர்விகற்ப சமாதி; பின்பு = சமாதியிலிருந்து எழுந்தபின்பு.



காரஞானமே பரவிஞ்ஞான மென்னப்பட்டது. சிரவணத்தினாலாவது (d) யுக்தியினாலாவது தேக விலக்ஷணமான சிதாத்மா இருக்கிறுரென்று பரோக்ஷமாகத் தோன்றுவதும் தேகாதிகளில் "நான்" என்று வருந் தோற்றம் நிச்சயரூபமாகப் பரோக்ஷமாய் அகலுவதுமே அபர விஞ்ஞானம். திருசியங்கள் சற்றே தோன்றினும், யாதொரு ஞானத்தினுல், அவை ஒரு பொழுதும், ஓரிடத்திலும் (e) தோன்றுதது போலிருக்கின்றனவோ அது தான் பரவிஞ்ஞானம். யாதொரு விஞ்ஞானத்தினுல் அறியப்படாததாக ஒரு காலும் சற்றுவது ஒன்றுமேயிருக்க மாட்டாதோ அதுவே அத்வைத (f) விஞ்ஞானம். பரிச்சின்னங்களான எல்லா விஞ்ஞானங்களுக்கும் ஆத்ம ரூபமாக

(d) யுக்தியினாலாவது கேவலதர்க்கத்தினாலாவது ஞானமுண்டாகலாமென்பது அத்வைத சாஸ்திர விருத்தமன்றோவென்றுல், சிரவணுதிகளின்றியே உத்தமாதிகாரிகளுக்கு அனுபாயமென்ற ஞானம் கேவலதர்க்கத்தினுலேயே உண்டாகக்கூடுமென்பது ஆகமசாஸ்திரத்தின் கருத்து. உத்தமர்களுடைய விஞ்ஞானம் குருசாஸ்திரங்களை அபேக்ஷிக்கிறதில்லையென்று ஆகமம் கூறுகின்றது. திருஷ்டாந்தம் வாமதேவரும் கர்கடியும்.

(e) தர்ப்பணத்தின் உண்மை தெரிந்தவனுக்கு அதன் பிரதிபிம்பங்கள் பாதிக்கப்படாதனவாய் அதற்குவேருக விளங்காதனபோல்.

(f) பிரதிபிம்பங்களால் பரிச்சின்னமான தர்ப்பணத்தின் அம்சங்களுக்கு மகாதர்ப்பணம் ஆதாரமாயிருப்பதுபோலப் பரிச்சின்னவிஷய ஞானங்களுக்கு விஞ்ஞானம் ஆதாரமாயிருக்கிறது.

யாதொரு விஞ்ஞானமிருக்கின்றதோ அதுவே சிரேஷ்டமான அத்வைத விஞ்ஞானம். எத்தகைய விஞ்ஞானம் உதிக்குமானால் நீடித்தகாலமாக இருதயத்தில் குடிகொண்டிருக்கும் சந்தேகங்கள் யாவும் (a) காற்றினால் மேகங்கள் போலச் சிதறப்பட்டு விலயமாகி விடுமோ அதுவே பரவிஞ்ஞானம். எவனிடத்தில் காமாதிவாசனைகள் சற்றேனுமில்லையோ இருந்தாலும் பற்கள் பிடுங்கப்பட்ட பாம்புபோலாகுமோ அவனுடையஞானம் பரவிஞ்ஞானமென்று கருதப்படும்.

எவ்வகையான துக்கங்களும் விலயமாவதே விஞ்ஞானத்தின்பலன். அத்தியந்தமான பயமின்மையை அடைவதான மோக்ஷமே பலன் என்று கூறப்பட்டது. இரண்டாவதின் கற்பனையினாலேயே பயமுண்டாகின்றது. திடமான அத்வைதஞான முண்டாகுமானால் சூரியனுடைய உதயத்தில் இருள்போல த்வைத கற்பனைகள் நிலைத்திருக்கமாட்டா. ரிஷிகளே—த்வைத சங்கற்பங்களை அகற்றிவிட்டால் பயம் சற்றேனுமிராது.

---

(a) பிரத்யபிஞ்ஞை வடிவான ஞானம் தன் விஷயம் சுத்தசித்தாக வுடையதா யிருக்கின்றமையால் எங்ஙனம் ஸர்வ ஞானாத்ம வடிவமாகு மென்றால் தர்ப்பணம் தன்னுள் பிரதிபிம்பித்த தர்ப்பணத்தின் அம்சங்களாதல்போல, அபேதமாம்.

கண்ணாடியின் உண்மை தெரியும் பொழுது பிரதிபிம்பங்கள் கண்ணாடியின் சொரூபமே யன்றி வேறில்லை யென்ற நிச்சயத்தினால் அவைகளைப் பற்றிய சந்தேகம் அகலுவது போல ப்ரதான பிரகிருதியைப் பற்றிய சிருஷ்டியென்றாகட்டும், பரமாணுப் பிரகிருதியைப்பற்றிய சிருஷ்டியென்றாகட்டும்; நான் தேகமா, பிராணனா வென்றாகட்டும் இவ்விதமான அனாதியான சந்தேகங்கள் ஞானத்தினால் நாசமாகின்றன.



ஆகையினால் பலனென்றது தனக்கு * வேறானதாகவிருக்குமானால் அது எவ்விதத்திலும் பயமாகவே பலிக்கும். பலன் அன்னியமானதானால் அது உலகிலுள்ள திரவியங்களைப்போல முடிவுடையதே. அந்த முடைபவைகளில் பயம் எவ்விதத்திலு மிருப்பதால் அத்தகைய பலனிலிருந்தும் நிர்ப்பயம் எங்ஙனமுண்டாகும்! அழியக்கூடியதான பலனுடன் கூடுவோனும் அழிந்துவிடுகிறபடியினால் "பலனுடன்கூடுவது" என்ற கொள்கை அறுவது திண்ணம். பலனை அன்னியமாகக் கூறுகிற வரையில் பயமிருக்கிறதென்று சொல்லப்படும். ஆத்மாவிற்கு அன்னியமாகாத மோக்ஷமென்ற யாதொரு பலன் கூறப்படுகின்றதோ அதுவே எல்லாப் பண்டிதர்களாலும் பயமற்றதான பலனென்று சொல்லப்படுகிறது. அறிபவனும், அறிவும், அறிபடுபொருளும், பலனும் எப்பொழுது ஒன்றுகின்றனவோ அப்பொழுதுதான் எல்லாப்பயமும் நீங்கிய பரமமான மோக்ஷம்.

விகற்ப சங்கற்பங்களை யொழித்து, (a) மூடத்தன்மையின்றிச் சுத்தமான சொரூபத்தின் ஸ்புரணை முண்டாவதே ஞானமாகும். இப்படிப்பட்ட சொரூபமே ஞானமென்றால், அஃது அறிபவனது சுத்த சொரூபமாக முன்னேயேயிருந்தாலும், பழக்கமின்மையால் (b) குறிப்பிட்டறியப்படவில்லை. ஆதலால், ஞான

---

* தனக்கு வேறாக விருக்கும் பலன் த்வைதமே யாகையால்.

(a) சுழுத்தியிலும் விகற்பசங்கற்பங்கள் ஒழிந்திருக்கிறபடியால்.

(b) விஷயஞானங்களின் அந்தராளங்களான நிர்விகற்பத்தில் இந்த ஞானம் இருக்கிறதேயென்றால், இருந்தும் குறிப்பிட்டுணரப்படவில்லை.

மானது சொரூபத்திற்கு வேறானதன்றாகையாலும் மோகத்தினால் குறிப்பிட்டறியப்படாதிருக்கிறபடியாலும் அந்த மோகத்தை யகற்றி அறியும்படி செய்வது குருவும் சாஸ்திரமுமேயன்றி மற்றன்று. சங்கற்பமும் மூடத்தன்மையும் ஒழிந்த இத்தகைய ஸம்வித்தின் ரூபமே உணரத்தக்கதான சொரூபமென்று சொல்லப்படும். அறிபவன், அறிவு, அறிபடுபொருள் என்ற பேதம் இருக்கிறவரையில் இவைகளுக்கு விளங்குவனவான வடிவங்கள் ஒருபொழுதும் வாஸ்தவமாகா. அறிபவன் முதலியவைகளினிடம் விளங்கும் மித்தையான இந்தப்பேதம் எப்பொழுது (c) அகலுகிறதோ அப்பொழுதுதான் இவைகள் தங்கள் உண்மை வடிவத்தை அடைகின்றன. இதுதான் பலன் என்று கூறப்பட்டது.

ஞாதா (அறிபவன்) முதற்கொண்டு பலன் வரையிலும் வாஸ்தவத்தில் ஒருபேதமுமில்லை. வியவகாரமாத்திரத்திற்காக அவைகளிடம் பேதம் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலாலே, முன்னமே அடைந்ததாயிருக்கிறபடியால் அங்கு "பலன்" என்று மொழியத்தக்கதாக ஒன்றுமேயில்லை. ஆத்மா ஒன்றுதானே

(c) அறிபவன் அறிவு விஷயம் முதலியவற்றின் ஐக்கியமுண்டானாலும் அஃதெங்ஙனம் சித்தவிர்த்திரூபமான பிரத்தியபிஞ்ஞை ஞானமாகுமென்றால்:—சித்தமென்பது ஜடசக்தியினால் சூழப்பட்ட பரிச்சின்னசைதன்யமே. அப்படிப்பட்ட சித்தத்தின் விர்த்திவிசேஷமே பிரத்தியபிஞ்ஞை. ஞானமென்ற அகண்ட சைதன்னியாகாரமாம். இதனால் அஞ்ஞானம் நிவிர்த்தி யாகும்பொழுது, பரிச்சேதம் செய்வதான ஜடசக்தி இலயமாவதால் சித்தத்தன்மை அகலும். அதனால் அந்தப் பிரத்ய பிஞ்ஞை ஞானமே பூரணசைதன்னியத்தன்மையடைவதால் அந்த ஐக்கியம் தள்ளத்தக்கதன்று.



மாயையினால் அறிபவனென்றும், அறிவென்றும், அறிபடு பொருளென்றும், பலனென்றும் எம்மட்டிலும் விளங்குகின்றதோ, அதுவரையில் சம்சாரமானது மலைபோல் அசையாதிருக்கும். எக்காலத்தில் இவைகள் எவ்விதமேனும் பேதமின்றி விளங்குமோ (அப்பொழுது) காற்றினால் சிதறப்பட்ட மேகம்போல் சம்சாரம் விலயமாகி விடும்.

இவ்விதமான மகாமோக்ஷத்திற்கு அதனிடமுண்டாகும் ஊக்கமே சாதனமாகும். ஊக்கம் பூரணமாயிருந்து விட்டால் வேறு சாதனங்கள் வேண்டியதில்லை. அஃது பூரணமாயிரா விட்டால் ஆயிரக்கணக்கான மற்றைச் சாதனங்கள் இருந்தாலென்ன? ஆகையினால் ஊக்கம் என்ற தாத்பரியம் ஒன்றே மோக்ஷத்திற்கு முக்கிய சாதனம். "எவ்வாறாயினும் சாதிக்கின்றேன்" என்பது தான் ஊக்கத்தின் சொரூபம். ஊக்கமுடையவன் எவ்விதத்திலும் முக்தனாகின்றான். சில தினங்களுக்குள்ளாவது மாதங்களுக்குள்ளாவது ஆண்டுகளுக்குள்ளாவது, மற்ற ஜன்மங்களிலாவது முக்தனாகின்றான். சீக்கிரமாவது நீடித்த பின்னாவது முக்தியடைவது புத்தியினது நிர்மலத்தின் வித்தியாசத்தைப் பொருந்தியதாகும். புருஷார்த்தங்கள் யாவற்றையும் நிறைவேறவொட்டாது நாசஞ் செய்யக்கூடியதான வெகு தோஷங்கள் புத்தியினிடமிருக்கின்றன. இத்தோஷங்களால் கோரமான சம்சாரத்தில் ஜீவர்கள் சதா வெந்து வருந்துகின்றார்கள்.

இவற்றுள் முதலில் நம்பிக்கையின்மை, இரண்டாவது காமவாசனை, மூன்றாவது ஜாட்டியதை என்றமந்தமதி. இவ்விதம் தோஷங்கள் மூன்று பிரிவுபடும். நம்பிக்கை யின்மையானது சம்சயமென்றும் விபரீத

புத்தியென்றும் இருவகையாகும். மோக்ஷமென்பது இருக்கின்றதோ இல்லையோ என்றவாறாக உண்டாவது * சம்சயத்தின் உதாகரணமாம். மோக்ஷமென்பதுஇல்லவேயில்லை என்பது அதனிடமுண்டாகும் விபரீத புத்தியாம். இவ்விரண்டும் மோக்ஷத்தைப் பற்றிய ஊக்கத்திற்கு முக்கியமான பிரதிபந்தங்களாகும். இவைகளுக்கு விரோதமான தீர்மானத்தால் இவ்விரண்டும் படிப்படியாக அற்று விடுகின்றன. இவ்விதம் திடமான தீர்மானங் கொள்வதற்கு முக்கியமான யுக்தியாதென்றால் நம்பிக்கை யின்மைக்கு மூலகாரணமாயிருப்பதை வேரறப்பிடுங்கி விடுவதே. இதன்றி வேறு மார்க்கமில்லை, விரோதமான குதர்க்க சிந்தனையே நம்பிக்கையின்மைக்கு மூலகாரணம். அதனையொழித்து ஸத்தான தர்க்கத்தை அடிக்கடி அப்பியாசம் செய்தால் மூலகாரணம் வேரற்றுப் போவதுடன் நம்பிக்கையின்மைக்கு விரோதியான நிச்சயம் ஏற்படும். அதன் பின்பு சிரத்தை யுதிக்கின்றபடியால் நம்பிக்கையின்மை அழிந்துவிடும்—

சிரவணத்திற்குப் புத்தியின் காமாதி வாசனைகள் பிரதி பந்தங்களானவை. காமாதி வாசனைகள் அடர்ந்த புத்தியானது முயற்சி செய்யமாட்டாது. உலகில், காமியானவன் காமியங்களையே சதா நினைத்துக் கொண்டிருப்பதில் ஒரே மனத்தனாக விருப்பான். அவன் முன்னிருப்பதையும் பாரான். செவியில் மொழிந்ததையுங் கேளான். காமாதி வாசனைகளுடையவன் சிரவணஞ் செய்ததானது செய்யாததற்கு நிகராகும். ஆகையினால், காமாதி வாசனைகளை வைராக்ய சம்பத்

* முக்தனுக்குப் புனராவிர்த்தியுண்டோ இன்றோவென்றுள்ள சந்தேகமும்.



தினால் ஜயிக்க வேண்டியது. காமக் குரோதங்கள் முதலிய ஆயிரக்கணக்கான வாசனைக ளிருப்பதில் அவைகளுக்குக் காமமே மூலகாரணமான படியால் அது (காமம்) அற்றுவிடுமானால் மற்றொன்று மிராது. ஆதலால் வைராக்கியத்தைப் பற்றிக்கொண்டு காம வாசனைகளை ஜயிக்க வேண்டும். "இது எனக்கு வேண்டும்" என்ற சொரூபத்தை யுடைய ஆசையே காமமென்று சொல்லப்படும். இந்த ஆசை சாதிக்கக்கூடியவைகளில் ஸ்தூலமாயும் சாதிக்கப் * பிரயாசையானவைகளில் ஸூக்ஷ்மவடிவமாயு மிருக்கும். திடமான வைராக்கியத்தைப் பற்றிக்கொண்டு இவையாவற்றையும் இல்லாமற் செய்யவேண்டும். வைராக்கியத்திற்கு மூலம் யாதென்றால், காமியங்களிடம் அடிக்கடி தோஷத்தை நினைத்து விஷயங்களிலிருந்தும் திரும்புவதே. இதனால் காமவாசனைகள் அற்றுவிடும்.

ரிஷி ஸத்தமர்களே!— மூன்றாவதாகச் சொல்லப்பட்ட ஜாட்யரூபமென்ற புத்தியின் தோஷமானது அப்பியாசத்தினால் எவ்விதத்திலும் வெல்லக்கூடியதன்று. மிகுந்த ஊக்கமுடையவனாகவிருந்தும் ஒருவனுக்கு யாதொரு ஜாட்யதோஷத்தினால் சிரவணஞ் செய்யப்பட்டது புத்தியில் ஏறாமலிருக்கின்றதோ அஃது புருஷார்த்தத்தை நாசஞ்செய்யக்கூடியதான வன்மை பொருந்திய தோஷமாகும். ஆத்மதேவதையான என்னைச் சேவிப்பதன்றி, இந்த ஜாட்யதோஷத்தை நாசஞ்செய்ய வேறுவழியில்லை. சேவையின் தாரதம்மியத்திற்குத் தகுந்தபடி ஜாட்யத்தை நான் விலக்குகின்றேன். ஜாட்டிய புத்தியுடையவன் அந்த ஜாட்டி

* பிரம்மாண்டத்தைப் பிளப்பது முதலியவைகளில்.

யத்தின் ஏற்றக்குறைவைப்பற்றி இஜ்ஜன்மத்திலாவது வேறுஜன்மத்திலாவது பலனடைகின்றான். என்னையே சேவைசெய்வதனாலும், (a) கபடமின்றிய பக்தியுடன் சதா என்னையே அடைவதனாலும், எல்லாச்சாதனங்களின் சம்பத்தியுமுண்டாகின்றது. அப்படிப்பட்ட உபாசகன் சாதனங்களின் விக்கினங்கள் ஒழிந்தவனாகிக் கிருதார்த்தனாகின்றான். எல்லோருடைய புத்திவிர்த்திகளை நடத்துபவளும், ஈசுவரியுமான என்னை எவனொருவன் மூடத்தன்மையால் அனாதரவுசெய்து, சாதனையில் ஏகபரனாயிருக்கிறானோ அவன் ஒவ்வொரு படியிலும், விக்கினங்களால் வருந்துவதுடன் பலனடைவதும் சந்தேகிக்கத்தக்கதே—ஆகையினால், ரிஷிகளே!—ஊக்கமே முக்கியசாதனமாம். இவ்வித ஊக்கமுடையவனே பரமசாதகனென்று கருதப்படும். ஊக்கமுடையவர்களிலும், என்னிடம் பக்தியுடையவன் யாவராலும் பூஜிக்கத்தகுந்த சாதகனாவான்.

ஸித்தியென்பது ஆத்மாவின் நிச்சயமும், தேகத்தினிடம் அனாத்மபாவனையுமே. தேகங்களில் எல்லோருக்கும் சந்தேகமற ஆத்மபாவனையிருக்கின்றது. இப்பாவனை அகல்வதே (b) மூடத்தன்மையொழிந்ததான ஸித்தியெனப்படும். ஆத்மா எல்லோராலும் கைக்கொள்ளப் பட்டிருந்தாலும் தேகாதிமயமாகத் தம்மைப் பாவனைசெய்கிறதேயன்றிக் கேவலாத்மாவாக நினைக்கிறதில்லை. இது காரணமாகத்தான் அஞ்ஞர்கள் யாவரும் மகா அனர்த்தங்களின் தொடர்பை அடைந்திருக்கின்றனர். ஆகையினால் தேகாதிகளை விளக்குவ

(a) நிஷ்காமனாக.

(b) சுழுத்தியில் தேகபாவனையில்லையே யென்றதற்குச் சமாதானம்.



தான கேவலசின்மாத்திரமேதான் (ஆத்மா) என்று சந்தேகங்கள் யாவற்றையும் நாசஞ்செய்யக்கூடியதான தீர்மானமே ஸித்தியென்று பிராஞ்ஞர்களாற் கூறப்பட்டுள்ளது. இஃதன்றி வேறு ஸித்திகளில்லை. ஆகாய கமனாதிகளும், அணிமாதிகளுமான ஸித்திகள் ஆத்மவிஞ்ஞானஸித்தியின் பதினாறிலொருகலைக்கு நிகராக மாட்டாது. அந்த ஸித்திகளெல்லாம் தேசகாலங்களினாற் பரிச்சின்னமானவையே. தன் ஆத்மவித்தையும், சிவாத்மிகையுமான இந்த ஸித்தி அங்ஙனம் பரிச்சின்னமாகாது. மற்ற ஸித்திகளெல்லாம் தன ஆத்மவித்தைக்கான சாதனங்களில் அடங்கியிருக்கின்றன. இந்த ஸித்திகள் ஆத்மவித்தையை அடைவதில் விக்கின காரணங்களே யாகும். சாக்ஷாத் பிரம்ம பதவியையும் திருணத்திற்கு நிகராகப்பார்க்கும் தீவிரர்களான முமுக்ஷுக்களுக்கு இந்திரஜாலம்போன்ற இச்சித்திகளால் ஆகவேண்டியதென்ன? ஸித்திகளால் ஆகிறதென்னவெனில், இவை காலத்தைக் கடத்துவதற்கே காரணமாகும்.

ஆகையினால், யாதொன்றினால் சோகத்தின் அத்தியந்த நாசம் ஏற்படுகின்றதோ, ஆனந்தேகரசத்தன்மை உதயமாகின்றதோ அப்படிப்பட்ட ஆத்மவிஞ்ஞான ஸித்தியைவிட வேறு ஸித்திகளில்லை. மிருத்யுவின் பாசத்திலிருந்து தப்புவிக்கக் கூடியதான ஸித்தியே ஸித்தி. வேறன்று.

இந்த ஆத்ம * ஞான ஸித்தியானது பலவாறான அப்பியாசத்தின் வேகத்தாலும், புத்தியினது நிர்மலத்

* தேகம் முதலியவற்றிற்கு வேறான சுத்தசித்ரூபத்தினிடம் "நான்" என்ற பிரத்தியக்ஷ விமர்சனமான ஞானசித்தி.

தின் ஏற்றக் குறைவினாலும் ஏற்படும். ஞான பரிபாகத்தின் பேதத்தினால் உத்தமம், மத்திமம், அதமம் என்று சுருக்கமாக மூவகைப்படும். ரிஷிகளே! உலகத்தில் த்விஜர்களால் பாடம் செய்யப்பட்ட வேதத்தின் அத்தியயனம் சமமாகவிருந்தாலும், மேதாவியானவன் தன் மிகுந்த அப்பியாசபலத்தினால் படனகாலத்தில் அனேக வியாபாரங்களைச் செய்தாலும், வேதத்தின் வர்ண ஸ்வரங்கள் பிசகிப் போகாமலிருப்பது உத்தம படனமாகும். வியாபார காலத்தில் சமாஹிதனாக விருந்து பின் வேதம் ஓதப்புகுந் தருணத்தில் வியாபாரத்தில் அசமாஹிதனாகி § முன் போலவே தவறின்றி வேதம் ஓதுவது மத்தியமமாகும். அனுசந்தானம் எந்நேரமும் செய்வதனாலேயே அவ்விதம் பிழையின்றி ஓதுவதும், அஃதன்றித் தவறுதலுண்டாவதும் அதம படனமாகும்.

ரிஷிகளே, இங்ஙனமே ஆத்ம விஞ்ஞான சித்தியுமாம். மகாவியவகாரங்களிருந்தாலும் பிரதிசந்தானமில்லாமலும் அல்லது மற்ற வியாபாரங்களில்லாதிருக்கப் † பிரதிசந்தானமின்றியும், அல்லது சதா பிரதிசந்தானத்துடனும் ஏற்படும் ஆத்மாவினது அறிவின் மரணத்தின் தாரதம்மியத்தினால் உத்தமமென்றும் மத்திமமென்றும் அதமமென்றும் மூவகையாகின்றது. இவைகளில், உத்தமந்தான் ஞான சித்தியின் பராகாஷ்டை நிலையாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சொப்பனத்திற்கு முன்னுள்ள தானான அவஸ்தையில் (a) விசாரக்ஷணத்திற்கு ஒத்ததான யாதொரு பரமமான

§ முன்போலவே = முன் கூறிய உத்தமனைப்போலவே.

† பிரதிசந்தானம் = ஏகாக்கிரம்.

(a) சரீராதிகளில் அகம்பாவம் ஒழிந்த சுத்த சின்மாத்திரத்தில் "அகம்" என்றுள்ள நிலை.



நிலை அடையப்படுகின்றதோ அதுவே பரமமான உத்தம சித்தியாகும். வியவகாரங்களிலெங்கும், (b) பிரயத்தனம் ஏதுவாகச் சம்ஸ்காரங்கள் எழும்பி எப்பொழுது பிரவிர்த்திகளுண்டாகின்றனவோ அப்பொழுது தான் சித்தியின் பராகாஷ்டை நிலையென்று கூறப்படும். யத்தனமின்றியே பரமமான ஸம்வேதனத்மாவினிடம் அழியாத யாதொரு நிலையுண்டோ அது எப்பொழுது சித்திக்கின்றதோ அப்பொழுது தான் காஷ்டை நிலை வந்து கூடும். வியவகார பரனாகவிருந்து பாவங்களைப் பார்த்தாலும் எப்பொழுது த்வைதத் தோற்றமின்றியிருக்கின்றானோ அப்பொழுது தான் அந்தச் சித்தியும் பூரணத்தன்மை அடைந்ததாகும். ஜாக்கிரம் முதலியவற்றில் வியவகரித்தாலும் உறங்குபவன் போல எப்பொழுதிருக்கிறானோ அப்பொழுது தான் அந்தச் சித்தி பூரணத்தன்மை அடைந்ததாகும்.

இவ்விதமான சித்தியை அடைந்தவனே சித்தர்களில் உத்தமனென்று சொல்லப்படுவான். நித்தியம் வியவகார பரனாகவிருந்தாலும் ஒரு பொழுதும் மேதாவியானவன் சமாதியை விட்டகலான். அவனே சித்தர்களில் உத்தமனென்று மதிக்கத் தக்கவன். தன்னுடைய அனுபவத்தினால் தனக்குள்ளேயே பற்பல விதமான ஞானிகளின் நிலையை யாவன் சதா அறிகின்றானோ அவனே சித்தர்களில் உத்தமனென்று மதிக்கத் தக்கவன். சம்சயமாவது காமமாவது எவனுக்குச் சற்றேனு மில்லையோ, எவன் வியவகாரத்தில்

(b) தானாகவே வாசனைகள் கிளம்பிப் பிரவிர்த்திக்காமல் வேண்டுமென்று தன் பிரயத்தனத்தினால் சம்ஸ்காரங்கள் எழும்பிப் பிரவிர்த்திப்பது.

நிர்ப்பயனாயிருக்கின்றானோ அவனேசித்தர்களில் உத்தம னென்று மதிக்கப்படுவான். எவ்வகையான சுகதுக் கங்களையும் உலக வியவகாரங்களையும் யாவன் தன் ஆத்மாவிடத்திலேயே யிருப்பனவாக அறிகின்றானோ அவனே சித்தர்களில் உத்தமனென்று மதிக்கத்தக்க வன். எவன், அத்தியந்தம் பெத்தரும் முக்தருமான ஜீவர்கள் யாவரையும், ஸர்வாத்மாவான தன்னாத்மா விடத்திலேயே காண்கின்றானோ, அவனே சித்தர்களில் உத்தமனென்று மதிக்கத் தக்கவன். தன்னாத்மா விடத்திலேயே, சதா பந்தஜாலங்களை ஸ்பஷ்டமாகப் பார்க்கிறவனாக விருந்தும் மோக்ஷத்தை ஒருபொழுதும் யாவன் வேண்டாதிருக்கின்றானோ அவனே சித்தர் களில் உத்தமனாக மதிக்கப்படுவான். உலகில் சித் தோத்தமனானவன் நானேயாவேன், எங்களிருவருக்கும் ஒருகாலும் வித்தியாசமில்லை. ரிஷிகளே, உங்கள் பிரசினங்களுக்கு இங்ஙனம் மிக ஸ்பஷ்டமான மறு மொழி கூறியிருக்கின்றேன். என்னால் மொழியப்பட்ட இதனைத் தெரிந்துகொண்டு ஒருகாலும் மோகத்தை அடையாதிருக்கக்கடவீர்."

இராமா, இங்ஙனம் மொழிந்துவிட்டுப் பரையான வித்தியாதேவி மறைந்து விட்டாள். இதனை ரிஷிக ளெல்லோரும் கேட்டுச் சந்தேகத்தை யகற்றிச் சிவன் முதலிய லோகேசர்களை நமஸ்கரித்து அவரவர்களு டைய இருப்பிடங்களுக்குச் சென்றனர். என்னால் உனக்கு மொழியப்பட்ட இந்த வித்தியா கீதையைச் சிரவணஞ்செய்தால் பாபசமூகங்கள் நாசமாகி விடும். விசாரித்து மனத்தினால் உள்ளத்திற் பதியும்படி செய் தால் தன்னாத்ம ஸாம்பிராஜ்ஜியத்தைக் கொடுக்கும். மற்ற கீதைகளிலும் இந்த வித்தியா கீதை உத்தம



மானது. ஏனென்றால் சாக்ஷாத் வித்தியா தேவியினா லேயே நிரூபிக்கப்பட்டிருப்பதனாலேதான். தினந்தோ றும் இதனைப் படித்தால் அத்தேவி பிரசன்னையாகித் தானே சுயமாக ஞானத்தை அளிக்கின்றாள். சம்சார மான அந்தகார சமுத்திரத்தில் மூழ்கியிருப்பவர்களை உத்தாரணஞ் செய்ய இக்கீதை ஒரு தாரகமாகும்.

ஸ்ரீ திரிபுராரகசியம் ஞானகாண்
டத்தில் வித்தியாகீதை யென்ற இருபதாவது
அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்-21

தத்தாத்திரேய முனிவர் மொழிந்தவைகளைப் பார்க்கவனான இராமன் இவ்வாறாகக்கேட்டு, அவித்தியா ஜாலங்களின் பிராந்தியிலிருந்தும் விடுபட்டவன் போலாயினன். பிறகு, அத்திரி குமாரனை நமஸ்காரம் செய்து பக்தியுடன் சில கேட்கின்றான். "பகவானே, சாக்ஷாத் பலனைக் கொடுக்கக் கூடியதும் சுலபமும் சாரமானதென்று தீர்மானிக்கப் பட்டதுமான விஞ்ஞானத்தின் சாதனத்தையும், ஞானிகளை நான் சீக்கிரத்தில் தெரிந்துகொள்ளுமாறு அவர்களின் இலக்ஷணத்தையும் எனக்குச் சொல்லவேண்டும். ஞானிகளுக்குத் தேகத்துடன் கலந்திருக்கும் பொழுதும், அதிலிருந்து விலகியிருக்கும் பொழுதும் உண்டாகும் நிலைமையையும், ஞானிகளின் விவகாரம் செய்யும் பொழுது அவர்கள் மனமானது இவ்விதம் பற்றுதலின்றி யிருக்கிறதென்பதையும், இவைகள் யாவற்றையும், கிருபை கூர்ந்து ஸ்பஷ்டமாக எனக்கு அருள வேண்டும்" என்றனன். ஜமதக்கினியின் புதல்வன் அத்திரி குமாரனை இவ்வாறு கேட்டபொழுது அந்தக் கருணைக் கடல் சந்தோஷ மடைந்து பார்க்கவனை யழைத்துச் சொல்லுகின்றார். "இரகசியமான ஞான சாதனத்தைச் சொல்லுகின்றேன் இராமா, கேட்பாய், ஞானத்திற்கு முக்கியமான சாதனம் பரமமான தேவதானுக்கிரகமே



எவனொருவன் (a) எல்லாவிதத்திலும் தன் ஆத்ம (b) தேவதையை உபாசனை செய்கின்றானோ அவனுக்கு ஞானமானது மிகச் சுலபமாக உண்டாகு மென்பது திண்ணம். இந்தத் தேவதாபக்தியே ஞானத்திற்கு யாவற்றிலும் உத்தமமான சாதன மென்று சாஸ்திரங்களில் கூறப் பட்டுள்ளது. அன்னிய சாதனங்களை அபேக்ஷியாமலே, இந்தத் தேவதா பக்தியானது பலனைச்சாதித்துக் கொடுக்கும் தன்மையுடையது. இஃதொழிந்து மற்றவைகள் (1) பூரண பலனைக் கொடுக்க மாட்டா. இராமா! இதன் (2) காரணத்தைக்கேள். (3) இது காரணத்தைப் பற்றியிருக்கின்றது, பலனான விஞ்ஞானம், யாவற்றையும் விளக்குவதான கேவல சாமான்னிய சித்தாகும். சொப்பிரகாச வடிவமா யிருக்கும் அதற்குப் பலன் என்ற தன்மை எவ்வித மென்றால், விளக்கும் சொரூப முடைய அந்தச் சித்தினிடம் கற்பிக்கப்பட்ட அவித்தையென்ற ஆவரணம் விசாரத்தினால் அழியும் போது கேவல சித்தினிடம் "இது நான்" என்னும் பிரத்திய பிஞ்ஞாஞானம் உண்டாகின்றது. இப்படிச் சொரூபத்தைக் குறிப்பிடும் ஞானமும் கேவலாத்மாவாக நிலைத்திருத்தலும் பகிர்ப்

(a) மனோவாக்குக் கர்மங்களினால்.

உபாசனை = அடுத்திருப்பது. எந்நேரமும் தேவதையின் பாவனையை விடாமலிருப்பது.

(b) தன்னில் அந்தர்யாமியாக இருக்கும் தேவதையை.

(1) தேவதானுக்கிரகமின்றி வெறுஞ் சிரவணம் முதலியவற்றால் முடிவான பலனைக் கொடுக்கக் கூடிய ஞானம் உண்டாக மாட்டாதென்பது கருத்து.

(2) அனுக்கிரக மின்றிப் பலனில்லை என்பதன் காரணம்.

(3) பக்தியினால் நிச்சயமாயும் பலனுண்டாகு மென்பது.

பாவனை (4) யுள்ளவர்களுக்கு உண்டாவது மிகவும் துர்லபம். பக்தர்களுக்கு அன்னியங்களில் கவனம் அற்றுவிடுகிற படியாலும், ஆத்ம தேவதையினிடம் தத்பரதையுண்டாவதாலும், சீக்கிரத்தில் சுலபமாக அடையக் கூடியதாகிறதென்று நிச்சயப்படுகிறது. இவ்வாறு தேவதா தத்பரனான ஒருவன் அன்னிய சாதனங்கள் சொற்பமாகவுடையவனாக விருந்து, பரோக்ஷமாயாவது ஆத்மாவைத் தெரிந்துகொண்டு, மற்றவர்களுக்கு அதனை நிரூபணம் செய்கின்றான். இராமா! சதா இவ்விதம் நிரூபணை செய்வதால் அவன் சித்தமான அதே வடிவமாகின்றது. இவ்விதம் நிரூபணாதிகளால் திடமாகச் சமாவேசம் உண்டாகும் பொழுது அவன் சித்தமானது எவ்விதத்திலும் சலியாது (5) சுத்தசிதாத்ம வடிவமாகி எங்கெங்கு சென்றாலும் அவையாவற்றையும் சிவாகாரமாகச் செய்து விடுகின்றது. அவன் உத்தம விஞ்ஞானியும் ஜீவன் முக்தநிலையில் அமர்ந்தவனும் ஆவன். ஆகையினால் நல்ல பக்தியுடன் மற்றவர்களுக்கு அடிக்கடி நிரூபணம் செய்வதே சிரேஷ்டமான சாதனம். இதற்குச் சமமாக வேறு சாதனங்கள் அகப்படா. தேவதா பக்தியுடன் தன் ஆத்மதத்துவத்தை நிரூபணம் செய்வதற்கு மற்றைச் சாதனங்களொன்றும் நிகராக மாட்டாது. இராமா, ஞானிகளின் இலக்ஷணம் அறிவது மிகவும் கஷ்டம். ஏனென்றால் அவர்களின் நிலை, எல்லாவற்றிற்கும் ஆர்

(4) தன் ஆத்ம தேவதையிடம் பக்தியுள்ளவர்களுடைய மனது பகிர் முகப்படாதாகையால் அவர்களுக்குச் சுலபமெனப் பட்டது.

(5) திருசிய சம்பந்த மிருந்தாலும் சிதாத்மாகாரத்தை நழுவி விடுகிறதில்லை என்றர்த்தம்.



காரமாகி நேத்திரங்களும் வாக்கு முதலியவையும் செல்லக் கூடாதது. ஆதலால் அது மற்றோர்களால் நிரூபிக்கவாவது, குறிப்பிடவாவது ஒருபொழுதும் சாத்தியமன்று. உலகத்தில் ஒருவனுடைய தேகவஸ்திர பூஷணங்களால் அவனது கல்வியின் முதிர்ச்சியை மற்றவர்களால் ஒருபொழுதும் அறியக்கூடாததுபோல அன்னியர்களால் ஞானத்தன்மை அறியத்தக்கதன்று.

அருந்தப்பட்ட இரசத்தின் இரசமறியும் தன்மையை அருந்தினவனே அறிவதுபோல் ஞானியின் ஞானம் தன்னறிவினாலே அறியக்கூடியதேயன்றி வேறு விதத்தாலாகாது. அவ்விதம் ஞானிகளின் இலக்ஷணம் அறிவது அரிதானாலும், அவர்களின் சம்பாஷணை, முகப்பிரசாதம் முதலியவற்றால், சிற்றெறும்புகள் தங்கள் மார்க்கத்தைத் தாங்களே தெரிந்துகொள்வதுபோலச் சதுரர்களான ஞானிகளே தெரிந்து கொள்ளத் தக்கது. ஞானிகளுக்கு தூல லக்ஷணங்களாக அனேகம் இருக்கின்றன. ஆனால் அவை மற்றவர்களிடத்திலும் காணப்படுகின்றன. அன்னியமான சூக்ஷ்ம லக்ஷணங்களுமிருக்கின்றன. இவை அஞ்ஞானிகளால் அறியத்தக்கனவல்ல. நிரூபணம் செய்வது, சம்பாஷணை, சாதனங்களான வைராக்கியாதிகளை நடித்தல் ஆகிய இவைகள் ஞானிகளைப்போல மற்றவர்களாலும் செய்யக்கூடியவையென்று தோன்றுகின்றன. ஸ்தூல லக்ஷணங்கள் எவையென்றால், மனத்தின் அழுக்கறுதல் பழகி வந்ததும் நிலை பெற்றதுமான வைராக்கியம் முதலிய சாதனைகளேயாம். இவை அவர்களுக்கு இலக்ஷணங்கள் எனப்படும். மானவமானங்களாலாவது இலாப நஷ்டங்களாலாவது ஜயாபஜயங்களாலாவது எவன் முகத்தில் விசேஷ விகாரங்கள் ஏற்பட

வில்லையோ அவனை உத்தம ஞானியென்று கருதவேண்டும். தன் ஆத்மானுபவ வார்த்தைகளில் கூடமான சமாதி அனுபவங்களைக் கேட்டாலும் காலதாமதமில்லாமலும் சந்தேகமில்லாமலும் உத்தம ஞானியானவன் மறுமொழி கூறுவன். ஞான வார்த்தைகளில் அவனுக்கு அளவற்ற உற்சாகம் உண்டாகும். நிரூபணம் செய்வதில் விமுகமின்றியிருப்பது ஞானிகளின் இலக்ஷணமாகும். பிரயத்னமின்றிச் சுபாவமாகவே சித்தம் அந்தர்முகமாகி மகத்தான ஆபத்துக்களிலும் சாந்தாத்மாவாக விருப்பவன் ஞானிகளில் உத்தமனாவன். ஏ, பார்க்கவா! இவை முதலிய உத்தம ஞானிகளின் இலக்ஷணங்கள் தன்னையே பரீக்ஷித்துக் கொள்பவர்க்கு மாறாத குறிகளாக இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. சாதனை செய்பவன் எப்பொழுதும் தன்னையே பரீக்ஷை செய்து கொள்வதில் விருப்பமுடையவனாக இருத்தல்வேண்டும். பிறரைப் பரீக்ஷை செய்வதில் நிபுணனானவன் முயலுவதுபோலத் தன்னையே பரீக்ஷை செய்து கொள்வானாயின் எவ்விதந்தான் சித்திபெறாதிருப்பன்? ஒருவனுக்குப் பிறருடைய குணதோஷங்களை விசாரணைசெய்ய விருப்பமில்லாமல் தன்னுடைய குணதோஷங்களையே விசாரித்துப்பார்ப்பதில் சிரத்தையுண்டாகும்பொழுது அவன் எல்லாச்சாதனங்களும் உடையவனாகிச் சித்தியடைகின்றான். பிருகுநந்தனா! இவ்வாறு கூறப்பட்ட ஞானிகளின் இலக்ஷணங்களைத் தன்னைத்தான் பரீக்ஷை செய்துகொள்வதற்கு எவ்விதத்திலும் உபயோகப்படுத்தவேண்டும்.

இந்த லக்ஷணங்கள் பிறரைச் சோதிப்பதில் நிலையற்று விபசரிக்கின்றன. ஏனென்றால், சுபாவமாகவே அபாரத கர்மவாசனைகளில்லாத சுத்தமான மனதுடைய



வருக்குத் தற்காலத்தில் ஒருவாறு சாதனையின்மேல் ஞானசித்தி யேற்பட்டாலும், முன்னிருந்த காமாதி வாசனைகள் அகலாத்தன்மையால் முன்போலவே அஞ்ஞானிகளைப்போல அந்த ஞானிகளும் சாமான்னியமாக விவகாரம்செய்வதால், அவ்விதமானவர்களிடத்தில் முன்கூறிய இலக்ஷணங்கள் எவ்விதம் பொருந்துதல் கூடும்? எவ்விதம் அவர்களைப்பரீக்ஷிப்பது? ஆயினும் ஞானிகளுக்குத் தங்கள் அப்பியாசத்தின் வைபவத்தால் அன்னியஞானிகளை இரத்தினப் பரீக்ஷகளைப்போல ஒருவாறு பார்த்ததுமே பரீக்ஷைசெய்து தெரிந்துகொள்ளுந் தன்மையுமுண்டு.

மந்தஞானிகளுக்குத் (a) தேகாபிமானம் அஞ்ஞானிகள்போலவே யாகும். ஏனென்றால் அவர்களுக்குச் சகஜசமாதி நிலைகூடாமையாலே தான். விசாரணை செய்யும்பொழுது மாத்திரம் அவர்கள் பூரணசொரூபத்தைச் சார்கின்றனர். சுகதுக்கங்களின் இடையிடையே பூரணதசையின் அனுசந்தானத்தால்நிவிர்த்தி பெற்றவரானாலும் விசாரமின்றிய வேளையில் தேகமயமாகிச் சுகதுக்கங்களை அனுபவித்துப் பசுத்தன்மையுடையவராகின்றனர். ஆனால் அவர்களுக்குப் பூரணநிலைகளினிடையே உண்டாகும் பசுதசைகளானவை கருகிய கயிறுபோல (தக்தரஜ்ஜுப்போலப்) பந்தத்தைக்கொடா. வஸ்திரத்தின் இருபக்கங்களிலும் ஏற்றப்பட்டிருக்கும் அரக்குக்கறையின் சாயமானது மத்தியிலும் பரவிச் சிவப்பு நிறமாவதுபோல மந்தஞானிகளின் விவகாரமும் தங்கள் சித்வடிவ அனுசந்தானங்களின் இடையே பொருந்தினதால் சித்வடிவத்தன்மையை

(a) இவ்வாறு ஞானிகளது இலக்ஷணங்கள் சொன்ன பிறகு அவர்களுடைய நிலை சொல்லப்படுகிறது.

அடைகின்றது. ஆனபடியால் பந்தத்திற்கு ஏதுவாகிறதில்லை.

மத்தியவிஞ்ஞானிகளுக்கு ஒருவிதத்திலும் தேகத்தின் சேர்க்கையில்லை. தேகத்தினிடமாகத் தானென்று வருவதே தேகஸம்யோகமென்று அறிஞர்களால் கூறப்படும். இராமா! அவ்விதமான தேகஸம்யோகமானது மத்தியவிஞ்ஞானிகளுக்கு ஒருபொழுதும் கிடையாது. அப்பியாசத்தின் முதிர்ச்சியால் அவர்கள் மனமானது எப்பொழுதும் இலீனமாகவே யிருக்கும். அவர்கள் எப்பொழுதும் சமாதியில் ஒடுங்கினவர்களா யிருப்பார்கள். அவர்களுக்கு வியவகாரம் கிடையாது. இவர்களுடைய தேகத்தை நிர்வகிக்கும்பொருட்டான வியவகாரங்கள் சுழுத்திபோலவாகும். எவ்விதம் தூங்குகிறவன் தன்வாசனையினால் சிலவேளை சற்றேபேசியும் சிலவற்றைச்செய்தும் பின் அவையொன்றுமே அறியாதவனாக இருக்கிறானோ, போதைகளினால் மயங்கிய ஒருவன் அவ்வேளையில் தான் பேசினதையும் செய்ததையும் உணராதிருக்கின்றானோ அவ்வாறாகவே மகாயோகியானவனும் வியவகாரரகிதனாகின்றான். சற்றே சிலவேளை தொழில்கள்செய்தாலும் பிற்பாடு அவனுக்கு அவை தெரியமாட்டா. பிராரப்தம் வாசனைகள் இவ்விரண்டுமே அவன் தேகத்தை எப்பொழுதும் நிர்வகித்துக் கொண்டு வருகின்றன.

உத்தமவிஞ்ஞானி யெவனோ அவனுக்கும் தேகம் கிடையாது. இரதசாரதியைப்போல இருந்துகொண்டு இவன் விவகாரம்செய்துவருவன். இரதத்தைவைத்துக் கொண்டு தொழில்செய்பவனான சாரதி இரதவடிவமாகாததுபோலச் சுத்தசித்ரூபனான இவன் தேகவியவகாரங்கள் செய்தாலும் தேகவடிவனல்லன், வியவகாரியு



மல்லன். உன்னில் மிகவும் நிர்மலமான சுபாவத்தையுடையவனாகி இவன் பாகியத்தில் வியவகரிக்கின்றான். நாடகத்தில் ஸ்திரீவேஷம்பூண்டவன் இருவடிவம்பற்றியிருப்பதுபோலவும் சிறுவனுடன் விளையாடும்பொழுது பெரியவன் அந்தத் தோஷங்களின்றி யிருப்பதுபோலவும் நிர்மல இருதயனான உத்தமஞானி உலகத்தில் விளையாட்டாக வியவகரிக்கின்றான்.

மத்தியமஞானியின் அசையா நிலை அவனுடைய முதிர்ந்த சித்தநிரோதத்தால் உண்டாகின்றது. உத்தமஞானியின் அசையா நிலையானது சற்றும் சலியாத திட நிச்சயத்தைக் கொடுக்கக்கூடியதான அவனுடைய முதிர்ந்த விசாரத்தால் ஏற்படுகின்றது. புத்தியின் பரிபாகத்தின் ஏற்றக்குறைவுகளினால் மத்தியஞானியென்றும் உத்தமஞானியென்றும் வித்தியாசம் உண்டாகின்றது.

இதற்காக இரண்டுஞானிகளுக்கு நடுவே நடந்த ஒரு சம்பாஷணையை உனக்குச்சொல்லுகிறேன் கேட்கக்கடவாய். முன்காலத்தில் விபாசையென்ற நதிதீரத்தில் அமிருதபுரியென்னும் நகரியை இரத்னாங்கதன் என்ற பெயருடைய ஒரு பர்வதராஜன் ஆண்டுகொண்டிருந்தனன். அவ்வரசனுக்கு மகாத்துமாக்களும், நிர்மலப்பிராஞ்ஞர்களும், தந்தையிடத்தில் மிகப்பிரியமுடையவர்களுமான உருக்மாங்கதன், ஹேமாங்கதன், என்ற இரண்டு புத்திரர்கள் இருந்தனர். இவர்களில் உருக்மாங்கதன் சாஸ்திரங்களில் மிகத்தேர்ச்சியுடையவனாகவும், ஹேமாங்கதன் அதிவிஞ்ஞானியாய் ஞானிகளில் உத்தமனாகவுமிருந்தான். ஒருவசந்தகாலத்தில் இவ்விருவரும் வேட்டையாடும்பொருட்டு எல்லாச் சேனைகளுடனும் ஒருபெரிய வனத்திற்குச்சென்று அந்த அனே

கம் மான்களையும், புலிகளையும், முயல்களையும், கடாக்களையும், வேட்டையாடி மிகக்களைப்புற்றவர்களாகி ஒரு ஏரிக்கரையில்வந்து தங்கினார்கள். எல்லாச் சாஸ்திரங்களின் சாரத்தையும் கிரகித்தவனான ஒரு பிரம்மராக்ஷதன் அவ்வேரிக்கரையின் ஒரு பக்கத்திலிருக்கும் ஆலமரத்திலிருந்துகொண்டு வித்துவான்களிடத்தில் வெகுவாக வாதுபுரிந்தும் தோல்வியடைபவர்களைப் பக்ஷித்துக்கொண்டும் இவ்விதம் நெடுநாளாக அங்கிருந்தனன். வாதாடியாக இங்ஙனமொருவனிருக்கிறானென்று உருக்மாங்கதன் கேள்வியுற்றுத் தன் சகோதரனுடன் அங்கே சென்று வாதுபுரிந்து வாதத்தில் தோல்வியடைந்தான். பிரம்மராக்ஷதனால் உருக்மாங்கதன் பிடித்துக்கொள்ளப் பட்டனன். இதனைப் பார்த்து ஹேமாங்கதன் பிரம்மராக்ஷதனிடம் சொன்னதாவது, "ஹே, பிரம்மராக்ஷதா! இவனை நீ தின்றுவிடுவது தகுதியல்ல, இவன் தம்பியான என்னையும் ஜயித்துவிட்டு எங்களிருவரையும் பக்ஷித்துக் கொள்வாய்" என்றான். ஹேமாங்கதனுடைய இம்மொழிகளைக் கேட்டுப் பிரம்மராக்ஷதன் சொல்லுகின்றான். "ஆகாரம் கிடைத்து நெடுநாளாயிற்று, பசியானது மிகவும் பீடிக்கின்றது, இவனைக் கொண்டு பாரணை முடித்துவிட்டு உன்னுடன் வாது புரிகின்றேன். அதன்மேல் உன்னையும் ஜயித்துப் பின் எனக்கு உணவாகப் போகிற உன்னால் வெகு திருப்தியடையலாமென்று தீர்மானித்திருக்கிறேன். ஜயிக்கப் பட்டவர்களைப் பக்ஷணம் செய்யக் கடவாயென்று மகாத்துமாவான வசிஷ்டரிடம் வரம்பெற்று அவ்வாறு வெகு நாளாக நடத்தி வருகின்றேன். ஒரு தினம் வசிஷ்டரின் சீடனான தேவராதனென்பவன் இங்கு வந்து என்னால் பக்ஷிக்கப்பட்டதின்மேல் அந்தமகாத்து



மாவானவர் "இனி மனிதர்களைப் பக்ஷிப்பாயானால் உன் முகம் சாம்பலாகிவிடக்கடவது" என்று சாபமளித்தனர். அதனால் நான் முனியை மிகவும் பிரார்த்தித்ததின்மேல் உத்தமமான வரத்தைக் கொடுத்தார். அதாவது வாது புரிவதில் உன்னால் ஜயிக்கப்பட்டவர்களைப் பக்ஷிக்கக் கடவையென்று கூறினர். இவ்வாறு வாதத்தில் ஜயிக்கப்பட்டவரைப் பக்ஷிக்கின்றேன். அதன்பின் வெகுநாளான பிறகு எனக்குக் கிடைத்திருக்கும் இந்த உணவு சிரேஷ்டமானதால் இதனைப் புஜித்துவிட்டு இராஜனே, உன்னை வாதுபுரிந்து ஜயிக்கின்றேன்" என்றான்.

இவ்வாறு மொழிந்து பக்ஷிக்கமுயலும் இராக்ஷதனைப் பார்த்து ஹேமாங்கதன் சொல்லுகின்றான். "ஹே, பிரம்மராக்ஷதா! நான் சொல்வதைச் சற்றே கேள், மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். ஆயினும் வேறு எதனையாவது பெற்றுக்கொண்டு இவனை விட்டு விடுவாயா சொல்லு; அதனை உனக்களித்து என் சகோதரனை விடுவித்துக் கொள்ளுகிறேன்." என்றான். இங்ஙனம் மொழிந்ததின் மேல் பிரம்மராக்ஷதன் இராஜனிடம் பின்னும் சொல்லுகின்றான். "இராஜனே! கேள்; இவனை நான் விட்டு விடுவதற்குத் தகுந்தது ஒன்றுமேயில்லை. பசியெடுத்திருக்கும்பொழுது கிடைத்திருக்கும் பிராணனுக்குப் பிரியமான ஆகாரத்தை எவன்தான் தள்ளிவிடுவன்? ஆயினும் எனக்கு ஒரு பிரதிஞ்ஞையிருக்கின்றது. என் கருத்திற் சில பிரசினங்கள் (கேள்விகள்) இருக்கின்றன. அவைகளுக்குச் சரியான விடையளிப்பாயாயின் உன் பிராதாவை விட்டு விடுகின்றேன்" என்றனன். அதன்மேல் "அவைகளைக்கேள், நான் விடையளிக்கின்றேன்" என்று ஹேமாங்கதன்

கூறினன். இது சொன்னபொழுது பிரம்மராக்ஷதன் கூடமான பிரசினங்களை ஒன்றன்பின்னொன்றாக இராஜகுமாரனிடத்திற் கேட்டான். அவைகளைச் சொல்லுகிறேன் கேளாய் பார்க்கவா !—

### வினா விடை.

பிர. ஆகாயத்தைப் பார்க்கிலும் வியாபகமானதெது ?

ஹே. (a) சித்தானவள் ஆகாயத்தைப் பார்க்கிலும் வியாபகமானவள்.

பிர. பரமாணுவிலும் நுட்பமானதெது?

ஹே. பரமாணுவிலும் நுட்பமானவள் சித்து.

பிர. அவள் வடிவம் யாது?

ஹே. ஸ்புரிக்கின்றதே அவள் வடிவம்.

பிர. எங்கிருக்கின்றனள் அவள் ? இராஜகுமாரா சொல் ?

ஹே. தன் சொரூபத்திலிருக்கின்றனள்.

பிர. ஒருத்தியே பரவினவளாகவும், நுட்மானவளாகவும், எவ்விதம் ஆவள் ? ஸ்புரிக்கின்றதென்றால் என்ன? ஆத்மா யாது ?

ஹே. காரணத்தன்மை பற்றிப் பரவினவள், கிரகிக்கக் கூடாமையால் நுட்பமானவள், ஸ்புரிக்கின்றது உணர்வான ஆத்மாவன்றி வேறில்லை.

பிர. சித்தினை எவ்விடம் அனுபவிக்கலாகும் ? எவ்விதம் அது கூடும் ? அனுபவித்தால் பலன்யாது ?

---

(a) சித்து=பிரஹ்ம வடிவமான சாமான்னிய சைதன்யம். சித்தமானது திருசியங்களின் வடிவத்தை விட்டுவிடும்பொழுது தன்னாத்மாவான சின்மாத்திர வடிவத்தைக் கொள்வதே தன் ஏகாக்கிரம்.



ஹே. அனுபவிக்குமிடம் புத்தியின் ஸ்தானம். தன் ஏகாக்கிரத்தினால் அனுபவிக்கலாகும். அனுபவித்தால் பிறவி அகன்று விடும்.

பிர. உன்னாற் சொல்லப்பட்ட புத்தியென்பது யாது ? அதன் ஏகாக்கிரம் எவ்விதமானது ? பிறப்பென்பது என்ன? இவற்றைச்சொல்.

ஹே. ஜாட்டியத்தால் (ஜடசக்தியென்ற அவ்வியக்தத்தால்) சூழப்பட்ட சித்தே புத்தியாகும். தன்னிலே அமர்ந்தாறுவதே ஏகாக்கிரம். தேகத்தினிடம் தானென்றுவரும் புத்தியே பிறப்பென்னலாகும்.

பிர. யாது காரணத்தினால் சித்து அனுபவிக்கப்படவில்லை ? எவ்விதம் அதனை அடையலாகும் ? எவ்வாறு பிறப்புண்டாயிற்று ?

ஹே. அவிவேகத்தினால் அனுபவமில்லை, தன்னாலேயே (ஆத்மாவினாலே) அனுபவிக்கப் படுகிறது. செய்கிறேனென்ற அபிமானத்தால் பிறப்புண்டாகிறது.

பிர. நீ மொழிந்த அவிவேகமென்பது என்ன ? அவ்விதமே, தானென்றது (ஆத்மாவென்றது) யாராகும் ? செய்கையில் அபிமானமென்பது யாது ?

ஹே. ஒன்றை மற்றொன்றாகக் கருதுவதே அவிவேகம். தன்னை (ஆத்மாவை) யறியத்தன்னையே (a) கேள். வாசனையினால் அபிமானம் உண்டாகின்றது.

பிர. அவிவேகம் எது பற்றி அறும் ? அதற்கும் எது காரணம்? இக்காரணத்திற்கும் எது காரணம் ?

---

(a) தன்னைத் தன்னாலேயே அறியவேண்டுமென்பது கருத்து.

ஹே. விசாரத்தினால் அவிவேகம் நசிக்கின்றது. வைராக்கியம் விசாரத்திற்குக் காரணமாகும். இதற்குக் காரணம் தோஷ திருஷ்டியே.

பிர. விசார மென்பது எது? வைராக்கியம் என்று கூறப்படுவது யாது? தோஷ திருஷ்டியென்று எதனைச் சொல்லலாகும்?

ஹே. திருக்கையும் திருசியத்தையும் சோதித்துப்பார்ப்பதே விசாரம். திருசியம் வேண்டாமையே வைராக்கியம். திருசியத்தில் துக்க புத்தியுண்டாவது தான் தோஷதிருஷ்டி.

பிர. இவையெல்லாம் எதனால் உண்டாகும்? இதனையும் எவ்வித மடையலாகும்? இதனிடத்தும் நிதானம் யாது?

ஹே. தேவதானுக்கிரகத்தினால் இவையாவு முண்டாகும். இதுவும் பக்தியினால் அடையப் படுகின்றது. இந்தப் பக்திக்கும் சாது சங்கம் ஒன்றே நிதானமாகும்.

பிர. தேவதையென்று சொல்லப் பட்டவர்யாவர்? பக்தியென்று கூறியதுயாது? சத்துக்கள் எவ்வித மிருப்பவர்கள்?

ஹே. ஜகத்தை நடத்துபவனே தேவதை.* தத்பரதையே பக்தியெனப்படும். சாந்தராகவும் தயையுடையவராகவு மிருப்பவரே சத்துக்கள்.

பிர. உலகத்தில் எந்தநேரமும் பயப்படுகிறவன் யார்? எந்நேரமும் துக்கப் படுகிறவன் யாவன்? எப்பொழுதும் எளியோனா யிருப்பவன் எவன்?

* தத்பரதை = அதனிற் பரனாயிருப்பது = மிகப் பிரியமுடையவனாக விருப்பது = ஊக்கம்.



ஹே. மகா தனவான் எந்நேரமும் பயப்படுகிறவன். வெகு குடும்பமுடையவன் துக்கிதனாவன். ஆசை பிடித்தவன் எப்போதும் எளியனாக இருப்பவன்.

பிர. உலகத்தில் பயமில்லான் எவன்? யார் துக்கமில்லா திருப்போன்? எப்போதும் எளியோனல்லா திருப்பவன் யாவன்?

ஹே. பற்றில்லாதவனே பயமற்றவன். மனதை ஜயித்தவனே துக்கமற்றோன். அறியவேண்டியதை அறிந்தவனே எளியனல்லா திருப்பவன்.

பிர. உலகத்தில் எவனைக் குறிப்பிட்டறிவது அரிது? யாவன் தேகமில்லாதவனாகக் காணப்படுகின்றான்? எச்செய்கை செய்யாமை யாகும்?

ஹே. ஜீவன் முக்தன் குறிப்பிடத் தகாதவனாவன். அவன் தேகவானாக விருந்தாலும் விதேகன். அவனுடைய செய்கை செய்யாமை யெனப்படும்.

பிர. உலகத்தில் எது இருக்கின்றது? எது இல்லை? எது மிகவும் கூடாதது?—இவைகளுக்கு விடையளித்துவிட்டு இராஜகுமாரா உன் தமையனை மீட்டுக்கொள்வாய்.

ஹே. திருக்கு இருக்கின்றது. திருசியம் இல்லை. விவகாரம் கூடாதது.—விடை யளித்து விட்டேன். பிரம்மராக்ஷதனே என் பிராதாவைச் சீக்கிரம விட்டுவிடும்.

இவைகளைக் கேட்டதின்மேல் சந்தோஷமுற்றவனாகிப் பிரம்மராக்ஷதன் உருக்மாங்கதனை விட்டுவிட்டு அதன்பின் தான் பிராமணனாகப் பவித்தனன்.

தேஜசுடைய தபசிபோல விளங்கா நின்ற பிராமணவடிவத்தைக்கண்டு இராஜகுமாரர்கள் சந்தேகம்

கொண்டவர்களாகி, நீர் யாரென்று கேட்டார்கள். அதன்மேல் அம்மறையோன், தன் விருத்தாந்தத்தை உண்மையாக நடந்தபடி கூறினன். "நான் முன்காலத்தில் மகததேசத்தில் வசுமான் என்ற பெயர்வழங்கச் சகலசாஸ்திரங்களும் உணர்ந்து கேள்வியுற்ற பிராமணனாகவிருந்தேன். ஆயிரக்கணக்கான வித்துவான்கள் வித்தியாபிமானங்கொண்ட என்னால் சபையில் அடிக்கடி வெல்லப்பட நான் மிகவும் கர்வங்கொண்டவனாக இருந்தேன். ஒருகாலத்தில் மாகதராஜனுடைய சபையில் வைத்துப் பராவரஞானியும் சாந்தசீலருமான அஷ்டகர் என்ற முனியுடன், ஆத்மவித்தையை விசாரிப்பதில் வாதப்பிரியனும் சுஷ்கதர்க்கத்தில் நிபுணனுமான நான் வாதுசெய்யமுயன்றேன். அதன்மேல் கேவலம் தர்க்கயுக்திகளாலே அவர் என்னால் ஆக்ஷேபிக்கப்பட்டனர். வெகு ஆகமங்களின் கருத்திசைந்த அவர் மொழிகளை அநேக தர்க்கயுக்திகளால் தூஷணை செய்து தள்ளிவிட்டேன். பலவாறாக என்னால் ஆக்ஷேபிக்கப்பட்டபொழுது இராஜசபைக்கு வந்தவரான அந்தச் சாந்தசீலர் ஒன்றும் பேசாதிருந்து விட்டனர்.

அதன்மேல் அம்மகாத்துமாவின் சீடனான காசிபன் கோபம் கொண்டவனாகி இராஜசபையில் வைத்து என்னைச் சபித்தனன். "ஏ, துவிஜாதமா! என் ஆசாரியனைத்தகுந்த காரணமின்றி * அதிக்ஷேபம் செய்கின்றாயாதலால் நெடுநாள் பிரம்மராக்ஷதனாகப் பவிப்பாய்" என்றனன், அவனால் இவ்வாறு சபிக்கப்பட்ட வேளையில் மிகவும் பயங்கொண்டு தடுமாறி அஷ்டகமுனியைப் பணிந்து சரணமடைந்தேன். சாந்த சீலரான

*அதிக்ஷேபம் = தூஷணை.



அம்முனிவர் நான் விரோதியாக இருந்ததைப் பாராட்டாமல் என்மேல் தயைகூர்ந்து சாபத்திற்கு முடிவை அளித்தனர். அஃதெவ்வாறெனில் சொல்லுகிறேன் கேள் "உன்னால் என்னிடம் கேட்கப்பட்டனவும் என்னால் விடையளிக்கப் பட்டனவும் உன்னால் மறுத்துக் கேவல தர்க்கத்தினால் ஸ்தாபிக்கப் பட்டனவுமான வினாக்களுக்கு எப்பொழுது ஒரு வித்துவான் சமாதானம் சொல்லுகின்றானோ அப்பொழுது சாபத்திலிருந்தும் விடுபடுவாய்" என்றனர். அந்தச் சாபத்திலிருந்தும் உன்னால் இன்று விடுபட்டவனானேன். இராஜகுமாரா, அதுபற்றி அறியவேண்டியதை அறிந்த மானிடரில் உத்தமனான மகாத்துமாவென்று உன்னைக் கருதுகின்றேன்."

அந்தப் பிராமணன் இவ்வாறு சொன்னதைக் கேட்டு இராஜகுமாரன் ஆச்சரியமடைந்து பின் பிராமணன் கேட்டவைகளுக்கெல்லாம் சமாதானங்கூறிச் செம்மையாகப் போதனை செய்து வசுமானுக்கு நமஸ்காரம் பண்ணி அவனையும் அழைத்துக்கொண்டு தன் தமையனோடும் சேனைகளோடும் தன் நகரம்வந்து சேர்ந்தனன். பார்க்கவா! நீ கேட்டவைகளுக்கெல்லாம் இவ்வாறு விடையளித்திருக்கிறேன்.

ஸ்ரீ திரிபுரையின் இரகசியம் ஞான
காண்டத்தில் இராக்ஷசோபாக்கியான மென்ற
இருபத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம்–22

இவ்விதமாக இராக்ஷதன் கதையைப் பிருகுகுல திலகனான இராமன் கேட்டு மிக வணக்கத்துடன் அவதூத சிகாமணியானவரைப் பின்னும் கேட்கின்றான். "பகவானே! சாபத்தில் நின்றும் விடுபட்ட அந்தப் பிராமணன் பின் யாதொன்றைக் கேட்டனன், அதற்கு ஹேமாங்கதன் சொன்னவை எவை? இவைகளை அடியேனுக்குக் கிருபை கூர்ந்து அருளவேண்டும். அவர்கள் சம்பாஷணை சொற்பமன்றாதலால் அதனைக் கேட்க மிகவும் விருப்ப மிருக்கின்றது."

இவ்விதம் கேட்டதும் தத்தாத்திரேயர் தயையுடன் சொல்லுகின்றார். "இராமா! மகா அர்த்தம் பொருந்திய அவர்களுடைய சம்பாஷணையை உனக்குச் சொல்லுகிறேன்" பிற்பாடு தன் அருகே யிருந்த ஹேமாங்கதனை வசுமான் கேட்டதாவது "இராஜபுத்திரா! நான் சில கேட்கின்றேன், சொல்லவேண்டும். நான் அஷ்டக யோகீந்திரரிட மிருந்தும் பரமாத்ம தத்துவத்தை முதலில் தெரிந்து கொண்டவனானேன். பின்னிட்டு உன் வசனங்களி லிருந்தும் பரமபதத்தைச் செம்மையாக அறிந்து கொண்டேன். ஆனாலும், தத்துவ உணர்ச்சியுடைய உன்னுடைய ஸ்திதி இவ்விதமானது எப்படி? செம்மையாக அறிய வேண்டியதை அறிந்தவன் எவ்விதம் வியவகாரத்தில் பிரீதியுடையவனாக விருப்பன்? இருளும் பிரகாசமும் போல ஓரிடத்தில் இரண்டும் பொருந்துமா? இராஜகுமாரா! இவைகளை நான் செம்மையாகத் தெரிந்து கொள்ளுமாறு



உள்ளபடி சொல்லவேண்டும்." இங்ஙனம் கேட்கவே பிராமணோத்தமனிடத்தில் ஹேமாங்கதன் சொல்லுகின்றான். "பிராமணரே, உமது பிராந்தியானது இன்னும் நன்றாக ஒழிய வில்லை. விவகாரத்தினால் தன் ஆத்மசம்பவமான (a) எந்த ஞானம்

---

(a) விவகாரத்தினால் சொரூப ஞானத்திற்கு ஹானியா அல்லது அஞ்ஞானத்தை நாசம் செய்வதான 'ஸோஹம்' என்ற பிரத்திய பிஞ்ஞையான விசேஷ ஞானத்திற்கு ஹானியா என்ற சங்கைக்கு முதல் ஞானத்திற்கு இன்று விவகாரத்தினால் சொரூப ஞானத்திற்கு ஹானி வருமானால் அந்த ஞானம் சொப்பன ஞானத்திற்கு நிகராகி அசத்தியமாகிவிடுமாதலால் முமுக்ஷுவிற்குத் தன் சொரூப நாச மேற்படும். அதனால் புருஷார்த்தமான மோக்ஷம் யாருக்கு எவ்விதமுண்டாகும்? இரண்டாவது, அஞ்ஞானத்தை நாசம் செய்வதான விசேஷ ஞானம் இருவகைப்படும். (1) சொரூபத்தை நிவிர்த்தி செய்வது (2) பிரமாண மன்று என்று நிரசித்தல். இவற்றில் சொரூபம் க்ஷணிக வடிவமாகையால் நிவிர்த்தி செய்வதின் அபேக்ஷையில்லை. தன் மனதிலுண்டாகும் சங்கற்பங்களாலும் விஷயங்களைப் பற்றி விவகரிப்பதாலும் மறைபட்டது போன்ற தன் சொரூபத்தைச் சிரவணத்தினால் பரோக்ஷமாக அறிந்து நிதித்தியாசனவடிவச் சங்கற்பத்தினால் ஸ்வயமாக அனுபவித்துப் பின் புத்தியினால் செம்மையாக (ஸோஹமென்று) குறிப்பிட்டுணர்ந்து கிருதார்த்தனாகின்றான். இப்படிச் செம்மையாக குறிப்பிட்டுணரும் பிரத்திய பிஞ்ஞை ஞானத்தினால் அவித்தை நாசமாவதால் பந்தத்திலிருந்தும் நீர விடுபடுகிறான். அதனால் பின் பாதிக்கக் கூடாத விகற்பங்கள் உதியாவாகையாலும் பிரமாணமன்று என்று நிரசித்தல் உண்டாகா தாகையாலும் விவகாரத்தினால் விசேஷ ஞானம் பாதிக்கப் படுகிறதில்லை. கிருதார்த்தனானவனுக்கு சொருபத்தை நிவிர்த்தி செய்து கொள்வது என்பதும், திருசியங்களை அப்பிரமாணம் என்று நிரசித்தலும் அனாவசியகமென்று கருத்து.

பாதிக்கப் படுகின்றது? விவகாரத்தினால் சொரூப பூதமாயிருக்கின்ற ஞானம், பாதை செய்யப்படுமானால் புருஷார்த்தத்திற்குப் பிரயோஜனம் யாது? சொப்பன ஞானம்போல அந்த ஞானம் அசத்தியமாகி விடு மன்றோ? சகலமான இந்த விவகாரங்களும் ஞானத்தை ஆசிரயித்து நடக்கிறபடியால் அவ்விவகாரங்களால் அந்த ஞானம் எவ்விதம் பாதிக்கப் படுகிறது? இதை நீர் சொல்லவேண்டும். எதனிடமாக இந்த ஜகத்தானது விளங்குகின்றதோ அதுவே ஞானமெனப்படும். சங்கற்பங்களினாலேயே விவகாரங்கள் உண்டு. ஞானத்தில் யாவும் விளங்குகின்றன. சங்கற்பத்தை ஒழித்துச் சொரூபத்தைப் புத்தியினால் செம்மையாகக் குறிப்பிட்டுணர்ந்தவன் பந்தத்திலிருந்தும் விடுபட்டுக் கிருதார்த்தனாகின்றானென்பது திண்ணம். ஆகையினால், பிராமணரே, உம்முடைய இந்தப்பிரசினமானது புத்திமான்களுக்குச் சம்மதமானதன்று" என்றுசொல்ல மறுபடியும் மகாசயனான இராஜகுமாரனை வசுமான்கேட்கின்றான் "இராஜகுமாரா! இது உண்மைதான். நானும் இவ்வாறே தீர்மானிக்கிறேன். சொரூபமானது, நிர்விகற்பமானது; அது ஸம்வேதன * மென்று சொல்லப்படும். சவிகற்பம் உண்டாகும்பொழுது பின்னும் பிராந்தி ஏன் உண்டாகமாட்டாது? இரஜ்ஜுவில் பாம்பு தோற்றுவதுபோல விகற்பமே பிராந்தியாகும்."

"பிராமணரே, கேளும். பிராந்தி யின்னதென்றும் பிராந்தியின்மை யின்னதென்றும் நீர் அறிந்தவரல்ல. ஆகாயத்தின் உண்மை தெரிந்தவர்களுக்கும் ஆகாயம்

---

* ஸம்வேதனம் = அறிவு.



நீலமாகத் தோற்றுகிறபடியால் ஆகாயம் நீலமென்று சிலவேளையில் விவகாரம் செய்கின்றனர். அப்படிப்பட்ட விவகாரத்தினால் அவர்களது ஞானம் பிராந்தியானதென்று கூறப்படுகிறதில்லை. உண்மை அறியாதவர் விஷயத்தில் அது பிராந்தியாகும். தத்துவஞ்ஞர் விஷயத்தில் அது ப்ரமா, எனப்படும். பிரமாணம் என்ற உயிர்நிலையையிழந்த அந்த ஞானமானது செத்த பெரும்பாம்புக்கு நிகராகும். அவன் விவகாரமும் கண்ணாடியிற்கண்ட பிரதிபிம்பத்தைப்பற்றி விவகரிப்பதுபோலவாகும். ஆகையினால் ஆகாயத்தின் உண்மை அறிந்தவனுக்கும் அஃதறியாதவனுக்கும் ஆகாயம் நீலமாயிருக்கிறதென்ற ஞானத்தில் வித்தியாசமிருக்கின்றது. அறிந்தவனுக்கு அந்த ஞானம் ப்ரமாவெனப்படும் (ப்ரமா), அறியாதவனது ஞானமானது பிராந்தி (ப்ரமா) எனப்படும். ஞானிகளின் விவகாரங்களெல்லாம் ஞானமேயாகும். கண்ணாடியிற் காணும் பிரதிபிம்பங்களைப்பற்றிய விவகாரங்கள் போல்வாம். ஆகையினால் அபிஞ்ஞர்களுக்குப் பின்னும்பிராந்தி உண்டாகமாட்டாது. கேவலம் அஞ்ஞானத்தினால்மட்டிலும் ஏற்பட்டதானது ஞானத்தினால் நிவிர்த்தியாகிவிடும். தோஷத்தினால் உண்டானது எவ்விதம் ஞானத்தினால் மட்டிலும் நிவிர்த்தியாகக்கூடும்? இதுபோலவே திமிரரோகமுடையவனும் உண்மை தெரிந்தவனாக விருந்தும் இரட்டையைப் பார்க்கின்றான். ஜகத்தின் இத்தோற்றமானது கர்மதோஷத்திலிருந்தும் உற்பன்னமானது. ஆகையினால் கர்மம் ஒடுங்குகிறவரையில் விவகாரம் இலயப்படாது. கர்மங்கள் ஒடுங்கிவிடுமானால் பின் இரண்டற்ற சின்மயம் மிஞ்சியிருக்கும். ஆகையினால் விஞ்ஞானிகளுக்கு ஒருபொழுதும் பிராந்தியில்லை.

இதனைக்கேட்டு விப்பிரனானவன் இராஜபுத்திரனைப் பின்னும் கேட்கின்றான். "அஹோ, மன்னவன் மைந்தனே! ஞானிகளுக்குக் கர்மசேஷமேது? ஞானாக்கினியின் சேர்க்கையிருந்தும் கர்மமென்ற பஞ்சு அவர்களிடத்தில் எவ்வாறு நிலைகொள்ளும்?"

அப்பொழுது இராஜகுமாரனான ஹேமாங்கதன் விப்பிரரிடத்தில் மொழிந்ததாவது. "பிராமணரே, சொல்லுகிறேன் கேளும். ஞானிகள் எல்லோருக்கும் ஒன்றுபோலிருக்கும் கர்மமானது மூன்றுவகைப்படும். அபக்குவமென்றும் பக்குவமென்றும் ஹதோதிதம் என்றுமாம். இந்த மூவகையில் நடுவொழிந்த மற்ற இருவகைக் கர்மங்களும் ஞானத்தினால் நாசமாகின்றன. ஈசனது நியதியினால் நியமிக்கப்பட்டுக் காலமானது கர்மங்களைப் பக்குவப்படுத்துகின்றது. காலத்தினால் பாசிதமான கர்மம் பக்குவமென்று கூறப்படும்.

அபாசிதமான கர்மம் அபக்குவமெனப்படும். ஞானம் உற்பன்னமானதின் பிறகு செய்யப்படும் கர்மங்களை ஹதோதிதமென்றறியவேண்டும். ஏனென்றால் இக்கர்மங்கள் உதயமாகும்பொழுதே ஞானத்தினால் ஹதமாகிவிடுகின்றன. இவைகளில் பக்குவமானகர்மமே பிராரப்த கர்மமென்று சொல்லப்படும். இக்கர்மம் விடுபட்ட பாணம்போல் தன்வேகமுள்ளவரையில் பலனைக் கொடுத்துக்கொண்டு நிலைபெற்றிருக்கும். இப்பிராரப்த கர்மத்தின்மூலமான ஜகத்தின் தோற்றமானது ஞானத்தின் பரிபாகத்திற்குத் தகுந்தபடியாகிப் பிராந்திக்கு நிகராகவிருந்தாலும் பலன்களுடைய பேதத்தினால் இது பிராந்தியாக மாட்டாது. ஜகத்தானது தோற்றுங்காலத்தில் மந்தஞானிகளுக்குச் சுகம்முதலிய வடிவமான பலன்கள் ஸ்பஷ்டமாகத் தோற்றப்படும். மத்திம



(a) ஞானிகளுக்கும் அவ்வேளையில் பலன்களின் தோற்றம் ஸ்பஷ்டமாகும். உத்தம ஞானிகளுக்கு அக்காலத்தில் பலன்கள் ஸ்பஷ்டமாகத் தோற்றினாலும் அவைகள் அவர்களுக்கு முயலின் கொம்புக்கு நிகராகுமாதலால், பிராமணரே,—அவைகளைப் பலன்களென்னலாகாது. அஞ்ஞானிகளுடைய கர்மபலனானது நிறைந்த அனுசந்தானத்தால் புஷ்டமானது. முன்னும் பின்னும் நன்றாய்ச்செய்யும் அனுசந்தானங்களால் அந்தப் பலனானது அஞ்ஞானிகளால் போஷிக்கப்படுகின்றது. (மந்த) ஞானிகளுக்குப் பலனிடத்திலுண்டாகும் அனுசந்தானம் ஆத்மானு சந்தானங்களால் சின்னமாகிவிடுகிறபடியினால் அவர்களுக்குப் பிராரப்தத்தினால் உற்பன்னமாகும் பலனானது புஷ்டமாகின்றதில்லை. மத்திம ஞானிகளுக்கு இந்தப் பிராரப்த பலனானது ஒருவனுக்கு இளஞ்சுழுத்தியில் மசகங்களால் ஏற்படும் துக்கம்போலச் சூக்ஷ்மமாக விருக்கும். (b) உத்தம ஞானிகளுக்கு அப்பலனானது முற்கூறியதுபோலவே

---

(a) மத்திம ஞானிகளுக்கு ஜகத்துத்தோற்றும்பொழுது பலன்களின் தோற்றம் மந்த ஞானிகளைப்போலவாகும். மற்றப்பொழுது இளஞ்சுழுத்தியில் மசகங்கள் கடிப்பதாலும், காற்று வீசுவதாலும் உண்டாகும் சுகதுக்கங்களின் உணர்ச்சி போலவாகும்.

உத்தம ஞானிகளுக்கு ஜகத்து தோற்றும்பொழுது உண்டாகும் சுகம் முதலிய பலன் அன்னிய திருஷ்டியாக ஸ்பஷ்டமாக விளங்கினாலும் தன் சுயதிருஷ்டியில் அவை முயற்கொம்புபோன்றதாகையால் பலனாகமாட்டா.

(b) பாகிய சமாதியுடைய உத்தம ஞானியானவன் மற்றவர்களுடைய திருஷ்டியில் சுகியாகவும் துக்கியாகவுமிருந்தாலும் திருசியங்களால் ஏற்படும் பலனானது அவனுக்குத் தன்னுடைய திருஷ்டியால் தக்தரஜ்ஜுப் போலவாகும்.

யிருந்து, கருகிய கயிறுபோல ஆகிவிடும். ஏனென்றால் எப்போதும் நழுவாமல் ஆத்மானுசந்தானத்திலிருக்கும் அவனுடைய வைபவத்தினாலே தான். நாடகத்தில் ஒருவன் பற்பலவேஷங்கள் பூண்டு அடிக்கடி சந்தோஷமடைந்தவனாகவும் துக்கப்பட்டவனாகவும் காண்பித்துத் தன் உள்ளத்தில் கலக்கமற்றிருப்பதுபோல ஞானியானவன் எல்லாப்பலனையும் நன்றாக அடைந்திருந்தும் அப்பலன்களால் ஸ்பரிசிக்கப்படுகிறதில்லையாதலால் அப்பலனானது முயற்கொம்புபோலவாகும். அஞ்ஞானிகளால் சுத்தாத்மாவானது குறிப்பிடப்படாமலே யிருக்கின்றதனால் அவர்கள் தேகமயராயும் திருசியத்தை மெய்யென்று கருதுபவராயு மிருத்தலால் அவர்களுக்குப் பலனிடத்தில் பற்றுதலும் அபிமானமுமுண்டு. மந்த ஞானிகளால் ஆத்மாவானது சுத்தசின்மயமென்றும், ஜகத்துப் பொய்யென்றும் அறியப்பட்டிருந்தாலும் அவர்களுடைய அப்பியாசம், மந்தமானதால் பூர்வவாசனையினால் விச்சின்னமான ஞானானுசந்தான முடையவர்களாக அவர்களுக்குத் தேகம் தானென்ற தோற்றமும் ஜகத்துமெய்யென்ற கருத்தும் இடையிடையே உண்டாகும். பின் தங்கள் ஞான வாசனையினால் அசத்தான திருஷ்டியை அகற்றுகின்றனர். இவ்வாறாகச் சத்திய ஞானமாகவும் அசத்திய ஞானமாகவும் மந்த ஞானிகளின் வாசனையானது ஒன்றோடொன்று கலந்திருக்கின்றதனால் அவர்களுக்கு இடையிடையே பலனானது ஸ்பஷ்டமாக விளங்கும். அந்தணரே, கேளும். இருவிதவாசனைகளும் சமமாயிருந்தாலும் அவைகளின் செய்கைகளினால் வேற்றுமைப்பட்டன. சத்திய ஞானவாசனையினால் அசத்திய ஞானமான அவித்தியாவாசனை பாதிக்கப்படுகின்றதே



யன்றி மித்தியாவாசனையினால் பத்தியவாசனை பாதிக்கப்படுகிறதில்லை. மித்தியாவாசனை பாதிக்கப்பட்டிருந்தாலும் அப்பியாசம் பூரணமாகாததுபற்றிப் பின்னும் உதிக்கின்றதனால் மந்த ஞானி மித்தியா வாசனையை அடைகிறான். பின் அந்த மித்தியாவாசனையைப் பிரமையென்று நிச்சயம் செய்துகொண்டு அதனை ஒழித்துச் சத்தியவர்சனையை அடைகின்றான். ஆகையினால் சத்தியவாசனை ஒருபொழுதும் பாதிக்கப்படுகிறதில்லை.

மத்தியமனுக்குச் சத்தியவாசனையின் மறைப்புமில்லை, மித்தியா (a) ஞானமுமில்லை. அவனுக்குத் தன் சத்தியஞானம் மறைவாகாமலே விவகாரத்திற்குவேண்டியமித்தியா ஞானம் சுய இச்சையினாலேயே உண்டாகின்றது. இங்ஙனம் கூறியது சித்தனது நிலைமையாகும். சாதகனது நிலைமை இனிச்சொல்லுகிறேன் கேளும். எந்தெந்தவேளையில் சமாதி அப்பியாசம் செய்யவேண்டுமென்று முயலுகின்றானோ அவ்வேளைகளில் அவனுக்குத் (b) திடமான மறதியிருக்குமென்று கருதவேண்டும். சமாதியப்பியாசத்தில் தேர்ந்தவனான பூரணனுக்கு மித்தியா ஞானத்தின் ஸ்மிருதியில்லை. அவனுக்கு மித்தியா ஞானம் பிரயத்தனத்தாலுண்டாகின்றது.

பிராமணரே! பின் உத்தம ஞானியின் சமாதிக்கும் விவகாரத்திற்கும் சற்றுமே வித்தியாசமென்பதில்லை. ஏனென்றால் அவனுக்கு எந்நேரமும் மறைப்பில்லை. சமாதியின்கண் பிரியனாகவிருக்கும் மத்திம

---

(a) மித்தியா ஞானம் = விஷய ஞானம் = அவித்தியா வாசனை.

ஸத்தி அடைந்த மத்தியமஞானி

(b) மித்தியாஞானத்தின் மறதி.

னுடைய மறைப்பின்மையானது மித்தியா ஞானபூமியதன வியவகாரகாலங்களில் சற்றே மலின மடைந்துவிடும். பூசுரரே! உத்தமஞானி சுய இச்சையினாலாவது பிராரப்தத்தினாலாவது வியவகாரபரனாகும் வேளையிலும் அவனது மறைப்பின்மையானது, மலினமற்றேயிருக்கும். பூதேவரே! கேளும். வாஸ்தவத்தில் மத்திம ஞானிகளுக்கும் உத்தமஞானிகளுக்கும் கர்மமானது சற்றுமேயில்லை. ஏனென்றால், அவர்கள் பூரண நிலையைச் சார்ந்தவர்கள். (a) ஸம்வித்தான ஆத்மாவிற்குப் புறம்பாகச்சற்றாவது இருப்பதாக அவர்கள் கருதுவதில்லை. சிதக்கினியினால் யாவும் சாம்பலாகிவிடும் பொழுது கர்மமானது எவ்விதம் மிஞ்சியிருக்கக்கூடும். (b) ஆகையினால் அவர்களுக்குக் கர்மமானது சற்றுமே சேஷித்திராது. இவர்களுடைய செய்கைகள் மற்றவர்களாற் பார்க்கப்படும் இந்திரஜாலக்காரனுடைய செய்கைகளைப் போலவேயாகும். முடிவாக நான் சொல்லும் இரகசியத்தைக் கேளும், பிராமணரே! சிவனுக்கு எத்தகைய திருஷ்டியுண்டோ அவ்வாறே ஞானிகளின் திருஷ்டியுமாம். இவர்கள் திருஷ்டிகளிற் சற்றேனும் பேதமில்லையென்பது சங்கையறச் சத்தியமேயாகும். ஆகையினால் ஞானிகளுக்குச் சற்றுமே கர்மம் மிஞ்சியிராது."

ஹேமாங்கதன் இவ்வாறாக நிரூபணைசெய்ததை வசுமான்கேட்டு எல்லாச் சந்தேகங்களும் ஒழிந்தவ

(a) பூரணத்துவம் அடைந்தவருக்கு என் பிராரப்தமில்லை என்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம். யாதொரு காரணத்தினால் மத்திம ஞானிகளும் ஸம்வித்தான ஆத்மாவிற்கு அன்னியமாகச் சற்றேனும் காண்கிறதில்லையோ அதனால் அவர்களுக்கு பிராரப்தமில்லை.

(b) அனுபந்தத்தை நோக்குக.



னாய் விஞ்ஞானத்தால் தெளிவடைந்த உள்ளமுடையவனாகி இராஜகுமாரர்கள் முதலானோரால் பூஜிக்கப்பட்டுத் தன்னிருப்பிடம் சென்றனன். அதன்பிறகு இராஜகுமாரர்களும் தங்கள் நகரத்தை அடைந்தார்கள்.

இங்ஙனம் கேட்டுப் பின்னும் அத்திரிகுமாரனான முனியைப்பார்த்து இராமன் சொல்லுகின்றான்: "குருவே தங்கள் வாக்கிலிருந்தும் இந்த விஞ்ஞானத்தைக் கேட்க என் சந்தேகங்கள் நஷ்டமாயின. அந்த மகத்தானபதவி என்னால் அறிபப்பட்டது. யாவற்றிலும் நிறைந்த ஸம்வித்தொன்றே என் ஆத்மவடிவமாக நான் உள்ளிலும் புறம்பிலும் விளங்குகின்றேன். ஆயினும், தாங்கள் ஆதிமுதற்கொண்டு மொழிந்த சாரமான விஞ்ஞானம் யாவற்றையும் நான் செம்மையாகத் தாரணை செய்யும்பொருட்டு ஏ குருநாதா! சுருக்கமாக இன்னும் ஒருதடவை சொல்லவேண்டுகின்றேன்" என்றான். இராமன் இங்ஙனம் கேட்டவேளையில் அத்திரியின் புதல்வன் பின்னும் சொன்னதாவது, "இராமா! யாவற்றிற்கும் மிகச் சாரமானதைச் சொல்லுகிறேன் கேட்டுக்கொள். பரமேசுவரியும், பூர்ணாகந்தையுடையவளும் பரையுமான யாதொரு சித்ரூபியிருக்கின்றனளோ அவள் எப்பொழுதும் தன் சுதந்தரம் என்ற பெயருடையதான மாயா சக்தியின் மகிமையினால் கண்ணாடியில் பிரதிபிம்பம் போலத் தான் ஒரேவிதமாகவிருந்தும் தூர்க்கடமான ஜகத்தைத் தோற்றுவிக்கின்றனள். இதன் கிரமமெவ்விதமென்றால் கேள். பூரணியும் (a) பூர்ணாகந்தை

(a) சித்தினிடம், ஜடத்திலிருந்தும் பிரித்தறிவதற்காகச் சிலதர்மத்தை அங்கீகரிக்கவேண்டியது. அதுசொரூபத்தின் ஸ்பூர்த்தியேயாகும். ஸ்பூர்த்தி உலகில் இருவிதம். நானென்றும் இதுவென்றுமாம். இங்கு இதுவென்ற ஸ்பூர்த்தி பா

யினால் கனவடிவு கொண்டவளுமான யாதொரு பராசித்திருக்கின்றனளோ அவள் தன் சுதந்தரத்தை முன்னிட்டுத் தன் ஆத்மரூபத்தை இருவிதமாகவிளங்கும்படி செய்கின்றாள். தன் சொரூபத்தினிடமாக ஒரு அம்சத்தில் எப்பொழுது அபூரணமான அகந்தை

---

தந்திரத்தைச்சார்ந்து அன்னியத்தை அபேக்ஷித்திருப்பதால் அனவஸ்தைக்குக் காரணமாகும். ஆதலால் சித்தினிடத்திலேயே 'நான்' என்ற ஸ்பூர்த்தி பொருந்தும். இந்த "நான்" என்ற ஸ்பூர்த்தியானது காலம் முதலியவற்றால் பரிச்சின்னப்பட்டதனால் தேகம் முதலியவற்றில் அபூரணமானது. காலம் முதலிய சகலத்திற்கும் சொரூபமான சித்தினிடம் 'நான்' என்றது அடையும்பொழுது பூரணமாகும். இதுகாரணமாகத்தான் பூரணாகந்தையுடையவள் எனப்பட்டது.

அகண்டரூபியானவளே இவ்விதம் உபதேசகாலத்தில் பிரித்துக் கூறுவது சொரூபத்தின் பரிசய முண்டாகும் பொருட்டாம். பராசித்தானவளுக்குத் தனக்கன்னியமான திருசியத்தில் ஆறுதல் உண்டாகும்பொழுது அது இதந்தையாகும் (இதுவென்ற தன்மையுடையதாகும்). திருசியத்திலிருந்தும் திரும்பிச் சொரூபத்தினிடம் ஆறுதல் உண்டாவது 'அகந்தையாம்' (நானெனல் ஆகும்) பூரணாகந்தையே சிருஷ்டிக்குமுன் இச்சை வடிவாகச் சுதந்தரமென்றும் சிருஷ்டி காலத்தில் கிரியைவடிவாக மாயையென்றும் சொல்லப்படும். கிரியையென்பது சலனரூபமுமன்று, பரிணாமரூபமுடையதுமன்று. கண்ணாடியில் பிரதிபிம்பங்களின் தோற்றம்போலத் தோற்றுவித்தலே கிரியையாகும். இவ்விதம் பூரணாகந்தை சுதந்தரம் மாயை என்பவையே ஞான, இச்சா, கிரியா சக்திகளாகும். எப்பொழுதும் = பூரணாகந்தை சொரூபமேயாதலால் ஜகத்தின்தோற்றத்திற்கு காலத்தினால் பரிச்சேதயில்லை. இரண்டு அம்சங்களானதும் பாகியத்தின் தோற்றத்தால் பரிச்சின்னமான அகந்தையுடைய சித்தின் அம்சத்தின் திருஷ்டியாலேயேயன்றிப் பூரணசித்தின் திருஷ்டியாலன்று.



தோற்றுகின்றதோ அப்பொழுது இரண்டாவது அம்சமானது அவ்வித அபூரணாகந்தையின்றியதாகி, இதுவே அந்தப்பரிச்சின்ன அகம்பாவ திருஷ்டியைப் பற்றி வெளியென்ற அவ்வியக்தமாகும். அந்த அபூரணமான பரிச்சின்னாகம்பாவ முடைய சித்தின் அம்சமே சதாசிவ தத்துவமென்று கூறப்படும். அந்தச் சதாசிவன் அவ்வியக்தமானது. தன்னினும் வேறாகி யிருப்பதைப் பார்த்தும் "நானே இதுவும்" என்று அபேதமாக சதா அனுசந்தானம் செய்கின்றான். பிற்பாடு அந்தச் சதாசிவனே பலவாறான ஜகத்தைச் சிருஷ்டிக்கும் பொருட்டுத் தன் சுதந்தரத்தினால் "இந்த அவ்வியக்தமே என்னுடைய தேகம்" என்றும் "இந்த அவ்வியக்த வடிவமாக நான் இருக்கிறேன்" என்றும் அனுசந்தானம் செய்து மகேசனாகின்றான். அவ்வியக்தத்தை அபிமானத்தினால் "நான்" என்று கைக்கொண்ட ஈசுவரனே உருத்திரனாகவும், விஷ்ணுவாகவும், பிரம்மாவாகவும், மூன்று விதமாகி அனேகம் பிரம்மாண்டங்களின் உற்பத்தியை விளக்குகின்றார். எத்தனையோ பலவிதமான பிரம்மாக்கள் இருக்கின்றனர். அவ்விதமே அண்டங்களின் வடிவு போன்ற எத்தனையோ வெகு விஷ்ணுக்களும் இருக்கின்றனர். இவைகளின் சம்ஹாரத்தைச் செய்பவரான உருத்திரர்களும் அனேகங் கணக்காக இருக்கின்றனர். ஜகத்தின் ஏற்பாடு இத்தன்மையாகும். இத்தகைய ஜகத்தானது உண்மையில் ஏ இராமா! கண்ணாடியினிடம் பிரதிபிம்பம் போலக் (௩) கேவலம் தோற்றமே யன்றிச் சற்றேனும் உண்டாவதில்லை. பராசித்தானவள் அனே

---

(௩) ஜகத்து தோற்றமேயாம். ஜகத்தின் உற்பத்திக்கு ஆரம்பமில்லை.

கமான பரிச்சின்ன அகம்பாவங்களினால் நிறைந்தவளாக
விருந்தும், அவள் எப்போதும் பூர்ணாகம்பாவ ரூபத்
துடன் இருப்பவளேயாகும். இதற்குத் திருஷ்டாந்
தம். இராமா! நீ நேத்திரங்கள் முதலிய அங்கங்களில்
தனித்தனியாக அகம்பாவங்கொண்டு அந்தந்தக் காரி
யங்கள் செய்து வந்தாலும் உனக்குத் தேகம் முழுவ
திலும் அகம்பாவம் பொதுவாக இருப்பது போல
சதாசிவன் முதற்கொண்டு ஸ்தம்ப பர்யந்தம் உள்ள
அபூர்ணாகந்தைகளைக் கைக்கொண் டிருந்தும் ஸம்
வித்தானவள் பரிச்சின்ன மாகாதவளும் பூர்ணா கந்தை
யுடையவளு மாவள். வாஸ்தவத்தில் பூர்ணாகந்தை
யுடைய சித்தானவளே இவ்வாறு பரிச்சின்ன அகந்தை
யுடையவர் போல விளங்குகின்றனள். தேகத்தில்
பொதுவாக அகம்பாவமுடைய நீ தானாகவே உருவம்
இரசம் முதலியவைகளைக் கிரகிக்க வல்லமை யில்லாதி
ருந்தும், நேத்திரம் முதலிய இந்திரியங்களின் தாதாத்
மியத்தை யடைந்து யாவற்றையும் எப்பொழுதும் கிர
கிப்பது போலத் தேவனான சதாசிவனும், ஸர்வாந்தர்
யாமியாக விருந்தும், பிரம்மா முதற்கொண்டு ஸ்தம்பம்
வரையிலும் தாதாத்மியத்தை அடைந்து அறிகிறவரும்
செய்கிறவரும் ஆகின்றனர். எவ்விதம் உன் நிர்விகற்ப
வடிவமானது தேகேந்திரியங்கள் முதலிய யாவற்றிற்
கும் ஆசிரயமாக விருந்தும் சற்றேனும் அறியாமலும்,
செய்யாமலு மிருக்கின்றதோ அவ்வாறே ஸம்வித்தான
பரையும் ஸர்வ உலகங்களுக்கும் ஆசிரயமாக விருந்
தாலும், இலேச மாவது பேதத்தை ஒரு பொழுதும்
(a) அறிகிறவளு மல்ல செய்கிறவளுமல்ல.

(a) ஞேயங்களும் காரியங்களும் தன்னுடைய வடிவமே யாகையால்.



இந்த ஜகத்தினிடமாக யாவும், கண்ணாடிப் பிரதி
பிம்பம் போலத் தன் சுதந்தரத்தினால் உண்டாகி அவ
ளிடத்திலேயே விளங்குகின்றன. பிரதிபிம்பங்க
ளின் தோற்றம் கண்ணாடியின் விளக்கமே யாவது
போல ஜகத்தின் தோற்றம் யாவும் அவளுடைய விளக்
கமே யாகும். இங்கு (ஜகத்தில்) நீயென்றும் நானென்
றும் மற்றவரென்றுமுள்ள திருஷ்டாக்களான திருக்கு
யாவும், திருசியங்களின் தோற்றம் அறும்பொழுது
சுத்தமான சித்தேயாகும், வேறு அன்று.

கடங்கள் முதலியன பிரதிபிம்பித்த கண்ணாடி
யினிடத்திருந்து அந்தக் கடங்கள் முதலியன நீங்கி
விடும்பொழுது பிரதிபிம்பங்களால் வேற்றுமையடைந்
திருந்த கண்ணாடியானது சுத்தமாவது போல விகற்
பத்தால் ஏற்பட்ட திருசியத் தோற்றம் அகலும்
பொழுது இரண்டற்ற வடிவுடைய பரமையான ஸம்
வித்தானவள் சேஷிக்கின்றனள்.

(a) துக்கமானது இலேசமும் இல்லாமையால்
இவள் அகண்டாநந்த வடிவுடையவளாவள். எல்லோ
ராலும் பிரியமுறப்படுகிறபடியால் எல்லோருடைய
ஆனந்தமும் ஒன்றுபட்டு நிபிடமான வடிவுடைய
ளாவள். யாதொரு காரணத்தால் எல்லோரும் பிரி
யப்படுகிறார்களோ அதுபற்றி ஆத்மாவின் சொரூபம்
சுகமேயாகும். துக்கத்தை ஒருவரும் கோராதபடி
யினால், எதன் பொருட்டுத் தேகம் முதலியவற்றின்
பாவனை யிருக்கின்றதோ, எதனையெவரும் பிரியப்படா
மலிருக்கவில்லையோ விஷயானந்தமும் எதனுடைய

(a) இவ்விதம் சேஷித்த சொரூபத்தினிடம் புருஷார்த்தத்தை நிரூபிக்கும் பொருட்டு அதன் சுகரூபம் சொல்லப்படுகிறது—விசேஷக்குறிப்பிற்கு அனுபந்தத்தை நோக்குக.

இலேசமென்று கூறப்படுகின்றதோ அந்தச் சுப வடிவமான ஆனந்தம் தலை மீதிருந்த சுமையை இறக்கிவிடும் முதற்கணத்திலும், சுழுத்தியின் கண்ணும், விளங்குகின்றது. சித்தே யாவற்றிலும் மேன்மையாகப் பிரியப்படக்கூடியதா யிருப்பதால் அது ஆனந்தமென்று சொல்லப்படுகிறது.

மூடர்கள் ஆத்மாவின் கண்ணுள்ள மகாசுகத்தை அறிகிறதில்லை. வியஞ்சகங்களின் பேதத்தினால் சுகமானது தன்னிலும் வேறானதென்று கருதுகின்றனர். எவ்வாறு கண்ணாடியில் பிம்பங்களை முன்னிட்டு விளங்குவதான பாவங்கள் கண்ணாடியின் உண்மை ஞானமுதயமாகும் பரியந்தம் கண்ணாடிக்கு வேறாகவே தோற்றுகின்றனவோ, பிரதிபிம்பத் தன்மையை யுணரும்பொழுது அவை முன்போல விளங்கினாலும் கண்ணாடிக்கு வேறு ஆகாமல் கண்ணாடியே சுத்தமாயிருக்கின்றதோ, அவ்வாறே உண்மையுணர்ந்தவனுக்கு ஜகத்தானது தோற்றிக் கொண்டிருந்தாலும், தன் ஆத்மா மாத்திரமேயன்றி வேறல்ல. மண்ணிலிருந்து கடங்கள் முதலியன போலும், பொன்னிலிருந்து பூஷணங்கள் போலும், கற்பாறையிலிருந்து பிரதிமைகள் போலும், சிதாத்மாவிலிருந்து ஜகத்து ஆகும். ஜகத்து இல்லவே யில்லையென்ற திருஷ்டியானது, பார்க்கவா,— அபூரணமான திருஷ்டியேயாகும். நாஸ்தி யென்ற தான விபரீத நிச்சயமானது சித்திக்கவே மாட்டாது. ஏனென்றால் இருக்கிறது இல்லை என்ற இருபக்ஷங்களுடைய சாதகன் ஆத்ம வடிவமாகிச் (ஜகத்தின் திருஷ்டாவாகி) சர்வத்தையும் தள்ளி விட்டாலும் ஸ்பஷ்டமாக விளங்குகின்றான்.



நாஸ்தியென்ற (a) சாபத்தினால் மட்டிலும் ஜகத்தின் இலயம் எவ்விதமேற்படும்? கண்ணாடிநகரம் முழுவதும் கண்ணாடியின் தன்மையைப் பொருந்தியிருப்பது போல, ஜகத்தானது சிதாத்மாவின் ஒரே ரூபமுள்ளதாகி யிருக்கின்றதென்று மொழியப்படும். ஸங்கோசத்தைத் தீர விலக்குவதனாலுண்டாகும் பூரண விஞ்ஞானம் இதுவாகும். கண்ணாடி நகரவடிவம் பூண்டதுபோலத் தன் சுதந்தரத்தின் வலிமையினால் திருக்கே திருசியவடிவம் அடைந்திருக்கின்றதென்பது தான் சாஸ்திரங்களின் ஸாரமான கருத்து.

பந்தமுமில்லை, மோக்ஷமுமில்லை, சாதகனுமில்லை, சாதனமுமில்லை. அகண்டமான இரண்டற்ற சித்சக்தியான திரிபுரையே விளங்குகின்றாள். அவளே அவித்தையென்றதும் வித்தையென்றதுமான பந்தமோக்ஷங்களுடையசாதனம். இதுமட்டிலுந்தான் அறிந்துகொள்ள வேண்டியது. பார்க்கவா! வேறு யாதொன்றுமில்லை.

இவ்வாறாக இராமா! உனக்கு விஞ்ஞானத்தின் கிரமத்தைச் சாதனம் அடைதல் முதற்கொண்டு சொல்லியிருக்கிறேன். இதனை நன்றாய் விசாரித்துணரும் (b) ஜனங்கள் ஒருகாலும் மறுபடியும் சோகத்தை அடையார்கள். இவ்வாறு கிருபைக்கடலாகிய தத்தாத்திரேயர்கூறி யருளினார்.

நாரதரே! யுக்தி அனுபவங்கள் பொருந்திய இந்த ஞானகாண்டத்தைக் கேட்டால் இது அஞ்ஞானத்தாலுண்டான எவனுடைய மோகத்தைத் தான் நாசஞ்

(a) அனுபந்தத்தை நோக்குக.

(b) இங்கு வர்ணாசிரமம்முதலிய அதிகாரி விசேஷத்தின் நியமமில்லையென்று தெரிவிக்கின்றது.

செய்யாது. இதனைக்கேட்டும் எவனுடைய மோகமானது சற்றுவது சாந்தியடையாம லிருக்கின்றதோ அந்தச் சிலையினாற் செய்யப்பட்ட புருஷனுக்குப் பின் எவ்வாறு தான் ஞானமுண்டாகும்? ஒரு தடவை கேள்வியுற்றதனாலேயே இதனால் திடமான விஞ்ஞானமுண்டாகும். இரண்டுதடவை யாவது மூன்று தடவையாவது கேள்வியுற்றால் ம[illegible]த்புத்திகளுக்கும் ஏன் ஞானம் உதயமாகாது?

இதனைச் சிரவணம் செய்தால் பாபங்களெல்லாம் நாசமாக இது விஞ்ஞானத்தைக் கொடுக்கு மென்பது நிச்சயம். இதனை எழுதினால் திருஷ்டி தோஷங்கள் அறும். இதனை பூஜித்தால் சித்தம் சுத்தியாகும். எப்போதும் இதனைப் பரிசீலனை செய்துவந்தால் மூடத்தன்மை அகலும்.

ஸர்வத்திற்கும் ஆத்மபூதமாயிருக்கும் (யாவற்றையும் தன் வடிவமாகக் கொண்டிருக்கும்) யாதொரு ரூபத்தை விசாரித்து ஸ்பஷ்டமாய் அபரோக்ஷமாக அனுபவித்தால் முக்தியோ அஃதல்லாவிடில் பந்தமோ அது திரிபுரையே. அவள் தான் ஹ்ரீம்.

இந்த உத்தம இதிகாசமான
ஸ்ரீமத் திரிபுரா ரகசியம்
ஞானகாண்டத்தில் இருபத்திரண்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ திரிபுராரகசியம் முற்றுப்பெற்றது.

ஓம் தத் ஸத்

---

– 353 –

# அனுபந்தம்.

## முக்கியமான குறிப்புகள்.

---

### நான்காவது அத்தியாயம்.

### A. கிளிகளது வசனங்களின் கருத்து.

---

ஏ ஜகத்தோரே! விஷய பஜனத்தை ஒழித்துத் தன்னாத்மாவைப் பஜியுங்கள். ஏனென்றால் விஷய பஜனம் துக்கத்திற்கு மூலமாகின்றது. எத்தகைய ஆத்மாவை பஜிக்கிறதென்றால் சித்ரூபமான ஆத்மாவை. அதாவது பிரஞ்ஞான வடிவமேயாக இருக்கும் ஆத்மாவைப் பஜிக்கவேண்டும். இங்கு பஜனை என்பது பாகியபூஜை முதலியனவன்று. பின் யாதென்றால் நானென்றிருப்பதான யாதொரு நிலையென்ற நியாயப்படி "ஸோஹமஸ்மி" (அவன் நானாயிருக்கிறேன்) என்று சலனமற்றதான நிச்சயத்துடனிருப்பதே தேகம் முதலிய சங்காதம் (கூட்டம்) நசித்துவிடும் என்ற பாவனை எங்களுக்கு இருக்கிறதேயென்று சொல்வீர்களானால் சமாதானம்— சித்தினால் விளங்குவதான தேகாதிகள் அகன்ற சித்ரூபத்தைப் பஜிக்கவேண்டும். எங்ஙனமென்றால்—சேதியங்களான தேகாதிகள் முயற் கொம்புபோல் இல்லவேயில்லையென்பது கருத்து. முயற் கொம்புபோல இல்லாவிட்டால் பின் எங்ஙனம் அவை விளங்குகின்றன என்

னால் சித்தே பிரகாசிக்கின்றது. வேறன்று. எவ்விதம், சித்தே தேகம் முதலியனவாகப் பிரகாசிக்கிறதென்றால், கண்ணாடிப் பிரதிபிம்பம்போல.—இது இங்கு ஆகம சாஸ்திரத்தின் கருத்து.

சித்தானது இது என்ற மொழிக்கு விஷயமாகாததால் அச்சித்தே ஆத்மதத்துவம். மற்றது இஃதென்பதற்கு விஷயமாயிருப்பதால் அனாத்ம தத்துவமாம். நினைப்பின் தொடர்பான அனுபவத்திலிருந்து ஏகமாயிருக்கும் ஆத்மதத்துவமே அனேக அவஸ்தைகளில் அனுகதமாயிருக்கிறது. அஃது சின் மாத்திர வடிவமாகி வேற்றுமையான தன்மையில்லாததால் தேவாசுரமானிட சரீராதிகளிலும் ஒரே விதமாயிருப்பதாம். அத்தகைய சித்தினுள்ளாக அமிழ்ந்திருப்பனவும் மற்றபடி மனிதக்கொம்பு போன்றவையுமான கால தேசங்கள் முதலியன சித்தினின்றும் வேறானவையென்று சங்கித்தல் தகாது.

அகண்ட சிதேகாச ஆத்ம தத்துவமே சாஸ்திரங்களில் மொழியப்படும் பரமசிவமாம். மாயையென்ற பெயருடையதும், அகடிதத்தை கடனை செய்யும் சாமர்த்திய முடையதும் தன் சொரூபத்தை மறைக்காததுமான தன் சுதந்தரசக்தியினால் அவித்தையென்ற மலத்தின் அவபாச பூர்வகமாகவே இந்த த்வைதமான தோற்றம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இத்தோற்றம் த்வைதமான திருசியம், பீஜாங்குரம் போலக்காரணமான சிவத்தில் நின்று ஆரம்பமுமன்று. விகாரமற்ற காரண சொரூபம் தொடருகிறபடியால், மிருத்பிண்டம் பரிணமித்து கடமாவதுபோலக் காரணத்தின் பரிணாமத் தன்மை யுடையது மன்று,—சித்தென்றும் சேத்திய மென்றும் த்வைத முண்டாகு





மாதலால் இரஜ்ஜுவில் சர்ப்பம்போல் விவர்த்தமுமன்று; ஆகையினால் கண்ணாடி தன் நிர்மல சக்தியினால் விகாரமற்ற தன்னிடத்தில் பிரதிபிம்பாவபாசனமுண்டாக்குவது போலவே சித்தும் தன் சக்தியினால் சேத்தியத்தை அவபாசிப்பிக்கின்றது. கண்ணாடிப் பிரதிபிம்பத்திற்கு அதற்குச் சமானவடிவுடைய பிம்பம் தேவையாயிருப்பது போலச் சித்தின் பிரதிபிம்பிதமான திருசியத்திற்கு அதன் சமான வடிவுடைய திருசியம் வெளியிலிருக்க வேண்டுமேயென்று சங்கிக்கலாகாது. ஏனென்றால் கண்ணாடிப் பிரதிபிம்பத்தில் வெளியிலிருக்கும் பிம்பமானது காரிய வடிவமாகப் பரிணமிக்காததால் உபாதானமன்று. ஆனால் நிமித்தமாகின்றது. இது வியபிசரிக்கக் கூடியது—கரத்தினால் சுற்றப்பட்ட சக்கிரம் முதலியவற்றால் கடம் உண்டாவதால்—ஆகையினால் சித்தினிடம் திருசியம் பிரதிபிம்பிப்பதில் மாயையென்ற சுதந்தர சக்தியானது நிமித்தமாயிருக்கிறதென்று எடுத்துக்கொள்வது அயுக்தமானதன்று. திருசியத்தின் அவபாசம் பிரதிபிம்ப விதமாக வன்றி வேறு விதமாகப் பொருந்தாது. ஏனென்றால், சித்திற்கு வெளியில் திருசியம் இருக்கிறதென்பதற்கு யுக்தியில்லை. இருக்குமானால் விளங்காது. சம்பந்தத்தினால் விளங்குகிறதெனும் பக்ஷத்தில் திருசியத் தன்மையால் அனவஸ்தை யுண்டாகுமாதலால் அது ஸித்தியாது. சித்தின் சம்பந்தத்தை அபேக்ஷியாவிட்டால் திருசியம் எப்பொழுதும் விளங்கிக்கொண்டிருக்கும். அல்லது விளங்காமலேயிருக்கும். இவ்வாறு எல்லாப் பக்ஷங்களும் ஆக்ஷேபிக்கப்படுகின்றன. ஆகையினால் பிரதிபிம்ப விதமாகவே திருசியத்தின் அவபாசம் உண்டாகின்றது.

## ஏழாவது அத்தியாயம்.

## B. 'சாங்கிய மத நிராகரணம்' (மறுத்தல்)

---

பரிணாம வாதிகளான இவர்கள் ஜகத்தானது காரணத்தினுள்ளாக இருக்கிறதாகக் கூறுகின்றார்கள். குணங்கள் சமமாகவிருக்கும் பிரகிருதி தத்துவமே ஜகத்திற்கு மூலகாரண மென்கின்றனர். அந்தப் பிரகிருதியோ ஞானக்கிரியை யின்றிய (புத்தி யில்லாத) ஜடமாம். மிருத்பிண்டம் கடமாகப் பரிணமிக்கக் குயவனான கர்த்தாவை அபேக்ஷிப்பதுபோலப் பிரகிருதி தத்துவம் ஜகத்ரூபமாகப் பரிணமிக்கத் தன்னையன்றி வேறு ஒரு கர்த்தாவை அபேக்ஷிக்கிறதில்லையென்றும், அதுபற்றி ஜகத்தின் கிரியையில் சுதந்தரமுடையதாக ஜகத்கர்த்தா வாகிறதென்றும் கருத்து. இது அநீசுவர சாங்கியமதமாம்.

இங்கு பிரகிருதியானது கண்ணாடிபோன்ற சத்து அம்சமான தன்னிடத்தில் சுத்த சித்ரூபமான புருஷனையும் தன்னுடைய தாமத அம்சமான திருசியத்தையும் பிரதிபிம்ப வடிவமாகக் கிரகிக்கின்றது. இவ்விதம் பிரதிபிம்பமான திருக்குத் திருசியங்களுடைய சம்பந்தத்தினாலேயே பிரகிருதியின் அவிவேகத்தை அடைந்த புருஷன் "கடத்தை நான் அறிகின்றேன்" என்று பொய்யபிமான முடையவனாகின்றான். இதுவே புருஷனுடைய சம்சாரம். எப்பொழுது, புருஷன் விசாரத்தினால் பிரகிருதியினின்றும் வேறான ஆத்மாவை அறிகின்றானோ அப்பொழுது தெரிந்த திருடன் போல அந்தப்புருஷன் விஷயத்தில் பிரகிருதியின் பின் தொடர்பு இல்லாததால் பிரதிபிம்பத்தாலுண்டாகும்



பொய்யபிமானம் அறுகின்றது. இதனால் புருஷன் முக்தனாகின்றான். இது இவர்கள் மதம்.

இவர்கள் மதத்தில் பிரகிருதியினிடம் பிரதிபலித்திருக்கும் சித்தின் (சிதாபாசனுடைய) சம்பந்தத்தால் திருசியத்தின் பிரகாசமுண்டாகின்றது. இங்குப் பிரதிபிம்பமான சித்து ஆசிரயமான பிரகிருதியைப்போல ஜடமா அல்லது தனது நிமித்தமான முக்கிய சித்ரூபத்தின் தன்மையுடையதா? முதற்பக்ஷத்தில் ஜடத்திற்குத் திருசியத்தை விளக்குந்தன்மை பொருந்தாது. ஜடத்திற்குத் திருசியத்தை விளக்குந்தன்மையை அங்கீகரித்தால் பிரகிருதியின் சத்துவ அம்ச சம்பந்தத்தினாலேயே எல்லாப்பொருத்தமும் ஏற்படுகின்றபடியால் சித்தின் பிரதிபிம்பக் கற்பனை பிரயோஜனமற்றதாகிறது. இரண்டாவது பக்ஷத்திலும், திருசியத்திற்கு முக்கியசித்தின் சம்பந்தமுண்டாகின்றபடியால் சித்தின் பிரதிபிம்பகற்பனை பிரயோஜனமற்றதாகிறது.

கண்ணாடிக்கு கடம்முதலியவற்றை விளக்குந்தன்மையில்லாவிட்டாலும் அதனிடம் பிரதிபலிதமான சூரியவெளிச்சத்திற்கு கடம்முதலியவற்றை விளக்குந்தன்மை யிருப்பதுபோலச் சித்தின் பிரதிபிம்பத்தினாலேயே திருசியத்தின் பிரகாசம் உண்டாகிறதென்றும் சொல்லத்தகாது. சூரிய வெளிச்சம்போலப் பிரதிபிம்ப சூரிய வெளிச்சம் கடம்முதலியவற்றை விளக்கும் சககாரித் தன்மையுடன் விளங்காததால்.

பிரதிபிம்பவடிவமாகவிருக்கும் சித்திற்குச் (சிதாபாசனுக்கு) சித்து ஜடங்களின் உபயவடிவத்தன்மையையாவது உபயவிலக்ஷணத்தன்மையையாவது கற்பிப்பது யுக்தமன்று. உபயவடிவத்தன்மை விரோதத்தாலும், உபயவிலக்ஷணத்தன்மை அபசித்தாந்தமாகிற

படியாலும், பொருந்தா. தவிர சுபாவத்திற்கு வேறு விதமான பாவம் பொருந்தாதர்கையால் புருஷனிடம் பிரவிர்த்தி சுபாவமுடையதாகவிருக்கும் பிரகிருதிக்கு விவேகஞானத்தின் பிறகு நிவிர்த்தி சுபாவத்தன்மை பொருந்தாது. ஆகையால் பந்தமானது பரிகரிக்கத் தகாததாகும். இக்காரணங்களால் ஜடத்திற்குக் கர்த்துருத்துவத்தைக் கற்பிக்குங் கூற்றானது அசங்கதமாம்.

ஆதிகர்த்தாவான பகவான் முதலில் ஆலோசித்தே யோகியைப்போல உபாதானமின்றிப் பிரவிவித்தமாகக் கற்பனைசெய்கிறாரென்பதற்கு வெகு ஆகமங்கள் ஆதாரமாயிருக்கிறபடியால் ஜகத்தானது புத்திமானை கர்த்தாவையுடையதாம். அபுத்திமதியான பிரகிருதி கர்த்தாவாக மாட்டாதென்பது கருத்து.

---

## ஏழாவது அத்தியாயம்

## C. (ஈசனது சர்வகர்த்துருத்துவம்)

---

உபாதானம் முதலியவற்றை வைத்துக்கொண்டு ஈசன் ஜகத்தைச் சிருஷ்டிப்பாராயின், உபாதானம் முதலியவற்றிற்கு நித்தியத்தன்மை ஏற்படும். உபாதானம் முதலியன சிருஷ்டிக்குமுன் இருக்குமானால் அவைகளைப்பற்றியவரையில் ஈசன் கர்த்தாவாகார். அதுபற்றி ஈசனுக்குச் சர்வகர்த்துருத்துவம் இல்லாமற்போய்விடும். அப்பொழுது கர்த்தாவுக்கு நிமித்தத்தன்மையுண்டாக, உபாதானத்தன்மை இல்லாததால் ஈசத்தன்மையே பொருந்தாமற்போய்விடும். க்ஷேமராஜாசாரியார்கூறியிருக்கின்றார்—. “எவர்கள்



ஈசனிடம் நிமித்தத்திற்குக் காரணத்தை கற்பிக்கின்றனரோ அவர்கள் அன்னியையான ஸ்திரீயின் சேர்க்கையினால் வசீகரிக்கப்பட்ட காமியின் நிலைமையை ஈசனுக்குக் கற்பிக்கின்றார்.” ஈசன் கேவல நிமித்தத்தன்மையுடையவனா யிருப்பதனால் காரியம் சம்பவியாதென்பதும் சிருஷ்டிக்குமுன் பரமாணுக்கள் ஈசனுடைய இச்சையினால் சேர்க்கப்பட்டுக் காரியத்தின் ஆரம்ப முண்டாகிற தென்பதும் ஆரம்பவாதிகளது கூற்று. இது பொருந்தாது. உலகத்தில் சேதனன் அன்னியனுடைய இச்சையை முன்னிட்டுச் சிறிது செய்கிறான். அசேதனம் செய்வதில்லை. ஆகையினால் ஈசனுடைய இச்சையை முன்னிட்டுப் பரமாணுக்கள் சேர்க்கப்படுகின்றனவென்பது யுக்தமன்று. பரமாணுக்கள் ஈசனுடைய இச்சையை முன்னிடுகின்றன வென்பது ஈசனுடைய சாமர்த்தியமுமன்று. இது உண்மையாகவிருந்தால் ஈசன் பரிச்சின்னமான சாமர்த்தியமுடையவரேயாவர். இவ்விதம் ஸேசுவரசாங்கியமதம் மறுக்கப்பட்டது.

அகிலமான வியவகாரத்தையும் நடத்தச் சாமர்த்தியமுடைய பரமேசனது வல்லமையைப்பற்றிய ஆகமம் ஒன்றையே அடுத்திருக்கும் எங்களுடைய கொள்கையினிடத்தில் அயுக்தமென்பது சற்றேனுமில்லை. ஆனால் பொருத்தமின்மையென்ற தோஷத்தை அகற்றும் பொருட்டு ஜகத்தானகிரியையில் கர்மம் நிமித்தமாகிறதென்று எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறபடியால் அன்னியத்தை (கர்மத்தை) அபேக்ஷிக்கும்பொழுது ஈசத்தன்மை சித்தியாதே யென்றால் உண்மைதான். த்வைதவாதிகளால் இதற்கு விடை கூற முடியாது. அத்வைத வாதிகளுடைய கொள்கைப்படி

கண்ணாடிப் பிரதிபிம்ப நியாயமாக எல்லாமான ஜகத்தும் சிதேகரசத்தன்மை யுடையதாகையால் கர்மமும் பரமேசுவரனுடைய சொரூபத்திற்கு வேறின்றியதாம். ஆகையால் அன்னியா பேக்ஷையினாற் சற்றேனும் தோஷத்திற்கு அவகாசமில்லை.

ஆனால் கடம் முதலியவற்றின் கர்த்துருத்துவம் குலாலனிடமிருப்பதால் ஈசனுக்கு சர்வ கர்த்துருத்துவம் எங்ஙனங்கூடும் என்றால் குலாலாத்யா ஈசனுக்கு அன்னிய மன்றாகையால் தோஷமில்லை. தவிர, இராஜ புருஷன் செய்வது இராஜன் செய்வதேயாவதுபோலப் பிரஹ்மா முதலானோர் செய்வதும் ஈசனுடைய செயலேயாம்.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

### D. சாமான்னிய சைதன்னியத்தினுடைய அனுபவஸ்தானம் விவரிக்கப்படுகிறது.

---

சாமான்னிய சைதன்னியமென்றால், விஷயாகாரமகன்ற நிர்விகற்பஞானம். அது நித்திரைக்கும் ஜாக்கிரத்திற்கும் மத்திய பாகத்தில் இருப்பது, அதனைக் குறிப்பிட்டறிய வேண்டும். நித்திரை யென்றால் சுழுத்தி. ஜாக்கிரம் விகற்பஞான தாரையாம். அந்தக்கரணத்தினின்றும் வேறாயிருக்கும் தூல இந்திரியங்களால் ஜாக்கிரத்தில் விஷயக்கிரகணம் (கொள்ளல்) உண்டாகின்றது. சொப்பனத்தில் மனதானது, உட்புகுந்தவையான இவ்விந்திரியங்களுடன் ஒன்றுபட, ஜலத்தினுள் படிந்திருக்கும் பொடிகளுக்கு நிகராகும். சம்ஸ்கார வடிவமான மானஸீக விஷயக்கிரகணம் உண்



டாகிறது. பின் சுழுத்தியில், இந்திரிய விசிஷ்டமான மனது தன் யோனியாகிய பிரகிருதியில் விலயமாகிறது. பிரகிருதியானது அப்பொழுது வலுவேறியதன் தமசான அம்சத்தினால் சத்துவரஜ அம்சங்களையமறைத்துக் கொண்டிருக்கிறது. அவ்வேளையில் கார் சூழ்ந்த சூரியன்போல ஆத்மாவும் தமசினால் மறைக்கப்பட்டுத் தான் மட்டிலும் மந்தமாகப் பிரகாசிக்கின்றது. ஜாக்கிரத்திற்கும் சுழுத்திக்கும் மத்திய க்ஷணத்தில் மனது விலயத்திற்கு அபிமுகமாக இருப்பதால் விஷயக்கிரகணம் இல்லை. அச்சமயத்தில் பிரகிருதியின் தமசானது முழுவதும் வலுவடையா திருப்பதுபற்றிச் சொரூபத்திற்கு மறைப்பில்லை. இப்படிச் சிதாத்மா, விஷயாகாரத்தை அடையாமல் பிரகாசிப்பது சாமான்னிய சைதன்னியத்தின் ரூபமாம். இவ்விதமே ஸம்வித்தின் பேதாந்தரங்களிலுமாம். அதாவது கடாகாரம் படாகாரம் முதலிய வேற்றுமையாகிய ஞானங்களின் மத்தியிலும் உண்டு. ஞானத்தின் கடாகாரத்தன்மையே படாகாரத்தன்மையன்று இவற்றின் பேதம் பிரசித்தமாகையால். இந்தப் பேதம் சித்திக்கின்றபடியால் இப்படிப் பேதிக்கப்பட்ட ஞானங்களின் மத்தியில் கடாதிகளின் ஆகாரமின்றிய சுத்தமான அந்தராளதசையானது தள்ளக் கூடாததாகிறது. இவ்விதம் அறிபடுபொருள்களின் மத்தியில் ஸம்வித்து விளங்குகிறது.

ஸம்வித்தென்றது திருஷ்டாவான அகங்காராத்மாவாம். தடாக நீரானது எவ்விதம் மதகு வாயைத் திறந்துவிட்டால் வாய்க்கால் வழியாக வயல் நீருடன் ஒன்றுகின்றதோ, அவ்விதமே விஷயக்கிரகண காலத்திலும், திருஷ்டாவின் ஸம்வித்து திருசிய ஸம்வித்து

பரியந்தம் கரணங்கள் வழியாக ஒன்றுகின்றது. இங்கு, திருஷ்டாவின் ஸ்தானத்தில் சரீராதியான திருஷ்டாவின் வடிவமாகச் சைதன்னியம் இருக்கிறது. விண்ணினிடம் சூரிய மண்டலத்தில் அவ்வடிவமாக விருக்கிறது. மத்தியிலோ சுத்தமாய் ஆகாரமற்றதாக விஷயாகாரம் நீங்கிய சைதன்னியமே ஆத்மாவின் வாஸ்தவமான ரூபம். அதன் அனுபவஸ்தானங்கள் இவைகள் தாமென்று கருத்து. இங்கு அனுபவிக்கப் படுவதான ஆத்மா எத்தகையதென்றால்—இந்த நிலையே நிஜமான வடிவம். இஃதன்றி வேறொன்றுமில்லை. திருசியாகாரமகன்ற சுத்த சைதன்னியமே திருஷ்டாவினது வாஸ்தவமான ரூபமென்று கருத்து. "நான் இருக்கிறேன்" என்று திடமாக அனுபவித்தால் அந்தந்த வடிவங்கள் கண்ணாடிப் பிரதிபிம்பம் போன்றனவென்ற நிச்சயமுண்டாகுமாதலால் பிரதிபிம்ப வியாக்கிரங்களினிடத்திருந்து துக்கமுண்டாகாதது போலத் திருசியங்களால் துக்கமுண்டாகாது.

---

## பதினோராவது அத்தியாயம்.

## E. காணாதர்மதம்.

---

அதிருஷ்டமான அணுக்களிலிருந்தும் காரியமுண்டாயிற்றென்று சிலர் கூறுகின்றார். அணுக்களிலிருந்தும் காரியம் வேறானதாயிருந்தும் முடிவில் இல்லாமற் போய் விடுகிறது. பரமாணுக்கள் துவியணுகங்களுக்குக் காரணமாயிருப்பது காரியமான துவியணுகத்தின் ஸாவயவத்தன்மையிலிருந்தும் அனுமானிக்கப் படுகிறது. இங்கு இது இவரது சிருஷ்டிக் கிரமம்—பிராணிகளது பரிபக்குவமான அதிர்ஷ்டத்



(கர்ம) துடன் கூடிய ஈசனது இச்சையால் ஸ்திரமான விசாருக்களான பரமாணுக்களில் கிரியை உண்டாகின்றது. பிறகு, கிரமத்தில் இரண்டு பரமாணுக்கள் ஒன்று சேர்கின்றன. இச்சேர்க்கையினால் துவியணுகம் உண்டாம். மறுபடியும் ஈசனது இச்சையினால் துவியணுகங்களில் கிரியையுண்டாய்க் கிரமத்தில் மூன்று துவியணுகங்கள் கூடித் திரிஸரேணு முதற்கொண்டு கடாதி வரையிலுமுள்ள காரியங்கள் உண்டாகின்றன. துவியணுகம் முதலிய காரியம் பரமாணு முதலிய காரணத்திலிருந்தும் அத்தியந்தம் பின்னமானவையாம். நாசத்தின் பிறகு அத்தியந்தம் மணிதக்கொம்பு போல அசத்தாகின்றனவென்பது இவர்மதம். (இதன் மறுப்பு)—கடம் ஒன்றே உற்பத்திக்கு முன் அசத்தாயும் (இல்லாமலும்) பின் சத்தாயும் (இருத்தலுடையதாயும்) நாசத்திற்குப் பின் அசத்தும் ஆகிறதென்பது யுக்தமன்று இருத்தலின்மைகளின் விரோதத்தால்—ஆனால் இருத்தலின்மைகளுக்கு பாவாபாவத் தன்மையிருந்தாலும் ஸம்யோகமும் அதன் அபாவமும் போல விரோதமின்று என்ற ஆசங்கைக்குச் சமாதானம். ஸம்யோகத்திற்கு வியாப்பிய விருத்தித் தன்மையில்லாததால் அதன் அபாவத்துடன் விரோதமில்லை. இருத்தலானது கடம் முதலியவற்றில் ஒத்ததாயிருத்தல். இதுவே வியாப்பிய விருத்தி. இஃது தன் அபாவத்திற்கு விரோதமானதேயாம்.

ஆகையினால் ஒன்றிற்கே மஞ்சள் நிறமும் அந்நிறத்தின் இன்மையும் பொருந்தாதென்று கருத்து. ஆனால் வஸ்துவின் சுபாவத்தை அனுபவத்தை முன்னிட்டுக் கற்பிக்கவேண்டியிருக்கிறபடியால் ஒத்ததான அளவையுடைய அவயவிகள் விஷயத்தில் தேசசம்பந்த

மானவியாப்பிய விர்த்தியிருந்தாலும், கடம் இருக்கிறது இல்லையென்ற அனுபவங்களை முன்னிட்டுக் காலத்தைப் பற்றிய வியாப்பிய விர்த்தியில்லையே யென்று சொல்லு வோமேயென்றால்—

பிரகாசமும் பிரகாசமின்மையும் ஒரே வஸ்துவி னிடம் உண்டாகா. அவ்வாறன்றி அனுபவத்தை மாத்திரம் முன்னிடுவதால் ஒன்றற்கே விருத்தமான உபயரூபத்தன்மை ஏற்படுமானால் நீலம், தமசு சலிக் கின்றதென்ற அனுபவத்தை முன்னிடுவதில் தமசு திரவியத்தன்மையை அடைவதால், ஒரே திரவி யத்தினிடம் ஒளிவீசும் வெண்மை ரூபத்தின் உற் பத்தியால் பிரகாசத்தன்மையும், கருமை ரூபத்தின் உற்பத்தியால் தமசின் தன்மையும் உண்டாகின்றன வென்று சொல்லக்கூடுமாகையால் தமசு பிரகாசங்களி னுடைய ஒன்றுபட்டிருத்தல் ஏற்படுமென்று கருத்து. மஞ்சள் நிறமும் அஃதின்மையும், பிரகாசமும் அப்பிர காசமும் (விரோதத்தன்மையால்) வஸ்துவில் ஒன்று யிரா. என்றறியவேண்டும்.

ஆகையினால், பாவத்திற்கும் அபாவத்திற்கும் காலதேச வித்தியாசங்களாலும் விரோத மிருக்கிற தென்பது சித்தம். ஆனால் தமசிற்குத் திரவியத்தன்மை யுண்டாகும்பொழுது திரவியத்தைப் பார்க்கும் நேத் திரங்கள் வெளிச்சத்துடன் கூடி யிருக்கவேண்டுமென்ற நியமத்திற்குப் பங்கம்வருமே என்றால்—அஃதில்லை— அனுபவத்தை முன்னிடுவதனால் நியமத்தையும் அன் னியமாகக் கற்பிப்பது பொருந்துமாகையால்—தவிர, அவயவிவாதத்தில் வேறு தூஷணைகளும் கூறப்படு கின்றன. அதாவது கலப்புமுதலியன ஏற்படுவதாலுண் டாகும் தோஷம். இருப்பு, இன்மை "முதலிய" ரூப



மான விருத்த தர்மங்களின் அத்தியாச வடிவமான கலப்புகள் உண்டாகுமென்றர்த்தம். "முதலிய" என்ற தால் பரமாணுவுக்கு அவயவத்தன்மை சித்தமாக இந்தப் பரமாணுக்களது வியாப்பியவிர்த்தி யின்றிய தன்மைக்குப் பங்கம்முதலியதோஷம் தீர்மானிக்கப்படு கிறது.

ஆனால், கூறிய கலப்புமுதலிய தோஷங்கள் எல்லா மதங்களுக்கும் சாதாரணமாயிருக்கிறபடியால் இத்தகைய தோஷங்களால் சேர்மானம் அடைந்தவன் நான்மாத்திரமன்று என்பீராயின், மொழிந்தநுண்மை தான். இதுபற்றியே துவைத சத்தியவாதிகள் யாவ ரையும் மறுப்பதின் பொருட்டே அனுவாத மறுதலை என்ற வியாஜத்தைப்பற்றி இவ்வித தூஷணைகள் தத்த குருவினால் மொழியப்பட்டன. துவைதத்திற்குப் பொருத்தமின்மையைத்தேடி வருபவரான அத்வைதி களுக்கு, பின் இத்தூஷணைகளே வாசுதேவனிடமாகப் பகதத்தனால் ஏவப்பட்ட வைஷ்ணவாஸ்திரம்போலப் பூஷணங்களே யாகுமென்றறியவேண்டியது.

---

## பதினான்காவது அத்தியாயம்

## ௰௪. சிருஷ்டிக் கிரமம்.

---

சிருஷ்டி கற்பனைவடிவமானதாலும் சித்தானவன் சதா நிர்விகற்ப வடிவமானதாலும் அவ்விதம் நிர்விகற் பவடிவமான சித்தினிடம் விகற்பவடிவமான சிருஷ்டி எவ்விதமுண்டாகலாமென்ற சங்கைக்கு ஆகமசாஸ்தி ரப்படி முப்பத்தாறுதத்துவங்களின் சிருஷ்டியைமொழி யுமுன் எல்லாச் சிருஷ்டிக்கும் மூலகாரணமான அவித் தையின் உற்பவங்கூறப்படுகிறது. கண்ணாடியில் ஆகா

யம் விளங்குவதுபோல் அந்தச் சித்தானவள் தனக்குள்ளேயே "வெளி" யென்ற மொழிக்குப் பொருளான ஒன்றை விளக்குகின்றாள். ஆனால் வெளியாகாயம் நிமித்தமாயிருப்பதுகொண்டு கண்ணாடியினுள் பிரதிபிம்பாகாயமுண்டாகின்றது. ஆத்மாவினிடம் "வெளி" தோன்றுவதற்கு நிமித்தம் யாது என்றால், சுதந்தரமே யது. இந்த "வெளி" யென்ற பொருளின் விளக்கத்தை முன்னிட்டே எல்லாச் சிருஷ்டியும் உண்டாகிறபடியால் இதுவே முதன்மையான சிருஷ்டியாகும். இந்த வெளியின் தோற்றமே அவித்தையென்றும் தமசென்றும் சொல்லப்படும். ஆனால், பூரணனான சிதாத்மாவினிடம் வெளியின் அவபாசம் எங்ஙனம் கூடுமென்றால், வாஸ்தவத்தில் அம்சம் உண்டாகாதாகையால். அம்சம்போல் என்று கருத்து. ஒரு அம்சம்போல் உண்டாகும் தன்னுடைய யாதொரு விளங்கலுண்டோ அதுவே "வெளி" யின் அவபாசம். விகற்பமற்ற சிதேகரசவடிவனான பரமேசுவரன் ஜடத்தன்மையில்லாதவனானாலும் மற்றவையையும் விளக்குந் தன்மையுடையவனானாலும் சுதந்தரனென்னப்பட்டனன். ஜடம் தான் விளங்கவும் மற்றதை விளக்கவும், அன்னியத்தை அபேக்ஷிக்கின்றபடியால் பாதந்திரமானதெனப்படும். இந்தச்சுதந்தரமே சிருஷ்டிகாலத்தில் ஜகத்தின் விளங்கலுக்கு விஷயமாகிறது. பிரளயம் உண்டாவதற்கும் இதுவேசொரூபமாத்திரத்தின் விளங்கலுக்கும் விஷயமாகிறது பிரளயத்திற்கு முன்னும் சொரூபத்தின் ஸ்பூர்த்தி அழியா திருக்கின்றபடியால்—ஆகையினால் இந்தச் சுதந்தரமே சிவனுடைய நித்தியமான அபின்னதர்மமென்று மொழியப்படும். பிரளயத்தின் முடிவில் இந்தச்சுதந்தரமே பிராணிகளது பரிபக்



குவமாயும் அதிருஷ்டத்துடன் கூடினதாகிச் சொரூபத்தை அம்சமானதுபோல் விளக்குகின்றது. அதாவது பரிச்சின்னமாகத் தோற்றுவிக்கின்றது என்றர்த்தம். இதுவே வெளியின் விளக்கம். இவ்விதமான பரிச்சின்னத்தோற்றம் தனக்கன்னியமான தேசத்தின் தோற்றத்தினாலேயே, ஏற்படுகிறதென்பது ஸ்பஷ்டம். தன் கரமானது முறிந்து விடும்பொழுது முறிந்த கரத்தினிடம் 'நான்' என்று வராததுபோலப் பரிச்சின்னமான 'வெளி' யினிடம் நானென்பதில்லை. "நான்" என்றதற்குப் பின்னமானதாகின்றது. "வெளி" யானது "நான்" என்பதொழிந்ததென்று, கருத்து ஆத்மாவினிடம் இதன் விளக்கமே வெளியின் விளக்கம். இவ்வடிவமே அவ்வியக்தமென்றும் ஜடசக்தியென்றும் கூறப்படுகிறது. இவ்விதம் பூர்ணசிதாத்மா தன் சுதந்தர சக்தியினால் தன்னிடம் பரிச்சேதத் தோற்றவடிவமான அவித்தை யென்ற வெளியை விளக்குவதே பகவானுடைய முதன்மையான சிருஷ்டியென்று மொழியப்படும். இந்தவெளியின் தோற்றத்தையே உபநிஷத்தோர் மூலாவித்தை யென்கின்றார். சுதந்தரமென்றது பகவானுடைய சித்சக்தியேயாம். இது மூன்றவஸ்தையைப்பெறும். பிரளயமான நிர்விகற்பத்தில் சித்சக்தியாகவும், சிருஷ்டிக்குமுன் விகற்பங்கள் முக்கியமாயெழாதிருக்குந் தருணத்தில் மாயாசக்தியாகவும் விகற்பதசையில் அவித்தை வடிவமான ஜடசக்தியாகவுமிருக்கும். இதுவே அங்கங்கு சித்பிரகிருதி, மாயை, அவித்தை என்று வேற்றுமைப்பாடாகவும் ஜடப்பிரகிருதியென்றும் இருவிதமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. பகவான் கூறியிருக்கிறார். மண், நீர், அனல், வாயு, ஆகாயம், மனது, புத்தி அகங்காரம் இவைகள் எட்டும் என்

னுடைய பின்னப்பிரகிருதியாகும், இவற்றிலிருந்தும் வேறாகியது என்னுடைய பராப்பிரகிருதியாகும். ஜீவ பூதையான அந்தப் பராப்பிரகிருதியினாலே இந்த ஜகத்து நிலைபெற்றிருக்கிறது.—பிருதிவி முதலிய எட்டுவிதப் பிரகிருதியும் காரிய வடிவமான ஜடப் பிரகிருதியாம். பராப்பிரகிருதியான சிற்சக்தியானவள் பிரதிபிம்பங்களுக்குக் கண்ணாடிபோன்றிருப்பதால் ஜகத்திற்கு ஜீவபூதையாய் (உயிர்நிலையாய்) இருக்கிறாளெனப்பட்டது. இதுபற்றியே, "எவளால் எட்டுவிதப்பிரகிருதியும் நிலைபெற்றிருக்கின்றனவோ" என்று மொழியலாயிற்று. ஆனால், ஜடசக்தியின் அவபாசனத்திற்கு முன்னதாகவே இது (சுதந்தரம்) காரணசககாரித் தன்மையாகப் பிராணிகளது அதிர்ஷ்டத்துடன் இருக்கிறதென்றும் இந்த அதிர்ஷ்டத்தைப் பரிபாகம் செய்வது காலமென்றும் அங்கீகரிக்க வேண்டியது. அஃதல்லாவிடில் வைஷம்மியம் முதலிய தோஷங்கள் ஏற்படும். அப்படி இதனை அங்கீகரித்தால், சிருஷ்டிக்கு முன்னதாக இரண்டற்ற சிதாத்மா மாத்திரமாகச் சேஷித்திருந்தாரென்ற கூற்றுக்கு ஹாநிவரும். தவிர, பிராணிகளது அதிர்ஷ்டத்தைப் பரிபாகம் செய்வதுகாலமானால் அது (காலம்) ஈசுவரரூபமுடையதா அல்லது வேறானதா இருபக்ஷத்திலும் அதற்குப் பிரளயத்தில் வேற்றுமைப்படுத்துவதான உபாதிகளில்லாத படியாலும் பிரளயத்தின் ஆரம்பம் முதற்கொண்டு அந்தம்வரையில் விசேஷமின்றிய ஏகரூபத்தன்மையிருப்பதாலும் பிரளய ஆரம்பத்தின் இரண்டாவது க்ஷணத்திலேயே அதிர்ஷ்டத்தின் பரிபாகத்தால் சிருஷ்டியுண்டாகலாமே என்ற சங்கைவரும். இதற்கு ஸத்காரிய வாதிகள் கூறுவது யாதென்றால்,



சிருஷ்டிக்குமுன்னம், எல்லாக்காரியங்களும், சூக்ஷ்மரூபமாக மாயையில் இலீனமாயிருப்பதால் மாயையில் இலீனமான பிராணிகளுடைய அதிருஷ்டங்கள் அதனிடம் இலீனமாயிருக்கும் சூக்ஷ்ம காலத்தினாலேயே பரிபாகத்தை அடைகிறதென்பது. அத்தகைய மாயையும் சக்தித் தன்மையாகச் சிதாத்மாவுக்கு வேறின்றியிருக்கிறபடியால் அத்வைதக் கொள்கை நிர்வகிக்கத் தக்கதாகிறதென்கின்றனர்—மற்றவர்கள் சிருஷ்டியானது, சொப்பன, மனோராஜ்ஜிய, இந்திரஜால சிருஷ்டிகளுக்கு நிகரா யிருப்பதால் இவ்விஷயத்தில் யுக்திதேவையில்லையென்றும் மருபூமியில் காணப்படும் கானல் நீரின் சுபாவம் இன்ன விதமென்று வியவரிக்கத் தகாததுபோலவென்றும் கூறுகின்றார்கள். இக்காரணத்தினாலேயே ஆகமத்தில் சிருஷ்டியைப்பற்றி நிரூபித்தலானது பலவாறாகக் காணப்படுகிறது.

ஆத்மாவிற்கு அன்னியமில்லையென்று நிஷேதிக்கப்பட்ட சிருஷ்டியின் கிரம நிரூபணமானது மனதிலேறும் பொருட்டாம். இது பற்றியே சிருஷ்டியுமில்லை, சம்மாரமுமில்லை, ஸ்திதியுமில்லை, கிரமமென்பதுமில்லை, சிதானந்த கனமான ஆத்மதத்துவமே இவ்விதம் பிரகாசிக்கின்றது—என்று பரமேசுவராகமம் முதலியன கூறுகின்றன.

## பதினாறாவது அத்தியாயம்

## G. அகந்தை.

ஆத்மாவுக்குச் சொப்பிரகாசத் தன்மையால் சதா நான் என்ற ஸ்பூர்த்திவடிவம் உண்டு. கடம் முதலிய அன்னிய விஷயங்கள் விளங்கும்பொழுது சரீராதிகளி

னுண்டாகும் நான் என்ற புத்தி அகன்று விடுகிறது. கடாதிகளின் ஞான காலத்தில் தேகத்தின் கௌரவம் முதலிய குணங்களது ஸ்பூர்த்தி அனுபவத்தில் சித்த மன்று. அஃதன்றேல் கடாதிஞான காலத்தில் தேகம் கவுரமானதென்ற நினைப்புண்டாக வேண்டும். அல்லது, அன்னிய விஷயம் விளங்கும்பொழுது அன்னியத்தின் அன்னியத்தன்மையாக இந்தத்தேகம் என்னுடையது என்றவாறு அனுத்மாவாக விளங்குகிறது என்றர்த் தமாம்.

கடாதிகள் விளங்கும் பொழுதும் சுத்தாத்மா வுக்கு நான் என்ற ஸ்பூர்த்தியில்லையே யென்று மொழி யத்தக்கதன்று. அவ்வாருயின் கடாதிகள்விளங்கா. பிர காசிக்கச் செய்வதான தீபங்கள் பிரகாசியா விட்டால் கடாதிகள் விளங்கா திருப்பதைக் காண்கிறோம். ஆனால் பிரகாசித்தாலும் ‘நான்’ என்ற ஸ்பூர்த்தியில்லையே யென்று சொல்லத்தகாது. ஏனென்றால், பிரகாசிப்ப தானது யாதாமொரு வடிவுடன் பொருந்தியே பிர காசிக்கவேண்டும். கேவலமாகப் பிரகாசியாது. அவ் வாருகில் ஜடத்தன்மை ஏற்படும். ‘ஆகையினால்’ நானென்றவாறே பிரகாசிக்கின்றது. இக்காரணத்தாலே ஞானங்கள் சுயமாகப் பிரமாணமென்று வாதிப்பவரால் ‘நான்கடத்தை அறிகின்றேன்’ என்று கூறப்படுகின் றது.

தவிர, கடாதிஞானங்களில் ‘நான்’ என்ற சொரூப ஸ்புரணத்தை அங்கீகரியாவிடில் “நான் இருக்கிறேனு இல்லையா” என்ற சம்சய விபரீதங்களுடைய அபாவ நியமம் பொருந்தாது. கடாதிஞான காலத்தில் ‘நான்’ என்ற ஸ்பூர்த்தி தேகாதியைப்பற்றி யிருக்கிற தென் றும் சொல்லத்தகாது. கடாதிஞான காலத்தில் அவ்



வடிவு (கடாதிகளின் வடிவு) உண்டாகாவிட்டால் இது தேகம் என்ற தேகாதி ஞானகாலத்திலும் அவ்வடி வுண்டாகாது. “இவன் சைத்திரன்” என்ற ஞான காலத்தில் சைத்திர சம்பந்தமான சிதாத்மாவும் இவன் என்பதற்கு விஷயமாகி ‘நான்’ என்ற புத்தியை மீறி யிருப்பதாயும் மொழியத்தகாது. ஏனென்றால் சைத் திரனுக்கு அக்காலத்தில் ‘நான்’ என்பது அழியா திருக்கிற படியால், சுழுத்தியிலும் சமாதியிலும் நானென்பது இல்லையென்று சொல்லத்தகாது. ஸ்மிரு தியின் (நினைப்பின்) தொடர்பை முன்னிடுவதால் அக் காலத்திலும் சொரூபத்தின் ஸ்பூர்த்தி இருக்கிற தென் பது எல்லோருக்கும் சம்மதம். ஆனால் சுழுத்தி சமாதி களில் ஆத்மா நிர்விகற்ப மாகையால் அப்பொழுது ‘நான்’ என்ற சவிகற்பச்சொல் உண்டாகா தென்று கூறும் பக்ஷத்தில்:—இதற்கு ஆகமதத்துவ வித்துக்கள் கூறுகின்றார்கள்—(நிர்விகற்பமென்றும் சவிகற்பமென் றும்) ‘நான்’ என்பது இருவிதம். விகற்பமென்றால் பேதம். அதனுடன் கூடியது சவிகற்பம். மற்றது நிர்விகற்பம். தேகாதி பரிச்சின்னத்தை விஷயமாகக் கொண்ட அகந்தை பேதவிஷயகமாதலால் சவிகற்ப மானது. சமாதி சுழுத்திகளில் அஃது சொரூபமாத் திர விஷயகமாயிருப்பதாலும் பேதமின்மையாலும் அவ்வகந்தை நிர்விகற்பமானது. சமாதியில் அகந் தையை அங்கீகரித்தால் திரிபுடியுண்டாய் விடுமே யென்று சங்கை செய்யலாகாது. அப்பொழுது ‘நான்’ என்பது மாத்திரம் சேஷித்திருப்பதால் திரிபுடியின் ஸ்பூர்த்தியில்லை. இது பிரத்தியபிஞ்ஞா சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது—“நான் என்ற ஸ்பூர்த்தி பிரகாசாத்மாவாக இருந்தாலும் வாக்கினது வடி

வுடையது" — இவ்வகந்தை விகற்பமன்று. இஃது அத்வைதத்தை அபேக்ஷித்துக் கூறும் நிச்சயமாம். இதுவே தான் "அகம்" (நான்) என்ற பிரத்தியயம். இதுவே பூராணகந்தையென்றும் பூரணக்கியாதியென்றும் ஆகமங்களில் விவரிக்கப்படுகிறது. இந்தப் பூரணகந்தையினுடைய பின்னுண்டாகும் வாக்கினது நிமித்தத்தன்மையின் திருஷ்டியாக இதற்கு வாக்ருவடிவமுடையதென்ற வியவகாரம் பொருந்தும்—ஆகையினல் இதனை வாஸ்தவத்தில் தூலசப்தவடிவமானதென்று கருதத்தகாது. இவ்வித பூராணகந்தை வடிவம் நிர்விகற்ப சித்சுபாவத்தினிடமாக இல்லையென்றும் கூறத்தகாது. ஜடத்தன்மை ஏற்பட்டுவிடுமாதலால், "பேதத்தை விளக்கும்பொருட்டு வாக்கின் வடிவத்தைக் கூறும்பக்ஷத்தில் பிரகாசம் பிரகாசியாது. வாக்கு வடிவம் எதிர்தாக்கும் உணர்ச்சியாம்." என்று பகவான் ஹாரிணர் கூறியிருக்கின்றார். "அவபாசத்தினுடைய சுபாவத்தை விமர்சம் அறிகின்றது. அஃதன்றேல், பிரகாசம் பொருளைப்பற்றி யிருந்தாலும் ஸ்படிகம் போல ஜடத்திற்கு நிகரானதாகும், என்று பிரத்தியபிஞ்ஞா சாஸ்திரம் கூறுகின்றது.

இவ்விதம் நிர்விகற்ப சிதாத்மாவிற்கு அகமென்ற வடிவம் ஸ்ரீ பகவத்பாதராலும் மொழியப்பட்டிருக்கிறது. "பாலியம் முதலியவற்றிலும் ஜாக்கிரம் முதலியவற்றிலும் அவ்விதமே எல்லா அவஸ்தைகளிலும் விவர்த்தமானவைகளில் அநுவிர்த்தியாக 'அகம்' என்று சதா உள்ளில் ஸ்புரிக்கின்ற" என்பது விவேகசூடாமணியில் காண்க.

---



## பதினாருவது அத்தியாயம்
## H. "சுழுத்தியின் மூடத்தன்மை".

---

இங்கு இது கருத்தாம்:—சிதாத்மா பிரகாச ஏகவடிவராலும் சாந்தாத்மவாதிகள் கூறுவதுபோலக் கற்பாறை போன்றவரன்று. ஜடத்தன்மை ஏற்படுமாதலால் ஆனது பற்றி ஸ்புரத் பிரகாசவடிவராவர். ஸ்புரத் பிரகாசத்தன்மையானது தீபம்முதலியவற்றிற் காணப்படுவது போலன்று. இந்த ஸ்புரத்ரூபமே சைதன்னியம், விமர்சம், சிற்சக்தி, கிரியை, ஸ்பந்தம் பராகந்தை என்றவாருக ஆகமசாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வடிவம் இருப்பதனாலேயே பரமாத்மாவுக்கு ஜகத்தைச் சிருஷ்டிக்கும் வல்லமையுண்டு. இதனையே சவுந்தரிய லகரியில் முதற் சுலோகத்தில் கூறியிருக்கின்றார்.

இங்கு, பரமசிவன் அனிர்வசனீயமும், அசத்துமான மாயாசக்தியுடன் கூடுகிருரென்னும் அபிப்பிராயம் கொள்ளத்தக்கதன்று. ஜகத்தை முயற்கொம்பு போன்றதென்னும் பக்ஷத்தில் அதன் கிரியையும் அவ்வடிவமாகின்றதால் பரமாத்மாவுக்கு கிருக்த வடிவத்தைக் கூறுவது பிரயோஜன மின்றியதென்று சொல்லத்தகாது. ஏனென்றால் சூன்யவாதமாய்விடும். ஜகத்தை முயற்கொம்பு போன்றதாகக் கற்பித்தால் "எதனிடமிருந்து இந்தப் பூதங்கள் உண்டாயின" என்றவாருன சுருதி ஸ்மிருதி ஆகமங்களது மொழிகள் உன்மத்தப் பிரலாபம்போன்றவையாகும். பரசிதாத்மாவை ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் சூன்யவாதம் ஏற்படமாட்டாதென்றும் மொழியத்தகாது.

ஒப்புக்கொள்ளப்பட்ட பொருளும் ஜகத்தினுட்புகுந்
திருக்கிறபடியால் முயற்கொம்பு போன்றதென்ற கற்
பனை சித்தியாதாகையால். ஆனால் சொரூபமே ஜகத்
துப்போல இருக்கிறதெனும் பக்ஷத்தில் துவைதமேற்
படுமே. 'இங்கு நானாவென்பது சற்றேனுமில்லை'
யென்று சுருதி கூறுகின்றதேயென்றால்—நீர் அத்வைத
சாஸ்திரம் உணர்ந்தவரல்ல, சாஸ்திரம் ஜகத்தைச்
சூன்யமென்று கூறவில்லை. அதுகூறுவது அத்வைதமே.
"பரமாத்மா ஒருவரே ஜகத்வடிவமாக விளங்குகிறார்"
என்றவாறான சுருதிகள் ஜகத்தின் சத்தியத்தை நிரூ
பிக்கின்றதனால் அத்வைத ஹானியில்லை. கண்ணாடியி
னுள் விளங்குவதான பிரதிபிம்ப நகரமானது வேறா
யிருப்பதுபோல விளங்கினாலும், அதற்குக் கண்ணாடி
யின் சொரூபமன்றி வேறு சொரூப மில்லாததால்
அதன் இரண்டற்ற ரூபத்திற்கு ஹானி வராதது
போலப் பரசிதாத்மாவினிடம் விளங்கும் ஜகத்தும்
பரசிதாத்மாவின் தன்மையுடையதே யாகையால் அத்
வைதரூபத்திற்கு ஹானியில்லை. நானாவில்லையென்று
நிஷேதிப்பதானது துவைதத்தை மாத்திரம் பற்றின
அபிப்பிராயமாம்.

இக்காரணத்தால் சர்வம் மாயையென்ற ஞானம்
அஞ்ஞானமென்று சொல்லப்படும். சர்வம் சிவமென்ற
ஞானமே ஞானமென்று ஞானவான்கள் அறிவார்.
"கடபடசகடங்களான அவபாசக் கூட்டங்கள்யாவும்
அசத்தென்று அறிவது அவித்தையாம். கடபடசகடங்
களான அவபாசக் கூட்டங்கள்யாவும் சத்தென்று
நன்றாய் அறிவது வித்தையாம்." என்பது சூதசங்கிதை
யில் மொழியப் பட்டிருக்கிறது.

ஆகையால், பரசிதாத்மா பரையான மாயை



யென்றுபெயருடைய தன் சுதந்தரத்தினாலேயே தன்
னாத்மாவையே விசித்திர விசுவரூபத் தன்மையாக அவ
பாசிப்பிக்கின்றார். இவ்விதம் அவபாசிதமான விசுவரூ
பத்தில் தன்னால் அவபாசம் செய்யப்பட்ட பரிச்சின்ன
சித்ரூபமான ஜீவதிருஷ்டியாகத் துவைத திருஷ்டி
யுண்டாவது ஜீவர்களுடைய பந்தமாம். அத்வைத
திருஷ்டி மோக்ஷம், சுதந்தரம், விசுவரூப அவபாசம்,
ஜீவாவபாசனம் அவரது பந்தத்தின் அபவாசம்
மோக்ஷத்தின் அவபாசனம் இவையாவும் கண்ணாடிப்
பிரதிபிம்பம்போலப் பகவானால் தன் சுதந்தரத்தினால்
அவபாசம் செய்யப்பட்டன. தன் சங்கற்ப நகரம்போல்
அவபாசத் தன்மை ஒன்றையே பொருந்தியிருப்பன
வாம். அவபாசனமும் பரசிதேக ரூபமானது. இப்படி
யாவும் களங்கமற்றனவாம்.

ஆதலால் பரசிதாத்மா விடத்தில் விமர்சமானது
ஜீவிதமாக விருக்கிறது. சுழுத்தியில் நித்திரை வடிவ
மான ஜடசக்தியினது பிரதிபலனத்தினால் விமர்சம்
மறைபட்டு வலுவற்றிருப்பதனால் அவ்வேளையில் பிரகா
சம் நிபிடமாக விருந்தும் எவ்விதத்திலும் அஃது
மூடத்தன்மையுடைய தசையென்று எல்லா வித்து
வான்களாலும் தீர்மானம் செய்யப் பட்டிருக்கிறது.

## பதினேழாவது அத்தியாயம்

## I. "விஞ்ஞான சொரூபம்"

சிரவணத்தாலுண்டாகும் பரோக்ஷ ஞானத்திற்
குப்பின் அந்தப் பரோக்ஷஞானம் ஆத்மதெய்வத்தைப்
பற்றியதா அஃதன்றாவென்று ஆகமத்திலடங்கியதாக்

கங்களினால் நிச்சயம் செய்துகொள்ள வேண்டியது. மனன வடிவமான இத்தகைய விசாரத்தினால் எல்லாச் சம்சயங்களும் நசித்து விடும். இவ்வாறு மனனம் செய்தபிறகு மனனத்தினால் தீர்மானிக்கப்பட்ட இரண்டற்ற ஆத்ம தத்துவத்தைத் தியானம் செய்ய வேண்டியது. அதாவது, அவ்வடிவமாகச் சித்தத்தைத் தாரணை செய்ய வேண்டியது. விடாமல் தாரணை செய்ய வேண்டும். சித்தமானது அதிகமாகச் சலிப்பதனால் அவ்வடிவமாகத் தாரணை செய்ய முடியாவிடில் கஷ்டப்பட்டு ஹடவிர்த்தியினாலாவது தாரணை செய்ய வேண்டியது. முயற்சியின்றி இருந்துவிட லாகாது. "கையைக் கையினால் கட்டிக்கொண்டு பற்களைப் பற்களால் நெருக்கிக்கொண்டு அங்கங்களை அங்கங்களினால் வசப்படுத்திக்கொண்டு தன்னுடைய மனதை முன்னதாக ஜயிக்க வேண்டும்" என்று வாசிஷ்டம் கூறியபடி தீவிரமான யத்தனம் செய்ய வேண்டும். ஹடவிர்த்தியென்றால் பிராணனை அடக்கிக்கொண்டு தாரணை முதலியன செய்வது. எவ்வளவு காலம் இங்ஙனம் தியானம் செய்ய வேண்டுமென்றால் அபரோக்ஷானுபவம் உண்டாகிறவரையில். நிதித்தியாசத்தினால் பிரத்தியகாத்ம தத்துவம் அபரோக்ஷமான பிற்பாடு தியானிக்கப்பட்ட பிரத்தியகாத்ம தத்துவத்தையும் பரமாத்ம தத்துவத்தையும் 'ஸோஹம' என்ற விகற்பத்திற்கு விஷயமாகச் செய்துகொள்ள வேண்டும், "அவன் நான்" என்று அதனை ஞாபகப்படுத்திக் கொள்க. இதுதான் பிரத்தியபிஞ்ஞாஞானம். இந்தப் பிரத்தியபிஞ்ஞாஞானத்திற்கு அகண்ட வஸ்துவானது விஷயமாயிருப்பதால் இது நிர்விகற்ப சமாதிக்கு நிகராகவிருந்தாலும் சாமக்கிரி பலன்களுடைய பேதத்



தால் விகற்பத் தன்மையுடையதென்றறிய வேண்டியது. இவ்விதமாக விகற்பத்திற்கு விஷயமான அத்வைத ஆத்மதத்துவம் அஞ்ஞானத்தை நாசம் செய்கிறது.

(இதுவே பின்னும் ஸ்பஷ்டமாக விவரிக்கப்படுகிறது). சிரவண மனனங்களால் தீர்மானிக்கப்பட்ட பிரத்தியகாத்ம தத்துவத்தைத் தியானிப்பது பக்குவமாகும் பொழுது அத்தகைய பக்குவத் தியானமே நிர்விகற்ப சமாதி. இங்கு இது கருத்து. த்யானத்திற்கே பரிபாகத்தின் தாரதம்மியத்தினால் சவிகற்ப சமாதியென்றும், நிர்விகற்ப சமாதியென்றும் பெயர். அங்கு * சித்தமானது சுத்த ஆத்மாகாரமாகவே நீடித்தகாலம் இருக்கட்டுமென்று சங்கற்பித்து அச்சங்கற்பத்தை மறந்து விடாமல் அஃது ஸம்ஸ்காரரூபமாகவிருக்க, தியானிக்கப்பட்டதின் வடிவமாகச் சித்தம் இருந்து கொண்டிருப்பதின் மத்தியில் எதுவரையில் சங்கற்பத்தின் மறதியினால் சித்தத்தின் த்யேயாகார வடிவம் தாண்டிக்கப்படுகின்றதோ அதுவரையில் அதற்குத் தியானமென்று பெயர். இத்தகைய தியானாப்பியாசத்தின் தேர்ச்சியினால் கோரினகாலம் வரையில் சங்கற்ப சம்ஸ்காரம் தாண்டிக்கப்படாமல் சித்தத்தில் † த்யேயாகாரத்தன்மை தொடர்பாக இருக்குமானால் அது சவிகற்ப சமாதியாம். இச்சவிகற்ப சமாதி அப்பியாசத்தின் தேர்ச்சியினாற் சங்கற்ப ஸம்ஸ்காரத்தை அபேக்ஷியாமலே கோரிய காலம் வரையில் சித்தத்தில் த்யேயாகாரத்தன்மை தொடர்ந்திருக்கு

* சித்தம் = மனது.

† த்யேயாகாரம் = தியானிக்கப்பட்டதன் வடிவு.

மானால் அஃது நிர்விகற்ப சமாதியாம். இது பரமானந்தத்தில் (ஒரு கிரந்தத்தில்) சொல்லப்பட்டிருக்கிறது. "நினைப்புடனிருந்தும் துண்டிக்கப்படுவது தியானமென்று சொல்லப்படும். நினைப்புடன் துண்டிக்கப்படாதிருப்பது குணத்தன்மையுடைய சமாதியாம். நினைப்பில்லாமலும் துண்டிக்கப்படாமலுமிருப்பது சமாதி இதுபலனெனப்படும்.

தியானத்தின் பக்குவநிலையான இத்தகைய நிர்விகற்பசமாதியில் சுத்தமான பிரத்தியகாத்ம தத்துவத்தை அடைந்து, விஷயமாக்கி, பிறகு எழுந்த அடுத்த க்ஷணத்தில் சமாதியிலனுபவிக்கப்பட்ட பிரத்தியகாத்மதத்துவத்தையும், சாஸ்திரத்தினால் நிரூபிக்கப்பட்ட பரமாத்மதத்துவத்தையும் ஞாபகப் படுத்திக்கொண்டு "இந்த அத்வைதாத்மா நானாயிருக்கிறேன்" என்று பிரத்தியபிஞ்ஞாஞானவான் ஆகின்றான். ஆனால் சமாதியானது நிர்விகற்பப் பிரகாசத் தன்மையுடையதாகவிருக்க அதிலிருந்து எழுந்தவனுக்கு அதன் ஞாபகம் எங்ஙனமுண்டாகும்? ஸவிகற்பஸம்ஸ்காரத்திற்கன்றோ ஞாபகத்தையுண்டாக்குந் தன்மை என்றால், சமாதானம்.—நிர்விகற்பமென்பது கடம் முதலியவற்றைக் கேவலம் பிரகாசிப்பிப்பதே. அது ஸம்ஸ்காரத்தின் ஞாபகத்தை உண்டாக்குவதானதன்று, அங்ஙனமன்றேல், நிர்விகற்ப திருஷ்டியுடன் மார்க்கத்தில் பார்த்தவைகளுடைய ஞாபகமும் உண்டாகவேண்டும். அவ்வாறு நினைக்கப்படுகின்றதில்லை. இதுகடம் இதுபடம் என்ற சவிகற்பஞானமே நினைக்கப்படுகின்றது. ஆதலால் நிர்விகற்ப திருஷ்டியில் எம்மட்டிலும் சவிகற்பவியாபாரமுண்டோ அம்மட்டிலுமே சிறிது என்று கூறத்தக்கதாய் மனுஷியனென்றும், புருஷனென்றும்,



தேவதத்தனென்றும் நினைப்பின் வேற்றுமை ஏற்படுகிறது. இவ்விஷயத்தில் சிலர், சமாதியின் உத்தரக்ஷணத்தில் சவிகற்ப வாயிலாகவே ஸ்மிருதி (நினைப்பு) உண்டாகிறதென்கின்றார்.

மற்றவர்கள்—சுத்தமான பிரத்தியகாத்மா சவிகற்பத்திற்கு விஷயமாகாதாகையால் சமாதி அனுபவத்திலிருந்தே ஸ்மிருதியென்கின்றார். (சவிகற்பசமாதியானது கூறிய சங்கற்பவடிவமானதாலும் சுத்தசொரூபத்தை விஷயமாகக் கொள்ளாததாலும்) சவிகற்ப சமாதியில் சுத்தமாகியது விஷயமாயிருக்கிறதென்று மொழியத்தகாது. ஆனால் நிர்விகற்ப ஸம்ஸ்காரம் நினைப்பினால் எடுத்துக் கொள்ளப்படுவதெங்ஙனமென்றால், சமாதானம்—சவிகற்பத்திலிருந்தே நினைப்புண்டாக வேண்டுமென்று நியமமில்லை. பேதத்தின் தோற்றமே விகற்பமாம். மார்க்கத்தில் நிர்விகற்ப திருஷ்டியுடன் பார்க்கப்பட்டவைகளும் "சிறிது" என்றவாறுகச் சாமான்யவடிவமாய் நினைக்கப்படுவதால். இது பற்றியே சுழுத்தியில் நிர்விகற்ப திருஷ்டாவுக்குக் கூறப்பட்ட அவ்வியக்தத்தின் ஸ்மிருதியுண்டாவதும் பொருத்தமுடையதாகிறது.

நிர்விகற்ப சமாதியிலிருந்து ஸ்மிருதியுண்டாவதில்லையென்று கூறப்படுவதால் அதற்குச் சமாதானம். எந்த ஞானத்தில் எதனுடைய யாதொரு அம்சம் நன்றாய் ஸ்புரிக்கின்றதோ அந்த அம்சத்துடன் அதன் ஸ்மிருதி காலாந்தரத்தில் உண்டாகிறது. ஸர்வஞானத்தில் திருசியத்தினுடைய எல்லா அம்சங்களும் ஸ்புரிக்கின்றதில்லை. ஆனால் "எவ்விதம் சோரிக்கையோ எவ்விதம்கேட்டமோ" என்றவாறு பிரத்தியபிஞ்ஞா சாஸ்திரம் கூறியபடி சில அம்சங்கள் மாத்திரமே ஸ்புரிக்

கின்றன. இக்காரணத்தினாலேயே எல்லா விகற்பங்களும் நினைப்பேயென்பதில் சாஸ்திரஞ்ஞர்களுடைய அபிப்பிராயத்தில் பேதம் காணப்படுகின்றது.

ஆகையால், நிர்விகற்ப சமாதியில் சுத்த சொரூபத்தின் ஸ்பூர்த்தியிருப்பதால் ஸ்மிருதியுண்டாவது பொருத்தமுடையதென்று கூறுகின்றார். இவ்விஷயத்தை விஸ்தாரமாகப் ப்ரத்திய பிஞ்ஞாதாத்பரியவிவரணத்தில் பார்க்க.

## பத்தோன்பதாவது அத்தியாயம்

### J. "சமாதிலக்ஷணம்"

நிர்விகற்பமான ஆத்மதத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு விமர்சத்தை முன்னிட்டு அநுசந்தான வடிவமாக யாதொரு நிரோதம் உண்டாகின்றதோ அதுவே அவர்களுடைய சமாதியென்று வித்துவான்களால் கருதப்பட்டுள்ளது. இங்கு இது விஞ்ஞானரகசியம்— நிர்விகற்ப சிதாத்ம தத்துவத்தைச் சிரவணம் முதலியவற்றால் உணர்ந்துகொள்ளாத ஹடயோகிகள் இருவகைப்படுவர். பாதஞ்சலக்கூற்றாகிய அஷ்டாங்க சித்தியுடையவன் ஒருவன். அங்கு கூறப்பட்ட ஷட்கர்மம் முதலிய சாதனங்களை முன்னிட்டுப் பிராணாயாம மிகுதியினால் குண்டலி சுழுமுனையைப் பேதிக்கும் வாயிலாகச் சித்திபெற்றவன் மற்றவன். இவரில் முதற் கூறியவன் சமாதிக்கு முன்னதாக அனாத்ம விகற்ப அநுசந்தானத்தை அகற்றச் சங்கற்பித்துக் கிரமமாக எல்லா விகற்பங்களையும் அகற்றிப் பின் எல்லா விகற்-



பங்களுடைய அபாவத்தையும் அநுசந்தானம் செய்து பின் அந்த அநுசந்தானத்தையும் விட்டு அந்த ஸம்ஸ்கார சேஷமாகமட்டினும் இருக்கின்றான்.

இரண்டாவது கூறியவன், சுழுமுனையில் பிராணவாயுவை அத்திபந்தம் புகும்படி செய்வதால், அங்கு பிராண நிரோதத்தால் முதலினுண்டாகும் ஆயாசமானது, சுழுமுனையினுள் புகுவதால் நசிக்கின்றபடியால், சுமை நீங்கப்பெற்றது போல, சுகம் பெறுகின்றான். பின் அவன் மனது மதமூர்ச்சையினால் கவரப்பட்டதுபோல மூர்ச்சையடைந்தவாறாகின்றது. இருவருக்கும் அக்காலத்தில் சுழுத்திபோலச் சுகரூபமுண்டாகின்றது.

சிரவணமுதலியவற்றால் நிர்விகற்ப சிதாத்ம தத்துவத்தை உணர்ந்த ஞானயோகிகளுக்குச் சமாதி அடைவதற்கு முன்னதாகவே அவித்தியாவரணம் நீங்கிய நிர்விகற்ப ஆத்மதத்துவம் பிரதிபிம்பங்களால் சித்திரிதமான கண்ணாடிபோலத் திருசிய விகற்பங்களால் விசித்திரமானதாகி எப்பொழுதும் ஸ்புரிக்கின்றது. தவிர, சமாதிக்குமுன் விகற்ப அம்சத்தை நீக்கி, விகற்ப அம்சத்தின் நீங்கலுக்குச் சாக்ஷியான நிர்விகற்ப சித்ரூபனாகச் சேவிக்கின்றான். ஆனால் ஹடயோகியானவன் இவ்வடிவமாகவே இருக்கிறானென்று மொழியத்தகாது. ஞானயோகிகளுக்கே சமாதியின்கண் பரிகரிக்கப்பட்ட அஞ்ஞானாவரண விக்ஷேபங்களுடையதான இவ்வித வடிவமுண்டாகின்றது. ஹடயோகிகளுக்கு அச்சமயத்தில் பரிகரிக்கப்பட்ட அஞ்ஞான விக்ஷேபாம்சத்துடனிருந்தாலும், அஞ்ஞானாவரணாம்சத்தினால் சொரூபம் மறைக்கப்பட்டதாகவே யிருக்கும். ஞானிகளுக்கு அபரோக்ஷ ஞானத்தினால் (நிதித்தியா

சத்தில்) ஆவரணாம்சம் நஷ்டமாய் விடுகின்றபடியால் சொரூபம் ஆவரிக்கப்படுகின்றதில்லை.

ஆனால் ஹடயோகிகளுடைய சுழுத்திக்கும் சமாதிக்கும் யாதுவித்தியாசமென்றால்—சுழுத்தியில் மனது தமசின் பரிணாமத்தால் இருண்டமேகத்தாலுண்டாகும் நிசியிருளைப்போலக் காடமான மூடத்தன்மையை அடைகின்றது. சமாதியில் மனதின் சத்துவ பரிணாமத்தால் ஆத்மதத்துவம் விளங்கினாலும், வெண்மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியன்போல அது அவித்தையினால் சுற்றப்பட்டிருக்கிறபடியால் செம்மையாக விளங்காதிருக்கின்றது. ஞானிகளுக்கு மனதின் சத்துவ பரிணாமத்தால் அவித்தையின் ஆவரணம் இல்லாமற்போய்விடுகிறபடியால் மேகமின்றிய நிர்மல ஆகாயத்தினிடம் விண்மணிபோல, ஆத்மா ஸ்பஷ்டமாகப் பிரகாசிக்கின்றது. இதுவே ஆத்மதத்துவமென்று ஆத்மதத்துவத்தை நன்றாய் உணர்ந்தவர்களுடைய தீர்மானம். இவ்விதம் ஞானிகளுடைய சமாதிக்கே சமாதித் தன்மையென்பது நிரூபிக்கப்பட்டது. (ஹடயோகிகளுக்குச் சமாதியில் மனதின் ஸத்துவபரிணாமம் உண்டாயும் ஆவரணம் அகலாதிருக்கிறதென்பது கருத்து.)

## இருபத்திரண்டாவது அத்த்யாயம்

## K. ‘‘ஞானிகளது பிராரப்தகர்மம்’’

இங்கு இதுகருத்து.—அதிர்ஷ்டபலனை உத்தேசித்துக் கர்மம் கற்பிக்கப்படுகிறது. ஞானிகளிடம் பலன் காணப்படுவதால் ஞானத்தினால் பிராரப்தம் நிவிர்த்தி



யாகின்றதில்லையென்று சொல்லப்படுகிறது. அந்தப் பலன் மந்த ஞானிகளுக்கே உண்டாகிறபடியால் அவர் விஷயத்தில் மாத்திரமே பிராரப்தம் கற்பிக்கத்தக்கது; மற்றவருக்கன்று. அந்தக்கரணத்தில் ஏறுவதான யாதொரு சுகம் முதலியன தன்னுடையனவென்று விளங்குகின்றனவோ அவைகளே பலனெனப்படும். மத்தியம உத்தம ஞானிகளுக்கு அந்தக்கரணத்தில் ஏறுவதானவை தம்மதென்று விளங்குகிறதில்லை. அவ்வாறு விளங்குகிறதென்று மொழியத்தகாது சமாதியில் சுகம்முதலியனதீர விளங்காதாகையால் எழுந்திருக்கும்பொழுது, பிரதிபிம்பங்களுக்குக் கண்ணாடியின் சொரூபமின்றி வேறில்லாததுபோலத் திருசியமான அனாத்மா திருக்குமாத்திரமாக விளங்குவதாலும் ஆத்மமாத்திரமாகவிளங்கும் சுகம்முதலியன தன்னதென்று விளங்காதாகையாலும் ஆத்மதன்மையாக விளங்கும் சுகம்முதலியன பிராரப்த நிமித்தமேயென்று சொல்லத்தகா. பிறருடையதாகவிளங்கும் சுகம் முதலியனவும் சாமான்னியமாக விளங்குவதால் அவைகளும் தன் பிராரப்தத்தால் ஏற்பட்டதென்ற சங்கைவரும்—அவ்விதம் மொழியத்தக்கதன்று. ஏனென்றால், பிறரால் உணரப்படும் சுகாதிகளால் ‘‘நான்சுகி’’ யென்று தன்னிடத்தில் சம்பந்தமுண்டாக நிமித்தமில்லாததால் கடம் முதலியவற்றை அடைதல்போலவே அப்பலன்களை அடைவதும். ஆகையினால் பலன்போன்ற சுகமின்மையால் இவர்களுக்குப் பிராரப்தத்தைக் கற்பிப்பதில் பிரயோஜனமில்லை.

மந்தஞானிகளுக்கு, யாவும் சின்மாத்திரமென்ற சத்தியவாசனையின் அனுசந்தானம் மறைபட்டு, வியவகாரத்தில் புகும்வேளையில் அப்பொழுதுண்டாகும் சுகம்

முதலியன தன்னுடையனவென்று விளங்குகிறபடியால் அவர்விஷயத்தில்பிராரப்தத்தைக்கற்பிப்பதில்பிரயோஜனமுண்டு. ஆனால்மந்தஞானிகளுக்கு வாஸ்தவசொருபத்தின் அனுசந்தானம் பின்னமாகி விபரீதப்பிரத்யயம் உதிப்பதால் அந்த விபரீதப்பிரத்யயத்தால் பிரதிபந்தமடைந்த ஞானம் புருஷார்த்தத்திற்குச் சாதகமாகாதெனும் பக்ஷத்தில் உண்மைதான்; அங்ஙனமல்லவென்று சிலர் கூறுகின்றார். தத்துவவித்துக்குப் பூரணஞான சமகாலத்திலேயே அஞ்ஞானம் நிவிர்த்தியாகின்றதாலும், சொருபாவரணம் நஷ்டமாகின்றதாலும், பிராரப்த நிமித்தம் அஞ்ஞானத்தின் விக்ஷேப சக்தியே சிலகாலம் அனுவிர்த்தியாகின்றது (தொடர்கின்றது). பலனைக் கொடுப்பதனாலேயே பிராரப்தம் தானாகவே அறும்பொழுது தேகாந்தரங்களை அடைதற்குரிய கர்மமில்லாததாலும் அதற்குரிய சொருபாவரக அஞ்ஞானமாகிய நிமித்த மில்லாததாலும், விகற்பத்தை உற்பன்னம் செய்வதான அந்தக்கரணமும் விறகில்லா நெருப்புப்போல, நசித்திருக்கிறபடியாலும் தேகாந்தரம் சம்பவியாதாகையால் பிரஹ்மமாத்திரமாய்ச் சேஷிக்கும் மோக்ஷமானது தள்ளத்தக்கதன்றே. ஆனால் எவனுக்கு விபரீதப்பிரத்யயத்தால் ஞானம் பாதிக்கப்படுகிறதோ அவனுக்குப் பூரணஞானமில்லை. பின்யாதென்றால் ஞானாபாசமே. இதுபற்றியே கேவலஞானிக்கும் ஜீவன்முக்தனுக்கும் சாஸ்திரங்களில் பேதம் கூறப்பட்டிருக்கின்றது.

மந்த ஞானிக்குச் சதா அனுசந்தானமில்லாததால் “எவ்வெப்பாவத்தை ஸ்மரிக்கின்றானோ” என்ற நியாயப்படி பிராரப்த நிமித்தக விபரீத ஸ்மரணையினால் தேகாந்தரமுண்டோவென்றால், இல்லை. மத்தியம உத்



தமஞானிகளுக்கும் பிராரப்த நிமித்தக விபரீத பாவனையைத் தடுக்கக்கூடாதாகையால் “எதை எதை” யென்பது ஞானியைப்பற்றிய வசனமன்று.—அஞ்ஞானம் ஞானசமகாலத்திலேயே நஷ்டமாகிப் பிராரப்தம் நசிக்கின்றபடியால் இவர்களுக்குப் பலனாகாது ஏற்படும் சுகம் முதலியவற்றின் ஆகஸ்மிகத்தன்மையை அகற்றும் பொருட்டுப் பிராரப்தமென்பது சிறிது அங்கீகரிக்கப்பட்டதேயன்றி வேறல்ல. இவ்விருவருக்கும் பிராரப்தமில்லை. ஆனால் மந்தஞானிக்குப் பிராரப்த விபரீதம் போன்றிருப்பதால் என்று சங்கைவரும். இவனுக்கும் பிராரப்தமில்லை ஞானிகளுக்கு அந்தியகாலத்தில் விபரீத ஸ்மரணையுண்டாகா தாகையால். ஆதலால் திருஷ்டாந்தத்தின் இருப்பு இன்மைகளால் கேவலஞானிக்கும் ஜீவன்முக்தனுக்குமுள்ள வேற்றுமையைத் தெரிந்துகொள்ளவேண்டியது. புண்ணிய தீர்த்தத்திலாகட்டும், நாய்தின்பவன் மனையிலாகட்டும், நினைவின்றித் தேகம் அகன்றாலும் ஞானசமகாலத்தில் முக்தனானவன் கைவல்லியத்தை அடைகின்றான் என்று கூறப்பட்டுள்ளது. பிரமாணத்தினாலாவது, சாஸ்திரத்தினாலாவது, குருமொழியினாலாவது, எல்லாமாயிருக்கும் சிவதத்துவத்தைத் திடமாக ஒருதடவை அறிந்தானாயின் அவனுக்குக் காரணத்தினாலாவது பாவனையினாலாவது செய்யப்படுவதானது ஒன்றுமேயில்லை,

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

## L. சொரூபத்தின் ஆனந்தத்தன்மை

---

சங்கற்பத்தினால் விளங்குவதான திருசியத்தை அனுசந்தானம் செய்யாமல் தீர ஒழித்துவிட்டால் அவ்வனுசந்தானமின்மைக்குச் சாக்ஷியாகச் சேஷித்திருக்கிற தன்னாத்ம ஸம்வித்தே இரண்டற்ற பரஸம்வித்தாகும். இவ்வடிவத்திற்குப் புருஷார்த்தத்தன்மையைச் சாதிப்பதின்பொருட்டு இதற்குச் சுகவடிவத்தன்மை கூறப்படுகிறது இது அகண்டமான ஆனந்தத்தினால் கனவடிவமானது. இதற்குக் காரணம் யாதென்றால்— துக்கம் உபாதியின் தன்மையுடைய தாகையாலும், சொரூபத்தினிடம் அஃது வாஸ்தவத்தில் இல்லாதபடியாலுமாம். விஷயங்களால் ஏற்படுவதான சர்வமான பிராணிகளுடைய எவ்வகை ஆனந்தங்களுண்டோ அவ்வானந்தங்களால் கனவடிவங் கொண்ட சொரூபந்தான் அவள். ஏனென்றால் அவள் எல்லோராலும் கோரப்பட்டவளாயிருக்கின்றாள். ஆனால் எல்லோராலும் கோரப்பட்ட சுகம்போக்கியமன்றோ. அஃதெங்ஙனம்போக்தாவின் வடிவுடையதாகுமென்ற ஆக்ஷேபத்திற்குச்சமாதானம். எல்லோராலும் கோரப்பட்டிருப்பதால் ஆத்மசொரூபமேசுகமாம். அங்ஙனமன்றேல் அது அவ்விதமாகாது. ஆனால் இந்த ஏதுவானது தேகம், ஸ்திரீ, தனம் முதலிய கோரப்பட்டவைகளில் வியபிசரிக்கின்றதே யென்றால், தேகாதிகளில் முக்கியமான கோரப்படுந் தன்மையில்லை. ஏனென்றால் தேகாதிகள் ஆத்மசுகத்தின் பொருட்டே கோரப்படுகின்றன. இக்காரணத்தாலேயே சொர்க்கம் முதலிய சுகத்தைக் கோரு



வோர் உணவொழித்துத் தேகாதிகளைத் தியாகஞ்செய்வதுங் காணப்படுகின்றது. இது பற்றியே ஆத்மசொரூபமானது ஒரு விதத்திலும் ஒருபொழுதும் கோரப்படாதது அன்று. ஆகையினால் ஆத்மாவே முக்கியமாகக் கோரப்பட்டிருப்பதால் அஃது சுகவடிவானதென்று அபிப்பிராயம்.

ஆனால் ஸ்திரீசுகம் முதலியவற்றில் போக்கியத்தன்மை ஸ்பஷ்டமாக அனுபவிக்கப்படுவதாலும் இஃதன்றிய சுகம் பிரமாணமன்றாகையாலும் ஆத்மா சுகவடிவமானதன்று என்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம். யாதொரு ஆத்மானந்தமுண்டோ அதன் இலேசமே விஷயானந்தமென்று ஆகமங்கள் கூறுகின்றன. கிரியையின்றிய ஆகாயத்திற்குக் கடம்முதலியவற்றால் பரிச்சின்னமான அம்சத்தினிடமாக, உபாதி சம்பந்தமான கிரியை காணப்படுவதுபோலும், அறியப்படாத சிதாத்மாவும் பரிச்சின்னங்களான திருசியங்களாகி உபாதியினால் அறிபடு பொருளானதுபோலும், ஆத்மசுகமும் பரிச்சேத நிமித்தத்தால் உபாதித் தன்மையுடைய போக்கிய சுகமாகின்றதென்பது கருத்து.

ஆனால் ஆத்மாவிற்குச் சுகத்தின் தேட்டமேயன்றிப் பிரமாணமில்லாததால் அதற்குச் சுகவடிவமில்லை என்ற சங்கைக்குச் சமாதானம். சொரூபபூதமாயிருக்கும் ஆனந்தமே பாரத்தை நீக்கியமுதற்கணத்திலும் சுழுத்தியிலும் விளங்குகிறது. இங்கு இது கருத்து. சுமையை நீக்கியபின் எல்லோராலும் அனுபவிக்கப்படுவதான சுகம் தள்ளத் தகாததாயும் தன் உணர்வில் பட்டதாயுமிருக்கிறது. இதனில் ஸ்திரீசங்கம் முதலிய நிமித்தங்களில்லாததால் இது சொரூப

பூதமானது. இது சுமையின் நீங்கலினால் ஏற்பட்டதென்றும் மொழியத்தகாது. சுமை நீங்கல் அபாவமாகையாலும் அபாவத்திலிருந்து பாவம் உண்டாகாதாகையாலும், சுகம் ஏற்படுவதற்குக் காரணமாக வேறுயாதொன்றும் இல்லை. ஆகையினால் அஃதுசொரூபபூதமான சுகமேயாகும். ஆனால் கடுமையான துக்கத்தின் நிவிர்த்தியே பிராந்தியினால் சுகம்போலத் தோற்றுகின்றது என்ற சங்கைக்குச் சமாதானம். சொஸ்தனாகவிருக்கும்பொழுதும் புருஷன் சுழுத்தியில் நிர்நிமித்தமாக மகத்தானசுகத்தை அனுபவிக்கின்றான். எழுந்தவனுக்குச் சுகமாக உறங்கினேனென்று ஸ்மிருதியுண்டாவதால் அந்தச் சுகம் தள்ளத்தக்கதன்று. இதுவும் சொரூபபூத சுகமே யாம். இங்கு (சுழுத்தியில்) சுகமில்லையென்றால் பசு பாமரர் முதலிய யாவருக்கும் சுழுத்தியினிடமாகப் பிரவிர்த்தியுண்டாக மாட்டாது.

ஆனால் சுகமானது சொரூப பூதமாயிருந்தால் அஃதேன் எப்பொழுதும் அனுபவிக்கப் படவில்லையென்றால்—எல்லோருக்கும் ஆதாரத் தொனியானது இடைவிடாது விளங்கிக் கொண்டிருந்தாலும் பாகியத் தொனியால் மறைபட்டிருக்கின்றது. இதற்காகச் செவிகளை நன்றாய் மூடிக்கொண்டால் அத்தொனி கேட்கப் படுகின்றது. இவ்விதமே தன்னாத்ம சுகமும், காமங்கள், கர்த்தவ்வியங்கள் முதலிய அகில வாசனைக் கூட்டங்களான காட்டுத்தீயினால் தகிக்கப் படும் துக்கத்தால் மறைபட்டிருக்கிறது. இந்த வாசனைக்கூட்டங்கள் சுழுத்தியில் தமது காரணத்தில் விலயமாவதால் செவிகளை மூடிக்கொண்டால் தொனிகேட்பதுபோல ஆத்மசுகமானது ஸ்பஷ்டமாக விளங்குகிறது.



சுமையை வகித்திருக்கும் தருணத்தில் சுமைநிமித்தமான மகாதுக்கத்தினால் வாசனைக் கூட்டங்களால் ஏற்படுவதான துக்கம் மறைபடுவதாலும் சுமையின் துக்கம் மறைபடாதிருப்பதாலும், சுமையின் துக்கமே முக்கியமாக மேலிட்டிருக்கும். சுமையை நீக்குவதால் அந்தத்துக்கம் நிவிர்த்தியாகும்பொழுது வாசனாதுக்கம் உற்பவமாகும் வரையில் ஆத்ம சுகமானது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. ஸ்திரீ முதலிய விஷய சுகமும் இவ்விதமேயாம். முட்களைப்* போலச் சதா குத்திக்கொண்டிருப்பதான அளவற்ற வாசனைகள் இருதயத்தில் இருக்கின்றன. அங்கு ஒரு விஷயத்தின் அடைவை நினைத்துவிட்டால் அவ்விஷயத்தைப்பற்றிய காமத்தின் கடுமையினால் அதிலிருந்து முண்டாகும் தாபமானது கடுமையாயிருக்கும் பொழுது அன்னியங்களான எல்லா வாசனைகளும் மறைபட்டவைபோலவாகின்றன. பின் அவ்விஷயத்தை அடையும்பொழுது மகா துக்கம் சமனமாகின்றபடியால் மற்ற காமம் உதயமாகும் வரையில் ஆத்மசுகம் ஸ்பஷ்டமாய் அனுபவிக்கப்படுகிறது. ஆகையினால் எல்லோராலும் கோரப்படுவதால் சிதாத்மாவே ஆனந்தமென்று சொல்லப்படுகிறது.

ஆனால், எல்லோரும் சுகத்தை ஆத்மபூதமென்று ஏன் அறிகிறதில்லையென்றால்—மூடத்தன்மையாலேயே அவ்விதம் அறியாதிருக்கின்றார்கள் என்றுகருத்து. இதற்குக் காரணம் யாதென்றால், வியஞ்சகங்களாகிய ஸ்திரீ முதலியவற்றின் பேதத்தால், சுகமானது அந்தந்தக்காலத்தில் உண்டாகி அழிகிறதென்று கருதுவதால் ஸ்திரமான ஆத்மசுகத்தை மூடர்கள் அறிகின்றதில்லை.

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

## M. " அஸத்கியாதி நிராகரணம் "

அஸத்கியாதி வாதிகள் நிரதிஷ்டானமாகவே பிராந்தியுண்டாகிறதென்கின்றார்கள். அவர்கள் மதத்தின் மறுப்பு இங்கு கூறப்படுகிறது. அவர் மதத்தில் இது வெள்ளி என்று அசத்தை ஆசிரயித்த ஞானம் உண்டாகிறது. இவ்விதமே ஜகத்தின் ஞானமும் அசத்தை ஆசிரயித்ததென்கின்றார்கள். ஜகத்து நாஸ்தி (இல்லை) யென்ற நிச்சயத்தை முன்னிட்டுச் சூன்யத்தையே நீடித்துப் பாவனை செய்வதால் ஜகத்தின் பாவனை ஒழியும் பொழுது சூன்யாத்மத் தன்மையை அடைதலே மோக்ஷமென்பது அவர்களது நிலை. இதனைத் தூஷிக்கின்றார். ஜகத்து நாஸ்தியென்பதானது பிராந்திவடிவமான அபூரண திருஷ்டியேயாம். எவ்விதம் கடம் முதலியன எவ்விதத்திலும் அசத்தன்றோ, ஆனால் மிருத்து முதலியவற்றின் வடிவாகச் சத்தாயிருக்கின்றதோ அவ்விதமே ஜகத்து எவ்விதத்திலும் அசத்தன்று. பின் யாதென்றால், சித்வடிவமாகச் சத்தேயாகும். ஆதலால் ஜகத்து அத்தியந்தம் (நிர) நாஸ்தியென்ற நிச்சயமானது பிராந்தியே என்பது கருத்து. ஏனென்றால், எவ்விதத்திலும் இல்லையென்ற விபரீத நிச்சயமானது பிரமாணத்தன்மை பொருந்தி ஒரு பொழுதும் சித்தியாது. ஏன் சித்தியாதென்றால், இருக்கிறது இல்லையென்ற இருபக்ஷங்களையும் சாதிப்பவனான சிதாத்மாவின் சொரூபமாக ஜகத்துக்காணப்படுவதாலும் சர்வத்தையும் நிஷேதித்த பின்பும் மறு



படியும் ஸ்பஷ்டமாய்ச் சம்பவிப்பதாலுமே. கடம் முதலியன விகாரத்தன்மையாக இல்லையென்று நிஷேதித்தாலும் மிருத்து வடிவமாகத் தள்ளத்தகாதது போலத் திருசிய ஜகத்து திருசியத்தன்மையாக நிஷேதிக்கப்பட்டாலும், அதன் திருக்கு வடிவமான அவபாசம் தள்ளத்தக்கதன்றென்று கருத்து. இங்கு இது தத்துவம். ஜகத்து, மிருத்தின் தொடர்புடைய கடம் முதலியன போலச் சித்தின் தொடர்புடையதாகவே விளங்குகின்றது. இதன்கண் மற்றவர் (அஸத்கியாதி வாதிகள்) அஸத்கியாதியைப்பற்றியிருப்பதால் விளங்குவதை எவ்விதத்திலும் நிஷேதிக்கின்றார்கள். இதற்குச் சமாதானம். நிஷேதிப்பவன் நிஷேதிக்கப்படுவதனுள் அந்தர்க்கதன் (உட்பட்டவன்) ஆகியிருப்பதால் நிஷேதம் சித்தியாதாகையால் நிஷேதிப்பவனிடம் தொடர்பாயிருக்கும் சிதாத்மா நிஷேதிக்கத்தக்கதன்று. அவர்கள் எவ்விதத்திலும் நிஷேதிப்பதனிடம் கருத்து இதுவாம்,—சித்தானது சவிகற்ப சுபாவமானது. அதுவே சம்சாரமாம். அன்னியப் பிரமாணமின்றிய நிர்விகற்பத்தால் சர்வமும் நிஷேதிக்கப்படும்பொழுது மோக்ஷ சித்தியென்றும், நிஷேதிப்பவனை நிஷேதிக்கத் தகாததுபற்றியே நாஸ்தியென்ற சாபத்தினால் மட்டிலும் எவ்விதத்திலும் ஜகத்திற்கு விலயமில்லை என்றும் கூறப்பட்டது. சர்வசாதகனான சிதாத்மா, சர்வத்தை நிஷேதித்த பின்னும் சமாதி முதலியவற்றில் நிர்விகற்பனாகவும் சொப்பிரகாசனாகவும் விளங்குகிறபடியால்.

ஆனால் அத்வைதம் என்பதில் நிஷேதிக்கத்தக்கதான அம்சம் யாது? அதன் நிஷேதம் எவ்விதமென்றால்,—இங்கு உபநிஷத்தோர் கூறுகின்றார்—கண்

ணாடிப் பிரதிபிம்பம் போலச் சத்து அசத்து வடிவ கொண்டு அநிர்வசனீயமா யிருக்கும் ஜகத்து நிஷேதிக்கத்தக்கது. ஆகமத்தோர் கூறுகின்றார்—ஆதர்சத்தில் நகரம் தோற்றுவது போல ஜகத்துத் தோற்றுகிறது. பிரதிபிம்பங்களின் ஆதர்சத் தன்மைபோல ஜகத்து சிதாத்மத்தன்மையாக உண்மையானது. அப்படியானால் இவற்றில் நிஷேதிக்கப்பட்டது யாதென்றால் த்வைதம் என்று கூறுகின்றோம். ஆனால் த்வைதம் ஜகத்தினுட்பட்டதா அன்றா? முன்னதானால் உண்மையாகின்றபடியால் அதன் நிஷேதம், பொருந்தாதென்றும், பின்னதானால் அதன் அநிர்வசனீயத் தன்மை தள்ளத்தக்க தன்றென்றும் சங்கை செய்யும் பக்ஷத்தில் சமாதானம்—த்வைதம் ஜகத்தினுள்ளாயிருப்பதே யாகும். அப்படியானால் உண்மையான த்வைதத்தின் நிஷேதம் எவ்விதமென்றால்,—கேளும்,—இங்கு பாஸியமானது பாஸனத்திற்கு வேறின்றிய தன்றென்பதே த்வைதமாம். த்வைதம் பிராந்தியான தோற்றத்திற்கு அன்னியமன்றாகையால் த்வைத நிஷேதம் த்வைதப் பிராந்தியை அகற்றுவதுடன் முடிவாகின்றது. இதுபற்றியே "உண்மையில் ஏகத் தன்மை பிருதக் தன்மை (வேற்றுமை) யிலிருந்து பின்ன லக்ஷணமுடையதன்று. தத்துவம் ஒன்றே பிருதக்காகவும் ஏகவடிவாகவும் இருக்கிறது." என்று கூறப்பட்டது.

அநிர்வசனீய வாதத்திலும் நிஷேதிக்கப்படுவது அநிர்வசனீயமா அல்லது சத்தியமா? முன்னதானால் ஜகத்து நிஷேதிக்கத்தகாது. இரண்டாவதானால் த்வைதமேற்படும். நிஷேதமானது அதிகரணத்தின் தன்மை பொருந்திப் பிரஹ்ம ரூபமாகின்றதால் த்வை



தால் விகற்பத் தன்மையுடைய தென்றறிய வேண்டியது. இவ்விதமாக விகற்பத்திற்கு விஷயமான அத்வைத ஆத்மதத்துவம் அஞ்ஞானத்தை நாசம் செய்கிறது.

(இதுவே பின்னும் ஸ்பஷ்டமாக விவரிக்கப்படுகிறது). சிரவண மனனங்களால் தீர்மானிக்கப்பட்ட பிரத்தியகாத்ம தத்துவத்தைத் தியானிப்பது பக்குவமாகும் பொழுது அத்தகைய பக்குவத் தியானமே நிர்விகற்ப சமாதி. இங்கு இது கருத்து. த்யானத்திற்கே பரிபாகத்தின் தாரதம்மியத்தினால் சவிகற்ப சமாதியென்றும், நிர்விகற்ப சமாதியென்றும் பெயர். அங்கு * சித்தமானது சுத்த ஆத்மா காரமாகவே நீடித்தகாலம் இருக்கட்டுமென்று சங்கற்பித்து அச்சங்கற்பத்தை மறந்து விடாமல் அஃது ஸம்ஸ்காரரூபமாகவிருக்க, தியானிக்கப்பட்டதின் வடிவமாகச் சித்தம் இருந்து கொண்டிருப்பதின் மத்தியில் எதுவரையில் சங்கற்பத்தின் மறதியினால் சித்தத்தின் த்யேயாகார வடிவம் துண்டிக்கப்படுகின்றதோ அதுவரையில் அதற்குத் தியானமென்று பெயர். இத்தகைய தியானாப்பியாசத்தின் தேர்ச்சியினால் கோரினகாலம் வரையில் சங்கற்ப சம்ஸ்காரம் துண்டிக்கப்படாமல் சித்தத்தில் † த்யேயாகாரத்தன்மை தொடர்பாக இருக்குமானால் அது சவிகற்ப சமாதியாம். இச்சவிகற்ப சமாதி அப்பியாசத்தின் தேர்ச்சியினாற் சங்கற்ப ஸம்ஸ்காரத்தை அபேக்ஷியாமலே கோரிய காலம் வரையில் சித்தத்தின் த்யேயாகாரத்தன்மை தொடர்ந்திருக்கு

* சித்தம் = மனது.

† த்யேயாகாரம் = தியானிக்கப்பட்டதன் வடிவு.

மானால் அஃது நிர்விகற்ப சமாதியாம். இது பரமானந்தத்தில் (ஒரு கிரந்தத்தில்) சொல்லப்பட்டிருக்கிறது. "நினைப்புடனிருந்தும் துண்டிக்கப்படுவது தியானமென்று சொல்லப்படும். நினைப்புடன் துண்டிக்கப்படாதிருப்பது குணத்தன்மையுடைய சமாதியாம். நினைப்பில்லாமலும் துண்டிக்கப்படாமலு மிருப்பது சமாதி இதுபலனெனப்படும்.

தியானத்தின் பக்குவநிலையான இத்தகைய நிர்விகற்பசமாதியில் சுத்தமான பிரத்தியகாத்ம தத்துவத்தை அடைந்து, விஷயமாக்கி, பிறகு எழுந்த அடுத்த க்ஷணத்தில் சமாதியிலனுபவிக்கப்பட்ட பிரத்திய காத்மதத்துவத்தையும், சாஸ்திரத்தினால் நிரூபிக்கப்பட்ட பரமாத்மதத்துவத்தையும் ஞாபகப் படுத்திக்கொண்டு "இந்த அத்வைதாத்மா நானாயிருக்கிறேன்" என்று பிரத்தியபிஞ்ஞாஞானவான் ஆகின்றான். ஆனால் சமாதியானது நிர்விகற்பப் பிரகாசத் தன்மையுடையதாகவிருக்க அதிலிருந்து எழுந்தவனுக்கு அதன் ஞாபகம் எங்ஙனமுண்டாகும்? ஸவிகற்பஸம்ஸ்காரத்திற்கன்றோ ஞாபகத்தை யுண்டாக்குந் தன்மை என்றால், சமாதானம்.—நிர்விகற்பமென்பது கடம் முதலியவற்றைக் கேவலம் பிரகாசிப்பிப்பதே. அது ஸம்ஸ்காரத்தின் ஞாபகத்தை உண்டாக்குவதானதன்று, அங்ஙனமன்றேல், நிர்விகற்ப திருஷ்டியுடன் மார்க்கத்தில் பார்த்தவைகளுடைய ஞாபகமும் உண்டாகவேண்டும். அவ்வாறு நினைக்கப்படுகின்றதில்லை. இது கடம் இது படம் என்ற சவிகற்பஞானமே நினைக்கப்படுகின்றது. ஆதலால் நிர்விகற்ப திருஷ்டியில் எம்மட்டிலும் சவிகற்பவியாபாரமுண்டோ அம்மட்டிலுமே சிறிது என்று கூறத்தக்கதாய் மனுஷியனென்றும், புருஷனென்றும்,



தேவதத்தனென்றும் நினைப்பின் வேற்றுமை ஏற்படுகிறது. இவ்விஷயத்தில் சிலர், சமாதியின் உத்தர க்ஷணத்தில் சவிகற்ப வாயிலாகவே ஸ்மிருதி (நினைப்பு) உண்டாகிறதென்கின்றனர்.

மற்றவர்கள்—சுத்தமான பிரத்தியகாத்மா சவிகற்பத்திற்கு விஷயமாகாதாகையால் சமாதி அனுபவத்திலிருந்தே ஸ்மிருதியென்கின்றனர். (சவிகற்பசமாதியானது கூறிய சங்கற்பவடிவமானதாலும் சுத்தசொரூபத்தை விஷயமாகக் கொள்ளாததாலும்) சவிகற்ப சமாதியில் சுத்தமாகியது விஷயமாயிருக்கிறதென்று மொழிபத்தகாது. ஆனால் நிர்விகற்ப ஸம்ஸ்காரம் நினைப்பினால் எடுத்துக் கொள்ளப்படுவதெங்ஙனமென்றால், சமாதானம்—சவிகற்பத்திலிருந்தே நினைப்புண்டாக வேண்டுமென்று நியமமில்லை. பேதத்தின் தோற்றமே விகற்பமாம். மார்க்கத்தில் நிர்விகற்ப திருஷ்டியுடன் பார்க்கப்பட்டவைகளும் "சிறிது" என்றவாறு கச் சாமான்யவடிவமாய் நினைக்கப்படுவதால். இது பற்றியே சுழுத்தியில் நிர்விகற்ப திருஷ்டாவுக்குக் கூறப்பட்ட அவ்வியக்தத்தின் ஸ்மிருதியுண்டாவதும் பொருத்தமுடையதாகிறது.

நிர்விகற்ப சமாதியிலிருந்து ஸ்மிருதி யுண்டாவதில்லையென்று கூறப்படுவதால் அதற்குச் சமாதானம். எந்த ஞானத்தில் எதனுடைய யாதொரு அம்சம் நன்றாய் ஸ்புரிக்கின்றதோ அந்த அம்சத்துடன் அதன் ஸ்மிருதி காலாந்தரத்தில் உண்டாகிறது. ஸர்வஞானத்தில் திருசியத்தினுடைய எல்லா அம்சங்களும் ஸ்புரிக்கின்றதில்லை. ஆனால் எவ்விதம் கோரிக்கையோ எவ்விதம் கேட்டதோ" என்றவாறு பிரத்தியபிஞ்ஞா சாஸ்திரம் கூறியபடி சில அம்சங்கள் மாத்திரமே ஸ்புரிக்

கின்றன. இக்காரணத்தினாலேயே எல்லா விகற்பங்களும் நீங்கைப்பேயென்பதில் சாஸ்திரஞர்களுடைய அபிப்பிராயத்தில் பேதம் காணப்படுகின்றது.

ஆகையால், நிர்விகற்ப சமாதியில் சுத்த சொரூபத்தின் ஸ்பூர்த்தியிருப்பதால் ஸ்மிருதியுண்டாவது பொருத்த முடையதென்று கூறுகின்றார். இவ்விஷயத்தை விஸ்தாரமாகப் பிரத்திய பிஞ்ஞா தாத்பரியவிவரணத்தில் பார்க்க.

---

## பத்தொன்பதாவது அத்தியாயம்

## J. “சமாதிலக்ஷணம்”

---

நிர்விகற்பமான ஆத்மதத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு விமர்சத்தை முன்னிட்டு அநுசந்தான வடிவமாக யாதொரு நிரோதம் உண்டாகின்றதோ அதுவே அவர்களுடைய சமாதியென்று வித்துவான்களால் க்ருதப்பட்டுள்ளது. இங்கு இது விஞ்ஞாரைகசியம்— நிர்விகற்ப சிதாத்ம தத்துவத்தைச் சிரவணம் முதலியவற்றால் உணர்ந்துகொள்ளாத ஹடயோகிகள் இருவகைப்படுவர். பாதஞ்சலக்கூற்றாகிய அஷ்டாங்க சித்தியுடையவன் ஒருவன். அங்கு கூறப்பட்ட ஷட்கர்மம் முதலிய சாதனங்களை முன்னிட்டுப் பிராணாயாம மிகுதியினால் குண்டலி சுழுமுனையைப் பேதிக்கும் வாயிலாகச் சித்திபெற்றவன் மற்றவன். இவரில் முதற் கூறியவன் சமாதிக்கு முன்னதாக அநாத்ம விகற்ப அநுசந்தானத்தை அகற்றச் சங்கற்பித்துக் கிரமமாக எல்லா விகற்பங்களையும் அகற்றிப் பின் எல்லா விகற்பங்களுடைய அபாவத்தையும் அநுசந்தானம் செய்து பின் அந்த அநுசந்தானத்தையும் விட்டு அந்த ஸம்ஸ்கார சேஷமாகமட்டிலும் இருக்கின்றான்.



இரண்டாவது கூறியவன், சுழுமுனையில் பிராண வாயுவை அத்திபந்தம் புகும்படி செய்வதால், அங்கு பிராண நிரோதத்தால் முதலிலுண்டாகும் ஆயாசமானது, சுழுமுனையினுள் புகுவதால் நசிக்கின்றபடியால், சுமை நீங்கப்பெற்றதுபோல, சுகம் பெறுகின்றான். பின் அவன்மனது மதமூர்ச்சையினால் கவரப்பட்டதுபோல மூர்ச்சை யடைந்தவாறாகின்றது. இருவருக்கும் அக்காலத்தில் சுழுத்திபோலச் சுகரூபமுண்டாகின்றது.

சிரவணமுதலியவற்றால் நிர்விகற்ப சிதாத்ம தத்துவத்தை உணர்ந்த ஞானயோகிகளுக்குச் சமாதி அடைவதற்கு முன்னதாகவே அவித்தியாவரணம் நீங்கிய நிர்விகற்ப ஆத்மதத்துவம் பிரதிபிம்பங்களால் சித்திரிதமான கண்ணாடிபோலத் திருசிய விகற்பங்களால் விசித்திரமானதாகி எப்பொழுதும் ஸ்புரிக்கின்றது. தவிர, சமாதிக்குமுன் விகற்ப அம்சத்தை நீக்கி, விகற்ப அம்சத்தின் நீக்கலுக்குச் சாக்ஷியான நிர்விகற்ப சித்ரூபத்தைச் சேவிக்கின்றான். ஆனால் ஹடயோகியானவன் இவ்வடிவமாகவே இருக்கிறானென்று மொழியத்தகாது. ஞானயோகிகளுக்கே சமாதியின்கண் பரிகரிக்கப்பட்ட அஞ்ஞானாவரண விக்ஷேபங்களுடையதான இவ்வித வடிவமுண்டாகின்றது. ஹடயோகிகளுக்கு அச்சமயத்தில் பரிகரிக்கப்பட்ட அஞ்ஞான விக்ஷேபாம்சத்துடனிருந்தாலும், அஞ்ஞானாவரணாம்சத்தினால் சொரூபம் மறைக்கப்பட்டதாகவே யிருக்கும். ஞானிகளுக்கு அபரோக்ஷ ஞானத்தினால் (நித்திய

சத்தில்) ஆவரணாம்சம் நஷ்டமாய் விடுகின்றபடியால் சொரூபம் ஆவரிக்கப்படுகின்றதில்லை.

ஆனால் ஹடயோகிகளுடைய சுழுத்திக்கும் சமாதிக்கும் யாதுவித்தியாசமென்றால்—சுழுத்தியில் மனதுதமசின் பரிணாமத்தால் இருண்டமேகத்தாலுண்டாகும் நிசியிருளைப்போலக் காடமான மூடத்தன்மையை அடைகின்றது. சமாதியில் மனதின் சத்துவ பரிணாமத்தால் ஆத்மதத்துவம் விளங்கினாலும், வெண்மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியன்போல அது அவித்தையினால் சுற்றப்பட்டிருக்கிறபடியால் செம்மையாக விளங்காதிருக்கின்றது. ஞானிகளுக்கு மனதின் சத்துவ பரிணாமத்தால் அவித்தையின் ஆவரணம் இல்லாமற்போய்விடுகிறபடியால் மேகமின்றிய நிர்மல ஆகாயத்திடம் விண்மணிபோல, ஆத்மா ஸ்பஷ்டமாகப் பிரகாசிக்கின்றது. இதுவே ஆத்மதத்துவ மென்று ஆத்ம தத்துவத்தை நன்றாய் உணர்ந்தவர்களுடைய தீர்மானம். இவ்விதம் ஞானிகளுடைய சமாதிக்கே சமாதித் தன்மையென்பது நிரூபிக்கப்பட்டது. (ஹடயோகிகளுக்குச் சமாதியில் மனதின் ஸத்துவபரிணாமம் உண்டாயும் ஆவரணம் அகலாதிருக்கிறதென்பது கருத்து.)

---

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

## K. "ஞானிகளது பிராரப்தகர்மம்"

---

இங்கு இதுகருத்து.—அதிர்ஷ்டபலனை உத்தேசித்துக் கர்மம் கற்பிக்கப்படுகிறது. ஞானிகளிடம் பலன் காணப்படுவதால் ஞானத்தினால் பிராரப்தம் நிவிர்த்தியாகின்றதில்லையென்று சொல்லப்படுகிறது.



அந்தப் பலன் மந்த ஞானிகளுக்கே உண்டாகிறபடியால் அவர் விஷயத்தில் மாத்திரமே பிராரப்தம் கற்பிக்கத்தக்கது; மற்றவருக்கன்று. அந்தக்கரணத்தில் ஏறுவதான யாதொரு சுகம் முதலியன தன்னுடையனவென்று விளங்குகின்றனவோ அவைகளே பலனெனப்படும். மத்தியம உத்தம ஞானிகளுக்கு அந்தக்கரணத்தில் ஏறுவதானவை தம்மதென்று விளங்குகிறதில்லை. அவ்வாறு விளங்குகிறதென்று மொழியத்தகாது சமாதியில் சுகம்முதலியன திர விளங்காதாகையால் எழுந்திருக்கும்பொழுது, பிரதிபிம்பங்களுக்குக் கண்ணாடியின் சொரூபமின்றி வேறில்லாததுபோலத் திருசியமான அனாத்மா திருக்குமாத்திரமாக விளங்குவதாலும் ஆத்மாமாத்திரமாகவிளங்கும் சுகம்முதலியன தன்னதென்று விளங்காதாகையாலும் ஆத்மதன்மையாக விளங்கும் சுகம்முதலியன பிராரப்த நிமித்தமேயென்று சொல்லத்தகா. பிறருடையதாகவிளங்கும் சுகம் முதலியனவும் சாமான்னியமாக விளங்குவதால் அவைகளும் தன் பிராரப்தத்தால் ஏற்பட்டதென்ற சங்கைவரும்—அவ்விதம் மொழியத்தக்கதன்று. ஏனென்றால், பிறரால் உணரப்படும் சுகாதிகளால் "நான்சுகி" யென்று தன்னிடத்தில் சம்பந்தமுண்டாக நிமித்த மில்லாததால் கடம் முதலியவற்றை அடைதல்போலவே அப்பலன்களை அடைவதும். ஆகையினால் பலன்போன்ற சுகமின்மையால் இவர்களுக்குப் பிராரப்தத்தைக் கற்பிப்பதில் பிரயோஜனமில்லை.

மந்தஞானிகளுக்கு, யாவும் சின்மாத்திரமென்ற சத்தியவாசனையின் அநுசந்தானம் மறைபட்டு, வியவகாரத்தில் புகும்வேளையில் அப்பொழுதுண்டாகும் சுகம்

முதலியன தன்னுடையனவென்று விளங்குகிறபடியால் அவர்விஷயத்தில்பிராரப்தத்தைக்கற்பிப்பதில்பிரயோஜனமுண்டு. ஆனால்மந்தஞானிகளுக்கு வாஸ்தவசொரூபத்தின் அனுசந்தானம் பின்னமாகி விபரீதப்பிரத்யயம் உதிப்பதால் அந்த விபரீதப்பிரத்யயத்தால் பிரதிபந்தமடைந்த ஞானம் புருஷார்த்தத்திற்குச் சாதகமாகாதெனும் பக்ஷத்தில் உண்மைதான்; அங்ஙனமல்லவென்று சிலர் கூறுகின்றார். தத்துவவித்துக்குப் பூரணஞான சமகாலத்திலேயே அஞ்ஞானம் நிவிர்த்தியாகின்றதாலும், சொரூபாவரணம் நஷ்டமாகின்றதாலும், பிராரப்த நிமித்தம் அஞ்ஞானத்தின் விக்ஷேப சக்தியே சிலகாலம் அனுவிர்த்தியாகின்றது (தொடர்கின்றது). பலனைக் கொடுப்பதினாலேயே பிராரப்தம் தானாகவே அறும்பொழுது தேகாந்தரங்களை அடைதற்குரிய கர்மமில்லாததாலும் அதற்குரிய சொரூபாவரண அஞ்ஞானமாகிய நிமித்தமில்லாததாலும், விகற்பத்தை உற்பன்னம் செய்வதான அந்தக்கரணமும் விறகில்லா நெருப்புப்போல, நசித்திருக்கிறபடியாலும் தேகாந்தரம் சம்பவியாதாகையால் பிரஹ்மமாத்திரமாய்ச் சேஷிக்கும் மோக்ஷமானது தள்ளத்தக்கதன்றே. ஆனால் எவனுக்கு விபரீதப்பிரத்யயத்தால் ஞானம் பாதிக்கப்படுகிறதோ அவனுக்குப் பூரணஞானமில்லை. பின்யாதென்றால் ஞானாபாசமே. இதுபற்றியே கேவலஞானிக்கும் ஜீவன்முக்தனுக்கும் சாஸ்திரங்களில் பேதம் கூறப்பட்டிருக்கின்றது.

மந்த ஞானிக்குச் சதா அனுசந்தானமில்லாததால் "எவ்வெப்பாவத்தை ஸ்மரிக்கின்றானோ" என்ற நியாயப்படி பிராரப்த நிமித்தக விபரீத ஸ்மரணையினால் தேகாந்தரமுண்டோவென்றால், இல்லை. மத்தியம உத்



தமஞானிகளுக்கும் பிராரப்த நிமித்தக விபரீத பாவனையைத் தடுக்கக்கூடாதாகையால் "எதை எதை" யென்பது ஞானியைப்பற்றிய வசனமன்று.—அஞ்ஞானம் ஞானசமகாலத்திலேயே நஷ்டமாகிப் பிராரப்தம் நசிக்கின்றபடியால் இவர்களுக்குப் பலனாகாது ஏற்படும் துக்கம் முதலியவற்றின் ஆகஸ்மிகத்தன்மையை அதற்கும் பொருட்டுப் பிராரப்தமென்பது ஒறிது அங்கீகரிக்கப்பட்டதேயன்றி வேறல்ல. இவ்விருவருக்கும் பிராரப்தமில்லை. ஆனால் மந்தஞானிக்குப் பிராரப்த விபரீதம் போன்றிருப்பதால் என்று சங்கைவரும். இவனுக்கும் பிராரப்தமில்லை ஞானிகளுக்கு அந்தியகாலத்தில் விபரீத ஸ்மரணையுண்டாகாதாகையால். ஆதலால், திருஷ்டதுக்கத்தின் இருப்பு இன்மைகளால் கேவல ஞானிக்கும் ஜீவன்முக்தனுக்குமுள்ள வேற்றுமையைத் தெரிந்துகொள்ளவேண்டியது. புண்ணிய தீர்த்தத்திலாகட்டும், நாய்தின்பவன் மனையிலாகட்டும், நினைவின்றித் தேகம் அகன்றாலும் ஞானசமகாலத்தில் முக்தனானவன் கைவல்லியத்தை அடைகின்றான் என்று கூறப்பட்டுள்ளது. பிரமாணத்தினாலாவது, சாஸ்திரத்தினாலாவது, குருமொழியினாலாவது, எல்லாமாயிருக்கும் சிவதத்துவத்தைத் திடமாக ஒருதடவை அறிந்தானாயின் அவனுக்குக் காரணத்தினாலாவது பாவனையினாலாவது செய்யப்படுவதானது ஒன்றுமேயில்லை.

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

### L. சொரூபத்தின் ஆனந்தத்தன்மை

சங்கற்பத்தினால் விளங்குவதான திருசியத்தை அனுசந்தானம் செய்யாமல் தீர ஒழித்துவிட்டால் அவ்வனுசந்தானமின்மைக்குச் சாக்ஷியாகச் சேஷித்திருக்கிற தன்னாத்ம ஸம்வித்தே இரண்டற்ற பரஸம்வித்தாகும். இவ்வடிவத்திற்குப் புருஷார்த்தத்தன்மையைச் சாதிப்பதின்பொருட்டு இதற்குச் சுகவடிவத்தன்மை கூறப்படுகிறது. இது அகண்டமான ஆனந்தத்தினால் கனவடிவமானது. இதற்குக் காரணம் யாதென்றால்— துக்கம் உபாதியின் தன்மையுடையதாகையாலும், சொரூபத்தினிடம் அஃது வாஸ்தவத்தில் இல்லாதபடியாலுமாம். விஷயங்களால் ஏற்படுவதான சர்வமான பிராணிகளுடைய எவ்வகை ஆனந்தங்களுண்டோ அவ்வானந்தங்களால் கனவடிவங் கொண்ட சொரூபந்தான் அவன். ஏனென்றால் அவன் எல்லோராலும் கோரப்பட்டவனாயிருக்கின்றான். ஆனால் எல்லோராலும் கோரப்பட்ட சுகம் போக்கியமன்றோ. அஃதெங்ஙனம் போக்தாவின் வடிவுடையதாகுமென்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம். எல்லோராலும் கோரப்பட்டிருப்பதால் ஆத்ம சொரூபமே சுகமாம். அங்ஙனமன்றேல் அது அவ்விதமாகாது. ஆனால் இந்த ஏதுவானது தேகம், ஸ்திரீ, தனம் முதலிய கோரப்பட்டவைகளில் வியபிசரிக்கின்றதே யென்றால், தேகாதிகளில் முக்கியமான கோரப்படுந் தன்மையில்லை. ஏனென்றால் தேகாதிகள் ஆத்ம சுகத்தின் பொருட்டே கோரப்படுகின்றன. இக்காரணத்தாலேயே சொர்க்கம் முதலிய சுகத்தைக் கோரு



வோர் உணவொழித்துத் தேகாதிகளைத் தியாகஞ்செய்வதுங் காணப்படுகின்றது. இது பற்றியே ஆத்ம சொரூபமானது ஒரு விதத்திலும் ஒருபொழுதும் கோரப்படாதது அன்று. ஆகையினால் ஆத்மாவே முக்கியமாகக் கோரப்பட்டிருப்பதால் அஃது சுகவடிவானதென்று அபிப்பிராயம்.

ஆனால் ஸ்திரீசுகம் முதலியவற்றில் போக்கியத் தன்மை ஸ்பஷ்டமாக அனுபவிக்கப்படுவதாலும் இஃதன்றிச் சுகம் பிரமாணமன்றாகையாலும் ஆத்மா சுகவடிவமானதன்று என்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம். யாதொரு ஆத்மானந்தமுண்டோ அதன் இலேசமே விஷயானந்தமென்று ஆகமங்கள் கூறுகின்றன. கிரியையின்றிய ஆகாயத்திற்குக் கடம்முதலியவற்றால் பரிச்சின்னமான அம்சத்தினிடமாக, உபாதி சம்பந்தமான கிரியை காணப்படுவதுபோலும், அறியப்படாத சிதாத்மாவும் பரிச்சின்னங்களான திருசியங்களாகி உபாதியினால் அறிபடு பொருளானதுபோலும், ஆத்மசுகமும் பரிச்சேத நிமித்தத்தால் உபாதித் தன்மையுடைய போக்கிய சுகமாகின்றதென்பது கருத்து.

ஆனால் ஆத்மாவிற்குச் சுகத்தின் தேட்டமேயன்றிப் பிரமாணமில்லாததால் அதற்குச் சுகவடிவமில்லை என்ற சங்கைக்குச் சமாதானம். சொரூபபூதமாயிருக்கும் ஆனந்தமே பாரத்தை நீக்கியமுதற் கணத்திலும் சுழுத்தியிலும் விளங்குகிறது. இங்கு இது கருத்து. சுமையை நீக்கியபின் எல்லோராலும் அனுபவிக்கப்படுவதான சுகம் தள்ளத் தகாததாயும் தன் உணர்வில் பட்டதாயுமிருக்கிறது. இதனில் ஸ்திரீ சங்கம் முதலிய நிமித்தங்களில்லாததால் இது சொரூப

பூதமானது. இது சுமையின் நீங்கலினால் ஏற்பட்டதென்றும் மொழியத்தகாது. சுமை நீங்கல் அபாவமாகையாலும் அபாவத்திலிருந்து பாவம் உண்டாகாதாகையாலும், சுகம் ஏற்படுவதற்குக் காரணமாக வேறுயாதொன்றும் இல்லை. ஆகையினால் அஃதுசொரூபபூதமான சுகமேயாகும். ஆனால் கடுமையான துக்கத்தின் நிவிர்த்தியே பிராந்தியினால் சுகம்போலத் தோற்றுகின்றது என்ற சங்கைக்குச் சமாதானம். சொஸ்தனாகவிருக்கும்பொழுதும் புருஷன் சுழுத்தியில் நிர்நிமித்தமாக மகத்தானசுகத்தை அனுபவிக்கின்றான். எழுந்தவனுக்குச் சுகமாக உறங்கினேனென்று ஸ்மிருதியுண்டாவதால் அந்தச் சுகம் தள்ளத்தக்கதன்று. இதுவும் சொரூபபூத சுகமேயாம். இங்கு (சுழுத்தியில்) சுகமில்லையென்றால் பசு பாமரர் முதலிய யாவருக்கும் சுழுத்தியினிடமாகப் பிரவிர்த்தியுண்டாகமாட்டாது.

ஆனால் சுகமானது சொரூப பூதமாயிருந்தால் அஃதேன் எப்பொழுதும் அனுபவிக்கப் படவில்லையென்றால்—எல்லோருக்கும் ஆதாரத் தொனியானது இடைவிடாது விளங்கிக் கொண்டிருந்தாலும் பாகியத் தொனியால் மறைபட்டிருக்கின்றது. இதற்காகச் செவிகளை நன்றாய் மூடிக்கொண்டால் அத்தொனி கேட்கப் படுகின்றது. இவ்விதமே தன்னாத்ம சுகமும், காமங்கள், கர்த்தவ்வியங்கள் முதலிய அகில வாசனைக் கூட்டங்களான காட்டுத்தீயினால் தகிக்கப்படும் துக்கத்தால் மறைபட்டிருக்கிறது. இந்த வாசனைக்கூட்டங்கள் சுழுத்தியில் தமது காரணத்தில் விலயமாவதால் செவிகளை மூடிக்கொண்டால் தொனிகேட்பதுபோல ஆத்மசுகமானது ஸ்பஷ்டமாக விளங்குகிறது.



சுமையை வகித்திருக்கும் தருணத்தில் சுமைநிமித்தமான மகாதுக்கத்தினால் வாசனைக் கூட்டங்களால் ஏற்படுவதான துக்கம் மறைபடுவதாலும் சுமையின் துக்கம் மறைபடாதிருப்பதாலும் சுமையின் துக்கமே முக்கியமாக மேலிட்டிருக்கும். சுமையை நீக்குவதால் அந்தத்துக்கம் நிவிர்த்தியாகும்பொழுது வாசனாதுக்கம் உற்பவமாகும் வரையில் ஆத்மசுகமானது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. ஸ்திரீமுதலிய விஷயசுகமும் இவ்விதமேயாம். முட்களைப் போலச் சதா குத்திக்கொண்டிருப்பதான அளவற்ற வாசனைகள் இருதயத்தில் இருக்கின்றன. அங்கு ஒரு விஷயத்தின் அடைவை நினைத்துவிட்டால் அவ்விஷயத்தைப்பற்றிய காமத்தின் கடுமையினால் அதிலிருந்து முண்டாகும் தாபமானது கடுமையாயிருக்கும்பொழுது அன்னியங்களான எல்லா வாசனைகளும் மறைபட்டவை போலவாகின்றன. பின் அவ்விஷயத்தை அடையும்பொழுது மகா துக்கம் சமனமாகின்றபடியால் மற்ற காமம் உதயமாகும் வரையில் ஆத்மசுகம் ஸ்பஷ்டமாய் அனுபவிக்கப்படுகிறது. ஆகையினால் எல்லோராலும் கோரப்படுவதால் சிதாத்மாவே ஆனந்தமென்று சொல்லப்படுகிறது.

ஆனால், எல்லோரும் சுகத்தை ஆத்மபூதமென்று என் அறிகிறதில்லையென்றால்—மூடத்தன்மையாலேயே அவ்விதம் அறியாதிருக்கின்றார்கள் என்றுகருத்து. இதற்குக் காரணம் யாதென்றால், வியஞ்சகளங்களாகிய ஸ்திரீ முதலியவற்றின் பேதத்தால், சுகமானது அந்தந்தக்காலத்தில் உண்டாகி அழிகிறதென்று கருதுவதால் ஸ்திரமான ஆத்மசுகத்தை மூடர்கள் அறிகின்றதில்லை.

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

## M. "அஸத்கியாதி நிராகரணம்"

---

அஸத்கியாதி வாதிகள் நிரதிஷ்டானமாகவே பிராந்தியுண்டாகிறதென்கின்றார்கள். அவர்கள் மதத்தின் மறுப்பு இங்கு கூறப்படுகிறது. அவர் மதத்தில் இது வெள்ளி என்று அசத்தை ஆசிரயித்த ஞானம் உண்டாகிறது. இவ்விதமே ஜகத்தின் ஞானமும் அசத்தை ஆசிரயித்ததென்கின்றார்கள். ஜகத்து நாஸ்தி (இல்லை) யென்ற நிச்சயத்தை முன்னிட்டுச் சூன்யத்தையே நீடித்துப் பாவனை செய்வதால் ஜகத்தின் பாவனை ஒழியும் பொழுது சூன்யாத்மக் தன்மையை அடைதலே மோக்ஷமென்பது அவர்களது நிலை. இதனைத் தூஷிக்கின்றார். ஜகத்து நாஸ்தியென்பதானது பிராந்திவடிவமான அபூரண திருஷ்டியேயாம். எவ்விதம் கடம் முதலியன எவ்விதத்திலும் அசத்தன்றோ, ஆனால் மிருத்து முதலியவற்றின் வடிவாகச் சத்தாயிருக்கின்றதோ அவ்விதமே ஜகத்து எவ்விதத்திலும் அசத்தன்று. பின் யாதென்றால், சித்வடிவமாகச் சத்தேயாகும். ஆகலால் ஜகத்து அத்தியந்தம் (நிர) நாஸ்தியென்ற நிச்சயமானது பிராந்தியே என்பது கருத்து. ஏனென்றால், எவ்விதத்திலும் இல்லையென்ற விபரீத நிச்சயமானது பிரமாணத்தன்மை பொருந்தி ஒருபொழுதும் சித்தியாது. ஏன் சித்தியாதென்றால், இருக்கிறது இல்லையென்ற இருபக்ஷங்களையும் சாதிப்பவனான சிதாத்மாவின் சொரூபமாக ஜகத்துக்காணப்படுவதாலும் சர்வத்தையும் நிஷேதித்த பின்பும் மறு



படியும் ஸ்பஷ்டமாய்ச் சம்பவிப்பதாலுமே. கடம் முதலியன விகாரத்தன்மையாக இல்லையென்று நிஷேதித்தாலும் மிருத்து வடிவமாகத் தள்ளத்தகாதது போலத் திருசிய ஜகத்து திருசியத்தன்மையாக நிஷேதிக்கப்பட்டாலும், அதன் திருக்கு வடிவமான அவபாசம் தள்ளத்தக்க தன்றென்று கருத்து. இங்கு இது தத்துவம். ஜகத்து, மிருத்தின் தொடர்புடைய கடம் முதலியன போலச் சித்தின் தொடர்புடையதாகவே விளங்குகின்றது. இதன்கண் மற்றவர் (அஸத்கியாதி வாதிகள்) அஸத்கியாதியைப்பற்றியிருப்பதால் விளங்குவதை எவ்விதத்திலும் நிஷேதிக்கின்றார்கள். இதற்கு சமாதானம். நிஷேதிப்பவன் நிஷேதிக்கப்படுவதின் அந்தர்க்கதன் (உட்பட்டவன்) ஆகியிருப்பதால் நிஷேதம் சித்தியாதாகையால் நிஷேதிப்பவனிடம் தொடர்பாயிருக்கும் சிதாத்மா நிஷேதிக்கத்தக்கதன்று. அவர்கள் எவ்விதத்திலும் நிஷேதிப்பதனிடம் கருத்து இதுவாம்,—சித்தானது சவிகற்ப சுபாவமானது. அதுவே சம்சாரமாம். அன்னியப் பிரமாணமின்றிய நிர்விகற்பத்தால் சர்வமும் நிஷேதிக்கப்படும்பொழுது மோக்ஷ சித்தியென்றும், நிஷேதிப்பவனை நிஷேதிக்கத் தகாதது பற்றியே நாஸ்தியென்ற சாபத்தினால் மட்டிலும் எவ்விதத்திலும் ஜகத்திற்கு விலயமில்லை என்றும் கூறப்பட்டது. சர்வசாதகனான சிதாத்மா, சர்வத்தை நிஷேதித்த பின்னும் சமாதி முதலியவற்றில் நிர்விகற்பனாகவும் சொப்பிரகாசனாகவும் விளங்குகிறபடியால்.

ஆனால் அத்வைதம் என்பதில் நிஷேதிக்கத்தக்கதான அம்சம் யாது? அதன் நிஷேதம் எவ்விதமென்றால்,—இங்கு உபநிஷத்தோர் கூறுகின்றார்—கண்

ணுடிப் பிரதிபிம்பம் போலச் சத்து அசத்து வடிவைக் கொண்டு அநிர்வசனீயமா யிருக்கும் ஜகத்து நிஷேதிக்கத்தக்கது. ஆகமத்தோர் கூறுகின்றார்—ஆதர்சத்தில் நகரம் தோற்றுவது போல ஜகத்துத் தோற்றுகிறது. பிரதிபிம்பங்களின் ஆதர்சத் தன்மைபோல ஜகத்து சிதாத்மத்தன்மையாக உண்மையானது. அப்படியானால் இவற்றில் நிஷேதிக்கப்பட்டது யாதென்றால் த்வைதம் என்று கூறுகின்றோம். ஆனால் த்வைதம் ஜகத்தினுட்பட்டதா அன்றா? முன்னதானால் உண்மையாகின்றபடியால் அதன் நிஷேதம், பொருந்தாதென்றும், பின்னதானால் அதன் அநிர்வசனீயத் தன்மை தள்ளத்தக்க தன்றென்றும் சங்கை செய்யும் பக்ஷத்தில் சமாதானம்—த்வைதம் ஜகத்தி லுள்ளா யிருப்பதே யாகும். அப்படியானால் உண்மையான த்வைதத்தின் நிஷேதம் எவ்விதமென்றால்,—கேளும்,—இங்கு பாவ்யமானது பாஸனத்திற்கு வேறின்றிய தன்றென்பதே த்வைதமாம். த்வைதம் பிராந்தியான தோற்றத்திற்கு அன்னியமன்றாகையால் த்வைத நிஷேதம் த்வைதப் பிராந்தியை அகற்றுவதுடன் முடிவாகின்றது. இதுபற்றியே "உண்மையில் ஏகத் தன்மை பிருதக் தன்மை (வேற்றுமை) யிலிருந்து பின்ன லக்ஷணமுடையதன்று. தத்துவம் ஒன்றே பிருதக்காகவும் ஏகவடிவாகவும் இருக்கிறது." என்று கூறப்பட்டது.

அநிர்வசனீய வாதத்திலும் நிஷேதிக்கப்படுவது அநிர்வசனீயமா அல்லது சத்தியமா? முன்னதானால் ஜகத்து நிஷேதிக்கத்தகாது. இரண்டாவதானால் த்வைதமேற்படும். நிஷேதமானது அதிகரணத்தின் தன்மை பொருந்திப் பிரஹ்ம ரூபமாகின்றதால் த்வை



தம் ஏற்படாமென்றும் மொழியத்தகாது. அனாத்மா[illegible]கற்றுவதான நிஷேதத்தையும் ஆத்மரூபமாக எடுத்துக்கொண்டு நிகில ஜகத்தும் ஆத்மரூபமானதென்று அங்கீகரிப்பதானது எங்கள் (a) கூற்றுக்கு விரோதமின்றியதாம். அபாவத்திற்கே அதிகரணத் தன்மையென்று சங்கிக்கலாகாது. தனக்கன்னியமான வேற்றுமையின் தன்னாத்ம ரூபத்தன்மையென்றவாறு நிகிலமான ஜகத்திற்கும் பாவத்தன்மை சாதிக்கக்கூடுமாகையால், நிஷேதத்தினாலாவது வேறு விதமாகவாவது த்வைதாபாசமான பிராந்தியை அகற்றுவதே புருஷார்த்தம். இதுவே அத்வைத சாஸ்திரத்தின் கருத்து. ஆகையினால் முமுக்ஷுக்கள் வாதத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும் மதபேதங்களில் புகத்தகாதென்று தெரிந்துகொள்ள வேண்டியது. ஆதர்சத்தில் பிரதிபிம்பிதமான நகரம் ஆதர்சத்திற்கு வேறாகாதது போலச் சிதாத்மாவின் ஒரே வடிவுடையதாகவே ஜகத்துச் சத்தியமாம். சிதாத்ம ரூபமாக ஜகத்து சத்தியம் என்று மொழிந்ததனால் மட்டிலும், ஜகத்து சிதாத்ம ரூபமாக இருக்கின்றதாவென்று ஆக்ஷேபிக்கத்தகாது. இது, அவித்தை அநிர்வசனீயமாமென்று மொழிந்த விடத்தில் "அவித்தை இருக்கின்றதா" என்ற ஆக்ஷேபத்திற்கு நிகரானதாகும். அநிர்வசனீயமென்று மொழிந்ததனாலேயே அது இருக்கிறதாவென்று கேட்கத்தகாததுபோலச் "சித்திற்கு வேறில்லை சர்வமும்" என்று மொழிந்த விடத்தில் சர்வமும் இருக்கிறதாவென்ற ஆக்ஷேபம் பொருத்தமுடையதாகாதென்று அறிய வேண்டியது.

(a) ஆகமத்தோர்.

இவ்விதம் சர்வமும் சத்தியமென்ற ஞானமே பூரண விஞ்ஞானமென்று கூறப்படும்.

அநுபந்தம் முற்றிற்று.

குறிப்பு. சத்தியம் = சத்தாமாத்திரம்.

# அருஞ்சொல்லகராதி.

## அ

அகடிதம் = அசாத்தியம்
அகிலமான = யாவுமான
அசிந்தியம் = நினைக்கவொண்ணாதது
அபார்த்தம் = பயனற்றது
அபாரமான = தாண்டக்கூடாததான
அபரிச்சின்னம் = அகண்டம்
அபிலாஷை = கோரிக்கை
அநாரியன் = மிலேச்சன்
அபிஞ்ஞர் = அறிஞர்
அநுவிர்த்தி = தொடர்
அவதி = எல்லை, வரம்பு
அபாதானம் = சார்பாயிருப்பது
[illegible] = விளக்கம்
அயுக்தம் = பொருத்தமின்றியது
அவச்சேதம் = துண்டித்தல்
அனவஸ்தை = முடிவின்மை
அவிஸ்மரணம் = மறதியின்மை
அந்தரம் = மத்தியம்
அந்தராளம் = நடு
அஸதி = 1 நற்குணமில்லாதவள் 2 குணியை இல்லாதவள்
அதிர்ஷ்டம் = தென்படாதது

## ஆ

ஆபாதரூபமான = மேலெழுந்தவாரியான
ஆகமாபாசம் = ஆகமம்போன்றது
ஆக்கிரமித்தல் = வலுவில்விழுத்தல்
ஆகாரம் = வடிவம்
ஆகஸ்மீகம் = தற்செயல்
ஆர்த்தர் = பிணியாளர்
ஆந்தரம் = உள்ளிருப்பது
ஆபாலகோபாதியான = சிறுவரான இடையர் முதலாகிய
ஆவிர்ப்பவித்தனன் = தென்பட்டனன்
ஆதர்சம் = கண்ணாடி

## இ

இலீனம் = ஒடுங்குதல்
இரதி = கலவி
இரஜ்ஜு = கயிறு
இலேபம் = ஒட்டல், பற்றல்

## உ

உபலம்பம் = அநுபவம்
உபயம் = இரண்டு
உபாதானம் = முதற்சாமக்கிரி
உன்மத்தர் = பித்தர்

## உ

உலோகாலோகபர்வதம் = சக்கரவாளகிரி
உதாகரித்தல் = மெய்ம்மைப்படுத்தல்
உத்தரக்ஷணம் = அடுத்தக்கணம்
ஊர்த்துவம் = மேலெழுந்த
ஏகவத்ஸலன் = ஒரே பிரீதியுடையவன்
ஐசுவரியம் = ஈசத்தன்மை கடவுளது வல்லமை
ஔஷதம் = அமிர்தம்

## க

கடனை = சாதித்தல்
கடகிருதாக்கியானம் = ஓர் உபாக்கியானம்
கர்த்தவ்வியம் = செய்ய வேண்டியது
காணம் = சாதனம், கருவி
காயகர் = பாடகர்
கிருதஞ்ஞன் = நன்றியறிதலுடையவன்
கிருத்திரிமம் = கற்பனை
கிராந்தி = முடிச்சு
கிரகித்தல் = உட்கொள்ளல்
கூடம் = இரகசியமாக
கூபம் = கிணறு
கேதம் = வியசனம்
கோசரம் = போக்கு
கௌசலம் = சாமர்த்தியம்

## ச

சகஜம் = இயற்கையானது
சமாகிதர் = ஏகாக்கிரமுடையவர்
சங்கோசம் = சுருங்கல்
சதாகமம் = நற்சாஸ்திரம்
சரத்காலம் = இலையுதிர்காலம்
சமாவேசம் = செம்மையாக உட்புகுதல்
சயனித்திருக்கும் = படுத்திருக்கும்
சமுதாயம் = கூட்டம்
சமனமாகும் = அடங்கும்
சக்திபாதம் = பரையின் அனுக்கிரகம்
சககாரி = துணைக்கருவி
சாந்தியானது = ஒடுங்கி
சிரேயசு = சுபம்
சின்மயீ = அறிவுருவு
சின்னம் = துண்டித்தல்
சீதகாலம் = குளிர்காலம்
சுதாசமுத்திரம் = அமிர்தக்கடல்
சுஷ்கதர்க்கம் = வறட்டுவாது. வீண்வாதம்
சேத்தியம் = திருசியம்
சொச்சம் = நிர்மலம்

## த

ததாகாரம் = அவ்வடிவு
தத்துவம் = உண்மை
தன்யை = பாக்கியவதி
தன்யன் = பாக்கியவான்
தரிசனம் = பார்வை
தத்துவப்பிழம்பாக = தத்துவ சாரத்திரளாக
தத்பரதை = ஊக்கம், விருப்பம்
தடஸ்தலக்ஷணம் = ஒன்றைமுன்னிட்ட இலக்ஷணம்
தருணன் = யௌவன தசைக்கு மேற்பட்ட தசை



தாரணைசெய்தல் = கருத்தில் தரித்தல்.
தாருமரம் = மரம்
தாரதம்மியம் = ஏற்றக்குறைவு
தியாகி = துறவி
திருசி = பார்க்கிறவன்
திமிரரோகம் = நேத்திரரோகம்
தியேயம் = தியானிக்கப்பட்டது
திந்துகபலம் = மாம்பழம்
தித்திரி = தீவிழுங்கிப்பக்ஷி
திருஷ்டா = பார்ப்பவன்
துவாரா = வாயிலாக
துர்லபம் = அரிது
துஷ்டி = சந்தோஷம், திருப்தி
துர்க்கடம் = செய்தற்கரிய
தூஷணீகம் = நிர்ச்சிந்தை.
நடி = வேசி
நரசிருங்கம் = மனிதக்கொம்பு
நிதானம் = மூலகாரணம்
நிபிடமான = அடர்ந்த
நிர்ச்சிந்தை = எண்ணமற்ற
நிருக்த = திட்டமான. வரையறையான.

## ப

பராகாயம் = சிதாகாயம்
பரிணாமம் = மாறுதல்
பரமமான = சிரேஷ்டமான
பரிச்சேதம் = அளவை, தண்டித்தல்
பராஸாதனம் = மேலான திறமை
பரிகரித்தல் = நீக்குதல்
பராவரம் = உயர்ந்ததும் தாழ்ந்ததும்
பாதபீடம் = தாள்வைக்கும் மணை.
பாவங்கள் = இருப்பன.
பாகியம் = வெளி, புறம்பு
பார்க்கவன் = பரசுராமன்
பாகிதம் = பக்குவமான.
பாவகன் = அக்கினி
பாவனமான = பரிசுத்தமான
பாஸகன் = விளக்குவோன்
பாஸிபம் = விளக்கப்படுவது
பாஸியம் = விளக்கப்பட்டிருப்பன
பாரூபம் = பிரகாசரூபம், ஒளிவடிவம்.
பிரசன்னன் = சந்தோஷித்தவன்
பிராபித்தல் = அடைதல்
பிருத்தியன் = சேவகன்
பிதாமகி = தகப்பனது தாய்
பிரமிதம் = விஷயம், பொருள்
பிரசம்சை = புகழ்
பிரதியோகி = விரோதி
பின்னமான = வேறான
பிரத்தியயம் = பண்புச்சொல்
பிரத்தியபிஞ்ஞை = எதிர்தாக்கும் ஞானம்
பிரலாபம் = பிதற்றல்
பிரசாதித்தல் = சந்தோஷித்தல்
பிரதிபை = சுயஒளி
பிரதிசந்தானம் = கவனம், ஏகாக்கிரம்.
பிரௌடன் = முதிர்ந்தவன்
பிரவிவிக்தம் = தனிமையாக
பீஜம் = விதை, ஏது
பீபத்ஸம் = அருவருப்பான
புஷ்டம் = வளர்க்கப்பட்டது, செழித்தது.

புத்தர் = புத்திமான்கள்
புரீஷம் = மலம்
பேகம் = தவளை
பேதித்தல் = பிளத்தல், வேறு படுதல்
போஜ்யம் = உணவு
பௌருஷம் = தாளாண்மை
ப்ரமா = உண்மை ஞானம்

## ம

மனோகரம் = மனதைவசீகரிப்பது
மரு = கானல்
மனோஹாரிணி = மனதை இழுப்பவள்
மரீசிகா = கானல்நீர்
மகாமந்திரம் = மாயாசக்தி
மகாகாயம் = பரப்பிரஹ்மம்
மகாசயன் = மேலான உள்ளமுடையவன்
மகத்தரம் = வன்மை மிகுந்த
மாலின்யம் = அழுக்குடைமை
மிருத் = மண்
மிதுனம் = இரட்டை
மிம்தசுவரன் = மிதமான செல்வவான்
முஷ்டி = பிடி

## ய

யாஞ்ஞீயர் = யாகத்தோர்
யோனி = உற்பத்திஸ்தானம், காரணம்
ரிஷிஸத்தமர்கள் = ரிஷி சிரேஷ்டர்கள்

## வ

வதி = இருப்பிடம்
வந்தியை = மலடு
சவன்னி = நெருப்பு

வாத்ஸல்லியம் = பிரேமை
விஷமுஷ்டி = எட்டி
விதுஷி = பண்டிதை
விரசம் = உருசியின்மை
விஸ்மயம் = வியப்பு
வியாப்தி = பரவல்
விஷமம் = சமமின்மை, பொருந்தாமை
விகரித்தல் = விளையாடல்
விதூஷகன் = விகடகவி
விமுகமாகி = திரும்பி
விரக்தி = பற்றின்மை
விசிராந்தி = ஆறுதல்
விமர்சம் = விசாரணை, ஆலோசனை
விபு = மகாத்மா
விஸம்வாதம் = பலனில் சந்தேகித்தல்
விதண்டவாதம் = பிறர் சித்தாந்த தூஷணை
விகாரம் = மாற்றம்
வியபிசரித்தல் = வேறுபாடடைதல்
விலக்ஷணை = வேற்றுமை
வேத்யம் = அறிபடுபொருள்

## ஜ

ஜமதக்கினியன் = ஜமதக்கினிபுத்திரன்
ஜகஜ்ஜோதி = பெருஞ்சோதி
ஜாலம் = கூட்டம், திரள்
ஜல்பவாதம் = தன் சித்தாந்தத்தை ஸ்தாபித்துப் பிறருடையதைத் தூஷித்தல்
ஜீர்ணமான = பழுதடைந்த
ஜீவதமான = உயிர்த்ததான



## ஸ

ஸர்வாத்மனு = எவ்விதத்திலும்
ஸத்திரம் = யாகசாலை
ஸபலம் = பலனுடையது
ஸதி = 1 நற்குணமுடையவள்
2 இருத்தலுடையவள்
ஸம்வித்து = உணர்வு
ஸம்வேதனம் = உணர்வு
ஸம்ஸ்காரம் = வாசனை, சாயல்
ஸ்பூர்த்தி = அறிவின் எதிர்தாக்கும் தன்மை
ஸ்புரத்வடிவம் = ஒளிவீசும் தன்மை
ஸ்பந்தம் = அசைவு அதிர்
ஸ்மிருதி = ஞாபகம், நினைப்பு
ஸ்தாணு = தூண்

## ஹ

ஹதோதிதம் = உதிக்கும் பொழுதே
ஹதமாதனு = ஞானியின் ஆகாமியகர்மம்
ஹாரம் = மாலை
க்ஷாரம் = உவர்

அருஞ்சொல்லகராதி முற்றிற்று.

௭௱௭௨

P. R. RAMA IYAR AND CO., PRINTERS